ஆய்வுக் கோவை 2004

சமயவியல்

பதிப்பாசிரியர்

சிற்பி பாலசுப்பிரமணியம்
ஒய்.டென்னிசன்
சிலம்பு நா. செல்வராசு
பெ. சுபாசு சந்திர போசு
சா.கிருட்டினமூர்த்தி
(அமைப்புச் செயலர்)

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
35-ஆம் கருத்தரங்கம்

திருவள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 9, 10

2004 மே, 22, 23

★ ★ ★ ★ ★

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை

★ ★ ★ ★

பதிப்புதவி

முனைவர் அன்னிதாமசு

முனைவர் ஜீன் லாறன்ஸ்

முனைவர் ச. சிவகாமி

முனைவர் தா. ரெங்கநாதன்

முனைவர் சூ. நிர்மலாதேவி

முனைவர் மு. வளர்மதி

ஆய்வுக்கோவை

சமயவியல்

பதிப்பாசிரியர்

சிற்பி பாலசுப்பிரமணியம்
ஒய். டென்னிசன்
சிலம்பு நா. செல்வராசு
பெ. சுபாசுசந்திரபோசு
சா. கிருட்டினமூர்த்தி
(அமைப்புச் செயலர்)

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 017

★ ஆய்வுக்கோவை
சமயவியல்

★ இ.ப.த. மன்றம்
தமிழாய்வுத்துறை
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 017

★ முதற் பதிப்பு
திருவள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி, 9
2004 மே 22

★ விலை : உருபாய் 200/-

கணினி அச்சு : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
176, கீழரத வீதி, சிதம்பரம் - 608 001. ✆ : 223040, 223020

மெல்லச்சு : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, லஸ், மயிலாப்பூர்
சென்னை - 600 004 ✆ : 24984693, 24661807

உள்ளே... உள்ளே... உள்ளே...

சமயவியல்

வஸந்தா பாரத்வாஜ் - சைவ சித்தாந்தத்தில் பக்தி 1

சிவ. வீரமணி - காளாமுகம் 5

சௌ.பா. சாலாவாணிஸ்ரீ - சிவலிங்க வழிபாடு 10

சு. திருநாவுக்கரசு - பவப்பிணி மருந்து 15

சு. சிவக்குமார் - பிள்ளைத் தமிழுக்குரிய பெரியோன் 18

S. Andal - Narasimma Avatharam and
A Tiger for Malgudi A Comparative Study 23

சு. அரவிந்த் - இந்து மதத்தில்
பௌத்த சமயக் கருத்துகள் 28

அரங்க. மல்லிகா - தலித் அரசியலில் பௌத்தம் 33

அ. ஆலிஸ் - ஜே.எம். சாலியின் 'நோன்பு' சிறுகதையில்
இஸ்லாமிய இறைக்கருத்தும் மொழிநடையும் 38

திருமலர் எம்.எம். மீறான் பிள்ளை - முசுலிம் தமிழ்
முனைந்த பிற சமயச்சான்றோர்கள் 43

மூ. சிதம்பரம் - அன்பே இறைநிலை 48

கோ.ப. நல்லசிவம் - மலர் வழிபாடு 53

எழிலரசி பாலசுப்பிரமணியன் - உலகின் தோற்றம்
- ஓர் இலக்கிய ஆய்வு 57

கோ. சங்கர வீரபத்திரன் - சுபமங்களா இதழ்ச்
சிறு கதைகளில் சமயம் (1992 - 1994) 62

அம்பை மணிவண்ணன் - கலை, இலக்கியங்கள்
காட்டும் காதற் கடவுளர் 66

டி. பாலசுப்பிரமணியன் - திருமந்திரம் 71

தி. ரமா - திருமந்திரமும் திருத்தலம் பாடுதலும் 76

இடைப்பாடி அ. கணேசன் - மூதறிஞர் அடிகளாசிரியரின்
திருமந்திர ஆய்வுப் பணிகள் 81

அ. அறிவுநம்பி - காரைக்காலம்மைக்குப்
பேயுருவம் எதற்காக? 85

கோ. மீனாட்சி - அப்பரின் திருப்பதிகங்கள் காட்டும் இறைவழிபாட்டு முறைகள் 89
ம. இராதா - வாகீசர் வாக்கில் வழிபாட்டு முறைகள் 94
மு.அ. மாணிக்கவேலு - திருநாவுக்கரசர் கண்ட முருகன் 99
சு. சிவசங்கர் - திருநாவுக்கரசர் பார்வையில் துறவு 103
வேல். கார்த்திகேயன் - திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகை 108
வே. சீதாலட்சுமி பாஞ்சாலன் - திருநாவுக்கரசரின் பொதுமைத் தொண்டு நெறி 113
தே. சொக்கலிங்கம் - நாவுக்கரசரும் நந்தியும் 117
ஜெ. ஜெயவாணிஸ்ரீ - அட்ட வீரச்செயலில் தொன்மம் (திருவாசகம்) 122
ஏ. அமுதா - மாணிக்கவாசகரின் திருச்சதகத்தில் தற்சிறுமைக் கோட்பாடு 127
ஆ. சாந்தம்மாள் - ஒன்பதாம் திருமுறையில் புராணக் கதைகள் 132
சோ. குருலட்சுமி - தெய்வப் பாவை 137
தி. சுந்தராம்பாள் - தொண்டு வன்முறையில் வெளிப்படலாமா? 140
சி. அயோத்தி - நரி பரியாக்கிய திருவிளையாடல் - பாடுபொருள் - உரைப்பொருள் வேறுபாடு 145
பி. தட்சிணாமூர்த்தி - நாவுக்கரசியின் புலப்பாட்டுத்திறன் 150
கி. செல்வராணி - சிலம்பில் நாயனாரின் பாநயம் 154
பா. மாலினி - தில்லையும் நால்வரும் 159
சோ. குமரேசமூர்த்தி - தில்லையும் ஆனந்தத் தாண்டவமும் 164
கோ.பி. முருகானந்தம் - இரமணர் காட்டும் மெய் வழிபாடு 169
ப. இராசமாணிக்கம் - திருவாவினன்குடி வெளிப்படுத்தும் புராணங்கள் 174
பி. சரவணக்குமார் - செந்தமிழும் சிவப்பிரகாசரும் 179
சு. விஜயகாந்தி - மானுடர்கான் வம்மின் 183
அருணாதினகரன் - இராமலிங்க அடிகளார் ஆற்றுப்படுத்தும் இன்றைய உடனடித்தேவை 187

பா. அருள்செல்வி - திருவருட்பாவில் பழமொழிகள் 192
சு. அமிர்தலிங்கம் - வள்ளலார் காட்டிய மனிதமேம்பாட்டு உயர்நிலைச் சிந்தனைகள் 197
அர. செயச்சந்திரன் - வள்ளலார் போற்றிய முருகக்கடவுள் 201
அ. சுந்தரம் - ஆண்டாள் கனவுப் பாடல்களில் திருமணம் 206
ஐ. செல்வம் - ஆண்டாளின் பக்தித்திறம் 211
மு. பாலமுருகன் - திருப்பாவை காட்டும் அவதாரச் சிறப்புகள் 216
பா. பொன்னி - திருவாய்மொழியில் தூது 221
கி. நீலகண்டன் - ஆழ்வார்கள் காட்டும் திருமாலின் கண்ணழகு 226
ந. சுபா ரமேஷ் - ஆழ்வார்களின் தாய்மை அனுபவம் 231
முத்து. அருணகிரி - பிணைநின்ற நபியும் நமைவென்ற மானும் 236
க. இம்தாதுல்லாஹ் - அண்ணலாரும் ஆயிஷா நாச்சியாரும் 241
உ. அலிபாவா - நபியே எங்கள் நாயகமே! - அமைப்பு நோக்கு 246
எம்.ஏ.எஸ். ஹபீபுர்ரஹ்மான் - யூசுப் சுலைகா காட்டும் இறையச்சம் 251
எஸ்.எஸ். ஷீபா - ஞான ஏத்தப்பாட்டு - ஓர் அறிமுகம் 256
க.சோ. பால்சந்திர மோகன் - திட்டூர் தேசிகரின் கிளிக்கீதை 261
ச. குமார் - சைவக்குரவர், ஆழ்வார்தம் பாடல்களில் இயற்கை வர்ணனை உருவகங்கள் 266
கோ. ஜெகநாதன் - துதிச் சதகங்கள் - நோக்கும் போக்கும் 270
சொ. முத்தையா - திருஞானசம்பந்தரும் ரபீந்திரநாத் டாகுரும் - ஒரு பொதுப்பார்வை 274
அ. நலங்கிள்ளி - திருவாசகமும் குட்டித் திருவாசகமும் 279
ஏ. சுகுணா சந்திர காந்தாமணி - திட்டூர் தேசிகரின் சௌமியத்துறையும் திருவாசகமும் - ஓர் ஒப்பாய்வு 284
ந. ஹேமலதா - ஈசன் புகழ்பரப்பும் எழுபதும் நூறும் 289

ம. துர்காதேவி - திருமணப் படலமும்
மீனாட்சி திருக்கல்யாணமும் 294
இரா. மலர்விழி மங்கையர்க்கரசி
- ஆசார்ய ஹிருதயமும் திருஅருட்பாவும் 298
பொன். சௌரிராசன் - சிவவாக்கியரும் வேமனரும் 303
க. நாகராஜன் - சிலம்பில் சமயம் 306
சி.க. சிவக்குமார் - திருமூலரின் அறச்சிந்தனைகள் 311
கு. மனோன்மணி & கு. செல்லத்துரை - இன்றைய
நிலையில் வள்ளலாரின் கொள்கைத் தேவை 316
மோசசு மைக்கேல் பாரடே - பாம்பாட்டிச் சித்தரும்
வேதநாயக சாஸ்திரியாரும் பாம்புப்பாடல் ஒப்பீடு 321
எஸ். வீரபாண்டியன் - நக்கீரர் அருளிய
பெருந்தேவபாணியில் தத்துவம் 326
தா. திருநாவுக்கரசு - இலக்கியங்களில் மறுபிறப்பு 330
செ.மா.க. வசந்தகோகிலம் - தோலாமொழித்தேவரின்
வினைக்கருத்துகள் 334
நா. மணிமேகலை - இராம காதையில் கீதை 339
சு. தங்கதுரை - ஞானவாசிட்டத்தில்
உற்பத்திப் பிரகரணம் 344
ந. வேலுசாமி - சித்தர் இலக்கியத்தில் நாத்திகம் 349
ஜலஜா கோபிநாத் - மஸ்தான் சாகிபு
பாடல் உணர்த்தும் மெய்யுணர்தல் 354
சுடலிதியாகராஜன் - உபநிடதங்கள் - ஒரு பார்வை 359
நீல. சந்திரநாதன் - உலக சமாதானத்திற்கு
வேதாத்திரி கூறும் கருத்தியல் நெறிகள் 364
த. வசந்தா அமர்நாத் - பொறியும் மனமும் 367
பே. ஞானசேகரன் - ஆலயங்களில் கற்பூரம்
ஏற்றுவது பாவமா? 372
நா. நாகலிங்கம் - சபாபதி முதலியாரின்
அருணாசல சதகத்தில் திருத்தலப் பெருமைகள் 375
ச. பாக்கியலட்சுமி - கோசை நகர் வாழ வரும் ஈசன் 380
C. Vani - Ananda Tandava Portraiture - from the incidents of Saint
Sundarar's life thematic Murals in - RAJARAJESVARAM Thanjavur 384
A. Subramanian - Sculptural Grandeur of
The Andal Temple Complex at Srivilliputtur 388

சைவ சித்தாந்தத்தில் பக்தி

வஸந்தா பாரத்வாஜ்

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர் - 641 043

ஒவ்வோர் ஆன்மாக்குள்ளும் உறையும் இறையின் சக்தி காந்தம் போன்று இழுக்கின்றது. இதுவே 'அன்பு', 'பக்தி' என்றாகிறது.

மக்களின் வினைப் பயன்களுக்கும் இறைவனிடம் மக்கள் கொள்ளும் பக்திக்கும் தொடர்புண்டாகையால் பக்தி பற்றிய சைவ சித்தாந்தச் சிந்தனைகளைக் காணலாம். ஆன்மீகப் பாதையில் குறிக்கோளாகவும் அந்தக் குறிக்கோளினை அடையும் வழியாகவும் திகழ்வது பக்தி.

சடப்பொருளாயினும் உயிருள்ளவையானலும் அக இயற்கையையும் ஆராய்ந்த நம்முன்னோர்கள் கவர்ச்சி என்னும் சக்தி எங்கும் காணப்படுவதற்குக் காரணம் மெய்ப்பொருள் என்னும் அழியாத அடிப்படைத் தத்துவம் அதுவாக இருக்கிறது என்றும் அது பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறது என்றும் கண்டனர். எனவே இறைவனத்திடலும் மனிதன் கவரப்படுகிறான். பக்தியின் பொது இயல்பு உன்னதப் பொருளை நோக்கிக் கவரப்பட்டுச் செல்வதாகவே அமைகின்றது.

பக்தி என்பது கொள்கை, உணர்வு, மனிதனின் வாழ்க்கை நடைமுறை என்று மூவகைப்படும்.

இந்த ஆராய்ச்சிக் கட்டுரையில் சைவ சமய நால்வரின் பாடல் களில் பக்தி எவ்விதம் அமைந்துள்ளது என்பது நோக்கப்பட்டுள்ளது.

''சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோ(டு) இசைபாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்''
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்'' (தேவா.4:1:6)

என்ற அப்பர் பெருமான் இறைஞ்சிப் பாடுவது வெளிப்படைத் தியான நிலையேயாம்.

அனைத்திலும் இறைவனைக் காணல், மானச பூசை, தனித்திருந்து இடைவிடாது இறைவனையே நினைத்தல் என்பவை மறைத் தியானமாகிய சூக்கும நிலையைச் சார்ந்தது.

''தொண்டர்களிடத்தும் வானோர் தொழுந்திரு
மேதினிதானும் அண்டருங் கண்டிலாத
அண்ணலே எனவணங்கி வெண்டரளங்கன்
சிந்த வழி மொரிகுழற மெய்யே கண்டுகொண்
டிருப்பர் ஞானக் கடலமு தருந்தினரே'' *(சிவப். 98)*

எனச் சிவப்பிரகாசம், பூரண கருத்தாவாய் உயிருக்குயிராய் நின்று அறிவிக்கின்ற சினம் குருலிங்கக் கலப்பில் புறம்பே கொள்ளப் பட்ட திருமணியிலும் உண்டென்று வழிபடுவதைக் கூறுவதும்,

''என்னிலாரும் எனக்கின் யாரில்லை
என்னிலும் இனியான் ஒருவன் ஊன்'' *(தேவா. 5:21:1)*

எனத் தேவாரம் இயம்புவதும் அனைத்திலும் இறைவனைக் காணும் வழிபாடாகிய மறைத்தியான நிலைக்குச் சான்றுகளாகின்றன.

நால்வரும் அவர்தம் நெறிகளும்

சைவ சித்தாந்தச் செம்மல்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வரும் சைவ சமயப்பக்தி நெறிக்கும் அதன் மார்க்கங்களும் அதனால் பெற்ற பயன்களுக்கும் சிறந்த வழிகாட்டிகளாவர்.

சைவ சித்தாந்தம் காட்டும் தாச, புத்திர, சக, சன்மார்க்க வழி களை முறையே அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் எனும் சைவ குரவர்கள் கடைபிடித்துச் சாலோகம், சாமிப்பியம், சாருப்பியம், சாயுச்சியம் எனும் முத்தி நிலையினை அடைந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை.

அப்பர்

இவர் தம் இறையாகிய சிவபிரானைத் தாசமார்க்கத்தில் சரியையின் வழி, வழிபட்டுச் சலோகம் எனும் முக்தி நிலை எய்தப் பெற்றனர். வாழ்நாள் முழுவதும் இம்மார்க்கத்தை விட்டு நீங்காது நின்று வீடுபேறுற்ற நிலையினை அவரது வரலாற்றின் மூலம் காணலாம்.

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்'' *(தேவா. 6:31:3)*

என்று சரியையைப் பின்பற்றி இறைவனை ஆள்பவனாகவும் தன்னை அடிமையாகவும் இருக்கும் தாசமார்க்கத்தில் நின்றார்.

''உடம்பெறும் மனையகத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனும் திரிமயக்கி''
(தேவா. 4 : 75 : 4)

என அகத்தியானத்தில் இறையருள் பெற்றுத் தனக்குப் பல்லவ மன்னனால் துன்பம் நேர்ந்தபோது,

''அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை''
''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சாம் நரகத்தில்
இடர்ப்படோம்'' (தேவா. 6:98:1)

என உறுதிப்பட நின்றார்.

''மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடுநீர் சுமந்தேந்திப் புகுவராரவர் பின்புகுவேன்''
(தேவா. 4:3:1)

என இறைவியோடு இறைவனையும் நேரில் கண்டின் புற்றுச் சீவன் முக்தநிலையினை அடையப் பெற்றதைக் கூறுகின்றார்.

சம்பந்தர்

இவர் புத்திர மார்க்கத்தில் கிரியை வழி நின்று சாமிப்பியம் எனும் முத்திநிலை அடையப்பெற்றவர்.

''நீ நாளும் நன்நெஞ்சே நினைகண்டாய் யார் அறிவார்
சா நாளும் வாழ்நாளும் சாய்க் காட்டெம் பெருமாற்கே''
(தேவா. 4:3:1)

என்று புறத்தேயும், அகத்தேயும் வழிபாடியற்றி,

''ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண் ஆண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதமவை ஐந்தாய்
ஆறார்களை ஏழோசையோ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்.....'' (தேவா. 1:2)

என்று இறைவனின் ஒன்றான, வேறான உடனான மூன்று நிலை களையும் அனுபவத்தில் உணர்ந்து வீடுற்றவர்.

''மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிற வாத்தன்மை வந்தெய்தினேன்''
(தேவா. 7:48:1)

எனச் சுந்தரர் இறைவனின் தோழனாய் இருந்து பிறவாத் தன்மை யினைப் பெற்றுவிட்ட நிலையினை நமக்கு எடுத்துரைக்கின்றார்.

மாணிக்கவாசகர்

''ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று'' (திருமந். 1467)

எனும் திருமூலரின் திருவாக்கிற்கு ஏற்பச் சன்மார்க்க ஞானத்தின் வழி நின்று சாயுச்சிய நிலை எய்தப்பெற்றவர் மாணிக்கவாசகர்.

சாயுச்சியம் அடைந்தவர்கள் மீண்டும் பிறப்பில் இடர்ப்படுவதில்லை. ஆதலால் எல்லாப் பிறப்பும் பிறந்து முடித்துவிட்ட மாணிக்கவாசகப் பெருமான் வீடுற்ற நிலையினைப் பின்வருமாறு கூறுகின்றார்.

''புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்''

(திருவாச. 26,32)

இவற்றால் சைவ சித்தாந்தம் உணர்த்தும் பக்தி நெறியின் தன்மை அறியப்படுகிறது.

முடிவுரை

சைவ சித்தாந்தங்கள் காட்டிய தாச, புத்திர, சக, சன்மார்க்க வழிகளைப்பற்றி வெறும் பாடலை மட்டுமே புனைந்துவிட்டுச் செல்லாமல், 'சொல்லும் வண்ணம் செயல்' என்பதற்கேற்ப, அவ்வழியே இறையுடன் நேரடித் தொடர்புகொண்ட மேற்கூறிய வழிகளில் வாழ்ந்தும், வழிகாட்டி நாம் எவ்வாறு வாழவேண்டும் என்றும் எடுத்துச் சொல்லி சென்றுள்ள ஆன்றோர்களின் வழிநடந்து, அத்தகைய பக்தி வகைகளை உள்ளத்தால் உணர்வுப்பூர்வமாகப் பெறுவது என்பது வார்த்தையால் விவரிக்க கூடியதா? ஈண்டு அனுபவிக்க வேண்டிய ஒன்றன்றோ?

காளாமுகம்

சிவ. வீரமணி

தந்தை ஹேரன்ஸ் ரோவர் கல்லூரி
பெரம்பலூர் - 621 220

காளாமுகம் (Kalamukam) பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

காளாமுகம்

ருப்பு எனும் பொருளைத் தரும் கள் > காள் எனும் வேர்ச் சொல்லின் அடியாகப் பிறந்ததே காளாமுகம் என்னும் சொல்லாகும். சுடுகாட்டுச் சாம்பல் வெண்மையும், கருப்பும் கலந்திருக்கும். அச்சுடுகாட்டுச் சாம்பலைத் தம்முகத்தில் பூசிக் கொண்டதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். நெற்றியில் கருப்புக் கோட்டைக் கீறிக் கொண்டதாலும் இப்பெயர் வழங்கி இருக்கலாம் எனவும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கருப்புக்கோட்டை நெற்றியில் கீறிக்கொள்ளும் மரபு பிற்காலத்தில் உருவானதாக இருக்கவேண்டும்.

சுடுகாட்டுச் சாம்பலை உடல் முழுவதும் பூசிக்கொள்ளும் சில சிவனடியார்களைப் பற்றிய குறிப்புகள் சைவத் திருமுறைகளில் காணப்படுகின்றன. உடம்பு முழுவதும் பூசிக்கொள்ளும் பழக்கம் காலப்போக்கில் முகத்தில் மட்டும் பூசிக் கொள்வதாக மாறி இருக்கலாம். எப்படி இருப்பினும் சுடுகாட்டுச் சாம்பலைத் தம் முகத்திலும், மேனியிலும் பூசிக்கொள்ளும் சிவனடியார்கள் 'காளாமுகர்கள்' என அழைக்கப்பட்டனர் என்பது தெளிவாகிறது. இவர்களைப் பற்றித் தமிழ்ப் பேரகராதி,

1. மாவிரதத்தைப் பெரும்பாலும் ஒத்த சைவ சமய உட்பகுதி.
2. சைவருள் ஒரு சாராரைக் காளாமுகப் பிரிவினர் என்றனர்

என இரண்டு வகையான விளக்கங்களைத் தருகிறது. மேலும் சிறப்புப் பெயரகராதி இதனை,

> இவர்கள் பெரும் படிப்பாளிகள், சிறந்த ஒழுக்கம் உடையவர்கள், பக்தித் துறையை மேற்கொண்டவர்கள். மணல் மீது படுத்தல், மந்திரம் ஓதல், பதிகங்கள் பாடல், இறைவனைப் பற்றிப் பாடியாடுதல், உழவாரப் பணிபுரிதல் முதலியவைகளில் ஈடுபட்டிருந்தனர். இவர்களை எந்நேரமும் பலர் சூழ்ந்து கொண்டிருப்பர். இவர்கள் எண்வகை யோகங்களிலும் வல்லவர். இவர்கள் மடங்களுக்குத் தலைவராகவும், கோவில்களுக்குக் கண்காணிப்பாளர்களாகவும், குருமார்களாகவும்,

சமயக் கல்வி போதிப்பவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் தங்களுடைய கல்விச் சிறப்பு முதலியவைகளால் நாட்டிற் சிறந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்களுக்குப் பேரரசர்கள் பலர் மாணவர்களாகவும் இவர்களின் சிலர் ஆகாதவர்களாகவும் இருந்தனர். மணமாகாதவர்களே மக்களால் மிகுதியாக பாராட்டப் பெற்றனர்

என விளக்கம் தருகிறது. மேலும் திவாகர நிகண்டு இதனை,

மாவிரதியரும் காளாமுகரும்
பாசுபதரும் சைவதவப் பாலோர்

எனக்கூறும். இதனால் காளாமுகர்கள் சைவ சமயத் துறவிகள் என்பதை அறியலாம். இதனை அபிதான சிந்தாமணியும்,

மகாவிரதி மதத்துடன் ஒத்தவன். இவனுக்குப் பெத்த முத்தி இரண்டும் ஒன்று. சிறிய ஆகம பேதம் உண்டு. இவனுக்குச் சிவன் படிக நிறமும், புத்ர தீப மணியுந் தரித்த மூர்த்தியாய் அருள் செய்பவர் என்பன. இது சைவ பேத உட்சமயத் தொன்று உரித்திர கற்பிதம்

எனக் கூறுவதிலிருந்து மாவிரதிகளின் இயல்பினை உடையவர்கள் காளாமுகர்கள் என்பதும் தெளிவாகிறது. பெத்த முத்தி என்பது, பெத்த - ஆன்மா பாசத்தால் கட்டுண்ட நிலை அஃதாவது மலக்கட்டு என்றும், முத்தி-மூவகைக் கட்டுகளிலிருந்து விடுபடுகை. அது, ஆணவம், கன்மம், மாயை என்பனவற்றிலிருந்து விடுபட்டு வீடுபேறு-திருவடிப்பேறு-அடைந்தவர்களே . காளாமுகர்கள் என்பதையும் விளங்கிக் கொள்ளமுடிகிறது.

காளாமுகர்களுக்கும் கபாலிகர்களுக்கும் இடையில் ஒத்த கருத்துக்கள் மிகுந்திருப்பதாக ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. காளாமுகர்கள், தங்களை மாவிரதிகள் என்றும் அழைத்துக் கொண்டனர். சிற்றின்பம் பேரின்பத்திற்கான பெரும் வாயில் என்ற கருத்தின் போக்குக் காளாமுகர்களிடம் காணப்பட்டது. காளாமுகர்களுக்கும், கபாலிகர்களுக்கும் இடையில் ஒத்தகூறுகள் இருப்பதை,

1. மண்டையோட்டில் உண்ணுதல்,
2. எரிந்த பிணத்தின் சாம்பலை உடம்பெல்லாம் பூசிக் கொள்ளுதல்,
3. அந்த சாம்பலையே உண்ணுதல்,
4. கையில் ஒரு தடியை வைத்திருத்தல்,
5. கள்ளையோ சாராயத்தையோ மொந்தையில் வைத்திருத்தல்,
6. மாந்தவுயிரைப் பலியிடல்

என்று தெளிவுபடுத்துவார் குணா.

காளாமுகர் மரபில், சிவன் சுடுகாட்டைத் தமது ஆடல்களமாகக் கொண்டிருந்தார். அதனாலேயே சிவன் சுடலையாண்டி என்று பெயர் பெற்றார். மேலும் சிவன் சுடுகாட்டில் ஆடும்போது தமது உடம்பு முழுவதும் சுடுகாட்டுச் சாம்பலைப் பூசிக்கொண்டு ஆடினார். இதனை,

மாண்டார் சுடலைப் பொடிபூசி மயானத்
தீண்டா நடமாடிய வேந்தரன் மேனி
நீண்டா னிருவர்க் கெரியா யரவாரம்
பூண்டா னகர் பூம் புகலித் நகர்தானே

என்றும்,

மந்திர மறையவை வானவ ரொடும்
இந்திரன் வழிபட நின்ற வெம்மிறை
வெந்த வெண்ணீற்றவன் வெண்காடு மேவிய
அந்த முதலுடை யடிகளல்லரே

என்றும்,

பாடக மெல்லடிப் பாவை யோடும்
படுபிணக் காடிடம் பற்றின்று
நாடக மாடு நள்ளாறுடைய
நம் பெருமானிது வென்கொல் சொல்லாய்

என்றும் திருஞானசம்பந்தர் பாடுவார். இதனைத் திருநாவுக்கரசரும், சுந்தரரும் முறையே,

மாண்டார் எலும்பணிந்த வாழ்க்கை யானை
மயானத்திற் கூத்தனைவாள் அரவோடென்பு
பூண்டானைப் புறங்காட்டி லாடினானை

என்றும்,

பிணம் படு காட்டில் ஆடுவதாகில்
இவரலா தில்லையோ பிரானார்

என்றும் பாடுவதன் வாயிலாகச் சுடுகாட்டில் சுண்ணப் பொடி பூசி ஆடவல்லான் என்பதும், வேதவனான சிவபெருமானின் அடியவர்கள் சுடலைப் பொடி பூசியவர்கள் என்பதும் மேற் காட்டிய பாடல்களின் வாயிலாக விளங்கிக் கொள்ளமுடிகிறது.

சைவத் திருமுறைகள்

சைவ சமயத்தின் எழுச்சி பக்தி இயக்க காலத்தில் தோன்றியது. அது சைவத்தின் எழுச்சியாக மட்டும் இல்லாமல் தமிழர்களின் தமிழின மீட்பாகவும் அமைந்தது. பக்தி என்பதனை மையமாகக் கொண்டு தமிழர்களை ஒன்றுபடுத்தும் மிகப்பெரிய சக்தியாகவும் பக்தி இயக்கங்கள் விளங்கியன. இவற்றிற்குத் தலைமை தாங்கியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலானோர் ஆவர்.

இவர்களுன் உழவாரப் படைகொண்டு 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என அருந்தொண்டாற்றியவர் அப்பர் எனப் பாராட்டப்பட்ட திருநாவுக்கரசர் ஆவர். இவரைச் சேக்கிழார் 'கபாலிகர்' எனச் சுட்டுகிறார்.

மாபாவிக் கடையமனர்
வாகீசத் திருவடியாம்
காபாலி அடியவர் பால்
கடக் களிற்றை விடுதென்னப்
பூபாலர் செயல் மேற்கோள்
புலைத் தொழிலோன் அவர்தம் மேல்
கோபாதி சயமான
கொலைக் களிற்றை விடச்சொன்னான்

என்று கூறுவதன் வாயிலாகத் திருநாவுக்கரசர் கபாலிகர் பிரிவைச் சார்ந்தவர் என்பது உறுதியாகிறது.

அதைப்போலவே தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர் காளாமுகப் பிரிவைச் சார்ந்தவராக இருப்பார் என எண்ணத் தோன்று கிறது. திருஞானசம்பந்தர் பாடிய முதல்பாடலே அப்புதிருக்கான விடையாகவும் அமைகிறது. அப்பாடல்,

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத் தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானி வன்னரே

என்பதாகும். மேலும்,

அந்த மறியா தவருங் காலமுந்திக்
கந்தங் கமழ் காவிரிக் கோலக்கரை மேல்
வெந்த பொடிப் பூசிய வேத முதல்வன்

என்றும்,

வெந்த வெண்பொடிப் பூசுமார்பின் விரிநூலொருபால்

என்றும்,

வண்ணவெண் பொடிப் பூசு மார்பின் வரியரவம் புனைந்து

என்றும்,

தோலு நாலுந் துதைந்தவரை மார்பிற் சுடலை வெண்ணீறணிந்து

என்றும்,

வெந்த நீறும் மெலும்பும் மணிந்த விடையூர் தியான்

என்றும் அமைந்த பாடல்கள் அக்கருத்தை உறுதி செய்கின்றன. இதனால் பிணம் எரித்த சுடுகாட்டுச் சாம்பலைத் தமது உடல்

முழுவதும் பூசி ஊர்தோறும், கோயில் தோறும் பக்தி நெறியைப் பரப்பிய திருஞானசம்பந்தர் காளாமுகப் பிரிவைச் சார்ந்தவர் என்பதை உணரமுடிகிறது.

முடிவுரை

காளாமுகர்களுக்குச் சொல்லப்படும் இலக்கணங்கள் யாவும் திருஞானசம்பந்தர் பாடல்களில் காணக்கிடைக்கின்றன. நாகப்பட்டினத்தில் உள்ள சிவன் கோயில் நாகைக்காரோணம் என்றும், அங்கு கோயில் கொண்டுள்ள சிவனை நாகைக் காரோணத்தார் என்றும் அடியவர்கள் பாடுகின்றனர். 'காரோணம்' என்பது காளாமுகப் பிரிவினரின் நிறுவனத்தைக் குறிக்கக்கூடிய ஒரு சொல்லாகும். அப்பர், சம்பந்தர் ஆகிய இருவருமே நாகைக் காரோணத்தில் உள்ள சிவனைப் பற்றிப் பாடியுள்ளனர். சைவ சமய உட்பிரிவுகளுள் அப்பரை, கபாலிகப் பிரிவைச் சார்ந்தவர் எனச் சேக்கிழார் தெளிவுபடுத்துகிறார். அவ்வாறு ஞானசம்பந்தரைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடவில்லை என்றாலும்கூடத் திருஞான சம்பந்தரின் பாடல்கள் காளாமுகர்களுக்குரிய இலக்கணங்களைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகிறது. மேலும் நாகப்பட்டினத்தைப் போலவே தமிழகத்தின் பல இடங்களிலும் காளாமுகர்களுக்குரிய நிறுவனங்கள் இருந்தன என்பதை நாகைக்காரோணம், கச்சிக்காரோணம் என்னும் தொடர்கள் உறுதி செய்கின்றன. சென்னை மயிலாப்பூரில் உள்ள சிவன் கோயில் கபாலிகருக்குரியது போலவே காரோணம் எனும் கோயில்கள் காளாமுகர்களுக்கு உரியன என்பது புலனாகிறது. இதனால் காளாமுகர்களுக்குரிய செல்வாக்கும் தெளிவாகிறது.

சைவ சமயத்தின் உட்பிரிவுகள் பலவாக இருந்தாலும் அவற்றுள் மிகவும் பழமையானதாகக் கபாலிகம் காணப்படுகிறது. அதனை அடுத்து வருவது காளாமுகமாகும். சைவ சமய உட்பிரிவுகளுக்கு இடையே சிற்சில வேறுபாடுகள் இருந்தாலும் அவ்வேறுபாடு களைக் களைய பக்தி இயக்கம் முயன்றுள்ளது. தமிழால் சமூக ஒற்றுமையை வலியுறுத்திய இப்பிரிவுகள் மனுதர்மத்தை அடிப்படை யாகக் கொண்ட வைதிகச் சமயத்திற்குப் பெரும் சவால்களாக விளங்கின. இதனாலேயே அவ்வைதிக சமயங்கள் சைவ சமயத்தை நாத்திகவாதம் என்று கண்டித்தன. காளாமுகம், கபாலிகம் ஆகிய சைவ சமய உட்பிரிவுகள் வைதிகத்தைக் கண்டித்ததற்கான காரணங்கள் தனித்த ஆய்விற்குரியன.

சிவலிங்க வழிபாடு

சௌ. பா. சாலாவாணிஸ்ரீ

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 8

பண்டைக்கால மக்களுக்கு நெருப்பு பெரும் உதவியாக இருந்த காரணத்தால் ''நெருப்பினை இறைவனின் இயல்புடையதாக எண்ணித் தெய்வமாக வழிபடலாயினர். இவ்வாறு நெருப்பு வழிபாட்டிலிருந்து இலிங்க வழிபாடு தோன்றி இருக்கலாம். மேலும் ஆய்வாளர்கள் புதையுண்டு கிடந்த பெரும்பாலான வழிபாட்டு உருவங்கள் இலிங்க வடிவில் உள்ளவையாகும். எனவே பழந்தமிழ் மக்கள் நெருப்பு வணக்கத்தைக் குறிக்க இலிங்க வடிவமான குறுயீட்டைப் பயன்படுத்தி வந்தனர் என்பதை அறியலாம்''

ஒவ்வொரு கால கட்டத்திலும் இலிங்க வழிபாடு

வேத கால முதல் சிவ வழிபாடு இந்திய நாட்டில் காணப்படுகிறது. "சிந்து சமவெளியில் கண்டெடுக்கப்பட்டவைகளில் இருந்து சர். ஜான் மார்ஷல் அக்காலத்தில் இலிங்க வழிபாடு இருந்ததெனக் கூறுகிறார்"

''மொகஞ்சதாரோ காலத்தில் மதத்தில் பல்வேறு வழிபாட்டு முறைகள் ஒன்றுக்கொன்று இடைஞ்சலில்லாமல் வளர்ந்தன என்று மார்ஷல் கூறுவார். இவற்றுள் சிவன் வழிபாடும் சக்தி வழிபாடும் பரவலானவை''

ஆதி மக்களிடமும் இலிங்க வழிபாடு இருந்திருக்கிறது

''தாரையும் லிங்கமும் சைவப் பழங்குடியின்
பேரை முதற்படுத்தும்,

நீரொழுக்குத்தாரையும் அதன் மேல் வைக்கப்பட்ட இலிங்க குறியும் ஆதி சைவ பழங்குடி மக்களின் வாழ்வியலை உணர்த்தும்'' என்று சிவனியம் பகுதியில் புரட்சிதாசன் கூறுகிறார். இதன் மூலம் இலிங்கத்தின் காலத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

சிவபுராணம் மூலம் சிவலிங்கத்தின் காலம்

ஒருமுறை பிரம்மாவுக்கும் நாராயணனுக்கும் பெரும் போர் ஏற்பட்டது. அப்போது இருவருக்கும் இடையே அற்புதமான

ஜோதி இலிங்கம் உண்டாயிற்று. அதற்குரிய ஆதாரத்தைத் தேட நாராயணன் வராக வடிவமாகக் கீழ்நோக்கி சென்றார். அதன் முடியை காண பிரம்மா அன்னப் பறவை வடிவம் எடுத்து வான் நோக்கி சென்றார். ஆனால் அந்த ஜோதிலிங்கத்தின் அடிமுடியைக் காண முடியாமல் திரும்பினர் இருவரும். கோயில்களில் மேலே அன்னப்பறவையும் கீழே பன்றி உருவம் கொண்ட அமைப்பை இலிங்கோத்பவர் என அழைக்கப்படும் இத்தகைய சிற்பத்தை நாம் சிவன் கோயில்களில் காணலாம்.

''காளஹஸ்திக்கு அருகிலுள்ள குடிமல்லம் என்ற ஊரில் உள்ள கோயிலில் உள்ள இலிங்கம் இலிங்கோத்பவர் போல் அமைந்து இருக்கிறது. இது கி.மு. 2-ஆம் நூற்றாண்டு சிற்பம் என்று அகழ்வாளர் கருதுகின்றனர். எனவே இதிகாசப் புராணக் காலத்தை அடுத்த சங்க காலத்தில் இலிங்க வழிபாடு இருந்தது தெரிகிறது'' எனப் பண்டைய தமிழ் இலக்கியங்களில் சிவன் என்னும் நூலில் இருந்து சிவலிங்கத்தின் தொன்மையினையும் சிவபெருமானின் சிறப்பும் அறியப்படுகின்றன.

தமிழ் இலக்கியங்களில் சிவன் பற்றிய செய்திகள்

பண்டைய தமிழர் வாழ்வில் இறை நம்பிக்கை காணப்பட்டது. ஆனால் அதற்கு இஃதே உருவென்று சுட்டவில்லை இதற்குச் தொல்காப்பியத்தைச் சான்றாகக் கூறலாம் சேயோன், மாயோன், வேந்தன், வருணன் என்ற சொற்கள் இடம் பெறுகின்றன. ஆனால் இவ்விறைகளுக்கு உருவ அமைப்பைத் தொல்காப்பியர் கூறவில்லை.

சங்க நூல்களில் சிவன் என்னும் பெயர்யாண்டும் இடம் பெற்றிலது, எனினும் சிவனுடைய இயல்புகள் பலவும் கூறப் பட்டுள்ளன. சான்றாக

'முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி' (புறம். 6:18-19)

என்று காரிகிழார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிக்குக் கூறுகிறார் புறப்பாட்டில். இதில் சிவபெருமான் இயல்பான மூன்று கண்களை உடையவர் என்ற செய்தி இடம் பெறுகின்றது.

தொகை நூல்கட்டு வணக்க செய்யுள் பாடிய பெருந்தேவனா ருடைய செய்யுளில் சிவனுடைய உருவத் திருமேனி புகழப் பட்டுள்ளது. மேலும் கலித்தொகை, பரிபாடல், ஐங்குறுநூறு, நாலடியார், மதுரை காஞ்சி, திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம், இன்னாநாற்பது ஆகிய இலக்கியங்களில் சிவனின் இயல்பு சிறப்பாகக் கூறப்படுகின்றது.

காப்பிய நூல்களிலும் சிவன் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. சிவனின் இயல்புகளில் ஒன்றான தலையில் கங்கையைச் சூடியவனாகத் திகழ்பவன் என்னும் கருத்துச் சிலம்பில் காணப் படுகின்றது.

'கங்கை முடியணிந்த கண்ணுதலோன்' (சிலம்பு. 12:9-3)

என்ற செய்தி இடம் பெறுகின்றது.

இறைவனின் மூவகை நிலை

இறைவன் மூவகை நிலைகளில் காணப்படுகிறார். அவை உருவம், அருவுருவம், அருவம் என்று சொல்லப்படுகின்றது.

1. உருவம் என்பது இறைவன் விக்கிரகத் திருமேனி கொண்டு காட்சி தருபவர்.
2. அருவுருவம் என்பது இறைவன் உருவமும், உருவமற்ற நிலையில் இருப்பது, இது சிவலிங்கத் திருமேனியைக் குறிக்கும்.
3. அருவம் என்பது உருவமற்ற நிலையில் இறைவன் இருப்பது.

சிவலிங்கம்

சிவலிங்கம் என்ற வார்த்தைக்குச் சிவனாகிய பரம்பொருளைக் காட்டும் அடையாளம் என்பது பொருள். சிவலிங்கமானது மூன்று பாக அமைப்புகளைக் கொண்டது. அவை அடிப்பாகம், மத்தியபாகம், ருத்ரபாகம் என்பன. இலிங்கம் என்பதற்குச் சித்திரித்தல் எனப் பொருள் கூறிப் படைத்தல், காத்தல் முதலியவற்றால் உலகத்தைச் சித்திரிப்பதாகிய பரமேசுவரனின் அமைப்பே இலிங்கம் எனவும் விளக்குவது ஆகும். இறைவனே படைத்துவைத்த இயற்கையான வடிவம் சிவலிங்கம் ஆகும்.

இயற்கையில் எந்தக் கல்லையும், ஆண் வடிவிலோ, பெண் வடிவிலோ காண இயலாது. ஆனால் இலிங்கங்கள் தாமே கிடைக்கின்றன. நர்மதை யாற்றங்கரையில் ஏராளமான சிறு சிறு இலிங்கங்கள் கிடைக்கின்றன. இறைவன் பரமேசுவரனை யாராலும் உண்டாக்க முடியாது. அவன் தானே வெளிப்பட்டுக் காட்சி தருபவன். இத்தகைய சிறப்புச் சிவனுக்கே உடையது.

இலிங்கத்தினின்றும் தோன்றிய வடிவங்கள் அறுபத்திநான்கு. அவை அஷ்டாஷ்ட (8x8=64) விக்கிரகங்கள் என்று கூறப்படுகின்றன. மேலும் சிவன் எட்டு வகை வடிவம் கொண்டவன். அதனை அட்டமூர்த்தம் என்று கூறுவர். அவை நிலம், நீர், தீ, காற்று, வான் சூரியன், சந்திரன், இயமானன் இவை இலிங்கத்துடன் தொடர்பு கொண்டவை.

சிவலிங்கத்தின் அமைப்பு முறை

சிவலிங்கம் பல்வேறு வடிவங்களில் இந்தியா முழுவதும் காணப்படுகின்றன. அவை சுயம்பு, தைவதம், காணபத்தியம், அருசம், அசுரம், சுரம், ராட்சகம், பாணம், மனுசம் என்று வகைப் படுத்துவர். இவற்றில் ஐந்து நிலைகளில் இலிங்கம் சிறப்பாக விளங்குகிறது. அவை

1. சுயம்பு தானே தோன்றுவது ஆகும். தானே கிடைக்கின்ற இலிங்க உருவமே வழிபாட்டிற்கும் சிறந்ததாயிற்று. கல்லில் இலிங்கம் தானே உருவாவதோடு மட்டும் இல்லாமல் அமர்நாத்தில் பனிலிங்கமும் தானே தோன்றுகிறது.
2. தைவிகலிங்கம் என்பது திருமால் முதலிய தெய்வங்களால் தாபிக்கப்பட்டது. இதுபோன்ற நிலை இராமேசுவரம், நந்தம்பாக்கம் மற்றும் காசியில் உள்ளது.
3. காணபத்தியம் அல்லது காணலிங்கம் என்பது விநாயகர், முருகன் முதலிய சிவகணங்களால் தாபிக்கப்பட்டது.
4. ஆரிபலிங்கம் அல்லது அசுரம் என்பது அசுரர்களால் தாபிக்கப் பட்டது ஆகும்.
5. மனுசம் அல்லது மானுடலிங்கம் என்பது மனிதரினால் தாபிக்கப்படும் நிலை ஆகும்.

மேலும் சகசரலிங்கம், தரலிங்கம், முகலிங்கம் என்பவையும் உள்ளன. இவ்வாறு இறைவன் சிவலிங்க வடிவில் காணப்பட்டாலும் அவர் பல வடிவங்களில் இருந்து மக்களைக் காத்து வருகிறார். ''வேறு வேறு உருவும், வேறு வேறு இயற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினதாகி என மணிவாசகர் இறைவனின் இயல்பை வெளிப்படுத்துகிறார்.

சிவலிங்கத் திருமேனி

இறைவனின் திருமேனியைச் சிவலிங்கத்தின் நிலையில் காணமுடிகின்றது. அகிலத்தைச் சிவனாகக் காணும்போது அண்டலிங்க மாகவும், உடம்பைச் சிவனாகக் காணும்போது பிண்டலிங்கம் என்றும், ஆன்மாவை ஆன்மலிங்கம் என்றும் பஞ்ச பூதங்களில் சிவனைக் கண்டு பூதலிங்கமாகவும் வழிபடப்படுகிறது.

பஞ்சலிங்கம்

1. பிருதிவிலிங்கம் - திருவாரூர்
2. அப்புலிங்கம் - திருவானைக்கா
3. தேயுலிங்கம் - திருவண்ணாமலை

4. வாயுலிங்கம் - திருக்காளத்தி

5. ஆகாயலிங்கம் - சிதம்பரம்

திருமந்திரத்திலும் சிவவழிபாட்டு நிலையில் சிவலிங்கத் திருமேனி அறியப்படுகிறது.

''இலிங்கம் தாவது யாரும் அறியார்
இலிங்கம் தாவது எண்டிசை எல்லாம்
இலிங்கம் தாவது எண்ணெண் கலையும்
இலிங்கம் தாக எடுத்த துலகே''

என்று திருமூலர் இலிங்கம் தான் உலகுக்கு எல்லாமுமாக இருப்பதாகக் கூறுகிறார்.

சிவலிங்க வகைகளும் அதன் பலன்களும்

சிவலிங்கம் கல்லினால் மட்டும் இல்லாமல் மேலும் பல்வேறு பொருள்களில் இலிங்கம் காணப்படுகின்றது. அவை மஞ்சள், சந்தனம், பொன், வெள்ளி, மண், முத்து, பவளம், சாதம், வெண்ணெய் ஆகியவற்றினால் இலிங்கம் உருவாக்கப்படலாம் என்று ஆகமம் கூறுகின்றது.

மேலும் கோமயம்(சாணம்), உருத்திராக்ஷம், விபூதி, கூர்ச்சத்தினால் (தர்ப்பை முடிச்சு), வெல்லத்தின்ால், மாவினால், அரிசிமாவினால், ஸ்படிகத்தினால், பித்தளை, தாமிரம், வெண்கலம், குங்குமப் பூ, கோதுமைமாவு ஆகியவற்றிலும் இலிங்கம் அமைத்து வழி படுவது உண்டு.

தயிர், பால், சர்க்கரை, கருப்பஞ்சாறு, கஸ்தூரி இவை களினாலும் கல்பிக்கப்பட்ட இலிங்கத்தையும் வழிபடுவர்.

சுவர்க்கலோகத்தை அடைய விரும்புகிறவன் தங்கலிங்கத்தையும், ஆயுளை விரும்புகின்றவன் சந்தன இலிங்கத்தையும், மனச் சாந்தியை விரும்புகிறவன் ஸ்படிக இலிங்கத்தையும், புகழை விரும்பு கிறவன் வெண்கல இலிங்கத்தையும், செல்வத்தை அடைய விரும்புகிறவன் சர்க்கரையினால் கல்பிக்கப்பட்ட இலிங்கத்தையும் பூசிக்கவேண்டும்.

முடிவுரை

சைவ சமயம் என்பது சிவ வழிபாட்டினையே கொண்டது. சிவவழிபாட்டில் இறைவன் பல நிலைகளில் காணப்பட்டாலும் இலிங்க வழிபாடே பெருமளவிற்குரியதாக அமைகின்றது.

பவப்பிணி மருந்து

சு. திருநாவுக்கரசு

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி
மயிலம் - 604 304

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தின் முதன்மைச் சீடர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள். கல்வியைக் கரையிலாத காஞ்சித் திருத்தலத்தில் 17-ஆம் நூற்றாண்டில் தோன்றியவர். கருவிலே திருவுடையராய்க் கவிபாடும் திறத்தைப் பெற்றவர். மறந்தும் புறந்தொழா நீர்மையராய் மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருளென்று கொண்டு நடையறாப் பெருந்துறவு நெறி நின்று வாழ்ந்தவர். தூய்மையும் வாய்மையும் நிறைந்த வாழ்க்கையினாலும், எளிமையும் இனிமையும் செறிந்த வாக்கு களாலும் மக்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர். சமயம், தத்துவம், காப்பியம், சிற்றிலக்கியம் முதலான பல்வகைப் பொருண்மைகளில் படைத்த நூல்கள் முப்பத்துநான்கனுள் ஒன்று 'கைத்தல மாலை' என்னும் தோத்திர நூலாகும்.

வானோர்க்கும் ஏனோர்க்கும் அரியனாகிய சிவபிரானை மனத்தால் எண்ணி, வாயால் வாழ்த்தி, மெய்யால் வணங்கி, அவனது அருளைப் பெறுவதற்குப் பெரிதும் உதவுவது திருக்கோயி லாகும். பாலில் நெய்போல் மறைந்திருக்கும் இறைவன், தயிரில் நெய்போல் வெளிப்பட்டுத் தோன்றும் திருவருள் நிலையம் இதுவாகும். அவ்வகையில் பற்பல தலங்களிலும் எழுந்தருளி இன்னருள் புரியும் சிவபிரான், கயிலாய மலையை இடமாகக் கொண்டுள்ளான் என்பதனைக்

''காவாய் கனகத் திரளே போற்றி;
கயிலை மலையானே போற்றி போற்றி''

என்றும் ''கயிலாயத் துச்சியான்; அவன் என் கண்ணுளானே'' என்றும் அப்பர்பெருமான் அருளிய ஒப்பரிய வாக்குகள் உணர்த்துகின்றன.

அத்தகைய சிவபிரானே, வீரசைவர்கள் தம்மார்பில் அணிந் துள்ள இட்டலிங்கப் பெருமானாக விளங்குகின்றான். அவனைத் தம்கரதலத்தில் எழுந்தருளச் செய்து நாள்தோறும் வழிபாடாற்றுதல் வீரசைவர் நெறியாகும். கயிலாயத்துப் பெருமான், வீரசைவர் கையை ஆலயமாகக் கொண்டு எழுந்தருளித் திருவருள் புரிதல்,

அவனது **'அருமையில் எளிய அழகா'**கும். இவ்வெளிவந்த நிலையை எண்ணியெண்ணி, அகங்குழைந்து, என்பும் நெக்குருகுமாறு பாடிய பத்துப் பாடல்களின் தொகுப்பே 'கைத்தலமாலை' என்னும் நூலாகும். அந்நூலுள் ஒரு பாடல் இட்டலிங்கப் பெருமான் 'பிறவிப் பிணிக்கு மருந்து' என்று போற்றுகிறது. அப்பாடல் வருமாறு:

''கன்னல் ஆரமு தினும்சுவை தருவதாய்க் காண்பான்
உன்னும் மால்அயற்(கு) அரியதாம் ஒருமலை உச்சி
மன்னும் ஓர்பவப் பிணிமருந்(து) எளிவந்(து) இருப்ப
என்ன மாதவம் செய்ததோ! எனதுகைத் தலமே''

(கைத்தலமாலை-5)

எனது கைத்தலம், கருப்பஞ் சாற்றினும், சுவை நிறைந்த அமுதினும் இனிமை பயப்பதாகவும், காண்பதற்குப் பெரிதும் முயன்ற திருமால், நான்முகன் ஆகியோர்க்கு அரியதாகவும் உள்ள, ஒப்பற்ற கயிலை மலைச்சிகரத்தில் நிலைத்துள்ள ஒப்பற்ற பிறவிப்பிணியைப் போக்கு தற்குரிய மருந்து, யான் தேடியுழலாத வண்ணம் எளிதாக வந்து வீற்றிருக்க என்ன மாதவம் செய்ததோ! என்பது இப்பாடற் பொருளாகும்.

உடற்பிணியைப் போக்க உதவுவன மருந்துகளாகும், மூலிகைகள் மருந்துகளாகப் பயன்பட்டு நோய்களை நீக்குகின்றன. இவை மலைகளில் செழித்து வளர்வன. உயிர்வாழ்வதற்கு இடனாக உள்ள உடலையே இடமாகக்கொண்டு, நோய்கள் தோன்றி உடலுக்குத் தொல்லை தருகின்றன. ஆனால் எங்கோ உள்ள மலைமூலிகைகள் அந்நோய்களைத் தீர்க்க உதவுகின்றன. இவற்றை எண்ணியே ஆன்றோர்கள் **'உடன்பிறந்தே கொல்லும் வியாதி' என்றும் 'உடன்பிறவா மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்'** என்றும் உரைத்தனர். போர்க்களத்தில் மூர்ச்சையுற்று வீழ்ந்துகிடந்த இலக்குவன் முதலானோரை உயிர்ப்பித்து எழவைக்க, அனுமன் 'சஞ்சீவி மலை'யைக் கொணர்ந்ததாக இராமாயணம் இசைக்கிறது.

உடற்பிணியைப் போக்க, மாமலையில் உள்ள மருந்து உதவுவதுபோல, பிறவிப்பிணியைப் போக்க, கயிலைமலையில் உள்ள சிவபிரானே மருந்தாவான். பாவுக்கரசராம் நாவுக்கரசர்,

'பேராயிரம் பரவி' எனத் தொடங்கும் திருத்தாண்டகத்தில், சிவபிரான் 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்' என்றார். இவ்வாறே,

'வானோர்க்கு அரிய மருந்தே'

(திருவாசகம் - போற்றித்திருவகவல்)

என்று மாணிக்கவாசகரும்,

'மலைமேல் மருந்து' (பெரியபுராணம் - ஏயர்கோன்-196)

என்று தெய்வச்சேக்கிழாரும் பாடியுள்ளனர்.

அருணகிரிநாதர், தாம் பாடிய திருத்தணிகைத் திருப்புகழில்,

'பதியான திருத்தணி மேவும்
சிவலோக மெனப்பரிவேறும்
பவரோக வைத்திய நாதப் பெருமாளே' (நிலையாத-)

என்று, முருகனைப் **'பவரோக வைத்தியநாதப் பெருமான்'** என்று பாடியிருப்பதும் ஒப்புநோக்கத் தக்கதாகும்.

காண்பதற்குப் பெரும்பாடு பட்டுழன்ற திருமால், நான்முகர்க்கு அரியதாகிய சிவபிரான், தம் கரத்தில் எளிதாக எழுந்தருளி, வழிபாட்டினை ஏற்றுக்கொள்ளும் திறத்தினை எண்ணித் தம்கரம் என்ன மாதவம் செய்ததோ! என்று வியந்து பாடியுள்ளார்.

உடற்பிணியைப் போக்கும் மருந்தென்றால் கசப்புச் சுவையே நினைவுக்கு வரும். ஆனால் பிறவிப்பிணிக்கு மருந்தாக விளங்கும் சிவபிரான், கரும்புச் சாற்றைக் காட்டினும், சுவைநிறைந்த அமுதினைக் (பாலினைக்) காட்டிலும் இனியவன் என்று இறையியல்பை, மக்களின் அனுபவத்திற்குட்பட்ட பொருள்களை உவமையாகக் கொண்டு உறழ்ச்சிப் பொருளில் விளக்கிக்காட்டும் திறம் மிகவும் போற்றத்தக்கதாகும்.

இத்திருப்பாடல் வாயிலாக உணரத்தக்கவை :

1. சிவபிரான் பிறவிப்பிணிக்கு மருந்தாவான்
2. அவன் கயிலைமலைச் சிகரத்தே இருப்பவன்
3. திருமால் நான்முகர்க்கு அரிய அவன், வீரசைவர் கரத்தில் இட்டலிங்கப் பெருமானாக எளிமையாக எழுந்தருளி, அவர்கள் செய்யும் வழிபாட்டினை ஏற்று அருள்புரிகின்றான்.
4. பற்பல தலங்களிலும் திகழும் இறைவன், தம் கரத்தில் எழுந்தருளும் வண்ணம் பேறுபெற்றிருப்பதை எண்ணி ஒவ்வொருவரும் உள்ளன்போடு, வழிபடுதல் தேவை.
5. மருந்தாக இருந்தாலும் கரும்புச்சாறு, இனிய அமுதம் (பால்) போல இனிமை தருபவன் இறைவன்.

இவற்றையெல்லாம் எண்ணி, இரையைத் தேடுவதோடு நில்லாமல், இறையையும் தேடி, நாடிக்கூடி **வழிபட்டு வாழ்வதும், 'வழிபடுவதே வாழ்வு'** என்பதும் கொண்டு அருள்பெறுவதே பெறுதற்கரிய பிறவி பெற்றதன் பயனாகும்.

பிள்ளைத் தமிழுக்குரிய பெரியோன்

சு. சிவக்குமார்

ஜெய்ராம் கலை, அறிவியல் கல்லூரி
சின்னத்திருப்பதி, சேலம் - 8.

தாலாட்டு மிகத் தொன்மையானது. மனித வாழ்வோடு தொடர்புடையது ஏட்டிலக்கியமாகிய பிள்ளைத்தமிழைப் பெற்றெடுத்த தாய்தான் தாலாட்டு. அத்தகு ஏட்டிலக்கியமாகிய பிள்ளைத்தமிழுக் குரிய பெரியோன் பற்றி இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

தாலாட்டு

தாலாட்டு என்பதற்குப் பொருள் யாது? தால் என்றால் நாக்கு, நாவினை ஆட்டிப்பாடுவதால் தால்+ஆட்டு = தாலாட்டாயிற்று. தாலாட்டுக்குரியோர் - தாய்மையின் பரம்பரைச் சொத்துத்தாலாட்டு எனவே பெண்களே தாலாட்டு இசைப்பதற்குரியோர் ஆவார். தலைச்சன்பிள்ளை பெத்தவளுக்குத் தாலாட்டு என்பது நாட்டு வழக்காகும்.

தாலாட்டிற்குரிய காலம் - குழந்தை அழும்போது அதன் அழுகையை அடக்கித் துயிலச் செய்யத் தாலாட்டுப் பாடுகின்றாள் என்று கூறினாலும், குழந்தையின் எந்தத் திங்கள் முதல் எந்தத் திங்கள் வரை தாலாட்டுப் பாடப்படுகிறது என்பதையும் அறிய வேண்டும். குழந்தை பிறந்த ஓரிரு வாரங்களிலிருந்து மூன்று வயது வரை தாலாட்டிற்குரிய காலமாகும். இத்தகைய தாலாட்டு ஈன்றெடுத்த ஏட்டிலக்கிய பிள்ளைத் தமிழுக்குரிய பெரியோன் வைணவப் பெரியோனே ஆவான்.

பிள்ளைத்தமிழ்க் கூறுகள்

தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத்தமிழ் தனிச்சிறப்புடையது. இது பிள்ளைக்கவி, பிள்ளைப் பாட்டு என்றும் பெயர் பெறும். பாட்டுடைத் தலைவனையோ, தலைவியையோ பிள்ளையாக உருவகம் செய்து, அவருடைய அரும் பெரும் செயல்களைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பாடுவது பிள்ளைத்தமிழாகும். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகையாகும்.

ஆழ்வார்களின் பிள்ளைத்தமிழ்

ஆழ்வார்களின் பாக்களில் இறைவனைப் பிள்ளையாகப் பாடிய முறை பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் தனி இலக்கியமாக மலர்ந்தது. பிள்ளையின் மூன்றாம் திங்கள் முதல் இருபத்தி ஒராம் திங்கள் வரை நிகழும் செயல்களைப் பாடுவது பிள்ளைத்தமிழ் என்கிறது பன்னிரு பாட்டியல்.

நூலமைப்பு

காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வாராணை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பன பத்தும் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பருவங்கள். கடைசியிலுள்ள சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் மூன்று பருவங்களுக்குப் பதிலாகக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பனவற்றைக் கொண்டால் அது பெண்பாற் பிள்ளைத்தமிழாம்.

யாப்பு வகையில்

ஆசிரிய விருத்தத்தில் அமைவது பிள்ளைத்தமிழ். ஒவ்வொரு பருவத்திலும் பத்துப்பத்துப் பாடலாகப் பத்துப்பருவங்களில் அமைவது. இதற்கு மாறுபட்ட பிள்ளைத்தமிழ்களும் உண்டு. தெய்வங்களைப் பிள்ளையாகப் பாடும் பிள்ளைத்தமிழ் நூல்கள் பக்திப்பாக்களோடு சேரும். அரசர்களையும் வள்ளல்களையும் தலைவராகக் கொண்டவற்றின் உள்ளடக்கம் தனி மனித துதி என்று சொல்லலாம்.

நாலாயிரத்தில் தாலாட்டு

பெரியாழ்வார் தன்னைத் தாயாகவும், திருமாலைக் குழந்தை யாகவும், ஆக்கித் தாலாட்டி மகிழ்ந்தார். தமிழின் முதல் தாலாட்டுப் பெரியாழ்வாருடையது. அவர் தமிழில் புது நெறியைப் புகுத்திய பெருமையுடைய பெரியோன். பிள்ளைத்தமிழுக்குத் தாய் பெரியாழ்வாரே ஆவார்.

'மாணிக்கம் கட்டி வயிரம் இடைக்காட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச்சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் வீடு தந்தான்
மணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேயோ'

மாணிக்கம் பதித்து வயிரமும் இடையிடையே பதித்து உயர்ந்த ஆணிப் பொன்னால் செய்யப்பட்ட ஆழகான சிறு தொட்டிலை உனக்காக ஆசையோடு பிரமன் அனுப்பினான் கண்ணா நீ உறங்கு, தாலேலோ என்று பாடி மகிழ்ந்தார்.

குலசேகர ஆழ்வார்

இறைபக்தியில் ஆழ்ந்தவர் இராம அவதாரத்தை உள்ளும் புறமும் உணர்ந்து உருகியவர். அவர் திருமாலைக் குழந்தையாக்கிக் களிக்கின்றார்.

''மன்னுபுகழ்க் கௌசலைதன் மணி வயிறு வாய்த்தவனே
தென் இலங்கைக் கோல் முடிகள் சிந்துவித்தாய்
கன்னி நன்மா மதின்புடைசூழ் கண புரத்து என் கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலே லோ''

குலசேகர பெருமாள் இராம அவதாரத்தில் ஈடுபாடு மிகுந்தவர். ஆகையால் கோசலையின் அழகிய வயிற்றில் பிறந்தவனே இராவணன் முடிகளைச் சிதறச் செய்தவனே இராகவனே தாலேலோ என்று பாடி மகிழ்ந்தார்.

''திண்திறலாள் தாடகை தன் உரவமுச் சிலை வளைத்தாய்
தங்கு பெரும் புகழ்ச் சனகன் திருமருகா தாசரதீ
எண் திசையும் ஆளுடையாய் இராகவனே தாலேலோ''

தாடகையின் வலிமை உருவுமாறு அம்பு தொடுத்தவனே சனகனின் மருகா எட்டுத்திசையும் ஆளும் உரிமையுடையோனே இராகவனே தாலேலோ என்று பாடியுள்ளார்.

பிள்ளைத்தமிழுக்குரியோன் திருமாலே

பத்து அவதாரங்களை எடுத்து ஒவ்வொரு அவதாரத்திலும் பிறந்து வளர்ந்து பின அந்தந்த அவதாரத்தின் வினைப்பயனை முடிப்பதனாலே ஆகையால் தாலாட்டுப் பாடுவது உரியதாகும். வாதிடும் சைவப் பெரியோர் திருமாலைச் செத்துப் பிறக்கும் தெய்வம் என்றனர்.

சைவப் பெரியோனுக்குப் பொருந்தாக் காரணம்

முதலும் முடிவும் அற்றவன் ஆகையால் சைவ முதல்வனைப் பிள்ளைத் தமிழால் பாடுவதுப் பொருந்தாது. மாணிக்கவாசகர் தனது திருவெம்பாவையில் பாடுகின்றார்.

''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்''

முதலும் முடிவும் இல்லாத அருட்பெருஞ்சோதி என்ற திருவெம்பாவைப் பாடல் வரிகளால் உணர்த்துகின்றது.

தாலாட்டின் உள்ளடக்கம்

குழந்தை ஆதலால், முதலும் முடிவும் இல்லாத சோதியான பெரியோனுக்குப் (சிவபெருமான்) பிள்ளைத்தமிழ் ஆக்கத் தவறினர்

எனலாம். அவ்வாறில்லாமல் பிள்ளைத்தமிழ் இலக்கண வரம்பு மீறி ஆக்கப்பட்டிருக்குமானால் அந்நூல் போற்றப்பட்டிருக்குமா? என்பது ஐயமே.

தாலாட்டு உணர்த்தும் தத்துவம்

அறிவியல், உண்மை அடிப்படையில் கருத்தினை விளக்கிக் காட்டும் தாலாட்டின் ஒலித்தொடராகிய

''ஆராரோ ஆரிவரோ'' தொடர் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்துகின்றது அதுபோல் ஏட்டிலக்கியமாகிய பிள்ளைத்தமிழ் மெய் உணர்தலை நெறிப்படுத்த உதவுகின்றது.

தாலாட்டில் அம்மான் பெருமை

உடன் பிறப்பு இல்லா வாழ்க்கை பாழாம். பிறந்த இடத்தின் சீரெல்லாம் புகுந்த இடத்தில் போற்றும் இயல்பினள். பெண்ணுக்குப் பிறந்தவீடு சீதனம் தந்து சிறப்பிக்கிறது. அடுத்துத் தன் உடன் பிறந்தான் வீட்டின் ஒவ்வொரு விழா நிகழ்ச்சியிலும் கணிசமான அளவிற்குச் சீர்வரிசை செய்பவன் அம்மானே.

''ஆண்டம்மான் தந்தான்
ஆனை கொடுத்து விட்டான்
குட்டியம்மான் என்ன தந்தான்
குன்றி மணித் தொட்டி விட்டான்'

பெரியாழ்வார்

தம்பாடலில் நாட்டுப்புறப் பாடலைப் பின்பற்றி அம்மான் பெருமை உணர்த்துவதாக அறிய வருகின்றது. பெரியாழ்வார் அம்மான் பெருமை குழந்தை வளர்ச்சிப்பாடல் வழி நின்று, தாய்மாமன் சீர் வரிசை முறையிலே தொடர் வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்துகின்றது.

தாலாட்டில் எதிர்காலம்

நம்பிக்கைத் தான் வாழ்க்கையின் அடித்தளம். எதிர்கால நம்பிக்கையில் தான் வாழ்க்கையின் உயிர் இருக்கிறது. தாயும் தன் குழந்தையின் எதிர்காலக் கனவில் திளைக்கின்றாள். தன் குலம் விளங்க வேண்டும், குடி வளர வேண்டும் என்ற தாயின் ஆர்வம், தன் மகனைப் பல்வேறு கோலங்களில் வாழ்த்திப் பார்க்கிறது.

குலசேகர ஆழ்வார்

தம் பாடலில் தாலாட்டின் எதிர் காலத்தை உணர்த்து கின்றார். தாய் எதிர்காலக் கனவில் திளைப்பதுபோல, குலசேகர ஆழ்வார் மன்னுபுகழ்க் கௌசலை பாடல் உணர்த்துகின்றது.

இத்தாலாட்டின் வாயிலாகக் குலசேகர ஆழ்வார் புறப்பொருளை உணர்த்துவதாகத் தெரியவருகின்றது.

நிறைவு

உலகத்தை அழிக்கும் ஒருவனே, மாறும் உலகில் மாறாமல் நிலையாக நிற்பவன் பிள்ளைத்தமிழுக்குப் பொருந்தாப் பெரியோன் சிவனே.

> ''உடையார் கன மணியோடு ஒண்மாதுளம்பூ
> விடையேறு காபாலி ஈசன் வீடுதந்தான்''

பெரியாழ்வார் பாடல் வரிகள் சிவபெருமான் திருமாலுக்காக மணிமாலையும், மாதுளம்பூ முதலியவை கலந்து கோத்த மாலைகளும் கொடுத்தனுப்பினான் என்று புலப்படுத்துகின்றன.

தெய்வங்களைப் பிள்ளையாகப் பாடும் பிள்ளைத்தமிழ் நூல்கள் பக்திப் பாக்களோடு சேரும். ஆழ்வாரின் பாக்களில் இறைவனைப் பிள்ளையாகக் கருத்தினுள் கொண்டு பாடிய முறை பிற்காலத்தில் பிள்ளைத்தமிழ் என்னும் தனி இலக்கியமாக உருவெடுத்தது எனலாம்.

பொருந்தாத் தலைப்பு

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாகிய சைவப்பெரியோனுக்கு இத்தலைப்புப் பொருந்தாமல் அமைகின்றது.

பாட்டியல் விளக்கம்

பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை ஆகிய இலக்கண நூல்களின் வரையறை, சைவப் பெரியோனுக்குப் பொருந்தா நிலையைப் புலப்படுத்துகின்றது.

சைவம் பெரிதா வைணவம் பெரிதா, எனச் சமயப் பெரியோர்கள் வாதிட்ட காலத்தில் செத்துப் பிறக்கும் தெய்வம் எனச் சைவப் பெரியோர்களால் இகழப்பட்ட வைணவப் பெரியோனே தாலாட்டு ஈன்றெடுத்த ஏட்டிலக்கியமாகிய பிள்ளைத்தமிழுக்கு உரியவன் என அறியப்படுகின்றது.

துணைநின்றவை

1. கி. வேங்கடசாமி ரெட்டியார் (ப.ஆ.) நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம், சென்னை, 1973
2. வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாதடமி, புதுடெல்லி, 1972.
3. கோவிந்தசாமி, உ.த. பன்னிரு ஆழ்வார்கள் வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1992.

Narasimma Avatharam and A Tiger for Malgudi A Comparative Study

S. Andal

Sree Meenakshi Govt. College for Women
Madurai - 2

One of the aims of Comparative Study is to prop not only the outer meaning of things which are compared but also to bring to light the indepth meaning of the things which are taken for comparative study. This paper will compare one of Lord Krishna's Avatharams - Narasimma Avatharam and R.K. Narayan's English novel - A Tiger for Malgudi and discuss the possible comparable ideas within these two stories.

A brief sketch of the Narasimma Avathara story and a brief summary of the novel - A Tiger for Malgudi will help the reader to follow the comparative discussion easily. According to purana, Narasimma Avatharam was taken up by Lord Krishna to kill Eraniyan - the giant king. Eraniyan compelled his country people to accept him as God. But his own son - Prakalathan - a child refused to submit himself to his father's command. He pronounced only Lord Krishna's name as 'OM Namo Narayana' instead of 'Eraniyaya Namaka'. Aroused by anger Eraniyan pointed to a pillar and asked his son wheather God is present in that pillar. Prakalathan said "yes". Eraniyan pulled down the pillar and Narasimman with his ferocious angry Lion's face and human body appeared and crushed - down Eraniyan. He was calmed down only after seeing Goddess Lakshmi.

Regarding A Tiger for Malgudi, A Tiger is the hero of this novel, and it narrates its story by recollecting its past life. In search of its cubs and his tigress, this tiger reached a village. It saw its own family members carried away by human beings inside the iron cages. But it was not able to save them. Then it started killing animals one by one in that village just to satisfy its

hunger. At last it was captured by a circus captain. He earned money by making the tiger perform various exercises in the circus in Malgudi. Then a film producer shot certain scenes for his film by making this tiger to do certain actions with the help of the circus captain. At first the Captain used whip to lash the tiger to do the scene. But induced by the film producer he started using electric staff to arouse pain in the tiger. Aroused by anger, the tiger escaped from the film campus after killing the captain. Then it entered a school. Everyone was afraid of this tiger. At last one mystic talked to the tiger and the tiger followed him meekly just like a cat and both of them lived in the forest for some time. After wards this tiger was taken to the zoo..

The first point of comparison between these two stories is that no one has the right to torture others. In the Eraniyan story, Eraniyan tortured his people and his son and was killed by Lord Narasimman. In the same way the captain of the eircus tortured the tiger in A Tiger for Malgudi and was killed by the tiger.

At the next point both the stories bring out the idea that in this universe every object is the creation of God, and every object has its own special quality and one can control the special quality of other only to a certain limit and beyond certain limit none can control this special quality given to them by God. In Eraniyan story, Eraniyan controlled his subjects to accept him as their God, but he could not control his son's - Prakalathan's - special quality who had the view that Lord Krishnan is the God and not Eraniyan by pronouncing the manthra as 'OM Namo Narayana' instead of 'Eranyaya Namaka'. In A Tiger for Malgudi, through tiger drinkin milk episode, the author seems to convey the same idea that every object created by God has its special quality and one can control this quality only to a certain limit. In this novel once the captain has made the tiger perform a particular scene in the circus drinking the milk of cow from a cup in the presence of a goat which too was drinking the cow milk from another cup. Tiger has the special quality of eating a goat. But the captain could not succeed in performing this scene for a long period because, once while the tiger was drinking the cow milk in the presence of the goat, aroused by

its special quality it snipped away the goat in the midst of the audience.

Another level of meaning which these two stories are focussing is that, anger is a weapon, which can be used only for right purpose. Irritated by Prakalathan's actions, Eraniyan out of anger pulled down the pillar and faced fatal death at the hands of Narasimman. In the same way irritated by tiger's actions, the circus captain started using electric staff instead of the whip of the tiger, and faced fatal end at the hands of the tiger. In Narasimma Avatharam, Lord Narasimman showed his anger to crush the torturer of the people. But after the crusifiction, He was calmed down on seeing Goddess Lakshmi. In the same way after killing the captain the angry tiger turned out to be a very calm animal due to the Mystic's teachings.

At themetic level both the stories moved around the basic theme that pride or giving importance to ego is the root cause of destruction. Eraniyan's flaw was his pride and due to that he considered himself as God and he was duly punished for that. In A Tiger for Malgudi the circus captain thought that since he had kept all the animals under his thumb control, his pride made him to have over confident. As a result he thought he could make the tiger to stand on his hind legs by making use of the electric staff, just to shoot a scene for a film and was duly punished for this.

If these stories are probed at symbolic level, then they could present still more clear views. In Narasimma Avatharam Lord Krishna appeared with Lion's face which is the symbol of courage and victory. At deeper level it may also symbolize the conscience of human beings. The way in which Narasimman put an end to Eraniyan's life (putting Eraniyan's body over His thighs and plucking the fleshy part of his stomach and garlanded His neck)seems to be a warning symbol to human beings that, everyone must give respect to his conscience. Other wise they could be duly punished for their errors.

Just like the Lion in Narasimma Avatharam, in A Tiger for Malgudi, Tiger symbolizes courage and victory. Again like the lion, the tiger too may be considered as the symbol of human conscience. While tiger walked in the street of the village,

people were very much afraid to see this tiger. And they tried their level best to save themselves from the sight of the tiger. Here like the Lion, tiger too seems to be a warning symbol to human beings which announces the world that, human beings must act according to their conscience.

Over cleverness of God's creation seems to be satirised through Narasimma Avatharam. Eraniyan got the promise from God, that he must not be killed either by human being or by animal, neither at day time or at night time, and also not in the air or in the earth. By getting this promise, he thought that, none could kill him. But alas! What happened. Lord took the form of Narasimman, who appeared neither as a human being, nor as a Lion, and killed him by putting his body on His thighs which could be considered neither as earth nor as air and He selected the time to kill him was during "Santhiya Kalam' which is neither night nor day time.

In A Tiger for Malgudi, mild satire against over cleverness of man is described in the episode of Alphonse trying to shoot the tiger. When the tiger entered into the school, people gathered around the school. In the midst of the crowd Alphonse made a great show by carrying his gun this way and that way and said he could shoot the tiger. He asked the boys to bring the ladder. But when the ladder was brought, instead of shoooting the tiger, he started drinking the wine saying that he could get courage to shoot the tiger by drinking it. But alas! Due to the effect of the wine, he could not even life the gun properly and fell flat on the ground.

The point which I would like to stress here is, Eraniyan thought none could kill him by getting such crafty promise from God. But he could not succeed in his crooked promise. In the same way, Alphonse too thought that he could shoot the tiger by his tactics. But failed in his attempt.

Just because Lord appeared with the face of Lion in Narasimman Avatharam, we must not come to the conclusion that God is as ferocious as Lion. He could stoop Himself down to the love and affection of any of his creations. As soon as Prakalathan said, God resides even in that pillar which was

pointed out by his father, Lord Narasimman emerged out of that crushed - down pillar due to Prakalathan's sincere love for Him.

In A Tiger for Malgudi, Tiger which represents God, was feared by everyone except the Mystic. The Mystic walked along with the tiger, as though they were very great friends. Once while they were walking towards the forest, the crowd which was drawing the chariot which possessed the God's image inside it, stopped suddenly and started running, leaving the chariot on seeing the tiger. But the Mystic told the crowd "come, come back, don't abandon your God. Draw the chariot along. Come on, Come on. My tiger is Godly......He loves you all. Go on....." P. 156.

By comparing the story of Narasimman Avatharam and R.K. Narayan's A Tiger for Malgudi this paper brought to light the following views.

1. No one has the right to torture others.
2. Every object in this Universe is gifted with a special quality by God. And only for a certain limit this special quality can be controlled.
3. Anger is the weapon which has to be used only for the right purpose.
4. Pride or ego will lead only to destruction.
5. The Lion and tiger may symbolize not only courage and conscience but also they seem to stand as warning symbol to human beings which seem to warn mankind to lead their lives by giving respect to their conscience.
6. Our crafty methods will come to nothing in the presence of God.
7. God is not ferocious. If we love Him sincerely then He too will love us.

To conclude, shall we take sides with R.K. Narayan who says through the sage, "what our country needs most is a tiger for every village and town to keep people discipline.....(P. 55) Shall we enlarge this idea by adding one more ferocious animal the lion alongwith the Tiger, so that human beings will give up their self' and march towards 'The Great SELF' through sincere love.

இந்து மதத்தில் பௌத்த சமயக் கருத்துகள்

சு. அரவிந்த்

பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

புத்த மதக்கருத்துக்களின் சிறப்பும் அவை இந்து மதத்தில் இடம் பெற்ற நிலையையும் காண்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

புத்த பெருமான் உலகமக்கள் அடையும் துன்பங்களுக்கெல்லாம் தீர்வு காணவேண்டும் என்று கடுந்தவம் மேற்கொண்டு ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்தார். இதனையே, ''உலகிலுள்ள துன்பங்களுக்கெல்லாம் காரணமாக ஆசையினை ஒழித்தால் வீடு பேறு அடையலாம்'' என்றார் புத்தர் என விளக்கம் தருவர் *(உலக சமயங்கள், குமரிமலர், ப. 19)*

புத்த மதத்தின் அடிப்படை ஒழுக்கவியல் தன்னுரிமை மிக்க தனிமனிதக் கோட்பாடுகளைக் கொண்டதாகும். இது முற்றிலும் சட்ட முறையும் சமுதாயக் கொள்கையும் கொண்ட பிராமண்யத் திற்கு முரண்பட்டதாகும். இதனைக் கீழ்க்கண்ட தம்மபதத் தொடர்களால் காணலாம்.

''1. எப்பாவத்தையும் செய்யற்க, 2. நல்லறமே செய்க, 3. ஒவ்வொருவரும் தம் நெஞ்சத்தைத் தூய்மைப்படுத்துக'' *(சமய அறிவியல், ப. 488)* என்று குறிப்பிடு கின்றது கலைக் களஞ்சியம்.

மேலும் புத்தர் வாழ்வின் நிலையாமையில் தோன்றும் நான்கு வகையான, நெறிகளையும் கூறுகின்றார். அவை ''1. துக்கம் 2. துக்க காரணம் 3. துக்க நீக்கம், 4. துக்க நெறி, என்ற நான்கு வழி களைக் கூறுகின்றார்'' *(திருக்குறளும் இந்திய அறநூல்களும், ப. 81.)* அந்நான்கும் இறைவனை அடைய பாதுகாப்பான புகலிடமாகும்.

பௌத்தமதத் தத்துவங்கள்

பௌத்த மதத் தத்துவம் பன்னிரண்டு நிதானங்களைக் கொண்டுள்ளது. அவற்றை சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் தமிழ்ப் படுத்திக் கூறியுள்ளார். அவை, 1. பேதைமை 2. செய்கை,

3. உணர்வு, 4. அருவுரு, 5. வாயில், 6. ஊறு, 7. நுகர்வு, 8. வேட்கை, 9. பற்று, 10. பலம், 11. தோற்றம், 12. வினைப்பயன்.

வீடு பேறடைவது பௌத்தர்களின் நிர்வாண மோட்சமாகும். அதற்கான வழிகள் நான்கு.

1. துக்கம் (அ) நோய்

பிறத்தல், பிணி, மூப்பு, சாக்கடைவது போன்றவைகளும், அரற்று, கவலை, கையறு இவை அனைத்தும் துன்பம் தருவன. புலன்களால் உண்டாகும் பற்றுக்கள் அனைத்தும் துன்பம் தருவன. என்பதை மணிமேகலை,

''உணர்வே அருவுரு வாயில் உளறே
நுகர்வே பிறப்பே பிணி மூப்புச் சாவே
அவலம் அரற்றுக் கவலை கையாறென
நுவலப் படுவன நோயா கும்மே''

என்று குறிப்பிடுகின்றது.

2. நோய்க்குக் காரணம்

துன்பம் விளைவதற்குக் காரணமாக இருப்பவைகளை உணர்வது இரண்டாவது உண்மை

''அந்நோய் தனக்குப்
பேதமை செய்கை அவாவே பற்றுக்
கரும வீட்டமிவை காரணம் ஆகும்'' (மணிமேகலை)

3. நோய் நீக்கும் வாய்

நோயையும் நோய்க்குக் காரணமாக இருப்பவைகளையும் நன்கறிந்து, இவற்றில் ஆசைதான் காரணம் என்பதை நன்குணர்ந்து, நோயினின்று விடுதலையடையும் வாயிலை அறிவது மூன்றாவது உண்மை,

''துன்பம் தோற்றம், பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றிலி காரணம்'' (மணிமேகலை)

4. நோய் நீக்கும் வழி

துன்பத்தைப் போக்கி வீடுபேறாகிய நிர்வாண மோட்சத்தை அடைவதற்கு வழி என்றால் அஷ்டங்கமார்க்கத்தைக் கடைப் பிடிப்பதே ஆகும்.

அஷ்டங்க மார்க்கம்

1. நற்காட்சி, 2. நற்கருத்து, 3. நல்வாய்மை 4. நற்செய்கை, 5. நல்வாழ்க்கை, 6. நல்லூக்கம், 7. நற்கடைப்பிடி, 8. நல்லமைதி என்ற எட்டு வித மார்க்கங்களைக் கடைப்பிடிக்கும்போது, மேலான நிர்வாண மோட்சத்தை அடைய ஏதுவாகின்றது.

பௌத்த மதம் வளரக் காரணங்கள்

புத்த பெருமான் அவதரித்த அதே காலகட்டத்தில் தான், சமண மதத்தைச் சார்ந்த கடைசித் தீர்த்தங்கரான ஆன வர்த்தமான மகாவீரர், மற்றும் அஜீவக மதத்தை உருவாக்கிய கோசாலி மக்கலி என்பவரும் வாழ்ந்தனர். இவர்கள் இருவரும் உருவாக்கிய மதங்களும், பிராமண மதம் என்றழைக்கப்பட்ட வைதீக மதமும் பௌத்த மதத்திற்கு எதிராக இருந்தன. வேத காலம் முதல் மக்கள் வேதத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் மேற்கொண்டு இருந்தனர். மேலும் வேத உபநிடதங்களில் கூறாத புதுமையான கொள்கைகள் கொர்ண்டிருந்த புது மதமான பௌத்தம் சிறிது சிறிதாக மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியது. மேலும் பௌத்த மதம் வளரக் காரணங்கள் என்ற வகையில் சிலவற்றைக் காணலாம்.

ஜைன மதமும் அஜீவக மதமும் கடுமையான சட்டதிட்டங் களைத் தம் மதக் கொள்கையாகக் கொண்டு இருந்தன. மேலும் இவ்விரு மதங்களும் கடுமையான உண்ணா நோன்பு மேற் கொண்டிருந்தன, தம் மதத்தாரும் அதனை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் புத்தர் உடலை வருத்தும் உண்ணா நோன்பை விடச் சிறிதளவாவதும் உணவு உட்கொள்ள வேண்டும் என்றார்.

ஜைன, அஜீவக மதத் துறவிகள் உடையின்றி அம்மணமாகத் திரிந்தனர். ஜைனத் துறவிகள் உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கக் கூடாது என்ற எண்ணத்தில் தம் உடலையும், உயிரையும் பெரிதும் துன்புறுத்திக் கொண்டார்கள்.

வைதீக மதம் பிராமண மதம் எனப்படும். இது தம் கொள்கை களை தேவபாஷை என்ற வடமொழியில் மட்டுமே கொண்டிருந்தது. குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டுமே உரிமையானது என்ற பேதத்தைக் கொண்டிருந்தது.

அதனால் சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது, ஆனால் பௌத்த மதக் கொள்கைகள் அன்றைய வழக்கில் இருந்த பாலி, பிராஹிருதம் போன்ற மொழிகளிலேயே இருந்தது. மேலும் அந்தந்த வட்டார மொழியில் தம் கருத்துக்களை மாற்றி மக்களிடத்தில் பரப்புவதற்குப் புத்தர் வலியுறுத்தினார்.

வைதீக மதத்தினர், தம் இஷ்ட தெய்வங்களுக்கு யாகம் செய்தனர். அதில் ஆடு, மாடு, குதிரை போன்ற மிருகங்களையும், உயிர்களையும் கொன்று பலி கொடுத்தனர். புத்தர் உயிர்க் கொலை புரிதலைத் தடுத்தார். உயிர்கள் மேல் கருணை கொண்டு அன்பு செலுத்த வேண்டும் என்றார்.

வைதீக மதம் மக்களிடையே சாதிப் பிரிவையும், வருணா சிரமத்தையும் வளர்த்து வந்தது. ஆனால் பௌத்த மதம் அனை வரையும் சமமாகப் பாவித்தது. வைதீக மதம் ஆண்கள் மட்டுமே துறவறம் மேற்கொள்ளலாம் என்ற கொள்கையைப் பின்பற்றியது, பௌத்தம் இருபாலரும் துறவு மேற்கொள்ளலாம் என்றது.

இது போன்ற பல காரணங்கள் பௌத்த மதம் வளர்வதற்கு மறைமுகமாகவும், நேரிடையாகவும் பெரிதும் துணைபுரிந்தன.

இந்து மதத்தில் இடம் பெற்ற பௌத்த மதக்கருத்துகள்

சிறப்பாக வளர்ச்சி பெற்ற பௌத்த மதம் காலப் போக்கில் வைதீக மதத்தால் தம் செல்வாக்கை இழந்தது, என்றாலும் தம் மதக் கருத்துக்களை இந்து மதத்தில் விட்டுச் சென்றது எனலாம் அவ்வாறு இந்து மதம் ஏற்றுக் கொண்ட ஒரு சில பௌத்தக் கருத்துக்கள் வருமாறு:

1. அவதாரமாக ஏற்றுக் கொண்டது

புத்தரை அவதாரமாக ஏற்றுக் கொண்டது. வைதீக மதத்தின் ஒன்றான வைணவச் சமயம் புத்தரைத் திருமாலின் அவதாரமாக ஏற்றுக் கொண்டது. அதே போல சைவ சமயமும் புத்தரைச் சாஸ்தா அல்லது ஐயனார் என்னும் பெயருடன் தம் தேவர்களில் ஒருவராகச் சேர்த்துக்கொண்டது. புத்தருக்குத் தருமராசன், விநாயகன் என்றும் பெயர்கள் உள்ளன. இதனை நிகண்டுகளிலும் காணலாம். தருமராசன் என்னும் பெயருடன் இருந்த பௌத்தக் கோயில் களைப் பிற்காலத்தில் பஞ்சபாண்டவர்களில் ஒருவரான தருமராசன் கோயிலாக மாற்றிக் கொண்டது.

2. சிறுதெய்வங்களாக மாற்றியது

பௌத்த சிறுதெய்வங்களை இந்து மதம் ஏற்றுக் கொண்டது. மணிமேகலை, சம்பாபதி, தாராதேவி போன்ற தெய்வங்களை, இந்து மதம் பின்னர் காளி, பிடாரி, திரௌபதையம்மன் என்ற கிராம தேவதைகளாக ஏற்றுக் கொண்டது.

3. உயிர்க் கொலை நீக்கியது

யாகங்களில் உயிர்களைப் பலி கொடுத்த வைதீக மதம் பௌத்த மதக்கொள்கையான கொல்லாமையை ஏற்றுக் கொண்டது. பிராமணர்கள் மாமிசம் உண்பதை நிறுத்திக் கொண்டு சைவ உணவை உண்ணும் படி செய்தது.

4. அரசமரசத்தைத் தொழுதல்

புத்தர் போதி மரத்தடியில் தவம் மேற்கொண்ட போது ஞானம் கிடைக்கப் பெற்றதால், பௌத்தம் அரச மரத்தைப்

புத்தரைப் போலவே போற்றியது. அதன் தாக்கம் இன்றளவும் இந்து மதத்தில் அரச மரத்தைத் தொழுவதைக் காணமுடிகின்றது.

அதேபோல் விநாயகரை அரசமரத்தடியில் வைத்து வணங்குவதையும் பார்க்க முடிகின்றது.

5. மடங்களை ஏற்படுத்தியது

பௌத்த மதத்தில் புத்தம், தருமம், சரணம், சங்கம் என்ற கருத்துக்கள் சிறப்புப் பெற்றன. பௌத்த துறவிகள் ஊர்தோறும் விகாரைகளை ஏற்படுத்தி மக்களுக்கு மதபோதனை, மருத்துவம் போன்றவைகளைச் செய்தனர். அதன் தாக்கம் இன்று இந்து மதத்தில் மடங்கள், பீடம், ஆதீனம் என்ற பெயர்களில் காணப்படுகின்றது.

6. அத்வைதம் உண்டானது

கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சங்கராச்சாரி யாரால் உண்டாக்கப்பட்ட மாயாவாத மதம். ஸ்மார்த்த மதம் என்று சொல்லப்படுகின்ற அத்வைத மதம் மகாயான பௌத்த மதத்திலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

7. பௌத்தக் கதைகளை ஏற்றது

அன்னப் பறவையின் அவதாரம் கொண்டு புத்தர்பிரான், மக்களுக்கும் மன்னனுக்கும் அறநெறி உரைத்தார் என்று பௌத்த மதம் கூறுகின்றது இதனை ஹம்ச ஜாதகம், புத்த ஜாதகம் என்று குறிப்பிடுகின்றனர். புத்தரைத் திருமாலின் அவதாரமாக ஏற்றுக் கொண்டது. இதனைத் திருமங்கயைாழ்வார் பாசுரகளில் காண முடிகின்றது.

அன்மாய் அன்று அங்கருமறை பயந்தான்
அரங்கமா நகர் அமர்ந்தானே

முடிவுரை

உலகத்திலே அறம் குன்றி மறம் வளர்ந்து மக்கள் துன்ப மடையும் போதெல்லாம் புத்தர்கள் தோன்றிய அறவழியைப் புகட்டி மக்களை நல்வழிப்படுத்துவார்கள் என்ற எண்ணங் கொண்ட, பௌத்த மதம் பாரத கண்டத்தில் தோன்றிப் பெரும் வளர்ச்சி பெற்று, பின்னர் வைதீக மதத்தால் வீழ்ச்சி அடைந்தது. ஆனால் இன்னும் பல நாடுகளில் சிறப்புடன் இருக்கின்றது. பௌத்த மதத்தை அழித்த வைதீக மதம் அதன் சிறப்பான கொள்கை களைத் தனதாக்கிக் கொண்டது, அதன் சிறந்த கொள்கைகளான, கொல்லாமை, வழிபாடு, தருமம், கருணை போன்றவைகள் இந்து மதத்தால் போற்றப்படுகின்றன.

தலித் அரசியலில் பௌத்தம்

அரங்க. மல்லிகா

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 8

தலித் பண்பாடு இலக்கியமாக உருவாகி வருகிறது. தலித் இலக்கியம் சமூகப் பண்பாட்டு வேர்களை அடையாளப்படுத்துகிறது. தலித் குரல் தலித் அரசியலைத் தீர்மானிக்கிறது. இச்சூழலில் தலித் அரசியலுக்குப் பௌத்தம் எந்தளவில் துணையாகிறது; பயன்படுகிறது என்பதை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாதி அமைப்பை விசாரணைக்குட்படுத்துவது சமத்துவத்தை வலியுறுத்துவது ஆகிய இரண்டும் தலித் அரசியலின் நோக்கமாக இருப்பதால் இவற்றை முதன்மைப்படுத்திதான் தலித்துகள் மீதான வாழ்வியலனுபவங்கள் இலக்கியமாக்கப்பட்டு வருகின்றன. இதில் பெண்களின் விடுதலையும் மையப் படுத்தப்படுகின்றது. ஏனென்றால், ''தீண்டத்தகாதார் விடுதலை என்பது பெண் விடுதலை பெறாத வரை சாத்தியமில்லை'' என்று அம்பேத்கர் கூறியிருப்பதை இதனோடு இணைத்து எண்ணிப்பார்க்க வேண்டியதாகிறது. அதனால் தலித் அரசியலின் நிலைப்பாட்டில் பெண்விடுதலை மையப் புள்ளியாகிறது. இதனைச் சமூகத்தினர் புரிந்து கொள்ள பௌத்தம் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அம்பேத்கர், ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்குப் பௌத்தம் வழிகாட்டுகிறது; பௌத்தம் தலித் விடுதலைக்கானது என்று கூறுகின்றார். இந்துமதம் தலித்துகளைப் புறம் தள்ளி, மனிதர்கள் என்ற வரையறைக்குள் தலித்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பௌத்தம் கடையனையும் புலையனையும் மானுடனாக ஏற்றுக்கொள்கிறது. குறிப்பாக, தலித்மக்களின் விடுதலை மானுட விடுதலை என்பதால், இந்த அணுகுமுறையோடு பௌத்தத்தைப் பார்க்க வேண்டியதாகிறது. பௌத்தம் மானுட விடுதலையைப் பேசுகிறது. விடுதலை என்பது அடிமைப்பட்டதிலிருந்து உருவாவது. சமூகத்தில், அடிமைப்பட்டவர்களாய், ஒடுக்கப்பட்டவர்களாய், சுரண்டப்பட்டவர்களாய் இருப்பவர்கள் அனைவரும் விடுதலை உணர்வுபெற பௌத்தம் வழிகாட்டுகிறது.

அம்பேத்கர் பௌத்தத்தைக் கடைப்பிடித்தார் என்பதற்காக, அவரின் பௌத்தத் தழுவல் விமரிசனத்திற்குட்பட்டது. ஆனால், எல்லா மனிதர்களும் இந்து மதத்தின் தத்துவப் பின்னணியைச் சரியாகப் புரிந்துகொண்டால், பௌத்தம் மீதான விமரிசனம் அர்த்தமற்றது என உணர்ந்து கொள்ளலாம். ஏனென்றால், இந்நூற்றாண்டு தலித் அரசியலை மையப்படுத்தி பல சிக்கல் களை எதிர்கொள்கிறது. தலித் அரசியல் கலக அரசியலாக அடையாளப் படுத்தப்படுகிறது. இது குறித்து அம்பேத்கர் கூறும் கூற்றை இங்கே நினைவுபடுத்தலாம்.

இதுநாள் வரையில் தன் நிலைமை குறித்து (அரசியல்) சிந்திக்க முடியாத தலித் மக்கள் இருந்த நிலைமாறி தன்னைக் குறித்துச் சிந்திக்கத் துணிவதே கலகத்தின் தன்மையைக் கொண்டி ருக்கிறது. தன்னைப்பற்றின சிந்தனை எப்போதும் ஒப்பீடு மூலம் வருகிறது. ஒப்பீடு மூலம் கிடைக்கும் வேறுபாடுகளை உணரும் போது தனித்தன்மையான சிந்தனைகள் வெளிப்பட காண்கிறோம். இது தனக்கு உடன்படாத சிந்தனைக்கு எதிராகத்தான் இருக்கும் என்பது யதார்த்தம். இதுதான் சுயசிந்தனையாகும். இந்தச் சுயசிந்தனை தமக்கு உடன்படாத ஆதிக்கச் சிந்தனையை உதற முயலும், நினைவே கலகமாகக் காட்சியளிக்கும். எதிலும் ஒரு நிலைத்த தன்மையைப் போதிக்கும் இந்துமதம் இந்துக்கள் ஆகியோருக்குத் தலித் மக்கள் தங்களைப் பற்றி வெளிப்படுத்திக் கொள்வதே கலவரமாகத் தெரியும். அது வன்முறையாகக் கூடச் சித்திரிக்கப்படும்.

இந்தச் சூழலில் பின்னணியை உணரத் தொடங்கியுள்ளனர் தலித் மக்கள். தலித் மக்கள் ஒடுக்கப்பட்டு இருப்பதால் பௌத்தம் தலித் விடுதலைக்கானது என்பதையும் உணரத் தலைப்பட்டுள்ளனர். பௌத்தத்தைச் சார்ந்தவர்கள் வளமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு, அரசமரம், அசோகமரம் போன்ற இயற்கை மரங்களும், இந்தியப் பணத்தில் பொறிக்கப்படுகின்ற நான்கு சிங்க முகம் கொண்ட அசோகச் சக்கரம் போன்றவை அன்றைய மக்களின் வளமான வாழ்க்கைக்கும், பௌத்தத்திற்கும் தொடர்பு உள்ளதென்பதை வரலாற்றடிப்படையில் சான்று காட்டலாம். இதனை உணர்ந்த இந்துக்கள், பௌத்தத்தைப் புறம்தள்ளி, இந்துமதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் உயர்ந்தவர்கள் என்ற கருத்தாக்கத்தை வலுப் படுத்தினர். ஆயினும் இந்து மதத்திற்கு வெளியிலுள்ளவர்கள்தான் தலித்துகள்.

இந்த வரலாற்றினைப் புரிந்து கொண்டால் பௌத்தச் சிந்தனை களின் உள்கட்டுமானம் தலித்துகளை மனிதர்களாகப் பார்க்கப்

பயன்படும் என்பது புலனாகும். இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமான வர்ணாசிரமும் பகவத்கீதையும் மேல், கீழ் என்பதை வலியுறுத்துகின்றன. இந்தப் பாகுபாடு தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்படுவதன் மூலம்தான் இந்து மதம் இயங்கமுடியும். இதற்கு நேர் எதிர்க் கோட்டில் பௌத்தம் இயங்குகிறது. கடவுளை மறுக்கிறது. சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தை யும் பொதுவுடமையையும் தனக்குள் கொண்டிருக்கிறது. கிறித்துவமும், இஸ்லாமும் இந்து மதத்திற்கு மாற்றான இன்னொரு கடவுளைக் காட்டுகின்றன. இந்துமதத்திற்கு எதிரான மாற்று மதமாக இயங்குகின்றன.

இந்து மதக் கட்டமைப்பு சாதியத்தை உயிரிப்பித்துக் கொண்டே இருக்கிறது. மதம் மனிதனின் பாதுகாப்பாக எண்ணப்படுகிறது. சாதி இந்துக்கள் மேலாதிக்கத்தை வளர்க்கின்றனர். தலித்துகள் குடிசைகளை எரிப்பது, தீண்டாமையைக் கடைப்பிடிப்பது, மலத்தைக் கரைத்து வாயில் ஊற்றுவது (திண்ணியம்), படித்த தலித் வாலிபன் இந்துப் பெண்ணைக் காதலித்தால் விஷம் கொடுத்து சாகடிப்பது, அவரவர்க்குரிய சுடுகாட்டில் எரிப்பது என மேலாதிக்கம் தொடர்கின்றது. இவையாவும் இந்துமதத்தின் கொடையாகச் சாதி இந்துக்கள் கருதுகின்றனர்.

இவற்றை எதிர்த்து மனித நேயத்தைப் பேசுவது பௌத்தம். புத்தர்-புத்தம் தம்மம் சங்கம் என்ற முறையை வகுத்துள்ளார். இதை அம்பேத்கர் பின்பற்றிப் பௌத்தத்தை விவாதத்திற்குட்படுத்தி, பௌத்தம் பற்றிய புனைவுகளைக் களைந்து, சமூகப் பிரச்சனையின் அடிப்படையில் புத்தரின் துறவு அமைந்தது என நிரூபிக்கிறார். இதனை ஒட்டி எழுந்த நூல் "புத்தரும் அவருடைய தம்மமும்" ஆகும்.

தலித்துகளின் கலகக் குரலுக்கு இந்த நூல் பெரிதும் பயன்படுகின்றது. சேரிப்பண்பாட்டை அதாவது ஒருவரோடு ஒருவர் முரண்பட்டாலும் சேர்ந்து வாழும் அடிப்படைப் பண்பை வளர்த்துக் கொள்கிறார்கள். தலித்துக்களின் விடுதலையை விவாதிக்கும் பொழுது, தலித்துகள் பூர்வகுடிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள். மண்ணின் மைந்தர்களாகிய தலித்துகளுக்கும், இடம்பெயர்ந்து வந்து குடியேறியவர்களுக்கும் இடையே நடைபெற்ற போராட்ட வரலாறுதான் தலித்துகளின் அடிமை வரலாறு. அடிமைப் பட்டவன் யாராக இருந்தாலும் அதிலிருந்து மீட்சி பெற வேண்டிய தேவை நிகழ்கிறது. எனவே தலித் விடுதலைக்கும் பௌத்தம் பதிலாக அமைகிறது. புத்தர் சொன்னதைப்போல உண்மையான பௌத்தன் என்பவன் உலகத்தின் குடிமகன். புத்தர் காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தலாம்.

தம்மத்தைக் கூறி புத்தர் பணியாற்றுகையில் துப்புரவுப் பணியாற்றுகின்ற பெண் ஒருவர் புத்தர் எதிரில் சென்றால் அது புத்தருக்குத் தீட்டாகிவிடும் என்று சுவரோடு சுவராக ஒளிந்து கொள்ள, அந்தப் பெண்ணைப் பார்த்து புத்தர், ''நீயும் நானும் மேல் x கீழ் அல்ல; இருவரும் சமம்! என்று போதித்துக் கொண்டி ருந்தார். அதனைக் கண்ட வெட்டியானால் வளர்க்கப்பட்ட சோபகப் பறையர் ஒருவர் புத்தரிடம் விவாதம் செய்கிறார். நீங்கள் எக்காலத்திலும் சமத்துவத்தை நிலைநிறுத்த முடியாது. காரணம் நீங்கள் போதிக்கின்ற மேல்தளத்திலேயே வாழ்கின்றீர்கள். மேலும் பிச்சையெடுத்து நீங்கள் போதிப்பதைவிடத் துப்புரவுப் பணியாற்று கின்ற அந்தப் பெண் பயனுடையவளாக இருக்கின்றாள் என்கிறார். மேலும் புத்தருக்கும் சோபகனுக்கும் நிகழ்ந்த கருத்துப் போரில் புத்தர் சோபகனை வென்றெடுத்து சோபகன் பௌத்தத்தில் இணைய வேண்டும் பொழுது, புத்தர் சோபகனுடைய தந்தையை அழைத்து வரச் சொல்கிறார். அதற்குச் சோபகன் புத்தரிடம் நான் கருத்து தெளிவடைந்த பின்னர்தான் சங்கத்தில் சேர விழைகிறேன். இது என்னுடைய முடிவே தவிர என்னுடைய தந்தையின் விருப்பமாக ஒருக்காலும் இருக்கமுடியாது என மறுதலிக்கிறான். சோபகன் பதிலைக் கேட்ட புத்தர் நீ மிகவும் மனத்திட்பத்துடன் தத்துவத் துடன் இருக்கின்றாய். நீ நிச்சயம் போதிசத்துவர் ஆவாய் எனக் கூறுகிறார். அதற்குச் சோபகன் நான் போதிசத்துவர் ஆவது என்பது என்னுடைய திறமையின் அடிப்படையினால் நான் அடையப் போகும் நிலையே தவிர உங்களுடைய ஆசியினால் அடையப் போவது கிடையாது. எனவே உங்களுடைய வார்த்தையை நான் கணிப்பாகவே கருத முடியுமே தவிர ஆசீர்வாதமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சோபகன் என்கிற தலித் புத்தருக்கே பதில் கூறுகிறார் என்று அம்பேத்கர் எடுத்துக்காட்டுகிறார். இந்தச் சம்பவம் தலித் மக்கள் பிறவி பௌத்தர்கள் என்பதையும் அவர்கள் உலகக் குடிமக்கள் என்பதையும் நிரூபிக்கும் வரலாற்று தொடர்ச்சிதான் தலித் அரசியலாகி வருகிறது. இந்த வரலாற்றில் வாழ்ந்தவர்தான் அம்பேத்கர். சாதிய ஒடுக்குமுறைக் காலக் கட்டத்தில் வாழ்ந்த அம்பேத்கர், தன்னைத் தன்னிகரில்லாத் தலைவனாகவும் மேதையாகவும் நிரூபித்துத் தன் சமூகத்தைத் தாழ்த்திய சாதி இந்துக்களுக்கும் பயன்படும்படி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதிக் கொடுத்தார். காந்தி, நேரு போன்றவர்கள் அம்பேத்கரின் கூர்மையான அறித்திறனை உணர்ந்துகொண்டு அம்பேத்கரை எதிர்க்கலாமே தவிர தவிர்க்க முடியாது என்று கூறினர்.

அம்பேத்கர் மனத்தெளிவோடு பௌத்தத்தை ஏற்றுக் கொண்டதனால்தான் அவர் தலித் பிரச்சனையைச் சமூகப் பிரச்சனையாகப் பார்க்கக் கூடாது. அரசியல் பிரச்சனையாகப் பார்க்கப்பட வேண்டும் எனக் கூற முடிந்தது எனலாம். ஏனென்றால் அரசியல் என்பது தனிமனித அதிகாரத்தைப் பேசுவது. காரணம் பௌத்தன் என்பவன் சமூகத்தை எதிர்ப்பவன்; சாமியார் அல்ல.

தலித் அரசியலின் கட்டுமானத்தில் இந்துமதக் கட்டுகளை அவிழ்க்க, பௌத்தம் ஒரு மார்க்கமாக அமைகிறது என்பதை இக்கட்டுரை முன்மொழிகிறது.

ஜே.எம். சாலியின் 'நோன்பு' சிறுகதையில் இஸ்லாமிய இறைக்கருத்தும் மொழிநடையும்

அ. ஆலிஸ்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி

செய்தி தெரிவித்தல் என்பதனைத் தலையாய நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் இலக்கியக் கருத்துப் பரிமாற்றத்தில் கூறுவோன் ஆகிய் இலக்கியப் படைப்பாளன் தான் கூறவரும் கருத்தை வெளிப்படுத்தத் தெரிந்துகொண்ட இலக்கிய வடிவத்துக் கேற்ற வகையில் கேட்போன் ஆகிய வாசகனை ஈர்த்து இறுதி வரை அச்செய்தியுடன் ஒன்ற வைக்கும் ஒரு நோக்கம் முதன்மை யாகிறது. இதற்கெனப் படைப்பாளன் கையாளும் கூறுகள் அவரது நடைக்கூறுகளோடு பெரிதும் தொடர்புடையனவாகின்றன. "கரு-உரு" ஆகியவற்றுக்கிடையே காணப்படும் உறவு எத்தகைய உத்திகளாப் பின்னப்படுகிறதோ அவ்வுத்திகளின் ஒட்டுமொத்தத்தை நடைக் கூறுகளாக ஏற்றுக்கொள்ளலாம். தெரிவுகள், அனுபவங்களின் பாதிப்புக்கள், மொழியின் கட்டமைப்பு ஆகியவை படைப்பாளி களுக்கிடையே நடைக்கூறுகளின் வேறுபாட்டிற்குக் காரணங்களா கின்றன. அவ்வேறுபாடே ஒரு படைப்பாளியின் தனிநடையா கின்றது'' என்பார் ஜெ. நீதிவாணன். ஜே.எம். சாலியின் 'நோன்பு' என்ற சிறுகதையில் ஆசிரியர் தான் சொல்லவரும் கருத்தினை வெளிப்படுத்துவதில் சிறுகதை என்ற வடிவத்திற்கேற்ப மொழி யினைக் கையாண்டுள்ள திறத்தினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஜே.எம். சாலி தஞ்சை மாவட்டம் இரவாஞ்சேரியில் இலக்கியக் குடும்பத்தில் பிறந்தவர். சிங்கப்பூரில் வானொலி-தொலைக்காட்சிச் செய்தி ஆசிரியராகப் பணியாற்றுபவர். அவரை எழுத்தாளனாக உருவாக்கி விட்டதில் பல்வேறு பத்திரிகைகளுக்குப் பங்கு உண்டு.

சாலி வெவ்வேறு பத்திரிகைகளுக்கு எழுதிய சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள 'நோன்பு' தொகுப்பில் அ்டங்கியுள்ள 'நோன்பு' என்ற ஒரு சிறுகதை மட்டும் இங்கு அவரது கதைக்

கருத்தையும் வடிவத்தையும் இணைக்கும் நடைக்கூறுகளை ஆராயும் நோக்கில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

'நோன்பு' என்ற சிறுகதையின் உள்ளடக்கமாக இஸ்லாமியர்கள் நோற்கும் ரம்சான் நோன்புக் கால விதிமுறைகளும் அவை தொடர்பான மனித ஒழுக்கமும் அமைகின்றன. நோன்புக் காலமான முப்பது நாட்களும் ஊருக்குள் இருக்கும் தேனீர் சாப்பாட்டுக் கடைகளைப் பகல் நேரத்தில் திறக்கக்கூடாது. மாலை ஆறு மணிக்குப் பிறகு வியாபாரம் செய்யலாம் என்ற ஊர்க்கட்டுப் பாட்டை மீறி மீரான் ஒருநாள் கடையைத் திறந்து வைத்திருக்க அவனை இஸ்லாமியச் சமூகத்தைச் சார்ந்தவர்களே எதிர்த்து அடிக்கப் போகிறார்கள். அவர்களைத் தடுத்து நிறுத்தும் அப்துல் காதிர் ஆலிம் சாகிபு கடையை மீரான் திறந்ததற்கான காரணத்தை மறுநாள் கண்டறிந்து அதனைச் சபையில் சொல்கிறார். மீரானின் மனைவி தலைப்பிரசவப் பேறு பெற்றிருக்கக் கையில் காசில்லாத நிலையில் பலரிடம் கேட்டும் உதவி கிடைக்காத நிலையில் கடையைத் திறந்திருக்கிறான் என்ற உண்மையைச் சொன்னவர் மார்க்க விதிப்படி பணம் வைத்திருப்பவர்கள் 'ஜகாத்' கொடுத் திருந்தால் இந்நிலை வந்திருக்காது என்று கடிந்துரைக்கிறார். எல்லோரும் மௌனமாகிறார்கள். இதுவே கதை.

இக்கதையை ஒன்பது பக்கங்களில் ஆசிரியர் சொல்லி விடுகிறார். கதையின் கருத்தோட்டம் எங்கும் தடைபடாமல் செல்கின்ற வகையில் ஆசிரியரின் இயல்பான மொழி நடை கதை முழுவதும் அமைந்துள்ளது. மீரான் ஊருக்கு வந்த ஆரம்பத்தி லிருந்து கதையைத் தொடங்காமல் கதையின் நடுப்பகுதியிலிருந்து - அதாவது மீரானை ஊரில் சிலர் அடிக்கச் செல்வதைக் காட்டு மிடத்திலிருந்து கதை தொடங்கப்படுவது எடுத்தவுடனேயே ஆர்வத்தைத் தூண்டுகிறது. இவரது கதை கூறுமுறையில் அமையும் மொழிநடைக் கூறுகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. காட்சிச் சித்தரப்பிற்கேற்ற வருணனை நடை
2. பண்பு விளக்க மொழிநடை
3. செய்தி விளக்க மொழிநடை
4. எளிய உரையாடல்
5. பேச்சு வழக்கு கலந்த நடை
6. இஸ்லாமியப் பேச்சு வழக்குச் சொற்கள் விரவிய நடை
7. வினாத்தொடர் அடுக்கி வருதல்
8. நனவோட்ட வெளிப்பாட்டு நடை

9. முரண் தொடர்களைக் கையாண்டு கருத்து முரண்களை விளக்குதல்
10. உவமைத் தொடர்
11. குறிப்பிட்ட கருத்தினை வலியுறுத்தும் தொடரமைப்பு
12. குறிப்பிட்ட சொற் பயன்பாடு மூலம் மனதில் கருத்தைப் பதியவைத்தல்.

கதையின் ஆரம்பத்தில் அறையில் அமர்ந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும் அப்துல் காதிர் ஆலிம் தெருவில் ஆர்ப்பாட்டம் நிகழ ஜன்னல் வழியாகப் பார்க்கிறார். இக்காட்சி வருணனையாகத் தரப்படுகிறது. இவ்வருணனை பேச்சுவழக்கு கலந்து உள்ளபடியே எழுதப்படுவதால் விறுவிறுப்பை ஏற்படுத்துவதாக அமைகிறது.

> ''தெருவில் ஆர்ப்பாட்டம். அறையில் உட்கார்ந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த அப்துல்காதிர் ஆலிம் சாகிபு ஜன்னல் வழியாகப் பார்த்தார். யாரையோ அடித்துத் துவைக்கும் வேகத்தில் ஏழெட்டுப் பேர் கைலியை மடித்துக் கொண்டு கம்புகளைச் சுழற்றியபடி ஓட்டமும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.'' (ப. 231)

ஆலிம் சாகிப் வியக்கிறார். கொளுத்தித் தீய்க்கிற முற்பகல் நேர வெயிலில் இவர்கள் கச்சை கட்டிக்கொண்டு போகிறார்களோ எதற்காக? என்று சிந்திக்கிறார். முற்காட்டிய வருணனையில் 'ஓட்டமும் நடையுமாக' என்ற சொல்லாட்சி குறிப்பிடத்தக்கதாய் அமைந்து அவர்களது விரைவைக் காட்டுகிறது. ஆலிம் சாகிப்பின் சிந்தனையில் கதை நிகழும் காலம் பகல் நேரம் என்பது தெளிவாகிறது. ஆலிம் சாகிப் நோன்புக் களைப்பைச் சட்டை செய்யாமல் அவர்களைத் தொடர்கிறார் என்பது அவர் நோன்பு நோற்பவர் என்ற அவரது மதம் சார்ந்த ஒழுக்கத்தைக் காட்டுகிறது.

> ''ஆலிம் சாகிபைப் பார்த்ததும் வந்தவர்களின் குரல் இறங்கியது அவர்மீது அத்தனை மரியாதை....ஒருவித பயபக்தி'' (ப. 231)

என்ற விளக்க நடை தொடர்ந்து அவரது பண்பைக் காட்டுகிறது. அடிக்க வந்தவர்கள் இவரோடு நிகழ்த்தும் உரையாடல்களும் இவரது எண்ண ஓட்டத்தில் சமிரான் ஊருக்கு வந்து வளர்ந்து தனது திருமணம் குறித்து நிகழும் உரையாடலும் மிகவும் சுருக்கமான தெளிவான உரையாடலுக்குச் சான்று பகர்பவை. நோன்புக்கால விதிமுறைகளையும் அதனை மிரான் இன்று மீறியிருப்பதை அவர் எண்ணிப்பார்க்கும் பகுதி ஆசிரியரின் விளக்க நடைக்குச் சான்று. ஆலிம் சாகிப் பற்றி அமையும் பின்வரும் பகுதி பண்பு விளக்கநடைக்குச் சான்று.

அவர் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் ஊரில் மறு பேச்சே கிடையாது. பெயர்தான் ஆலிம்சாகிபு. ஆனாப் பெருந்தனக்காரர். பரம்பரை பரம்பரையாக மார்க்க ஞானங்களில் ஊறறிப் போனது ஆலிம் குடும்பம். அத்துடன் நெடுங்காலமாகவே வர்த்தகத் தொடர்பும் உண்டு, ஊருக்கு வாரிக்கொடுத்த குடும்பம், ஆலிம் சாகியும் அப்படித்தான் இருந்து வருகிறார், தர்க்கம், தகராறு, வட்டி, வடிக்கு என்றால் யோசனை பெற அவரிடம்தான் மக்கள் வருகிறார்கள்'' (ப. 233)

இப்பண்பு விளக்க நடையில் எளிய சொற்களே அமைவதால் நடையில் எளிமை அமைகிறது. கூடவே அவரது பண்பும் வெளிப் படுகிறது. இனிவரப்போகும் இந்தப் பிரச்சினைக்கும் அவரே தீர்வு சொல்லப்போகிறார் என்ற முன்குறிப்பும் கிடைக்கிறது.

கம்பும் கையுமாய் சிலம்பக் களத்தில் குறித்தவர்கள் போல் எக்காளமிட்டுக் கொண்டிருந்த கூட்டம் அவரைப் பார்த்ததும் கடச்சலை நிறுத்தியது (ப. 235)

என்பதில் பொருத்தமான உவமை அமைந்து காட்சியை விளக்குகிறது.

அக்கூட்டத்தினரிடம் பேசும் ஆலிம் சாகிபு தான் வந்து விட்டதால் 'இனி அவர்கள் போகலாம்' என்று வலியுறுத்துவது இருமுறை அமைந்து கருத்தை வாசகனின் மனதில் பதிய வைக்கிறது. இவ்வழுத்தம் அவரது நற்பண்பை ஊறார் உணர்ந் திருப்பதற்கு அடையாளமாகிறது. அதேபோல இவர் வந்தவுடன் தன் குற்றத்தை உணர்ந்து மீரான் கடையை அடைத்துவிட்டுச் செல்வது,

''மீறான் கடையை இழுத்து முடிவிட்டுக் கடனிக் குறுகிய வனாய்த் தெருவோரமாகப் போய்க் கொண்டிருப்பது கண்ணில் பட்டது'' .... தலைக்குனிவுடன் மீறான் சென்ற காட்சி அவர் கண்ணிலேயே நின்றது (ப. 237)

என்று இருமுறை வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறு அமையும் வலியுறுத்தல் தொடர்கள் குறிப்பிட்ட கருத்தைப் பதிய வைக்க ஆசிரியர் கையாளும் உத்திகளாகும்.

கதையின் இறுதியில் மிரான் வீட்டுச் சூழ்நிலையை விளக்கும் ஆலிம் சாகிப்பின் பேச்சில் முரண் தொடர்கள் நிறைய அமைந்து கருத்தை விளக்குகின்றன.

மீரான் ஊரைப் பகைக்கக் கூடிய விதத்திலே இப்படிச் செய்திருப்பான் அப்படீன்று என்னாலே நெனைக்க முடியலை.

அவனுடைய செயலை **ஊர் விவகாரம்** ஆக்கறதுக்கு முன்னாலே **உள் விவகாரத்தைப்** புரிஞ்சிக்க முயற்சி பண்ணினேன் *(ப. 238)*.

நோன்புக் காலத்திலே ஊர் இப்படி இருக்கணும்னு நாம் கட்டுமானம் விதிக்கிறோம். ஆனா மார்க்கம் நமக்கு விதிச்ச கட்டுமானத்தை நாம் கடைப்பிடிக்கிறோமான்னு சிந்திச்சுப் பார்க்கணும் *(ப. 238)*.

இல்லாதவங்களுக்கு, ஏழை பாழைங்களுக்கு, சொத்து, வசதியில் இரண்டரைச் சதவீதத்தை வருஷந்தோறும் 'ஜகாத்' கொடுக்கணும் -ஏழை வரியாத் தரணும்னு - மார்க்கம் சட்டம் சொல்லுது. நோன்புக் காலத்திலே இதை அவசியம் நிறைவேத்தணும். எத்தனை பேர் செய்யறோம்? சுயக்கட்டுப்பாடு முதல்லே அவசியம். அப்புறம்தான் ஊர்க்கட்டுப்பாடு?..... .....கஷ்டப்படறவனைத் துரத்தறது தர்மம் இல்லே... அவன் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கிட்டுத் துடைக்கிறதுதான் தர்மம் என்றார் அப்துல் காதிர் ஆலிம் சாகிபு'' *(ப. 239 - 240)*.

என்பன சான்றுகள். மனிதனின் குற்றத்தை இடித்துரைப்பதற்கு இருபக்கமும் உள்ள சாதக பாதக நிலைகளை விளக்குவதற்கு ஆசிரியருக்கு இம்முரண்தொடர்கள் கைகொடுக்கின்றன. குர்ஆன், ரம்சான் நோன்புக்காலம், சலாம், கிக்காஹ், பள்ளிவாசல், மீரான், கதீஜா, கல்யாண மஜ்லிசு, இன்ஷா அல்லா...., முப்பது நோன்பு, ஐந்து நேரமும் தொழுதல், யாசின் அத்தியாயம் அடங்கிய புத்தகம், இரவுத் தொழுகை, ஜபமாலை, அல்லா, மார்க்கம், ஜகாத், மார்க்கச் சட்டம், நோன்பு வைத்தல் ஆகிய சொற்கள் கதையினூடே கலந்து வருதல் கதையினை இஸ்லாமியக் கருத்துச் செறிவுடையதாக்குவதாய் அமைகிறது.

தான் சொல்ல வரும் கருத்தினை வாசகனுக்குத் தெரிவிப்பதில் ஜே.எம். சாலி சிறந்து நிற்பதற்கு மேற்சுட்டப்பட்ட நடையியல் கூறுகள் பெரிதும் உதவுகின்றன. மேலும் இக்கூறுகள் கதையின் கருத்தோட்டத்தினை மிகவும் எளிமைப்படுத்துவதால் சாலியின் சிறுகதைகள் சிக்கலில்லாமல் குழப்பமில்லாமல் அமைய உதவுகின்றன.

துணைநூல்கள்

1. ஜெ. நீதிவாணன், நடையியல்.
2. ஜே.எம்.சாலி, ''சில செய்திகள்'', நோன்பு.

முசுலிம் தமிழ் முனைந்த பிற சமயச்சான்றோர்கள்

திருமலர் எம்.எம். மீறான் பிள்ளை

பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

முசுலிம்களால் படைக்கப்பட்ட பெற்றவற்றுள் பழமையான தாகக் கருதப்படுவது 'பல்சந்தமாலை' எனும் அகப்பொருள் விளக்க நூலாகும். இது பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப் படுகின்றது.

நூல் விவரக் கோவை

1978-ல் காயல்பட்டினத்தில் நடைபெற்ற உலக மூன்றாவது இசுலாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டுக் குழுவினரின் வேண்டு கோளுக்கிணங்க இவ் ஆய்வாளரால் தயாரிக்கப்பட்ட 'இசுலாமியத் தமிழ் இலக்கிய வளர்ச்சித் திட்ட அறிக்கை'யின் அடிப்படையில் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக, தமிழ்நாடு அரசு மதுரைக் காமராசர் பல்கலையில் 1979-ல் இசுலாமிய இலக்கியத் துறையைத் தோற்றுவித்தது. இலங்கையைச் சார்ந்த பேரறிஞர் ம.மு. உவைசு அவர்களும் முனைவர் பீ.மு. அஜ்மல் கானும் இத்துறையில் பணி யமர்த்தப்பட்டனர். இவர்களின் பல்லாண்டுகால அயரா உழைப்பின் விழைவாக நாற்பெரும் இசுலாமிய இலக்கிய வரலாற்றுத் தொகுதிகள், தமிழிலக்கிய அரபுச்சொல் அகராதி, இசுலாமியத் தமிழ் நூல் விவரக்கோவை ஆகியன வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இலக்கியப் பரப்பு

1991-ல் வெளியிடப்பட்ட இசுலாமியத் தமிழிலக்கிய நூல் விவரக்கோவையில் பன்னிரண்டாம் நூற்றாண்டுத் தொடங்கி இருபதாம் நூற்றாண்டுவரை வெளிவந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நூற்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் பாதிக்கு மேற்பட்டவை கவிதைப் பனுவல்களாகும். தமிழிலுள்ள எல்லா, பேரிலக்கிய சிற்றிலக்கிய வகைகளுடன் அரபு, பார்சி, உர்தூவை பின்பற்றியெழுந்த நாமா, கிஸ்ஸா, மசலா, முனாஜாத்து, படைப்போர் ஆகிய புதுவகைகளிலமைந்த பன்னூறு வடிவங்களும் இதில் இடம்பெற்றமைகின்றன. இதில்

பிற சமய இலக்கியப் பரப்பில் காணமுடியாத அளவில், பதினெட்டுப் பெருங்காப்பியங்கள், பன்னிரண்டு குறுங்காப்பியங்கள் எனக் காப்பியங்கள் மட்டும் முப்பது இடம்பெற்றுள்ளது எடுத்துக் கூறத்தக்கச் செய்தியாகும்.

அறிமுகத் தயக்கம்

முற்காலத் தமிழ் நூலாசிரியர்கள் பலரும் முசுலிம்களின் இலக்கியப் பணியினைக் குறிப்பிடாமல் விட்டு விட்டதைக் கண் கூடாகக் காணலாம். 1859-ல் கற்பிட்டி காசிச் செட்டி, தமிழ்ப் புலவர்கள் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய 'புளூடார்க்' எனும் நூலில் முசுலிம் புலவர் ஒருவரின் பெயர்கூட இடம்பெறவில்லை. சபாவதி நாவலரால் எழுதப் பெற்று 1899-ல் வெளியிடப்பட்ட 'திராவிடப் பிரகாசிகை' எனும் இலக்கிய வரலாற்று நூலும் அவ்வாறே அமைந்தது. 1916-ல் ஆ. குமாரசாமிப் புலவர் தொகுத்த 'தமிழ்ப் புலவர் சரிதம்' நூலிலும் இந்நிலையே தொடர்ந்தது. சரியான பதிப்பு நூற்களின் பற்றாக்குறையும், அரபுச் சொற்களின் ஆதிக்கமும், சமய வேறுபாடும் இந்நிலைக்குக் காரணிகளாக அமைந்திருக்கலாம்.

சிறு சித்திரிப்பு

முசுலிம் இலக்கியம், புலவர்கள் பற்றிய உரைநடை நூற்களும், கவிதை நூற்களின் மறுபதிப்புகளும் வெளிவரத் தொடங்க, பிற்கால நூலாசிரியர்கள் ஓரளவு தம் நூற்களில் முசுலிம் இலக்கியத்தை அறிமுகப்படுத்தத் தொடங்கினர். தமிழிலக்கிய வரலாறு எழுதிய கா.சு. பிள்ளை, தொ.பொ.மீ., மு.வ., சி. ஜேசுதாசன், சி. பாலசுப்பிரமணியன், செல்வநாயகம், கா. சிவத்தம்பி, தமிழண்ணல், மது.ச.விமலானந்தம், ஆரோக்கியசாமி, ச.வே.சுப்பிரமணியன், ஸ்ரீ குமார், எஸ். ஆனந்தன் போன்றோர் ஒருசில பக்கங்களில் முசுலிம்கள் தமிழ்த் தொண்டினைச் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளது காணலாம். எனினும் முசுலிம் இலக்கியப் பரப்பின் ஆழ அகலத்தினை அறிய இவை போதுமானதாக இல்லை என்பதைக் கற்பார் உணரலாம்.

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை

அழிந்தவை போக எஞ்சியவற்றுள் முதல் நூலாக அமைவது 'பல்சந்தமாலை' எனும் அகப்பொருள் விளக்க இலக்கிய நூலாகும். இதுவும் கூட முழுமையாகக் கிடைத்திலது. களவியல் காரிகையை 1931-ல் பதிப்பித்து வெளியிட்டதின் மூலம், மறைந்து கிடந்த இந்நூலை வெளிக்கொணர்ந்த பெருமையும் புகழும் சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பறிஞர் எஸ். வையாபுரிப்பிள்ளையைச் சேரும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். களவியல் காரிகையில் எடுத்துக்காட்டாக இடம்பெறும் பல்சந்தசமாலையின் எட்டுப்பாடல் களும் தமிழகத்தில் நடந்த முசுலிம் ஆட்சியின் வரலாற்றையும்

மக்களின் பண்பாட்டுச் சிறப்பையும் செப்பும் பாங்கில் அமைவனவாகும்.

பேராசிரியர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை

முசுலிம் தமிழ் புலவர்கள் பலரை முதன் முதலில் அறிமுகப் படுத்திய சால்புமிகு சான்றோராக அமைபவர் அறிஞர் எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை. தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் எழுதி 1942-ல் வெளியிட்ட நூல் 'நபிநாயகமும் கவிவாணர்களும்' என்பதாகும். முப்பத்திரண்டு முசுலிம் புலவர்களின் தமிழ்த் தொண்டினைச் சுட்டும் இவர், முதல் தமிழ் பள்ளு வடிவமான 'முக்கூடற்பள்ளு' நூலின் ஆசிரியராக என்னயினார் எனும் முசுலிம் புலவரைக் குறிப்பிடுவதும் புதிய செய்தியாகும்.

கலாநிதி க. கணபதியா பிள்ளை

முசுலிம் தமிழ் இலக்கியத்தை அறிமுகப்படுத்துவதில் முன்னணியில் நின்றவர்களில் இலங்கை அறிஞர்கள் சிலரும் உட்படுவர். 1949-ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக முதுகலைத் தமிழ்க் கல்வித் திட்டத்தில் முதன் முதலாக முசுலிம் தமிழ் இலக்கியம் விருப்பப் பாடமாக அங்கிகரிக்கப்பட்டது ஓர் முக்கிய திருப்பமாகும். இதற்குப் பெருந்தன்மையுடன் முயற்சி எடுத்தவர் அன்றைய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க.. கணபதியா பிள்ளை என்பது குறிப்பிடத்தக்கவோர் செய்தியாகும்.

கலாநிதி சு. வித்தியானந்தன்

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் தொடர்ந்து துணைவேந்தராகவும் பணியாற்றிச் சிறந்தவர் அறிஞர் சு. வித்தியானந்தனார். இவர் 1953-ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட நூல் 'இலக்கியத் தென்றல்'. இதில் நான்காம் இயலில் சுமார் இருபது பக்கங்களிலாக முசுலிம்கள் தமிழ்த் தொண்டு பற்றி விளக்கி யுள்ளது காணலாம். 1964-இல் வெளிவந்த இவரது, 'கலையும் பண்பும்' எனும் நூலில் இரண்டு இயல்களிலாக முப்பது பக்கங்களில் முசுலிம் புலவர்களின் படைப்புகள் விரித்துரைக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம்

இந்தியத் திராவிட மொழியியல் கழகத்தின் நிறுவனரும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் அமைந்தவர் அறிஞர் வ. அய். சுப்பிரமணியனார். 1955-ஆம் ஆண்டு இவர் உலகத் தமிழ்க் கழகத்தின் வெளியீடான 'தமிழ்க்கல்ச்சர்' ஆய்விதழில் 'தமிழில் முசுலிம் இலக்கியங்கள்' என்னும் ஆய்வுக் கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதியுள்ளது காணலாம். இக்கட்டுரை

1961-ஆம் ஆண்டு வெளிவந்த இவரது 'சில கட்டுரைகள்' எனும் நூலில் 'முசுலிம் இலக்கியங்கள்' எனும் பெயரில் இடம் பெற்றமைந்ததும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் நியூயார்க்கிலுள்ள கர்னல் பல்கலைக்கழக நூலகத்தில், அரிய புத்தகக் காட்சிப் பகுதியில் தாம் கண்டெடுத்துப் படித்த 'தௌஹீது மாலை' எனும் முசுலிம் இலக்கிய ஏட்டினைப்பற்றி 1956-ஆம் வருடத்தில் தினமலர், கல்கி ஆகிய இதழ்களில் 'அமெரிக்காவில் தமிழ் ஏடு' எனும் தலைப்பில் கட்டுரைகள் வரைந்துள்ளதும் இவரது முசுலிம் தமிழ் ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாகும்.

கலாநிதி கனக செந்தில்நாதன்

இலங்கையைச் சார்ந்த தமிழறிஞர்களில் ஒருவர் கனக செந்தில்நாதன். இவர் 1964-ஆம் ஆண்டில் வெளியிட்ட இலக்கிய வரலாற்று நூல் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'. இந்நூலில் இருபத்தாறு பக்கங்களிலாக இலங்கை முசுலிம் இலக்கியங்கள் பற்றி எடுத்துரைக்கப்படுவதைக் காணலாம்.

பேராசிரியர் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர்

ஆங்கில நாளேடுகளில் தொடர்ந்து தமிழிலக்கியக் கட்டுரை களை எழுதி வந்தவர் நெல்லையைச் சேர்ந்த அறிஞர் ஏ.வி. சுப்பிரமணிய அய்யர். இவர் 1965-இல் 'மெயில்' எனும் ஆங்கிலப் பத்திரிகையில் 'முசுலிம் தமிழ்த் தொண்டு' எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வரைந்தார். இக்கட்டுரை 1969-ஆம் ஆண்டில் இவர் வெளியிட்ட 'தமிழ் ஸ்டடீஸ்' முதல் தொகுதியில் இடம் பெற்றமைந்தது குறிப்பிடத்தக்கது.

அறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பல்வேறு மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் மன்றங்களிலும் கடந்த நாற்பதாண்டுகளாகச் சீறாப்புராணம் பற்றிப் பேசியும் எண்ணற்ற கட்டுரைகளை எழுதியும் வருபவர் சிலம்பொலி செல்லப்பனார். இதனால் இவர் சீறா செல்வர், சீறா வித்தகர் எனச் சிறப்பிக்கப் படுவதும் குறிப்பிடத்தக்கது.

அறிஞர் ச.வே. சுப்பிரமணியன்

உலகத் தமிழ் ஆய்வு நிறுவனத்தின் தலைமைப் பேராசிரிய ராகவும் இயக்குநராகவும் திகழ்ந்தவர் பன்னூலாசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியனார். 1979 - 1984 காலக் கட்டங்களில் இவர் சீறாப்புராணம், இராஜநாயகம், இசுலாமியச் சிற்றிலக்கியம் ஆகிய தலைப்புக்களில் கருத்தரங்கம், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடத்தி அப்பெயர்களில் கட்டுரை, நூற்களை வெளியிட்டுள்ளது முக்கியச் செய்தியாகும்.

பேராசிரியர் வை. சாத்தையா

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர் முனைவர் வை. சாத்தையா. இவர் தமது கல்லூரியில் 1999-ம் ஆண்டு முசுலிம் தமிழ் இலக்கியம் பற்றி ஓர் மாநிலக் கருத்தரங்கைச் சிறப்புற நடத்தினார். கட்டுரை களைத் தொகுத்து 'இசுலாமிய இலக்கியத் தேன்' எனும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் இரா. சந்திரசேகரன்

கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருபவர் முனைவர் இரா. சந்திரசேகரன். 2001-இல் முசுலிம் தமிழிலக்கியம் பற்றிய ஒரு பெரும் கருத்தரங்கினை இவர் நடத்தினார். கட்டுரைகளைத் தொகுத்து 'இசுலாமியத் தமிழிலக்கியம் பன்முகப்பார்வை' எனும் நூலையும் வெளி யிட்டுள்ளது எடுத்துக் கூறத் தக்கதாகும்.

ஆய்வு நெறியியல்

பிற சமயச் சான்றோர்கள் பலர் தற்போது முசுலிம் தமிழ் இலக்கிய ஆய்விற்காகப் பரந்த உள்ளத்தோடு முனைந்து முன் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. எஸ். சுப்பிரமணியன், அ.நா. பெருமாள், இரா. நாகு, சி. சுப்பிரமணிய பிள்ளை, கு. குற்றாலம் பிள்ளை, சி. காஞ்சனா பாலு, கெ. சுகதா போன்றவர்கள் நெறிப் படுத்த பலர் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டுரையியல்

பேராசிரியர்களும் அறிஞர்களும் முசுலிம் தமிழ் இலக்கியம் பற்றிய கட்டுரையாக்கத்தில் முனைந்து ஈடுபட்டனர்; ஈடுபட்டு வருகின்றனர். மயிலை சீனி வேங்கடசாமி, சி.பாலசுப்பிரமணியம், மே.வி. வேணுகோபால பிள்ளை, சாலை இளந்திரையன், அ.மு. பரமசிவானந்தம், சி.ஆ.பெ. விசுவநாதம், வ.சுப. மாணிக்கம், நா.வே. வீராசாமி, ந. சஞ்சீவி, குன்றக்குடி அடிகளார், சூ. இன்னாசி, கா. சிவத்தம்பி, இரா. முத்துக்குமாரசுவாமி, அமிர்தசோதி சந்திரசேகரன், தா. ஈசுவரபிள்ளை, க.ப. அறவாணன், பெ. மாதையன், சி. தில்லைநாதன், ஜி. ஜான் சாமுவேல், பெ. சுபாஸ் சந்திரபோஸ், செ. இராசு, சக்திப்பெருமாள், சு. வேங்கடராமன், ம. திருமலை, இரா. மோகன், மா.செ. இரபிசிங், க. பஞ்சாங்கம், ந. சொக்கலிங்கம், கு.வெ. பாலசுப்பிரமணியம், பொன்னம்பல அடிகள், மதுரை ஆதினம், தென்கச்சி சுவாமிநாதன், நீரோட்டம் அடியார், வலம்புரிஜான், எச். சித்திரபுத்திரன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவராவர். எண்ணற்ற இளம் ஆய்வாளர்களும் இம்முயற்சியில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

அன்பே இறைநிலை

மு. சிதம்பரம்

நாடார் சரசுவதி கலைக் கல்லூரி
தேனி - 625 531

மனிதன் இவ்வுலகில் பிறப்பெடுப்பதின் நோக்கம் தன்னை முழு நிறைவான மனித நிலையினை எய்துவதற்காகவே ஆகும். மனிதன் பிறக்கின்ற பொழுதே சுயநலத்தோடு பிறக்கின்றான். நாகரிகம் மிகுந்த சமுதாயத்தின் ஓர் அங்கமாக மனிதன் வாழ்கின்ற போது இச்சுயநலம் மிகுந்த இடையூறுகளை ஏற்படுத்தும். எனவே எந்தளவிற்குச் சுயநலத்தை நீக்குகின்றோமோ அந்தளவிற்கு அவன் சிறந்த மனிதனாக வாழ முடியும். முழுமைத் தன்மையைப் பெற இந்நிலை மிகவும் இன்றியமையாதது ஆகும். இம்முழுமைத் தன்மையைப் பெற்று எங்ஙனம் அன்பின் இறைநிலையை உணர்வது என்பதனைப் பற்றி இங்குக் காண்போம்.

மனிதனின் இயக்கம்

மனிதன் உணர்வுகள் அடங்கிய கலவையால் ஆனவன். உணர்ச்சியே மனிதனின் இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கின்றது. இவ்வுணர்வுகளின் செயல்பாட்டாலே மனிதனின் செயலாக்கம் நடைபெறுகின்றது. சில உணர்வினை மனிதன் தன்னறிவுக்குள் கட்டுப் படுத்தித் தற்காலிகமாக ஓர் அணை போடுகிறான். சிலவற்றை ஆழ் மனதில் இருந்து அகற்றுவதற்கு முற்படுகின்றான். சில மனிதர்களிட முள்ள உள்ள உணர்வு, அதிக ஆதிக்கம் செலுத்தி அவனின் அறிவை அடக்கிவிட்டு அவனை மிருக நிலைக்கு ஆட்படச் செய்கின்றது. இதனால் அவன் தன்னை மறந்து சமூகத்தில் சில தகாத செயல்களைச் செய்து விடுகின்றான். தன்னின் உணர்வு நிலைக்கு முக்கியத்துவம் தருகின்றபோது சுயநலம் மேலோங்குகின்றது. அவனிடத்தில் வீற்றிருக் கின்ற மிக உன்னதமான அன்பு உணர்வு மறைந்து விடுகின்றது. இதனை,

''உணர்ச்சி நல்லது
கட்டுக்கடங்காத உணர்ச்சி நல்லதல்ல
இரக்கம் நல்லது
கருத்தாவேசம் நல்லதல்ல''

என்று சி.எஸ். தேவ்நாத் அவர்கள் எடுத்துக் கூறுகின்றார். மனிதன், 'தெய்வம் நீ என்று உணர்' என்னும் வாக்கின் உண்மை நிலையினை

உணராமல் மடிந்து விடுகின்றான். அன்பே இறைநிலையை உணர்த்தும். அந்த அன்பினை அறியவிடாமல் தடுத்து நிற்பது சுயநலம் ஆகும்.

மனிதனின் சுயநலம்

மனிதன் குழந்தையாகப் பிறப்பெடுக்கும் பொழுதே சுயநலத்தோடு பிறக்கின்றான். குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடும் பொழுது குழந்தையின் கையில் வைத்திருக்கும் பொருளினைக் கேட்கும் போது அப்பொருளினை அவன் தரமாட்டான். இதன் மூலம் அச்சுயநலப் பண்பினை நாம் உணரலாம். இச்சுயநலப் பண்பினைக் குழந்தை மறைக்க முயல்வதில்லை. பெரியவர்களிடம் இருக்கும் இச்சுயநலப் பண்பினைப் பிறர் அறியாமல் இருப்பதற்கு முயற்சிக்கின்றனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையுள்ள அனைத்துத் தரப்பினரிடமும் காணப்படுகின்ற பண்பு என்பதனால் இதனை உயர்ந்த பண்பு என்று கூறிவிட முடியாது. முழுமைத் தன்மைக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்ற இப்பண்பு தாழ்ந்த பண்பு நலன்களில் ஒன்றாகும். சுயநலமுடைய ஒருவன் சமுதாயத்தின் அங்கத் தினனல்லன். பலருடன் கூடி வாழும் தகுதியை அவன் இழக்கின்றான். இப்பண்புடன் பிறக்கின்ற ஒருவன் சமுதாயத்தில் சிறப்புற வாழ வேண்டுமானால், மனதிலிருந்து இதனைக் களைந்து எறிய வேண்டும். ஒருவனிடமிருந்து எந்தளவிற்கு இப்பண்பு நீங்குகிறதோ அம்மனிதன் சிறப்புடையவன் ஆகலாம். சமுதாயத்தில் சிறப்புடனும் வாழலாம்.

அன்புடைமை

அன்பு என்பதனை அல் + பு என்று புணர்ச்சி நிலையில் கூறுவர். அதாவது, தான் அற்ற நிலையே அன்பு ஆகும். அன்பு அனைவருக்கும் இருக்க வேண்டிய அவசியமான பண்பு. மனிதனை மனிதனாக வாழச் செய்வது அன்பு ஆகும். மனிதனை மற்ற உயிரினங்களிலிருந்து பிரித்து உயர்த்திக் காட்டுவது அன்பாகும். இதனை ஜேம்ஸ் ஆலன்,

''அன்பில் திளைத்திருப்பதும்
அனைவரிடமும் அன்பு
பாராட்டுதலும்
உண்மையான வாழ்வின்
அடையாளங்கள்
வாழ்க்கை என்பதே அது தான்''

என்று கூறுகிறார்.

அன்பு என்பது இயற்கையில் மனிதர் மனதில் அமைந்து விட்ட ஒரு பண்பாகும். இதனை நன்கு வளர்ப்பவரே முழு மனிதனாக ஆக முடியும். இஃது இல்லாத வரை மனித இனத்தில் சேர்த்தல் அரிதாகும். என்பதனை,

''என்பு இல் அதனை வெயில் போலக் காயுமே
அன்பு இல் அதனை அறம்''

என்றும்,

''அன்பின்வழியது உயர்நிலை; அஃது இல்லார்க்கு
என்பு தோல் போர்த்த உடம்பு''

என்றும் அன்பின் தன்மையை எடுத்துக் கூறுகின்றார்.

சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரை காணப்பெறும் இவ்வகன்ற உலகத்தில் நன்கு வாழ்வதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது அன்பு என்னும் கருவியாகும். அன்பு வாழ்க்கையில் இல்லையெனில் குடும்பம் சீராக நடைபெறாது. தாய்க்குக் குழந்தை யிடம் அன்பு இல்லையானால் குழந்தை எங்ஙனம் வளரும்? குடும்பத்தில் தந்தைக்கு அன்பு இல்லையானால் குடும்பம் என்ற இல்லறம் நடைபெறுவது எங்ஙனம்? எனவே, அன்பின்றி உலகமும் இல்லை, மக்களும் இல்லை. வலிய பாறையில் விறகுக்கட்டை தளிர்க்காது, அன்பு இல்லாத குடும்பம் நன்கு வாழாது என்பதனை,

''அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்து அற்று''

என்று கூறுகின்றார்.

இதனையே ஆசிரியர் சி.எஸ். தேவ்நாத் அவர்கள்,

''அன்பைக் கொடுங்கள்
அன்பைப் பெறுங்கள்
வாழ்வை அணி செய்ய
வேறென்ன வேண்டும்?''

என்று வினவுகிறார்.

அன்பை அறிவது எங்ஙனம்?

அன்பு என்பது காணக்கூடியதன்று; அஃது உள்ளத்தில் உணரக் கூடிய ஒரு நிகழ்வாகும். அவரவர் அனுபவத்தில் அறியக் கிடைக்கப்பெறும். அன்புணர்வு எங்ஙனம் தோன்றுமெனில் அழுக்காறு, வெகுளி முதலிய தீய குணங்கள் நீங்கள் நிலையில் அன்பு என்னும் தெய்வ உணர்வைப் பெற முடியும்.

அன்பு என்னும் பண்பை ஒருவர் பெற்றிருக்கிறார் என்பதனை எங்ஙனம் அறிவதெனில், அன்பு செய்யப்பட்டவரைக் கண்டவுடன் பொங்கி வழியும் கண்ணீரே அன்பை வெளிப்படுத்தும் சாதனமாகும். அன்புடையார் வாய் பேசாது இருந்தாலும், அவர் கண்கள் உண்மையை உலகிற்குப் பறைசாற்றிவிடும். அன்புடைய ஒருவனுக்கும்,

அவன் கொண்டுள்ள அன்புக்கும் தொடர்பு எங்ஙனம் உளது எனில், உடம்புக்கும் உயிருக்குமான தொடர்பாகும். இதனை,

''அன்போடு இயைந்த வழக்கு என்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு''

என்று வள்ளுவர் எடுத்து உரைக்கிறார்.

அன்பிற்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பு

அறிவிற்கும், அன்பிற்கும் உள்ள தொடர்பு வித்திற்கும், மரத்திற்கும் உள்ள தொடர்பாகும். பொழிகின்ற மழையைப் போன்றது அறிவாகும். ஓடும் வெள்ளம் போன்றது அன்பாகும். மனிதனின் அறிவு விளக்கத்திற்கு ஏற்பவே அன்பும் நிகழும்.

சிலர் தம்மை மட்டும் நேசிக்கின்றனர்; சிலர் உறவினர் அளவில் அன்பு செலுத்துகின்றனர், சிலர் நண்பர் வரை அன்பு செலுத்துகின்றனர், சிலர் உறவினர், நண்பர், பகைவர், சுற்றம் ஆகிய எல்லோரிடத்திலும் அன்பு செலுத்துகிறார். இந்நிகழ்வு அனைத்திற்கும், அவரவர் அறிவு நிலையைப் பொறுத்து நிற்கின்றன. அறிவுக்கு ஏற்றவாறு அன்பு நிகழ்வதால் இரண்டையும் பிரித்துப் பார்க்கக் கூடாது. உலகில் வாழும் மனிதரிடத்தில் பலதிற அறிவு விளக்கத்தையும், அன்பு நிகழ்வையும் காண்கிறோம். இதை வைத்துக்கொண்டு அறிவும், அன்பும் பல திறத்தன என்று எண்ணக் கூடாது. மெய்யறிவு விளக்கம் பெற்றால் மெய்யன்பு தானாகவே எழும் என்கிறார் திரு.வி.க.

அன்பால் ஆன்ம சக்தி பெருகும்

இவ்வுலகில் வாழும் போது அன்புள்ளத்தோடு வாழ்கின்றவர் கடவுளோடு கலந்து வாழ்பவராவர். உள்ளத்தில் அன்பு பதியப் பதிய அழுக்காறு முதலியன தேய்ந்து மறையும். அவ்வழுக்குகளின் மறைவிற்கேற்ப ஆன்மசக்தி எழும்பும். அழுக்காறு முழுமையாக மறைந்ததும் முழு ஆன்மசக்தி கூடும். ஆன்மசக்தி என்னும் தெய்வத் திருவருள்நிலை அன்பின் வழியாகவே ஏற்படும். இதனை அறிந்த மாணிக்கவாசகர்,

''அன்பினால் அடியேன் ஆவியோடாக்கை
ஆனந்த மாய்க் கசிந்துருக
என்பரமல்லா இன்னருள் தந்தாய்
யானிதற் கிலனொர் கைம்மாறு....''

என்கிறார்.

அன்பினால் குழைந்து உருக, உருக ஆண்டவனின் அருள் கிடைக்கப்பெறும். பரந்த ஒரு பெருநிலை துலங்கப்பெறும். இது குறித்து வள்ளலாரும்,

''அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே''

என்கிறார். இதனையே திருமூலரும்,

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்...''

என்பர்.

அன்பே கடவுள் என்னும் உறுதியோடு உருகுகின்ற உள்ளத் தவருக்கு எல்லா உயிர்களிடத்திலும் உயிராய் இருக்கும் இறைவனின் தன்மைப் புலப்படும். இந்நிலை அடையப் பெற்றவருக்குப் பிறப்பறுத் தலும், குணம் கடந்து வெளியில் இன்பமயமாக விளங்குகின்ற இறைவனின் தன்மையும் புலனாகும். இதனை மாணிக்கவாசகர்,

''உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே...''

என்று எடுத்துரைக்கிறார்.

அன்பினை உடையவர்கள் இம்மை, மறுமை ஆகிய இரு பயன்களையும் பெறுவார்கள். வீடு பேறினை இப்பிறவியில் பெற்றப் பெரியவர்கள் அனைவருமே கையாண்டது இவ்வன்பு வழியினையே என்பர். ''அன்பு என்னும் தீபம் பிரகாசிக்கும் போது அதன் சுடரொளியில் விட்டில் பூச்சியாகிவிடுங்கள். அதனுள் வீழும் போது பொய்யானவற்றை இழப்பீர்கள். மெய்யானதைப் பெறுவீர்கள். கனவுகளை இழப்பீர்கள், முடிவான முடிவைப் பெறுவீர்கள்.''

''அன்பு வாழுமிடத்தில்
அகந்தை இருப்பதில்லை
அகந்தை உள்ள இடத்தில்
அன்பு வாழ்வதில்லை.''

என்கிறார் ஞானி இக்கியு.

முடிவுரை

1. மனிதனின் இயக்கம் உணர்வு நிலைகளினாலே நடைபெறுகின்றது.
2. மனிதன் சுயநலம் மிகுந்தவனாகவே காணப்பெறுகின்றான்.
3. மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்பெறுவது அன்பு ஆகும்.
4. அன்பினை அவரவரின் வளர்ச்சி நிலைக்கேற்பவே உணர்கின்றனர்.
5. பரிபூரணத்துவமான அன்பே ஆன்ம சக்தியை அடைந்து இறைநிலையைப் பெற முடியும்.

மலர் வழிபாடு

கோ.ப. நல்லசிவம்

ஸ்ரீ கா.சு.சு. கலைக்கல்லூரி
திருப்பனந்தாள்

வழிபாடு என்பது நம் வாழ்க்கையில் தொன்றுதொட்டு வரும் பழக்கம். இதற்குக் காலம் சொல்ல முடியாத பழமையுண்டு. என்றாலும், 'என்று நீ அன்று நான்' என்பது போல மனிதன் தோன்றிய காலம் முதலாகவே இது மலர்ந்திருக்க வேண்டும். இதற்கு நம்மால் சங்ககாலந் தொட்டுப் பல்வேறு இலக்கியச் சான்றுகளைப் பார்க்க முடியும். ஐவகை நிலங்களைப் பிரித்து அவ்வவற்றுக்குரிய தெய்வங் களை வணங்கி வழிபட்ட முறைகளைச் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. பேச்சு வழக்கில் கூட வழிபாடும், தெய்வமும் இடம் பெறுதலைப் பண்டைய நூல்களில் பரக்கக் காணலாம். சான்றாக,

'வழிபடு தெய்வம் கண்கண்டாங்கு'

எனவரும் நற்றிணைப் பாடலை நோக்கலாம். வழிபாடு காலந் தோறும் மாறுபட்டு வந்திருப்பினும் அவற்றுள் மலர் வழிபாடு, பாடியாடி வழிபடும் துதிவழிபாடு, இசைக் கருவிகள் முழங்க வழிபடும் இசை வழிபாடு முதலிய கூறுகள் மாறுபடாமல் இன்று வரையுள்ளன. இவற்றுக்கெல்லாம் அடிப்படை இறைவனைப் போற்றிப் பரவுதல் என்பதேயாகும். இத்தகு பண்டைத் தமிழரின் வழிபாட்டு முறைகளையே பக்தி இயக்கச் சான்றோர்களும் விதந்து விவரித்துப் பாடுகின்றனர். அவ்வகையில் பண்டைத் தமிழரின் மலர் வழிபாடும், பக்தியியக்க மலர் வழிபாடும் குறித்த கட்டுரையாக இது இலங்குகிறது.

சங்ககால மக்கள் இறைவனை வழிபடுதலில் பரவுதல், தொழுதல், விரவுமலர் தூவி வழிபடல் எனப் பல முறைமைகளைக் கொண்டிருந்தனர். பரவுதலென்பதைப் பாடி வழிபடல் என்றும் போற்றி வழிபடல் என்றும் கூறுவர். பொதுவாக இறைவனைப் புகழ்தலைப் பரவுதல் எனலாம்.

தொழுதல் என்பதைப் பலவாறாகக் காணலாம். தொழுதல் - வணங்குதல் என்ற பொருளிலும் வருகிறது. தலையைத் தாழ்த்தி வணங்குதல், கைகளைக் குவித்து வணங்குதல், விழுந்து வணங்குதல் எனப் பல்வேறு முறைகளைப் பண்டைக் காலந்தொட்டுக் காண

முடிகிறது. விரவுமலர் தூவி வழிபடும் முறையே இக்கட்டுரையின் கருப்பொருளாகும்.

இறைவனை மணம் மிக்க மலர்களால் வழிபடுதலைச் சங்ககால மக்கள் பெரிதும் போற்றியுள்ளனர். இன்னின்ன மலர்கள் வழிபாட்டில் இடம் பெற்றன என்பதையும், மலர்களின் வகை களையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன.

''பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல் உருவின் கடவுள் பேணி
நரையும் விரையும் ஓச்சியும்'' (குறிஞ்சி, 5-7)

என்பதில் மூவகைப்பட்ட வழிபாட்டில் ஒன்றாக மலர் வழிபாடு சுட்டப்பெறுதலும்,

''நாறு கமழ் வீயும் கூறும் இசை முழவமும்'' *(பரி. 8)*

''யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூய்'' *(முல்லை, 8-10)*

என வருவனவற்றில் நறுமணமிக்க மலர்களை வழிபாட்டில் பயன்படுத்திய தன்மையும் புலப்படுகின்றன.

திருமுறையாசிரியர்களும் சங்ககாலப் பண்பாட்டில் இருந்து சற்றும் பிறழாமல் இம்மலர் வழிபாட்டை விதந்து விவரித்துப் பாடுகின்றனர். சங்க காலத்திலிருந்த இம்மலர் வழிபாடு இடையில் மாற்றுச் சமயத்தினரால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்தது. இந்நிலையில் தோன்றிய பக்தி இயக்கம் இம்மலர் வழிபாட்டிற்குப் புத்துயிர் ஊட்டி மீட்டுருவாக்கம் செய்தது. மிக எளிமையாக,

''புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு''

''சூழ்த்த மாமலர் தூவித் துதி''

''... ... பூக்கையால்
அட்டிப் போற்றாத இவ் ஆக்கையாற் பயனென்''

''ஓதி மாமலர்கள் தூவி''

''பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார்''

என்றெல்லாம் கூறி மலர் வழிபாட்டின் சிறப்பைச் சங்க மக்களின் மரபு வழி நின்று மக்கட்குப் புலப்படுத்தியது.

மலர் வழிபாட்டைக் கூறும் உத்தி

சங்க இலக்கியங்கள் வழிபாட்டில் மலர்களைக் குறிப்பிடும் போது அவ்வவற்றின் சிறப்புகளையும் வகைகளையும் தனித்தன்மை களையும் இணைத்துச் சுட்டுகின்றன. சான்றாக,

''கடவுள் காந்தள்'' (அகம். 152)

''நறுவீ முல்லை'' (முல்லை)

''குருந்தே முல்லை என்று
இந்நான்கு அல்லது பூவும் இல்லை'' (புறம். 335)

''நிரை இதழ்க் குவளை'' (மலைபடு. 189)

என வருவனவற்றைக் காணலாம். வகைகளாக, கொடிப்பூ, கோட்டுப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என்பனவற்றைச் சுட்டுகின்றனர்.

திருமுறையாசிரியர்களும்,

''மரங்களேறி மலர்பறித்து''

என்றும்,

''குளங்கள் மூழ்கிக் கொய்மலர்''

என்றும் இவ்வகைகளைப் பாடுகின்றனர்.

மலர்களைத் தொடுத்து வழிபடல்

மலர்களைத் தூவி வழிபடும் வழக்கமும், பல்வேறு இன மலர்களைத் தொடுத்தும், தனியே தொடுத்தும், பச்சிலைகளை இடையிடையே வைத்துத் தொடுத்தும் இறைவனுக்குச் சூட்டி அணி செய்து வழிபடும் வழக்கமும் இருந்துள்ளமை சங்கப் பாடல்களின் வழி தெரிகின்றன. சான்றாக,

''நறுவிரை தெளித்த நாறு இணர் மாலை'' (அகம். 166)

''புலராப் பச்சிலை இடை இடுபு தொடுத்த
மலரா மாலைப் பந்து கண்டன்ன'' (புறம். 39)

என்பவற்றைக் காட்டலாம். திருமுறைகளிலும் இத்தகைய முறைகள் காட்டப்படுகின்றன. சரமாலை, கண்ணி, இண்டை மாலை, மாலை, தார் போன்ற சொற்கள் இக்கருத்தைச் சுட்டி நிற்கின்றன.

''பூமாலை புனைந்து ஏத்தி'' (6:31:3)

''இண்டை கட்டி வழிபாடு செய்யும்'' (2:கேதாரம் : 1)

''மல்லிகைக் கண்ணியோடு மாமலர் கொன்றை சூடி''
(4:48:8)

''இளவெழுந்த இருங்குவளைம் மலர்
பிளவு செய்து பிணைத் தடியிட்டிலர்'' (5:95:9)

என வருவன நோக்கத் தகுவன. இவ்வாறு தனி மலராகவும், மலர்க் கூட்டங்களைத் தொடுத்தும் வழிபட்ட மலர்கள் பலவாகும்.

வழிபாட்டில் அருகிய மலர்கள்

சங்க இலக்கியங்களிலும் திருமுறைகளிலும் குறிப்பிடப்பெறும் மலர்களில் பல இன்று வழிபாட்டில் அருகிவிட்டன. குறிப்பாகக் காந்தள், குவளை, குருந்து, ஊமத்தை, கொன்றை, வெள்ளெருக்கு, பாதிரி போன்ற மலர்களைக் கூறலாம்.

மலர் வழிபாட்டின் எளிமை

சங்க இலக்கியமும் திருமுறையும் மிக எளிமையாகச் செய்யும் வழிபாடாகக் காட்டுவது இம்மலர் வழிபாடே எனில் அத மிகை யாகாது. முல்லை, காந்தள், குருந்து, குவளை என்பனவும், அட்ட புட்பங்களாகக் கருதப்பெறுவனவும் (புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்நியா வந்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி செந்தாமரை) கொன்றை, வன்னி, ஊமத்தை, கூவிளம், அல்லி, மல்லிகை போன்றவனவும் சிறப்பித்துப் பெயரிட்டுக் கூறப்படினும்,

''நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா'' (புறம். 106)

என எடுத்துரைத்து, புல்லிய எருக்கன் இலையையும், பூவையும் கூட இறைவன் ஏற்பான் என்ற நம்பிக்கையை ஊட்டி, இம்மலர் வழிபாட்டை எளிமையாக, எல்லாரும், எச்சூழலிலும் செய்யலாம்; செய்ய முடியும் என்பதைப் பறைசாற்றின. இறைவனுக்கு இன்னின்ன மலர்கள்தாம் என எண்ண வேண்டாம் என்று சங்க இலக்கியங்கள் பதிவு செய்திருப்பது போலவே, திருமுறைகளிலும் மல்லி, முல்லை, தாமரை போன்ற வணிக மலர்களையோ எண்வகை மலர்களையோ தாம் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயமில்லை என்னும் குறிப்பமைந்த பாடல்கள் பலவுள. இறைவன் எப்பூவையும், எத்தழையையும் ஏற்கும் எளிமையை அவை சுட்டுகின்றன.

''நிலையுறும் இடர்நிலை யாத வண்ணம்
இலையுறு மலர்கள் கொண்டேத்தும் யாம்'' (3:புகலி:2)

''யாவர்க்குமாம் இறைவர்க்கு
ஒரு பச்சிலை'' (திருமந்திரம்)

எனவரும் திருமுறைத் தொடர்கள் நோக்கத் தகுவதாம். இவற்றை யெல்லாம் நுணுகி ஆராயும்போது சங்க இலக்கியங்களும் திருமுறை இலக்கியங்களும் வழிபாட்டில் இணைந்தே செல்வதைக் காண முடிகிறது. சங்கச் சான்றோரும், பக்தி இயக்கச் சான்றோரும் காட்டிய, வலியுறுத்திய இம்மலர் வழிபாடு இன்றைய பரபரப்பான இயந்திர வாழ்வில் நம்மை அமைதியுறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

உலகின் தோற்றம் - ஓர் இலக்கிய ஆய்வு

எழிலரசி பாலசுப்பிரமணியன்

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 600 008

பரம்பொருள்

பிறப்பிலி, இறப்பிலி, ஒப்பிலி எனப் பிரபஞ்சம் முழுதும் பரவி இருக்கும் சிவபெருமான் தனது முகத்திலிருந்து பிரமதேவனைத் தோற்றுவித்து, சிருட்டியின் பொருட்டு பஞ்சாஷரோபதேசம் செய்தருளினார். பிரம்மதேவன் வேண்ட அவன் நெற்றியில் நீல லோகித மூர்த்தியாகத் தோன்றிச் சிருட்டித் தொழில் கற்பித்தார். பிரம்மா சுயம்புவாயும், விஷ்ணுவிடமிருந்தும் தோன்றியதாயும் வரலாறு உண்டு.

பிரம்மா

''சிவன் எனது புத்திரன், என்னால் உலகம் உண்டானது,'' என்று பிரம்மன் செருக்குக் கொண்டகாலம், சிவனால் தனது ஐந்தாவது சிரம் இழந்து நான்முகனானான். திலோத்தமையைப் படைத்தபோது அவளை விரும்ப, அவள் நான்கு திக்கும் ஓட, அத்திக்குகளை ஒவ்வொரு முகம் கொண்டு பார்க்க நான்முகன் ஆனதாயும் கூறப்படுகிறது. விஷ்ணுவின் முடிகாணாது, இளைத்து, பொய் உரைத்ததால் பூசிக்கப்படும் வாய்ப்பைப் பிரம்மன் இழந்தார்.

உபபிரம்மாக்களின் தோற்றம்

பிரம்மா, ஒரு காலத்தில் பிரசாபதி, மானச புத்திரர்கள் என்னும் உப பிரம்மாக்களைத் தோற்றுவித்தார். இந்த பிரசாபதிகள் சப்த பிரசாபதிகள் (எழுவர்) என்றும் நவப்பிரசாபதிகள் (ஒன்பது) என்றும் குறிப்பிடப்படுகின்றனர். அத்திரி, ஆங்கிரகன், கத்ரு, புலகன், புலஸ்தியன், மரீசி, வசிஷ்டர் என்போர் எழுவராயும் இவர் களுடன் சேர்ந்து தஷன், பிருகு என்போர் நவப் பிரசாபதிகளாயும் குறிப்பிடப்படுகின்றனர். இந்த உப பிரம்மாக்கள் பிரம்மனுக்குப் படைப்புத் தொழிலில் உதவினர். இவர்கள் பிரம்மாவைப் போன்றே செல்வம், போகம், ஆயுள், ஆயுதம், உருவம் போன்றவற்றைப் பெற்றவர்களாயிருந்தனர்.

இவர்கள் மானச புத்திரர்கள் ஆகையால் பெண் துணையின்றி முறையே பிரம்மனின் சுரோத்திரம், சிரசு, அபாணன், வியானன், உதானன், கண், சமானன் ஆகியவையிடமிருந்தும் தஷனும், பிருகுவும் முறையே பிராணன் மற்றும் இதயத்திலிருந்தும் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது.

பிரசாபதிகள்	தோற்றம்	துணைவியர்	மக்கள்
அத்திரி	- சுரோத்திரம்	- அநசூயை	- சனத்குமாரர்
ஆங்கிரகன்	- சிரசு	- சிரத்தை, சுதா, சதி	-
கத்ரு	- அபாணன்	- சந்நதி	- சனந்தனர்
தஷன்	- பிராணன்	- தரணி, அசக்னி	- யதி, தாட்சாயணி
பிருகு	- இதயம்	- புலோசமை, கியாதி	- நாரதர், இலக்குமி
புலகன்	- வியானன்	- கீதி	- குபன்
புலஸ்தியன்	- உதானன்	- ஆவிர்ப்பூ, நாரி	- சதாதனர்
மரீசி-	கண்	- கலை, உணபு,	- அருணி
வசிஷ்டன்	- சமானன்	- அருந்ததி	- அம்சம்

இவர்களில் தஷன் பிரம்மாவின் கட்டை விரலிலும், புலகன் நாபியிலும், புலஸ்தியன் காதிலும் உதித்ததாகவும் குறிப்புள்ளது. இவர்கள் அனைவரும் மானச புத்திரர்கள் எனினும் கத்ரு பிரீத கேசியிடம் உதித்ததாகச் சொல்லப்படுகிறது.

இதே பெயருள்ள இருடிகள் ஒரு காலத்தில் ஈசுவர சாபத்தால் இறந்து பிறந்ததாகச் சொல்லப்படுகின்றது. பிரம்ம தேவர் அசுவமேத யாகம் செய்யத் தொடங்கிய போது தேவ பத்தினிகளைக் கண்டு அவர் வீரியம் வெளிப்பட்டது. அந்த வீரியத்தை அக்கினியில் இட்டு ஓமஞ்செய்ய அதிலிருந்து பிருகு, அங்கீரஸர், அத்திரி மரீசி, புலஸ்தியர், புலகர், வசிட்டர் ஆகியோர் பிறந்ததாகவும் குறிப்பிடப் படுகிறது.

பிரம்ம குமாரர்களின் துணைவியர்

பிரம்மாவின் துணைவி சரஸ்வதியாய் இருக்க உப பிரம்மாக்கள் முறையே அநசூயை, சிரத்தை, சுதா, சதி; சந்நதி; தரணி, அசக்னி, புலோசமை, கியாதி, கதி, ஆவிர்ப்பூ, கலை, உணபு மற்றும் அருந்ததியை மணந்து உலக உயிரினங்களைப் படைத்தனர்.

உபபிரம்மாக்களின் காலம்

உப பிரம்மாக்கள் தவத்தில் வல்லவராதலால் இருடிகள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் தோன்றி வாழ்ந்த

காலம் குறிப்பாகத் தெரியவில்லை எனினும் 'அபிதான சிந்தாமணியால்' குறிப்பிடப்படும் 14 மன்வந்தாரங்களில் முதல் மன்வந்தாரத்தில் அத்திரி, ஆங்கிரகன், கத்ரு, புலஸ்தியர், மரீசி, வசிட்டர் ஆகிய அறுவர் தோன்றியுள்ளனர். இவர்களுள் வசிட்டர் ஏழாவது மன்வந்தாரத்திலும் மரீசி ஒன்பதாவது மன்வந்தாரத் திலும் தோன்றியதாக ஒரு குறிப்புள்ளது.

தஷன்

இந்தப் பட்டியலில் விடுபட்ட தஷன், பிருகு, புலகன் முதலியோரைப் பற்றி மற்ற 13 மன்வந்தாரங்களிலும் குறிப்பில்லை. ஆதலால் இவர்கள் முதல் மன்வந்தாரத்திலேயே மற்ற உப பிரம்மாக்களுடன் தோன்றியதாகக் கருதலாம். தக்கன் என்றும் வழங்கப்படும் தஷன் தரணியைக் கூடி 1000 குமரர்களைப் பெற்றான். இவர்கள் நாரதரின் உபதேசத்தால் மகா ஞானிகளாகத் துறவறம் ஏற்க வம்ச விருத்தி இல்லாத தஷன் நாரதரை நிலை யில்லாது திரியவும், கலகப் பிரியராய் இருக்கவும் சபித்துப் பின்னர் அசக்னி அல்லது அக்கினி என்பாளிடம் அறுபது (60) பெண்களைப் பெற்றான் (பெண்கள் துறவறம் ஏற்பதில்லை என்பதாலா! தரணிக்குப் பிறந்த ஆயிரவரும் ஆண் மக்களாய் இருந்ததும் அக்கினிக்குப் பிறந்த அறுபது பேரும் பெண் மக்களாய் இருந்ததும் ஆய்விற்குரியது).

தஷகுமாரிகள்

தஷனின் அறுபது பெண்மக்களில் பதின்மர் (10) பிரசாபதிகளை மணப்பதால் தஷனும் மற்ற பிரசாபதிகளுடன் முதல் மன்வந்தாரத் திலேயே தோன்றியிருக்கலாம் என்னும் கருத்து உறுதிப்படுகிறது. பிரசாபதிகளை மணந்த தஷனின் பத்து பெண்களில் மரீசி சம்பூதியையும், புலத்தியன் நாரியையும் மணக்க தஷன் தனது மற்ற ஐம்பது பெண்களில் 13 பேரை காசிபர்க்கும், 27 பெண்களைச் சந்திரனுக்கும், இரண்டிரண்டு மக்களாக அறுவரை பூதர், ஆங்கீரசர், கிரிசுவா ஆகியோருக்கும், 4 பெண்களைத் தாட்சயபருக்கும் மண முடித்தான்.

பிரசாபதிகளுக்குப் பெண் கொடுத்ததால் அவர்களின் மாமனாரான தஷன், தவம் புரிந்து சிவனிடம் வரம் வேண்டி உமையைப் பெண்ணாகப் பெற்றுச் சிவனுக்கு மணமுடித்து சிவபிரானுக்கும் மாமனாரானான். பிரசாபதிகளையும், சிவனையும் மருகர்களாகப் பெற்ற தஷன் இந்தத் தலைமுறை மட்டுமன்றி ஏழாம் மன்வந்தாரத்தில் தோன்றியதாகக் கூறப்படும் காசிபர்க்கும் 13 பெண்களை மணமுடித்துத் தருகின்றான். காசியபர், மரீசிக்கும் கர்த்தமப்பிரசாபதியின் பெண் கலைக்கும் பிறந்தவர் (கர்த்தமப்

பிரசாபதி பிரமனின் நிழலில் பிறந்ததாகவும், தேவ· ஹூதியிடம் கபிலன் என்னும் குமரனையும் அநேக பெண்களையும் பெற்றதாய்க் குறிப்பிடப்படுகின்றது). இந்தக் காசியபரின் பதிமூன்று மனைவிகள் - தஷனின் புதல்விகள் - இவ்வுலக உயிர்களனைத்தையும் படைத்த தாகக் கூறப்படுகின்றது.

பிரம்மனின் சிருஷ்டி

தனது சிருட்டித் தொழிலுக்குத் துணையாக உப்பிரம்மாக்களைப் படைத்த பிரம்மன் ஒரு காலத்தில் தனது தொண்டையிலிருந்து அரக்கரைப் படைத்து அந்த உடல்விட அது இருளானது. வேறு உடல் கொண்ட போது முகத்தில் சத்துவ குணம் தோன்ற தேவர்கள் பிறந்தனர். அந்த உடலைவிட அது பகலாயிற்று. வேறு உடல் எடுத்து பிதுருக்களைப் படைத்து அவ்வுடல்விட அது சந்தியா காலமானது. மற்றுமொரு உடல் கொண்டு மனிதரைப் படைத்து அவ்வுடல் நீக்க அது சந்திரிகையாயிற்று. இவ்வாறே பற்பல உருவங்களைக் கொண்டு பூத, பிரேத, பைசாசர்களைப் படைத்தனர்.

மற்றொரு காலத்தில் பிரம்மா தனது முகத்திலிருந்து வேதியரையும், புஜத்திலிருந்து அரசரையும், தொடையில் வணிகரையும், திருவடியில் சூத்திரரையும் படைத்தார். இவ்வாறு சிருட்டி செய்து உடலைவிட்டு வேறு உடல் கொள்வதால் இரண்யகற்பன் என்னும் பெயரைப் பிரம்மன் பெற்றார்.

ஒரு காலத்தில் காலத்தால் பருந்து முதலிய பறவைகள் உதித்தன. முகத்திலும் மார்பிலும் வேள்வியின் பொருட்டு ஆடுகள் உதித்தன. இரண்டு விலாவிலும் வயிற்றிலும் பசுக் கூட்டம் பிறந்தன. திருவடியில் சிங்கமும் உரோமத்தில் கிழங்கு முதலிய சாக மூலங்கள் உண்டாயின. முகத்தில் வேதங்கள் உதித்தன. பிரம்மன் தனது தமோ குணத்தைப் பிரிக்க அது இரு கூறாகி ஆண் பெண் வடிவு கொண்டு முறையே பாபமும் கொலையும் ஆனது.

காசியபரின் சிருட்டி

இவ்வாறு பலவேறு காலங்களில் அக்காலங்களின் தேவைக் கேற்பப் பிரம்மன் தனது படைத்தலைத் தானே தொடர்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இது இவ்வாறிருக்க உபபிரம்மா மரீசிக்கும் கர்த்தமப் பிரசாதிபதியின் மகள் கலைக்கும் பிறந்த கச்யபர், காசிபர், காசியபர் என அழைக்கப்படும் இருடி, தஷப்பிரசாபதியின் பதின்மூன்று (13) குமரிகளை மணக்கின்றார். இந்த தஷகுமரிகளின் பெயரும் அவர்கள் பெற்றதாகக் கூறப்படும் உலக உயிர்களும் பல குறிப்புகளில் வேறுபடுகின்றன. இக்குறிப்புகள் அபிதான சிந்தாமணி மற்றும் கம்பராமாயணத்தின் அடிப்படையில் அமைந்தவை

யாகும். முதல் குறிப்பு அபிதான சிந்தாமணியிலிருந்தும் இரண்டாம் குறிப்புக் கம்பராமாயணத்திலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.

தஷ குமாரிகள்

1. அதிதி : 1. துவாதசாதித்தரையும் வாமன மூர்த்தியையும் பெற்றவள்.
   2. வாமனன், இந்திரன், சூரியன் உள்ளிட்ட 33 கோடி தேவர்களைப் பெற்றாள்.

2. திதி : 1. திதி காசியபரை சந்தியாகாலத்தில் புணர்ந்ததால் அசுரர் பிறந்தனர். இரணியாட்சகனை 100 வருடம் சுமந்து பெற்றவள்.
   2. 66 கோடி அசுரர்களைப் பெற்றவள்.

1. திதி, அதிதி இந்திரனைப் பெற்றது போல் தானும் ஒரு குமரனைப் பெற காசியரை வேண்டிக் கருவுற, பொறாமை கொண்ட அதிதி தன் மகன் இந்திரனிடம் சொல்ல, இந்திரன் திதி சோர்ந்திருந்த நேரம் அவள் வயிற்றில் புகுந்து கருவை ஏழு கூறாகச் சிதைக்க அவர்களே மருத்துக்களானார்கள்.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது தேவர்கள் செய்த வஞ்சனையில் சினங்கொண்டு காசியபர் சொற்படி திதி ஆயிரம் வருடங்கள் தவம் செய்தபோது இந்திரன் கருவைக் கலைத்ததாயும் குறிப்புக் காணப்படுகிறது.

கருகலைந்ததால் சினமுற்ற திதி அதிதியை வசுதேவரின் தேவியாகப் பிறந்து ஏழு குமாரர்களைப் பெற்று வருந்தச் சபித்தாள். அதிதி தேவகியாய்ப் பிறந்து ஏழு குமாரர்களைப் பெற்று அவர்கள் கம்சனால் கொல்லப்பட துயருற்றாள். இந்திரன் தன் பதவி இழந்து துயருரவும் திதி சாபமளித்தாள்.

காசியபர் வருணனது யாகப் பசுக்களைக் கிரகித்துக் கேட்டும் கொடாததால் வருணன் அளித்த சாபத்தாலும், பிரம்மன் வருணன் சொல்லக் கேட்டுக் கொடுத்த சாபத்தாலும் காசியபர் பூமியில் இடையனாகப் பிறந்து வந்து வசுதேவரானார்.

அதிதியும் சுரதையும் இதற்கு உடன்பட்டதால் அவர்கள் முறையே தேவகி மற்றும் ரோகினியாகப் பிறந்து வசுதேவரின் மனைவிகளாயினர்.

முடிவுரை

உலக உயிர்கள் இவ்வாறு பிரம்மனாலேயும், உப பிரம்மாக் களாலேயும், அவர்களின் வழித் தோன்றல்களாலேயும் ஒவ்வொரு காலத்தில் தோன்றியதாக இந்து மத இலக்கியங்கள் சொல்கின்றன.

சுபமங்களா இதழ்ச் சிறு கதைகளில் சமயம் (1992 - 1994)

கோ. சங்கர வீரபத்திரன்

ம.தி.தா.இந்துக் கல்லூரி
திருநெல்வேலி - 10

சமயம்

சமயம் மனிதனின் வாழ்க்கையில் கலந்துவிட்ட ஒன்றாகும். ''சமைத்தல்' என்ற சொல்லில் இருந்து சமயம் உருவாகியது என்பர். சமைத்தலுக்குப் பக்குவப்படுத்துதல் என்பது பொருள். மனிதனை பக்குவப்படுத்துவது சமயமாகும்.

''சமயங்கள் நல்ல் மக்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன''[1] என்றும்,

''சமயம் அன்பையும், பண்பையும் வலியுறுத்துகிறது''[2] என்றும் சான்றோர் கூறியுள்ளனர்.

''இயற்கைக்கு மாறான காரியங்கள் எங்கெங்கு காணப்படு கின்றவோ, எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கடவுளும், மதமும் தேவையாகும்''[3] என்றார் பெரியார்.

சுபமங்களா சிறு கதைகளில் (1992 - 1994) இந்து சமயத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இரண்டு கதைகளும் (இரண்டாம் திருவிழா, உள்வாங்கும் உலகம்), இந்து இசுலாமிய சமயக் கலவரத்தைக் கருப்பொருளாகக் கொண்டு இரண்டு கதைகளும் (நகரத்தில் நான்கு பேர், மனுஷி) படைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் திருவிழா

திருவிழா என்றாலே ஊரே மகிழ்ச்சியில் தத்தளிக்கும், வீடுகள் வெள்ளையடிக்கப்பட்டு, செம்மண் பட்டை, கோலமிடப் பட்டு அழகாகக் காட்சியளிக்கும். சங்கிலிப்பட்டி மாரியம்மன் கோவிலில் புரட்டாசி முதல் செவ்வாயில் மேலக்குடி மக்களும், அடுத்த செவ்வாயில் கீழக்குடி மக்களும் வழக்கமாகத் திருவிழாக் கொண்டாடுவர். பல வகையில் கீழக்குடி மக்கள், மேலக்குடி மக்களுக்கு உதவியாக இருந்து வருகின்றனர். இந்நிலையில் ''இந்த தடவை நாங்க மொதல்ல கொட வைக்கலாமுன்னு இருக்கோம்.

நாட்டாண்மைக்கார அய்யா தான் இதுக்கு வழி செய்யணும்'' என்று கீழக்குடி மக்கள் கேட்க, மேலக்குடி மக்கள் மறுக்க, போலீஸ் பந்தோபஸ்துடன் கொடைவிழா நடக்கிறது. கிடா வெட்டும் போது அது சிலிர்த்துக் கொண்டு ஓட பிடித்தவன் தலையில் வீச்சரிவாள் இறங்க அன்று நின்ற கொடை தான் இரண்டாம் திருவிழாவே நடக்கவேயில்லை.[4].

''ஒவ்வொரு சமயப் பண்டிகையும் மனிதனுக்குத் தன்னையறிய ஒரு வாய்ப்பை வழங்கி விடுகின்றது.''[5] என்பார் ம.பா. குருசாமி.

ஆனால் இக்கதையில் மேலக்குடி மக்கள் யார் என்பதனை யறிய கீழக்குடி மக்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. மேலக்குடி மக்களின் பிரச்சினை அது என்று, கீழக்குடி மக்கள் ஒதுங்கியதே இல்லை. பள்ளிக்கூடம் கட்டுவது, மேலக்குடியிலுள்ள ஒரு பெண்ணின் கற்பைக் காப்பாற்றியது என உதவியாக இருந்தாலும், ''சாதி'' என்று வரும் போதும் அந்தஸ்து என்று வரும்போதும் மேலக்குடி மக்கள் விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை என்பதனை அறிய முடிகிறது.

உள்வாங்கும் உலகம்

கிராமத்திற்கு, மாரியம்மன் கோவில் திருவிழாவினைப் பார்க்க, சூசன் மாத்யூ என்ற அமெரிக்கப் பெண் சப் எடிட்டர் கிருஷ்ணனுடன் வருகிறாள். நடக்கவிருக்கும் வள்ளித் திருமணம் நாடகம் பற்றியே ஊர் முழுவதும் பேச்சாக உள்ளது.

இரவில் ''வள்ளித் திருமணம்'' நாடகம் நடைபெறுகிறது. ஊரே கூடிப்பார்த்துக் கொண்டிருக்கிறது. நாடகத்தின் இறுதியில் கதாநாயகன் முருகக் கடவுளாக வர மக்கள் எல்லோரும் வணங்குகின்றனர்.

ஆனால் ஆவுடையப்பன் ''சாமி'' வந்தது போல் ஆடுகிறான். மக்கள் கூட்டம் ஆவுடையப்பனை வணங்கியும், சாமி மலையேற வில்லை. முருகக் கடவுள் வந்து வணங்க, மலையேறுகிறது.[6]

''மன வாக்குகளைக் கடந்து அதே வேளையில் நம்முன் நிற்பவர் கடவுள்''[7] என்ற தன்மையை ஆவுடையப்பனிடம் காண முடியவில்லை. ஆவுடையப்பன், ஊர் மக்கள் மட்டுமல்ல முருகக் கடவுளாக நடித்த நாயகனும் வணங்க வேண்டும் என்று, போலியாகச் சாமி வந்தது போல் நடித்து மக்களை ஏமாற்றுகிறான். தன்னை மதிக்க வேண்டும் என்ற தன் முகப்பு (Ego) ஆவுடையப்பனிடம் வெளிப்படுகிறது. மக்கள் ஏமாறுவதற்கு அவர்கள் அறிந்து கொண்ட கடவுற் பற்றிய கோட்பாடே காரணம் எனலாம்.

''கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர் களால் சிறியோர்களுக்குப் போதிக்கப்பட்டும், காட்டப்பட்டும்

தோற்றமான எண்ணமும், உருவமும் ஆகும்''[8] என்ற பெரியாரின் கூற்று இங்கே எண்ணத்தக்கது.

மக்களுக்குக் கடவுள் தேவையாக இருக்கிறார். இதனை ஆவுடையப்பன் உணர்ந்துகொண்டு உணராத மக்களை ஏமாற்று கிறான், ஏமாறுகிறவன் இருக்கிற வரை ஏமாற்றுபவன் இருப்பான் என்பதனை மாற்றவோ, மறுக்கவோ முடியாது எனலாம்.

இந்து சமயக் கலவரம்

இஸ்லாமின் இலட்சியக் கொள்கை என்பது ''இகபோக வாழ்க்கைக்கும், ஆன்மீக வாழ்க்கைக்கும் இடையே குறிப்பிடத்தக்க எத்தகையதொரு வேறுபாட்டையோ, குழப்பத்தையோ ஏற்படுத்தாம லிருப்பது''[9] ஆகும்.

இக்கருத்தினை வெளிப்படுத்தும் நிலையில் நகரத்தில் நான்கு பேர் என்ற கதை அமைந்துள்ளது.

நகரத்தில் நான்கு பேர்

இரவு வேளையில் திரைப்படம் பார்க்க, நான்கு நண்பர்கள், இரண்டு பேர் இந்து, ஒருவன் கிறிஸ்தவன், மற்றவன் இஸ்லாமியன் செல்கின்றனர். திடீரென்று மதக் கலவரம், ஆளுக்கொரு திசையில் ஓடுகின்றனர். இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் இஸ்லாமிய நண்பன் வீட்டில் அடைக்கல்மாக, உணவு கொடுத்து, காப்பாற்றுகின்றனர். மீதமுள்ள இரண்டு பேர் இந்து சமய நண்பன் வீட்டில் தங்கி மறுநாள் வெளியே வருகின்றனர்.

சந்தித்துக் கொண்ட நண்பர்கள் கலவரத்திற்கு என்ன காரணம் என்று ஒருவருக்கொருவர் வினவ, பைசுல்லா வியாபாரப் போட்டி காரணமாக, ஒரு இந்து, ஒரு இஸ்லாமியனை வெட்டிக் கொன்ற தாகக் கூறுகிறான். அது எப்படி மதக் கலவரமாகும் என்று மற்ற நண்பர்கள் வினவ, அதற்கு பைசுல்லா ''எங்க ஆளை, எங்க ஆளே கொன்னுட்டா அது கொலை, எங்க ஆளை உங்க ஆளு கொன்னுட்ட அது மதக் கலவரம்''[10] என்கிறான்.

மனுஷி

பாபர் மசூதித் தகர்ப்பினைப் படமெடுத்த ஜமீலாவை, இந்து சமய ஆட்கள் விரட்ட, இராமர் படம் உள்ள குடிலில் ஒளிந்து கொள்கிறாள். அங்குள்ள இந்துப் பெண் ஜமீலா பேசும் ஆங்கிலத்தைப் புரியாவிட்டாலும், தேடிவந்தவர்களிடம் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றுகிறாள்.[11]

''சமயம் அன்பையும், பண்பையும் வலியுறுத்துகிறது''.

சமயம் கடவுளை முன்னிறுத்திச் சமத்துவத்தை இன்றியமையாத தாக்குகிறது.

சமயம் சேவையில் கடவுளைக் காணும்படி உபதேசிக்கிறது''[12] என்பதனைக் கதையில் பெயரே சுட்டப்படாத, ஒரு சில வினாடி களே வந்து போகும் இந்துப் பெண் மூலம் உண்மையான, சமயம், கடவுள், மனுஷி பற்றி அறிய முடிகிறது.

1. சாதிக் கலவரத்தினால் காலம் காலமாக நடைபெற்று வந்த திருவிழா நின்று போனதை இரண்டாம் திருவிழா வெளிப் படுத்துகிறது.
2. அறிவின் எல்லையாகப் பெரியார் ''தேவையற்றுப் போன இடமே கடவுள் செத்துப்போன இடமாகும்.'' (அறிவின் எல்லையாகும்)[13] என்றார். இதனை மக்கள் உணராத வரை, ஆவுடையப்பன் போன்றோர் ஏமாற்றிக் கொண்டே இருப்பர் என்ற கருத்து வெளிப்படுமாறு ''உள்வாங்கும் உலகம்'' படைக்கப்பட்டுள்ளது.
3. இந்து முஸ்லீம் கலவரத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டு கதைகள் அமைந்துள்ளன. ''நகரத்தில் நான்கு பேர்'' கதையில் வியாபாரப் போட்டியில் நடைபெற்ற கொலை மதக் கலவரமாக மாற, நண்பர்களின் குடும்பங்களில் அதன் எதிரொலி வெளிப்படவில்லை. மனிதாபிமானம் வெளிப்பட்ட தனையே கால முடிகிறது.
4. ''மனுஷி''யிலும் மத உணர்வு, வெறியைவிட மனிதாபிமானமே முக்கியம் என்பதனையே காணமுடிகிறது.
5. பிற சமயக் கதைகள் இடம் பெறவில்லை.

சமயக் கலவரக் கதைகளின் மூலம் மனிதாபிமானம் செத்து விடவில்லை என்பதனையே அறிய முடிகிறது.

குறிப்புகள்

1. மா.பா. குருசாமி, ''சமயங்களும், பண்டிகைகளும், ப.1.
2. தி.சேஷாத்ரி, ''காந்திவழிச் சமயம்'', ப.25
3. ஈ.வெ.ரா. பெரியார் ''தத்துவ விளக்கம்'' ப. 26
4. மேனகா புஷ்பன், 'இரண்டாம் திருவிழா', சுபமங்களா ஜன. 92, ப. 38-41.
5. மா.பா. குருசாமி, மு.க.நூ. ப. 56
6. பாரதிபாலன், 'உள் வாங்கும் உலகம்', சுபமங்களா ஜன. 93, ப. 28-32
7. சுவாமி மதுரானந்தா (தொ.ஆ.) ''இந்து சமயத் தொடக்க நிலை'', ப.5
8. ஈ.வே.ரா. பெரியார், ''இனிவரும் உலகம்'', ப.18
9. ஏ.ஆர்.எம். முபாரக் (மொ.பெ.ஆ.) ''இஸ்லாம் காட்டும் வாழ்க்கை நெறி'' ப.1
10. சி.ஆர். ரவீந்திரன், 'நகரத்தில் நான்கு பேர்', சுபமங்களா மார்ச் 1993, ப. 41-43
11. டி. குலசேகர், மனுஷி ஷ மே - 1993, ப. 14-17.
12. தி. சேஷாத்ரி, மு.க.நூ., ப. 26
13. ஈ.வே.ரா. பெரியார், ''இனிவரும் உலகம்'', ப. 19.

கலை, இலக்கியங்கள் காட்டும் காதற் கடவுளர்

அம்பை மணிவண்ணன்

தியாகராசர் கல்லூரி
மதுரை - 9

உலகில் முதன் முதலில் உயிர்கள் தோன்றிய காலத்திலிருந்தே அக்கால மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் காதல் உணர்வுகள் என்பது ஒரே மாதிரியாகத்தான் இருந்திருக்கும். மனிதன் நாகரிக வளர்ச்சி பெறத் துவங்கியதும் அவனது காதல் உணர்வுகளும் நாகரிகம் அடையத் துவங்கியது. அவ்வுணர்வு பிற உயிர்களது காதல் உணர்வுகளினின்றும் மனிதனைப் பிரித்துக் காட்டியதோடு அவைகளினின்றும் மனிதனை உயர்வான நிலைக்கு இட்டுச் சென்றது.

உலகில் மிகப் பழமையான இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கவைகளான சங்க இலக்கியம், ரோமானிய கிரேக்க இலக்கியம் ஆகியவற்றில் காதல் உணர்வுகள் தொடர்பான செய்திகள் பற்றியும், தமிழ்க் காப்பியங்கள் மற்றும் புராணங்கள் முதலானவற்றில் காதற் குறியீடாகக் கருதப்படும் மன்மதன் தொடர்பான செய்திகள் பற்றியும், தமிழகக் கோயிற் சிற்பங்களில் எங்ஙனம் மன்மதன் மற்றும் இரதி ஆகியோரது சிற்பங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன என்பது பற்றியும் காண்பதுவே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தமிழ் இலக்கியத்தில் காதற் கடவுள்

தமிழ் இலக்கியத்தைப் பொருத்த மட்டில் காலத்தால் முந்தியதான சங்க இலக்கியத்திலேயே மன்மதன் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. உதாரணமாகப் பரிபாடலில் செவ்வேள் எனும் பகுதியிலும், திருமால் எனும் பகுதியின் முதற்பாடலிலும் இடம் பெற்றிருப்பதைக் கூறலாம். பரிபாடல் சங்க இலக்கியங்களுள் ஒன்றாகப் போற்றப்படினும் இவ் இலக்கியத்தைக் கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதுவர். இதற்கு முந்திய காலத்தில் தோன்றிய இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையில் மன்மதன் பற்றிய செய்திகளைக் காணலாம்.

சிலப்பதிகாரத்தில் ''கனாத்திறம் உரைத்த காதை''யில் தேவந்தி கண்ணகிக்கு ஆறுதல் கூறுமிடத்துக் காமவேள் கோட்டத்துறையும் காமக்கடவுளைத் தொழுத மகளிர்தாம் கணவரோடு பிரியாது இன்புறுவர் என்று கூறுகின்றார். மேலும் அக்காலத்திலேயே முருகன், திருமால், சிவன், சூரியன் போன்ற கடவுளருக்கு இணையாகக் காமனுக்கும் கோயில் இருந்துள்ளது என்பதனை இக்காதை வாயிலாக அறியமுடிகிறது.

மணிமேகலையில் ''மலர்வனம் புக்க காதை''யில் ''படையிட்டு நடுங்கும் காமன்'' என்று காமன் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. இதனையடுத்துப் பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், இக்கால இலக்கியம் ஆகியவற்றில் மன்மதன் பற்றிய செய்திகள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன.

ரோமானிய கிரேக்க இலக்கியங்களில் காதற் கடவுளர்

தொன்மைக் காலத்து ரோம இலக்கியங்களில் காதலுக்கான கடவுளர் குறிப்பிடப்படுகின்றனர். குபிட் (Cupid) எனும் ஆண் கடவுளை மன்மதனுக்கு இணையான கடவுளாகக் கருதலாம். இக்கடவுள் இளமையுடன் பொன்னிறத்தில் இறகுகளுடன் சிறு குழந்தையாகப் படைத்துக் காட்டப்பட்டுள்ளார். இக்கடவுளும் மன்மதன் போன்றே மலர் அம்பினால் காதலைத் தோற்றுவிப் பவராகவே காட்டப்படுகிறார். இரதி எனும் காதல் தேவதைக்கு இணையாக அங்கு 'வீனஸ்' எனும் பெண் தேவதை இடம் பெறுகிறது. தமிழ் இலக்கியம் அல்லது இந்து சமயம் சார்ந்த புராணத்தைப் பொருத்தமட்டில் மன்மதனும் இரதியும் கணவன் மனைவியாகக் கருதப்படுகின்றனர். ஆனால் ரோம இலக்கியத்தில் குபிட்டும், வீனஸும் காதலராகக் காட்டப்படவில்லை.

புராணங்களில் காதற் கடவுளர்

சிவமகாபுராணத்தில் காமன் பற்றிய செய்தி காணப்படுகிறது. சிவபெருமானது மனைவி உமை ஒருமுறை தக்கனுக்கு மகளாகப் பிறந்தாள். தாட்சாயினி எனப்பெயர் பெற்றாள். அப்பெயர் மாறும் படியாகவும் வேறு ஒரு நல்ல பெயர் விளங்கும் படியாகவும் இன்னொரு பிறவி எடுக்கவேண்டும் என இறைவனிடம் வேண்டினாள். சிவனது அனுக்கிரகத்தால் மலையரசனான பர்வதராசனின் மகளாகப் பார்வதி எனும் பெயருடன் பிறந்து ஐந்தாவது வயதில் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யத் தொடங்கினாள். தன் மனைவியைப் பிரிந்த சிவபெருமானும் யோகத்தில் அமர்ந்ததால் உலகில் உயிர்களின் உற்பத்தி இல்லாமல் போனது. இதனால் தேவர்கள் பிரம்மா மற்றும் விஷ்ணுவிடம் ஆலோசனை செய்ய

அவர்கள் காமனை அனுப்பி வைக்க ஆலோசனை கூறினர். அதன்படி மன்மதன் தன் மனைவியுடன் சிவபெருமானிடம் சென்று மலர் அம்புகளைத் தொடுத்தான். இதனால் கோபம் கொண்ட சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதனை எரித்தார். மன்மதனின் மனைவி இரதி சிவபெருமானிடம் தன் கணவனை உயிர்ப்பிக்க வேண்டியதால் மன்மதனைச் சிவன் உயிர்ப்பித்தார். ஆனால் இரதியின் கண்கள் தவிர பிறர் கண்களுக்குப் புலப்படமாட்டார் என வரம் அளித்தார். இக்கதையானது உணர்ச்சிகளை அறிவு என்றுமே வென்று நிற்கவேண்டும் என்ற கருத்தை உணர்த்துவதாக அமைகிறது. இதில் மன்மதன் காதல் உணர்வின் குறியீடாகவும், சிவனது நெற்றிக்கண் அறிவு அல்லது ஞானத்தின் குறியீடாகவும் கொள்ளப்படுகிறது. இக்கதையின் காரணமாகவே சிவபெருமான் 'காமதகனமூர்த்தி' என அழைக்கப்படுகிறார்.

வடமொழியில் இயற்றப்பட்டுள்ள ''குமார சம்பவம்'' எனும் நூலில் சூரன் எனும் அசுரனை அழிப்பதற்காக யோகத்திலிருக்கும் சிவபெருமானிடம் காதல் உணர்வை ஏற்படுத்த மன்மதன் அனுப்பப்படுவதாகப் புனையப்பட்டுள்ளது.

மன்மதன், ரதி உருவ அமைப்பு

மன்மதன் இரண்டு, நான்கு அல்லது எட்டுக் கரங்களுடன் காணப்படுவார். இடது கையில் கரும்புவில் இருக்கும், வலது கையில் மலரம்பு காணப்படும். தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் எனும் ஐந்து மலர்கள் கணைகளாகும். இவை காதல் நினைவாக இருத்தல், பிரிந்தவரை எண்ணிப் புலம்பல், சோகம், மோகம் மரணம் எனும் பஞ்ச அவத்தைகளைத் தரக்கூடியனவாகும். காமனது கொடி மகரக்கொடி, வாகனம் தேர் ஆகும். இத்தகு அமைப்பைக் கொண்ட மன்மதன் உருவமே பெரும்பான்மையான கோயில் களில் காணப்படும் அமைப்பாக உள்ளது.

சில்பரத்தினம் என்னும் நூலில் காமனுக்குக் கைகள் நான்கு என்றும், அவற்றில் பாசம், அங்குசம், மலரம்பு, கரும்பு வில் ஆகியன அமைந்திருக்கும் என்றும், தலையில் இரத்தினக் கிரீடத் துடன், தாமரை மலர்மேல் இருப்பான் எனவும் கூறப்பட்டுள்ளது (*Silparatnam, P. 68*). இத்தகு அமைப்புப் பெரும்பாலான கோயில்களில் காணப்படவில்லை.

விஷ்ணு தர்மோத்ர புராணம் காமனுக்கு எட்டுக் கரங்கள் என்று கூறுகிறது. மேலும் அவற்றில் நான்கு கரங்களில் சங்குச் சக்கரம், வில், அம்பு ஆகியன இருக்கும் என்றும், மற்ற நான்கு கரங்கள் அவரது மனைவியரான ரதி, பிரிதி, சந்தி, மகாசக்தி ஆகியோருடைய

மார்பகங்களில் இருக்கும் என்கிறது (*Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Part II, Vol. I. P. 201*). இத்தகு அமைப்பும் சிற்பங்களில் காணக் கிடைக்கவில்லை.

மன்மதனின் மனைவியாகக் கருதப்படும் இரதிதேவியின் உருவமானது அவரது வாகனமான அன்னப்பறவையில் ஒரு காலை மடக்கி மற்றொரு காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் அமையும். இத்தகு அமைப்பே பெரும்பான்மையான கோயில் களில் காணப்படுகிறது.

தமிழகக் கோயிற் சிற்பங்களில் மன்மதன், ரதி

தமிழகக் கோயில்களில் மன்மதன், இரதி சிற்பங்கள் பல்லவர், முற்காலப் பாண்டியர், சோழர் ஆகியோரது காலத்தில் இடம் பெறவில்லை என்பர் செல்வகுமார் (*Manmatha and Rati in Sculptures, P. 45*). விசய நகர நாயக்கர் காலத்திற்கு முன்பு கோயில் களில் சிவன் மற்றும் விஷ்ணு போன்ற கடவுளரது உருவங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. விசயநகர நாயக்கர் காலத்துக் கோயில்களில்தான் பல்வேறு புராணங்கள் தொடர்பான சிற்பங் களையும், அப்புராணங்களில் இடம் பெறும் இறைவன் தவிர ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரங்கள் குறிப்பாக மன்மதன், இரதி சிற்பங்களையும் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான சிற்பங் களையும் இடம்பெறச் செய்தனர். விசயநகர நாயக்கரது மண்டபச் சிற்பங்களில் மன்மதன், இரதி சிற்பங்கள் தவறாமல் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தில் மன்மதன், இரதி சிற்பங்கள் திருக்குறுங்குடி, கிருஷ்ணாபுரம், தாடிக்கொம்பு, ஆண்டாள் கோயில், திருமோகூர், மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், அழகர் கோயில், திருமெய்யம், உத்தரமேரூர் சுந்தரவரதர் கோயில் எனப் பல கோயில்களில் இடம் பெற்றுள்ளன.

இக்கோயில்களில் மன்மதன், இரதி சிற்பங்கள் எதிரெதிர்த் தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன. திருமெய்யம் கோயிலில் மட்டும் மன்மதன் சிற்பம் மட்டும் இடம் பெற்றுள்ளது. தாடிக்கொம்பு கோயில் தவிர ஏனைய கோயில்களில் மன்மதன் சிற்பம் இரண்டு கைகள் கொண்டும் அவற்றில் கரும்பு வில், மலரம்பு கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது. தாடிக்கொம்பில் ஆறு கரங்களுடன் திகழ்கிறார். இதில் வலப்பக்கக் கரங்களில் இரண்டில் மலரம்பும் மற்றொன்றில் அங்குசமும் இடப்பக்கக் கரங்களில் மலர்ச்செண்டு, கரும்புவில், பாசம் ஆகியன கொண்டும் காணப்படுகிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்குறுங்குடி ஆகிய இடங்களில் மன்மதன் சிற்பம் தேரின்மீது நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளது. தாடிக் கொம்பில் ரதி, மன்மதன் சிற்பங்களுக்கு மஞ்சள் பூசி வழி படுவதால் திருமணத் தடை உள்ள இளைஞர்களுக்குத் தடைநீங்கித் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் வணங்கி வருகின்றனர். திருமோகூரில் மன்மதன் மற்றும் இரதியின் சிற்பங்கள் மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளன. இராமன்-சீதை திருமணம் முடிந்தபின் சீதையை அரவணைத்த நிலையில் காணப்படும் இராமனது சிற்பத்திற்கு எதிரே மன்மதனும் இரதியும் காட்டப் பட்டுள்ளமை இங்குப் பொருத்தமுடையதாக அமைகிறது.

இரதியின் சிற்பம் அன்னத்தின் மீது அமர்ந்த நிலையில் மேற்கண்ட கோயில்களில் காணப்படுகிறது. வலது கையில் மலரம்புடன் திகழ்கிறாள். திருக்குறுங்குடியில் மட்டும் அன்னத்தின் கயிற்றைக் கையில் பிடித்த நிலையிலும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில் கையில் கண்ணாடி வைத்து முகம் பார்ப்பது போன்றும், தாடிக் கொம்பில் கரும்பு வில்லுடனும் காட்டப்பட்டுள்ளார். உத்திரமேரூரில் இரதியைத் தழுவிய நிலையில் காமனது சிற்பம் இடம் பெற்றுள்ளது.

நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோயிலில் வரையப் பட்டுள்ள குமாரசம்பவம் ஓவியத்தில் மன்மதன் சிவன் மீது அம்பு தொடுக்கும் காட்சி காட்டப்பட்டுள்ளது.

தொகுப்புரை

மன்மதன் இரதி ஆகியோர் பற்றிய செய்திகளில், தமிழகத்தில் சங்க காலம் முதலே மன்மதன் தொடர்பான செய்திகளைக் காணமுடிகிறது. இரதி தொடர்பான செய்திகள் புராணங்களில் இடம் பெறுகின்றன. கோயிற் சிற்பங்களில் விசயநகர நாயக்கரால் கட்டப்பட்ட கோயில்களில் மன்மதன், இரதி சிற்பங்கள் அதிக அளவில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. கிரேக்க ரோமானிய இலக்கியங்களிலும் இவர்களுக்கு இணையான கடவுளர்கள் பேசப்படுகின்றனர். தமிழகத்தில் உள்ள பல்வேறு கோயில் களில் கொண்டாடப்படும் வசந்த உற்சவம் மற்றும் மதுரை, விருதுநகர் மாவட்டங்களில் பங்குனி மாதப் பௌர்ணமியன்று கொண்டாடப்படும் காமதகன விழா ஆகியவை தொடர்பான செய்திகளும் இங்கு நினைக்கத்தக்கன. எதிர் வருங்காலங்களில் காதற்கடவுளர் தொடர்பான ஆய்வுகள் நிகழத்தப்படுமேயானால் இவர்கள் தொடர்பான முழுமையான செய்திகளை ஆய்வுலகிற்குக் கொடையாக அளிக்கலாம்.

திருமந்திரம்

டி. பாலசுப்பிரமணியன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

சைவ சமய நூல்கள் சாத்திரம், தோத்திரம் என இரு பிரிவு களை உள்ளடக்கியுள்ளது. தோத்திரம் என்பது (இறைவன்பால் உள்ள) அன்பின் அடிப்படையில் அமைந்தவை. சாத்திரம் என்பது (உயிர்கள் பால் உள்ள அன்பின் காரணமாக) அறிவின் அடிப்படையில் எழுந்தவை. உயிர்கள் இருமை நலம் பெறவேண்டி மனம், மொழி காயத்தை எப்படிக் கட்டுக்குள் வைத்திருக்கவேண்டும் என்பதனைப் பற்றியும்; அப்படி இருக்க எப்படி இறைவன் பால் அன்பு செய்ய வேண்டும் என்பதனைப் பற்றியும் சாத்திரமும், தோத்திரமும் அமைக்கப்பட்டுள்ளன.

சமயாச்சாரியார் உள்ளிட்ட இருவான்எழுவர் அருளிய 12 திருமுறைகள் தோத்திர நூல்களையும், சந்தானச்சாரியார் உள்ளிட்ட அறுவர் அருளிச் செய்த பதினான்கு மெய்கண்ட சாத்திர நூல்கள் என்று போற்றப்படுகின்றன. இந்த அடிப்படையில் திருமூல நாயனார் அருளிச் செய்த பத்தாம் திருமுறையான திருமந்திர நூல் தோத்திரமாகும். ஆனால், இதில் சாத்திரக் கூறுகளே அதிகம் காணப்படுகின்றன. எனவே, இந்நூல் தோத்திரத்திற்குத் தோத்திர மாகவும், சாத்திரத்திற்குச் சாத்திரமாகவும் அமைந்துள்ளது. இந்தத் தமிழக மகா நூல் 9 தந்திரங்களை உள்ளடக்கிய 3047 பாடல் களைக் கொண்டுள்ளது. இதில் இரண்டாம் தந்திரத்தில் குருநிந்தை, சிவ நிந்தை, மாகேசுர நிந்தை (22) என்ற தலைப்பில் உள்ள செய்திகள் மூலம் திருமூல நாயனார் கூறும் அறன் என்னவென்று சிந்திப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். குரு நிந்தனையை ஐந்து திருமந்திரங்களில் விளக்குகின்றார்.

தாய், தந்தையைக் காட்ட, தந்தை குருவினைக் காட்ட, குரு இறைவனைக் காட்டுவார். இதில் ஒவ்வொருவரும் அறம் பிறழக் கூடாது என்பது விதி. அறம் என்பது அறு என்ற பகுதியால் அமைந்த சொல். அறு என்றால் வரையறு என்பதாம். உன் தகுதிக்கு ஏற்ப உனது எண்ணம், சொல், செயல் இவற்றை வரையறுத்தலேயாம். இந்த வரையறை மீறுகின்ற பொழுது, மீட்சிவரம்பை மீறுகின்ற

இரப்பர் அறுவது போல், பலூன் வெடிப்பதுபோல், சுமையால் அச்சுமுறிவது போல், ஸ்பிரிங் தன்மை இழந்து நீண்டு விடுவது போல் நாம் ஆகிவிடுவோம். அவ்வாறு ஆகக்கூடாது என்பதற்காகத் தான் அருளாளர்கள் அறத்தினை வற்புறுத்தியுள்ளனர்.

1. அறங்களில் ஒன்றுதான் குருவை நித்தியாமை, இறை நிந்தை கூடாது என்று வற்புறுத்திய நாயனார் அடுத்ததாக குரு நிந்தையைக் கண்டிக்கின்றார். குருவே சிவம்; சிவமே குரு; என்கின்றது சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம்.

முப்பொருள் உண்மையை நிறுவி விளக்குகின்ற சித்தாந்தம் உயிரானது வினை வழிப்படலாகாது என்பதனைச் சொல்லுகின்றது. வினை மிகமிக எண்ணிக்கையும், அதனால் வரும் இன்னல்களும் எண்ணிய என்பதனைச் சொல்லுகின்ற பொழுது வினைகெடவும், வினை ஈட்டாமைக்கும் உரிய வழிவகைகளைச் சொல்லுகின்றார். அதில் மிகுந்த சாபத்திற்கும், பாபத்திற்கும் உரிய வினையாகக் குரு நிந்தை கூடாமையை வலியுறுத்துகின்றார்.

தாய், தந்தை, தமையன், மாதுலன் முதலானோர் எல்லாம் 'குரவர்' எனப்படுவர். இவர்களை நிந்தித்தலாகாது. கல்வி கற்பிக்கும் ஆசிரியர் குரவராதலால் அவரைக் கற்றிருந்தார் என்பதுனுள் அடக்கிவிட்டார். அவர்தான் எழுத்தறிவிப்பர். நூற்பொருள் உணர்த்து பவர்; தொழில் கற்பிப்பவர் எனப்பல திறத்தினராவர். வாழும் வகை சொல்லும் இவர்கள் அறவோராவர். இவர்கள் சொல்லுவ தெல்லாம் வேதம்! மந்திரங்கள் ஆகும். எனவே பெற்றோர், கற்றார், உற்றார் இவர்களை இகழ்வோர் கயவர் என்கின்றார், திருமூலர். (திருமந்திரம் - 522)

பத்தினிப் பத்தர்கள் தத்துவஞானிகள்,
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே என்கிறார் (தி.ம. 523)

பத்தினி, பத்தர்கள் தத்துவஞானிகள் மூவரும் நேரடியாகக் குரவராகா ரெனினும், தத்தமது நல்லொழுக்கங்களால் உலகம் நன்னெறி நிற்கச் செய்தலால் அவர் உலகாசிரியராவர். அவ்வகையில் அவர் கட்குத் தீங்கு எண்ணல் உலகிற்கே தீங்கெண்ணலுக்கு ஒப்பாகும். அதனால் விளையும் தீமை மிகப்பெரியதாகும். எனவே, மேற்கண்ட இருபாடல்களும் உபதேசக் குரவரன்றி ஏனை குரவரையும் இகழ்தல் தகாது எனப்படுவதாயிற்று.

மாகேசுர நிந்தையும் அறமாகாது என்கிறார். சங்கமர், சிவனடியார், மாகேசுரர் என்பன ஒரு பொருட் சொற்களே!

சிவனடியார் உலகில் எவர்க்கும் தீங்கிழையார். அறவுள்ளங் கொண்ட அவர்கள் இடும் பிச்சையை ஏற்று உண்பர். எனவே அவர்களை இகழ்ந்தோர் பெறுவது நரகே. அடியவரை இகழக் காரணம் செல்வம் தரும் செருக்கும், சமயக்காழ்ப்புமின்றி வேறொன்றும் அன்று. சிவனடியாரை ஓம்புவார் சத்தி நிபாதமடைவர். எனவே மாகேசுவர நித்தை மாபாதகமாகும் என்க.

பாடல் 528-ல் சிவனடியார் உள்ளம் நோகச் செய்தால் அதற்குக் காரணமாயுள்ள மண்ணுலக நாடும், அதன் சிறப்புக்கம் அழிதலே யன்றி விண்ணுலக வேந்தன் ஆட்சிப் பீடத்துடனும், மண்ணுலக மன்னன் ஆட்சி பீடமும் அழிந்தொழியும். இஃது எங்கள் நந்தியெம் பெருமான் ஆணையாகச் சொல்லத்தக்க உண்மை.

ஈசனடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழித்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாயிடும் நம் நந்தி யாணையே.
நாம்அடங்க இந்தத் தலம் அடங்கும்; தாபதர்கள்
தாம் உணரில் இந்தத் தலம் உணரும் - தாம் முனியில்
பூ மடந்தை தங்காள்; புகழ் மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து (பா. 68)

என்ற திருக்களிற்றுப் பாடியாருடன்

ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன்; காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே (தி.ம. 242)

என்ற பாடல் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

மந்திரம் ஒன்றே உரைசெய்த மாதவர் சிந்தையில் நொந்திடத் தீமைகள் செய்தவர்கள் எல்லாம் எல்லோராலும் இகழ்ந்து ஒதுக்கப் படுகின்ற தெரு நாயாய் நூறு முறை பிறந்து, பின்னர் புலையராய்ப் பிறந்து, இருமைப் பயன்களையும் எய்தாது வாளாய் இறந்தொழிவர் என்கின்றார் திருமூலர். (தி.ம. 524)

அறிவிக்க அறிவது உயிர். அறிவிப்பவர் ஆசான். ஆசான் குரு. குரு தெய்வம். எனவே தெய்வ நிந்தை துன்பத்தினைத் தரவல்லது. உயிர்க்கு உய்யும் வழிசொல்பவர்கள் நெஞ்சு நடுங்க செய்தால் அதன் பலன் நாசமே. சாபம் என்பது தூய உள்ளத்தின் ஏற்படும் துன்பத்தின் அதிர்வே. துன்பத்திற்குக் காரணமான அகப்புறக் காரணி களை அந்த அதிர்வானது சிதைக்கச் செய்துவிடும். இன்பரா சாணி சவுண்டினைத் தொடர்ந்து ஒரு பொருளின் மீது செலுத்தினால் அது அப்பொருளைச் சிதைத்துவிடும் என்பது இன்றைய அறிவியல்

உண்மை. மனப்பொருமலும் அதே வகையில்தான் செயல்படும். மனம் நல்லெண்ண அதிர்வுகளை வெளியிட நன்மையும், தீய எண்ண அதிர்வு களை வெளிட தீமைகளும்தான் விளையும். எனவே நம்மைப் பற்றி எண்ணுகின்றவர்கள் எப்பொழுதும் நம்மை வாழ்த்தினால் நாம் நலம் பெறுவோம். நாம் இறைவனை நலமடைவோம். குருவினை வாழ்த்த வளம்பல பெறுவோம். அவர்கள் நிந்திக்க நாம் நலம் கெடுவோம்.

ஞானகுருவின் முன் தீய சொற்களை எவர் சொல்லினும் உலகில் நன்னெறி அழியும்; மெய்யுணர்வு ஒழியும்; பஞ்சம் உண்டாகும். எனவே ஞானகுருவினை இகழ்தல் இன்னல் தரும் என்க.

உண்மைக் குரவரின் பெருமையை அறியாமையும் பெருங் குற்றமாம் என்றவாறு.

சிவஞானிகளை வந்திப்பவர் சிவபுண்ணியச் சீலராவர். நிந்திப்பவர் சிவாபராதிகளாய், அருநரகும், இழிபிறப்பும் பெறுவர், சிவனடியாரை வந்தியாதொழியினும் நிந்தித்தல் ஆகாது. மேலும் கூறுகையில்

''ஞானம் விளைந்தவர் நம்பிட மன்னவர்
சேனைவளைந்து திசைதொறுங் கைதொழ
ஊனை விளைத்திடும் உம்பர்தம் ஆதியை
ஏனை விளைந்தருள் எட்டலுமாமே'' *(தி.ம. 530)*

என்கிறார்.

1. சிவநிந்தை கூடாமை

தேவர்க்கும் யாவர்க்கும் முதல்வனாகிய சிவபெருமானின் திருக்கோல உண்மைகளை உணராமல் சிறு தெய்வமாகக் கருதி இகழ்வார்களாயின் அச்செயலானது பூனை அருகே தானேசென்று அகப்பட்டு நின்ற கிளியினைப் போல்வர் என்கிறார் திருமூலர்.

தெளிவுறு ஞானத்துச் சிந்தையின் உள்ளே
அளியுறு வார் அமரர்பதி நாடி
எளியனென் நீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூசையின் கீழதுவாமே *(தி.ம. 518)*

இதில் நிந்திப்பவரது இழிநிலை விளங்குவதற்கு துதித்தல் செய்வாரது உயர்நிலையையும் உடன் கூறுகின்றார்.

தேவரும் அசுரரும் வினை வெப்பத்தில் அகப்பட்டு உயர்ந்தோரும்
அழிகின்றவரே, அவர்கள் திரிவு இன்றி நிலைபெறும் உணர்வை அடைந்திலர்
சிவனை நினைப்பவர்க்கே உள்ளம் குளிரும். உண்மை ஞானம் கிட்டும்.

தன்னை உணர்வாரது இதனை உணர்வில் அமுதம் கசிந்து ஊறுவதுபோல ஊறி நின்று இன்பம் பயக்கும்-இதனையே,

''முனிந்தவர் வானவர் தானவர் எல்லாம்
விளிந்தவர் மெய்நின்ற ஞானம் உணரார்
அளிந்தமு தூறிய ஆதில் பிரானைத்
தளிர்ந்தவர்க் கல்லது தாங்க ஒண்ணாதே'' (தி.ம. 519)

என்கின்றார்.

இறைவனை எளியன் என்று எண்ணும் எண்ணத்தினாலன்றிப் பகையால் சிவநிந்தை செய்தலின் குற்றமும், அச்செயலுக்கு உடன்படுதலின் குற்றமும் ஆகும் என்பதனை,

அப்பகையாலே அசுரரும் தேவரும்
நற்பகை செய்துநடுவே முடிந்தனர்
எப்பகையாகிலும் எய்தார் இறைவனைப்
பொய்ப்பகை செய்யினும் பொன்னுவதாமே (தி. ம. 520)

என்று கூறுகின்றார்.

வேதியர் சிலர் மகளிரின்பத்தில் பற்று நீங்காமையால் சிவனை வழிபட நினையாமல் பிற தெய்வங்களை வழிபடுதலில் முனைந்து நிற்பர். அதுவும் சிவ நிந்தனைதான். முக்தியினைத் தரும் சிவபெருமானை வழிபடப் பேரின்பம் கிட்டும். இதனைத்தான் சிவபுரம் நினைவர் திருமகளொடு, திகழ்வரே, செயமகன் தலைவரே, கலைமகள் தர நிகழ்வரே, எழில் உரு உடையவர் களே, சிவபுரம் நினைபவர் புகழ்மிகும் உலகிலே, குலன் நிலனிடை நிகழும், வழிபுவி திகழுமே!

பேதமையால் சிவனை இகழ்தல் குற்றமாகும் என்கின்ற அறன் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

புண்ணியம் தேடுதலை விடப் பாபங்களைத் தேடாத வழிவகை களை அறிதல் மிகவும் முக்கியம் என்கின்ற வகையில் அறமற்றவை எவை எவை என்பதனை முதலில் அறிந்தால் தீவினைகளை ஈட்டும் நிலை முழுமையாகத் தவிர்க்கப்படும். அத்தவிர்பே நல்வினைகளை ஈட்டலில் நாட்டம் செலுத்தச் செய்யும். அவ்வகையில் சிவநிந்தை, குருநிந்தை, மாகேசுர நிந்தை ஆகிய மூன்றினையும் தவிர்க்க வேண்டும் என்கின்றதனை வலியுறுத்துகின்றார்.

நிந்தனை தவிர்தலில், அவர்களின் வந்தித்த நினைவுகளான சிவம், குரு, மாகேசுரன் என்ற வார்த்தைகளை எண்ண, எண்ண உச்சரிக்க உச்சரிக்க அவை ஆற்றல்மிகு மந்திரங்களாகி அவர்களின் அருளாசியினைப் பெற்றுத் தருபவை ஆகும். நம்மை அறம் மீறாமல் காக்கும் கடமையையும் அது நன்மை செய்யும் என்கின்ற தகவலையும் கூறி அற இலக்கியமான திருமந்திரம் ஒரு தோத்திரச் சாத்திர மந்திர நூலாகத் திகழ்கின்றது.

திருமந்திரமும் திருத்தலம் பாடுதலும்

தி. ரமா

அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3

சமய உண்மைகளைக் கூறி வரும் திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வைத்து எண்ணப்படுவது; திருமுறைத் தொகுப்பில் இஃது ஓர் தனித்தன்மையுடையது. முதல் ஏழு திருமுறைகள் தனித்தனியாகவும் தொகுத்தும் திருத்தலங்களைப் பாடுவதுடன் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய உண்மைகளைக் கூறும் பதிகங் களையும் பெற்றவை; திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் திருத்தலங் களை முதன்மைப்படுத்தித் திருக்கோயில் வழிபாட்டை முன்னிலைப் படுத்துகின்றன. எட்டாம் திருமுறையான திருவாசகம் இந்த அமைப்பிலிருந்து மாறுபட்டது. இது மணிவாசகரின் இறை யனுபவத் தொடர்பைப் பிணைத்துத் தனித்தனிப் பத்துகளாக அமைந்திருக்கிறது. ஆங்காங்கே திருவாசகத்தில் திருத்தலப்பெயர்கள் பயின்றாலும் தனித்திருத்தலத்தை முன்னிறுத்தித் தலபுராணம் போலத் திருவாசகப் பாடல் பாடப்படவில்லை.

திருமந்திரத்தின் தனித்தன்மை

பத்தாம் திருமுறையான திருமந்திரமோ முன்னமைந்த ஒன்பது திருமுறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது; இத்திருமுறையில் பத்துப் பத்துப் பாட்டு என்ற அமைப்பும் கிடையாது; திருவாசகம் போலப் பத்தி அனுபவத்தையும் இந்நூல் விவரிக்கவில்லை. ஆனால் திருமந்திரம் சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் அமைந்திருக்கிறது; வாழ்க்கைக்கு வேண்டிய அறங்களையும் ஆங்காங்கே விவரிக்கிறது. 'கருவுருவாதல்' பற்றிக் கருப்பக்கிரியை என்று பேசும் திருமுறை இஃதேயாகும். திருமுறைகளில் காலத்தால் முற்பட்டது திருமந்திரமே.

திருமந்திரமும் திருத்தலமும்

இத்திருமுறையில் திருத்தலங்களைப் பற்றிய தனிக்குறிப்புகள் இல்லை. நூலின் முதல் பகுதியில் திருமூலர் ''சேர்ந்திருந்தேன் சிவமங்கை பாகம் தன்னை'' என்று திருவாவடுதுறைத் தலத்தைக் குறிப்பிடுகிறார். ஆனால் தலத்தைப் பற்றியோ, சிவபெருமானைப் பற்றியோ அவன் குறிப்பில்லை.

திருமந்திரம் சமய உண்மைகளைக் கூறி வரும்பொழுது தெய்வத் திருத்தலங்களையும் இடைஇடையே பேசுகிறது. முதல் தந்திரத்தில் 'பதிவலிவீரட்டம்' என்று ஒரு பகுதியைத் திருமூலர் அமைக்கிறார். இதில் எட்டுப்பாடல்கள் உள்ளன. இந்த எட்டுப் பாடல்களிலும் சிவபெருமான் செய்தனவாகப் புராணங்கள் கூறும் வீரச்செயல்கள் எட்டுக் கூறப்படுகின்றன. இந்த எட்டு இடங்களும் தமிழ்நாட்டுத் தலங்களே. இந்த வீரச்செயல்களைச் சொல்லவந்தவர் முதல் ஆறுபாடல்களில் நிகழ்ச்சிகளையே விவரிக்கிறார். இந்த ஆறுபாடல்களில் திருத்தலப் பெயர்களே இல்லை. கடைசி இரண்டு பாடல்களில் தான் திருத்தலப் பெயர்கள் கூறப்படுகின்றன. சம்பந்தர், நாவுக்கரசர் போன்றோர் திருத்தலங்களின் பெயர்களைச் சுட்டியும் அங்கு எழுந்தருளிய இறைவன் பெயரைச் சுட்டியும் திருவுருவைப் புனைந்தும் திருத்தலங்கைப் பாடுகின்றனர். தொன்று தொட்டுவரும் புராண மரபு தழுவி முதல் ஆறுபாடல்கள் ஆறு தலங்களைக் குறிப்பாகச் சுட்டுகின்றன.

1. திருக்கோவலூர் வீரட்டம்
2. திருப்பறியலூர் வீரட்டம்
3. திருக்கண்டியூர் வீரட்டம்
4. திருவிற்குடி வீரட்டம்
5. திருவதிகை வீரட்டம்
6. திருவழுவூர் வீரட்டம்

திருத்தலம்பாடும் வகைமை

திருவாவடுதுறையில் தங்கியிராது ஊர் ஊராகச் சென்று திருமூலர் பாடியிருப்பாரேயானால் நிகழ்ச்சிகளைத் தலங்களோடு இணைத்து உரைத்திருப்பார். அவ்வாறு செல்லாமையால் இவர் சிவபெருமானுடைய செயல்திறன்களைப் பாடுவதில் ஆர்வமுடைய வராய் நிகழ்ச்சிகளையே பாடினார் என்பது பெறப்படும். பின்னாளில் தலங்களுக்குச் சிறப்பு ஏற்படுகின்றபோது ஒவ்வொரு தலங்களுக்கும் ஒவ்வொரு சிறப்பு நிகழ்ச்சி என்று சான்றோர்கள் வகுத்தனர். இதனால் சிவபெருமான் தொடர்பான கதை நிகழ்ச்சிகள் ஒவ்வொரு தலத்திலும் நிகழ்ந்தன என்றுஉரைக்கும் கொள்கை உருவாயிற்று.

வீரட்டம்-விளக்கம்

வீரட்டம் என்பது வீரத்தனம் வீரட்டனம் எனத்திரிந்து மருவிற்று என்பர். வீரத்தனாம் என்ற சொல்லுக்குச் சிவபிரானது வீரம் விளங்கிய தலம் என்றுபொருளாகும். வீர+ஸ்தானம் என்பது வீரட்டானம் என்றாயிற்று பின் வீரஸ்தான அட்டம் என்பது மருவி வீரட்டம் என்று ஆயிற்று. இதனைத் தானம் என்ற சொல்லின்றி

வீரம் அட்டம் என்று இரண்டுசொற்கள் சேர்ந்து வீரம் நிகழ்ந்த எட்டு இடங்கள் என்றகருத்தில் ஒருசொல்லாக உருவாயி இருக்க வேண்டும்.

திருத்தலப் பெயர் குறிப்பிடல்

தலப்பெயர்களைச் சொல்லாது பாடிக்கொண்டு வந்த ஆசிரியர் ஏழாம் பாடலில் 'கடவுள்' என்றே குறிப்பிடுகிறார். இங்கு எமனை வென்ற வீரம் பேசப்படுகிறது. அடுத்தப்பாடலில் திருக்குறுக்கை என்ற பெயரை இவர் குறிப்பிடுகிறார். இங்கு மன்மதனை எரித்த வரலாறு பேசப்படுகிறது. இதனால் திருத்தலங்களைப் பற்றிய வரலாறு திருமூலருக்குத் தெரிந்திருக்கிறது என்பது புலனாகிறது. ஆனால் அவர் தன்னுடைய நூலை வேறு நோக்கில் அமைத்தமையால் ஒவ்வொரு தலத்தையும் பாடுகின்ற போக்கைத் தவிர்த்து விட்டார். ஒரு தலத்தைப்பற்றியும் பத்துப்பாடல் பாடவில்லை. இவர் குறிப்பிடும் இன்னொரு திருத்தலம் தில்லையாகும்.

சக்திபேதம் என்ற பகுதியில் தில்லை சிற்றம்பலத்தைக் குறிப்பிடுகின்றார். அப்பாட்டில்

''உண்டு இல்லை என்றது; உருச்செய்து நின்றது
வண்-தில்லை மன்றினுள் மன்னி நிறைந்தது
கண்டிலர் காரண கா்ரணி தன்னொடும்
மண்டலம் மூன்று உற மன்னி நின்றாளே'' (1055)

என்று தில்லை மன்றைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு பெயர் குறிப்பிட்டு மூன்று திருத்தலங்களையே திருமூலர் பேசுகிறார். ஆனால் ஐந்தாம் தந்திரத்தில் சரியை என்ற பகுதியில் சிவபெருமானை நாடு, நகரம், திருக்கோயில் என்று இடங்கள் எல்லாம் தேடிச் செல்லுங்கள், பாடிப்பனியுங்கள் என்று குறிப்பிடுகிறார்.

''நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப்பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே'' (1445)

என்று திருத்தலம் தோறும் சென்று வழிபடுதலை இவர் வலியுறுத்துகிறார். சமய குரவரைப் போலத் திருத்தலங்களைப் பாடவில்லை என்றாலும் திருத்தலங்கள் தோறும் சென்று அடியார்கள் பாடுதலை வழிபடுதலைத் திருமூலர் தூண்டுகிறார். நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் போன்ற சிவனடியார்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் திருமூலர் ஆதலால் அவர் திருத்தலங் களைப் பாடாது போயினார்.

அம்மை, திருத்தலங்கள் போதல்

திருமூலர் 'சிவபெருமான் எழுந்தருளிய தலங்களையும் சென்று வழிபடுங்கள் என்று ஒருமந்திரத்தில் வலியுறுத்துகிறார்.

"உறைபதி தோறும் முறைமுறை மேவி,
நறைகமழ் கோதையை நாடொறும் நண்ணி,
மறையுடனே நிற்கும் மற்று உள்ளநான்கும்
இறைதினை, போதுஇடில் எய்திடலாமே" *(1191)*

இப்பாடலில் சக்தி உறைகின்ற தலங்கள் எல்லாம் நாள்தோறும் சென்று தினையையும் மலரையும் தூவி வழிபடுங்கள், வழிபட்டால் வேதங்களில் கூறப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் 'பொருளும் கிட்டும்' என்று ஆசிரியர் வலியுறுத்து கிறார். இவ்வாறு சிவபெருமான் திருக்கோயிலுக்கும் சக்தி திருக்கோயிலுக்கும் போய் வழிபடுவதை வலியுறுத்தும் திருமூலர் அவர்களின் திருத்தலங்களையும் வழிபடுக என்று வழிகாட்டுகிறார்.

திருமூலர் திருத்தலங்களைச் சுட்டி எல்லாப் பதிகங்களைப் பாடவில்லை. அடியார்கள் திருத்தலங்கள் தோறும் செல்லுதலும் தலங்களைப் பாடுதலும் வழிபடுதலும் ஆகிய மரபு திருமூலர் காலத்திலேயே அரும்பிவிட்டது. இதனை வளர்த்துக் கிளைகளாய் கிளைத்து விழுதுகளாய்த் தனித்துவிடச் செய்தவர்கள் தேவார மூவர்களேயாவர்.

பயணம் செய்த முறையில் வேறுபாடு

திருவாவடுதுறையிலிருந்து கொண்டே இந்த அட்டவீர தலங்களை அறிந்து திருமூலர் பாடுகின்றார். தலங்கள்தோறும் பயணம் செய்து தலங்களையும் மக்களோடு இணைத்துக் கொண்டு நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் பாடினார்கள். ஆனால் திருமூலர் சிவபெருமான் நிகழ்த்திய அற்புத நிகழ்ச்சிகளையே பாடல்களில் பேசுகிறார். அவர் தனி ஒருவராக நின்றே இவற்றைப் பாடினார் என்பது திண்ணம், அவர் திருக்கோயில் வழிபாட்டிற்குப் பெரும் அழுத்தம் கொடுத்துப் பாடல்கள் புனைந்ததாகக் குறிப்பில்லை. அதனால்தான் ஒவ்வொரு திருத்தலங்களையும் தனித்தனியே திருமூலர் பாடவில்லை

இவர் குறிப்பிடும் இன்னொரு தலமான தில்லையைப் பொன் வேய்ந்த வரலாற்றைக் கொண்டு குறிப்பிடுகிறார். தில்லையில் கூத்தப்பிரான் ஆடுதலையும் பேசுகிறார். இவருக்கு முன் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரைத் தழுவி இவர் தில்லை அம்பலக் கூத்தைப் பற்றிய பாடல்களை இயற்றியிருக்கிறார்.

திருமூலர் காலத்தில் தமிழகத்தில் கோயில்கள் பல இருந்தன. கோச்செங்கணான் வரலாறும் அவன் பல கோயில்களைப் பேணியமையைக் காட்டும். ஆனால் திருமூலர் திருத்தலம் தோறும் சென்று திருக்கோயில்களைப் பாடி மக்களைக் கோயில் வழிபாட்டிற்கும் சமய வளர்ச்சிக்கும் இழுப்பதை விரும்பவில்லை. அவர் ஓரிடத்திலிருந்து தன்னை மறந்து யோகநெறியில் ஈடுபட்டார். இதன் காரணமாகத் தலம்தோறும் சென்று திருமூலர் பதிகம் பாடாது தான் பின்பற்றிய யோகநெறியையே திருமந்திரத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இந்நெறி யோகப் பயிற்சி உடையாருக்கே உரியது. ஆதலின் இவர் பாமர மக்களைச் சென்றடையும் வண்ணம் எளிமையாகவும் இசையோடும் கூடிய தலப்பதிகங்களைப் பாடவில்லை. இதனால் திருத்தலம் பாடும் மரபு திருமூலர் காலத்தில் வலிமையும் வளர்ச்சியும் பெறவில்லை. அதனால்தான் திருமந்திரத்தில் திருத்தலப் பதிகங்கள் காணப்பட்டில. திருத்தலம் பாடுதலைக் காரைக்காலம்மையாரே முதற்கண் தொடங்கியவராவார்; அவர் திருவாலங்காட்டைத் தனித்துப் பாடுவது பிற்காலச் சமயகுரவர்க்கு வழிகாட்டியாயிற்று. அம்மையார் பாடிய இசைப் பண்களுக்கேற்பவே சம்பந்தரும் சுந்தரரும் தங்கள் பாக்களை முதற்கண் இசைத்துள்ளனர். இவற்றால் திருத்தலம் பாடுதற்கு வழிகாட்டி பேயார் என்பது புலனாம்.

மூதறிஞர் அடிகளாசிரியரின் திருமந்திர ஆய்வுப் பணிகள்

இடைப்பாடி அ. கணேசன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர் - 608 002

''சாவைத் தொலைத்தேன் - தமிழ்த்
தாய்க்கு வாழ்கின்றேன்
பாவொன்றி னாலே - தமிழ்ப்
பண்பாடு காப்பேன்

என்று தமிழ்த் தாய்க்குத் தொண்டாற்றி வாழ்ந்துவருபவர் பேராசிரியர் அடிகளாசிரியராவர். தமிழோடு தன்னைக் கரைத்துக் கொண்ட அடிகளாசிரியர் மயிலம், கரந்தை ஆகிய இடங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றிய பெருமையர். சென்னை, தஞ்சைப் பல்கலைக்கழகங்களில் ஆய்வுப் பணியில் முத்திரை பதித்த வித்தகர். என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறு என்ற திருமூலர் வாக்குப்படி அடிகளாசிரியர் இன்றளவும் தமது அகவை (94) முதிர்ந்த நிலையில் தமிழ்ப்பணி செய்து வருகின்றார். இதுகாறும் இவர் உரைநூல்கள், பதிப்பு நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், படைப்பிலக்கிய நூல்கள் என்ற வகையில் 58 நூல்களை உருவாக்கியுள்ளார். அந்நூல்களுள் திருமந்திரம் தொடர்பான ஆய்வு நூல்கள் மட்டும் இங்கு ஆராயப்பெறவுள்ளன.

திருமூல சித்தநாதேச்சுராதீனத்தின் தலைவர்

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள், தமது சொந்த ஊராகிய குகையூரில் அமைந்துள்ள திருமூலசித்த நாதேச்சுரா தீனத்தின் தலைவராக (குருவாக) அமர்ந்து அருளாட்சியும் செய்து வருகின்றார். ஆதீனத்தின் குருவாக இருப்பதால் சீடர்களுக்காக நல்ல பல ஆன்மீக நூல்களை எழுதி வருகின்றார். அவ்ஆன்மீக நூல்களுள் திருமந்திரம் தலைமையிடம் பெறுகின்றது.

அடிகளாசிரியர் எழுதிய திருமந்திர ஆய்வு நூல்கள்

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் எழுதிய திருமந்திர ஆய்வு நூல்களின் பட்டியல் வருமாறு,

1. திருமூலரும் பேருரையும் - *1998* (மகா வாக்கிய ஆராய்ச்சி)
2. காயத்துள் நின்ற கடவுள் - *1999*
3. கீதையின் அறிவுப் பொருள் - *2000*
4. திருமந்திர உணர்வு - *2001*
5. திருமூலரின் முப்பது உபதேசம் - *2002*
6. திருமந்திரத்தில் எட்டாம் தந்திரம் - (தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் பணி - உரையுடன்)

திருமூலரும் பேருரையும்

இந்நூல் திருமூலரின் வரலாறு, திருமூலரும் பேருரையும், சதாசிவ தத்துவம் முத்தமிழ்வேதம், திருமந்திரப் பேருரைத்திரட்டு ஆகிய நான்கு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது. திருமூலரும் பேருரையும் என்ற இரண்டாம் தலைப்பே நூலின் மையப் பொருளாகும். தத்துவமசி என்னும் மகா வாக்கியத்தை (பேருரையை) இந்நூல் மிகத் தெளிவாக விளக்கிச் செல்கின்றது. தத்துவமசி மகாவாக்கியத்திற்குப் பொருள் கொள்ளும் முறை இரண்டு விதமாக உள்ளது. ஒன்று பிறநாட்டு வைதீகர் கொள்ளும் முறை, மற்றொன்று தமிழ்நாட்டுப் பேரறிஞர் கொள்ளும் முறை. இவ்விரண்டுள் தமிழ்நாட்டுப் பேரறிஞர் கொள்ளும் முறையைத் திருமூலர் எவ்வாறு கூறியுள்ளார் என்பதை இந்நூல் கூறியுள்ளது. மேலும், மகாவாக்கியம் தொடர்பான திருமந்திரப் பாடல்களைத் தொகுத்து (159 பாடல்கள்) அவற்றுக்கு அருமையான உரையும் விளக்கமும் நூலுள் கூறப் பட்டுள்ளன. இந்நூல் தமிழக அரசின் முதற்பரிசையும் பெற்றுள்ளது.

காயத்துள் நின்ற கடவுள்

குகையூர் திருமூல சித்தநாதர் ஆதீனத் திருவருள் நிலைய பூசை மண்டபத் திறப்புவிழா (*14.3.1999*) நாளில் இந்நூல் வெளியிடப் பெற்றுள்ளது. இதை, நூலாசிரியர், ''யான் வாழ்ந்து வரும் வீட்டில் பரம்பரையான பூசை இடத்தில் திருவருள் நிலைய பூசை மண்டபத்தை நிறுவியுள்ளேன். நிறுவிய இப்பூசை மண்டபத்தில் திருமூலரின் திருமந்திரக் கருத்தைக் கருதிய நிலையில் சிவசொரூபத்தை உணர்வில் நிறுத்தி மௌன நிலையில் இருந்து விடவும் எண்ணியுள்ளேன்''[1] என்று கூறியுள்ளார்.

மனித உடம்பிலே கடவுளைக் காணமுடியும்; சாத்திரங்களை ஓதி அதன் அறிவால் காயத்துள் நின்ற கடவுளைக் காண முயல்க; மனித உடம்பில் கடவுளைக் காண அகப்பார்வை வேண்டும் முதலான செய்திகளை இந்நூல் எடுத்தியம்புகின்றது.

அடிகளாசிரியர் நூலின் நிறைவுப் பகுதியைக் காயத்துள் நின்ற கடவுளை உணர்த்தும் திருமந்திரப் பாடல்களுடன் (40) தொகுத்து அதற்கு உரையெழுதி இணைத்துள்ளார். அவ்வுரை மிக அற்புதமான அரிய உரையாச விளங்குகின்றது.

கீதையின் அறிவுப் பொருள்

திருமந்திரத்தையும் பகவத்கீதையும் ஒப்பிட்டு இந்நூலை எழுதியுள்ளார். திருமூலர் அறிவுப்பொருள் மூன்று என்ற கொள்கையை உடையவர். பகவத்கீதையும் மூன்று என்ற கொள்கையை உடையது. திருமந்திரம், சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் ஆகிய மூன்று அறிவுப் பொருள்களைக் கூறுகின்றது. பகவத் கீதையும் சரபுருடன், அட்சரபுருடன், உத்தமபுருடனாகிய புருடோத்தமன் ஆகிய மூன்று அறிவுப் பொருள்களைக் கூறுகின்றது. இதனையே இந்நூல் விளக்கிச் செல்கின்றது.

திருமந்திர உணர்வு

ஆணிகலங்காது, நல்லாம்துரியம், திருமந்திரத்தில் வந்துள்ள புறங்கூறாமை புறம்போகாமையே, திருமந்திரக் கருத்தைத் தழுவிய திருவாசகப் பிடித்த பத்தின் உரை, குருபாதம் என்னும் பூங்கழல்கள் ஆகிய ஐந்து தலைப்புகளை இந்நூல் கொண்டுள்ளது. நூலாசிரியரின் முன்னுரை திருமந்திரம் தொடர்பான பல அரிய கருத்துக்களை விளக்கிச் செல்கின்றது. ஒருவர் எவ்வாறு மூச்சுப் பயிற்சியைப் பயின்று வரவேண்டுமென்ற அரிய கருத்தை ஆணி கலங்காது என்ற கட்டுரை கூறுகின்றது. பக்குவமுள்ள ஒருவன் குருபாதம் என்கின்ற உயர்ந்த ஞானத்தை எப்படி பெறவேண்டும் என்ற கருத்தை ஐந்தாம் கட்டுரை உணர்த்துகின்றது.

திருமூலரின் முப்பது உபதேசம்

"திருமந்திரம், மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ், மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம், மூலன் உரை செய்த முப்பது உபதேசம் என்னும் மூன்று பகுதியாக அமைந்துள்ளது. இம்மூன்று பகுதியுள் ஒன்றாகிய முப்பது உபதேசம் என்னும் பகுதி திருமந்திரப் பாயிரத்துள் அமைந்துள்ளது.

இவ்வுபதேசப் பகுதியின் முதல் பாட்டு விண்ணின்று இழிந்து என்று தொடங்கி இறுதிப் பாட்டாகிய முப்பதாவது பாட்டில் புண்ணியராயினார் வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே என்று முடிகின்றது. இத்தகைய தொடையமைப்பைக் கொண்ட இம்முப்பது பாடல்களும் அரிய கருத்துக்களைக் கொண்டவையாகும்."[2]

மேற்கண்ட முப்பது உபதேசப் பாடல்களுக்கு அரிய உரையும், விளக்கமும், இன்னபிற குறிப்புகளும் நூலில் உள்ளன.

திருமந்திரத்தில் எட்டாம் தந்திரம் உரை (தற்போது நிகழும் பணி)

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் தற்பொழுது திருமந்திரத்தில் எட்டாம் தந்திரத்திற்கு அரிய உரையெழுதி வருகின்றார். இப்பணி கடந்த மூன்று திங்களாக நிகழ்ந்து வருகின்றது. இந்நாள்வரை 290 பாடல்களுக்கு உரையெழுதப் பட்டுள்ளது. இப்பணி மேலும் தொடர்கிறது விரைவில் அச்சாகும்.

முடிவுரை

மூதறிஞர் பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாகத் திருமந்திரத்தை ஆழமாகப் பயின்று அரிய பல உண்மைகளை வெளிப்படுத்தி வருகின்றார். அத்துடன் திருமூலரின் நெறியில் ஆன்மீகப் பயிற்சியும் மேற்கொண்டுள்ளார். அதற்கேற்பத் தம் பெயரின் முன்னர், திருமூலரின் முத்தமிழ் வேதசதாசிவர் என்றும் இணைத்துக் கொண்டார்.

அடிகளாசிரியரின் திருமந்திர நூல்களேயன்றி அவர் எழுதிய பிற ஆன்மீக நூல்களிலும் திருமந்திரக் கருத்துக்கள் காணப்படுகின்றன.

குறிப்புகள்

1. திரு. அடிகளாசிரியர், காயத்துள் நின்ற கடவுள், ப. 4
   திருவருள் நிலைய வெளியீட்டகம், குகையூர் - அஞ்சல் - 606 306
2. திரு. அடிகளாசிரியர், திருமூலரின் முப்பது உபதேசம், ப. 10
   திருவருள் நிலைய வெளியீட்டகம், குகையூர் - அஞ்சல் - 606 306

காரைக்காலம்மைக்குப் பேயுருவம் எதற்காக?

அ. அறிவுநம்பி

புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி

தமிழ் மணம் கமழப் பக்திப் பாடல்களை உருவாக்கியவர்கள் இறையடியார்கள். அவர்களில் நாயன்மார் அறுபத்து மூவரின் பணியும் பிறரின் பங்களிப்பும் அழிக்க இயலாப் புகழைக் கூறும். பக்தி இலக்கியத்தின் தோற்றுவாய் எனக் கருதப் பெறுபவை காரைக்காலம்மையாரின் பாடல்கள். புனிதவதியார் என்ற இயற்பெயர் மறையுமாறு காரைக்காலம்மையாரின் பெயர் ஓங்கி நின்றது. பெரியபுராண ஆசானோ ''பேயார் என்கிற காரைக்காலம்மையார் புராணம்'' எனத் தலைப்பிடுவார். திருத்தொண்டத் தொகையும்,

'பேயார்க்கும் அடியேன்' *(4)*

எனக் கூறும். ''பேயார் என்றது அம்மையார் இறைவரை வேண்டிப் பேய் வடிவம் பெற்றதானும், தம்மைக் ''காரைக்கால் பேய்'' என்று தமது திருப்பாட்டுகளில் தமது பெயர் பொறித்திருத்தலானும் போந்த பெயர்''[1] என்பர். புனிதவதி என்ற பெயருடைய பெண் சிவனை எண்ணி வாழுங்காலைப் பேய் வடிவத்தை வேண்டியதேன் என்ற வினாவிற்குச் சில காரணங்களைக் கருதவியலும், அவற்றை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

பரமதத்தன் தன் இளையமனைவியொடும் புனிதவதி எனப் பெயர் சூட்டப்பெற்ற மகளொடும் தன் மூத்தமனைவியாய புனிதவதியை வணங்கினார். பிறரையும் வணங்கப் பணித்தார். அந்நேரத்தேதான் புனிதவதி இவ்வணிகனின் கொள்கை ஈது; இவனுக்காகத் தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதியைக் கழித்து விட்டு, பரமனே உன் திருத்தாள்களை வணங்கும் பேய்வடிவை எனக்குத் தா என வேண்டுகிறார். உரைகாரர், ''மகளிர் தமது உடல் வனப்பும் அதுபற்றிச் சித்திரித்தும் கத்தரித்தும் செய்துகொள்ளும் பல்வகை ஆடையணி முதலிய கோலங்களும் தமது நாயகனின் அனுபவத்திற்கென்றே மேற்கொள்வர் என்ற நமது முந்தையோர் கொண்ட உயர்ந்த முறையினை அம்மையாரது அருட்டிருவாக்கின்

உண்மையாற் கண்டுணரலாம். தசையும், அது பற்றுக்கோடாக நின்ற வனப்பும் அம்மையார் இதுகாறும் கணவன் பொருட்டே தாங்கி நின்றார் என்பதும்''[2] என்பார். மணவாளனுக்கில்லாத இவ்வுடலில் மாற்றம் தேவை எனக் கருதியமையால் பேயுரு வேண்டினார் என்பது பொதுச் செய்தி.

வேறுவடிவம் பெறாது பேய் உருவம் பெற்றமையை எண்ணல் வேண்டும். கணவனால் ஒதுக்கிவைக்கப் பெற்ற புனிதவதியாரை அவரின் இளமை, வனப்பு, செழுமை காரணமாகப் பெண்டிறை விழையும் ஆடவர் நெருங்குதல் கூடும். மணிமேகலை உதயகுமரனின் பார்வையிலிருந்து தப்பிக்க மாற்றுருவம் பெற்றமை போலக் காமுகரிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ளப் புனிதவதி விரும்பியிருக்க வேண்டும். வேறொரு பெண்வடிவு ஏற்பினும் ஆடவர் விடாமல் தொடரக்கூடும் என்பதால் பேய்வடிவு வேண்டப் பெற்றிருக்கவேண்டும்.

பெண்டிரின் பெருமை அவர்தம் கற்புக்காப்பில்தான் உள்ளது. மானத்தைவிடவும் கற்புக்கான மதிப்பு மிகுதி. கணவனுக்காகத் தன்மேனியை எழிலாக்கிக் கொள்வதும் அவனருகில் இல்லாத போது தன்னைப் புனைந்து கொள்ளாதிருப்பதும் தமிழ்ப்பெண்டிர்தம் கற்பு மரபு. கண்ணகி, மாதவியின் வீட்டிற்கிடந்த கணவனை அருகினில் பெற்றிராதவிடத்து 'மங்கல அணியின்றிப்' பிறவற்றைத் துறந்திருந்தமை கருதத்தக்கது. கற்புக்குக் காரணமான கணவனே ஒதுக்கும்போது, புனிதவதிக்குரிய கற்புக்கு யார் காவலாவது? கணவனின்றி இருப்பது வேறு; ஆனால் கற்பின்றி இருக்கக்கூடுமா? காவலுக்குரிய கணவன் பக்கத்திலிருக்காதபோது தன் கற்பைக் காத்துக்கொள்ள வேண்டிய தேவை புனிதவதிக்கு ஏற்பட்டது. கற்பைக் காக்கவே பேய் உருவம் வேண்டுதல் நிகழ்ந்திருக்க வேண்டும்.

பேயுருவைப் பெறாமல், மணிமேகலை போலத் துறவியுருப் பெற்றிருக்கலாமெனக் கருதுவாருண்டு. மணந்த கணவன் உயிருடன் உலவுங்காலை மணமாகாத் துறவிபோல வாழ்வதில் புனிதவதிக்கு உடன்பாடில்லை போலும். அஃது அவ்வேடத்தை ஏளனம் செய்வதாகவும் அமையும். எனவே கைம்மைக் கோலமோ, துறவுக் கோலமோ ஏற்புடையது ஆகாதெனஅவர் கருதியிருக்கவேண்டும்.
விளைவு : பேயாக மாற்றங்கண்டமை.

தன் கற்பைக் காத்தல் வேண்டும், என்பதற்காகவும் கணவனுக் கல்லாத மேனி பிறரால் கண்ணாலும் உண்ணத்தகாமற் போதல் வேண்டுமென்பதாலும் பேயுருவு வேண்டப்பட்டது. பிறரால்

காணப்பெறும்போது காணுவாரை அச்சத்தில் ஆழ்த்தும் உருவம் அமைந்தால் மட்டுமே கற்பு பேணப்பெறுவது எளிதாதல் கூடு மென்பது புனிதவதியாரின் கருத்தாகலாம். கண்டவரை அச்சப் படுத்தும் உருவமாகப் பேயுருவை ஈசனிடம் அவர் வேண்டிப் பெற்றதை இக்கோணத்திலும் கருத வாய்ப்புண்டு. பாம்பு, சுடலை போன்ற உருவுகளைக் கோராமைக்கும் காரணங்கள் சில இருக்கலாம். இவ்வுருவுகளைப் பெறின் மானுடப் பெண்டிர் அருகுவந்து அன்னமிடத் தயங்குவர். ஆனால் சதைநீங்கிய எலும்புருவாயிருக்கும் பெண்ணிடத்து அச்சம் கொள்ளார். எனவே பெண்டிருக்கு அச்ச மூட்டாத எலும்புருவை வேண்டினரென்ப.

பரமதத்தன் வெளிநாடு போய்வந்து மீளவும் இல்லறம் நிகழுமெனக் காத்திருந்தவர் புனிதவதியார். பிறிதொரு மங்கையுடன் வேற்றுப்பதியில் கணவன் வாழ்வதறிந்து அங்கேபோய்ச் சந்திக்கும் நேரத்தில் கணவன் தன் காலில் வீழ்வதறிந்து திகைத்தவள் அவள். பெண்ணுருவில் நிற்கும் தெய்வமங்கை எனப் பரமதத்தன் கூறுகிறான். பேயின் காலில் வீழ்வதென்பது நடைமுறையில் இல்லை. எனவே மானுடர் நயக்கும் மங்கை வடிவத்தை இழக்கத் துணிகிறார் புனிதவதியார். தன்னைவிட வயது முதிர்ந்த ஆடவன் தன் காலில் விழுவதை எப்பெண்ணும் விரும்பாள். அதுவும் தான் விழ்ந்து வணக்கம் செய்யவேண்டிய கணவன் தன்னை அடிபணிவது கொடுமையின் உச்சமெனப் புனிதவதியாற் கருதிநின்றமை இயல்பானது. மீண்டுமொரு முறை இக்கொடுமையான நிகழ்வு அமையக்கூடாதென்பது அவரின் முடிவாகியது. அதற்குவழி மானுடப் பெண்ணாகக்கூட உருவந்தாங்குதல் கூடாதென்ற கருத்துப் பிறப்பு. பேயுருவங் காண்பார் அதனை வழிபடும் மனநிலையைப் பெறார். அடையாளம் தெரியாமற் போகவும் வாய்ப்புண்டு. எனவே பரமதத்தன் இரண்டாம் முறையாகக் காலில் வீழ்வதைத் தடுக்கவும் புதியவுருவுக்கான வேண்டுதல் நிகழ்ந்திருக்க வேண்டும்.

சிறுமியாக இருந்த காலம் முதலே சிவனை ஏத்தும் பெற்றிமையராகத் திகழ்ந்தவர் புனிதவதியார். மன்றலுக்குப் பிறகும் இப்போக்கே நீடித்தது. சிவனடியார் ஒருவருக்காவது அன்னம்பாலித்தபின்னே தானுண்ணும் திருவடியாறில் புனிதவதி யாரும் அடங்குவர். கணவன் உடன்வாழ மறுத்தபிறகு, சிவனொடு ஒன்றிடவும், அவனது ஆடலழகைக் கண்டுகளிக்கவுமே அவர் விழைந்தார். சிவபெருமானின் ஆடல்கள் பலவுண்டு. அவற்றுள் சுடலையாடும் பெம்மானாகப் பரம்பொருள் நடனமிடும் திருக்கோலமே புனிதவதியார் விழைந்தது சுடலைக்காட்டில் ஆடல்வல்லானின் நடனத்தைக் காண்பவை பேயும், பிசாசுகளும்.

சுடலைபூசி நடனமாடும் கோலம்காணப் பேய்உருவம் சாலச் சிறந்ததெனப் புனிதவதியார் எண்ணியிருக்க வேண்டும். பிற ஆடல்களைவிடவும் சுடுகாட்டிடை அம்பலவாணன் ஆடும் ஆட்டத்தில் மனந்தோய்ந்தவராக அவர் இருந்தமையால் காடுவாழ் பேய்உருவே உகந்ததெனக் கருதியிருக்க வேண்டும். இறைவனிடம் கயிலாயத்தில் 'நான்பாட, நீ ஆட அருளுக' என்று கேட்டார் பேயுருவான அம்மை. திருவாலங்காட்டில் தானாடும் பெருநடனங் கண்டு மகிழச் செய்கிறார் ஆலவாயண்ணல். காட்டுத்தலத்தில் சுடலைப் பூசிய பெரும்மானின் திருநடனங்காண ஏற்ற வடிவம் பேய் உருவந்தான். பேயுருப்பெற்ற அவர் 'கொங்கைத் திரங்கி' எனத் தன் பேயுருவை விரித்துரைத்து மூத்தபதிகம் பாடியமையைப் பெரியபுராணமும் எடுத்து மொழியும்.

குறிப்புகள்

1. சி.கே. சுப்பிரமணிய முதலியார் (உ.ஆ), பெரியபுராணம், ப.*814*.
2. மேலது, ப. *846*.

அப்பரின் திருப்பதிகங்கள் காட்டும் இறைவழிபாட்டு முறைகள்

கோ. மீனாட்சி

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்
மன்னார்குடி - 614 001

பக்தி என்பது இறைவனிடம் செலுத்தப்படும் அன்பாகும். இறைவனிடத்தில் அன்பு உண்டாகும்போது அவரைப் பற்றிய சிந்தனை உண்டாகிறது. பக்தி முதிரும்போது இறைவனைப் பற்றிய நினைவு இடைவிடாது பக்தனின் உள்ளத்தில் நிகழ்கிறது. இதுவே மிக உயர்ந்த உண்மையான பக்தி என்று கூறப்படும்.

எண்ணரிய பிறவிகள் எல்லாவற்றினும் மிகச் சிறந்ததாகிய மானுடப்பிறவியை இறைவன் உயிர்களுக்கு அளித்தது, மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் அவனுக்குப் பணி செய்து பயன் பெறுதற் பொருட்டேயாகும் என்பதை,

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங் காலமே'' (5.90.7)

என அறிவுறுத்தியருளியவர் அப்பரே.

சைவசமய ஆசிரியர்கள் நால்வருள் மனம், வாக்கு, காயம் என்னும், மூன்றாலும் திருத்தொண்டு புரிந்தவர் அப்பர் ஒருவரே யாவர். மனம் முதலியவற்றுள் எந்த ஒன்றால் இறைவனுக்குப் பணிசெய்தாலும் அது திருத்தொண்டேயாகும். ஆயினும் தொண்டு என்பது காயத்தால் செய்யும் தொண்டினையே சிறப்பாகக் குறிப்பதாகும். அதனை இடைவிடாது உழவாரப்படை கொண்டு செய்து வந்த ஆசிரியர் அப்பர் பெருமானே. எத்துணைப் பெரியோராயினும் இறைவனுக்குக் கைப்பணி செய்தல் இன்றியமையாதது என்பதைச் செயலில் செய்து காட்டியவர்.

இறைவனது அருளை வியந்து அதனையே நாடி இயன்றவாறு அவனுக்கென்றே தொண்டுவகைகளை அன்போடும் வைராக்கியத்தோடும் அயராது செய்வதே பக்திநெறி எனப்படும். அகங்காரம் போனாலன்றி இறைவன்மேல் அன்பு உண்டாகாது. அது போவதற்குச்

சாதனங்களாவன - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குமாகும்.

இந்நான்கு முறைகளாலும் இறைவனை வழிபட்டு முக்தி பெறவேண்டும் என்பதை அப்பரடிகள் தம்பதிகங்களில் குறிப்பிட்டி ருக்கின்றார். இவற்றுள் ஒன்றையாவது செய்த ஞானம் பெற வேண்டுவதை அறியலாம்.

சரியை

சரியை என்பது அன்பர்கள் இறைவனது கோயில் தலத்தை அலகிடல், திருமெழுக்குச் சாத்தல், வழிபாட்டுக்காப் பூக் கொய்தல், பூமாலை கட்டுதல், புகழ்ந்து பாடல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் செய்தல் முதலிய தொழில்களை அன்போடு செய்தலாகும். இது தாசமார்க்கமாகும். இறைவனை ஆண்டானாகவும் நம்மை அடிமை யாகவும் கருதி வழிபடுதலாகும். இதை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் அப்பர் பெருமான். மானுடர்களாகிய நாம் சரியை நெறியில் செய்ய வேண்டிய பணிகளை அப்பரடிகளின் திருப்பாடல்கள் வாயிலாகக் காண்போம்.

வைகறையிலேயே துயில் எழுந்து நீராடி பித்தன் ஆகிய சிவபெருமானுக்குப் பக்தியையுடையவர்களாய், நல்ல மலர்களைக் கொண்டு, உள்ளத்தில் ஆர்வம் நிலைபெறச் செய்து, பத்தி மேலீட்டால் விருப்பம் கொண்டு, முறைப்படி நல்ல விளக்கும் நல்ல தூபமும் இட்டு வழிபாடு செய்ய வேண்டுமென்பதை,

''பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தையுள்ளே வைத்து
விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினா விடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே''

(4.31.4)

என்கின்றார்.

இவ்வாறு செய்யவல்ல அடியவர்களுக்குத் திருக்கடவூர் வீரட்டம் என்னும் கோயிலில் உள்ள இறைவன் கரும்பினிற் கட்டிபோல மிக்க இன்பத்தை விளைவிப்பார் என்றும் கூறுகின்றார்.

சிவபெருமான் அபிஷேகப் பிரியர். அதனால் இறைவனுக்கு அபிஷேகம் செய்து மலர் தூவி ஏத்தித் திருநீறு அணிந்து திருக்கோயிலில் வழிபாடு செய்ய வேண்டும் என்பதை,

''அலரு நீரும் கொண்டு ஆட்டித் தெளிந்திலர்
திலக மண்டலந் தீட்டித் திரிந்திலர்....'' *(5.95.2)*

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

பசுவின் சாணத்தை நீரோடு கலந்து, திரு அலகு கொண்டு திருக்கோயிலைத் தூய்மை செய்து, மலர்களைப் பறித்துக் கூடையில் இட்டுச் சுமந்து வந்து சேவை செய்ய வேண்டும் என்பதை,

''ஆப்பி நீரோடு அலகுகைக் கொண்டிலர்
பூப்பெய் கூடை புனைந்து சுமந்திலர்...'' (5.95.3)

என்று வேண்டுகின்றார்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் சிவாலயத்தை நாள்தோறும் நாடிச் சென்று, புலர்வதன் முன்னர், திரு அலகினால் தூய்மை செய்தும், மெழுகியும் திருத்தொண்டு புரிய வேண்டும். மேலும் பூமாலைகள் புனைந்து ஏத்திப் புகழ்ப்பாடல்களைப் பாட வேண்டும் என்பதை,

''....புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி....'' (6.31.3)

என்று குறிப்பிடுகின்றார்.

அப்பர் பெருமானின் இப்பாடல்களால் இறைவனுக்குச் செய்ய வேண்டிய பணிகள் பற்றி நாம் அறிந்து கொள்வதுடன், அவற்றை மேற்கொள்ளவும் முயல வேண்டும். அவ்வாறு வழிபடும் மெய்யன்பர்களுக்கு இறைவன் அருள்புரிவார் என்பதையும் இவற்றால் உணர முடிகின்றது.

கிரிரியை

கிரியையாவது வாசனைத் திரவியம், தூபம், தீபம், தீர்த்தம், புஷ்பம், பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம் ஆகிய பூசைக்குரிய பொருள் களைக் கொண்ட பஞ்ச சுத்தி செய்து, உட்பூஜை, புறப்பூஜை அக்கினிகார்யம் முதலியவற்றை விதிப்படி செய்தலாகும். இதனைச் ''ஸத்புத்ரமார்க்கம்'' என்பர். ஸத்புத்ரமார்க்கமாவது இறைவனைத் தந்தையாகவும் நம்மைக் குழந்தையாகவும் நினைத்து வழிபடுதலாகும். இதனை உலகில் நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தராவார்.

அப்பரடிகள் தம் பாடல்களில் கிரியை மார்க்கம் பற்றியும் குறிப்பிடுகிறார். உள்ளத்தின் உள்ளே விளங்குகின்ற இறையுணர்வைத் திரியாகக் கொண்டு ஏற்ற வேண்டுமென்பதை,

''...விரும்புமின் விளக்குத் தூபம்
உள்ளத்த திரியொன்றேற்றி உணருமாறுணர வல்லார்...''
(4.31.1)

என்கிறார்.

உலகப் பொருளில் பந்தபாசம் இன்றிப் பக்தர்கள் பலரும் சேர்ந்து, நறுமண மலர்கள் கொண்டு நாள்தோறும் எம்பெருமானைப் போற்ற வேண்டுமென்பதை,

''.....வாச நாண்மலர் கொண்டடி வைகலும்...'' *(5.14.1)*

என்கின்றார். மேலும் தேவர்களும், முனிவர்களும் வேதங்களில் வகுத்த முறையின்படி வழிபாடு செய்ய வேண்டுமென்பதை,

''மறையின் நாண்மலர் கொண்டடி வானவர்
முறையி னால்முனி கள்வழி பாடு செய்....'' *(5.14.2)*

என்று கூறுகின்றார். நாமும் கிரியை முறையில் வழிபட, அவர் பாடல்கள் நமக்கு உறுதுணையாக விளங்குகின்றன.

யோகம்

ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குணங்களையும், ஐம்புலன்களையும் அடக்கி, மூலவாயுவை எழுப்புகின்ற இடை பிங்கலை என்னும் நாடிகளை அடைத்துச் சுழிமுனை வழியைத் திறந்து, நடனச் சிலம் போசையுடன் சென்று, பஞ்சாக்ஷரம், ஏகாக்ஷரமாம் தன்மைகண்டு, அருளைத் தரும் புறவெளியிலே புகுந்து அழுந்தியிருந்தலேயாகும். இதனைச் ''ஸஹமார்க்கம்'' என்பர். ஸகமார்க்கமாவது இறைவனை நமக்குத் தோழனாகக் கருதி வழிபடுவதாகும். இதை விளக்கியவர் சுந்தரர் ஆவார்.

அப்பரடிகள் யோக மார்க்கத்தில் இறைவனை வழிபடும் முறையைக் குறிப்பிடுகின்றார்.

''உயிரா வணமிருந்துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுரு வெழுதி''.... *(6.25.1)*

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார்.

இறைவனை நாம் நம் அறிவுக் கண்ணால் ஆராய்ந்து பயனில்லை. அவனை அவனது அருட்கண்ணாலேயே நோக்குதல் வேண்டும். மூச்சு விடுதல் ஆகிய சுவாசம் நிகழாதபடி யோக நிலையில் இருந்த, யோகக் காட்சியால் இறைவனை உற்று நோக்கி, உள்ளம் ஆகிய திரைச் சீலையில் அவனது திருவுருவை நாம் எழுதிக் கொள்ளுதல் வேண்டும் என்கின்றார்.

ஞானம்

ஞானமாவது, பல நூல்களையும் ஆராய்ந்து, பதி, பசு, பாசம் என்னும் மூன்று தத்துவங்களின் இலக்கணங்களைத் தெளிந்து பண்டை வினையின் பயனாக வந்த சிற்றறிவு முற்றும் நீங்கி, பேரறிவாகிய சிவஞானம் விரிந்து தோன்றும் மனதைப் பெறுதலே

யாகும். இதைச் சன்மார்க்கம் என்பர். சன்மார்க்கமாவது, இறைவனை ஆன்மாவுக்கு உயிராய் நினைத்து வழிபடுதலாகும். இந்த ஞான மார்க்கத்தில் நின்று அதனை உலகிற்குப் போதித்தவர் மாணிக்கவாசகர். இந்நான்கு நெறிகளில் ஒன்றை மட்டும் பின்பற்றினாலும் முடிவில் உயர்ந்த ஞானம் உதிக்கப் பெற்றுச் சிவானந்தப் பேறும் முக்தியும் பெறலாம்.

ஞான மார்க்கத்தில் வழிபடும் முறையையும், அப்பரடிகள் குறிப்பிடுகின்றார். சிவபெருமான், ஞானத்தின் வடிவாதலும், அப்பரமனின் அருளால் அன்றி, மண்ணுயிர்க்கு ஞானம் கை கூடாது. ஆதலால் இறைவன் அளித்த ஞானத்தினால், இறைவனாகிய ஞானத்தைத் தளையிட்டு வைக்க வேண்டுமென்பதை,

''முன்னை ஞான முதல்தனி வித்தினைப்
பின்னை ஞானப் பிறங்கு சடையனை
என்னை ஞானத்து இருள் அறுத்து அண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே'' *(5.91.2)*

என்கின்றார். இது அன்பின் உணர்வால் திளைத்தலும், ஞான உணர்வால் இறைவனை அறிதலும் ஆகும்.

ஞானிகள் தொழும் பாங்கினைக் கண்ட மண்ணுயிர்கள் தொழுது ஏத்தினால், பரிபூரண ஞானமாக விளங்கும் சிவபெருமான், மண்ணுயிர்களுக்குக் கருணையுடன் யாவும் வழங்குவாரென்பதை,

''ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நானலேன்
ஞானத்தால் தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத்தால் உனை நானும் தொழுவனே'' *(5.91.3)*

என்கின்றார்.

இறைவனின் அருளைப் பெற இம்மார்க்கங்களின் வழியில் நடக்க வேண்டும். கடவுளை வழிபடவும், சொந்தமாக்கிக் கொள்ளவும், இறைவனது பெயரைச் சொல்லவும், புகழைப்பாடவும், அவனது அருளைப் பெறவும் உரிமையுண்டு. ஆதலின் இறைவனை அடைதற்குரிய ஞான நெறியிலும், இம்மை மறுமைப் பயன்களை அடைதற்குரிய அறநெறியிலும் பிறமக்களனைவரும் செல்லுமாறு அவர்கட்கு வேண்டியவற்றையெல்லாம் இயன்றவரைத் தொண்டாகச் செய்தலே மிகவுயர்ந்த கடமையாகும்.

வாகீசர் வாக்கில் வழிபாட்டு முறைகள்

ம. இராதா

தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி
பெரம்பலூர்

அனைத்து வேத சாஸ்திரங்களிலும் நால்வகை நெறிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. குறிப்பாகச் சைவ சித்தாந்த நூல்களிலும், இந்திய நாட்டின் ஆன்மீக வாதிகளின் கூற்றுகளிலும் பல வகையான விளக்கங்கள் கிடைக்கின்றன. நான்கு நெறிகள் எவையெவை என்றும், அவற்றிற்கான சிற்சில விளக்கங்களையும் இவண் நோக்கப் புலனாகும்.

வழிபாட்டு முறைகள்

உலக உயிர்கள் இறைவனைச் சேர்வதற்கு, அவனை வழி படுதல் வேண்டும் அங்ஙனம், வழிபடுதலினால் தான் துன்பத்திற்குக் காரணமாகிய பிறவியினின்றும் நீங்கி, இன்பக் கடலான இறைவனை அடைய முடியும், தெய்வத்தை வழிபடுவதால் கிடைப்பவற்றை,

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின்''

என்று தொல்காப்பிய புறநிலை வாழ்த்து நூற்பா கூறுகிறது.

இவ்விறைப் பணியே, சைவ சித்தாந்த சாத்திரத்துள் 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' எனும் நான்கு நெறிகளாக - வழிபாட்டு முறைகளாக வகைப்படுத்தப்படுகிறது.

சரியை என்பது, சிவ வடிவத்தை அன்புடன் பூசிப்பது. கிரியை என்பது, பத்துத் திசைகளிலும் இறைவன் இருப்பதை எண்ணி வழிபடுவது. யோகம் உள்ளத்தை இறைவனிடம் சேர்த்தல், ஞானம் அறிவின் துணைகொண்டு இறையை உணர்தல்.

இதனை, சிவஞான சுவாமிகள் தமது சிவஞான சித்தி உரையுள்,

''புறத் தொழில் மாத்திரையானே உருவத்
திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு
'சரியை' எனப்படும்''

என்றும்,

''புறத் தொழில் அகத் தொழில் என்னும்
இரண்டானும் அருவுருவத் திருமேனியை
நோக்கிச் செய்யும் வழிபாடு, 'கிரியை' எனப்படும்''

என்றும்,

''அகத்தொழில் மாத்திரையானே அருவத்
திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு,
'யோகம்' எனப்படும்,''

என்றும்,

''புறத்தொழில், அகத்தொழில் இரண்டும்
இன்றி, அறிவுத் தொழில் மாத்திரையானே,
அம்மூன்று திருமேனிக்கும் மேலாய்
அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப்
பிழம்பாய் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்தில்
செய்யும் வழிபாடு, 'ஞானம்' எனப்படும்''

என்றும், இனிது விளக்கியுள்ளார்

வாகீசரும் வழிபாட்டு முறைகளும்

சைவ சமயக் குரவர்கள் சரியை முதலிய நான்கையுமே 'ஞானம்' என்றே உபதேசித்து அருளியுள்ளனர். இந்நிலை திருநாவுக்கரசரது திருமொழிகளில் மிக விளக்கமாகக் காணப்படுகிறது. இருப்பினும், 'சரியை'யாகிய தொண்டு நெறியினையே அதிகமாக வலியுறுத்தியுள்ளார்.

அப்பர் 'திரு அங்க மாலை' எனும் திருப்பதிகத்துள் தலை முதல் கால்வரையில் உள்ள உறுப்புகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக விளித்து *(4:9)* இறைவனுக்குத் தொண்டு செய்ய வேண்டுமெனக் கூறுகிறார். இதில் சரியை, கிரியை எனும் இரண்டு நெறிகளுமே உணர்த்தப்படுகின்றன. ''நெஞ்சே நீ நினையாய்' என்பதில் யோக நெறியும் புலப்படுவதைக் காணலாம்.

சரியை

புறத்தொழில்களால் சிவத் திருமேனியைப் பூசிப்பது. அதாவது திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்தல், திருவிளக்கிடுதல், ஆடுதல், பாடுதல் சிவனடியார்களுக்குப் பணிவிடை செய்தல் முதலியனவாம். இதனை நாவுக்கரசர்,

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

தலையார்க் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதீ என்றும்
ஆருரா என்றென்றே அலறா நில்லே'' *(6:31:3)*

என்ற தாண்டகத்திலும்,

''எவரேனும் தாமாக இலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போதே
உகந்தடிமைத் திறம் நினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர் தேவர் என்று சொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே'' *(6:61:3)*

என்ற தாண்டகத்திலும் காட்டுகிறார்.

அதாவது, திருநாவுக்கரசர் தம் நெஞ்சத்திடத்தே இப்பிறவியில் நிலைபெற்று உய்ய வேண்டுமெனில், சிவாலயம் சென்று திரு அலகினால் தூய்மை செய்தும், மெழுகியும், திருத்தொண்டு புரிய வேண்டுமென்றும், பூமாலைகள் புனைந்தேத்த வேண்டுமென்றும் இன்ன பிறவும் கூறுகிறார்.

மேலும், சிவனடியார்களைக் கண்டதும் உகந்து அவர்க்கு அடிமை பூண்டு ஈசனின் அருள் திறம் போற்றி, அவ்வடியார்க்குத் தொண்டு செய்யும் அன்பர் நெஞ்சில் ஈசன் உள்ளான் என்கிறார்.

''கைப்போது மலர்தூ விக்காதலித்து
வானோர்கள்'' *(4:7:3)*

என்ற பாடலில் சரியையோடு, ஐம்புலன் அகத்தடக்கல், இறைவனை மனத்துள் வைத்தல் ஆகிய கிரியைச் செயல்களும் இடம்பெற்று உள்ளன.

கிரியை

அகம், புறம் இரண்டாலும் இறைவனது அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்வது கிரியையாகும். அது அணுக்கத் தொண்டினைக் குறிக்கும். இறைவனைத் தீண்டி நீர், பூ, தூபம், தீபம் கொண்டு பூசைகள் செய்வதனைப் பற்றிக்கூறுவது. இதனை,

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்'' *(4:1:6)*

''போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்''
(4:3:1)

என்ற பாடல்களிலும் (4:31:4), (4:40:8), (4:92:10) முதலியவற்றிலும் காணலாம்.

''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப் போற்றவிக் காட்டி னோமே''

(4:76:4)

எனும் திருப்பாடல், அப் பூசையைச் சிறப்பாக விளக்குகிறது. மேலும்,

''நெய்யினொடு பால்இளநீர் ஆடி னான்காண்'' (6:52:5)

''நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தங் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே'' (6:30:5)

இத்திருப்பதிகங்களும், அதனை வலியுறுத்துகின்றன.

யோகம்

உடம்பினுள் உயிரை ஒடுக்கி, நற்கதி சேரும் வண்ணம், ஈசனை உள்ளத்தில் பதித்து ஒட்டி வாழும் அடியவர்கள், அவனது அருளைப் பெற்ற அருளாளர்களாவர். தம் உள்ளமாகிய கிழியில் இறைவனது உருவத்தை எழுதி, அதிலேயே ஒன்றியிருத்தலைக் குறிப்பதே யோக நெறியாகும் என்பதை,

''உயிரா வணமிருந் தற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே'' (6:25:1)

எனும் தாண்டகம் அறிவுறுத்துகிறது.

ஞானம்

சரியை, கிரியை முதலாய மூன்றும் ஞானத்தால் வருவதெனினும், ஞான நெறியை அப்பர் தனியே விளக்கிச் சொல்கிறார்.

''ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்'' (5:91:3)

''என்னை ஞானத் திருளறுத் தாண்டவன்
தன்னை ஞானத் தளையிட்டு வைப்பனே''[13] (5:91:2)

எனும் பதிகங்களில், தான் இறைவனை ஞானத்தால் கண்டு கொண்டமையைக் (5:98:7) கூறியிருப்பது ஈண்டு நினைவு கூர்தல் நன்று.

மேற்கண்ட வகையில் வாகீசர் தம் பதிகங்களில் நால்வகை நெறிகளை வெளிப்படுத்தியுள்ளமையை அறிய முடிகிறது. சரியை, கிரியை, யோகம் மூலம் இறைவனை வணங்கியோர் ஞானம் பெற இயலும். அந்த ஞான நிலையும் ஞானமிருந்தால் மட்டுமே சித்தியாகும் என்று வலியுறுத்திருப்பது சிந்தித்தற்குரியது.

''சைவ நன்னெறிதாம் தழைத்து ஓங்குக
தெய்வ வெண் திருநீறு சிறக்கவே''

துணைநூல்கள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை
2. திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (மூலமும்: தெளிவுரையும்) 4, 5, 6-ஆம் திருமுறை - வ.த. இராமசுப்ரமணியம் உரை.
3. திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள், ஆறாம் திருமுறை - ஒடுக்கம் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (ப. ஆர்)

திருநாவுக்கரசர் கண்ட முருகன்

மு.அ. மாணிக்கவேலு

விவேகானந்தா கல்லூரி

சென்னை - 600 004.

சைவசமயக் குரவர்கள் எனப் போற்றப்பெறும் நால்வருள் ஒருவர் திருநாவுக்கரசர். அவர் பாடிய பாடல்கள் தேவாரத்தில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அப்பாடல்களில் முருகனைப் பற்றி, நாவுக்கரசர் கூறிய செய்திகளை இவண் ஆராய்வோம்.

முருகன் சொல்லும் பொருளும்

'முருகு' என்ற சொல்லே அன் விகுதி பெற்று, முருகன் என வழங்கப்படுகிறது. 'முருகு' என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும் என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது.[1] சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி இளமை, முருகன், மணம், அழகு, தெய்வம், வெறியாட்டு, வேள்வி என்ற பொருள்களைப் பகருகிறது.[2]

அழகு, இளமை, மணம், கடவுட்டன்மை ஆகிய இயல்பு களைக் கொண்ட ஒன்றைப் பண்டைத்தமிழ் மக்கள் 'முருகு' என்னும் சொல்லால் அழைத்துப் போற்றினார்கள் என்று திரு. வி.க. தெரிவிக்கிறார்.[3]

இதன் மூலம், முருகு என்ற சொல் அழகு, இளமை, மணம், தெய்வம் ஆகிய நான்கு பொருள்களின் ஒருமித்த வடிவமாகும் என்பது பெறப்படுகிறது.

முருகனின் தோற்றம்

முருகப் பெருமான் சரவணத்தில் தோன்றிய காரணத்தால், 'சரவணத்தான்' எனக் குறிக்கிறார் நாவுக்கரசர்.[4] மேலும், முருகன் எப்படிப் பிறந்தான்? என்ற கருத்தினை அவர் சுட்டவில்லை. இதனைப் பரிபாடலில் ஐந்தாம் பாடல் பின்வருமாறு சுட்டியுள்ளது.

> ''இறைவன் இறைவியைக் கூடி இன்புறும் பொழுது உண்டான கருவை இந்திரன் வேண்டுகோளுக்கு ஏற்ப, இறைவன் பலவாகச் சிதைத்தான். அக்கருவை முனிவர்கள்

வேள்வித் தீயிலிட்டனர். பின்னர், அதனைக் கார்த்திகை மகளிர் அறுவர் உண்டு, கருக்கொண்டு சரவணப் பொய்கையில் தாமரைப் பூவாகிய பாயலில் முருகனை ஈன்றனர்.[5]"

இக்கருத்து, அப்பருக்குத் தெரிந்திருந்த காரணத்தால் சரவணப் பொய்கையில் தோன்றியவன் என்று சுட்டுகிறார்.

முருகனின் உருவம்

நாவுக்கரசர் முருகப் பெருமானை ஆறு முகங்களோடு கூடியவனாகக் கண்டுள்ளார். இதனை, 'அறுமுகனோடு ஆனைமுகற் கப்பன் தன்னை'[6] என்றும் 'ஆறுகொலாம் அவர்தம் மகனார் முகம்'[7] என்றும் சுட்டியுள்ள தொடர்கள் மூலம் அறிய முடிகிறது. மேலும், 'பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்',[8] என்று குறித்துள்ளதன் வாயிலாக ஆறுமுகனின் உருவத்தைக் காண முடிகிறது. இதன் மூலம், கி.பி. 7-ம் நூற்றாண்டில் முருகப் பெருமான் ஆறுமுகப் பெருமானாக வழிபடப்பட்டிருப்பதை உணர முடிகிறது.

முருகனின் தந்தை

நாவுக்கரசர் பரப்பிய நெறி தொண்டுநெறி. அதன் மூலம் சைவ சமயத்தை வளர்த்தார். இன்றைக்குக் கூட உலக வழக்கில் ஒருவரைச் சுட்டும் பொழுது இன்னாரின் தந்தை என்று கூறுகிறோம். அதுபோல, சிவபெருமானைச் சுட்டும் பொழுது முருகனின் தந்தை எனச் சுட்டுகிறார். இதனை, 'கடம்பன் தாதை'[9] 'குமரவேள் தாதை'[10] என்னும் தொடர்களால் அறியலாம். 'மேலும், சங்க காலத்தில் தமிழர்களின் தனித்தமிழ்த் தெய்வமாக முருகன் போற்றப்பட்டி ருந்தான். எனவே, அவன் பெயரை முதலில் குறித்திருக்கலாம் என்றும் கருத வாய்ப்புள்ளது.

வீரச்செயல்

முருகன் சூரபன்மனை அழித்த செயலை இரு இடங்களில் சுட்டியுள்ளார் நாவுக்கரசர். இதனை, 'சமர சூரபன்மாவைத் தடிந்த வேற்குமரன்'[11] என்றும், 'வீரிநீர்ப் பரவைச் சூரட்ட வேலன்'[12] என்றும் குறித்துள்ளார் நாவுக்கரசர். இதன் மூலம் கடலில் சூரனை அழித்தவன் வேலன் என்பதை அறிகிறோம்.

முருகனின் பெயர்கள்

முருகனைக் குறிக்க பல சொற்களைக் கையாண்டுள்ளார் அப்பர். அவர்தம் பாடல்களில் கடம்பன்[13], குமரன்[14], சேந்தன்[15] எனப் பலப் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். கடம்ப மலர் மாலையை அணிந்தவன் என்பதைக் கடம்பன் என்ற சொல்லும், சிவனின் மைந்தன் என்பதைக் குமரன் என்ற சொல்லும், சிவந்த நிறமுடையவன் என்பதைச் சேந்தன் என்ற சொல்லும் குறிக்கின்றன.

அக்கால நிலை

பல்லவர் காலத்தில் சைவம் மற்றும் வைணவ சமயங்கள் வளர்ச்சியுற்ற போதிலும் முருக வழிபாடு ஒதுக்கப்படவில்லை. அக்காலத்தில் சமய வளர்ச்சியில் பின்வரும் மாற்றம் ஏற்பட்டது என்கிறார் மா. காந்திதாசன்.

''பல்லவர்கள் தம்மை தமிழகத்து மக்கள் ஏற்க வேண்டு மென்ற நோக்கோடு தொன்மைக் கடவுளான முருகனைச் சேய் எனக் கொள்ளும் பண்புதனைச் சிறிது மாற்றினர். அத்துடன் சிவனை மேம்பட்டவனாகக் காட்ட வேண்டும் என்பதற்காக முருகனை சக+உமா+ஸ்கந்தா என்ற அடிப்படையில் சோமாஸ்கந்தன் என்ற குழந்தை வடிவினனாக ஆக்கி, சிவனுக்கும் உமைக்குமிடையில் உமை அம்மையின் வலது தொடை மீது அமரச் செய்து புதிய சிலை வடிவமைப்புதன்னை உருவாக்கினார்கள்''[16] என்கிறார்.

முருகப் பெருமான் திருச்செந்தூரில் வீற்றிருப்பவன்; வள்ளியை மணந்தவன் என்பதை, 'நஞ்செந்தின் மேய வள்ளி மணாளன்'[17] என்ற தொடர்ச் சுட்டுகிறது. மயிலை வாகனமாக உடையவன் என்பதை 'மயில் ஊர்தி' என்ற தொடர் குறிக்கிறது. இதன் மூலம் முருக வழிபாடு பல்லவர் காலத்திலும் போற்றப்பட்டது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

முடிவுரை

முருகு என்ற சொல்லே அன் விகுதி பெற்று, முருகன் என அழைக்கப்படுகிறது.

முருகன் சரவணப் பொய்கையில் தோன்றியவன் என்கிறார் திருநாவுக்கரசர், எப்படிப் பிறந்தான்? எனச் சுட்டவில்லை. முருகனை ஆறுமுகப்பெருமானாகக் காட்டியுள்ளார் அப்பர். முருகன் சூரனைக் கடலில் அழித்த வீரச் செயலைச் சுட்டியுள்ளார் அவர்; அவனின் பல பெயர்களைச் சுட்டியிருப்பதன் மூலம் அவை அக்காலத்தில் ஏற்றம் பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

பல்லவர் காலச் சமய வளர்ச்சியில் முருக வழிபாடும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம், ப. 437
2. சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, ப. 3279
3. திரு.வி.க. முருகன் அல்லது அழகு, ப. 34.
4. திருநாவுக்கரசர் தேவாரம், பா. 6:6:1
5. பரிபாடல், பா. 5, அடிகள் 28.50

6. திருநாவுக்கரசர் தேவாரம், 6:74:7.

7. மேலது, 4:18:6

8. மேலது, 6:18:4

9. மேலது, 5:84:6

10. மேலது, 4:60:3

11. மேலது, 5:64:10

12. மேலது, 4:104:5.

13. மேலது, 4:43:2.

14. மேலது, 5:65:10.

15. மேலது, 4:43:8.

16. மா. காந்திதாசன் தமிழகத்தில் முருக வழிபாடு, ப. 79.

17. திருநாவுக்கரசர் தேவாரம், 6:23:4.

திருநாவுக்கரசர் பார்வையில் துறவு

சு. சிவசங்கர்

திருவள்ளுவர் கல்லூரி
பாபநாசம் - 627 425

''கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியப் பகுதியில் பிறந்த சமணம், பௌத்தம் ஆகிய இரண்டு மதங்களே உலகத்தில் முதன் முதலாகத் துறவு நெறியை வலியுறுத்தியவையாகும்'' என்று கூறுகிறார் பேராசிரியர் தொ. பரமசிவன். தமிழ்நாட்டிலும் துறவு நெறியை அம்மதங்களே அறிமுகப்படுத்தின. துறவறத்தின் பெருமையை உணர்ந்த திருவள்ளுவர் அதனைச் சிறப்பித்து எழுதினார். ஆயினும் தமிழகம் இத்துறவு நெறியை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டதில்லை என்றே கூற வேண்டும். ஏனென்றால் வாழ்க்கை அறங்களைச் செய்யும்போது, கணவனும் மனைவியும் இணைந்தே செய்யவேண்டும் என்று தொல்காப்பியம் முதலான பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. சமணத்தில் கூட, ''இல்லறத்தார் சமணத் துறவிகளைப் போற்றி ஒழுகுதலைப் புண்ணியமாகக் கருதுவர்'' என்பார் மயிலை. சீனி. வேங்கடசாமி. அது மட்டுமன்றிச் சமண, பௌத்த சமயிகள் மேற்கொண்ட துறவின் கடுமையான நிலைகளும் தமிழரைச் சிந்திக்க வைத்தன.

வைதிக நெறியில் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் துறவு கொள்வது கடைப்பிடிக்கப்பட்டது. பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம் ஆகிய 'ஆசிரமங்களு'க்குப்பின் 'சந்நியாசம்' என்னும் துறவு நிலை ஆசிரமம் கூறப்பட்டது. இத்துறவானது வாழ்வின் இன்ப துன்பங்களை அனுபவித்து, பொறுப்புகள், கடமைகளை எல்லாம் முடித்த பின்பு கொள்கின்ற துறவாகும். ஆனால் சமணமும் பௌத்தமும் காட்டும் துறவுநிலை அவ்வாறான தன்று. இளம் வயதிலேயே உலக இன்பங்களை வெறுத்து மேற்கொள்ளும் துறவினையே அச்சமயங்கள் வலியுறுத்துகின்றன. சிறுவயதினராயிருக்கும்போதே தந்தையையும் தாயையும் அடுத்தடுத்து இழக்கின்றார் திருநாவுக்கரசர். எஞ்சிய ஒரே ஆதரவான தமக்கை திலகவதியாரும், தமக்கு மணம் பேசப்பட்ட கலிப்பகையார் போர்க்களத்தில் மாண்ட செய்தி கேட்டவுடன் உயிர் துறக்க முனைகிறார். தம்பி மருள்நீக்கியாரின் வேண்டுகோளுக்கிணங்க, அம்முடிவினை மாற்றி, இன்ப உணர்வினைக் கொன்று, விதவைக்

கோலத்துடன் உயிர் வாழ்கிறார். தம்முடைய வாழ்வின் நோக்கமே சிவாலயங்களில் திரு அலகிடுவதும் திருமெழுக்கிடுவதுமே என மாறிப்போகிறார். இளம்வயதில் தாம் கண்ட, அனுபவித்த இத்தகைய துயரங்களே மருள்நீக்கியாரின் மனத்தைத் துறவின் பால் திருப்பியிருக்க வேண்டும்.

சமண மதத்திற் சார்ந்து, அச்சமயநெறியிற் புலமை பெற்று, தருமசேனரால் பட்டம் பெற்றார் மருள்நீக்கியார். சமணரது கடினத் துறவையும் அதன் கோலங்களையும் அவர் கைக்கொண்டா ராயினும் அது தொடர்பான உறுத்தல்கள் அவரது மனத்தினுள்ளே இருந்திருக்கின்றன. அவர் சைவம் திரும்பி, திருநாவுக்கரசரான பின் எழுந்த தேவாரப் பாடல்களில் அவ்வுறுத்தல்கள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

சமணரின் துறவுநிலை அப்பரைப் பொறுத்தமட்டில் பொய்யாகவும், பயனற்றதாகவும், கபடமானதாகவுமே காணப் படுகின்றது.

''தவமே என்றவஞ் செய்து தக்கதோரார்'' *(6:3:32)*

''மனைதுறந்த வல்லமணர் பொய்யும்'' *(6:22:230)*

''கரப்பர்கள் மெய்யை'' *(4:101:983)*

என்றவாறு பல இடங்களில் அப்பர் கூறிச் செல்கின்றார். சமணரது துறவுநெறி தூயதன்று என்னும் எண்ணமும் அப்பருக்கு இருந்தது.

''துறந்தார் தம் தூநெறிக்கண் சென்றேனல்லேன்'' *(6:47:478)*

எனத் தமது முந்தைய நிலையை எண்ணிப்பாடும் அப்பர் தேவாரத்தில் அவ்வருத்த நிலையைக் காணலாம்.

சமணரின் துறவுநிலைக் கோலங்கள் தமிழரின் பண்பாட்டிற்கு ஒவ்வாதவையாகும். எனவே தாமே அத்துறவிகளுடன் பலகாலம் இருந்தும்கூட, அக்கோலங்களைக் கண்டித்துப் பாடுகின்றார் அப்பரடிகள். நிர்வாண நிலை, நின்றுண்ணுதல், இருகையிலும் உணவை ஏந்தி உண்ணுதல், உண்ணும்போது பேசாமை, நீராடாமை, பல் துலக்காமை போன்ற செயல்கள் அப்பருக்கு ஏற்றுக்கொள்ள முடியாதனவாகவே இருந்துள்ளன.

''நிர்வாணம் என்ற செயலையும் கோட்பாட்டையும் தமிழ்ச் சமூகம் தனது வரலாற்றில் தொடர்ந்து ஏற்றுக்கொள்ள மறுத்தே வந்திருக்கிறது'' என்பார் தொ. பரமசிவன். சமண சமயக் கொள்கைகள் பேரில் இருந்த ஈர்ப்பின் காரணமாக முதலில் நிர்வாணத்தை ஏற்கத் தங்காத அப்பருக்குப் பின்னர் அதுவே உறுத்தலாகின்றது. திகம்பரத் துறவியாயிருந்து, 'சுடுகிற சூலை'

நோயின் கடுமை தாளாது, பாதிரிப்புலியூர்ச் சமண மடத்திலிருந்து இரவில் வெளியேறும் அடிகள், 'வெண்புடைவை மெய்சூழ்ந்து' தான் வெளிவருகிறார் என்பது சேக்கிழார் கூறும் செய்தி. நிர்வாணத்துறவு நிலையை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ளாத அப்பரது மனநிலை சிவபெருமானைப் பற்றிய செய்திகளிலும் எதிரொலிக்கிறது. தாருகவனத்து முனிவர்தம் செருக்கடக்கச் சிவபெருமான் நிர்வாண நிலையினராய்ப் பிச்சையெடுக்க பிட்சாடனராய் - வந்தார் என்பது புராணச் செய்தி. இக்கோலத்தை அப்பரடிகள் வர்ணிக்க முற்படும்போது நிர்வாணச் சிவனுக்குக் கோவணம் கட்டிவிடுகிறார்.

''கோவண முடுத்தவாறுங் கோளர வசைத்தவாறும்
தீவணச் சாம்பர்பூசித் திருவுரு விருந்தவாறும்'' (4:77:747)

சிவபெருமானின் நிர்வாணநிலை எவ்விடத்திலும் அப்பரால் பேசப் படவில்லை. சமணரது நிர்வாண நிலையினையும் பலவிடங்களில் அடிகள் பழித்துரைக்கின்றார். ''வெற்றரைச் சமணர்'', ''கூறையில் மிண்டர்'', ''கூறையிலாச் சமண்'', ''உரிந்த உடையார்'' என்பன அவர்தம் கூற்றுகள்.

''தெருவில் உண்ணுதல், நடந்து கொண்டே உண்ணுதல், நின்று கொண்டே தின்னுதல், உண்ணுதல் ஆகியன தமிழ்ப் பண்பாட்டில் வேண்டாதவை என்று விலக்கப் பெற்றன'' என்பார் க.ப. அறவாணன். சமணரிடம் இருந்த இக்குணங்களை அப்பர் இழித்துப் பேசுகிறார்.

''நீதியைக் கெட நின்றமனே உணும் சாதி'' (5:58:587)

என்பது அப்பரது இக்கருத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. அதுவும் பெண் களுக்கு முன்னே நிர்வாணமாய் நின்றுண்ணும் நிலை அடிகளுக்கு மிகுதியான வெட்கத்தையும் வேதனையையுமே தந்திருக்கின்றது.

''குவிமுலையார் தம்முன்னே நாணமின்றி
உண்டி உகந்தமனே நின்றார்'' (6:3:28)

என அவ்வேதனையைப் பதிவு செய்கிறார் அப்பர்.

''புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்'' (குறள். 298)

என்னும் குறள் துறவறவியலில் அமைவது. எனவே தூய்மை நிலை என்பது துறவிகளுக்கு எவ்வளவு இன்றியமையாதது என உணரலாம். சமணத்துறவிகள் இவ்விருவகையான தூய்மை நிலையும் பெற்றிருக்கவில்லை என்பது அப்பரடிகள் கருத்தாகும். நீராடாமல் அழுக்கடைந்த மேனியுடன் திரியும் சமணத்துறவிகளை இழிவாகக்

கருதினார் அவர். ''மாசு மெய்யர்'', ''மெய்யின் மாசுடையார்'', ''உரங்கொடுக்கும் இருள் மெய்யர்'', ''முடையர்'', ''கொதுகறாக் கண்ணிநோன்பிகள்'' எனப் பலபடப் பழித்துப் பாடுகின்றார். மேலும் பல்துலக்காமலிருந்த சமணத்துறவிகளைப் ''பாசிப்பல் சமணர், பொல்லா ஊத்தைவாய்ச் சமணர்'' என்றெல்லாம் இகழ்கின்றார்.

''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்'' (குறள். 280)

இக்குறட்பா துறவின் மற்றோர் இலக்கணத்தைக் கூறுகின்றது. ஆனால் சமணத்துறவிகள் கையினாலேயே தலைமயிரையும், இமை, புருவத்திலுள்ள மயிர்களையும் பறிக்கும் வழக்கத்தை உடைய வர்கள். இவ்வழக்கமும் அப்பரடிகளால் இழித்துரைக்கப்படுகிறது.

''கண்ணழலத் தலைபறித்து'', ''பறிதலைக்குண்டர்'', ''தலை முண்டிக்கும் மொட்டர்'' என்பன அவ்விகழ் மொழிகளிற் சிலவாகும்.

''சமணர், பௌத்தர் ஆகிய இரு சமயத்தாருமே எல்லா உயிர்களையும் பொதுப்பட நோக்கி அவற்றினிடம் அன்பையும் அருளையும் காட்டுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந் தனர்'' என்பார் K.K. பிள்ளை. ஆயினும் சமணத்துறவிகள் பலர் தமது கொள்கைக்கு மாறாகச் செயல்பட்டமையை அப்பரடிகள் எடுத்துக்காட்டுகின்றார்.

''குற்றமுடைய அமணர்'' (4:101:985)
''பழிவழி ஓடிய பாவிப்பறிதலைக் குண்டர்'' (4:103:996)
''குண்டுபட்டுக் குறியறியாச் சமண் மிண்டர்'' (5:41:411)
''கூசுவார் அலர் குண்டர் குணமிலர்
நேசம் ஏதும் இலாதவர் நீசர்கள்'' (5:73:738)

என்றெல்லாம் அச்சமணத் துறவிகளின் நிலையை வெளிப் படுத்துகின்றார்.

'உற்றநோய் நோன்றல், உயிர்க்குறுகண் செய்யாமை, உள்ளத்தாற் பொய்யாதொழுகும் நிலை' முதலான வள்ளுவம் கூறும் துறவற வியல்புகளைச் சமணத்துறவிகள் பெறாத நிலையை அப்பரடிகள் புலப்படுத்துகின்றார்.

''வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே'' (4:70:683)
''கல்லினோ டெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர் புக நூக்க'' (5:72:726)

என்னும் வரிகளில் சமணத்துறவிகள் தம் கொல்லா நெறியினைப் புறந்தள்ளி அப்பரடிகளைக் கொலை செய்ய முயன்றமை தெளி

வாகின்றது. எனவேதான் அவர்களைச் ''சமண் பிரட்டர்'' (5:58:588) எனக் கடிகின்றார் அடிகள்.

வெறும் துறவுக்கோலம் மட்டுமே இறையனுபவத்தைத் தராது என்பது அடிகளின் எண்ணம். சமணத்தில் மட்டுமன்றிச் சைவ சமயத்திலும் அவ்வாறிருக்கும் துறவியரைக் கண்டிக்கிறார் அவர். அவரது 'பாவநாசக் குறுந்தொகை' (5:99) பதிகம் முழுவதுமே போலி வேடத்துறவிகளைக் கடிகின்றது. 'கங்கை, காவிரியில் ஆடினாலும்', வேதமோதி வேள்விகள் செய்தாலும், ஈனமின்றி இருந்தவம் செய்தாலும் ஊனையுண்டல் ஒழிந்து வான் நோக்கி யிருந்தாலும் பட்டினியாயிருந்தாலும் அரனுக்கன்பில்லையேல் எல்லாம் பயனற்றவையே என்கிறார் அடிகள். இறைவனை மனத்துள் உணர்ந்தவர்க்குத் துறவு வேடம் தேவையற்றது என்பது அவரது கருத்து.

''கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயரமுற் றென்பயன்
நீலமா மயிலாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே'' (5:39:393)

உலக இன்பங்களை ஏற்றுக்கொள்ளாத துறவியரிடம் நகைச்சுவை உணர்வு இருக்காது. ஆனால் துறவியாகிய திருநாவுக்கரசர் மிகுந்த நகைச்சுவையுணர்வினைக் கொண்டிருந்ததை அவரது பாடல்களில் காணமுடிகிறது. சமணம் உருவாக்கிய இறுக்கமான சமூகத்திற்கு மாற்றாகப் புதியதொரு எளிமையான சமூக உளவியலை உருவாக்க முனைந்த அப்பருக்கு நகையுணர்வு துணை செய்தது. இறைவனைக் கேலி செய்து உரிமையுடன் சிரிக்கும் அடிகளைத் தேவாரத்தில் காணலாம். ''திருமணம் செய்த நாளிலும் கோவணம் மட்டும்தான் உடுத்தியிருந்தீரா?'' என இறைவனை வினவுகிறார் அவர்.

உலகியல் வாழ்க்கையைத் துன்பமாகக் கருதி, துறவு நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்துவந்த சமணசமயச் சார்பிலிருந்து மீண்டு வந்த அப்பரடிகள் அந்நிலையை மாற்ற முனைகிறார். குடும்பம் என்ற அமைப்புச் சிதறுண்டு உடையும்போது சராசரி மனிதனின் வாழ்க்கை பொருளற்றதாகிவிடும். அதனை மாற்ற வேண்டிய சமுதாயக் கடமை அப்பரடிகளுக்கு இருந்தது. எனவே குடும்பத்தை உயர்த்திப் பேசமுனைகிறார் அவர். எனவே துறவறத்தின் குறிப்பாகச் சமணத்துறவு நிலையின் குறைகளை எடுத்துக்காட்டுகின்றார். தாம் துறவியாய் வாழ்ந்திருந்த போதும் குடும்பம் எனும் நிறுவனத்தைக் கட்டிக் காக்கவே, பொய்த் துறவு நெறிகளைத் திருநாவுக்கரசர் சாடுகின்றார் எனலாம்.

திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகை

வேல். கார்த்திகேயன்

சிந்திக் கல்லூரி
சென்னை - 77

பன்னிரு திருமுறைகளில் 4,5,6 ஆகிய திருமுறைகள் நாவுக்கரசர் அருளியவை. திருமுறைப் பாடல்கள் இனிமையும், எளிமையும் கருத்தாழமும் உடையவை; பலராலும் பயிலப்பட்டுப் போற்றப் பெறுபவையாகும். குறிப்பாக ஐந்தாம் திருமுறையில் 1015 பாடல் கொண்ட 100 பதிகங்கள் அடங்கியுள்ளன. இந்நூறும் திருக்குறுந் தொகை என யாப்பமைப்பினால் போற்றப்படுகின்றன. தலங்கள் பற்றியவை 88 பதிகங்கள்; பொதுவானவை 12 பதிகங்கள்:

பொதுப் பதிகங்களான 12 பதிகங்களில் அடைமொழி பெற்றுத் 'திருக்குறுந்தொகை' எனத் தனித்துச் சுட்டிக் கூறுவதன் நோக்கத்தை ஆய்ந்துணர்த்துவதே இக்கட்டுரையாம்.

திருக்குறுந்தொகை

குறுந்தொகை, யாப்பமைப்பால் பெற்றபெயராம், குறைந்த எழுத்துக்களைப் பெற்று அமைதலின் இப்பெயர் பெற்றது. இது பாடல்தோறும் நாற்சீரடியாய் வருவது. இக்குறுந்தொகைப் பாடல்களின் முதற்சீர் தேமா என்று தொடங்கினால் ஒற்று நீக்கிப் பதினொரு எழுத்துக்கள் கொண்டிருக்கும். புளிமா என்று தொடங்கும் அடி ஒற்று நீக்கி 12 எழுத்துக்கள் கொண்டிருக்கும்.

இவ் யாப்பு பாடப்படுவதன் நோக்கம்

ஒரு தலத்திலிருந்து, பிறிதொரு தலத்திற்கு நடந்து செல்லும் போதும், உழவாரத் திருத்தொண்டு செய்யும் போதும் இவ்யாப்பு அமைப்பு எளிமையாகப் பாட ஏற்றது எனத் தெரிந்து கொள்ள முடிகிறது.

தனித் திருக்குறுந்தொகை (அற்புதத் திருப்பதிகம்)

திருநாவுக்கரசர், சமண சமயம் நீங்கி, சைவத்தை அடைந்த போது, சமணர்கள் பல்லவ மன்னன் மூலம் நீற்றறையில் தள்ளினர். அப்போது ஈசனை நினைந்து பாடியருளியதே இத்திருப்பதிகம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் *5-90 (1-10)*

இவ்வற்புதப் பதிகப் பாடல்களில் திருநாவுக்கரசர் நீற்றறையில் தாம் அனுபவித்த இறையின்பத்தை, உலகியலோடு இணைத்துச் சுவைபட அருளியுள்ளமை அறிந்து இன்புறத்தாகும்.

தனித்திருக்குறுந்தொகை (அனுபவம் கூறல்)

திருநாவுக்கரசர், திருப்பூந்துருத்தியில் தங்கியிருந்தபோது பாடியருளியது இத்திருப்பதிகம். இறைவனிடம், தன்னுடைய அடிமைத் திறத்தால்தான் அனுபவித்த நிலையைக் கூறும் பத்துப் பாடல்களே இப்பதிகம். பெருமான் பிறவியைக் கொடுத்து, பிறவியை அறுக்கின்றார். அவ்விறைவன் நமக்குப் பிறவியினைக் கருணை யினால் கொடாதபோது அவனை நாம் அப்படி அறிய இயலும். இதனைத் தான் அப்பர் பெருமான்,

என்னை யேது மறிந்திலன் எம்பிரான்
தன்னை நானுமுன் ஏது பறிந்திலேன். *(5-91-8)*

தனித்திருக் குறுந்தொகை (எண்ணல் அலங்காரம்)

இத்திருப்பதிகம், திருப்பூந்துருத்தியில் பாடப்பட்டது. இத்திருக் குறுந்தொகை, ஒன்று என்ற எண்ணில் தொடங்கிய பத்து வரை ''எண்ணல் அலங்காரமாக'' இறைவனது திருக்குணங்களை விவரித்துப் பாடுவதாகும். சான்றாக 'எட்டு' என்ற எண்ணின் சிறப்பைக் காணலாம். இறைவன் அட்டமூர்த்தியாய் நின்று தொழில் செய்பவன். எண்குணன். எம் இறைவனாயுள்ள அவ்வெட்டு மூர்த்தி என்னுள்ளத்து எட்டும் மூர்த்தியாய் ஒடுங்கியிருப்பன் என்பதனைத் தம்பாடலில் கூறுகின்றார் நாவுக்கரசர்.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை

இறைவனின் முதன்மைத் தன்மையையும், அருள்புரிந்த பெருங்கருணைத் திறத்தையும் வியந்து விளக்கமாகப் பாடியருளியதே 'ஆதிபுராணத் திருக்குறுந்தொகை'யாகும். பத்துப் பாடல்களைக் கொண்டு, இப்பதிகம் திகழ்கிறது. மேலும் சிவனை வணங்காது சிறு தெய்வங்களை வழிபடுந் தன்மையரையும் சாடுகின்றார்.

சான்றாக வேள்விகளில் அக்னி வளர்ப்பார்கள், அவ்வக்கினி சிவனின் திருமேனிகளுள் ஒன்று என்பதை உணராது வழிபாடு செய்கின்றனர் என்பதனை நாவுக்கரசர் பாடுகிறார்.

எரிபெ ருக்குவர் அவ்வெரி யீசனது
உருவ ருக்கம தாவது உணர்கிலார். *(5-100-7)*

கால பாசத் திருக்குறுந்தொகை

சிவனடியார் பக்கம் செல்லக் கூடாது என்று இயமனுக்கும் அவன் தூதுவருக்கும் ஆணையிட்டு அருளுவதே இப்பதிகப்

பாடல்களின் மையக்கருத்தாம். இறைவன் ஆணையை மீறி இயமன் செருக்கினால் கடந்து மார்க்கண்டேயனைப் பற்ற அவனைத் தன்காலால் காய்ந்தான் இறைவன். இதனை எல்லோரும் நன்கு உணருமாறு திருநாவுக்கரசர், ''கால பாசத் திருக்குறுந்தொகை'' என்று ஒரு பதிகமே அருளிச் செய்துள்ளார். ஐந்தெழுத்து ஓதுதல், நீறணிதல் முதலான செயல்புரியும் சிவனடியார்களை நெருங்கக் கூடாது என்றும், அவர்களைக் கண்டு வழிபட்டுப் போற்றிச் செல்ல வேண்டும் என்றும் பத்துப்பாடல்களில் இயமன் தூதுவர்களுக்குக் கட்டளையிடுகின்றார் திருநாவுக்கரசர்.

படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீச னடியரை.
விடைகொ ளூர்தியி னானடி யார்குழாம்
புடைபு காதுநீர் கோற்றியே போமினே. *(5-92-97)*

பாவநாசத் திருக்குறுந்தொகை

பெரும்பாலான மக்கள் பாவம் செய்வதற்கு அஞ்சுவதில்லை. அதனால் வரும் பழிக்குத்தான் அஞ்சுகின்றனர். இதனை எண்ணியே நாவுக்கரசர் முதல் பாடலில் 'பாவமும் பழியும் பற்ற வேண்டு மானால், சிவனை நினையுங்கள் என்றார். மேலும் சிவனை நினையாது செய்யும் வழிபாடுகள், சடங்குகள், தீர்த்தமாடல் முதலான செயல்கள் பயன் தராது என்று வற்புறுத்திக் கூறுவதே பாவநாசத் திருக்குறுந்தொகையாகும். இத்திருப்பதிகத்தில் பத்துப் பாடல்கள் உள.

பாவ மும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் ஆஞ்சுகந் தாடு மவன் கழல் *(5-99-7)*

மறக்கிற்பனே என முடியும் திருக்குறுந்தொகை

இப்பதிகத்தில் அமைந்த 10 பாடல்களும் 'மறக்கிற்பனே' என முடிவு பெறுவதால் இப்பெயர் பெற்றதாகும். சான்றாக ஒரு பாடல் இறைவன் சேவடிகளை ஏத்தப்பெறும் இயல்பினன்; ஆதலால் என்னை இறைவன் அறிந்ததையான் அறிந்தேன். பிறகும் அவன் சேவடியை ஏத்தப் பெற்றேன். ஆதலின் இனி ஈசனை யான் மறக்கும் வல்லமை உடையேனோ என்று பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.

ஈசன் என்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேற்றப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப்பெற் றேனினி
ஈசன் தன்னையும் யான்மறக் கிற்பனே *(5-93-4)*

தொழற் பாலதே என முடியும் திருக்குறுந்தொகை

சிவபெருமான் ஒருவனையே நாம் தொழற்பாலதே என்று இப்பதிகப் பாடல்கள் முடிவடைவதால் இப்பெயர் எய்தியது எனலாம். இப்பதிகப் பாடல்கள் பதினொன்றாகும்.

இறைவன் - உலகமாகி உள்ளவன்; நல்லவன்; வல்லவர் தொழும் கோலத்தை உடையவன்; குணமாகிய பெருங் குன்றானவன்: மூலமாக உள்ளவன்; முதல்வன் மூவிலை வடிவாகிய சூலத்தை உடையவன் ஆகிய பல பெருமைகளையுடைய பெருமானே தொழத்தக்கவன் காண்பீராக என்று பாடுகின்றார் திருநாவுக்கரசர்.

மூலத் தானை முதல்வனை மூவிலைச்
சூலத் தானைக்கண் டீர்தொழற் பாலதே. (5-94-7)

இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

திருமாலும், பிரமனும், அன்பினாலும் தொண்டினாலும் சிவபெருமானைத் தேடாமல் ஆணவத்தால் தேடினர். பின்னர் சிவபெருமான் தாமாகவே 'இங்குற்றேன்' என்று இலிங்கத்தில் தோன்றியருளினார். இத்திருப்பதிகம் சிவபெருமானை அடையும் நெறி நான்கனுள் சரியையின் இன்றியமையாச் சிறப்பினை வற்புறுத்தி எடுத்துக்கூறுவதுடன் சிவலிங்கத் தத்துவத்தையும் எடுத்துக் கூறுவதால் ''இலிங்க புராணத் திருக்குறுந்தொகை'' எனப்பெயர் பெற்றது. இப்பதிகத்தில் 11 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. சான்றாக ஒரு பாடல் வருமாறு :

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே (5-95-11)

மனத்தொகைத் திருக்குறுந்தொகை

அப்பரடிகள் தம் மனத்தின் எண்ணங்களைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது இத்திருப்பதிகம் 11 பாடல்களை உடையதாக விளங்குகிறது.

சிவனைத்தவிர, வேறு ஒன்றையும் என் மனம் எண்ணாது என்று வெளிப்படுத்துகின்றார் நாவுக்கரசர். சான்றாகப் பாடலடிகள்:

''கூத்தா நின்குரை யார்கழ லேயல
தேத்தா நாவெனக் கெந்தை பிரானீரே'' (5-96-5)

சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை

சித்தத்துள்ளே (மனம்) சிவபெருமானைச் சிந்திக்கும் திறம் கூறுவதால் 'சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை' எனப்பட்டது.

'சிந்திப்பார் மனத்தான்' என்று தொடங்குவதாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம். இப்பதிகம் 30 பாடல்களைக் கொண்டது. அ முதல் ஔ வரையுள்ள 12 உயிர் எழுத்துக்களையும், மெய் எழுத்துக்களில் க முதல் கொண்டு, ஆய்த எழுத்தும் சேர்ந்ததாகிய 14 எழுத்துக் களையும் முதல் எழுத்தாகக்கொண்டு 28 பாடல்கள் பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.

சிந்திப் பார்மனத் தான் சிவன் செஞ்சுடர்
அந்தி வான்நிறத் தான். *(5-97-1)*

உள்ளத்தொகைத் திருக்குறுந்தொகை

சிந்தையுள் சிவமாய் நின்ற உருவினைக் கண்டு கொண்டது என் உள்ளம் என்ற கருத்தே பதிகம் முழுதும் வருவதால் உள்ளத்தொகை என இப்பதிகம் பெயர் பெற்றது. இப்பதிகத்தில் பாடல்கள் தோறும் ''கண்டு கொண்டது என் உள்ளமே'' என்று ஈற்றடி பயின்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவி னைச்சிந்தை யுட்சிவ னாய்நின்ற
உருவி னைக்கண்டு கொண்டதெ னுள்ளமே *(5-98-8)*

மேற்கூறிய உள்ளம், சித்தம், மனம், ஆகிய மூன்று திருப்பதிகங் களையும் உற்று நோக்கிப் பார்த்தால் தன் மனத்து எண்ணங்களைத் தெரிவிக்க பல உத்திகளைக் கையாண்டுள்ளார் என்பதனை அறியலாம்.

மேலே கூறிய கருத்துக்களால் இனிய எளிய சொற்களால் உயர் நெறிகளை மக்கட்கு உபதேசிக்க ஐந்தாம் திருமுறையில் ''குறுந்தொகை'' என்னும் யாப்பினைப் பயன்படுத்தியுள்ளார் என்பதனை அறிய முடிகிறது.

திருநாவுக்கரசரின் பொதுமைத் தொண்டு நெறி

வே. சீதாலட்சுமி பாஞ்சாலன்

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை-8

திருநாவுக்கரசர் உயர் செம்பொருளில் நின்று உலகத்து உயிர்களுக்கெல்லாம் திருத்தொண்டு பேணி வாழ்ந்தார். அறவாழ்வையும், சமய வாழ்வையும், தனிமனித வாழ்வையும், பொதுமக்கள் வாழ்வையும் நடுநின்று இணைக்கும் வாழ்வியல் பேரறமே செம்மையில் நிற்றல். இவ்வழியில் நின்று திருநாவுக்கரசர் அமைத்துக் காட்டும் பொதுமைத் தொண்டு நெறியினை ஆராய்வது கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

தொண்டு நெறிக்கு இலக்கணமாக நிற்றல் வேறு; திருத்தொண்டு எனப்பெறும் சைவநலப் பேரருள் நெறிக்கு ஆணியென நிற்றல் வேறு. இரண்டாம் நிலைக்கு எடுத்துக்காட்டாக நின்றபெருமை திலகவதியம்மையாரால் திருநாவுக்கரசருக்குக் கிடைத்தது. திலகவதியம்மையாரால் திருநாவுக்கரசர் திருத்தொண்டு நெறிக்கு நேராகக் கொண்டு வந்து நிறுத்தப் பெற்றார்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கொண்டு
தகவெனும் வேலி இட்டுச்
செம்மையுள் நிற்ப ராயின்
சிவகதி விளையு மன்றே (4-76-2)

எனவரும் பாடல் திருநாவுக்கரசரின் திருவாக்கானது திருத்தொண்டு நெறிக்குரிய அளவுகோல் என அமைந்துள்ளது.

சிவகதியை அடைய திருத்தொண்டு நெறி எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை விளக்கும் பாடல் வருமாறு :

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்

நமச்சி வாயவே நாநவின் றேத்துவமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே

உள்ளத்தால் சிவனடியைச் சிந்தித்தலும், வாயால் திருவைந் தெழுத்தை ஓதுதலும், உடலால் திருநீற்றைக் கவசமாக்கலும் அவர் அமைத்த மும்மை நிலை வழிபாடுகள். அவ்வழிபாட்டின் நிலையைத் திருநாவுக்கரசர் தொண்டு நெறியாகக் கருதினார். இதனை,

கருவாய்க் கிடந்து உன்கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்

விளக்கும் பாடல். மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் அவனுக்கு ஆட்படுதல் வேண்டும் என்ற கொள்கையுடையர் திருநாவுக்கரசர். இக்கொள்கையைத் திருப்பாதிரிபுலியூர் பதிகம் முழுவதிலும் பாடியுள்ளார்.

கடவுள் உண்டு என்னும் கொள்கையைப் புறத்தே உள்ள சான்றுகளால் நிறுத்திக் காணமுடியும் என்ற கொள்கையைத் தவிர்த்தவர். அவனே வந்து நம்முள் தன்னைப் பதியவைத்துக் கொண்டான் என்பதை 'மனத்துள் இருக்க ஏன்றான்' என்றும் 'தோன்றாத் துணையாய் இருந்தனன்' என்றும் இறந்த காலத்தைச் சுட்டிக் காட்டுகிறார். இறைவனை அறிய உறவும், உணர்வும் தேவை என அமைத்துக் காட்டுகிறார்.

திருப்பாதிரிப்புலியூர் பதிகத்து ஒன்பதாம் பாடலில், நமக்கு அரண் தரும் திண்மைப் 'பொருள் ஒன்றே; அது நெற்றிக்கண் சுடர்ப்பொருளே' என அறுதியிட்டு உரைத்து, ஆவணக்காப்புச் செய்தார். அற இயலின் நெறி நின்றால் கடவுளை நேர் நிறுத்திக் காணமுடியும் என்ற ஆய்வுரையை நமக்களிக்கும் பதிகம் திருப்பாதிரிப்புலியூர் பதிகம்.

''உடையார் ஒருவர் தமர் நாம்'' என்பதே உறவு
''அனைத்தையும் தந்த தலைவனை எண்ணும் நன்றி நினைவே''
உணர்வு

என்று உறவை உரிமையாக நினைத்தவர். செய்ந்நன்றி உணர்வுக்குச் செயல் உருவம் அமைத்தால் கடவுள் வெளிப்பட்டு நிற்பான் என்ற அடிப்படையில்,

'கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலினை'

என வாழ்வை அமைத்துக் காட்டினார் திருநாவுக்கரசர்.

ஆண்டானும் அடிமையும் என நின்ற வகையில், நாம் நம்மை அடிமை என நிறுத்தும் நிலையில் அதுவே நமக்குப் பெருவெற்றியை

அளிக்கிறது. அதனால் 'குனிய வலமாம் அடிமை' என்றார். அடிமை என நம்மை அவனுக்கு ஆளாக்கும்போது, அவனும் அடிமை என வந்து நமக்குப்பணி செய்கிறான். அடிமை என நம்மை நிறுத்துவது குறை உடையதன்று. அடிமை என நம்மை இறைவன் முன் நிறுத்துவது சிறப்பு மிகுந்த உரிமை. நாம் அடிமை என நிற்கும் அந்த நேரத்திலேயே, இறைவன் தன்னை நமக்கு ஆளாக அமைத்துப் பணிபுரிய முற்பட்டு விடுகிறான். இதனைத் திருநாவுக்கரசர்,

''தன் கடன் அடியேனையுந் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பது''

என இறைவன் பணியையும் தன் பணியையும் இயைத்துக் காட்டி அமைத்துள்ளார்.

கழலே நினையும் கருத்தினன்
நமச்சிவாய எனும் நாமம் பயின்றேன்
சிவாயநம என்று நீறணிந்தேன்

என்ற வரிகளில் திருநீறு, திருவைந்தெழுத்து, திருத்தொண்டு என்ற மூன்றையும் தொண்டாக அமைத்துக் காட்டுகிறார். இவற்றைத் தம் வாழ்வியல் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தார்.

அறத்தின் வழியில் வாழும் அறவாழ்வினன் சமயத் தலைமைக் கடவுளைக் கேட்டுப் பெறாமலேயே, அறிஇயல் கோட்பாடுகளில் அமைத்து வாழமுடியும் என்று அமைத்துக் காட்டும் அரியமுறையை அப்பரிடத்தில் காணமுடிகிறது.

சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்

என வரும் வரிகளில் முரண்பாடில்லாத - இருமைப்பட வாழ்தல் இல்லாத வழிபாட்டு முறை காணமுடிகிறது.

அனைத்துப் பெரு வாழ்வுக்கும் அடிப்படையான அனைத்து வளங்களையும் அமைத்துக் கொடுத்தவன் இறைவன் என்பதை,

'கடலில் நஞ்சமுது உண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந்து ஊர் முனி பண்டமே'

என்றும்,

'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்'

என்றும் வரும் வரிகளில் எல்லாமே இறைவன் என்பதை உணர்த்துகிறார்.

தம் கையால் திருத்தொண்டு செய்தல் என்ற மரபு முறையை முதன் முதலாக அமைத்துக் காட்டியவர் திருநாவுக்கரசர். திலகவதியார், தம்பியார் உளராக வேண்டும் என்று கருதி, தூண்டு தவ விளக்காய் நின்று திருநாவுக்கரசரைத் தொண்டு நெறிப்படுத்தினார்.

திருநாவுக்கரசர் சைவமாம் பெருநெறி, உலகம் தழுவிய பொதுமைத் தொண்டுநெறி என்பதைத் தம் வாழ்வின் மூலம் உணர்த்தியவர் திருநாவுக்கரசர். 'திருநின்ற செம்மையே செம்மை யாகக் கொண்ட திருநாவுக்கரசர்' எனத் திருநாவலூரரால் சிறப்புச் செய்யப் பெற்றவர்.

நாவுக்கரசரும் நந்தியும்

தே. சொக்கலிங்கம்

காரைக்குடி

தேவார ஆசிரியர்கள், நந்தியம் பெருமானைப் பற்றித் தேவாரத்தில் பல்வேறு நுட்பமான செய்திகளைச் சொல்லியுள்ளனர். திருநாவுக்கரசர், திருச்செங்காட்டங்குடித் தேவாரத்தில் ''அலைகடலில் ஆலாலம் அமுது செய்த/கரியதொரு கண்டத்துச் செங்கண் ஏற்றுக் கதிர்விடுமா மணிபிறங்கு காட்சியானை'' *(பா. எண் - 840)* என்று சிவன் நஞ்சருந்தி நந்தி மேலிருக்கும் காட்சியை நாவரசர் நன்கு புனைகின்றார்.

சிவபெருமான், நந்தியம் பெருமானுடைய சிவத்தொண்டை ஏற்றுப் போற்றுவதாகத் திருநாவுக்கரசர் பாடுகிறார்.

''நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை
நாகேச் சரமிடமா நண்ணி னானை'' *(பா. எண். 333)*

இதனால் நந்தியம் பெருமான் பணி செய்தலைச் சிவபிரான் ஏற்றருள்வதாக அறிய முடிகிறது. நந்தி சிவபிரான் திருமுன்னர் எவ்வகைப் பணி செய்கின்றார் என்ற விளக்கமில்லை; ஆனால் சிவபிரான் திருமுன் நந்தியம் பெருமான் பணிசெய்வது மட்டும் விதந்து சொல்லப்பட்டுள்ளது.

பல்வேறு பெயர்கள்

சிவபெருமானுக்கு உகந்த ஊர்தி நந்தி; இதனை விடை என்றும் விடையேறு என்றும் கூறுவர். இதனை 'ரிஷபம்' என்றும் உரைப்பர். சிவபிரான் உகந்த ஊர்தி(வாகனம்) விடையேறு அன்றி வேறில்லை. திருநாவுக்கரசர் காளை வாகனத்தை 'ஏறு' என்று போற்றியுரைப்பர். நாவுக்கரசர் தேவாரத்தில் 'ஏறு' என்ற சொல்லாட்சியே மிகுதியாகக் காணப்படுகிறது. விடையேற்றைக் குறிக்க வேறு சொற்களையும் இவர் கையாளுகிறார்.

''பசு வேறுமே பரமயோகியாமே'' *(33)*

பசு வேறி *(399, 449, 787)*

பெற்றம் *(185, 765)*

விடை *(89, 95, 182, 737, 744, 808, 887)*

இடபம் *(169, 174, 769)*

ஆனேறேறி *(252, 303)*

நந்தி *(280, 333, 915)*

பல சொற்களால் திருநாவுக்கரசர் நந்தியைச் சுட்டினாலும் ஏறு, விடை என்ற இரண்டு சொற்களையே அவர் மிகுதியாக ஆளுகிறார்; ரிஷபம் என்ற சொல்லை இடபம் என்று பயன்படுத்துகிறார் நாவுக்கரசர்.

விடையேறி

ஏறு என்னும் விடையில் சிவபெருமான் ஊர்வதையே உகப்பான் என்றும் ஏற்றில் ஏறியே சிவன் எல்லா இடங்களுக்கும் செல்லுகின்றான் என்றும் விடையேறியே சிவன் காட்சி தருகின்றான் என்றும் திருநாவுக்கரசர் பாடுகின்றார்.

''ஏறேற என்றும் உகப்பாய் போற்றி'' *(48)*

''ஏறேறி யேழுலகு மேத்த நின்றார்'' *(105)*

''ஏறேறிச் செல்லும் இறைவர் போலும்'' *(218)*

''ஏறேறி யெங்குந் திரிவான் கண்டாய்'' *(388)*

''ஏறமரும் பெருமானை'' *(634)*

''ஏறூர்ந்த பெம்மானை'' *(682, 922, 923, 929)*

''ஏறேறி யிந்நெறியே போதக் கண்டேன்'' *(957)*

இவ்வாறு சிவனை ஏறூர்ந்த பெருமானாகத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் பாடுகின்றார். அந்த ஏற்றினியல்பைக் காட்டுமாறு சில அடைச் சொற்களைப் பெய்தும் இவர் பாடுகின்றார்.

விடையின் இயல்பும் நடையும்

சிவபிரான் ஏறிய விடை மிடுக்கானதும் விரைந்து நடக்கக் கூடியதுமாகும், திருநாவுக்கரசர் ''பருத்துயர்ந்த ஆனேற்றானே'' *(36)* என்பர். ஏறுபருத்ததும் உயரமானதுமாக விளங்கியது. விடையினைப் புனைந்த திருநாவுக்கரசர், காளையின் எருத்திலுள்ள மடிப்புகளைச் சுட்டிப்புனைகிறார். 'அரிப்பெருத்த வெள்ளேற்றை அடரயேறிப் போனார்' *(262)* என்பது நினைத்தற்குரியது.

வெள்ளேற்றைப்புனையும் நாவரசர், விடைக்குச் சிறப்பு அதன் நடையே என்பதை உணர்ந்தவர்; பிற காளைகளிலிருந்து இடபத்தை வேறுபடுத்திக் காட்டுவது அதன் நடையழகேயாகும். இதனால்தான் 'நடைமலிந்த விடையோடு கொடியும் தோன்றும்' என்று அப்பர் எனும் திருநாவுக்கரசர் பாடினார். ஊர்ந்து செல்வோன் விரும்பியாங்கு நடக்கவல்லது காளை; ''வேண்டு நடை நடக்கும்

வெள்ளேறேறி வெண்காடு மேவிய விகிர்தனாரே'' (350). சிவன் விழைந்தாங்கு நடக்கின்றது வெள்ளேறு. சிவன் ஊர்திகள் அனைத்திலும் விரைந்து செல்லக்கூடியது விடையேயாம். இக்கருத்தை 'உச்சம் போதேறேறீ யென்றேன் நானே' (378) என்று அப்பர் உரைப்பர்.

தூவெள்ளேறும் கண்ணும்

சிவபிரானுக்கு விருப்பமானது காராம் பசுவின் பாலும் வெள்ளைவிடையும் தாம். சிவன் ஊர்தியாகப் பெற்றது வெள்ளை நிறக் காளையையேயாகும். திருநாவுக்கரசர்,

''தூவெள் ளேற்றான் றன்னை'' (197)

என்பர். வெண்மையிலும் தூயவெண்மை என்றுணர்த்து முகமாகத் 'தூ' என்ற அடையை அப்பர் அளித்தார். ''வெள்ளேறேறி'' (449), ''வெள்ளேற்றின் மேலானை'' (692), ''வெள்ளேற்றான்றன்றமர்'' (916), ''வெள்ளேறுண்டோ'' (951) என்று வருவன கொண்டு, திருநாவுக்கரசர் சிவபெருமான் ஊர்ந்துவரும் விடை வெண்மை என்று காட்டுதல் புலனாம்.

சிவனேறும் விடையின் கண்களைக் கொண்டு அதனியல்பை அப்பர் உரைக்கின்றார். விடையின் கண்ணைப் 'பைங்கண் ணேற்றார்' (97) என்பர் அப்பர். திருப்பந்தணை நல்லூர்த் தேவாரத்தில், அப்பர் சிவபெருமானைப் பிச்சாடனராகப் புனைகிறார். அப்போது சிவன் விடையேறிய கோலமாக இருந்ததாகவே சொல்லுகிறார். பாடலின் ஈற்றடியிலுள்ள நான்காம் ஐந்தாம் சீர்களில் இத்தொடர் அமைக்கப்பட்டுள்ளது (95 முதல் 106 முடிய). காளையைச் 'செங்கண்மால் விடையொன்றேறும்' (658) என்பர் அப்பர்.

இளம்விடையும் நரை விடையும்

விடையென்று சொல்லும் அப்பர், அதன் அகவை தோன்றுமாறு சில பாடல்களில் சொற்களைப் பயன்படுத்திக் கூறுகிறார். திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்தைப் பாடுகின்ற அப்பர் பெருமான்,

''ஆனால்இளங் கடுவிடையொன்(று) ஏறிஅண்டத்(து)
அப்பாலும் பலிதிரியும் அழகர் போலும்'' (744)

என்று புனைகின்றார். 'ஆன் நல் விடை' என்றும் 'இளம் விடை' என்றும் இவர் ஆவின் இயல்பை நவில்கிறார். இளமையான காளை என்றுரைத்த அப்பர் அவ்விடை 'நரைவிடை' என்று பலபாடல் களில் சுட்டுகிறார். ''நரையேற்ற விடையேறி நாகம் பூண்ட நம்பியையே'' (405); ''நரையார்ந்த விடையேறி நீறுபூசி'' (451) ''நரைவிடையொன்றூர்ழியானை'' (674), நரைவிடை நற்கொடி

யுடைய நாதன் தன்னை'' (737) ''நரைவிடை யொன்றேறு வானை'' (887) ''நரையேற்றைப் பழையாறே பாயஏறி'' (261) என்று வருவன விடை, நரைவிடை என்பதைக் காட்டும் குறிப்புகள். நரையை முதுமைக்கு அடையாளமாகக் கொள்ளாது, வெள்ளை நிறத்தைக் காட்டுவது என்று கொள்வது சிறப்பாகும். 'நரை', பெருமை என்றும் பொருள்தரும். 'கருநரை நல்லேறு' என்பது குறுந்தொகை (317 : 1). எனவே பெருமையுடைய ஏறு என்றும் கொள்வது பொருந்தும்.

போர்விடையின் பாகன்

சிவபிரான் விருப்பத்துடன் ஊர்ந்த விடையின் குணத்தைத் திருநாவுக்கரசர் அழகுறப் புலப்படுத்தியிருக்கிறார். ''வல்லெரு தொன்றேறும் மறைவல்லானை'' (227), ''வல்லேறொன்றது வேறவல்லான்'' (846) என்பனவற்றால் சிவனுகந்த ஏறுவலியது என்பது பெறப்பட்டது. இன்னொரு தேவாரத்தில் 'கடுமுரணே றூர்ந்தான் கழற்சேவடி' (55) என்பர். விடையைச் சொல்லும் அப்பர், 'போரேற்றினார்' (99) என்றும் 'போர் விடையின் பாகன்' (754) என்றும் உரைப்பர். விடையைத் திருமாலின் வடிவமாகவும் அறத்தின் உருவமாகவும் கொள்ளுவர். 'செருவளருஞ் செங்கண்மால் ஏற்றினான் காண்' (309) என்பர் அப்பர். அறக்கடவுள் உருத்திரிந்து தாங்கும் இடபம் 'அற விடை'யாகும்; திரிபுரம் எரித்த காலத்தில் திருமால் உருத்திரிந்து தாங்கிய இடபம் 'போர் விடை' எனப் பெறும். திரிபுரம் எரிக்கச் சிவன் தேரில் சென்றதாகக் கூறுவது மரபு; ஆனால் திருநாவுக்கரசர் தேவாரத்தில் வரும் 'போர் விடை' என்ற தொடருக்குந் திரிபுரம் எரிக்கச் சிவன் சென்ற விடை என்று பொருள் கொள்ளுவர் அறிஞர். வேறுசில தேவாரங்களிலும் ''போரார்ந்த மால்விடை யொன்றூர் வான் கண்டாய்'' (808) என்றும் ''போரரவ மால்விடை யொன்றூர் தியனை'' (841) என்றும் விடையைப் போருடன் தொடர்புப்படுத்தி அப்பர் பாடுகிறார்.

முழக்கமிடுமோசை

ஏறு, இடிபோல முழக்கமிடுகிறது. ''இடியார் கடுமுழக்கே றூர்ந்தான் கண்டாய்'' (726) என்பது இதனைக்காட்டும். காளை கனைத்து ஒலி எழுப்பிக் கொண்டு வருதலைக் '' கனைத்துவரும் எருதேறுங் காளகண்டா' (623) என்றுரைத்தார். விடையின் தலைமையையும் தனிமையையும் உணர்த்த 'பட்டி வெள்ளேறு' (355) என்று வரும் பகுதி சான்றாகும். தொழுவத்தில் ஏறுகள் இருந்தலைக் கருதிக் காளையைப் 'பட்டி எருது' என்றார்.

விடையில் உலாவரும் பெருமான்

விடையை ஊர்தியாகக் கொண்ட சிவபெருமான் விடையிலேறி ஏழுலகும் திரிகின்றார். ''ஏறேறி யேழுலகும் உழிதர் வானே' (34).

இவ்வாறு திரிகின்ற சிவனை ஏழுலகும் ஏத்தி வாழ்த்துகின்றது (105). ''விடையேறி வேண்டுலகத் திருப்பார் தாமே'' (369) என்றும் ''ஏறேறி எங்கும் திரிவான் கண்டாய்'' (388) என்றும் சிவன் விடையூர்ந்து வருதல் கூறப்படுகின்றது. விடையையே ஊர்தியாகக் கொண்டு சிவன் உலகமெலாம் திரிகின்றான். ''பாரூர் விடையொன்று டையார் போலும்'' (882) என்றும் ''கடியநடை விடையொன்றேறி ஊர் பலவுந்திரிவானை'' (902) என்றும் வருவன அறியத்தக்கன.

பலிபெற இடபம் ஏறித்திரிதல்

திருநீறுபூசி விடையில் ஏறித் தினந்தோறும் சிவபெருமான் பலி பெறுகின்றார். ''அம்பொற்றோள் மேல் நீறு தடவந்து இடபமேறி நித்தம் பலி கொள்வர்'' (169), 'பசுவேறிப் பலிதிரியும் பண்பன் கண்டாய்'' (388), 'பசுவேறியூரூரன் பலிகொள்வானே'' (477), 'விடையேறிக் கடைதோறும் பலிகொள்வார்'' (790) என்பன பலிபெறுதற்குக் கடைதோறும் சிவன் சென்று வருகின்றான் என்பதைக் காட்டுகின்றன. நெடுவீதியிலும் சிவன் விடைமேலேறி வந்தான் என்று ''மால் விடை மேல் நெடுவீதி போதக் கொண்டார்'' (945) என்பர் அப்பர்.

யானை குதிரை தேரிருக்க இடபம் ஏன்?

சிவபிரான் ஏறிவருகின்ற ஊர்தி, இடபமே. இடபம் விலங்குகளில் மிகமிக மென்மையானதும் நன்மையானதுமாகும். செம்மேனிச் சிவபெருமான் அயிராவணம் என்ற யானையின்மீது ஏறி அமரர் நாடு ஆளாது ஆனேறு ஏறி ஆரூர் ஆண்ட(252)மை குறித்து மகிழ்ந்தார், அப்பர் உயர்வான ஊர்திகள் இருந்தும் சிவபெருமான், விடையை உகந்த நிலைகண்டு நாவரசர் மனம் வருந்துகின்றார். சிறந்த ஊர்திகளான தேர்புரவியானை ஆகியன இருந்தன; அவற்றை விடுத்துவிடையை வாகனமாகத் திருவாமத்தூர்ப் பெருமான் அமைத்துக் கொண்டமை கண்டு அப்பர் மனம் தாங்காது பொங்குகிறார்.

''உருளுடைய தேர்புரவியோடும் யானை
ஒன்றாலும் குறைவில்லை ஊர்தி வெள்ளே(று)
இருளுடைய கண்டத்தர்...'' (91)

என்பது அப்பரின் ஏக்கம். ''ஒன்றாலும் குறைவில்லை ஊர்தி வெள்ளே றொற்றியூர் உம்மூரே உணரக்கூறிர்'' (94) என்றும் இவர் பாடுகிறார். விடையை ஊர்தியாகச் சிவன் கொண்டமை கண்டு அப்பர் வருந்துவது போலப் பெருமைப்படுத்துகிறார். திருநாவுக்கரசர், நந்தியம் பெருமானைப்பற்றிப் பல்வேறு கருத்துகளைச் சொல்லு கிறார்; அவை தனியே தொகுத்தராய்தற்குரியன.

அட்ட வீரச்செயலில் தொன்மம் (திருவாசகம்)

ஜெ. ஜெயவாணிஸ்ரீ

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

அந்தகாசுரனைச் சங்கரித்தது

அந்தகன் யது வம்சத்துச் சாத்வதன் குமரர்களில் ஒருவன். இவனுக்கு பஜமாநன், குகுரன், கம்பளபர்ஷன், சுசி முதலியோர் புத்திரர். அந்தகன் 'அழிப்போன், எமன்' என (தமிழ்பேரகராதி, p.76) கூறுகிறது. சிவபெருமானின் அருளைப்பெற நீரும், மலரும், தீபமும், தூபமும் நிறைந்திருந்த மலையகத்தே புக்குத் தீது செயவந்து அணைந்தவன். இந்த அசுரனைத் தேவர்கள் போற்ற மூவிலைச் சூலாயுதத்தால் குத்தி நடனமாடினார். இந்நிகழ்வைத் திருவாசகத்தில்,

''அங்கி, அருக்கன், இராவணன், அந்தகன்
கூற்றன்.. தம் பரிசழியப் பொங்கிய சீர்பாடி
நாம் பூவல்லி கொய்யாமோ (13-15)
அயனை, அனங்கனை, அந்தகனை, சந்திரனை
வயனங்கள் மாயா வடுச் செய்தான்'' (12-4)

என இருவரி விருப்பாவால் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

காமனை எரித்தது

காமன்-காதல் கடவுள். திருமாலின் மகனாகக் கூறுவதால் மால்மகன் என்றும், அழகன் என்பதால் மதனன், காமன் என்றும், மீன்கொடி உடையவனாதலால் சுறவக்கொடியோன் என்றும், மலரைக் கொண்டு கரும்பை வில்லாகக் கொண்டதால் கரும்புவில்லி எனவும் பெயர்களாக அழைக்கப்படுகிறான். சிவபெருமான் பார்வதியை அணைக்க விண்ணோர்களால் சிவனிடம் அனுப்பப்பட்டவன். சிவபிரான் மோன நிலையில் இருந்தபொழுது தூரத்திலிருந்து அவர் மீது அம்பு எய்தான். சிவபிரான் கோபங்கொண்டு நெற்றிக் கண்ணை விழிக்க அக்கண்ணில் இருந்து எழுந்த நெருப்பால் பொடியாகி உருக்குலைந்தான். இதைக்கண்ட இரதி அஞ்சி இறைவனை வேண்ட, அவளுக்காக இரங்கி அன்புகூர்ந்து அருளினார். இந்நிகழ்வு வாசகத்தில்,

''அயனை, அனங்கனை... வயனங்கள் மாயா வடுச் செய்தான்
(12-4)

காமன் உடல் உயிர்காலன்.. தூய்மைகள்
செய்தவா தோணோக்கன் ஆடாமோ (15-11)

தக்கநற் காமன் தனதுடல் தழல்எழ விழித்த
செங்கண் நாயகனே'' (29-3)

என மாணிக்கவாசகர் அருளி பாடியுள்ளார்.

காலனை அட்டது

காலன், கூற்றம், கூற்றம், கூற்று, கூற்றுவன் ஆகிய சொற்கள் ஒரு பொருள் குறித்த பல சொற்களாகிய எமனைக் குறிப்பன. மார்க்கண்டேயன் 16 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழக் கூடியவன். இவன் நாளும் சிவபெருமானை நினைந்து வழிப்பட்டுத் திண்ணிய சிவப்பற்று உடையவனாய் இருந்தான். காலன் உரிய காலத்தே வந்தபோது, மார்க்கண்டேயன்தான் வழிபட்டு வந்த சிவலிங்கத்தை இறுகத் தழுவினான். இறைவன் மார்க்கண்டேயனின் பூசைக்கு இரங்கிக் காலன் மார்பில் இதயத்தே உதைத்தார். ''என் அடியான் உயிரை வல்வேல்'' என்று உதைத்தார். ஒரே உதையில் காலன் உருண்டு வீழ்ந்தான்; அலறினான்; இறைவன் திருவடி சிறிது பட்டதும் காலன் உயிர்போயிற்று. காலனைச் சிவபிரான் இங்ஙனம் உதைத்த நிகழ்வு திருவாசகத்தில்,

''காமன் உடல், உயிர்காலன்... தூய்மைகள்
செய்தவா தோணோக்கம் ஆடாமோ (15-11)

காலன் ஆருயிர் கொண்ட பூங்கழலாய் (23-9)

காலனைக் காலால் உதைத்தல் பாடி நாதற்குச்
சுண்ணம் இடித்தும் நாமே (9-18)

காலால் காலனைக் காய்த்த கடுந்தழற் பிழம்பன்ன
மேனிச் செய்யனே'' (29-7)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சலந்தரனைத் தடித்தது

தவத்தில் சிறந்தவன். கருவமிக்கவன். தன்வலிமைக்கு எதிர் யாரும் இல்லை என எண்ணுபவன். மண்ணுலகையும், விண்ணுலகையும் நலிந்தவன். நெருப்பை உமிழும் சக்கரப் படையால் சிவபிரான் இவன் உடலத்தைப் பிளந்தார். தலை அறுந்துருளச் செய்தார். இதனை மாணிக்கவாசகர்,

சலமுடைய சலந்தரன் தன்உடல் நல்லாழி நலமுடைய
நாரணற்(கு) அன்றருளிய வாறென்னேடீ (12-18)

எனக் கூறியுள்ளார்.

தக்கன் வேள்வியைத் தகர்த்தது

தக்கன் சிவபிரானுக்கு மாமன். தக்கன் வேள்வி நடத்தினான். வேள்வியில் உமையவள் கலந்து கொள்ள வந்தபோது, அவளை இகழ்ந்தான் தக்கன். அதனால் சிவபிரான் உமையின் பொருட்டுத் தக்கன் யாகத்தை'' ஊமை கண்ட கனவைப்போலக் கோலாகல மாக்கிச் சிதற அடித்து அழித்தார். விதிர்விதிர்த்த அத்தக்கன் தலையை அறுத்து முத்தீயிலிட்டார். சந்திரன், இந்திரன், சூரியன், எச்சன், அக்கினி, இமையோர், அமரர்கள், நாமகள், பிரமன் இவர் களையும் விதிவழியே தண்டித்தார். இங்ஙனம் தண்டனைப்புரிந்து தக்கனுக்கும், ஏனையோர்க்கும் அவரவர் பாபத்தை ஒழித்துப்பின் அருள் புரிந்தார். இறைவன் இவ்வண்ணன் வேள்வியை அழித்ததையும் அருள் புரிந்ததையும் பாடும் போது, அழித்தல் நிகழ்வாக,

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே புண்பட்டவர் *(13-4)*

பின் அருள் பாலித்த நிகழ்வாக,

> காமனுடலுயிர் காலன் பற்காய், கதிரோன், நாமகள்,
> நாசி, சிரம், பிரமன், கரம் எரியைச் சோமன் கலை,
> தலை தக்கனையும், எச்சனையும், தூய்மைகள்
> செய்தவா தோணோக்கம் ஆடாமோ *(15-11)*
>
> தக்கனையும், எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
> தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தது தான் என்னேடி
> தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தங்
> கெச்சனுக்கு மிகைத்தலை மற்றருளினன் காண்சாழலோ
> *(12-5)*

என மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

திரிபுரத்தை எரித்தது

தாரகாசுரனுக்கு வித்யுந்மாவி, தாரகாட்சன், கமலாட்சன் என மூன்று ஆண்மக்கள் இருந்தனர். இம்மூவரும் மிகுந்த தவம் செய்து, மயன் என்பவனால் மேலுலகம், பூவுலகம், கீழுலகம் என்ற இம்மூன்றினிடத்திலும் பசும்பொன், வெண்பொன், கரும்பொன் ஆகியவற்றால் அரண் வகுக்கப்பட்டு, வான்வழியாகப் பறக்கத்தக்க மூன்று புரங்களைப் (ஊர்களை) பெற்றுத் தாம் நினைத்த இடங் களுக்குச் சென்று தேவர்களையும், முனிவர்களையும் துன்பப் படுத்தினான். அவர்களும் சிவனைவேண்ட, சிவன், பூமியைத் தேவராகவும், திங்கள், ஞாயிறு இரண்டையும் தேர் சக்கரங் களாகவும், நான்மறையைக் குதிரைகளாகவும், நான்முகனைத் தேரோட்டியாகவும், மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், திருமலை வாயுவாகிய சிறகமைத்து, அக்கினியை முனையாக உடைய அம்பாகவும், பிற அமரர்களைப் போர்

கருவிகளாகவும் அமைத்துக் கொண்டு போர் செய்யப் புறப்பட்டார். அந்நிலையில் அமரர்கள் தத்தம் வல்லமையை நினைத்துச் செருக்குக் கொண்டனர். அதனை உணர்ந்த சிவபெருமான், அவர்களது உதவியை ஏற்காமல், தானே புன்சிரிப்புச் செய்து, அரக்கர் அனைவரையும் முப்புரங்களோடு எரித்தார். இறைவன் விடையமர் கோலத்தராய் மாது ஒரு பாகராய் நின்று திரிபுரங்களை எரித்ததை,

''தெருளும், மும்மதில் நொடிவரை இழிதரச் சினப்பதத்
தொடு செந்தீ அருளும் மெய்ந்நெறி (26-10)

என மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார்.

பிரமன் சிரத்தை அறுத்தது

பிரமனும், திருமாலும் மேருமலையிலிருக்கும் பொழுது முனிவர்கள் சிலர் மும்மூர்த்திகளுக்கும் முதன்மையான வரும், அநாதியாயுள்ளவரும், உயிருக்குயிராய் உள்ளவருமான கடவுள் யார்? என்று வினவினர். இருவரும் தானே பரம்பொருள் என்று கூறிப் போர் செய்ய, சிவன் சோதிவடிவாய்த் தோன்றி அருளினார். அதையுணர்ந்த திருமால் அகந்தை நீக்கிச் சிவனை வணங்கினார். பிரமன் வணங்காது இகழ்ந்தார். சிவன் வயிரவக் கடவுளை உண்டாக்கி பிரமனுடைய உச்சித் தலையைக்கிள்ளி ஏந்தச்செய்தார். இந்நிகழ்வு திருவாசகத்தில்,

''அயன் தலை கொண்டு செண்டாடல் பாடி... (9-18)
அயனை அனங்கனை ... வயனங்கள் மாயாவடுச் செய்தான் (12-4)

என குறிப்பிடப்பட்டுள்ளது.

யானையை அட்டதும், அதன் தோலை உரித்து, போர்த்ததும்

யானையை அடற்கரி, அத்தி, கயம், கரி, கரிக்குன்று, மா, வியன்மா, வெங்கரி, வேழம் ஆகிய சொற்கள் ஒருபொருள் குறித்த பல சொல்களாகிய யானையைக் குறிப்பனவாகும். கயாசுரன், என்பவன் யானை வடிவம் கொண்டு மேருமலையில் நான்முகனைத் தவஞ் செய்து நீண்ட வாழ்நாளும், வலிமையும் பெற்றவன். எண்தினை யினரும் அஞ்ச, கடிதாக, வெஞ்சினத்துடன் யானைவடிவில் கயாசுரன் வந்தான். இதனைக்கண்டு உமாதேவி அஞ்ச, சிவன் உக்கிர வடிவ மெடுத்து அவனைத் திருவடியால் மிதித்துத் திருக்கரங்களால் அவன் தோலை உரித்துப் போர்வையாகப் போர்த்தியதைக் கண்டும் அஞ்சினாள். சிவன், உமையின் அச்சத்தை நீக்க விளையாடி நடனமாடினார். இது,

அத்தி உரித்தது போர்த்தருளும் பெருந்துறையான் (13-19)

கடந்தாய் தடந்தாள அடற்கரியே (6-31)

கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி (9-18)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவு

அந்தகாசுரனை அழித்தருளியதில், மனிதனிடம் குடிக்கொண்டிருக்கும் அசுரத் தன்மையினை அழிக்க விரும்பிய மக்களின் மனநிலையை எடுத்துக் காட்டுகிறது. கயாசூரன், அந்தகாசுரன் போன்றோர் நல்லவை கேட்க தீயவை அழியும் என்ற நோக்கில் தெய்வீகக் குணங்களை ஏற்படுத்த சிவன் அசுர குணங்களை அழிக்கும் படிமமாக இத்தொன்மம் அமைந்துள்ளது.

காமனை எரித்தலில், எவராலும் வெல்ல இயலாத காமனை, சிவன் ஞானமும், வீடும் பெற விரும்புவோர் ஐம்பொறிகளையும் அழித்தொழிக்க புலனடக்கம் உடையராதல் என்ற படிமமாக இத்தொன்மம் அமைந்துள்ளது.

மரணபயம் மக்கள் அனைவருக்கும் உண்டு. வயது ஏற அழகும் இளமையும் கெட்டு மூப்புநிலை வந்தடையும். மனம் தளராமல் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகியமுச் செயல்களையும் நடத்தும் சிவனை இடைவிடாது வணங்கினால் மரணபயம் நீங்கி நீண்ட காலம் வாழலாம் என்பதைக் காலன் உதைத்த தொன்மத்தில் விளக்குகிறது.

சலந்திரனைத் தடித்ததில், சலந்திரன் சிவனின் மறுவடிவம் சினத்தை ஆற்றிக்கொள்ள வேண்டுமேயன்றி அழித்தல் ஆகாது என்ற உயர்ந்த பண்பினை இத்தொன்மமானது வலியுறுத்துகிறது.

தக்கன் வேள்வி தகர்த்திலும், பிரமன் தலையை அறுத்த திரிபு மெரித்த இம்மூன்று தொன்மத்திலும், சிவனை, நிந்தனை செய்தனர். இதனால் வைரவக்கடவுளையும், வீரபத்திரரையும் அனுப்பினார். சிவன் பிறருக்குத் தண்டனை கொடுக்கும்போது தானே நேரடியாகச் செல்லாமல் மற்றொருவரை அனுப்பி தண்டனையை நிறைவேற்றுகிறார். பிறருக்கு அருள்செய்ய தானே நேரடியாகச் செல்கிறார். இத்தொன்மத்தில் பிறரைப் பழித்தல் கூடாது என வலியுறுத்துகிறது. தவறு உணரும் சூழ்நிலை சிவனால் உருவாக்கப்பட்டு, தவறு செய்வோருக்கு தண்டனை உண்டு. அத்தண்டனையும் தவறு மீண்டும் செய்யாமல் இருப்பதற்கு ஒரு வழிகாட்டியாய் இருக்கவேண்டுமென இந்த அட்ட வீரச் செயல்களால் மாணிக்கவாசகர் உயரிய சமூக மேம்பாட்டு வழிமுறையாக வழிகாட்டி திருவாசகத்தில் வலியுறுத்திக் காட்டுகிறார்.

மாணிக்கவாசகரின் திருச்சதகத்தில் தற்சிறுமைக் கோட்பாடு

ஏ. அமுதா

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

திருவாசக திருச்சதகத்தில் அமைந்துள்ள பாடல்களில் மாணிக்கவாசகர் எந்தெந்த சொற்களைப் பயன்படுத்தித் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறார் என்பதைச் 'தற்சிறுமை கோட்பாடு' வாயிலாக ஆராயப்படுகிறது.

திருச்சதகம்-விளக்கம்

தெய்வத் தன்மை வாய்ந்த நூறு திருப்பாடல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதால் (திருச்சதகம்) என்னும் பெயர்த்தாயிற்று என்பர்.

'திரு' என்பது அழகு ஆகும். சதகம் என்பது சதம் ஆகும். சதம் என்ற வடசொல்லுக்கு நூறு என்ற பொருளாகும். சதகம் என்னும் வடசொல்க' என்னும் இடைச் சொல்லைப் பெற்றுச் சதகம் என வழங்கியது என்பர்.

தமிழில் பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை, நூற்றைம்பது எனப்பாடல் எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டு பெயரிடும் முறையைப் பின்பற்றி மாணிக்கவாசகர் தாம் பாடிய ஒரு பதிகத்திற்குச் 'சதகம்' எனப் பெயரிட்டுள்ளார். இதில் சிவபெருமானின் அருள் திறத்தை விளக்கியுரைப்பதால் திரு என்றும் அடைமொழி பெற்று, திருச்சதகம் என்று வழங்கலாயிற்று.

திருச்சதக அமைப்பு

1. மெய்யுணர்தல்
2. அறிவுறுத்தல்
3. சுட்டறுத்தல்
4. ஆத்துமசுத்தி
5. கைம்மாறு கொடுத்தல்
6. அனுபோக சுத்தி
7. காருண்யத் திரங்கள்
8. ஆனந்தத் தழுந்தல்
9. ஆனந்த பரவசம்
10. ஆனந்தாதீதம்

என்ற பத்துத் தலைப்புகளை உடையதாய் ஒவ்வொரு தலைப்புக்கும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டதாய் அமைந்துள்ளது. பத்து யாப்பு விகற்பங்களைப் பெற்றுள்ளது.

திருச்சதக இலக்கணம்

இச்சதகத்தில் இறைவன் மாட்டுள்ள அன்பும் உலகளிடத்திலுள்ள பற்றின்மையும் மிகுந்தன. அந்நிலைவில் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாட்டுக்களே திருச்சதகம் எனப்பெறும்.

கொன்றை மரநிழலில் வாதவூரடிகள் தீப்பிழம்புக் காட்சியினை உணர்ந்து பொய்கைக்கரை அடைந்து இறைவனையும், அடியார்களையும் காணாது வருந்திப்பாடுவது திருச்சதகம் ஆகும் எனத் திருவாதவூரடிகள் புராணம் கூறுவதாக ந.சுப்புரெட்டியார் கூறுகின்றார். இதன் மூலம் பிரிவாற்றாமை, தாங்காமல் வருந்திய சூழலில் இத்திருச்சதகம் என்ற தெய்வப்பனுவல் தோன்றும் என்பதை உணரலாம். திருவாசக உண்மை என்ற இருபத்திநான்கு செய்யுட்கள் சுந்தரலிங்கமுனிவர் இயற்றிய திருப்பெருந்துறை புராணத்தில் காணப்படுகிறது. அதில் திருச்சதக உண்மை ''சத்தியநா னந்தமுதே சார்மோகன் சதகமாம்'' என்று கூறப்படுகிறது.

தற்சிறுமைக் கோட்பாடு-வரையறை

தற்சிறுமை என்னும் சொல் தன்னைச் சிறுமைபடுத்திக் கொள்ளல் என்று பொருள்படும். இறைவனோடு இரண்டற கலப்பதற்குச் சரணாகதி தத்துவமே சிறந்தது என்று அருளாளர்கள் குறிப்பிடுவர். இச்சரணாகதி தத்துவத்தின் பிரதிபலிப்பே தற்சிறுமை. இத்தற்சிறுமை கோட்பாட்டைப் பக்தி இலக்கிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் அனைவரும் பின்பற்றித் தம் பக்தி பாடல்களைப் பாடியுள்ளனர்.

திருச்சதகத்தில் தற்சிறுமைக் கோட்பாடு

மாணிக்கவாசகர் தம்முடைய திருச்சதகப் பகுதியில் பலவிதமாகத் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார். அஃறிணை உயிர்களோடு தன்னை ஒப்பிட்டுக் கொள்ளுகின்ற வகையிலும், மனிதப்பிறவி எடுத்த தன்னுடைய இயலாமையைச் சொல்லித் தாழ்த்திக் கொள்ளுகின்ற வகையிலும், மனிதப்பிறவி எடுத்தும் அதற்குரிய உயர்ந்த பண்புகளும், சிறந்த வாழ்க்கை நெறிமுறைகளும் இல்லாமல் இழிந்தவன் என்று தாழ்த்திக் கொள்ளுகின்ற வகையிலும், வேறுபிற வகைகளிலும் தன்னைத் தாழ்த்திக் கொண்டு இறைவனுடைய அன்பைக் காண்கிறார்.

அஃறிணை உயிர்களோடு ஒப்பிட்டுத் தாழ்த்திக் கொள்ளல்

தொல்காப்பியர் ''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே'' என்று குறிப்பிடுவார். மக்களாகப் பிறந்த அனைவரும் உயர் திணையைச் சார்ந்தவர்கள் என்பது தொல்காப்பியரின் கருத்து.

மாணிக்கவாசகர் மனிதனாகப் பிறந்தது மனிதப் பண்புகளோடு இறைப்பேற்றை அடைவதற்குரிய நெறிமுறைகளைக் கடைப் பிடிப்பவனே மனிதன். மற்றவர்கள் எல்லாம் மனித உடல் எடுத்திருந்தாலும் அவர்கள் அஃறிணை உயிர்களைப் போன்று உண்டு. உயிர்த்து, பின் மாயும் இழிந்த பிறப்புக்களே என்று மாணிக்கவாசகர் கருதுகிறார். அதனால் மெய்நெறிக்கண் இல்லாத தன்னை நாயாகவும், பேயாகவும், கல்லாகவும், மரமாகவும், புழுவாகவும், காளையாகவும், உயிரற்ற பாவையாகவும், பிணமாகவும், நினைத்துத் தாழ்த்திக் கொள்கின்றார்.

இயலாமையைச் சொல்லித் தாழ்த்திக் கொள்ளல்

திருவள்ளுவர் 'சிறை நலனும் சீரும் இலரெனினும் எனும் குறளில் அறனழிதற்கு அருமையும், பெருமையும் ஆகிய ஆற்றல் இல்லாதவர் ஆயினும் செய்கின்ற வினைக்குரிய மாந்தரை அவர் உரைகின்ற நிலத்தின் கண் சென்றடைதல் இறைவனை வணங்கு தற்குப் பெருமையும் அருமையும் உடைய அடியார்களைப் போன்று செய்கின்றவர் இல்லையெனினும் தன்னைத் தாழ்த்திக் கொள்கின்ற அளவில் இறைப்பேற்றை அடைவதற்குரிய நெறிமுறைகளை உடையவர் ஆகின்றார். அதனால் தன் இயலாமையைச் சொல்லி தாழ்த்துகின்ற வகையில் அறியவனாகவும், தவம் செய்யாத வனாகவும், வணங்காதவனாகவும், தகுதியில்லாதவனாகவும், வாழ்த்துபவனாகவும், ஆற்றல் இல்லாதவனாகவும், தனியேனாகவும், வழியற்றவனாகவும், பயனிலியாகவும் குறிப்பிட்டுத் தன்னை பதினோரு வகையாகத் தாழ்த்திக் கொள்கின்றார்.

இழிந்தவன் என்று தாழ்த்திக்கொள்ளல்

மனிதனாகப் பிறந்தவன் மனிதப் பண்புகளோடு இறைப் பேற்றை அடைதற்குரிய நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். அப்படியில்லாமல் மனிதனாகப் பிறந்து முக்தியடைய முயலாமல் மண்ணில் வாழ்வது இழிந்த பிறப்பு என்று கருதப்படும் மாணிக்க வாசகர் தன்னை முக்திக்கு முயலாத மெய்யறிவு இல்லாத இழிவுடையவன், தீவினையுடைவன், நடிப்பவன், அஞ்சாதவன், கள்வன், அறிவற்ற மூர்க்கண், பிச்சைக்காரன் இழிந்திலன், பாவி, பொய்யன், வஞ்சகன், புலையன் என்று தாழ்த்திக் கொள்கின்றார்.

பிறவகையில் தாழ்த்திக் கொள்ளல்

மாணிக்கவாசகர் சிவபெருமான் மீது கொண்டிருந்த அன்பினால் இறைவனுக்குத் தொண்டுகள் செய்ய முடியவில்லை என்று தன் இயலாமையைக் கூறுகிறார். மனிதப்பிறவியில் பிறரால் இகழப்படும் வாழ்க்கையாளர்களான பிச்சைக்காரனாகவும், அறிவாற்றானாகவும் தாழ்த்திக் கொள்வது மட்டுமின்றிப் பெருமானை நினைந்து, நினைந்து

உள்ளம் உருகாமல் மயக்கமுற்றவனாகவும், சாகக் கூடியவனாகவும் வியக்கத்தக்கவனாகவும், பாழான உடலைத் தாங்கியவானகவும், பெண்பித்தன், துன்பத்தில் வீழ்பவன், வீணன் என்று பிற வகை களிலும் அடிகள் தன்னைச் சிறுமைப்படுத்திக் கூறுகிறார். இதற்குரிய சான்றுகளை இணைப்பில் கொடுக்கப் பெற்றுள்ள அட்டவணை மூலம் அறியலாம்.

மாணிக்கவாசகரின் பாடல்கள் சிறப்புக்குரியதாக விளங்கு கின்றன. மாணிக்கவாசகரின் திருச்சதகத்தில் அதிகமான இடங்களில் தற்சிறுமைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. தற்சிறுமைச் சொற்கள் அனைத்தும் எளியவனான தனக்கு அருள், வழங்கி, காட்சி தந்ததை விளக்கும் பாடல்களாக உள்ளன. கண்ணுக்கு அருகே காட்சி தந்த இறைவனைக் கண்டும் மூர்க்கனாக உள்ளேன் என்று பிறருக்காகத் தன்னைக் கூறுவதாக இடமுண்டு. தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் புலப்படாத இறைவன் தோத்திரங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் அகப்படாத இறைவன் ஒன்றும் அறியாத சாதாரணப் பாமரனுக்கு எளிதில் காட்சி வழங்கக் கூடியவர் என்பதைப் புலப்படுத்தவே தன்னை இழித்தும் பழித்தும் மாணிக்க வாசகர் கூறிக்கொள்கிறார்.

மாணிக்கவாசகரின் தற்சிறுமைச் சொற்கள் அட்டவணை

(திருவாசகத்தின் திருச்சதகத்தில் தற்சிறுமை சொற்கள் பயின்று வந்த பாடல் எண்)

வகை	சொல்	எண்
அஃறிணை உயிர்களோடு ஒப்பிட்டு தாழ்த்திக் கொள்ளல்	நாயடியேன்	5:16
	நாயேன்	5:34, 5:4, 5:37, 5:74, 5:23
	நாயினும் இழிந்தவன்	5:39
	ஊர்நாய்	5:56
	பொல்லா நாய்	5:59
	நாணம் இல்லா நாய்	5:60
	ஆற்றலும் நாணமும் இல்லா நாய்	5:84
	பிளவுபடாத வலிய நெஞ்சுடைய நாய்	5:91
	நாயினேன்	5:26, 5:3, 5:50, 5:100

	தவிசிட்ட நாய்	5:28
	பேய்	5:23
	காளை	5:53
	யானை	5:41
	மரம்	5:21
	பாவை	5:22
	கல்	5:21
	பிணம்	5:32
	புழுகூடு	5:55, 5:2, 5:56
இயலாமையைச் சொல்லித் தாழ்த்திக் கொள்ளல்	எளியவன்	5:1
	தவம் செய்யாதவர்	5:5
	வணங்காதவன்	5:5
	தகுதியில்லாதவன்	5:13
	வாழ்த்தாதவன்	5:18
	உருகாதவன்	5:14
	மெழுகாதவன்	5:14
	ஆற்றல் இல்லாதவன்	5:34, 5:14, 5:41, 5:23, 5:46
	தனியேன்	5:27, 5:26
	வழியற்றவன்	5:25
	பயனிலி	5:93
இழிந்தவன் என்று தாழ்த்திக் கொள்ளல்	தீவினையுடையவன்	5:37
	நடிப்பவன்	5:11
	அஞ்சாதவன்	5:12
	கள்வன்	5:24
	மூர்க்கண்	5:50, 5:79
	பிச்சைக்காரன்	5:96
	புலையன்	5:93, 5:93
	பொய்யன்	5:97, 5:3, 5:66
	வஞ்சகன்	5:96
	கடைப்பட்டவன்	5:13
பிற வகையில் தாழ்த்திக் கொள்ளல்	மயக்கமுற்றவன்	5:90, 5:3
	பெண் பித்தன்	5:19, 5:57
	துன்பத்தில் வீழ்பவன்	5:20
	வீணன்	5:44, 5:58

ஒன்பதாம் திருமுறையில் புராணக் கதைகள்

ஆ. சாந்தம்மாள்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

திருவிசைப்பாப் பதிகம் 28-ம், திருப்பல்லாண்டுப் பதிகம் 1-ம், சேர்த்து 29 பதிகங்கள் ஒன்பதாம் திருமுறையில் அமைந் துள்ளன. மொத்தப் பாடல்கள் 301, இப்பாடல்களில் காணலாகும் புராணக்கதைகள் பற்றி விளக்கி உரைப்பதும், இப்புராணக் கதைகள் பிற நூல்களில் காணப் படுமாற்றை எடுத்துக்காட்டுவதும் இக் கட்டுரையின் நோக்கமாகும்.

''புராணம்'' என்பது ''பழங்கதை'' என்பது போல் புராணன் என்பவன் பழமையான இறைவன் என்றே பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

சேந்தனார் ஒன்பதாம் திருமுறையில்,

''அமரர் புராணன்'' (திருவிசை 6:2:5)

என்று குறிப்பிடுகின்றார். திருமூலர் தம் திருமந்திரத்தில்,

''புகழ் நின்றார்க்கும் புராணன் எம் ஈசன்'' (திருமந் :295)

''அமைய வகுத்தவன் புரணன்'' (திருமந் :1532)

என்று சிவனையே உலக உற்பத்திக்கு ஆதியாகப் பழமையான வனாகக் குறிப்பிடுகின்றார்.

தொன்மை - தொன்மவியல்

தமிழில் தொல் இலக்கணக்காரராகிய தொல்காப்பியர் இலக்கிய வனப்புகளில் ஒன்றாகத் தொன்மை என்ற ஒன்றைக் குறிப்பிடுகின்றார்.

''மாத்திரை.......அன்மை அழகு தொன்மை தோலே''
(தொல் பொருள் : செய் :1)

இத்தொல்காப்பிய நூற்பா குறிக்கும் தொன்மை என்பது புராணம் என்பதன் பொருள் குறித்த தமிழ்ச் சொல்லாகும். மேலும் அவர்,

''தொன்மை........உரையோடு புணர்ந்த பழமை மேற்றே''

(தொல் பொருள் : செய் :229)

என்று தொன்மைக்கு விளக்கம் தருகிறார்.

இராவணனுக்கு வாளும் நாளும் ஈந்தது

இலங்கை வேந்தனான இராவணன் குபேரனிடமிருந்து புட்ப விமானமாகிய தேரினைப் பெற்று, ஆகாயவீதி வழியே சென்று கொண்டிருந்தான். அப்போது கையிலாய மலைக்கு மேல் நேராக வரும்போது தேர் அசையாமல் நின்றுவிட்டது. உடனே இராவணன் கீழே இறங்கிப் பார்த்தான். தேர் தடைப்பட்டிருப்பதை அறிந்தான். உடனே அம்மலையை அந்த இடத்தை விட்டே எடுத்தெறிய வேண்டும் என்று எண்ணினான். அதனால் இராவணன் தமது இருபது தோள்களாலும் தூக்கி எறிய முயன்றான். அதனால் ஏற்பட்ட அதிர்வினால் உமாதேவியார் அஞ்சி நடுங்கினார். அதனை அறிந்த சிவன் தம்மை அசைக்கப் பார்த்த இராவணன் மேல் கோபம் கொண்டு சிவன் தனது கால் பெருவிரல் நுனியைச் சிறிது அழுத்தினார். அதனால் இராவணனின் கால் நைந்து குருதி கொப்பளித்தது. வலியில் துடித்துக் கதறினான் இராவணன். உடனே இராவணன் தம் கை நரம்பினை எடுத்து யாழமைத்து, ''சிவாயநம'' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி சிவனை நோக்கிச் சாமகீதம் பாடி வழிபட்டான். இராவணனின் இசையில் மயங்கிய சிவன் இராவணனுக்குக் கதறியவன் என்ற பெயரையும், நீண்ட ஆயுளையும், வாளையும் கொடுத்தருளினார் என்று புராணக்கதை கூறப்படுகிறது, இதைக் கண்டராதித்தர்,

''இலையார் கதிர் வேலிலங்கை வேந்தன் இருபது தோளும்
மலை தானெடுத்த மற்றவற்கு வாளொடு நாள் கொடுத்தான்''

(திருவிசை :20:7:1-2)

எனக் கூறியுள்ளார். இதனைச் சுந்தரர் தேவாரத்தில் (சு.தே. 55:9) பாடியுள்ளார். இப்புராணக் கதையின் வாயிலாக இறைவனை வழிபட்டால் பயனும், புறக்கணித்தால் இழப்பும் ஏற்படம் என அறிய முடிகின்றது.

உபமன்யு முனிவருக்கும் சிவன் பாற்கடல் ஈந்தது

வியாக்கிர பாத முனிவரின் மகன் உபமன்யு முனிவர். குழந்தையான உபமன்யு முனிவர் தன் தாய்மாமனாகிய வசிட்டரிடம் வளர்ந்தார். அங்கு காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்தார். பின் தன் தந்தையின் ஆசிரமத்திற்கு வந்தார் உபமன்யு முனிவர். தன் தந்தையிடம் காமதேன் பாலைக்கேட்டு அழுதார். வியக்கிரபாத முனிவர் உபமன்யு முனிவரை நோக்கி ''குழந்தாய் எம்பெருமானைக்

கருதித்தவம் புரிக'' என்று கூறினார். அதைக்கேட்ட உபமன்யு முனிவர் சிவனை நோக்கித் தவம் புரிந்தார். சிவபெருமான் முனிவரின் பேரன்பைக் கண்டு பாற்கடலைக் கூவி அழைத்து அவர்க்கு உண்ணக் கொடுத்தார். இதனைச் சேந்தனார்,

''பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்'' (திருப்பல். 29:9:1-2)

எனப் பாடியுள்ளார்.

திருமால் சக்கரம் பெற்றது

திருமாலும், ததீசி முனிவரும் போரிட்டார்கள். அப்போரில் திருமால் தன்னிடமிருந்த சக்கரத்தை இழந்தார். அதனால் சிவனிடமிருந்து சலந்தரனைக் கொன்று சக்கரத்தைப் பெற, திருமால் சிவனது திருவடிகளுக்குத் தினமும் ஆயிரம் மலர்களை வைத்து வழிபட்டார். திருமாலின் பக்தியை உலகுக்கு உணர்த்த விரும்பிய சிவன் ஒருநாள் திருமால் பூசைக்கு வைத்திருந்த மலர்களில் ஒரு மலரைக் காணாமல் போகச் செய்துவிட்டார். ஆயிரம் மலர்களால் அர்ச்சிக்க விரும்பிய திருமால் ஒரு மலர் குறைவதைக் கண்டு திருமால் தனது கண்ணை எடுத்துச் சிவனது திருவடிகளில் வைத்து வழிபட்டார். திருமாலின் இடைவிடாத பக்தியைக் கண்ட சிவன் திருமாலுக்குச் சலந்தரனைக் கொல்லப் பயன்படுத்திய சுதர்சனம் என்னும் சக்கரத்தையும், கண்ணையும் அருளினார் எனப் புராணக் கதைக் கூறப்படுகிறது. இதை,

''மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்''
(திருவிசை. :29:9:3)

என்று சேந்தனார் கூறுகின்றார். இதனை மாணிக்கவாசகர் திருவாசகத் திலும் (34:10) திருநாவுக்கரசர் தேவாரத்திலும் (4:143) கூறியுள்ளனர்.

அருச்சுனனுக்குப் பாசுபதம் அருளியது

அருச்சுனன் பாசுபதம் வேண்டிச் சிவனை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தான். அப்போது அருச்சுனனைக் கொல்லப் பன்றி வடிவுடன் மூகாசுரன் என்ற அசுரன் வந்தான். அதனை அறிந்த சிவபெருமான் மூகாசுரனைத் தொடர்ந்து வேடனாகத் தோன்றினான். அருச்சுனனுடன் விளையாட்டாகப் போர் புரிந்து அருச்சுனனது திறமையை வெளிப்படுத்திப் பாசுபதம் அருளினார் என்று கதை கூறப்படுகிறது. இதை,

''வெறியேறு பன்றிப்பின் சென்று ஒருநாள் விசயற்கு அருள்
செய்த வேந்தே'' (திருவிசை. 3:4:1-2)

என்று திருமாளிகைத் தேவர் கூறுகிறார். இதையே சேதிராயர்,

''அறவனே அன்று பன்றிப் பின் ஏகிய மறவனே எனை
வாதை செய்யேல்'' (திருவிசை 9:8:1-2)

என்று கூறுகிறார்.

''வேடனாய் விசயர் தன் வியப்பைக் காண்டான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின் கூடினார்''
(நா.தே. 6:826)

என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

திருமால் குன்றேந்தியது

முன்பொரு காலத்தில் கோகுலத்தில் உள்ள ஆயர்கள் கண்ணன்மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தனர். கண்ணன்மீது கொண்ட பற்றினால் இந்திரனுக்குச் செய்யவேண்டிய பூசையைக் கோவர்த்தன மலைக்குச் செய்தார்கள். அதனால் கோபம் கொண்ட இந்திரன் பெரிய மழை வருமாறு செய்தான். அம்மழையில் கோகுலத்தை அழிக்க முயன்றான். உடனே கண்ணன் கோகுலத்தைக் காக்க வேண்டும் என்று எண்ணினார். உடனே அம்மலையைத் தூக்கிப் பிடித்துக் கோகுலத்தைப் பாதுகாத்தான் எனக் கூறப்படுகின்றது. இதனைச் சேந்தனார்,

''குன்றேந்தி கோகனத் தயன்'' (திருவிசை. 6:10:1)

என்று கூறுகிறார். இதையே சம்பந்தர்,

''விலங்கல் ஒன்றேந்தி வன்மழை தடுத்தோறும்''
(சம்.தே. 1:861)

எனக் கூறுகிறார்.

சிவன் திருமாலை வாகனமாகப் பெற்றது

சிவன் திரிபுரத்தை அழிக்க தேவர்கள் செய்த தேரின் மீது ஏறிச்சென்றான். சிவன் ஏறியவுடனே தேரின் அச்சு முறிந்து விட்டது. அதையறிந்த திருமால் சிவன்மீது கொண்ட பற்றினால் இடப வடிவுடன் சிவனைத் தாங்கினார் என்று கூறப்படுகின்றது. இதை,

''புந்தியில் வந்த மால் விடையோன்'' (திருவிசை. 8:7:2)

திருவிசைப்பா எனக் கூறுகின்றது. இதையே மாணிக்கவாசகர்,

''தடமதில்கள் அவை மூன்றும் தழலெரிந்த அந்நாளில்,
இடபதமாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ''
(திருவா. 28:15)

என்று கூறுகின்றார்.

சிவன் புலித்தோல் உடுத்தியது

தாருகாவனத்து முனிவர்கள் சிவன்மீது பகைமை கொண்டனர். அதனால் சிவன் அந்த முனிவர்களை அழிக்க நினைத்தார். அம்முனிவர்கள் அபிசார வேள்வி புரிந்தார்கள். வேள்வி புரிந்த சிவனை அழிப்பதற்குப் புலியை அனுப்பினார்கள். சிவன் அப்புலியைக் கொன்று, அதன் தோலை உரித்து ஆடையாக அணிந்து கொண்டார் என்று கூறப்படுகின்றது. இதனை,

''அக்கணி புலித் தோல் ஆடைமேல்
ஆடப் பொன்னம் பலத்தாடும்
சொக்கனே'' (திருவிசை. 1:9:5-6)

என்று திருவிசைபா கூறுகின்றது.

கோழிவேந்தன்

செங்கோலாட்சி புரிந்த சோழர்கள் ஆண்ட ஊர் உறையூர். அவ்வூரைக் கரிகாற்சோழன் ஆண்டு வந்தான். ஒருநாள் கரிகாற் சோழன் ஏறிவந்த யானையை ஒரு கோழி கொத்தி கீழே தள்ளியது. அந்த யானை கீழே விழுந்தது. அதனால் அவ்வுறையூர் கோழியூர் என வழங்கலாயிற்று. அவ்வரசர்களைக் கோழிவேந்தன் (திருவிசை: 2:10:3) என்று கூறுவர்.

முடிவுரை

பக்தி இலக்கியங்களில் கடவுளர்களின் அருட்செயல்கள் புராணக் கதைகளாக, இடம் பெறுகின்றன. இவை கடவுட் செய்திகளைப் பரப்பி மக்களிடையே நம்பிக்கை ஊட்டுவனவாக அமைகின்றன. இவை மக்களின் நன்னடத்தையையும், வாழ்க்கையையும் பேண வழிகாட்டுவனவாக அமைகின்றன. இக்கதைகள் வெறும் கதைகளாக மட்டுமல்லாமல் இறைவன் தம்மை நம்பினோர்க்கு அருள் செய்தலையும், கொடியவரைத் தண்டிப்பது போல் செய்து, அவர்தம் தவறையுணர்ந்து வருந்தும் போது அவர்களுக்கு அருள் செய்தலையும் கூறுவனவாக அமைகின்றன. மானிட உயிரன்றி, பிற உயிர்கட்கும், பிற கடவுளர்களுக்கும் சிவனருள் பாலித்துச் சிறப்பை அறிய முடிகின்றது. இறையுணர்வால், இறைவழிபாட்டால், இறைப் பணியால் மனித மனத்தைச் செம்மையாக்க முடியும் என அறிய முடிகின்றது.

தெய்வப் பாவை

சோ. குருலட்சுமி
ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி
தூத்துக்குடி

மதுரையை ஆண்ட பாண்டியர்களுள் நின்றசீர் நெடுமாறனும் ஒருவன். அவனுடைய மனைவி மங்கையர்க்கரசியார். இவரைத் தெய்வப் பாவை என்று போற்றுகிறார் சேக்கிழார். மங்கையர்க் கரசியார் சோழர்குல மன்னனின் மகள். மங்கையர்க்கரசி, வளவர் கோன் பாவை என்று குறிப்பிடப்படுகிறார். அமைதியாக ஆனால் ஆழமாக ஆன்மீகத் தொண்டு செய்தவர் மங்கையர்க்கரசியார். மன்னன் சமண சமயத்தைச் சார்ந்தான். சைவம் தளர்ந்தது பாண்டிய நாட்டில் அதனைத் தழைத்தோங்க செய்தவர் மங்கையர்க்கரசியார்.

கணவனும் மனைவியும் கருத்தொருபித்து வாழ்வதுதான் இனிய இல்லறம். மங்கையர்க்கரசியாரின் இனிய இல்லறத்தில் குறையொன்றும் இல்லை. ஆனால் மன்னன் சைவ சமயத்தைத் துறந்து புறச்சமயமாகிய சமணத்தைச் சார்ந்து விட்டான் மங்கையர்க் கரசியாரோ சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். ''சைவ நன்மரபில் வந்த தடமயில் மென்சாயல் --- பாண்டிமாதேவியார்'' என்றார் சேக்கிழார்.

மன்னன் புறச் சமயம் சென்றது, அரும்பெறல் தமிழ்நாடு உள்ள தீங்கு என்று மங்கையர்க்கரசியார் கருதுகிறார். மன்னன் அறியாதவாறு தான் மட்டும் சைவ சமயத்தைப் பின்பற்றுகிறார். இவர்களைத் தவிர சைவத்தைப் பின்பற்றுவர்களே நாட்டில் இல்லாத நிலை ஏற்பட்டது. மன்னன் எவ்வழியோ அவ்வழியில் செல்வது தானே முடியாட்சிக் காலத்தின் மக்களின் நிலை இந்நிலைக்குப் பெரிதும் வருந்துகிறார் மங்கையர்க்கரசியார்.

> ''தென்னவன் தானும் முன்செய் தீவினைப் பயத்தினாலே
> அந்நெறிச் சார்வு தன்னை அறமென நினைத்துநிறம்
> மன்னிய சைய வாய்மை வைதீக வழக்கமாகும்
> நன்னெறி திரிந்து மாறி நவைநெறி நடந்தன்றே''

என்பதால் பாண்டிய மன்னர் பரசமயம் சார்ந்தது முன்செய் தீவினைப் பயன்தான் என்பது உணர்த்தப்படுகிறது. இத்தீவினை

தீர்வதற்கு அருள் வேண்டும் என்பது அருளாளர்களின் கருத்து. பெரிய புராணத்தில் நாவுக்கரசர் வாழ்வும் அதனை மெய்ப்பிக் கின்றது. தீவினையைத் தீர்ப்பது இவ்வினைகளுக்கு அப்பாற்பட்ட, வினைகளைக் கடந்து நின்ற அடியார்களே. மங்கையர்க்கரசியார் நான் சம்பந்தப் பெருமானின் உதவியால் மன்னனைச் சைவ சமயத்தை உணர வைத்துத் தெளிய வைக்கிறார். திருவெண்காட்டு நங்கையை 'மனையறத்தின் வேர் என்று குறிப்பிடுகிறார். இக்கூற்றும் பெரிய புராணத்தில் குறிப்பிடப்படும். எல்லாப் பெண்களுக்குமே பொருந்தும் திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைக்க ஏற்பாடு செய்தார்.

மதுரைக்கு அம்மையாரின் அழைப்பிற்கிணங்கி சம்பந்தர் வந்தார். இறைவனை ஆலயத்தில் வணங்கி மடத்தில் தங்கினார். மன்னர்க்கு இச்செய்தியினைச் சமணர்கள் தெரிவித்தனர். ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கும் தீவைத்தனர். திருஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்படும் போதே 'நாவுக்கரசர் நாளும் கோளும் சரியல்ல. இப்போது செல்ல வேண்டாமே என்றார் நம்பர் அடியார்களுக்கு நாள் கோளும் எதுவும் செய்யாது என்ற மிக உயர்வான 'கோளறு பதிகத்தைப் பாடுகிறார்'. நாவுக்கரசர் கூறியவாறு நாளும் கோளும் சரியில்லாததால் தீப்பிடித்தது. ஞானசம்பந்தர் கூறியவாறு 'ஆசறு நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு என்றபடி தீயினால் சம்பந்தருக்கும் பாதிப்பில்லை. அடியார்கள் அருள்வாக்கள் அனுபவம் முதிர்ச்சியாலும் ஆண்டவன் பால் ஆழ்ந்த நம்பிக்கையிலும் வெளிவருவனவே என்று உணரும். இவ்விரு நிகழ்ச்சிகளும் அடியார்களின் பெருமையை உணர்த்துவது நினைந்து இன்புறத்தக்கது குறிப்பிடத் தக்கது.

இவ்வேளையில் பாண்டியன் கவலையோடு இருக்கிறான். பாண்டிமாதேவி, என்ன துயரம் என்று பன்னனிடத்தில் வினவு கிறார். அதற்கு மன்னன் சம்பந்தர் சமண முனிவர்களை வாதினில் வெல்ல வந்துள்ளார். அவர்களைக் கண்ட சமண முனிவர்கள் கண்டு முட்டாளர்கள் அதனைக் கேட்டு முட்டாளேன் என்றார். சிவனடியார்கள் திருக்கோலத்தைக் கண்டாலே பாவம் என்று நினைப்பவர்கள். 'அது தான் கண்டு முட்டு' எனப்படும். சிவனடியார் வந்துள்ளார், அல்லது சிவனைப் பற்றிய செய்திகளைக் கேட்டாலே பாவம், குற்றம் எனக் கருதுபவர்கள் சமணர்கள். அதுதான் கேட்டு முட்டு எனப்படும். இதனால் கவலையடைந்த மன்னனிடம் மங்கையர்க்கு அரசியார், சைவரும், சமணரும் வாது புரிவராயின் வென்றவர் பக்கம் நாம் சேர்வோம், அதற்கு ஏன் கவலைப்பட வேண்டும் என்றார். உணர்த்த வேண்டிய நேரத்தில் உணர்த்திய மங்கையர்க்கரசியார் அறிவுத் திறன் போற்றற்குரியது. மடத்தில்

இட்ட தீயை 'பையவே சென்று பாண்டியர்க்காகவே' என்றார் சம்பந்தர். பைய என்பது மெதுவாக என்ற பொருள் தரும். பாண்டிய நாட்டுத் தமிழ்ச் சொல் தீ வேகமாகத் தாக்கிவிட்டால் மங்கையர்க்கரசியாரின் மாங்கல்யத்திற்கு மட்டும் பங்கம் வந்து விடும் அல்லவா? மன்னனைத் திருத்துவதற்கு மட்டும் என்பதால் 'பையவே சென்று' என்றார். மன்னன் நோயைச் சம்பந்தர் இறைவனே வேண்டி தீர்த்தருளினால் மந்திரமாவது என்று பதிகம் பாடி மன்னன் நோயை நகர்த்தினார். பாண்டிமாதேவியார் தன் கணவரை மட்டும் திருத்தவில்லை. ஒரு நாட்டின் மன்னனையே திருத்தினார் இதனால் பாண்டிய நாட்டில் பரசமயம் புகுந்த அனைவரையும் திருத்தியவரானார். மங்கையர்க்கரசியாரின் இம்முயற்சியால் சைவ நெறி தழைத்தோங்கியது. அத்துடன் கோளறு பதிகமும் சைவ திரு நீற்றுப் பதிகம் என்ற இரண்டு பதிகங்கள், ஆண்டவன் அருளை அள்ளிவழங்கும் பதிகங்களாக நாட்டு மக்களுக்குக் கிடைத்தன. விண்ணுக்கொரு மருந்தை வேதவிழுப் பொருளினைப் கண்ணுக்கினியானைக் காணும் பெரும் பேறும் அவனருள் பெரும் பேறும் மக்களுக்குக் கிடைத்தன.

''மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து விளக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடான்
தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர் கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுற்ற துயர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் கழல் எம்மால் போற்றலாமே''.

என்று 'தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப் பாவை' என்று பெரியபுராணம் மங்கையர்க்கரசியாரைப் போற்றுகிறது. பரம்பொருள் மட்டுமே பாடும் ஞானசம்பந்தராவர். மங்கையர்க்கரசியாரைப் பாடுவது. மங்கையர்க்கரசியாரின் மாண்பினை உணர்த்தி நிற்கிறது. மன்னன் பரசமயத்திற்குச் சென்றான் என்பது சைவ மரபில் வந்த பாண்டி நாட்டிற்குத் தீராத பழி என்று மக்கள் உணருகின்றனர். அத்தகைய மிகப் பெரிய குலப்பழியிலிருந்து பாண்டிய மன்னனைக் காப்பாற்றுகிறார். மன்னன் உள்ளக்குறையையும், உடல் குறையையும் நீக்குகிறார். கூன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் ஆகிறார். மங்கையர்க்கரசியார் தெய்வப் பாவை எனப் போற்றப்படுகிறார்.

தொண்டு வன்முறையில் வெளிப்படலாமா?

தி. சுந்தராம்பாள்

விருதுநகர்

பெரியபுராணத் 'திருக்கூட்டச் சிறப்புப்' பகுதியில் ''கைத் திருத்தொண்டு செய்கடப்பாட்டினார்'' என்று கூறியதை விளக்கும் முறையில் திருக்கோயிலில் திருவிளக்கிடும் தொண்டு செய்யும் இருவரை அறிமுகம் செய்கிறார் சேக்கிழார். அவர்கள் 1. கலிய நாயனார் 2. கணம்புல்ல நாயனார் என்போர் ஆவர். திருக்கோயிலில் திருவிளக்கிடும் தொண்டினை நித்த நியமமாக - நாட்கடமை யாகச் செய்துவரும் இவ்விரு நாயன்மார்களுடைய வாழ்க்கை அனுபவங்கள், சோதனைகள், சோதனைகளை எதிர்கொண்ட முறை, நெஞ்சுறுதி என்பன பற்றிய விளக்கமாக இக்கட்டுரை அமைகின்றது.

கலியர் : திருவிளக்கிடும் தொண்டு

திருவொற்றியூர் படம்பக்கநாதர் திருக்கோயிலின் உள்ளும் புறமும் இரவும் பகலும் ஆயிரக்கணக்கான விளக்குகளை நாள்தோறும் ஏற்றிடும் தொண்டினைச் செய்து வருகிறார். கலியனாரின் திருவிளக்கிடும் நாட்கடமையை,

> ''எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித்தாம்
> செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றியூர் அமர்ந்த
> கொல்லைமழ விடையார்தம் கோயிலின்உள் ளும்புறமும்
> அல்லுநெடும் பகலும்இடும் திருவிளக்கின் அணிவிளைத்தார்''
>
> (கலியர் - புரா. பா. 7)

என்று விளக்குகிறார் சேக்கிழார்.

வறுமையிலும் தொண்டு

கலியனார் வறுமையுற்ற போதும் இத்திருத்தொண்டில் வல்லவர் என்னும் மெய்ம்மையை உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்று திருவுளங் கொள்கிறான் சிவபெருமான். ஆகவே அவரது செல்வத்தை வளர்க்கும் எண்ணெய் வாணிகம் நின்றுவிடும்படிச் செய்கின்றான். எனவே கலியனாரின் செல்வம் அனைத்தும் கரைந்து விடுகிறது. செல்வம் மாறியும் சிந்தை மாறாத கலியனார் தாம் நாட்கடமையாகக்

கொண்டு ஒழுகும் திருவிளக்கிடும் தொண்டினுக்கு முட்டுப்பாடு நேராத வகையில் தம் குலத்தாரிடம் எண்ணெய் பெற்றுச் சென்று விற்றல்; செக்கில் எண்ணெய் ஆட்டுதல்; பக்குவத்தில் எண்ணெய் இறக்குதல்; செக்கு மாடுகளை ஓட்டுதல் என்னும் தொழில்கள் செய்து பெறும் கூலி கொண்டும்; தம் வீட்டையும் வீட்டில் உள்ள பொருள்களையும் விற்றுக் கிடைத்த பொருள் கொண்டும் எண்ணெய் வாங்கித் தொண்டினைத் தொடர்ந்து செய்து வருகிறார். அடுத்து விற்பதற்கு ஒன்றும் இல்லாத நிலையில் தம்முடைய மனைவியையே விற்கத் துணிகிறார். ஆனால் வாங்குவார் எவரும் இல்லாது போகவே, திருவிளக்கிடும் தொண்டுக்கு முட்டு நேர்வது குறித்து மிகவும் வருந்துகிறார்.

குருதியை வார்க்கும் துணிவு

திருக்கோயிலுக்கு வருகிறார். திருவிளக்கிடுவதற்கு எண்ணெய் இல்லை. திருவிளக்கிடும் தொண்டு முட்டுப்படாது நடைபெற வேண்டுமானால் தம் உயிரை விடுவதே மேலானது என்று துணிகிறார். 'இன்று விளக்கிடும் தொண்டு இல்லையேல் அடியேனும் இல்லை; வண்ணச் சுடர் விளக்கு மாளில் யான் மாள்வன்' என்னும் உறுதியுடன், அகல் விளக்குகளைப் பரப்பித் திரியிட்டு எண்ணெய்க்கு ஈடாகத் தம் குருதியையே நிரப்பிடத் துணிந்து தம் கழுத்தை அரியத் தொடங்குகிறார். அப்போது அச்செயலைத் தடுத்திட இறைவரது திருக்கை தோன்றிக் கலியனாரது கரத்தைப் பற்றித் தடுக்கிறது.

திருவிளக்கிடும் திருத்தொண்டில் தலைசிறந்து இறுதி வரை உறுதியுடன் செயல்படுகிறார் கலியனார். அவருக்கு இத்திருத்தொண்டில் உள்ள இணையற்ற உறுதிப்பாட்டினையும், சிவபெருமான் கலியனாருக்குத் தமது சிவபுரியில் இருக்குமாறு அருள் புரிந்த கருணையையும்,

''திருவிளக்குத் திரியிட்டங் ககல்பரப்பிச் செயல் நிரம்ப
ஒருவியவெண் ணெய்க்கீடா வுடலுதிரங் கொடுநிறைக்கக்
கருவியினான் மிடறரிய வக்கையைக் கண்ணுதலார்
பெருகுதிருக் கருணையுட னேர்வந்து பிடித்தருளி''

''மற்றவர்த முன்னாக மழவிடைமே லெழுந்தருளி
உற்றவூ றதுநீங்கி யொளிவிளங்க வுச்சியின்மேல்
பற்றியவஞ் சலியினராய் நின்றவரைப் பரமர்தாம்
பொற்புடைய சிவபுரியிற் பொலிந்திருக்க வருள்புரிந்தார்''

(கலியர் - புரா. 15, 16)

என்று புனைந்துரைக்கிறார் சேக்கிழார்.

கணம்புல்லர் - திருவிளக்கிடும் பணி

கணம்புல்லர் இருக்குவேளூர்த் தலைவர்; நற்குண சீலர்; மெய்பொருளாவன ஈசர் கழல் எனும் விருப்புடையவர்; பெரும் செல்வமுடையவர்; செல்வம் பெற்றதன் பயன் சிவபெருமான் திருக்கோயில் திருவிளக்கிடுதல் என உணர்ந்து திருக்கோயிலில் திருவிளக்கிடுதலைப் பெருந்தொண்டாக, நாட்கடமையாகச் செய்து வருகிறார். இச்செய்தியை,

> ''தாவாத பெருஞ்செல்வந் தலைநின்ற பயனிதுவென்
> றோவாத வொளிவிளக்குச் சிவன்கோயி லுள்ளெரித்து
> நாவாரப் பரவுவார்'' (கம்புல்லர். புரா - பா. 3)

என்று மொழிகிறார் சேக்கிழார்.

கணம்புல் விற்றுத் தொண்டு செய்தல்

கணம்புல்லர் வாழ்வில் இறைவன் திருவருளால் வறுமை வந்து எய்துகிறது. செல்வம் மறைந்த நிலையில் கணம்புல்லர் தம் வீட்டில் உள்ள பொருள்களையும் வீட்டையும் விற்றுத் திருவிளக்கிடும் தொண்டினைச் செய்து வருகிறார். மேலும் விற்பதற்குப் பொருள் இல்லாது போகவே, அயலாரிடம் சென்று இரந்து பொருள் பெறுவதற்கு அஞ்சுகிறார். ஆகவே உடல் வருந்தி கணம்புல் என்னும் ஒருவகைப் புல்லை அரிந்து கொண்டு வந்து விற்று அதன் மூலம் கிடைக்கும் பொருளுக்கு எண்ணெய் வாங்கித் திருவிளக்கிடும் தொண்டினை நெகிழ விடாது செய்கிறார்.

தலை முடியை எரித்தல்

மேலே விவரித்த வண்ணம் கணம்புல்லர் திருவிளக்கிடும் தொண்டு புரியும் நாளில், அவர் அரிந்து கொண்டு வரும் அப்புல்லும் விலைக்குப் போகவில்லை. எனவே அப்புல்லையே திரித்து விளக்கிடு கிறார். ஆனால் அப்புல் இறைவரது திருமுன்பு விளக்கு எரிக்கும் முறைப்படி உள்ள யாமம் என்னும் கால அளவில் குறையாமல் விளக்கு எரிப்பதற்குப் போதாமையினாலே, தம் நியமத்திற்கு முட்டுப்பாடு நேராதிருக்க, மெய்ம்மை அன்பினால் திருத்தொண்டு புரியும் அவர் என்பும் கரைந்து உருகும்படி அவ்விளக்கில் அடுத்த விளக்காகத் தம் தலைமுடியையே வைத்து எரிக்கிறார்.

கணம்புல்லருக்குத் திருவிளக்கிடும் தொண்டில் இருக்கும் இணையற்ற உறுதிப்பாடு, பொருள் வரும் வழி எல்லாம் ஒழிந்தாலும் தம் தொண்டினை விடாது தம் உயிரையும் தியாகம் செய்து செய்தல் இறையன்பின் உறைப்பால் அன்றி ஆகாது என்னும் மெய்ம்மைகளை,

''முன்புதிரு விளக்கெரிக்கும் முறையாமம் குறையாமம்
மென்புல்லும் விளக்கெரிக்கப் போதாமை மெய்யான
அன்புபுரி வார்அடுத்த விளக்குத் தம்திருமுடியை
என்புருகி மடுத்தெரித்தார் இருவினையின் தொடக்கெரித்தார்''

(கணம்புல்லர், பா. 7)

என்று தெளிவுறுத்துகிறார் சேக்கிழார். இப்பாடலில், கணம்புல்லர் தம் முடியையா விளக்கெரித்தார்? இல்லை. தமது இருவினைகளின் பிணிப்பையன்றோ எரித்தார்? என்னும் சேக்கிழாரின் சிந்தனை உள்ளுறுத்தப் பெற்றிருப்பதும் அறியத்தக்கது. கணம்புல்லரின் தொண்டின் உறைப்பினைக் காணும் சிவபெருமான், அவர் மீது கருணை கொண்டு அவருக்குக் காட்சி கொடுத்து என்றும் அவர் சிவலோகத்தில் இருக்கும் பேற்றினை வழங்குகிறார்.

தொண்டர்கள் வன்செயல் புரியலாமா?

திருக்கோயிலில் திருவிளக்கிடுவதற்குரிய என்ணெய் வாங்கு வதற்குப் பொருள் இல்லை என்பதற்காகக் கழுத்தை அறுத்து உதிரத்தை ஊற்றி விளக்கு எரிக்க வேண்டுமா? தலை முடியைத் திரியாக்கி எரிப்பதா? இவை வன்செயல்கள் அல்லவா? தற்கொலை முடிவா? இவ்வாறு செய்வது முறையா? பகுத்தறிவுக்கு ஏற்புடைய செயலா? என்னும் வினாக்கள் எழுவது இயல்பே இவ்வினாக்களுக்கு. ''சேக்கிழார் படைத்துக் காட்டும் அடியார்களைப் பற்றி ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். இவர்கள் கொண்ட குறிக்கோள் சிறயதோ பெரியதோ, அற்பமானதோ அது பற்றிக் கவலை இல்லை. அந்தக் குறிக்கோளை நிறைவேற்றியே ஆகவேண்டும். அந்த நிறை வேற்றத்தில் உயிர்விட வேண்டிவந்தால் அதைவிட அவர்கள் மகிழ்ச்சி அடையும் செயல் வேறு இல்லை. ஏதோ ஒரு குறிக்கோளுக்காக உயிரைவிட முடியுமா? அது செய்யக் கூடியதா? நம் போன்றவர்களுக்கு அது செய்யக்கூடியது அன்று. ஆனால் அவர்களைப் பொறுத்த மட்டில் அது செய்யக் கூடியதே ஆகும். அதனாலேயே இவர்களைச் செயற்கருஞ் செயல் செய்த பெரியார்கள் என்று கூறுகிறோம்.....'' மற்றும் ''மேலே எழும் வினாக்கள் இவர் களைப் பொறுத்த மட்டில் பயனற்றவை? ஏன்'' இவ்வினாக்கள் அவ் அடியார்கள் மனத்தில் தோன்றியிருந்தால் அவர்களும் நம் போன்ற சராசரி மனிதர்களாகி விடுவார்களே தவிர அடியார்கள் ஆவதில்லை. ஆம் பல சமயங்களில் பகுத்தறிவுக்கு விடை கொடுத்துத் தான் செயற்கருஞ் செய்கை செய்தவராக முடியும்.

பாரி பகுத்தறிவுக்கு விடை கொடுத்துவிட்டுத் தேரை முல்லைக் கொடிக்கு ஈந்தமையால் தான் மானிடரைப் பாடாத

சுந்தரமூர்த்தியால் கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை என்று புகழப் பெற்றான். கொடையில் பகுத்தறிவை இழந்து பாரி வள்ளல் ஆனது போல, தொண்டில் பகுத்தறிவை இழந்தமையால் இவர்கள் தொண்டர்களாகவும் நாயன்மார்களாகவும் ஆயினர். பாரியின் செயலை எவ்வாறு ஒப்பிடக் கூடாதோ அதே போல இத்தொண்டர்கள் செயலையும் சராசரி மனிதர் செயலுடன் ஒப்பிடக்கூடாது. இவர்கள் புறநடைகள் (Exceptions) ஆவர்கள்'' (அ.ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப. 267, 331, 332) என்னும் அறிஞர் சிந்தனைகள் பொருத்தமான விடைகளாகக் கொள்ளப்படலாம்.

நரி பரியாக்கிய திருவிளையாடல் - பாடுபொருள் - உரைப்பொருள் வேறுபாடு

சி. அயோத்தி

அரசு கலைக் கல்லூரி
உடுமலைப்பேட்டை - 642 126

நரி பரியாக்கியது, அப்பரிகளனைத்தையும் மீண்டும் நரிகளாக்கியது என்னும் இரண்டு திருவிளையாடல்களைச் சொல்வதில் படைப்பாசிரியர்களும் உரையாசிரியர்களும் வெளிப்படுத்தியுள்ள கதைப்போக்கினை அகச்சான்றுகளின் வழி இனங்காண்பதே இக்கட்டுரையின் உட்கிடையாகும்.

குடநாடு என்பது அரபு நாடா?

குடநாட்டுக் குதிரை வணிகரின் தலைவனைப் போலப் பாண்டிய மன்னன் முன் காட்சியளித்த இறைவனைப் பற்றி மாணிக்கவாசகர்,

''குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்'' (திருவா. 2:27:28)

என்ற குறிப்பினைத் தருகின்றார். 'இந்திய நாட்டிற்கு மேற்கிலுள்ள அரபு நாட்டில் உள்ள வணிகக்கூட்டத் தலைவன் போலக் குதிரைத் திரள்களுடன் வந்தருளிய இறைவனது பெருமை' (ப. 101) என இக்குறிப்பினுக்குச் சி.சு. கண்ணாயிரம் பொருளுரைக்கின்றார். இக்குறிப்பில் உள்ள குடநாடு எது? என்பதற்கு உரையாசிரியர்கள் தத்தமக்குள் பொருள் வேறுபடுகின்றனர். 'மேல் கடற்கரை நாடு' எனவும் 'திருப்பெருந்துறைக்கு மதுரை மேற்கேயுள்ளதாதலின் அதனைக் குடநாடு என்றார்' எனவும் விளக்கவுரை தருகின்றார் ச. தண்டபாணி தேசிகர் (ப. 53). இதனை மறுத்து உரை தந்த சி.சு. கண்ணாயிரம் ''மதுரை திருப்பெருந்துறை இரண்டுமே பாண்டிய நாட்டு நகரங்கள் ஆதலின் மதுரையைக் குடநகர் என்னாது குடநாடு என்றருளியமையால் இவ்வுரை ஏற்புடைத்தன்று'' (ப. 102) என்கின்றார். குடநாடு என்பது அரபு நாடுதான் என்று தாம் உரைத்துள்ள உரைக்குச் சான்றாக நம்பி திருவிளையாடற் பாடலைத் துணைக்கொள்கின்றார் சி.சு. கண்ணாயிரம்.

கைச்செண்டால் வெண்பட்டாடை வாங்கிய இராவுத்தன்

வணிகன் வேடத்தில் வந்த இறைவன் கொண்டு வந்த குதிரை களைக் கண்டு மகிழ்ந்த பாண்டிய மன்னன் ஒரு விலை மதிப்புமிக்க பட்டாடையைப் பரிசாக அளித்தான். வணிகன் அதனைத் தன் கையால் வாங்காமல் கையில் வைத்திருந்த கைச் செண்டால் (ஒருவகை ஆயுதம்) வாங்கியதாகவும், இதனைக் கண்ட மன்னவன் சினங்கொண்டு வெகுண்டெழ, 'அஃது அவன் நாட்டு வழக்கம்' என்று கூறி அமைச்சராகிய திருவாதவூரர் தடுத்து அமைதிப்படுத்தியதாகவும் நம்பி தம் நூலுள் வழி வெளிப்படுத்துகின்றார் (பா. 86, 88).

அப்பாடல்களில் இடம் பெற்றுள்ள 'இராவுத்தன்' என்றசொல் 'குதிரைச்சேவகன்' என்ற பொருளில் அமைந்த அரபுமொழியின்றும் தமிழில் குடியேறிய திசைச்சொல் என்றும்; 'தேச ஆசாரம்' என்ற சொல் 'தமிழ் நாட்டிற்குப் புறம்பான அரபு நாட்டின் பழக்கம்' என்றும் சொற்பொருள் விளக்கம் தருகின்றார் சி.சு. கண்ணாயிரம் (ப. 102). நம்பியின் பாடற்பொருளை உள்வாங்கியே இவர் 'குடநாடு' என்பதனை 'அரபு நாடுதான்' என்று துணிந்து கூறுகின்றார். குடநாடு என்பது தென்பாண்டி நிலஞ்சேர் பன்னிரு நிலங்களுள் ஒன்று என்பதனை நன்னூல் வழி அறிகின்றோம். குடகு நாடு என்பது மேற்குநாடு என்பதும் அஃது அந்நாளைய மேலைக்கடற்கரையில் அமைந்த நாடு என்பதும் உய்த்துணர முடிகின்றது. சேர நாடாகிய கேரள நாட்டுப்பகுதியில் அரேபியர்கள் சசித்த செய்தியினையும் அவர்கள் வழிக் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதும் வரலாற்று நிலை ஆய்வுக்குரியதாக அமைகின்றன. இந்நிலையில் குடநாடு? அரபுநாடு? என்பதில் ஏற்பட்ட ஐயங் களுக்கு உரையாசிரியர்கள் திருவிளையாடற்புராண அக்கசான்றுகளைக் கொண்டு பொருத்தம் காண்கின்றனர். இச்செயல் மேன்மேலும் ஆராய்வதற்குரியதொன்றாகிறது.

பட்டாடையினைப் பணிவுடன் ஏற்றுக்கொண்ட பரமன்

பெரும்பற்றப்புலியூர் நம்பி குறிப்பிட்டுச் சொல்லியுள்ள இப்பட்டாடை பற்றிய செய்தி பரஞ்சோதியில் முற்றிலும் மாற்றம் பெற்றுள்ளது. பாண்டிய மன்னன் பரிசாகக் கொடுத்த வெண் பட்டாடையினைச் சிறிதும் வெட்கப்படாமல் குதிரையில் இருந்து கீழே இறங்கி வாங்கியதோடு மட்டுமல்லாமல் இரண்டாவது கங்கையைச் சூடுவது போல் தம் தலைமுடியில் சூடிக்கொண்டு நின்றார் என்கின்றார் பரஞ்சோதிமுனிவர். 'தம் பொருட்டு வாதவூரர் மேலும் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காகத்தான் இறைவன் இவ்வாறு தன் நிலைமையினின்றும் தாழ்ந்து அப்பட்டாடையினைப் பணிவுடன் பெற்றுக்கொண்டான் என்றும்; பாணபத்திரனுக்கு அடிமை என்றுகூறி அவன் பணியை ஏற்றுச் செய்த இறைவர்

இப்பட்டாடையைப் பெறுவதற்கும் தயங்குவாரோ? என்றும் காரணம் உரைக்கின்றார் (பரஞ். பா. 2921) பரஞ்சோதி.

அத்துடன் அமையாது, ''இந்தக் கிழிந்த ஆடையை இம் மன்னனிடம் குதிரையினின்றும் இறங்கி எளியவன் போல் நின்று வணக்கத்துடன் வாங்கி முடியில் சூடியது எதற்காக? அவ்வாறு ஏற்காவிடில் இவர் கையில் உள்ள ஒட்டினையும் அணிந்துள்ள திக்காடையினையும் பாம்பணிகளையும் இப்பாண்டிய மன்னன் எளிதில் கவர்ந்து கொள்வானோ? என்று நரிகளாக மாறிய குதிரை களை நடத்தி வந்த சிவகணங்களாகிய வீரர்கள் அனைவரும் சினத்துடன் ஒருவரோடொருவர் தமக்குள் கூறிக்கொண்டனர்'' என்றும் பாடலமைக்கின்றார் (பரஞ். பா. 2922).

குதிரை வாணிகன் - பட்டாடை கதைநிகழ்வு - ஒற்றுமை - வேற்றுமை

பாண்டிய மன்னவன் பரிசாகக் கொடுத்துள்ள வெண்பட்டாடை குறித்த அகச்சான்றுகளை இருவேறு திருவிளையாடற் நூல்களும் தவறாமல் சொல்கின்றன. 'நன்மைகூர் வரிசைத் தூசு நல்குவம் என்று நல்க' என்று அப்பட்டாடையினை நம்பி உரைத்துள்ள நிலையில் 'வெண்டுகில் வரிசையாக' என்று பரஞ்சோதியும் கூறியுள்ளார், அதன்பின்பு மீண்டும் அதே பாடலில் 'அந்தத் தூசினை' என்று ஒன்றுபட்டுச் சொல்வதனையும் காண்கின்றோம்.

தன் கையில் வைத்திருந்த செண்டால் பாண்டியன் கொடுத்த பரிசினை இறுமாப்புடன் வாங்கிய இராவுத்தனைக் கண்ட மன்னவன் சினந்து வெகுண்டெழுந்தபொழுது 'அஃது அவன் நாட்டு வழக்கம்' என்று அமைச்சராகிய வாதவூரர் எடுத்துக்கூறித் தடுத்து அமைதிப் படுத்தினார் என்று நம்பி பாடலுரைத்த நிலையில், எந்தவித வெட்கமும் இல்லாமல் மிகுந்த பணிவுடன் குதிரையில் இருந்து கீழே இறங்கிவந்து அப்பரிசினை வாங்கித் தம் முடியில் பெருமை யுடன் சூடிக்கொண்டான் என்று பரஞ்சோதி சற்று மாறுபட்டுக் கதை சொல்கின்றார். இவ்விருவரும் இவ்வாறு மாறுபட்டுக் கதை யமைத்ததற்குச் சொல்லப்பட்டுள்ள காரணமும் அதேபோல் மாறுபடுகின்றது.

மன்னவன் கொண்ட சினத்தைத் தவிர்த்து வணிகனைக் காப்பாற்றுவதற்காக வாதவூரர் 'தேச ஆசாரம்' என்று சொல்லிச் சமாளித்தார் என்று நம்பி உரைத்துள்ளபொழுது பரஞ்சோதியோ அக்காரணத்தை வாதவூரருக்காக மாற்றியமைக்கின்றார். 'அன்பராகிய வாதவூரர் மீண்டும் மன்னவனால் குதிரையின் பொருட்டுத் தண்டனை பெற்றுவிடக்கூடாது' என்று பாதுகாப்பதற்காக, 'கூசிலா நேசர்க் காப்பான்' என்ற சொற்றொடரை அமைக்கின்றார் பரஞ்சோதி. இறைவனுக்காகப் பரிந்துவந்த வாதவூரரை நம்பி நூலிலும்

வாதவூரருக்காகப் பரிந்து வந்த இறைவனைப் பரஞ்சோதி யிடத்தும் காண்கின்றோம்.

குதிரை வாணிகன் பொன் பெற்ற கதைக் குறிப்பு

மேற்கண்ட திருவிளையாடலோடு மாணிக்கவாசகர் நேரடித் தொடர்பு உடையவராதலால் அவர் பாடியுள்ள திருவாசகத்தில் இச்செய்தி குறித்து ஏராளமான அகச்சான்றுகள் கிடைக்கின்றன. அவற்றுள் ஒன்று,

''ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி...............

என்று தொடங்கும் பாடலாகும் (திருவா. 2) இவ் அகவல் வரிகளுக்கு உரிய பொருளை ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தம் குருவருள் விளக்கத்தில் (ப.55) உரைக்கின்றார். அதனுள் அமைந்துள்ள 'ஈண்டு கனகம் இசையப் பெறாஅ' என்ற சொற்றொடருக்கு, 'அவன் (பாண்டியன்) கொடுத்த விலையின் மிக்க பொன்னை விரும்பி ஏற்காமல்' என்று பொருள் காண்கின்றார் தேசிகர். இவரது பொருளின்படி, அரிமர்த்தபாண்டியன், குதிரை வணிகனாய் வந்த இறைவனுக்குத் தூய வெண்பட்டாடை அணிவித்ததோடு மட்டுமல்லாமல் இன்னும் மகிழ்ந்து அதிக அளவு பொன்னையும் கொடுத்துள்ளான் என்ற கூடுதல் விபரத்தினையும் அறிய வாய்ப்புள்ளது. இந்நினைப்புக்கு உறுதுணையாக, ''இது, நரிகளைப் பரிகளாக்கிப் பாண்டியனிடம் விற்றபிறகு அவன் கொடுத்த அதிகப் பொன்களைப் பெற்றுக்கொள்ளாமல் குதிரை வாணிகனாக வந்த இறைவனுடைய அருளின்வண்ணம் தான் ஓர்மருங்கு இருப்ப, அவ்விடத்துச் சோதியாய்த் தனக்குக் காட்சி கொடுத்த வரலாற்றைக் குறிப்பது. ஈண்டு - மிக்க; கனகம் - பொன்; விலைக்கு மேலாக அரசன் அளித்த சன்மானமாகிய பொன் என்க'' (ப. 55-56) என்கின்ற தேசிகரின் விளக்கவுரையும் அமைந்திருப்பதை ஒருங்கு நோக்குதல் தகும்.

தேசிகர் உரைத்துள்ள இவ்விளக்கத்திற்கு எதிரானதொரு விளக்கத்தினைத் தருகின்றார் சி.சு. கண்ணாயிரம். அவர்தம் சிவக்குடில் விளக்கத்தில், ''அழகிய திருவடிகளையுடைய இறைவன் என்னை ஆட்கொண்டு அருள் செய்வதற்காகப் பாண்டிய மன்னனுக்குக் குதிரைகளை விற்ற பின்பும் மன்னனிடம் நான் பெற்றிருந்த மிகுந்த பொன்னுக்கு அக்குதிரைகளின் மதிப்புச் சமமாகிக் கணக்கு நேர் படவில்லை. அதனால் மீண்டும் அரசன் என்னை ஒறுத்தான். நான் என்னை ஆட்கொண்டவனின் அருள்வழி இருந்தேன். அந்த நிலையில் தூண்டடப்பட்ட சோதி போன்ற இறைவன் அசரீரியாக மொழிந்து கணக்கை நேர்படுத்திய அருளிப்பாடும்'' (ப. 107) என்று பொருளுரைக்கப்பட்டுள்ளது. ''இசையப் பெறாஅது' என்ற சொற்றொடருக்குப் பின்வருமாறு உரைக்குறிப்பும் தருகின்றார். ''மிகுந்த பொற்குவையின் மதிப்புக்குக் குதிரைகளின் விலை மதிப்பு

ஒப்பாகாமல், குதிரைகள் மீண்டும் நரிகளாகி ஓடி விட்டமையால் அரசனுக்குப் பொன் முழுவதும் இழப் பேயாயிற்று என்றவாறு. இந்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் - பரி நரியாக்கிய படலத்திற் காண்க''. (ப. 108) இத்துடன் அமையாது ஈண்டுக் குறிப்பிட்டுள்ள அகவலின் இறுதி அடியில் அமைந்த 'தோற்றிய தொன்மை' என்ற சொற்றொடருக்கு, ''இறைவன் அசரீரியாக மொழிந்து பாண்டியன் கணக்கை நேர் செய்த அருளிப்பாடு'' (ப. 108) எனவும் கூறுகின்றார் சி.சு. கண்ணாயிரம். தாம் கூறிய உரைக்குறிப்புக்குச் சான்றாகப் பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்தின் மண் சுமந்த படலத்தில் அமைந்த பாடலைத் தொடர்புபடுத்திக் காண்கின்றார்.

அசரீரியா? காட்சியளித்தலா?

பாண்டியனிடம் குதிரைகளை ஒப்படைத்து அவண் கொடுத்த பரிசுப் பொருளைப் பெற்றுக்கொண்ட இறைவனும் சிவகணத்தாரும் மறைதல்; அன்றிரவு பரிகளெல்லாம் நரிகளாக்கி மீண்டும் காட்டினைச் சென்றடைதல்; அதுகண்டு வெகுண்ட பாண்டியன் மேன்மேலும் வாதவூரரைத் தண்டித்தல்; இறையருளால் வையை பெருகி வருதல்; வையைக் கரையடைக்க வந்தியின் கூலியாளாக இறைவனே வருதல்; பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபடுதல்; இறைவன் அசரீரியாக மொழிந்து வாதவூரரின் பக்தியினை மன்னவனுக்கு உரைத்தல் ஆகியன மாணிக்கவாசகரோடு தொடர்புடைய திருவிளையாடற் கதை நிகழ்ச்சிகளாகும். குதிரை வாணிகனாக வந்த இறைவன் மறைந்த பிறகு நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளாகும். குதிரை வாணிகனாக வந்த இறைவன் மறைந்த பிறகு நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பிறகே அசரீரிக் காட்சி அமைகின்றது. இதனைத் தொடர்புபடுத்தி சி.சு. கண்ணாயிரம் இயைபு சொல்லும் உரைக்குறிப்பு மேன்மேலும் சிந்திக்கத்தக்கதாக அமைகின்றது. 'தோற்றிய தொன்மை' என்ற சொல்லுக்கு 'அசரீரி' என்றும்; 'சோதி வடிவாகிய இறைவன் காட்சியளித்த பழமை' என்றும் முறையே கண்ணாயிரமும், தேசிகரும் தத்தம் போக்கில் பொருள் கண்டுள்ள முறைமையினையும் உரைவேறுபாட்டால் அறிகின்றோம். பொன் கொடுத்த புராணச் சான்று திருவாசகத்தில் மட்டுமே உள்ளது. புராண நூல்களாக உருவெடுத்த திருவிளையாடல் நூல்களிலும் வெண்பட்டாடை கொடுத்த குறிப்பு மட்டுமே உள்ளது. பரஞ்சோதியின் இரு திருவிளையாடற் புராணத்தின் 2733, 2775, 2786, 2787 ஆகிய பாடல்களில் பொருள் எனப் பொதுப்படை யாகவும், பொன் என்று சுட்டிக் குறிப்பிட்டும் பாடியுள்ள பாங்கினைக் கண்ட உரையாசிரியர்கள் மேற்கண்ட வகையில் பொருளுரைக்கும் வாய்ப்பு இயல்பாகவே அமைகின்றது என்று மேலாய்வு செய்து நயங்காணவும் இடமுள்ளது.

நாவுக்கரசியின் புலப்பாட்டுத்திறன்

பி. தட்சணாமூர்த்தி

ம.தி.தா. இந்துக்கல்லூரி
திருநெல்வேலி - 10

கருத்தைப் பரிமாறிக்கொள்ளத் துணை செய்வது மொழி. மொழியப்படுவது மொழி எனினும் அம்மொழிவழிக் கருத்தைப் புலப்படுத்தும் முறை புலப்பாட்டு நெறி. இப்புலப்பாட்டு நெறி பேச்சுக் கலைக்கு உரியதாக இருந்தாலும் எழுத்துக் கலையிலும் காணப்படுகிறது. புலப்பாட்டு நெறி எனும் சொற்கோப்புக்கலை எழுத்துக் கலையில் சிறப்புறுவதற்குக் கட்டுரை வல்லாரே சொற்பொழிவுஞராயும் அமைவது நல்லது. இவ்விரு கலைச் செல்வங்களும் ஒருங்கே அமையப்பெற்ற அறிஞர் பலர் தமிழ்நாட்டில் தோன்றியுள்ளனர். இவ்வரிசையில் இன்று பேச்சுக் கலையிலும் எழுத்துக் கலையிலும் சிறந்து தம் புலப்பாட்டுத் திறனால் இலக்கியத் திறனாய்வாளராகத் திகழ்பவர் நாவுக்கரசி.

ஆங்கிலப் பேராசிரியர். கல்லூரி முதல். கற்பித்தல், நிருவகித்தல் ஆகிய பணிகளுக்கிடையே தமிழ் இலக்கியச் சொற்பொழிவாளராகத் தமிழகத்தில் உலாவருபவர் திருமதி இளம்பிறை மணிமாறன், தமிழுக்குக் கதி கம்பராமாயணமும் திருக்குறளும் என்பதை உணர்ந்து, இவ்விரு பெரும் இலக்கியங்களில் ஈடுபட்டு, மேடைகளில் முழங்குவதுடன், அப்பொழிவுகளுக்கு நூல்வடிவமும் தந்துள்ளார். இராஜபாளையம் கம்பன் கழகத்தார் வெளியிட்ட இவரது திறனாய்வு நூல் 'கம்பனில் வாழ்வியல் நெறிகள்'. இந்நூல்வழி நாவுக்கரசி இளம்பிறை மணிமாறனின் புலப்பாட்டு உத்திகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

உளப்படுத்தும் உத்தி

தோற்றுவாய் நீங்கலாகப் பதினெட்டு தலைப்புகளில் வாழ்வியல் நெறிகளைக் கம்பராமாயணம் வழிநின்று புலப்படுத்துகிறார். "கம்பனது இராமகாதை உலகளாவிய ஒரு தனிப் பெருங்காப்பியம். காப்பிய கர்த்தா என்ற வகையிலும், கவிஞன் என்ற முறையிலும், கம்பன் நம் உள்ளத்தை நிறைக்கிறான்" (ப.1) என நூலைத் தொடங்கும் நாவுக்கரசியின் எழுத்துக்கலையில் உளப்பாட்டுப் பண்மை உள்ளது.

'கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' எனும் வள்ளுவர் வாய்மொழி யின்படிப் புலப்பாட்டு நெறியில் இவ்வரிகள் அமைந்துள்ளன.

மேற்கோள் தேர்வுத்திறன்

பெற்றோரைத் தெய்வமாகப் போற்றவேண்டும் எனும் வாழ்வியல் நெறியைக் கூறவந்த கட்டுரையாசிரியர் கிராம காதையிலிருந்து பொருத்தமான மேற்கோளை எடுத்தாள்கிறார். பரதன் தன் பெற்றோரைப் பழிக்கும்போது இராமன் அவனை அமைதி படுத்துகிறான்.

''அந்த நல்பெருங்குரவர் ஆர் எனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயர் என்று இவர்கள் தாம் அலால்
எந்தை கூற வேறு யாரும் இல்லையால்''

எனும் திருவடி ஆட்டுப் படலப்பாட்டினைத் தேர்ந்து தெளிந்து மேற்கோளாக்கியுள்ளார். தொழுதற்குரிய தெய்வம் குரவரே. அக்குரவர் தந்தையும் தாயுமாவர். இன்றைய வாழ்க்கை நெறியில் இக்குரவர்க்குத் தனி இல்லங்கள் இயங்குகின்றன. இவ்வில்லங்கள் பெருகாமலிருக்க இராமகாதை வழிகாட்டும்.

முரண் அமைப்பு

தீதும் நன்றும் நிறைந்ததே நிலவுலக வாழ்க்கை. இவ்வாழ்வியல் உண்மையைக் கட்டுரை ஆசிரியர் முரண் அமைப்பில் விளக்குகிறார். ''மேடு பள்ளங்களை உள்ளடக்கியது தான் வாழ்க்கை. எந்த ஒரு மனித வாழ்வும் முழுக்க முழுக்க மகிழ்ச்சிகரமானதாக இருப்பதில்லை. முழுதும் சோகமயமானதாகவும், யார் வாழ்வும் முடிந்து விடுவதில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக மகிழ்வும் சோர்வும், மனித வாழ்வில் மாறி மாறித்தான் வந்து கொண்டிருக்கும்'' *(ப. 40)*

சுகமும் சோகமும் இணைந்தே வாழ்வு அமையும் எனும் கருத்தைப் புலப்படுத்த எண்ணும்மைகளும் அடுக்குத் தொடர்களும் ஓசைநயம்பட அமைந்த சுட்டுச் சொற்களும் பயன்பட்டுள்ளன. ஆனந்தத்தையும் அவலத்தையும் ஒருசேர நோக்கும் மனநிலை பெற்றவன் இராமன். அயோத்தியில் அரண்மனை வாழ்வு ஆரண்யத்தில் அவலவாழ்வு எனினும் இரண்டினையும் ஒரே நிலையில் ஆனந்த மயமாக்கிக் கொள்ளும் மனநிலை இராமனுக்கு இருந்தது. இயற்கை இதற்குத் துணையாக நின்றது. ''ஆரண்யத்திலேயும், அழகிய பல காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து அவர்கள் இயற்கைத் தாயின் இனிய குழந்தைகளாய் வாழ்ந்தனர்'' எனக் கட்டுரை ஆசிரியர் இராம, இலக்குவர், சீதை ஆகியோரின் வாழ்வியலைச் சுட்டுகிறார்.

இயற்கை அன்னையின் குழந்தைகள் இவர்கள் என்று பேராசிரியைக் கூறி, தாயின் மடியில் குழந்தைகள் ஆனந்தமாக இருப்பதைக் காட்சிப்படுத்துகிறார்.

ஆளுமைத்திறன் புலப்பாடு

தெய்வத் தமிழ் இலக்கியங்களைக் கற்றுத்தெளிந்த ஆங்கிலப் பேராசிரியை நாவுக்கரசி தாம் படித்த ஆங்கில இலக்கியக் கருத்துகளை இராம காதையில் கண்டு ஒப்பிட்டு ஆய்கிறார். ஒப்பாய்விற்கு இவரது ஆளுமைத் திறன் பயன்பட்டிருக்கிறது. சுயனுபவமே ஆளுமையாக நின்று ஒரு மாத்யூ அர்னால்டாக விளங்குகிறார். ஆங்கிலக் கவிஞர்களில் பெயரிலேயே சொல்லின் செல்வராகத் திகழ்பவர் வேர்ட்ஸ் வொர்த் (Wordsworth). இயற்கையைப் பாடுவதில் ஈடு இணையற்றவன். அவனது டிஸ்டர்ன்' ஆபி (Testern Ably) எனும் கவிதை இயற்கையைச் சுவைத்து உணர்ந்த சுய அனுபவ வெளியீடாகும். இதனை உலகறியச் செய்த திறனாய்வாளர் மாத்யூ அர்னால்டு. இச்செய்தியைப் படிப்பவர்க்குத் தருபவர் பேராசிரியை நாவுக்கரசி. ''தாம் அனுபவித்த இயற்கை இன்பத்தை அப்படியே தன் கவிதை வரிகளில் நிறைத்து வைத்த திறம் அந்தக் கவிஞனுக்கு இருந்ததால்தான், இயற்கை அன்னையே, வேட்ஸ் வொர்த்திடம் இருந்து எழுதுகோலை வாங்கி அவனே கவிதை புனையத்தான் என்று திறனாய்வாளர்கள் வர்ணித்துள்ளனர்'' (ப. 20).

'சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி'யைக் கம்பன் வருணித்த செய்தியை மாத்யூ அர்னால்டு கூறிய கருத்தோடு கட்டுரை ஆசிரியர் ஒப்பிடுகிறார். கம்பன் கவிதைக்கு ஏழு சிறப்பியல்பு களைக் கூறுகிறான். ஒன்று குறையினும் அது சான்றோர் கவி ஆகாது. ''எனவே கட்டுக்கோப்பற்ற தன்மையில், நல்லொழுக்க உணர்வு களையும், மனித மனத்தின் மாண்பையும் சிதைக்கும் சொல்லலங் காரங்கள் கவிதையாகிவிட முடியாது'' (ப. 202) என்று கூறும் கருத்தில் நாவுக்கரசியின் திறனாய்வுப் புலப்பாட்டுத்திறன் வெளிப் படுகிறது.

ஆராய்ச்சிக் கண்ணோட்டம்

கிரேக்கமொழிக் காப்பியங்கள் ஹோமரின் 'இலியட்', 'ஒடிசி' என்பன. இக்காப்பியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் சேப்மேன் கீட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞனுக்குக் கிரேக்கம் தெரியாது. மொழிபெயர்ப்பு வந்தபின் ஹோமரின் காப்பியங்களைப் படித்துப் புதிய பார்வைகளை அறிந்ததாகக் குறிப்பிடுவர். ஆங்கில இலக்கியம் கற்ற நாவுக்கரசி கம்பனைப் படித்தபோது இதனை நினைவு கூர்வதும், கம்பனது புதிய பார்வையை விளக்க முற்படுவதும்

ஆளுமைத்திறனை வெளிக்காட்டுவதாகும். ''கம்பன் பூக்கொய் படலத்தில் பெண்களின் முகமலர்களைப் புதுமலர்கள் என எண்ணி மொய்த்த வண்டுகளைப் 'புதுமைப் பார்ப்பார்' எனப் புதிய புதிய பொருட்களை ஆராயும் மனோபாவம் படைத்த அறிஞர்களோடும் கலைஞர்களோடும் ஒப்பிடும் அழகு, புதியவனவற்றைத் தேடிப் பிடித்து கண்டு அறிந்து ஆய்ந்து மகிழும் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தின் சிறப்பை நமக்கு எடுத்துச் செல்கிறது'' *(ப. 204)*

ஓரிலக்கியம் கற்றார்க்கு மற்றொரு இலக்கியத்தில் ஒப்பாய்வுக் கருத்துத் தோன்றுமாயினும் தக்க இடத்தில் இடத்திற்கு ஏற்றவாறு ஒப்பிட்டுக் கூறும் புலப்பாட்டுத் திறனும் இருக்க வேண்டும். ஒப்பாய்வுத்துறை வளர்வதற்குக் குறைந்தது இருமொழி இலக்கியப் புலமை அவசியம். ஆங்கிலப் பேராசிரியராகப் பணிபுரியும் நாவுக்கரசி இளம்பிறை மணிமாறன் தமது இருமொழிப் புலமைத் திறத்தால் மேடைகளில் ஒப்பாய்வுத் திறத்தை வெளிப்படுத்தி வருகிறார். கட்டுரையிலும் எழுதி வருகிறார். மொழிப்புலமையும் குரல்வளமும் தக்க இடங்களில் மேற்கோள் காட்டி விளக்கும் திறனும், ஒப்பாய்வு செய்யும்போக்கும் இவரது புலப்பாட்டு நெறிக்குத் துணை நிற்கின்றன.

சிலம்பில் நாயனாரின் பாநயம்

கி. செல்வராணி

இராமலிங்க சௌடாம்பிகை கல்லூரி
கோயமுத்தூர் - 641 109

திருக்குறள் ஒரு உலகப் பொதுமறை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி இன்றும் உலக மக்களால் போற்றப்படும் நூல். இது தமிழில் தோன்றிய நீதிநூல்களுக்கெல்லாம் முன்னோடியானது. உலகிற் சிறந்த தலைமையான சிந்தனைகளைச் செறிவுடனும் தெளிவுடனும் விளக்கிக் காட்டும் தன்மைகொண்டது. அதனால் தமிழ் நூல்களில் திருக்குறளை எடுத்தாளப்படாத நூல்கள் மிகக் குறைவு. சிலம்பாசிரியரும் தம் காப்பியத்தில் நாயனாரின் கருத்துக்களையும், அவரின் சொல்லாட்சிகளையும் எடுத்தாளுகின்றார். சிலம்பில் நாயனாரின் பாநயத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாடு

நாயனார் குறையாத விளைபொருளும், தக்க அறிஞரும், கேடில்லாத செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடு என்கின்றார். அதை,

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு'' (குறள். 731)

என்பதிலிருந்து அறிய முடிகின்றது. இளங்கோவடிகளும் புகார் நகரத்தின் சிறப்பைப் பாடும்போது,

''ஆங்கு
பொதியில் ஆயினும் இமயம் ஆயினும்
பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇய
பொதுஅறு சிறப்பின் புகாரே ஆயினும்
நடுக்கு இன்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுது உணர்ந்தோரே
அதனால்
நாகநீள் நகரொடு நாக நாடு - அதனொடு
போகம் நீள்புகழ் மன்னனும் புகார்நகர்'' (சிலம்பு. பா. 26)

என்று வள்ளுவரை அடியொற்றிப் பாடுகின்றார். இங்கு உயர்ந்தோர்கள், கேள்வி ஞானங்கள் முழுவதையும் உணர்த்தச் சான்றோர்கள் பலர்

புகாரில் வாழுவதனால் இந்நாட்டிற்கு அழிவு இல்லை. இதனால் நாகநாட்டினரோடு ஒப்பிட்டுப் புகார் நகரைக் கூறுகின்றார் ஆசிரியர். இவ்வாறாக நீளப் போக வாழ்வு பரவிக் கிடக்கும் புகழ் நிறைந்ததாகப் புகார் நகரம் விளங்கிற்று.

ஐம்பெருஞ்சபைகள்

அக்காலத்தில் அரச சபையில் ஐம்பெருங்குழு, எண்பேராயம் போன்ற பல சபைகள் இடம்பெற்றிருந்தன. இவற்றில் ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்கள் இருந்து அரசனுக்கு அவ்வப்பொழுது அறிவுரை கூறி, நாட்டைத் திறம்பட நடத்த உதவி செய்து வந்தனர். அத்தகைய சபைகளைப் பற்றித் திருவள்ளுவர்,

''படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு'' (குறள். 381)

என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய சபைகளைப் பெற்றவனே அரசர்களுக்குள் ஆண்சிங்கம் போன்றவன் என்று கூறுகிறார். இளங்கோவடிகளும், புகார் நகரில் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் மட்டுமல்லாமல் பல சபைகளும் இருந்தமையை,

''ஐம்பெருங்குழுவும் எண்பேர் ஆயமும்
அரசகுமரரும் பரதகுமரரும்
கவர்பரிப் புரவியர் களிற்றின் தொகுதியர்
இவர்பரித் தேரினர் இயைந்து ஒருங்கு ஈண்டி''
(சிலம்பு. பா. 77)

என்ற பாடலில் உணர்த்துகின்றார். சிலப்பதிகார காலத்தில் நாட்டினை ஆளும் மன்னனுக்குப் பலவகையிலும் உதவியாக இருந்த சபைகள் வள்ளுவர் காலத்திலிருந்து வழக்கில் இருக்கின்ற ஒன்றாகக் கருதுவதற்கு இடமுண்டு.

பொருள் ஈட்டும் முறை

அரசனுக்குரிய பொருளை வகுத்துரைக்க வந்த நாயனார்,

''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்'' (குறள். 756)

என்று கூறுகின்றார். 'உறுபொருளாவது' தனது முயற்சியின்றி அரசனுக்குத் தானாகவே வந்து சேரும் பொருளாகும். பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து மாண்டுபோன குடிகளின் புதையற் பொருள்களும், தாயத்தார் இல்லாது வழிவந்த மக்களின் பொருள்களும் அரசனுக்குரிய பொருளாம். 'உல்குபொருள்' என்பது சுங்கத்தால் வரும் பொருள் என்று பொருள்படும். மிகப்பழைய காலத்தே தமிழகத்தில் வாழ்ந்து வந்த மக்கள் ஐரோப்பிய நாட்டில் அக்காலத்தில் தலைமை வாய்ந்திருந்த யவனருடன் வாணிகம்

செய்து வந்தார்கள் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உண்டு. வியாபாரத்தால் கிடைக்கும் பெரும் பொருளுக்காகத் தமது நாட்டை விட்டுத் தமிழ்நாடு போந்து, தமிழ் மக்களுடன் வேற்றுமையின்றிக் கலந்திருந்த யவனருடைய மாளிகைகள் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்ணுக்கெட்டாத தூரம் விண்ணளாவி இருந்தனவென்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

''கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்''

என்றும்,

''கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்''

என்றும் கிடைக்கும் பாடல் குறிப்புகளிலிருந்து தமிழ்நாட்டில் ஐரோப்பியர் வாணிகம் செய்தனர் என்பதை அறியலாம். இங்கு அரசர்கள் சுங்கம் மூலம் பணம் பெற்று நாட்டின் வளத்தை மேலுயர்த்திய செய்தியை வள்ளுவரும் இளங்கோவடிகளும் சுட்டுவதில் ஒற்றுமைப்படுகின்றனர்.

இன்னா செய்யாமை

முற்பகலில் மற்றவர்க்குத் துன்பத்தினைச் செய்தால், அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் அத்துன்பம் தாமாகவே வந்துசேரும் என்பதை வள்ளுவர்,

''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்'' *(குறள். 319)*

என்று அருளுகின்றார். சிலம்பாசிரியரும் இன்னா செய்யாமையைக் கண்ணகியின் கூற்றாக,

''முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்'' *(சிலம்பு. பா. 29)*

என்று காட்டுகின்றார். தன்னைப் போலவே பிறரையும் நினைத்து, தனக்கு வலிப்பதைப் போன்றே பிறருக்கும் வலிக்கும் என்ற உணர்வுடன் செயல்பட்டுப் பிழைநீங்கி வாழ்வோம் இந்த மண்ணிலே என்பதில் வள்ளுவரும் சிலம்பாசிரியரும் ஒன்றிக் காணப்படுகின்றனர்.

ஊழ்வினை

''ஊழின் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்'' *(குறள். 380)*

என நாயனார் ஊழைவிட மிக்க வலிமையுள்ளவை எவை உள்ளன? ஊழை விலக்கும்பொருட்டு மற்றொரு வழியை ஆராய்ந்தாலும் அங்கும் தானே முன் வந்து நிற்கும் என ஊழைப் பற்றிக் குறிப்பிடு கின்றார். இளங்கோவடிகளும் தம் காப்பியத்தில் ஊழ்வினையை

முன்னிலைப்படுத்துகின்றார். சிலம்பினை உருவாக்குவதற்குத் தான் எடுத்துக்கொண்டு மூன்று கருதுகோள்களில் ஒன்றாக 'ஊழ்வினை உருத்துவந்தூட்டும்' என்பதைக் கையாண்டுள்ளார். சிலப்பதிகாரத்தில் கோவலன் கொலையுறுவதற்கு அவனுடைய் ஊழ்வினையே காரணம் என்பதைப் பலவிடங்களில் விதைத்துச் செல்கின்றார் அடிகள்.

''பொற்பு வழுதியும் தன்பூசையரும் மாளிகையும்
விற்பொலியும் சேனையும் மாவேழமும் - கற்பு உண்ணத்
தீத்தரு வெங்கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத் தான் மறைந்தார் மற்று'' (சிலம்பு. பா. 295)

எனக் கண்ணகியின் கற்பின் சிறப்பால் மதுரை மாநகரம் அழிந்த போது அங்குள்ள தெய்வங்களால்கூட ஒன்றும் செய்யமுடியவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றார். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் வஞ்சிக் காண்டத்தில் குலமகளைக் குலதெய்வமாக்குகின்றார்.

மானம்

தன் உடம்பிலிருந்து மயிர்நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்று தன்னுடைய சிறப்பிற்கும் புகழுக்கும் இழுக்கு நேர்ந்தால் உயிரை விட்டுவிடுவர் என்பதை,

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''

என்ற குறளின் மூலம் எடுத்துக்காட்டுகின்றார் திருவள்ளுவர். இளங்கோவடிகளும், செங்கோலாட்சி நடத்தி வந்த பாண்டிய மன்னன் தன் புகழுக்கு இழுக்கு வந்தபோது இறந்ததை எடுத்துக் காட்டுகின்றார்.

''....... ...... மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்?
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்''

என்று சொல்லி வீழ்ந்து தன்னுயிரை மாய்த்துக் கொள்கின்றான். இங்கு உயிரைவிட மானமே பெரிது என்பதை வலியுறுத்துவது தான் காப்பிய ஆசிரியரின் நோக்கமாக இருக்கின்றது.

கோவலன் கண்ணகி இப்பிறப்பில் அடைந்த துன்பத்திற்குக் காரணம், முற்பிறப்பில் அவர்கள் செய்த தீவினையே என்பதை.

''எம்முறு துயரம் செய்தோர் யாவதும்
தம்முறு துயரம் இற் றாகுக என்றே

விழுவோன் இட்ட வழுவில் சாபம்
பட்டினிர் ஆதலின் கட்டுரை கேள் நீ'' (சிலம்பு. பா. 317)

என்பதன் மூலமும் அறியலாம்.

கற்பின் மேன்மை

கற்பின் பெருமையைத் திருக்குறள், சிலப்பதிகாரம், தொல்காப்பியம் போன்ற பல நூல்கள் பறைசாற்றுகின்றன. திருவள்ளுவர் இல்லாளின் சிறப்பை வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார்.

''பெண்ணின் பெருந்தக்க யாவுள் கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்'' (குறள். 54)

''தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை'' (குறள். 55)

என்று திருவள்ளுவர் கூறுவதை இளங்கோவடிகளும் எடுத்தாள்கின்றார். கற்புக்கரசியாகிய கண்ணகியின் கட்டளைக்கு இயற்கையே கட்டுப் படுவதாகக் காட்டுமிடத்துக் கற்பின் வன்மை புலப்படுகின்றது.

துறவு

துறவின் பெருமையை வள்ளுவர் தம் திருக்குறளில் எடுத்துக் காட்டுகின்றார். அதேகணம் துறவறம் பூண்டு தீயசெயல்களில் ஈடுபடுபவர்களையும் கண்டிக்கின்றார்.

''தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று''

எனத் தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவம் அல்லாத தீய செயல் களைச் செய்தல், புதரில் மறைந்து வேடன் பறவைகளை வலைவீசிப் பிடித்தலைப் போன்றது என்கின்றார். இளங்கோவடிகளும்,

''தவம் மறைந்து ஒழுகும் தன்மை இலாளர்
....
பூதம் படைத்து உணும் புது சதுக்கமும்''

எனத் தவக்கோலத்தில் இருந்து தீயசெயல்களிலே ஈடுபடுபவர் களைப் புகார் நகரில் உள்ள பூதசதுக்க மன்றத்தில் உள்ள பூதம் கொன்றுவிடும் என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

முடிவுரை

இவ்வாறாகத் தமிழ்மறையாம் திருக்குறளின் கருத்துக்கள் சிலம்பில் விரவிக் காணப்படுவதை அறிய முடிகின்றது. சிலம்பு மட்டுமல்லாமல் மற்ற காப்பியங்களிலும் இலக்கண நூல்களிலும் திருவள்ளுவரின் சிந்தனைத் துளிகள் மழைநீர் போல் எங்கும் பரவி இருப்பதை உணர முடிகின்றது.

தில்லையும் நால்வரும்

பா. மாலினி

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

திருஞானசம்பந்தர்

உலக முதல்வனாகிய சிவபரம் பொருளை இன்னிசைத் தமிழ்ப் பாடலால் முதன்முதல் பாடியவர் திருஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் சிவபெருமானை இயற்றமிழால் முதலில் பாடியமையானும், அப்பெருமானது திருவடிகளில் முதலில் கலந்தமையாலும் அவரது பாடல்கள் முதல் மூன்று திருமுறை களாக வைக்கப்பெற்றன என்பர். ஆளுடைய பிள்ளையார், தில்லைச் சிற்றம்பலநாதனுடைய திருவடிகளைத் தொழுதார். தேனினும் இனிய தேவாரப் பாசுரங்களைப் பாடினார். அவரது சிந்தையில் தில்லைப் பெருமானது திருவுருவப் பொலிவும், தில்லையந்தணர் மூவாயிரவர் அணுக்கத் தொண்டராயிருந்து, அப்பெருமானை வழிபட்டு வரும் சிறப்பும் நீங்காது நிலைபெற்று நின்றன. எனவே ஆனந்தக் கூத்தனின் அருள் நடம் கண்டு வணங்குவதற்காக மீண்டும் தில்லையை நோக்கிப் புறப்பட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடன் சென்றார்.

அங்கு இறைவனது ஆனந்தத் தாண்டவ நிலையைக் கண்டு,

''ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடி னாயிடமா நறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பணி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாயருளாய் சுருங்க எமதொல் வினையே''

என்று பாடினார். தில்லைவாழ் அந்தணர்கள், சிற்றம்பலத்தைப் பிரியாது தங்கி வழிபடும் சிறப்பைக் கூறுவதாகும். தில்லை வாழந்தணர் இறைவனை அல்லும், பகலும் பிரியாமல் தம் சிந்தையுள் வைத்து வழிபடும் தன்மையராதலின்,

''அந்தணர் பிரியாத சிற்றம்பலம்''

என்கிறார்.

சீர்காழிப் பதியில் தோன்றிய நான்மறை வல்லவனான திருஞானசம்பந்தப் பெருமான், இனிய தமிழால் தில்லை அம்பலவனை, இன்னிசையோடு பாடுகிறார்.

''நாறு பூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்மறை வல்ல ஞானசம்பந்தன்
ஊறும் இன்தமிழாலுயர்ந் தாருறை தில்லை தன்னுள்
ஏறுதொல் புகழேந்து சிற்றம்பலத்
தீசனை இசையாற் சொன்ன பத்திவை
கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடுங் கூடுவரே''

சிற்றம்பலத்தானை இசையால் பாடுபவர், உயர்ந்த தேவர்களோடும் கூடி இன்பமடைவர் என்கிறார்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் திருமுது குன்றத்தைப் பணிந்து பதிகம் பாடி, அங்கிருந்து புறப்பட்டுத் தில்லை மாநகர் மேற்றிசைக் கோபுர வாயிலை அடைந்தார். தில்லை வாழந்தணர்கள் எதிர்கொண்டு வரவேற்க இறைவன் திருநடமாடும் திருச்சிற்றம்பலத்தை அடைந்தார். இறைவனது இனித்த முகமும், கொவ்வை செவ்வாயும், பனித்த சடையும், குனித்த பொற்பாதமும் கண்டு கும்பிட்டு நின்றார். தில்லை வீதியில் உழவாரப் பணிகள் செய்து, மக்கள் தில்லைக் கூத்தனை வழிபட்டு உய்யுமாறு மக்களை ஆற்றுப்படுத்துகிறார்.

தில்லையம்பலவன் திருநடனம் கண்டு வணங்கும் எண்ணம் உண்டாக, அருஞ்சொல்லால் புகழ்ந்து பாடுகிறார். ஒப்பற்ற பெருமான், அயனும், திருமாலும் காண்பதற்கரியவனாய்ப் பெருந்தழலின் வடிவமாகித் தேன்நிறைந்த சோலைகள் சூழ்ந்த தில்லையம் பலத்துள் நடனம் புரிகின்றான்.

''விண்நி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண் நிறைந்த இருவர்க் கறி வொணாக்
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்
துள்நிறைந்து நின்றாடும் ஒருவனே''

என்று ஆடலைச் சிறப்பிக்கின்றார்.

திருமூலரும், அம்பலவனின் ஆடலை,

''மாணிக்கக் கூத்தினை, வன்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுள் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப் பொற் கூத்தனை யாருரைப் பாரே?'' (திருமந்திரம் - 2743)

என்கிறார்.

உயிர்களுக்கெல்லாம் இன்பதுய்ப்பை அடைவித்து, உயிர்களை இன்பமாக ஆக்குவதற்காக அமைத்த திருநட்டத்தைப் பெருநட்டமாகவும் ஆடுகிறான். இதனைச் சேக்கிழார்,

''தேடும் பிரமனும் மாலும் தேவரும் முதலா
யோனிகள் தெளிவு ஒன்றா
ஆடும் கழல்புரி அமுதத் திருநடம்''

என்று குறிப்பிடுகிறார். உயிர்கள் இன்பம் துய்க்க ஆடத் தொடங்கினான். பின்னர் இன்பத்தோடு அறிவை இணைக்க முற்படுகின்றான். உயிர்கள், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்ற ஏழு வகைகளில் எண்பத்து நான்கு லட்சம் அனுபவ உறுப்பு வேறுபாடுகளைக் கொண்டவைகளாக உள்ளன.

''தில்லைச் சிற்றம்பலத்து நட்டம்'' என்ற அடிப்படை அமைப்பில் நின்று ஆடல் வல்லானின் ஆடலைக் காணுதல் பொதுநிலை. அதையே தனக்குரியதாகக் காணும் தனிநிலையில் அது ''கூத்து'' எனப் பெறுகிறது.

ஆடலைக் கூத்தாக அமைத்துக் காண முற்படும்போது பாதம் ஒன்றே. மத்தம், நெற்றிக்கண்ணின் நோக்கு, முறுவலிப்பு, துடிகொண்டகை, வெண்ணீறு, கரிகுழலாள், பாகம், புலித்தோல் என்ற ஏழையும் தாங்கிய வீரக்கழலோடு நெஞ்சினுள் புகுவதாகிய அனுபவம் அமையும். ஆடல், கூத்து என்ற இரண்டற்கும் வேறாய் அவன் தன்னுண்மை நிலையில் அமைந்த - விடங்க நிலையில் அமைந்த கோலத்தையும் காண்கிறார். அது ஆடலோ கூத்தோ இயற்றும் கோலமன்று என எடுத்துக்காட்டி அதற்கே தம்மை அடைக்கலப்படுத்தி விடுகிறார். அதனை,

''படைக்கலமாக உன்னாமத் தெழுத்தஞ்சும்
என்னாவிற் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு
ஆட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்
தூநீறணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்
சிற்றம்பலத்து அரனே''

என்ற திருவிருத்தத்தால் அமைத்திருக்கிறார் (4.81.7). இது, ''கருநட்டகண்டனை'' என்று தொடங்கும் திருவிருத்தத் திருப்பதிகமாகும்.

''செஞ்சடைக்கற்றை'' எனத் தொடங்கும் பதிகம் முழுவதிலும், அனலெரியாடுதல் பற்றிய விளக்கமே கூறப்பெறுகிறது. ஆனால்,

''தில்லைச் சிற்றம்பலம்'' என்ற இடையறவுபடாத இணைப்பு, இடைவெளி அமைக்கப்பெற்று, ''தில்லை தன்னுள் கருது சிற்றம்பலத்தே'' என விரிவு செய்யப் பெறுகிறது. காரைக்காற் பேய் திருவாலங்காட்டில் நடைபெறுவதாக அமைத்த அனலெரி யாடுதல், தில்லையில் கருது சிற்றம்பலத்திலும் உண்டு என்பது திருநாவுக்கரசரால் அமைத்துக் காட்டப்பெறுகிறது. ''அழல் உருவாய், அம்பலத்தின் உள்ளே, நிறைந்து நின்று ஒருவன் ஆடும்'' என்ற விளக்கம் கீழ்க்காணும் திருநேரிசைப் பதிகப்பாக்களால் தெரிய வருகின்றது.

''ஒருத்தனார் உலகங்கட்கு ஒரு சுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடமுண்ட
அருத்தனார் அடியாரை அறிவரே'' - எம்

''விண்ணிறைந்ததோர் வெவ்வழல் இன்னுரு
எண்ணிறைந்த இருவர்க்கு அறியொனாக்
கண்ணிறைந்த கடிபொழில் அம்பலத்து
உள் நிறைந்து நின்றாடும் ஒருவனே''

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என்ற தொடர் தில்லை என்ற உடம்புக்கும், சிற்றம்பலம் என நின்ற உயிருக்கும் முறையே அமுதத்தையும், ஞானத்தையும் உணவாகத் தந்து அவ்விரண்டையும் சிறந்து விளங்கச் செய்யும் கூத்தினைச் செய்கிறான் என்பதாகும்.

தில்லை திருத்தமுற்று நிற்க, சிற்றம்பலம் ஞானம் பறக்கும் சோதியாய்த் திகழ்ந்து நிற்க, தில்லை சிற்றம்பலம் என்ற இரண்டையும் தனித்தனியே நிறுத்தி நீ நடுவனாய் நின்று ஆடும் நிருத்தம் காண, நான் நேர்பட வந்தேன் என்கிறார்.

எந்த ஒன்றாலும் யார் ஒருவராலும் அறிய இயலாத இலக்கணம் கூற முடியாத, செம்மை எனவும், செந்தீ எனவும், நடு எனவும், நின்ற நடுவெனும் திருவுடைய சோதிப் பொருளே, ஊனாலும், உயிராலும் உள்ளதாம் மெய்ப்பொருள் என்று கருதப்பெறும் பேரன்பைப் பெருக்கி, இன்னும் பெருக்கிய நிலையில் நடுவாக நின்ற நின்னையும் ஊனையும் உயிரையும் இணைக்கும் நடுவாக நின்ற அன்பினையும் நேர்பெற நிறுத்தி வந்தேன் என்ற விளக்கத்தைத் திருநாவுக்கரசரிடம் காண முடிகிறது.

''ஒருத்தரால் அறிய வொண்ணாத்
திருவுருடைய சோதி
திருத்தமாம் தில்லை தன்னுள்
திகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தம் நான் காண வேண்டி
நேர்பட வந்தவாறே''

''நாட்டினேன், நின்றன் பாதம்
நடுப்பட நெஞ்சினுள்ளே''

''சிந்தையைத் திகைப் பியாதே
செறிவுடை அடிமை செய்ய
எந்தை நீ அருளிச் செய்யாய்
யாது நான் செய்வதென்னே
செந்தியார் வேள்வி யோவாத்
தில்லைச் சிற்றம்பலத்தே''

இதனும் அந்தி என நின்ற உடம்பும், பகல் என நின்ற உயிரும் பண்படுமாறு, இடை நின்ற ஒற்றையடி இரண்டையும் இணைத்து நின்று, இரண்டையும் தூய்மையுறுத்தும் என்ற நடுப்பதப்பேறு, இடைநின்ற ஆவிக்கும் அன்பினால் விளைந்தது.

சுந்தரர்

திருமுதுகுன்றத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பன்னீராயிரம் பரிசளித்த இறைவன் அப்பொன் எல்லாவற்றையும் மணி முத்தாற்றில் இட்டு, திருவாரூர்க் குளத்தில் பெற்றுக் கொள்க என அருளிச் செய்தார். அதனால் மகிழ்வுற்ற சுந்தரர் தான் பெற்ற பொன்னின் மாற்று அறிவதற்காக மச்சம் வெட்டி எடுத்துக் கொண்டு மீதி பொன்னை ஆற்றிலிட்டு, அங்கிருந்து புறப்பட்டுத் தில்லையை அடைந்தார். தில்லை நகர் திருவீதியை வலம் வந்து கோபுரத்தை இறைஞ்சி உள்ளே புகுந்து, ஆடல் புரியும் அம்பலவனைக் கண்டு தொழுதார். இறைவனை, நமக்கு உரிமையாகப் பெற்றோம் என நெஞ்சுக்கு அறிவுறுத்தும் நிலையில் அங்குப் பாடுகிறார்.

மணிவாசகப் பெருமான்

மணிவாசகப் பெருமான் தில்லையம்பதியில் எழுந்தருளியிருக்கின்ற நாட்களில் திருச்சிற்றம்பலவன் தன்னை ஆட்கொண்டருளிய பேரருட்டிறத்தை வியந்து, நினைந்து நினைந்து நெக்குருகி ''கோயில் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

இப்பதிகம், இறைவன் அருளைப் பெற வேண்டி அவனது திருநாமங்களைக் கூறிப் போற்றி, ஆனந்தக்கண்ணீர் பொழிய வணங்கி நின்று உருகி விண்ணப்பித்து வேண்டுதலாகிய முதிர்ந்த அனுபவத்தை உணர்த்துவதால் ''மூத்த திருப்பதிகம்'' எனப்பெயர் பெற்றது.

தில்லையும் ஆனந்தத் தாண்டவமும்

சோ. குமரேசமூர்த்தி

சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர் - 621 005

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே''

உலகில் விளங்கும் சமயநெறிகள் பலவற்றுள் சைவம் தொன்மையும் பெருமையும் உடையது. அனைத்துச் சமய தத்துவங் களையும் தன்னுள் கொண்டும், அவற்றுள் மேம்பட்டும் விளங்குவது. 'எங்கும் நீக்கமற நிறைந்தவன் இறைவன்' இதுவே சைவ தத்துவம். எங்கும் தங்கும் இறைவன் ஆலயங்கள் வழிநின்றும் அருள் செய் கின்றான். ஆகையால், இறைவன் அருள்பெற ஆலயம் வேண்டும். நிலத்தில் ஊடுருவியுள்ள நீர் கிணறு என்ற இடத்தின் வழி வெளிப்படுவதுபோலவும், பசுவின் உடலில் பரவியுள்ள குருதி காம்பின் வழியே பாலாக வருவதுபோலவும் எங்கும் நிறைந்த இறைவன் கோவில்களின் வழி வெளிப்பட்டு நிற்கின்றான்.

மக்கள் பண்புடையவர்களாக இருக்க வேண்டும் என்றால் பக்தி வளரவேண்டும். பக்தி வளர, திருக்கோவில்கள் மடாலயங்கள் வேண்டும், 'கோயில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்', 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' போன்ற பழமொழிகள் பண்பாட்டை வளர்க்கவே தோன்றின எனலாம்.

நாட்டின் நலத்திற்குக் கோயில்களே அடிநிலை என்பது அருளாளர் கண்ட உண்மை. அத்தகைய கோவில்களுக்கு நம் நாட்டில் அளவில்லை. அவற்றுள், மிகப்பெருமை வாய்ந்த கோயில்கள் சில. தில்லைத் திருக்கோயில் மிகப்பழம் பெருமை வாய்ந்தது. இதற்குக் காரணங்கள் பல.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களுள் ஆகாயமே முதன்மையானது. இவ்வகையில், ஆகாசத் தலமாகிய தில்லை முதன்மையுடையதாகின்றது. அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்னும் முறையில், மக்கள் உடம்பில் ஆகாசமாய் உள்ளது இதயவெளி. இது தகராகாசம் எனப்படுகின்றது.

எனவே, தில்லையில் சிற்றம்பலத்தில் இறைவன் நடனம் புரிதல் ஆன்மாக்களுடைய உள்ளத்தின் இருதயத்தில் செய்யும் நடனத்தையும் குறிப்பதாகும். இதனை மாணிக்கவாசகர்,

> ''சிறைவன் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்
> உறைவான்.......'' - (1)

என விளக்கினார். உயிர் உடம்போடு கூடி வாழும் வாழ்க்கை இருதயத் துடிப்பினாலே அமைவது. இத்துடிப்பு என்பது இறைவன் உயிர்களின் இருதயத்தில் புரியும் நடனத்தையே குறிக்கின்றது. இத்துடிப்பு நின்றால், உயிர் இயக்கம் நின்றுவிடும். இதுபோலவே இறைவனது ஆட்டம் நின்றால், அனைத்துலக இயக்கமும் நின்று விடும் என்பதும் விளங்கும். எனவே, உலகம் அனைத்திற்கும் தில்லை இருதயத்தானமாயும், அதன் கண் திருச்சிற்றம்பலத்தில் இறைவன் புரியும் நடனம் உலக இயக்கத்திற்கு முதலாயும் நிற்றல் தெளிவு. இதுபற்றியே தில்லைத் திருக்கோயில் ஒன்றே ''கோயில்'' எனச் சிறப்பித்து வழங்கப் பெறுகின்றது.

இதனை விளக்கும் முகமாகத் திருஞானசம்பந்தர்,

> ''உரை சேரும் எண்பத்து நான்குநூறு
> ஆயிரமாம் யோனி பேத,
> நிரை சேரப் படைத்தவற்றின் உயிருக்குயிராய்
> அங்கங்கே நின்றான் கோயில்'' - (2)

என்று கூறுகின்றார்.

சைவ சமயம் இறைவனே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் முதலிய ஐந்தொழில்களையும் செய்கின்றான். இவை வேலையல்ல : ஒரு விளையாட்டு, அளவில்லாத விளையாட்டு என்கிறது.

வேலையும் விளையாட்டும்

வேலை என்பது பயன் முதலிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டது. வேலையின் முடிவிற் சோர்வும், அது பற்றிய நன்மை தீமை முதலிய எதிர்பார்ப்புகளும் உண்டு. விளையாட்டில் இவை எதுவுமில்லை. ஆனந்தத்தைத் தவிர வேறு எதுவுமில்லை. எல்லாம் அவன் செயலால் நடைபெறுகின்றன. இந்த மாபெரும் ஐந்தொழில் களையும் ஐந்து நடனங்களாகச் சைவம் வருணித்துள்ளது.

நடனத்தின்போது பிடிக்கப்படும் அபிநய வேறுபாட்டால் நடனம், தாண்டவமாகக் கொள்ளப்பட்டுப் பலவாறாகப் பெருகி 108 என்றும், 1008 என்றும் நூல்கள் கூறுகின்றன.

நடனங்களும் சபைகளும்

சிதம்பரம் - கனகசபையில் ஆடுவது ஆனந்தத் தாண்டவம்
மதுரை - வெள்ளியம்பலத்தில் ஆடுவது சந்தியா தாண்டவம்
திருப்பத்தூர் - சித்சபையில் ஆடுவது கௌரி தாண்டவம்
திருக்குற்றாலம் - சித்திரசபையில் ஆடுவது திரிபுரதாண்டவம்
திருவாலங்காடு - இரத்தினசபையில் ஆடுவது காளிகா தாண்டவம்
திருநெல்வேலி - தாமிரசபையில் ஆடுவது முனிதாண்டவம்

என ஏழு பேதமுடையவர். இதில் தில்லையில் அருளும் தாண்டவம் ஆனந்தத் தாண்டவம் ஆகும்.

இறைவன் ஆடும் ஐந்தொழில் நடனம், சைவம் தோன்றி வளர்ந்த தமிழகத்தில் மாத்திரமின்றி, இந்து சமயமாகி, இந்தியா முழுவதும் கடல் கடந்து கீழை தேசங்களிலும் இலங்கையிலும் பரவியுள்ளது.

இலங்கை தென்னாடெனக் கருதப்பட்டு "தென்னாடுடைய சிவனே போற்றி" எனவும், "தென்னவர் கோன்" என இராவணனும் கருதப்பட்டு ஈழநாடு, ஈழமண்டிலம் எனத் தமிழ் மண்ணாகவே கருதப்பட்டு வந்துள்ளது. ஆனால் இன்று காலமாற்றத்தில் அந்நியமாகக் கருதப்படுகிறது.

தில்லை நடனம்

திருச்சிற்றம்பலத்துள் இறைவன் செய்யும் நடனம் உலகத்தை இயக்கும் பஞ்சகிருத்திய நடனமாதலேயன்றி அனைத்து உயிர் கட்கும் ஆனந்தத்தைப் பொழியும் ஆனந்த நடனமும் ஆகும்.

ஆடற்பெருமானது அனவரத தாண்டவத்தில் உண்டாகும் ஆனந்தம் அளவில்லாப் பேரானந்தமாதலின், அதனை உயிர்கள் நேரே பெற்றுப் பருக இயலாது. இது வாய்க்கால்கள் வழியாகவும், சில கொள்கலன்கள் வழியாகவும்தான் பருகுதல் இயல்பாகும். அதுபோலக் கூத்த பெருமானது எல்லையில் தனிப்பெருங் கூத்தில் வரும் பேரானந்தப் பெருக்கை உயிர்கள் நேரே பெற இயலாது. அதனைப் பெற்று உயிர்கட்கு வழங்குபவர் அன்னை சிவகாமி யம்மையேயாவாள்.

இதனைக் குமரகுருபரர்,

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுன் மருந்து தாயுண்டாங்கு" (3)

என்னும் உவமையால் விளக்குவார். பாலுண்ணும் பச்சைப் பிள்ளைக்கு நோய் வருமாயின் அதற்கு மருந்தூட்டுதல் இன்றியமையாதாயினும்,

அம்மருந்தின் வேகத்தை அதன் மெல்லிய குடல் தாங்கமாட்டாமை கருதி அம்மருந்தைத் தாய் உண்டு தனது பால் வழியாகவே அதனை அக்குழவிக்குத் தருதல் போல, கூத்த பெருமானது திருக்கூத்தின் ஆனந்தத்தைச் சிவகாமியம்மையே இடையறாது நோக்கிப் பெற்று உயிர்கட்கு வழங்குகின்றாள். இவள் அனைத்துயிர்கட்கும் பால் ஊட்டி வளர்க்கும் அன்னையாதலைச் சரவணப் பொய்கைக் கரையில் முருகனுக்குபால் கொடுத்தமையேயன்றி, அப்பெருமானது அவதார மாகச் சொல்லப் பெறுகின்ற திருஞானசம்பந்தருக்குச் சீர்காழியில் திருமுலைப்பால் கொடுத்த செய்தியாலும் நன்கு தெளியலாம். இது பற்றியே உமாபதி சிவாச்சாரியார் தாம் அருளிச் செய்த சேக்கிழார் புராணத்துள் சிவகாம சுந்தரியை,

''பரந்தெழுந்த சமண் முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தை கெடப் புகலியர் கோன் அமுது செய்த திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல் போற்றி!'' (4)

என்று போற்றினார்.

அம்பலத்தில் அல்லும், பகலும் அனவரதமும் ஓய்வின்றி ஆடுகின்ற பெருமானும் அருகில் நிற்கும் அம்மையை நோக்கியே ஆடுகின்றார். அம்மையும் உயிர்களின் பொருட்டு அந்நடனத்தை ஆராக்காதலுடன் இடையறாது கண்டு கொண்டிருக்கிறார். பொன்னம்பலத்திலுள்ள பெருமான் ஆனந்த தாண்டவமூர்த்தியாவார். இதனை,

''அரவும் அம்புலியும் போற்றும்
தில்லையம்பதியில்
பரவும் ஆனந்த தாண்டவம்
செய்வோம் பைம் பொற்பாவாய்'' (5)

என்று புராணம் கூறுகிறது.

பரமசிவன் பஞ்சாட்சரத்தைத் திருமேனியாகக் கொண்டு, பராசக்தியாகிய திருவம்பலத்தில் நின்று உமாதேவியார் காணும்படி வியாக்ரபாதமுனிவர், பதஞ்சலி முனிவர் இருவரும் மெய்யுணர் பெற்றெழ ஆடி அருளுகின்ற திருக்கூத்தை விரும்பியவர்கள் வீடு பேற்றினை அடைவார்கள்.

''மாயை தனை உதவி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தையார் பரதம் தான்'' (6) - உண்மை விளக்கம்

உடுக்கை ஏந்திய திருக்கரத்தினாலே, மாயாமலத்தை நீக்கி, அக்னியேந்திய திருக்கரத்தினாலே கன்ம மலத்தைச் சுட்டு, ஊன்றிய திருப்பாதத்தினாலே ஆணவமல மேலிடாமல் அழுத்தி, தூக்கிய திருவடியினாலே அருளே உடம்பாக நிறுத்தி, அமைந்த திருக்கரத்தினாலே ஆனந்த வெள்ளத்திலே ஆன்மாவை அழுத்துதலே எமது தலைவர் நிறுத்தம் செய்கின்ற முறைமை என்பது இவ்வுண்மை விளக்கத்தின் பொருளாகும்.

உலக உயிர்கள் அனைத்தும் பிறந்து வாழ்ந்து சிறந்து பின் சீவன் சிவத்தை அடைவது இயல்பு. இந்நிலையில் உலகின் இயக்கம் அனைத்தும் அவன் அருளாலே, அவனின் நடனத்தாலே செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. தில்லையில் சிவபெருமான் ஆடியது ஆனந்தத் தாண்டவம் என்பது திண்ணம்.

துணைநூல்கள்

1. மாணிக்கவாசகர் - திருக்கோவையார் (பாங்கன் வினாதல்) தருமைப்பதிப்பு
2. திருஞானசம்பந்தர் - முதல்திருமுறை பதிகம் 132, தருமைப்பதிப்பு
3. குமரகுருபரர், பிரபந்தத்திட்டு, உ.வே.சா. உரை, தருமைப்பதிப்பு
4. உமாபதி சிவாச்சாரியார், சேக்கிழார் புராணம், தருமைப்பதிப்பு
5. கைதிருஞானசம்பந்த குருக்கள், சமயமும் புராணங்களும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

இரமணர் காட்டும் மெய் வழிபாடு

கோ.பி. முருகானந்தம்

ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி
புதுக்கோட்டை

ஆன்மீகத்தையும் (பக்தி) அறிவியலையும் தமிழில் இரண்டு வார்த்தைகள் வேறுபடுத்துகின்றன. அவை ஏன், எப்படி என்பதாகும். ஏன் என்பது ஆன்மீகத்தையும், எப்படி என்பது அறிவியலையும் குறிப்பதாக உள்ளது என்பார் சுகி. சிவம்.

மானுடச் சமுதாயத்தின் அறியாமையாலேயே அச்சம் வந்தது. அவ்வச்சமே ஆன்மீகத்திற்கு வித்தூன்றியது எனலாம். அறியாமை யாலேயே துன்பத்துள் அகப்பட்டு உழல்கின்றனர். வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக, குழப்பங்கள் பெருகியதாக உள்ளது. இன்று உலகெங்குமே அமைதியைத் தேடி எல்லாத் தரப்பினரும் அவரவர் நிலையில் முயற்சிக்கின்றனர். எல்லாத் தரப்பினருக்கும், எல்லா நிலையினருக்கும் ஏற்றது மனதை ஆளுதல் எனலாம். அதேவேளையில் ''இதுவும் கடந்து போகும்'' எனும் நிலையிலாத் தன்மையை உணர வேண்டும். ''நன்மையுந் தீமையும் பிறர்தர வாரா'' எனும் புறப்பாடல் தன்னிடம் இருந்தே தனக்கு இன்பமோ, துன்பமோ விளைகிறது என்கிறது. எனவே தன்னை அறிதலும், தன்னிடமுள்ள அறியாமையைப் போக்குதலுமே 'ஆன்மீகம்' (நித்யானந்தம்) என்கிறார் ரமணர்.

தமிழ் பக்தி இலக்கியத்தில் முன்னோடிகளாகக் கருதப்படுபவர்கள் திருமூலரும், காரைக்காலம்மையாரும் ஆவர். இவர்களில் திருமூலர் தன்னையும் அதாவது தன் உடலையும் இறைவன் உறையும் இடத்தையும் வெவ்வேறென்று கருதாதவாறு இப்படிப் பாடுகின்றார்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே! (திருமந்திரம் - 705)

மேலும்,

உடம்பினை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே (திருமந்திரம் - 704)

என்கிறார். ரமணரும் உன்னை நோக்கி உள்ளே செலுத்து. அங்கேதான் நீ இறைவனைக் காண்பாய், ஒவ்வொரு மனிதனும் பிரபஞ்சம் எனும் போது உன்னுள் இல்லாத எதுவும் வெளியில் இல்லை. உள்ளே தேடு என்கிறார்.

ஆன்மாவைத் தேடல்

நாம் உண்மையான உணர்வைத் தேடுகிறோம். அதை எங்கே கண்டுபிடிப்பது? நம் ஆன்மாவிற்கு வெளியில் அதைக் கண்டுபிடிக்க முடியுமா? அதை உள்ளேதான் கண்டுபிடிக்க வேண்டும். எனவே உள்நோக்கிச் செலுத்தப்படுகிறீர்கள். உணர்வின் இருப்பிடம் இதயமே. இதயமே உணர்வு. அப்படியானால் உள்நோக்கிச் செலுத்துவது எதை? எதற்குள், அது வெளியில் அலையும் மனதை என்றால்; எதற்குள் என்பதில் இருக்கும் தனக்குள் என்பதன் சுட்டு எது? அது நான் என்றால் நான் என நாம் சுட்டும்போது நம் வலக்கை விரல் வலது மார்பையே சுட்டுகிறது. இருந்த போதும் நான் என்பது இந்த உடலைக் குறிப்பதா? உள்ளத்தைக் குறிப்பதா? நான் என்பது யார்? இதுதான் நம்மை நாம் உணர்ந்துகொள்ளத் தேவையான முதற்கேள்வி. இதற்கு ரமணர் தூலதேகம் (Physical body) சப்த தாதுக்களால் ஆனது. இரதம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்கிற ஏழு தாதுக்கள். நாம் அதனைத் தான் 'நான்' என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் அது 'நான்' அன்று.

ஞானேந்திரிய விஷயங்களான சப்தம், ஸ்பரிசம், உருவம், ரஸம், கந்தம் ஆகியவற்றைத் தனித்தனியே அறிகிற செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்கிற ஞானேந்திரியங்கள் ஐந்தும் 'நான்' ஆகாது.

வசனம், கமனம், தானம் மலவிமர்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கிற வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்தும் 'நான்' ஆகிவிடாது.

சுவாசம் முதலான ஐந்தொழில்களைச் செய்யும் பிராணாதி பஞ்சவாயுக்களும் 'நான்' அன்று.

நினைக்கின்ற மனமும் நான் அல்ல.

விஷய வாசனைகளுடன் பொருந்தி இருக்கும் அஞ்ஞானமும் நானன்று. நான் அதுவல்ல, நான் இதுவல்ல என்று ஒதுக்கிவிடும் அறிவு இருக்கிறதே அதுதான் 'நான்' என்பது. அறிவின் வடிவம் சச்சிதானந்தம் (சத்து + சித்து + ஆனந்தம்).

உலகத்தின்பால் நீங்கள் வைத்த பார்வை (பிரியம்) நீங்க வேண்டுமானால் மனம் அடங்க வேண்டும். அப்போதுதான் சுய

தரிசனம் வாய்க்கும். அந்த சுயதரிசனம் எங்கே கண்டுணர்கின்றீரோ அதுவே நான்.

உணவுக் கட்டுப்பாடும் உள்ளக் கட்டுப்பாடும்

சூழலும் காட்சிகளும் எப்படி உள்ளத்தை இயக்குகின்றனவோ, அதுபோலவே உணவுக்கும் உள்ளத்துக்கும் நேரடித் தொடர்புகள் உள. மனிதமனம் எப்போதும் இன்பத்தை நோக்கியே விழைகிறது. இவ்வின்பத்தேடல் துன்பத்தில் தள்ளவும் தயாராகவே உள்ளது. இப்போதுதான் எது துன்பமற்ற இன்பம் என்ற தன்னுணர்வும், வாழ்க்கைச் சிக்கலில் சிக்கிக் கொள்ளாமலும் இருக்கத் தேவையான வழித் தேவைப்படுகிறது. அப்போதுதான் உள்ளக் கட்டுப்பாடு என்பதே உரிய வழியெனலாகிறது. உள்ளம் (எண்ணங்கள்) அடங்க வேண்டுமென்றால் உடலைச் சரியாக வைத்துக்கொள்ள வேண்டும். அதுவே உயிர் வாழ்க்கைக்கும் உறுதுணையாக அமையும்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார் (திருமந்திரம் - 704)

எனும் திருமூலர் வாக்கு நினைத்தற்குரியது.

உண்ணும் உணவே மனத்தைப் பாதிக்கிறது. மனம் உணவால் தான் போஷிக்கப்படுகிறது என்கிறார் ரமணர். மேலும் வேதாந்த நூல்கள் குறிப்பாக 'விசாரசங்கிரகம்' என்ற நூல் பட்டினிக் கிடத்தலை வலியுறுத்தினாலும் உணவு, நீர் இவற்றிலிருந்து நீங்கி இருக்க வேண்டும் என்று கூறவில்லை. உடலைப் பாதிக்காமல் தியானத்திற்கு உகந்த குறைந்த உணவை உட்கொள்ள வேண்டும். ரொட்டி, பழம், காய்கறி, பால் போன்ற சாத்துவிக ஆகாரங்கள் அளவாக உண்பதன் மூலம் ஆன்மீகப் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட முடிகிறது. எல்லா உணவிலும் நுண்மையான சுவை உண்டு அதுவே மனத்தைப் பாதிக்கிறது. சத்துவ உணவு தியானத்தை வளர்க்கும். ராஜஸ, தாமஸ உணவு அதற்குத் தடையாகும் என தன் அனுபவத்தைக் கூறுகின்றார் ரமணர்.

இதயத்திடம் மனதை இழ

மனம் எப்போதும் இருப்புக் கொள்ளாது அலையும் இயல்புடையது. மனமே (எண்ணம்) நம் இயக்கத்திற்குக் காரணமாக அமைகிறது. மனதை இதயத்தில் மூழ்கடிக்கும் போது இயக்கமற்ற பூரண அமைதி கிடைக்கிறது.

இதயம் ரத்த சுத்திகரிப்புச் செய்யும் அங்கம் அன்று 'ஹிருதயம்' என்பதற்கு இதுவே மையம் என்பது பொருள். ஆகவே அது ஆன்மாவைக் குறிக்கிறது. ஸ்தூல இதயம் இடது பக்கத்தில்

இருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் நான் பேசுகின்ற இதயம் வலப்பக்கத்தில் இருக்கிறது. இது எனது அனுபவம் இதற்கு வேறு சான்று தேவையில்லை. இருப்பினும் மலையாள நூல் 'அஷ்டாங்க ஹிருதயத்தில்', கீதா உபநிஷத்தில் இது உறுதிப்படக் கூறியிருப்பதைக் காணலாம் எனும் ரமணர் பிரபஞ்சம் முழுவதும் உடலில் இருக்கிறது. உடல் முழுவதும் இதயத்தில் அடங்குகிறது. எனவே பிரபஞ்சம் இதயத்தில் அடக்கம் என்கிறார். என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்பதன் நுட்பம் எண்ணுதற்குரியது.

அறை இருட்டாக இருக்கும்போது வெளிச்சம் தர அங்கே விளக்கு தேவை. ஆனால் சூரியன் உதித்தபின் விளக்கிற்குத் தேவை இல்லை. சூரியனைக் காண விளக்கேதும் தேவையில்லை. அது தானாவே ஒளிவிடும். மனமும் அப்படியே உலகப் பொருள்களைக் காண மனத்தின் பிரதிபலிக்கப்பட்ட ஒளி தேவை. ஆனால் இதயத்தைக் காண மனதை அதனை நோக்கித் திருப்பினால் போதும். பின் மனம் அதில் இல்லாது போகிறது. இதயம் மட்டும் ஒளிவிடுகிறது.

மூளையைக் கொண்டு கவனம் செலுத்தப் பெறும்போது சூடு, தலைவலி போன்றவை உண்டாகும். இதயத்தில் கவனம் செலுத்தினால் அது குளிர்ச்சியாகவும் புத்துணர்ச்சியைத் தருவதாகவும் அமையும் எனத் தான் உணர்ந்த உணர்வைக் கூறுகின்றார்.

ஆசனமும் பயனும்

ஆசனங்கள் பொதுவாக உடலை வலுப்படுத்தவும் உடல் அவயங்களைச் சீராக்கவும், ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ளவும் என்பது போல் தோன்றும். ஆனாலும் ரமணர் ஆசனம் என்பது எது அதன் சிறப்பு என்ன என்பது போன்ற தன் அனுபவங்களை இப்படிக் கூறுகின்றார்.

ஆசனம் என்பதற்குத் பொருள் 'ஆன்மாவில் ஊன்றி உள்நோக்கி இருத்தலே' மனத்தின் ஒருமுகப்பட்ட தன்மையே மிகச்சிறந்த ஆசனம். ஆசனம் ஸ்திரியமாக உட்காருவதற்கு ஏற்பட்டது. ஆசனங்கள் பல வகை இருந்த போதும் இதயத்தில் இருக்கும் ஆசனமே அமைதியையும் மகிழ்ச்சியையும் தரும். அந்த ஆசனத்தில் இருப்பவர்களுக்கு வேறு எந்த ஆசனமும் தேவையில்லை. அதற்குப் பெயர் சுகாசனம். மேலும் புலித்தோல், கம்பளி, மான்தோல் ஆகியவற்றை ஆசனமாகக் கொள்வதால் ஏற்படும் குணங்களும் விளைவுகளும் பற்றி யோக நூல்கள் கூறுகின்றன. அவை காந்த சக்தியை உண்டாக்க வல்லவை. ஆனால் ஞான மார்க்கத்தில் இதெல்லாம் முக்கியமானது அன்று என்று தெளிவு படுத்துகின்றார்.

கருவியும் கருவி தான் இயங்கும் சக்தியும் தனக்குள்ளேயே இருப்பதில்லை. கருவி வேறாகவும் இயக்க சக்தி வேறாகவுமே உள்ளது. ஆனால் தேவையானதெல்லாம் இயங்கும் தகுதியோடு கருவி இருக்க வேண்டும், இக்கருவியை இயக்கும் அளவுக்குச் சக்தி இருக்கவேண்டும்.

நம் உடலுக்கும் இயக்கத்திற்கும் உள்ள தொடர்பு கூட இப்படிப் பட்டதுதான். உடல் வெறும் கருவிதான். இயக்க் சக்தி வேறு. உடல் தானே இயங்குகின்றது என்றால் பிறப்புக்கு முன், இறப்புக்குப் பின் உடல் எது? இருந்ததா? அல்லது இருக்கின்றதா? இயங்கியதா? இயங்குகிறதா? இந்தக் கேள்விகளையெல்லாம் நினைத்தற்குரியது.

சரணாகதி பற்றிய பேச்செல்லாம் வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அவருக்கே நிவேதனம் செய்தலைப் போன்றது. உங்கள் உடல், பொருள், ஆவியை இறைவனுக்கு ஒப்படைப்பதாகச் சொல்கிறீர்கள். அவற்றை இறைவனுக்குக் கொடுக்க அவை யெல்லாம் உங்களுடையது தானா என்ன? என்கிறார் ரமணர்.

அப்படியென்றால் யார் கொடுத்தாரோ அவருடையது இவை யெல்லாம் என்று உணர்கிறீர்கள். அதனால் என்னுடையதென்று உரிமை (நான் என்று) கொண்டாடுவதினின்று (துன்பத்தினின்று) விடுதலை பெறுகிறீர்கள்.

தன்னைவிட உயர்ந்த சக்தியை உணரும் போதுதான் அகந்தை சரணடைகிறது. இல்லையேல் கோபுரத்துப் பொம்மையைப் போல் அது தானே கோபுரத்தைத் தாங்குகிறது என்ற பொய்யான எண்ணத்தில் நிலைத்திருக்கிறது. உயர்சக்தி இல்லாமல் அகந்தை இல்லை. ஆனால் அகந்தை தானாகவே இயங்குவதாக நினைத்துக் கொள்கிறது. இதனால் ரமணர் முழு சரணாகதியில் தான் இறையருளே கிடைக்கிறதென்கிறார்.

திருவாவினன்குடி வெளிப்படுத்தும் புராணங்கள்

ப. இராசமாணிக்கம்

த.உ.க. கலைக் கல்லூரி
தஞ்சாவூர் - 2

அருணகிரிநாதர் தாம் இயற்றியருளிய திருப்புகழில் மூன்றாம் படைவீடாகிய திருவாவினன்குடி எனப்படும் 'பழநி'யம்பதியைப் பற்றிப் பாடும்போது இருபத்தைந்து புராண வரலாறுகளைக் குறிப்பிட்டுப் பாடுகிறார். மணிபூரக சேத்திரமான பழநியைப் பற்றி மொத்தம் 97 பாடல்களே உள்ளன.

1. பிறவிக் கடலைக் கடக்கும் நெறி, 2. மௌன உபதேச வரலாறு, 3. ஆணவம் அகறல் என்ற மூன்று தலைப்புகளின்கீழ் புராணச் சிறப்புகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பிறவிப் பெருக்கடல் கடக்கும் நெறி

உயிர்கள் அடையும் துன்பங்கள் பலவற்றையும் ஆராயுமிடத்து, அவையனைத்தும், சிற்றறிவு காரணமாக உலக இன்பத்தை விரும்புல் பொருட்டேயாம். பசியும், பிணியும் ஒருவாறு போக்கப் பட்டாலும் மூப்பும், சாக்காடும் தவிர்க்க முடியாதவை. இத்துணை இன்னல்களுக்கிடையிலும் புகழ், போகம், சுற்றத் தொடர்பு பெறுவதையே மனம் விரும்புகிறது. துன்பங்களுக்கு அடிப்படை யானது ஆசை. ஆசையினால் விளைவது பிறவி, உடம்போடு கூடி நிற்கும் நிலை. இதுபற்றித் திருஞானசம்பந்தரும், 'பிறவியால் வருவன கேடுள' என்று கூறுகிறார். மணிமேகலையும்,

பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்

என்று கூறுகிறது.

இறைவன் திருவடி நிழலை அடைய மனம், மொழி, மெய்களின்வழிச் செல்லும் அவாவினை அறுத்துப் பேரின்பமாகிய வீட்டின்பத்தை அடைய வேண்டும் என்ற எண்ணங் காரணமாகவே,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவ னடிசேரா தார்

என்று வள்ளுவப் பெருந்தகையும் குறிப்பிடுகின்றார்.

இதுபற்றியே அருணகிரிநாதரும்

பிணிபட்டு உணர்வற்று அதுமுற்று இயமற்
பெறும் அக்குணம் உற்று உயிர்மாளும்
பிறவிக் கடல்விட்டு உயர்நற் கதியைப்
பெறுதற்கு அருளைத் தரவேணும் (பா. 13)

என வேண்டுகிறார்.

அருணகிரிநாதருக்கும் இவ்அச்சம் உண்டு என்பதை இவ்வரிகள் மெய்யாக்குகின்றன. பிறவிப் பெருங்கடலில் தத்தளிக்கும் உயிர்கள் தமது திருவடியாகிய புணையைப் பற்றியவுடன் அவர்களை முக்திக் கரையில் சேர்ப்பவன் முருகன். ஆதலால் கருணை மூர்த்தியாம் முருகனை நினைந்து 'சுவர்க்கலோக மீகாம சமஸ்த லோக பூபால' எனக் கூறுகின்றார்.

இறைவன் திருவடி ஒன்றே அதற்குரிய அரிய புணை என்பதை,

உறவுமுறை மனைவிமக வெறுமலையில் எனதிதய
உருவுடைய மலினபவ சலராசி யேறவிடும்
உறுபுணையும்

எனச் சீர்பாத வகுப்பில் அருணகிரிநாதர் கூறுகிறார்.

உடம்புக்கு மூலகாரணம் வினை. நல்வினை தீவினை இரண்டுமே உடம்பைத் தருகின்றன. நல்வினையாயினும், தீவினை யாயினும் பிறப்பைத் தருகின்ற அவலங்கள்தாமே. வினையைப் பற்றிப் பட்டினத்தாரும்

வினைப்போகமே ஒருதேகங்கண்டாய் வினைதான் ஒழிந்தால்
தினைப் போதளவும் நில்லாது

என்கிறார். வினை நீங்க உடம்பு ஒழியும், உடம்பு ஒழிய நோய் நீங்கும்.

விதிகாணும் உடம்பை விடா வினையேன் (அநுபூதி - 35)

என்ற வரியில் அருணகிரிநாதர் வினைக்கும் உடம்புக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிக் காட்டுகிறார்.

மௌன உபதேசம்

உலகிய மனிதனாய்ப் பிறந்த (வளர்கையில்) ஐந்த வயதிற்கு மேல் பேச ஆரம்பித்த இறப்புவரை பேசிக்கொண்டிருக்கிறோம். எதைப் பேசுகின்றோம் எப்படிப் பேசுகிறோம். யாரிடம் பேசுகிறோம், பொருளுடையதா? பொருளற்றதா? இளையவரிடத்துப் பேசு கின்றோமா? பெரியவரிடத்துப் பேசுகின்றோமா? என்றெல்லாம் எண்ணிப் பார்க்காத சமூகத்தில் ஆணவமே தலை விரித்தாடுகிறது.

'சும்மா இரு சொல்லற' என்ற ஞானோபதேசங்களெல்லாம் கேட்ட பிறகும் இந்நிலை தொடர்கிறது. அறியவொட்டாமற் செய்யும் ஆணவ மலத்தை நீக்கி சிவத்தை அடையும் செந்நெறியைக் காட்ட விழையும் போது அருணகிரிநாதர் முருகப் பெருமானை,

மவுனபதே அம்பு மதியறுகுவேணி தும்பை
மணிமுடியின் மீதணிந்த
மனமகிழ வேய ணைந்து வொருபுறம தாகவந்த
மலைமகள் குமார துங்க வடிவேலா (பா. 27)

என்று அடிகளால் வருணிக்கிறார்.

'காட்ட தனவெல்லாம் காட்டி சிவம் காட்டி' என்று மாணிக்கவாசகர் கூறுவதைப்போல சநகர், சனந்தனர், சநாதனர் சனத்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களும் தேவங்களையும், உபநிடதங்களையும் கற்று மனமடங்கப் பெறாதவராய் உள்ளுவார் வினையகற்றும் நீலகண்டப் பெருமானை அடைந்து தம் வேண்டுகோளைக் கூற எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமான் அவர்களினும் மேலான முனிவர் உருக்கொண்டு புன்முறுவல் பூத்து, திருக்கரமொன்றனைத் திருமார்பிற் சேர்த்து, சின்முத்திரை காட்டி, ஒரு கணப்பொழுது 'அப்பொருள் இவ்வாறிருக்கும்' என மோன நிலையில் நின்றருளினார்.

கரதலம் ஒன்று சேர்த்தி மோன முத்திரையைக் காட்டி
ஒருகணம் செயலொன்று இன்றி யோகுசெய் வாரினுற்றான்

என்று கந்தபுராணம் அந்நிகழ்ச்சியினைக் குறிப்பிடுகிறது.

சனகாதி முனிவர்கள் நால்வரும் ஐயமெல்லாம் நீங்க மனமொடுங்கி ஆலவாய் அண்ணல்கீழ் பேரானந்தப் பெருவெள்ளத்தில் திளைத்தார்கள் என்பதை,

சொல்லரிய நெறியையொரு சொல்லால் உணர்த்தியே
சொருபா அனுபூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லாலடிக்குள் வளர்சித்தாந்த
முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்த
குருவே

என்று தாயுமானவர் விளக்குகிறார்.

இன்றைய உலகினர் மாதத்தில் ஏதோ ஒரு நாளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அந்நாளில் வாய்பேசாது மௌனமாக இருப்பதை நாம் அறிகின்றோம். இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக முன்னபே இதுபற்றிய செய்திகளை ஞானிகள் பேசியிருப்பதைப் புராணங்கள் வழி அறியமுடிகிறது.

ஆணவம் அகறல் (காளி)

அருணகிரிநாதர் முருகனை வாழ்த்திப் பரவுமிடத்து தெய்வத்திற்கு ஏற்ப ஆணவத்தைக் களைத்த சிவபெருமானின் அற்புத நடன நிகழ்ச்சியினை,

அறுகினை முடித்தோனை யாதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதையே யெனவும் வருவோனே

என்ற பாடலின் வாயிலாக விளக்குகிறார்.

முன்பொரு சமயம் சும்பநிசும்பனை வதம் செய்த உமாதேவியாருக்கு மேலும் இன்னலைத் தரவிரும்பி, சும்பநிசும்பர் களின் தங்கை குரோதியின் மைந்தன் இரத்தபீசன் வெகுண்டெழுந்து சமர் புரியலானான். அவன் உடம்பினின்று உதிரும் ஒருதுளி உதிரம் தரைமேல் விழுந்தால் அவனைப்போல் ஆயிரம்பேர் தோன்றுவார் என்பது அவன் பெற்ற வரம்.

அப்பொழுது அவளைக் கொல்லக் கருதிய உமாதேவியின் தன் தோளிலிருந்து காளிதேவியைத் தோன்றச் செய்து சமர் புரியும் போது அவள் உடம்பில் வெளிப்படும் குருதியைக் கைக் கபாலத்தில் ஏந்திக் குடிக்கச் செய்து இரத்தபீசனை அழித்தாள்.

வெற்றிக்கு உதவிய காளி தேவிக்குச் 'சாமுண்டி' என்ற பட்டமளித்து வரமளித்து மகிழ்ந்தாள் உமாதேவி.

பெற்ற வரங்களும், பட்டங்களும் தலைக்கேற ஆணவத்தின் உச்சியில் நின்று பல்வேறு கொடுமைகளும் புரியத் தொடங்கினாள் காளி.

திருமாலின் தலைமையில் தேவர்கள் என்றுகூடி கைலையம்பதி வாசனிடம் முறையிட ஆறுதல் அளித்துப் பொருக்கெனப் போருக் கெழுந்த சிவபெருமானிடம் சமர் புரிய முடியாமல் தோற்று (திருத்தயுத்தம்) நடனப் போட்டிக்குச் சிவனாரை அழைத்தார்.

அற்தம், ரௌத்ரம், கருணை, குற்சை, சாந்தம், சிருங்காரம், பயம், பெருநகை, வீரியம் என்றும் நவரசங்களும் அபிநயமும் விளங்க சண்ட தாண்டவம் ஆடியருளினார்.

ஆடலின் வேகத்தில் சிவபெருமான் திருச்செவியிலிருந்து குண்டலம் நிலத்தில் விழ, ஆட்டத்தை நிறுத்தாமல் தன் திருவடி யொன்றால் எடுத்துத் தரித்து 'ஊர்த்துவ தாண்டம்' புரிந்தார். தம்மால் முடியாது என்றும் தான் ஒரு பெண் என்றும் முதன் முதலாக உணர்ந்த காளிதேவி வெட்கித் தலைகுனிந்து மருகி நின்றாள் என்பதை,

மடிதரு முலக மென்ன வயங்கரு ணல்கி மெல்ல
அடி பெயர்ந்தாடல் செய்ய அருகுறுங்காளி நோக்கி
ஒடிவுறு நாணின்மேவி ஒளிமுகம் இறைஞ்சி யொல்கி
வடிவுறு பாவைபோலச் செயலற மயங்கி நின்றாள்

என்று அற்புதமாகக் முடிக்கின்றார்.

குடிகளைக் காக்கும் தெய்வத்திற்கே இத்தகைய செருக்கு ஏற்பட்டது என மேலோட்டமாக எண்ணினாலும் சமூகத்தில் உயர்மதிப்பில், அந்தஸ்தில் இருப்பவர்களிடம் பணிவு வேண்டும் என்பதைச் சூசகமாக, தெய்வத்தைக் காட்டி, உணர வைக்கின்றார் அருணகிரிநாதர்,

யான் எனது என்றும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்

என்று வள்ளுவரும் குறிப்பிடுகின்றார். மயக்கத்தை அறுக்க வேண்டும் அறுத்தால் பிறவாப் பேரின்ப நிலை கிட்டும் என்பதை உணர்ந்தவர் அருணகிரிநாதர்.

எனது யானும் வேறாக எவரும் யாதும் யானாகும்
இதய பாவனா தீதம் அருள்வாயே (கந்தரநுபூதி)

என்று கந்தரநுபூதியில் முருகனைப் பாடிப் பரவுகிறார்.

ஆணவத்தைப் பற்றி மேலும்,

ஆணவ அழுக்கடையும் ஆவியை விளக்கிஅறு
பூதியடைவித்த ஒரு பார்வைக் காரன்

என்று திருவகுப்பிலும் பேசுகிறார்.

ஒருவன் எந்தெந்தப் பொருள்களிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கிறானோ, ஆணவச் செருக்கை அகற்றியிருக்கின்றானோ அவன் துன்பம் அடைவதில்லை. மெய், வாய், விழி, நாசி, செவி என்றும் ஐம்பொறிகளின் வழி செல்லும் அவாவை அகற்றி முருகன் அருள் பெற்றுப் பரகதி அடைய வேண்டும் என்பதே அருணகிரிநாதர் சமூகத்திற்கு வைக்கும் வேண்டுகோளாகும்.

முடிவுரை

'குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை' என்பது ஆன்றோர் கண்ட உண்மை. குருவாய் நின்று பிரணவத்தைத் தந்தைக்கு உபதேசித்தவன் முருகப் பெருமான். தமிழ்க் கடவுளாம் அறுமுகப் பெருமானை வணங்குந்தோறும், சமயக் காழ்ப்புணர்ச்சி இல்லாத நிலையில் அருணகிரிநாதர் வணங்குகின்றார்.

செந்தமிழும் சிவப்பிரகாசரும்

பி. சரவணக்குமார்

புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி - 14

ஒரு படைப்பு படைப்பாளனையும், அவன் வாழும் மண்ணையும் முன்னெடுத்துச் செல்வதாக அமையுமேயானால் அந்தப் படைப்பு நிலைபெற்றதாக அமையும். படைப்பாளன் தான் வாழும் சூழ்நிலைத்தாக்கத்தின் எதிரொலியாகத் தன் படைப்புகளின் பாடுபொருள் வழியே தன்னையும் தன்னுடைய படைப்புகளையும் உணர வைக்கின்றான்.

சிவப்பிரகாசர் தன்னுடைய படைப்புகளில் சமயம், மொழி, இலக்கியத் தாக்கங்கள், பிற சமய எதிர்ப்பு, தருக்கம், சாத்திரங்கள் போன்றவை பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றார்.

கம்பனுக்கு ஒரு ''சடையப்ப வள்ளல்'', குமரகுருபரருக்கு ஒரு ''திருமலைபூபதி'' போலச் சிவப்பிரகாசருக்கு ''சிவஞானி'' வாய்த்தார். சிவஞானி ஆதரித்தவர் மட்டுமில்லாமல் ஞான குருவாகவும் விளங்கினார்.

இக்கட்டுரை தன் குருவின் மீது சிவப்பிரகாசர் பாடிய ஐந்து சிற்றிலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மொழிச் சிந்தனையைப் பற்றி ஆராய முற்படுகின்றது.

மொழி

''சமூகத்தின் அங்கங்களிடையே ஓர் ஒருமைப்பாடு ஏற்பட மொழி, சமயம் ஆகியவை உதவக்கூடும்'' என்கிறார் ஆகஸ்ட் கோம்ட்.

மொழி எல்லோரையும் பிணைத்துக்கட்டுகிற ஒரு நீண்ட சங்கிலி. கருத்துப் பரிமாற்றத்திற்கும் தொடர்புக்கும் அது கருவி யாகப் பயன்பட்டு எல்லோரையும் ஒருங்கிணைக்கிறது.

தமிழ்ச் சூழலில் முருக வணக்கம் என்பது வெறும் தெய்வ வணக்கமாக மட்டும் இல்லாமல் ''தமிழ் மொழி'' வணக்க மாகவும் இருந்தது என்பதைச் சிவப்பிரகாசரின் பாடல் அடிகள் உணர்த்தும். இதை,

''............தமிழக் குறுமுனிவற்(கு)
அறித லறித லிலாமை போய்
அறிவே யாக யுல கொழிய
அருள் செய் சுடற்வேற் பெருமாளே''

(சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், காப்புப்பருவம், பா. 5, ப. 13)

என்னும் இவ்வரிகளில் ''அகத்தியனுக்குத் தமிழ் தந்த முருகனே என் சிவஞானிக்கும் அருள் தந்து காப்பாயாக'' என்கிறார். தன் ஞானாசிரியரைச் சிவமாகப் பார்ப்பது இவரின் கொள்கை. தந்தைக்கு உபதேசம் செய்த முருகனே தமிழாக இருப்பதால் அவனின் ஆருள் வேண்டி நிற்கின்றார்.

மறை என்பது எழுதாக்கிளவி என்று உரைக்கப்படுவது. ஆனால் தமிழோ இறைவனால் எடுத்து மொழியப்பட்டதும், எழுதப்பட்டது மாகிய சிறப்புகளை உடையது. சுந்தரருக்குப் ''பித்தா'' என்றும், சேக்கிழாருக்கு ''உலகெலாம்'' என்றும் அடி எடுத்துக் கொடுத்தவன் மாணிக்கவாசகருக்குப் படியெடுத்துக் கொடுக்கின்றான் என்பதை,

''................
விரித்த மறை யொருநான்கு மெழுதுகில மெனவோர்
வீறுடைப் பொற் கொன்றை புனை விரிசடையோனெழுதத்
திருந்து தமிழ்க் கோவையொரு நானூறு முரைத்த
திருவாத வூரனெனுஞ் செழுமலர்க்கற் பகமே''.

(சி.பா.சு.பிள், பா. 9, ப. 23)

தமிழ் மொழி இலக்கண வரம்புடைமையான் ''திருந்து தமிழ்'' என்றும் தமிழில் சிறப்பாக அமைந்துள்ள கோவை நூலாதலின் ''தமிழ்க் கோவை'' என்றும் மணிவாசகரின் நூலைக் குறிப்பிட்டார்.

அவர் தமிழ் என்றால் அது சங்கமேறிய தமிழே என்பார். தன் போன்ற அடியார்கள் கொண்ட தமிழைக் கருதியவர் சிவப்பிரகாசர் என்பதை பின்வரும் வரிகள் குறிக்கும்.

''...............
செழுமலர்ப் பொழிற் கூடற்
பலகை மீதுமுன் னுயர்த்துள செந்தமிழ்ப்
பழுமலர்த் தொடை வீழ்ந்து
....
...இக்கொடுந் தமிழ்ப்புகர்ச் செம்மொழிப்
புதுமலர்த் தொடையாரம்
உலகெ லாம்புகழ் திண்புயத் திணிபவன்!
..............''

(சி.பா.சு. பிள், பா. 100, பக். 197, 198)

சங்கப் பாக்கள் பழமையாதலின் ''செந்தமிழ்ப் பழமலர்த் தொடை'' என்றார் இஃது ''தொடுக்குங் கடவுள் பழம் பாடல்'' என்னும் குமரகுருபரரின் வரிகளோடு ஒப்புநோக்கத்தக்கது. ''தமிழ்ப் புகர்ச் செம்மொழிப் புதுமலர்த் தொடையாரம்'' என்பது சிற்றிலக்கியத்தின் தோற்றப் புதுமையைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

அடிகள் தமிழ் மட்டுமின்றிச் சமற்கிருதம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகளிலும் புலமை பெற்றவர் என்பதைத் தமிழ் உலகம் நன்கு அறியும். இவரது காலத் தமிழகம் நாயக்கர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அவர்களது தாய்மொழி கன்னடம் மற்றும் தெலுங்காயிருந்தது. மேலும் வடமொழியையும் ஆதரித்து வளர்த்தார்கள். இவர்களது காலத்தில்தான் பசவரால் நெறிப்படுத்தப் பட்ட வீரசைவமும் தமிழகத்தில் புகுந்தது. வீரசைவரான அடிகள் அயல்மொழிகளைப் பின்பற்றாமல் தமிழையே பின்பற்றி நிற்கின்றார் என்பதை அவர் வாய்மொழியாகவே பார்க்க முடியும். இதை,

''.....................
சிவஞான தேவன் திருமுன் - தவஞானத்
தாலாட்டு எனுந் தமிழைக் சாற்றுதற்கு நற்றுணையாம்....''
(சிவ.பா.சு. தாலாட்டு, காப்பு, ப. 1)

என்னும் பாடல் அடிகள் உணர்த்தும்.

விருப்பு வெறுப்பு இல்லாத சிவஞானியும் தமிழ் மீது விருப்புடையவர் என்பதை அடிகள் ''நல்லிசைத்தமிழ் மாலை சூடியபுகழ் நல்லவா!'' (சிவ.பா.சு. பிள், தா, பா. 28) என்னும் பாடல் அடிகள் மூலம் உணர்த்துகின்றார்.

''தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'' என்னும் அப்பரின் வழிவந்த அடிகள் வீடுபேற்றினை விரும்பும் அடியார்களுள் ''தமிழ்ச் சொல் மலர் நினக்கணியும் பிறவியே வேண்டுவன்'' (சோணசைல மாலை) என்று மொழிகின்றார்.

திருமணம் என்பது தான் கொண்ட சமயப்பற்றுக்கும், தனது இலக்கியப் பணிக்கும் தடையாக இருக்குமோ என அவர்கருதியதை,

''....................
அடியனேன் தமிழ்க்குக் கலந்துட னிருந்த
வரிவையைப் பிரிவுசெய் திடுக....''
(சிவ. பா.சு. கலம்பகம், பா. 4, ப. 123)

என்னும் வரிகள் உணர்த்தக் காணலாம்.

அடிகளின் எண்ணத்தைப் பறைசாற்றும் அவரது இளவல் கருணைப்பிரகாசர் கீழ்வருமாறு குறிப்பிடுவார்.

''.....புலவர் நெஞ்சம்
மருளும் இன் தமிழ்ப்பா மாலை
சினவிடை யவர்க்கே சாத்தும்
சிவப்பிரகாசன்...''

(சிவப். சு. சீர். மாலைத்திரட்டு, பா. 1, ப. 21)

என்பதால், அடிகள் தமிழ் நெஞ்சினராகவும் சிவத்தை உயிரெனக் கருதியவராகவும் வாழ்ந்தார் என்பது தெளிவு.

சிவப்பிரகாசர் தம் ஞானாசிரியர் மீது பாடிய பாடல்கள் தவிர ஏனைய படைப்புகளிலும் மேற்குறிப்பிட்டவாறு தன் மொழிச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார்.

மானுடர்காள் வம்மின்

சு. விஜயகாந்தி

ஸ்ரீமத் சி.பா.சு. தமிழ்க்கல்லூரி
மயிலம் - 604 304

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனும் குறிக்கோளின் வழி வாழ்ந்தவர்கள் இறையடியார்கள். எனவே அவர்கள் தாம் பெற்ற இறையின்பத்தை இச்சமூகம் பெற்று உய்யக் கருதி ஏட்டில் பதித்தனர். அவ்வகையில் சமயக்குரவர் முதலிய அடியார் வரலாற்றைத் தம் இலக்கியங்களில் ஆங்காங்கே சூழலுக்கேற்ப சுட்டி, மகிழ்ந்தவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். இவர் ஞானசம்பந்தர் தம் திருமணப்பந்தலில் முக்தி வழங்கிய நிகழ்வினைச் சுட்டிய பாங்குரைப்பது இவ்வாய்வு.

1. சுட்டிய இடங்கள்

சம்பந்தரின் திருமண நிகழ்வு சுட்டப்பெற்ற இடங்கள் மொத்தம் நான்கு. அவை :

1. *சோண சைலமாலை - 1*
2. *நால்வர் நான்மணிமாலை - 1*
3. *திருவெங்கைக் கலம்பகம் - 1*
4. *சிவஞானபாலய தேசிகர் கலம்பகம் - 1*

இந்நான்கு இலக்கியங்களுள் மாலை இலக்கியங்கள் - 2, கலம்பக இலக்கியங்கள் - 2.

திருமண நிகழ்வு

சைவ உலகில் சமயப்புரட்சிக்கு வித்திட்ட சம்பந்தர் தம் 16-ஆம் வயதில் பெற்றோர் விருப்பத்தின்படி திருமணத்திற்கு இசைந்தார். நம்பியாண்டார் நம்பி என்பவரின் மகளைத் திருநல்லூரில் பெருமணம் எனும் திருக்கோயிலில் மணம் செய்தார். திருமணத்தின் பொருட்டு வளர்க்கப் பெற்ற வேள்வித் தீயை வலம் வரும் போது பிறவிப் பிணி நீங்க எண்ணினார். 'நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய வேதனின் தாள் தொழ வீடு எளிது' (3-125-10) என்றார். திருமணத்திற்கு வருகை தந்த அனைவரையும் வம்மின்! வம்மின்! என்றழைத்தார். 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' எனும் காதல் மெய்ப்பதிகம் பாடியபோது, சிவன் தோற்றுவித்த சோதியுள்

காதலியுடன் கலந்தார். திருநீலநக்கர் போன்ற அடியார்களும் மற்றும் பெற்றோரும் உற்றோரும், வருகையுற்றோர் யாவரும் சோதியுள் கலந்து எளிதில் முக்தியுலகு சென்றனர்.

இரங்கல் விண்ணப்பம்

இறைபதம் பெற விழையும் அடியார்கள் இவ்வுலகியலில் உழன்றமை நினைந்து வருந்தி, முக்திப் பெற விழைவது மரபு. அவ்வகையில் புலவர், திரு. வெங்கைவாணரிடம், தன்னிலைக்காக, இரங்கி முக்திக்கு முறையிடுகிறார். அவ்வமயம் புலவருக்கு முக்தி விருந்து நல்கிய சம்பந்தரின் திருமண நிகழ்வு நினைவுக்கு வருகிறது.

''வாட்டுபவம் கொல் புகலி வண்புலவன் பேரின்ப
வீட்டுபவம் கொள்ளை கொளவிட்ட நாள் கேட்டு வராது
எப்பிறப்பில் எங்ஙன் இருந்து ஏது புரிந்து எய்த்தேனோ
ஒப்பிறப்பில் வெங்கையுடையோய்''.

(தி.வெ. கலம்பகம் : பா-75)

என்று தன்னிலைக்கு இரங்கி இறைவனிடம் விண்ணப்பிக்கிறார். பெறற்கரிய வீடுபேற்றினை எப்படியேனும் முயன்று பெற விழைகிறார் புலவர். ஆதலின் சம்பந்தரின் முக்தி விருந்தினைப் பற்றிக் கேள்வியுறாது, எங்கிருந்தேனோ, என் செய்தனோ, அடியேன் அறியேன், என்று தன்நிலைக்கு வருந்துகிறார் புலவர். ஈங்கு சம்பந்தரின் திருமண நிகழ்வு வழி, முக்திபெறும் பொருட்டு வருந்தும் புலவர்தம் உள்ளக்கிடக்கை உணரவியலும்.

முக்தி கோரும் விண்ணப்பம்

தன்னிலைக்கு இரங்கிய புலவர் சம்பந்தரின் திருமணப் பந்தலில் முக்தி பெறாமைக்குரிய காரணத்தைக் கூறி அதனைக் கோரியும் இறைவனிடம் விண்ணப்பிக்கிறார்.

''வினை அரும் புகலிக்கு இறை மணப்பந்தர்
விருந்தினுக்கு உதவிலேன், முந்திற்று
உனை இரந்திடுவான் வந்தனன் பத(ம்) நீ
உதவியென் துயரொழித் தருளாய்''.

(சோண சைல மாலை, பா.26)

இங்கு இறைவனிடம் முக்தி கோரி விண்ணப்பிக்கும் புலவர், வினைகள் அற்ற புகலிக்கு இறையாகிய சம்பந்தர் தம் திருமணப் பந்தலில் வழங்கிய முக்தி விருந்திற்கு யான் செல்லவில்லை, அதற்குக் காரணம் யான் பிறப்பதற்கு முந்தைய கால நிகழ்வு அந்நிகழ்வு ஆதலின் என் துயரொழித்து முக்தி யருள்வாய் என்று ஏக்கத்துடன் விண்ணப்பிக்கிறார்.

''எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன் மனத்தில்
அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல் - இங்கேநின்
தாள் வருந்த வேண்டேன், தடைபட்டேன் ஆதலின் இந்
நாள் வருந்த வேண்டுகின்றேன் நான்'' (சிவநேச : 42)

என்று வள்ளலாரும் முக்தி வேண்டி ஏக்கமுறுகிறார்.

ஏக்கத்திற்குத் தீர்வு

சம்பந்தர் நல்கிய முக்தி விருந்து தமக்குக் கிட்டவில்லையே என்று ஏங்கிய புலவர் தம் ஏக்கத்திற்கு தீர்வு காண்கிறார். தாம் கண்ட தீர்வினைத் தன்னலம் கருதாது இச்சமூகத்திற்கு வழங்கி மகிழ்கிறார்.

''ஞானியம் ஞானியெனல் ஞானசம்பந்தன் எனும்
தானிமணப் பந்தற்குத் தப்பியுழன் மானுடர்காள்
நில்லாமல் வம்மினோ நின்ற சிவஞானி பதம்
எல்லாம் வழங்குகின்றான் இன்று''

(சிவஞான பாலய தேசிகர் கலம்பகம் - 79)

தோன்றாத் துணைவன் இறைவன்; அவனருள் பெற்றுத் தோன்றும் துணையாக இறையருளை வாரி வழங்குபவர் சிவஞானியாகிய குரு, சிவமாகிய குரு முக்தியை வாரி வழங்கக் காத்திருக்கிறார். அன்று சம்பந்தரின் மணப்பந்தருக்குத் தப்பி உழன்றவர்கள் யாவரும் இன்று சிவஞானியிடம் அருளினைப் பெற வம்மின்! வம்மின்! என்று அழைப்பு விடுக்கிறார் புலவர்.

சம்பந்தர் சமூகத் தொண்டினைத் தம் பக்திநெறியாகக் கொண்டவர். அவர் பரந்த நோக்குடன் சமூகப்பயன் கருதி, திருமணப் பந்தலில் பங்கு பெற்ற அத்துணை பேருக்கும் தகுதி பாராட்டாது முக்தியருளினார். அது மட்டுமின்றி 'தமக்கென முயலா நோன்றாள் பிறருக்கென முயலுநர் உண்மையானே' எனும் கூற்றுக்குரியவர் அவர். ஆதலின் திருமணத்திற்கு வருகை தந்தவர் யாவரும் சோதியுள் புகுந்த பின்பு தான் காதலியுடன் புகுந்தார். அதுபோல் புலவரும் தாம் மட்டும் முக்தி பெற விழையாது அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறார்.

சம்பந்தரின் பெருமை போற்றல்

சம்பந்தரின் திருமண நிகழ்வு வழி தம் ஏக்கத்திற்குத் தீர்வு கண்ட புலவர், அடியார் பெருமை சாற்றும், நால்வர் நான்மணி மாலையில் முக்தி விருந்து நல்கிய சம்பந்தரின் பெருமை போற்றுகிறார்.

''கொள்ளை கொள்ள வீடுதவிக் கூற்றைப்பிடர் பிடித்துத்
தள்ளும் திருஞானசம்பந்தர் - வெள்ளமிடும்
ஏடேறப் பால் குறைந்தது என்றழுவரே கழுவின்
காடேறப் புக்க அருகர்''. (நா. நான்மணிமாலை : 21)

சம்பந்தர் 8000 சமணர்களை வென்று கழுவிலேற்றிய நிகழ்வு சமய உலகில் புரட்சிக்கு வித்திட்டது. தாம் பெற்ற இறையாற்றலால் சமணர்களைப் புனல்வாதத்தில் வென்ற அவரது பெருமை போற்ற வந்த புலவர், அடைமொழியில் சம்பந்தர் கூற்றுவனை வென்று முக்தி வழங்கிய அரிய திறமுரைக்கிறார். முக்தி எளிதில் பெறுவதன்று, அரிதில் முயன்று பெறக்கூடியது. அம்முக்தியைப் பெற முயலாத வர்களைக் கூற்றுவன் தடுக்க முயல்கிறான். ஆனால் அக்கூற்று வனையும், சம்பந்தர் தாம் பெற்ற இறையாற்றலால் வெற்றி கொள்கிறார். சோதியுள் புகுந்த அத்துணை பேருக்கும், முக்தி கிட்டியது. 'இயமன் தூதரும் அஞ்சுவர்' *(3-40-4)* எனும் தொடர், சம்பந்தர் கூற்றுவனை வென்றமைக்குச் சான்றாகும்.

> ''ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும்,
> கூறு மறை முனிவர்களும் கும்பிட வந்தணைந்தாரும்
> வேறு திருவருளினால் வீடுபெற வந்தாரும்
> ஈறில் பெருஞ்சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்''
>
> *(பெரிய - 1253)*

எனும் சேக்கிழார் மொழி, புலவரின் கொள்ளை கொள்ள வீடு உதவி எனும் பொருளை மெய்ப்பிக்கும்.

மாபெரும் புரட்சிக்கு வித்திட்ட சம்பந்தரின் சமூகப் பொதுவுடைமை புலவர் தம் வாக்கால் இன்றும் ஒளிர்கிறது, சமயக்குரவர் நால்வருள், மற்ற மூவரும் தாங்கள் மட்டுமே முக்தியினைப் பெற, சம்பந்தர் ஒருவரே சமூகத்தினருக்கும், முக்தியை நல்கிய வித்தகராவர். அவ்வித்தகத்தை வியந்த புலவர் தாமும் இச் சமூகத்திற்கு முக்தி விருந்து வழங்கி வித்தகரானார்.

முடிவுரை

இவற்றால் அறியப்பெறுவன,

1. சம்பந்தர் வாயிலாக முக்திபெற விழைதல்.
2. முக்தி பெறும் பொருட்டுத் தன்னிலைக்கு இரங்கல்.
3. முக்திகோரி இறைவனிடம் விண்ணப்பித்தல்.
4. 'சம்பந்தரின் திருவடியே வீடு' என்பதை உணர்ந்த புலவர், கூற்றுவனையே மாற்றும் அடியாரின் ஆற்றலைப் போற்றல்.
5. 'சமூகம் உய்ய சமயம் வழிகாட்டும்' என்பதை மெய்ப்பித்த சம்பந்தரின் சமூகப் பொதுவுடைமையைப் புலவரும் போற்றல்.
6. குருவே சிவம்; சிவமே சிவஞானி. எனவே குருவாயிலாகச் சமூகம் உய்ய முக்திக்கு அழைத்தல்.

இராமலிங்க அடிகளார் ஆற்றுப்படுத்தும் இன்றைய உடனடித்தேவை

அருணாதினகரன்

புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002

இராமலிங்க அடிகளார் ஆற்றுப்படுத்தும் அன்பு நெறிக்கு நம்மை இட்டுச் செல்லும் அவருடைய மனிதநேயச் சிந்தனைகளை, அவர்தம் படைப்புக்கள் வழியே ஆராய்கின்றது இக்கட்டுரை.

பசிகளைதல்

இராமலிங்கர், 'ஒவ்வொரு மனிதனும் ஒரு சீவன். பசி, தாகம், பிணி, இச்சை, கொலை போன்ற காரணங்களால் துன்பப் படுகின்றபோது, அந்தத் துன்பத்தைப் போக்குவதாகிய தயவு வாழ்க்கையை வாழ வேண்டும்' என்று அறிவுறுத்துகின்றார்.

பசித்து வந்தவர்கள், இரவலர்கள், வறுமையில் வாடுபவர்கள் தம்மைக் கண்டு இராமலிங்கர்,

''உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்து வெந்துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ?
மற்றிது நினைத்திடும் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்றது உடம்பும்
எரிகின்றது என் செய்வேன் அந்தோ
கொள்ள லேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்!'' (திருவருட்பா)

என்று வேண்டுகின்றார். இறைவனோடு - இறைவனிடம் வேண்டுதல் எழுப்பியதோடு அவர் நின்றுவிடவில்லை. வறுமைப் பிணிக்கு இலக்காகி நின்ற மக்களின் பசிப்பிணியை அகற்றுவதே தெய்வீகப் பணி என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டினார். மண்ணுலகில் உயிர்கள் பசியால் வருந்தும் வருத்தத்தைக் கண்ணுறப் பார்த்தும், செவியுறக் கேட்கும் கணமும் சகிக்காத அருளாளரான இராமலிங்கர் 22.05.1867-இல் வடலூரில் மக்களின் அரும்பசியைப் போக்கும்

சத்திய தருமச்சாலையை நிறுவினார். 'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வாழ்வதற்காகவே' என்று நெறிப்படுத்தும் வள்ளுவரைப் போல, வள்ளலாரும் இல்லறத்தாரைப் பார்த்து,

> ''தமது குடும்பச் செலவை கூடியமட்டில் சிக்கனம் செய்து ஏழைகளின் பசியை நீக்குதல் வேண்டும்'' (ஜீவகாருண்ய ஒழுக்கம்)

என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

இராமலிங்கர் வாடுவோரின் வாட்டத்தைத் தீர்த்ததோடு இறைவனிடம் அவர்களுக்காக,

> ஏழை உலகுயிர்த்துன்பம்
> இனி பொறுக்க மாட்டேன்
> கொடுத்தருள் நின் அருள் ஒளியைக்
> கொடுத்தருள் இப்போதே''

என்று உரிமையுடன் கண்டனக்குரல் எழுப்புகின்றார்.

1867-இல் இராமலிங்க அடிகளார் தொடங்கிய தருமச்சாலை இன்றளவும் பசிப்போரை ஒழிக்க நிறுவப்பட்ட பாசறையாகத் திகழ்கின்றது. பட்டினி கிடப்போரைக் கண்டு வேதாந்தம் பேசிய சமயவாதிகளுக்கிடையே வறுமைக்கு எதிராகப் போர்த்தொடுத்த முதல் துறவி வள்ளலாரே ஆவார்.

ஜீவகாருண்யம்

மனிதனின் ஆத்ம வளர்ச்சிக்கு உரிய தனிச்சாதனம் ஜீவகாருண்யம் என்ற தத்துவத்தை இராமலிங்கர் எடுத்துக் காட்டுகின்றார். இராமலிங்கருடைய பாடல்கள் ஜீவகாருண்ய இறக்கைகளுடன் சிறகடிக்கும் உயிர்ப்பறவைகளாய்க் காட்சியளிக் கின்றன. ஆகையால்தான் வள்ளலார், வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினார்; கானுறு பசுக்கள், கன்றுகள் கதறிய போதெல்லாம் பயந்தார்; மாடு முதல் பலமிருகம் இளைத்தவை கண்டு உள்ளம் இளைத்தார்; கோழி முதல் பல பறவைகள் கொடியவரால் பலியிடப்படுவதைக் கண்டு உள்ளங் குலைந்தார்.

புலால் உண்பதை இராமலிங்கர் பெரிதும் கண்டித்தார். புலால் உண்போரை உயிர்க்கொலை புரிவோராகக் கொண்டு அவர்களைச் சன்மார்க்கச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளல் ஆகாது என்று அவர் ஒதுக்கி வைத்தார். புலால் உண்போரை அவர் ஒதுக்கிய பான்மையை,

> ''கருவாணையுர இரங்கா துயிருடம்பைக்
> கடிந்துண்டுங் கருத்தனேல்எங்

குருவாணை எமது சிவக்கொழுந்தாணை
ஞானி என கூறாதே''

என்று கடிந்துரைக்கின்றார்.

அன்பு, அருள், இன்பம்

இராமலிங்க அடிகள் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மூவுடல் பெறவேண்டும் என்கிறார். ஒருவன் எல்லா உயிர்களையும் சமமாகக் கருத வேண்டும். அவற்றிடையே மாறாத அன்பு செலுத்த வேண்டும். ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்தல் வேண்டும். இவற்றால் அவன் அன்புடல் பெறுகின்றான்.

தூய்மையான பக்தி, மனம் ஒன்றிய தியானம் இவற்றால் ஒருவனுடைய உள்ளம் இறைவன் உறையும் இல்லமாக மாறும் போது அவன் அருளுடலைப் பெறுகின்றான்.

இவ்வுலக வாழ்வில் அன்பையும், அருளையும் பெற்று, அதனைப் பிறர்க்கும் பகிர்ந்தளித்து வாழ்பவன் மரணமிலாப்பெரு வாழ்வை அடைகிறான்; இன்பவுடலை எய்துகின்றான்.

சீவஒழுக்கம்

இராமலிங்கர் தம்மை ஆராய்ந்து, தம் பிழைகளைப் போக்க வழிகாட்டும் அறிவியல் ஆன்மீகவாதியாகத் திகழ்கின்றார். வள்ளலார், கோட்பாட்டாளராக மட்டுமல்லாமல், கோட்பாடுகளைச் செயல்படுத்தும் செயல் வீரராகவும் விளங்கினார். அதனால்தான் மனிதன் கொள்ள வேண்டியவற்றை 'கொல்லாமை, பொறுமை, சாந்தம், இந்திரிய நிக்கிரகம்' என்று விவரிக்கின்றார்.

இராமலிங்கர் 'கள், காமம், கொலை, களவு, பொய் இவ்வைந்தையும் 'பஞ்சமா பாதகங்கள்' என்று சுட்டிக்காட்டி விளக்கம் சொல்கின்றார்.

மனித உயிர்கள் எல்லாம் ஒரிருமையுள்ளவர்களாய் வாழ வேண்டும் என்பதை,

''சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை
உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வசக்தியுடைய
கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டப் படியால் ஒரிமையுள்ள
சகோதரர்கள்''

என்று தன்னுடைய 'சீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலில் விளக்கம் தருகின்றார்.

வள்ளலார் சீவஒழுக்கத்தைப் பொதுமை ஒழுக்கமாக அறிவுறுத்துகின்றார். தம் 'திருவருட்பா உபதேசப் பகுதி'யில்,

> ''சீவஒழுக்கமாவது ஆண்மக்கள், பெண்மக்கள் முதலிய யாவர்களிடத்திலும் சாதி, சமயம், மதம், ஆசிரமம், சூத்திரம், கோத்திரம், குலம், சாஸ்திர சம்பந்தம், தேச மார்க்கம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் பேதம் நீக்கி, எல்லவரும் தம்மவர்களாய்ச் சமத்தில் கொள்வது''

என்று குறிப்பிட்டு, இக்கொள்கையை மக்கள் தம் வாழ்வியல் நெறியாகக் கொள்ள வேண்டும் என்று ஆற்றுப்படுத்துகின்றார்.

சரிநிகர் சமானம்

இராமலிங்கர் வகுத்துக்காட்டிய சமரச சுத்த சன்மார்க்கத்தில் ஆண், பெண் என்ற வேற்றுமை வழி ஏற்றத்தாழ்வுகளுக்குச் சிறிதும் இடமில்லை. இராமலிங்கர் ஆண்மையில் பெண்மையும், பெண்மையில் ஆண்மையும் கலந்திருப்பதாகக் கூறுகின்றார். பால் வேற்றுமை உடலைப் பொறுத்ததேயன்றி ஆன்மாவைப் பொறுத்ததன்று என்பதை,

> ஆண்பெண் என்றும் நாமபேதம் வருவானேன்
> ஆன்ம அறிவு ஆண் ஜீவ அறிவு பெண்.
> பெண் ஆன்மஅறிவு என்பதும் ஜீவ அறிவு
> என்பதும் புத்தி அறிவும் மன அறிவும் ஆம்.

என்று விளக்கம் தருகின்றார்.

இராமலிங்கர் பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்களை அவசியம் கற்பிக்க வேண்டும். பேதமற்று அபேதமாய் படிப்பு முதலியவற்றையும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழ வேண்டும் என்ற அவசியத்தைப் புலப்படுத்துகின்றார்.

சுத்தசன்மார்க்கம்

இன்றைய காலக்கட்டத்தில் உலகளவில் நிகழ்ந்துவரும் பூசல்களும் அதன் விளைவான மனித உயிர் இழப்புகளும் எண்ணிலடங்கா வகையில் பெருகிவருகின்றன. இப்பிரிவுக்கும், பிரிவினைக்கும் சமயநெறி ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. இத்தகைய சமயக் காழ்ப்பு மாறவேண்டும். மறையவேண்டும் என்ற அடிப்படையிலேயே இராமலிங்கரின் சன்மார்க்க நெறி அமைகின்றது.

எந்தச் சமயத்தைச் சார்ந்தவராய் இருப்பினும் அவர் பிற உயிர்களைத் தம்முயிர்போல் கருதும் ஒருமைநிலை எய்துதல் வேண்டும் என்று இராமலிங்கர் ஆசைப்படுகின்றார். இராமலிங்கருக்கு உலக உயிர்கள் எல்லாம் ஆண்டவனின் உடல் உறுப்புகளாகத்

தெரிகின்றன. பிற உயிர்களுக்குத் தீங்குசெய்தல் என்பது தம்முயிர்க்குத் தீங்கு செய்ததாக முடியும் என்பதை உணர்ந்து அதற்குக் காரணமான சமயக் காழ்ப்பை அறவே நீக்கி வாழுமாறு அறிவுறுத்துகின்றார்.

இராமலிங்கர் வடலூரில் 1865-இல் சமரச சன்மார்க்க சங்கத்தை நிறுவி, அதற்கு சமரச வேத சன்மார்க்க சங்கம் என்று பெயர் வைத்தார். பிறகு, தூய உண்மையில் மக்களை நிறுத்த வேண்டும் என்பதற்காகச் சங்கத்தின் பெயரை 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என்று மாற்றி அமைத்தார். சன்மார்க்கம் என்பதற்கு, 'எல்லா உயிர்களையும் தன்னைப் போல் பாவித்தல்' என்று விளக்கம் தந்து, அவ்வருட்பாதையில் மக்கள் செல்ல அடிகளார் ஆற்றுப்படுத்தினார்.

இராமலிங்கர் உணர்த்தும் சன்மார்க்கம் அருளறத்தை அடிப்படையாகக் கொண்டது. அருள் இல்லாத இடத்தில் சன்மார்க்கம் இல்லை என்பது அடிகளாரின் உள்ளக்கிடக்கை. அதனால்தான்,

''அருளே நம்துணை அருளே நந்தொழில்
....
....
அருளே நாமறிவாயென்ற சிவம்''

என்று பாடுகின்றார்.

நிறைவாக

வள்ளலார் தமது வாழ்க்கைப் பாதையின் மூலம் - படைப்புகள் மூலம் அறிமுகப்படுத்திய வாழ்வியல் நெறி உலக உயிர்கள் எல்லாம் ஒன்று என்றும் இவ்வுயிர்கள் ஆன்மநேய விளக்கம் பெறுதல் வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பின் அடிப்படையில் அமைகின்றது. இவ்வுயிர்கள் எல்லாம் ஒன்றோடொன்று இணக்கம் பெற்று வாழ்ந்தால் வாழ்க்கை நன்றாக இருக்கும்; இத்தகைய வாழ்வியலுக்கு அன்பின் அடிப்படையில் அமைந்த அருள் வாழ்க்கை அமைய / உருவாக வேண்டும் என்று நம்பினார். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்,

''சாதியும் மதமுஞ் சமயமும் தவிர்த்தே
சத்திய சுத்தசன் மார்க்க
வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை
விளம்பி னேன் வம்மினோ விரைந்தே'' (திருவருட்பா)

என்று உலகத்தாரை அழைக்கின்றார். இந்த அழைப்பின் உட்கிடக்கையை உணர்ந்து செயல்படுதலே இன்றைய தேவையாக இருக்கின்றது.

திருவருட்பாவில் பழமொழிகள்

பா. அருள்செல்வி

தமிழ் வளர்ச்சி இயக்ககம்

வேலூர் - 632 009

பழமொழி விளக்கம்

நம் முன்னோர் தம் அனுபவங்களின் வெளிப்பாடுகள் மக்களால் பாதுகாக்கப் பெற்றுப் பழமொழிகளாக ஏற்றம் பெறுகின்றன. 'பழமொழி' என்பதற்குப் பல்வேறு விளக்கங்களை அறிஞர் பெருமக்கள் தருகின்றனர். தொல்காப்பியரும் பழமொழிக்கு உரிய இலக்கணத்தை நல்கி உள்ளார். மேலும் சங்க காலம் முதற் கொண்டு இலக்கியங்களில் பழமொழி பற்றிய சொல்லாட்சிகளும் விளக்கங்களும் காணப்பெறுகின்றன. குறிப்பாகப் 'பழமொழி நானூறு' எனும் பழந்தமிழ் நூல் பழமொழிகளை முன்னிறுத்தி நீதிகளைப் புகட்டுகின்றது. இத்தகைய பழமொழியைப் பற்றிய விளக்கங்கள் ஏற்கனவே அறிஞர்களால் ஆராயப்பெற்றுள்ளன. இவ்விளக்கங்களை ஆய்வாளர் மு. ஞானத்தாய்[1] தம் நூலில் விரித்துரைத்துள்ளார்.

வள்ளலாரின் இலக்கியப் படைப்புகளில் பழமொழிகள்

இராமலிங்க அடிகளார் தாம் எழுதிய திருவருட்பா மற்றும் உரைநடைப் பகுதிகள் ஆகியவற்றில் பழமொழிகள் பலவற்றைக் கையாண்டுள்ளார். திருவருட்பாவில்

சுவருண்ட மண்போல சோறுண்டேன்[2]

'நெல்மொழிய பதர் கொள்வார் போல்'[3]

என்பவற்றை எடுகோள்களாகக் கொள்ளலாம். இவ்வாறே இவர்தம் மறுமுறை கண்ட வாசக உரைநடைநூலில் பழமொழிகள் பல காணப்பெறுகின்றன. அவற்றில் சில வருமாறு.

''கண்ணில்லாதவன் கண்ணாடியைச் சுமந்ததுபோல''[4]

''வாசனை அறியாதவன் மலரைச் சுமந்தது போல''[5]

''தன் வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது''[6]

''ஆறிலும் சாவு நூறிலும் சாவு''[7]

''நல்ல விதி நடுவே இருக்க கோணிய விதி குறுக்கே வந்தது''[8]

''இளங்கன்று பயமறியாது''[9]

மேற்கண்டவாறு முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றும் இராமலிங்கரின் பழமொழிகள் பற்றிய சிந்தனைகள் தனித்து ஆய்வுசெய்ய வேண்டியனவாகின்றன. இனித் திருவருட்பாவில் பழமொழிகளைப் பற்றிய குறிப்புகளைப் பின்வரும் பகுதி ஆராய்கின்றது.

திருவருட்பாவில் பழமொழிகள்

திருவருட்பாப் பாடல்களில் பழமொழிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவற்றை முழுமையாக ஆய்வது என்பது நீண்ட ஆய்வாகும். எனவே திருவருட்பா இரண்டாம் திருமுறையில் 'பழமொழி மேல் வைத்துப் பரிவு கூர்தல்'[10]. எனும் ஒரு பதிகத்தில் மட்டும் காணப்படும் செய்திகளை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். குறிப்பாக இதில் பழமொழிகள் கையாளப்பெறும் முறைமைகள் சிறப்பாக எடுத்து விளக்கப் படுகின்றன.

பழமொழிமேற் பரிவு கூர்தல் - பதிக விளக்கம் (பொது நோக்கு)

திருவருட்பாவில் 379 பதிகங்கள்[11] உள்ளன. இவற்றுள் ஒருசில பதிகங்கட்கே இராமலிங்க அடிகளார் பெயர்களை இட்டுள்ளார்.[12] பெரும்பாலான பதிகங்கட்கும் பதிப்பாசிரியர்களே பெயரிட்டுள்ளனர். இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொண்ட இப்பதிகத் திற்கு இராமலிங்கர் பெயரிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் பாடலின் பொருண்மைகளை நோக்கும்போது இப்பதிகப் பெயர் பொருத்தமானதாகவே அமைந்துள்ளது.

திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமானை விளித்துப் பாடப் பெற்ற பத்துப் பாடல்களை இப்பதிகம் கொண்டுள்ளது. இறுதியில் அனைத்துப் பாடல்களும் 'தியாக நாயகனே' என முடிகின்றன. ஒவ்வொரு பாடலும் ஏதேனும் ஒரு பழமொழியை முன்னிறுத்தித் தொடங்கப்பட்டு உள்ளது. (பாடலின் முதல் அடி) வள்ளல்பெருமான் இறையருளை விழைதலை நோக்கமாகக் கொண்டு இவற்றை எழுதியுள்ளார். உலக மக்களின் குறைகளைத் தம்மேல் ஏற்றிக் கொண்டு கூறல் அடியார் இயல்பு. அவ்வாறே இறையருளைப் பெறத் தமக்கு விருப்பம் இருப்பினும் உலக மயக்கில் தாம் ஆழ்ந்து விடுவதாகவும், இவற்றைப் பொருட்படுத்தாது தமக்கு அருள் பாலித்தல் வேண்டும் என்பதையும் இப்பாடல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றார். எடுகோளாகப் பின்வரும் பாடல் அடிகளைக் காட்டலாம்.

''வானை நோக்கி மண்வழி நடப்பவன் போல்
வயங்கும் நின்அருள் வழியிடை நடப்பான்.
ஊனை நோக்கினேன் ஆயினும அடியேன்
உய்யும் வண்ணம் நீ உவந்தருள் புரிவாய்''[12]

எனவே தன்னிரக்க உணர்வை வெளிப்படுத்தும் இவை தம்முடைய சிறுமை, இறைவனின் பெருமை ஆகிய இரு கூறுபாடுகளைத் தன்னகத்துக் கொண்டவை. பின்வரும் பகுதியில் இவை விளக்கம் பெறுகின்றன.

தம்முடைய சிறுமைகளைத் தன்னிரக்க உணர்வில் வெளிப்படுத்தல்

முன்னரே இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி ஆன்ம ஈடேற்ற முயற்சியில் பழமொழிகளை முன்னிறுத்தித் தன்னிரக்க உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கு இப்பதிகத்தின் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இறையருளைப் பெற மனம் ஒரே சிந்தனையில் இருந்து இறையுடன் ஒன்றவேண்டும். ஆனால் உலக வாழ்வில் அலைபாயும் மனத்தை அடக்கியாளுதல் என்பது இயலாத ஒன்றாகின்றது தம்முடைய மனமானது ஓரிடத்தில் நில்லாது பரம்பொருளை அடையும் முயற்சியின்றி இருப்பதைப் பழமொழிகள் வாயிலாக இவர் நிறுவுகின்றார். இவற்றைப் பின்வருமாறு பாகுபாடு செய்து நோக்கலாம்.

அ. மனம் ஒன்றுபடாமல் சொல் ஒன்று, செயல் வேறாகச் செயல்படல்.

ஆ. மனத்தை இறையிடத்துச் செலுத்த இயலாமை

இ. மனத்தை இறைவனிடத்துச் செலுத்த வேண்டும் எனும் முயற்சியை மேற்கொள்ளாமை.

ஈ. மனம் அறியாமையில் மூழ்கி இறைவனை மறந்து வாழ்தல்.

அ. மனம் ஒற்றுபடாமல் சொல் ஒன்று, செயல் வேறாகச் செயற்படல்

ஏற்கனவே இக்கட்டுரையில் எடுத்துக்காட்டியுள்ள வானை நோக்கி மண்வழி நடப்பவன் போல் (பா.1) எனும் பழமொழியை இக்கருத்திற்குச் சான்றாக்கலாம்; இவ்விடத்தில் மண்வழி நடத்தல் என்பது அருள்வழிச் செல்வது என்பதும் வானைநோக்கி நடத்தல் என்பது ஊனை நோக்கல் (ஊன் உடம்பை முன்வைத்து அதன் தொடர்பான இன்பங்களை நாடல்) என்பதும் ஒப்பிட்டுக் காட்டப்பெற்றுள்ளது.

ஆ. மனத்தை இறையிடத்துச் செலுத்த இயலாமை

'வாயிலான் வழக்குரைப்பது போல்' (பா.2) எனும் பழமொழி வாயிலாகத் தமக்கு இறையருளைப் பெறும் முயற்சி இருப்பினும்

தூய்மையான மனம் இல்லையென்பதால் அதனை அடைய இயலாது என விளக்குகின்றார். வழக்குரைக்கும் திறனில்லாதவன் வெற்றியடைய இயலாது என்பது உலக வழக்கு.

இ. மனத்தை இறைவனிடத்துச் செலுத்தும் முயற்சியை மேற்கொள்ளாமை

எச்செயலை மேற்கொண்டாலும் 'முயலுதல்' என்பது முக்கிய இடம் வகிக்கின்றது. அதிலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு இம்முயற்சியின் பங்கு மிகப் பெரிது. வள்ளல்பெருமான் ஆன்மாவை இறையுடன் ஒன்றச்செய்யும் முயற்சியை மேற்கொள்ளாத நிலைக்குப் பல பழமொழிகளை கையாண்டுள்ளார். காட்டாக,

''வித்தை இன்றியே விளைத்திடுபவன் போல்
....
பத்தி இன்றியே முத்தியை விழைந்தேன்'' (பா.3)

என்பதைக் கூறலாம். இவ்வாறே ''கலம் இலாது வான் கடல் கடப்பவன் போல்'' (பா.4) ''ஓட உன்னியே உறங்குபவன் போல்'' (பா. 6) ''முதல் இலாது ஊதியம் பெற விழையும் மூடன்'' (பா.7) என்னும் பழமொழிகளையும் ஒப்பு நோக்கலாம்.

ஈ. மனம் அறியாமையில் மூழ்கி இறைவனை மறந்து வாழ்தல்

சிறிதும் இறை உணர்வின்றி உலக மாயையில் மூழ்கி வரும் மாந்தர்கள் இறையருளை விழையும் நிலையைத் தம்மேல் ஏற்றிப் பாடும் பாடல்கள் சில (பா.8, பா.9, பா.10) இப்பதிகத்தில் உள்ளன.

எடுத்துக்காட்டாக

''நீர் சொரிந்து ஒளி விளக்கெரிப்பவன் போல்
நித்தம் நின்னிடம் நேசம் வைத்திருவான்.
பார் சொரிந்திடும் பலநெறி முயன்றேன்
பாவியேன் தனைக் கூவி நின்று ஆள்வாய்'' (பா.10)

என்பதைக் குறிப்பிடலாம்.

இப்பொருண்மையிலேயே 'கல்லை உந்தி வான் நதி கடப்பவன் போல' (பா. 8) 'நெய்யினால் சுடு நெருப்பு அவிப்பவன் போல்' (பா. 9) எனவும் பழமொழிகள் அமைகின்றன. இவை அறியாமையில் மூழ்கி இருக்கும் மனதிற்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளன.

இவ்வாறு தன்னிரக்க உணர்வைப் பழமொழிகள் வாயிலாக உணர்த்தும் இராமலிங்க அடிகள் 'பாவியேன்' (பா. 10) 'புல்லனேன்' (பா.9) 'சிறியனேன்' (பா.3), 'நாயினேன்' (பா. 4), 'துட்டனேன்' (பா.7) என்பன போன்ற சொற்களையும் தம்மேலேற்றிக் கூறும் நிலையையும் இப்பதிகப் பாடல்கள் காட்டுகின்றன.

உ. இறைவனின் பெருமைகள்

திருவொற்றியூர்த் தியாகராசப் பெருமானின் பெருமைகள் இப்பதிகப் பாடல்களில் பெரும்பாலும் காணப்பெறுகின்றன. இவை கீழ்க்காணும் வகையில் பாகுபடுத்தப்பெறுகின்றன.

அ. உருவ வருணனை (பா.1, பா.7)

ஆ. அடியார்கள் மனத்தில் குடியிருப்பவன் (பா. 2, 3, 4, 9, 10).

மேலும் இப்பதிகத்தில் திருவொற்றியூரின் சிறப்பும் பலவேறு எடுத்தியம்பப்பட்டுள்ளன. (பா.ள். 2-9) விரிவு அஞ்சி இப்பகுதிகள் இங்கு விரிவாக ஆராயப்பெறவில்லை.

முடிவுகள்

1. இறையருள் பெற முயற்சிக்கும் நோக்கில் இப்பாடல்கள் அமைந்துள்ளன.
2. இப்பதிகப் பழமொழிகள் அனைத்தும் தன்னிரக்க உணர்வின் வெளிப்பாடுகளாக உள்ளன.
3. ''முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றும், திறன்'' இதில் காணமுடிகிறது.
4. திருவருட்பாவில் பழமொழிகள் பற்றிய ஆய்வில் இப்பதிகம் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

குறிப்புகள்

1. உறவுப்பெயர்ப் பழமொழிகள் ஓர் ஆய்வு (கடையநல்லூர் வட்டாரம்) மு. ஞானத்தாய், காவியாமுத்து பதிப்பகம், காஞ்சிபுரம், 2001, ப.ள். 7-16.
2. திருவருட்பா, ஊரன் அடிகள், சமரச சுத்த ஆராய்ச்சி நிலையம், வடலூர் , 1972, பா. 1986.
3. மேற்படி, பா. 2110.
4. திருவருட்பா உரைநடைப்பகுதி, திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலைய வெளியீடு, வடலூர், 2002. ப. 72.
5. மேற்படி, ப. 72
6. மேற்படி, ப. 72
7. மேற்படி, ப. 86
8. மேற்படி, ப. 86
9. மேற்படி, ப..50
10. திருவருட்பா, ப. 221-223
11. மேற்படி, ப. 1174
12. திருவருட்பா, ப.62

வள்ளலார் காட்டிய மனிதமேம்பாட்டு உயர்நிலைச் சிந்தனைகள்

சு. அமிர்தலிங்கம்

திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி
விருத்தாசலம் - 606 001

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த வள்ளலார் (1823 - 1874) மனிதனைப்பற்றி ஓயாமல் எண்ணியதன் விளைவாகத் தமது பாடல்கள் மூலமும், உரைநடை மூலமும், உபதேசத்தின் மூலமும், நண்பர்களுக்கு எழுதிய கடிதத்தின் மூலமும் மனித மேம்பாட்டு உயர்நிலைச் சிந்தனைகளை எடுத்துக் கூறியுள்ளார். இதுபற்றி இக்கட்டுரையில் காண்போம்.

இறைவனை வணங்குதல்

இறைவன் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய நான்கிடத்திலும் பிரகாசமுடன் இருக்கிறான். அத்தகைய இறைவனை நாள்தோறும் ஆறுமுறை வணங்க வேண்டும். அவ்வாறு வணங்கும் போது,

> எக்காலத்திலும் புருவ மத்தியின் கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்தவேண்டும். மேற்குறித்த காலங்கள் சூரிய உதயம், உச்சிப்போது, சாயரட்சை, மாலை, யாமம், வைகறை ஆகிய காலங்களில் எல்லாம் வல்ல தலைவனை வணங்குதல் வேண்டும். (உபதேசப்பகுதி, ப.16)

என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார். எங்கும் நிறைந்திருக்கிற இறைவனை நாள்தோறும் வணங்குதல் மூலம் மனிதன் தன்னை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தல்

மனிதன் இறைவனை வணங்குதல் மட்டும் போதாது. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தல் மூலமே மனிதன் மேம்பாடு அடையமுடியும்.

> நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவரெழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருள் அன்பினாலல்லது வேறு

வகையாலடைவதரிது. இவ்வன்பு சீவகாருண்யத்தாலல்லது வேறுவகையால் வாராது. சீவகாருண்யத்தின் லாபமே அன்பு. இந்த சீவகாருண்யமுண்டாவதற்கு ஏது அல்லது துவாரம் யாதெனில்; கடவுளுடைய பெருமையையும் தரத்தையும் நம்முடைய சிறுமையையும் தரத்தையும் ஊன்றி விசாரித்தலே, அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே சீவகாருண்யம். இதுதான் முக்தியடைவதற்கு முதற்படியா யிருக்கின்றது. ஆதலால் இதைப் பாதுகாத்தல் வேண்டும்.

(உபதேசப்பகுதி, ப.16)

சீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு. இதுவே முக்திக்கு நுழைவாயில். மனிதன் சீவகாருண்யத்தின் வழி வாழ்தலே மனித மேம்பாட்டுக்குரிய வழி என்பதை உணர்கிறோம். எனவே, சீவகாருண்யத்தின்வழி நின்று பிற உயிர்கள் துன்பப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்காமலும், பிற உயிர்களுக்கு இம்சை உண்டாக்காமலும் இருத்தலே மனிதன் முக்தியடைய வழி என்பதை வள்ளலார் மனித மேம்பாட்டுக்குரிய உயர்நிலைச் சிந்தனையாகக் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

மனித தேகமே முக்தியடைவதற்குரியது

மனித தேகமே முக்தியடைவதற்குரியது என்பதனால், "ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம் ஆகிய இந்த நான்கிலும் அதிக ஜாக்கிரதையாகயிருக்க வேண்டும். அவ்வாறு இராவிடில் தேகம் அதிசீக்கிரத்தில் போய்விடும். பின்பு முக்தியடைவது கூடாது. முக்தியடைவதற்கு இம்மாநிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தாலதையடைவது அரிதாயும் இருப்பது ஆதலால், எவ்விதத்தாலாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்" என்றும், மனித தேகத்தை நட்டம் செய்யும் நான்கையும் பற்றி, 'நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல்' என்ற பகுதியின் சிறப்புவிதியில் "ஆகாரம் அரை, நித்திரை அரைக்கால், மைதுனம் வீசம், பயம் பூச்சியம் ஆகப்பெறுதல்" என்றும் வள்ளலார் குறிப்பிட்டு வலியுறுத்தியுள்ளார்.

தயவு வாழ்க்கை

தயவு வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்கின்ற மனிதன் என்றும் அழியாத சுவர்ணதேகத்தைப் பெற்றுக் கடவுள் மயமாகலாம் என்பதை,

...எந்த சீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ, அந்த சீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாயிருக்கும். மற்றவர்களிடத்தில் காரியப்படாது. ஆதலால் மலசல சங்கல்ப காலங்கள் தவிர மற்றக்காலங்களில்

கடவுளிடத்தில் அன்பும் சீவர்களிடத்தில் பக்தியும் செலுத்த வேண்டும். ஆதலால் பக்தியென்பது மனநெகிழ்ச்சி மனவுருக்கம். அன்பு என்பது ஆன்மவுருக்கம் ஆன்ம நெகிழ்ச்சி. எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்து இருப்பதை அறிதலே யீசுர பக்தியாம். அந்தக்கரண சுத்தியின் பிரயோசனம் பக்தியை விளைவிப்பது. சீவகாருண்யமுண்டானால் அருளுண்டாகும். அருளுண்டானால் அன்புண்டாகும். அன்புண்டானால் சிவானுபவமுண்டாகும். (உபதேசப்பகுதி, ப.21)

என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருப்பதனால் சீவர்களிடத்தில் பக்தியும், கடவுளிடத்து அன்பும் கொண்டு அருள் வாழ்க்கை வாழ்தலே மனித மேம்பாட்டுக்குரிய உயர்நிலை வழியாகும் என்பது இதன்மூலம் தெரிகிறது.

மனித மேம்பாட்டுக்குரிய வழி தயவே. அதன் வடிவாகவே மனிதன் இருத்தல் வேண்டும். மனித மேம்பாட்டு வாழ்க்கைக்குத் தயவு வாழ்க்கைச் சிறந்தது. அந்தத் தயவுடன் கூடிய ஈகையே உயர்நிலைக்குரிய வழி என்பதை வள்ளலாரின் வாய்மொழி மூலம் அறிகிறோம்.

மூன்று தேகங்கள்

மனித மேம்பாட்டுக்குரிய உயர்நிலையின் வெளிப்பாடாக வள்ளலார் சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகம் ஆகிய மூன்று தேகங்களைப் பற்றித் தமது உபதேசப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார்.

சுத்ததேகம் என்பது ஒளி உடம்பு. இத்தகைய உடம்பு சுவர்ணதேகம் என்றும், பொன்னுடம்பு என்றும் கூறப்படும். இத்தகைய ஒளி உடம்பை வள்ளலார் பெற்றதை 'உலப்பில் இன்பம்' என்ற பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். பிரணவதேகம் என்பது ஒலி உடம்பு. வள்ளலார் பிரணவதேகம் பெற்றதை அருட்பெருஞ்சோதி அகவலிலும், ஞானதேகம் பெற்றதை அருள்விளக்க மாலையிலும் குறிப்பிட்டுள்ளார்.

நரை திரை பிணி மூப்பு இல்லை

சாதாரண மனிதர்களுக்குக் கறுப்பாயிருக்கின்ற மயிர் வெள்ளை யாகுதல் நரை. உடலின் வளமை குன்றியவுடன் தோலில் சுருக்கம் விழுவது திரை. இவையெல்லாம் மிகவும் சாதாரண மனிதர்களுக்கு நிகழும் செயலாகும். வள்ளலாருக்கு நரை திரை ஏற்படவில்லை. சாதாரண மனித நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்தவர் வள்ளலார்.

மரணமிலாப் பெருவாழ்வு அடைவதற்கு, பிணி மூப்பு நேராத உடலைப் பெற வேண்டும். பிணிமூப்பு வருமாயின் மரணமிலாப் பெருவாழ்வைப் பெற இயலாது. வள்ளலார் பிணி மூப்பு நேராதவண்ணம் வாழ்ந்தவர். மனித மேம்பாட்டிற்கு மனித தேகம் முக்கியமாகும். இந்த மனித தேகமே முக்தி அடைவதற்கு ஏற்றதாகும் என்பதை உணர்ந்த வள்ளலார் மனித உடலை ஓம்புதல் வேண்டும் என்று கூறியுள்ளார்.

மனித மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள சாதி, சமயம், ஆசாரம், சடங்குகள் போன்ற பேதங்களை விட்டொழித்து, எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி வாழ்கின்றபோது மனித தேகம் அழியாமல் மாற்றம்பெறும் என்றும், மனித தேகம் நரை, திரை, பிணி, மூப்பு போன்றவைகளை அடையாமல் தேகநிலை மாற்றம் பெறும் என்றும், உணவு, தூக்கம், சோம்பல், மைதுனம் ஆகியவற்றில் அளவு கடந்து போகாமல் அளவுக்குக் குறைவாகவே பயன்படுத்துதல் மூலம் மனித உடல் மேம்பாடு அடையமுடியும் என்றும் வள்ளலார் எடுத்துக் கூறியுள்ளார்.

வள்ளலார் போற்றிய முருகக்கடவுள்

அர. செயச்சந்திரன்

மாநிலக் கல்லூரி
சென்னை - 5

வள்ளலாரின் பக்தி அடிப்படையிலான உறவு முருகக் கடவுளிடத்தில்தான் தொடங்குகிறது. கந்தகோட்ட வழிபாட்டில் அவர்தம் பக்தி வாழ்க்கையைத் தொடங்கினார். ஓதாது உணர்ந்த சுயமுயற்சிக் கல்வி முறைக்கு முதல் முதல் ஆசிரியராக விளங்கியவர் முருகக்கடவுள்.

''சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்என் கண்ணுற்றதே''

(42)

என்னும் பாடல் வள்ளலாரின் தேர்ந்த புலமைக்குச் சான்றாகிறது.

கந்தக்கடவுள் வள்ளலாருக்குக் காட்சி தந்தமையை இப்பாடல் நன்கு விளக்குகிறது. ஒன்பது வயதிலேயே வள்ளலார் கவிபாடும் புலமையைப் பெற்றார் என்பது அறிஞர் கருத்து. ஊனக்கண் காணவும் புறச்செவி கேட்கவும் தெய்வ அருள் பெறுவோனே தேர்ந்த புலமையாளனாவான் என்பது தண்டபாணி சுவாமிகளின் கருத்து (தண்டபாணி சுவாமிகள், அறுவகை இலக்கணம், நூற்பா 26). இக்கருத்தை வள்ளலாரை மனத்தில் வைத்தும் கூறியிருக்கலாம் எனக் கருத இடம் உண்டு. வள்ளலார் குழந்தைப் பருவத்திலேயே முழுமைப்புலமை பெற்றார். முருகக்கடவுளைப் போற்றிப் பாடிய பாக்களை ஊரனடிகள் பதிப்பித்த திருஅருட்பா பதிப்பில் முதல் திருமுறையில் வைத்துள்ளார். 570 பாடல்கள் அடங்கிய 53 பதிகங்களாக அப்பாடல்கள் வைக்கப்பட்டுள்ளன.

தணிகைமலைப் பதிகங்கள்

''தணிகை மலையைச் சாரேனோ'' (272) எனத் தொடங்கும் பாடலில் இறை அனுபவம் கிட்டாமையும் மக்களுக்குத் தொண்டாற்ற வாய்ப்புக் கிட்டாமல் இருப்பது குறித்தும் வருந்துகிறார்.

மக்களுக்குப் பணிசெய்ய வள்ளலார் தீவிர விருப்பம் கொண்டிருந்தார் என்பதை உணர்த்தும் வகையில் 'பணித்திறம் வேட்டல்' பணித்திறஞ்சாலாப் பாடி, பணித்திறஞ்சாலாமை' எனத் தொடங்கும் 3 பதிகங்கள் அமைந்துள்ளன. சமுதாயத்துயர்களையும் விருப்பம் தொடக்கத்திலேயே இருந்ததை இப்பதிகங்கள் விளக்கு கின்றன. மேலும் தணிகை சென்று நேரில் வணங்கும் வாய்ப்பு விலகிச் செல்வது குறித்த வருத்தத்தையும் 'தணிகை மலையைச் சாரேனோ, சாமி அழகைப்பாரேனோ' எனும் பாடல் விளக்குகிறது (272).

சென்னைக்கு அருகிலேயே தணிகை இருந்தும் அங்குச் செல்ல இயலாமையின் காரணம் விளங்கவில்லை. இருந்த இடத்தில் இருந்தபடியே தணிகைக் காட்சியைக் காணவேண்டும் எனும் வைராக்கியம் இருந்திருக்கலாம். சென்னை வாழ்வுக்குப்பின் சிங்கபுரி கந்தர் பதிகத்தைப் பாடியுள்ளார். 'கந்தர் சரணப்பத்து' எனும் பதிகத்தில் உள்ள பாடல்கள் குழந்தைகள் முதல் பெரியவர் வரை எளிதில் மனப்பாடம் செய்து பாடுவதற்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது. சான்றாக,

''அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில்வாகனனே சரணம் சரணம்
கருணா வயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம்'' (32)

என்னும் பாடலைக் குறிப்பிடலாம்.

அருட்பெருஞ்சோதி தத்துவமும் முருகக் கடவுள்

வள்ளலார் பிற்காலத்தில் மக்களுக்கு அறிவுறுத்திய அருட்பெருஞ்சோதி தத்துவத்தில் முன்னோட்டமான கருத்துக்களை முருகக்கடவுள் பற்றிப் பாடிய முதல் திருமுறையிலேயே வெளி யிட்டுள்ளார். சான்றாக, 'போற்றித் திருவிருத்தத்தின்' முதல் பாடலில் ''அருட்பெருங்கடலே'' என்றும் ''பரம்பரஞ் சுடரே'' என்றும் இரண்டாம் பாடலில் ''இனிப்புறுகருணை வான்தேன் எனக்கருள் புரிந்தாய் போற்றி'' என்றும் கூறியதிலிருந்து அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை எனும் தத்துவத்திற்குரிய சொற்றொடர்களை இளம் வயதிலேயே வெளிப்படுத்தியுள்ளார் என்பது ஆழ்ந்து கவனிக்கத்தக்கது (505, 506).

தாம் உலகில் எதற்காகப் படைக்கப்பட்டோம் என்பது அவர் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது என்பதை இப்பாடல் வரிகள் வலியுறுத்துகின்றன. பின்னே பாடிய ''அகத்தே கறுத்து புறத்தே வெளுத்த'' எனும் பாடலில் உலகரைத் திருத்த இறைவன் தம்மை அனுப்பியதாகக் கூறுகிறார். முற்பிறவியில் வள்ளலாருக்கு நம்பிக்கை உண்டு என்பதும், முற்பிறவித் தொடர்பு உண்டு என்பதும் இச்சான்றுகளால் பெறப்படும் கருத்தாகும். உளவியல் துறை யினரும் முற்பிறவி நினைவுகள் மனிதர்களிடம் பதிந்திருப்பது குறித்துப் பல ஆராய்ச்சிகளைச் செய்து சாதகமான முடிவுகள் பெறப்படுவதாகக் கூறுகின்றனர்.

முருகக் கடவுள் தத்துவ விளக்கம்

ஆறெழுத்து உண்மை திருநீற்றின் பெருமை முதலியவற்றைப் பாடல்களில் வெளிப்படுத்திய வள்ளலார் முருகக்கடவுள் பற்றிய தத்துவக் கருத்துக்களைத் தம் சித்திவளாகப் படைப்புகளில் ஒன்றான 'சுப்பிரமணியம்' எனும் தலைப்பில் விளக்கியுள்ளார். அதன் தொடக்கம் வருமாறு: 'சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தியிருக்கிறது' (தி.அ.உ.அ. 337) என ஆறுமுகம் என்பதே ஒளிவடிவம் எனும் விளக்கத்தை வெளியிட்டிருப்பது எண்ணிப் பெருமைப்படத்தக்கது. காரணம் இவ்வுண்மை அந்நாளில் வேத ஆகம புராண இதிகாசங்களில் மறைந்திருந்தது. இவ்வுண்மையை வள்ளலாரே மக்களுக்கு வெளிப்படுத்தினார். தொடக்கக் காலத்தில் பாடல்களில் வெளிப்படத் தொடங்கிய ஒளி உணர்வே பின்னாளில் ஒளி அறிவாகவும், ஒளி நெறியாகவும் உருவெடுத்தது எனலாம்.

தொடக்கம் முதல் இறுதிவரை ஒரு புலவர் கால இடைவெளியின்றித் தம் கொள்கையை வெவ்வேறு உத்திகளில் தொடர்ந்து வலியுறுத்துவது பெரும்சிறப்புக்குரியது. இதனைக் கால இடைவெளி அற்ற இலக்கியக் கொள்கை எனலாம்.

ஆறுமுகம் என்பதை ஆறு அறிவின் விளக்கம் என்றும் இரண்டு கால்களை, தோன்றும் அறிவு தோற்றுவிக்கும் அறிவு என்றும் விளக்குகிறார். எனவே முருகக் கடவுளை வள்ளலார் அறிவின் உருவமாகவும் கொண்டுள்ளார். உயர்ந்த ஞானிகளுக்கு அறிவும் உணர்வும் வேறானவை அல்ல எனும் கருத்து வள்ளலாரிடம் வெளிப்படுவதைக் காணலாம்.

தெய்வமணி மாலையின் சிறப்புகள்

வள்ளலார் முதலாவதாகப் பாடியது தெய்வமணி மாலை யாகும். இப்பதிகத்தில் அனுபவ விழைவும் சமுதாய அவலமும்

பெருமளவு வெளிப்படுகிறது. அனுபவ விழைவு முதன்மையாகவும், சமுதாய அவலங்கள் அதற்கு அடுத்த நிலையில் பாடுபொருளாகி இருக்கின்றன.

கந்தகோட்டத்தில் இவர் பாடிய தெய்வமணிமாலைப் பாடல்கள் கல் எழுத்தில் பக்தர்களுக்குக் காட்சி தருகின்றன. அனைத்துப் பாடல்களும் ''சண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி சண்முகத் தெய்வமணியே'' எனும் மகுடம் பெற்றுள்ளன. *(1-31)*

தெய்வமணி மாலையில் முருகக்கடவுளைத் துதித்துப் பாடிய பாடல்கள் சொற்பொருள் வளம்பெற்று இலக்கிய நயம் உடையதாக விளங்குகின்றன. தமிழ் நீதிநூல்களில் உலகநீதி என்பது வள்ளலார் காலத்தில் பள்ளிகளில் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. அதில் வேண்டா எனும் எதிர்மறை அடிப்படையில் நீதிக்கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. ''ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டா, ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா'' என அந்நூல் கூறிச்செல்கிறது. வள்ளலார் ஒரு ஆக்கமுறைச் சிந்தனையாளர். எனவே அவர் வேண்டா என்று எதிர்மறையாகக் கூறாமல் வேண்டும் என்று நேர்மறையாகக் கூறவிரும்பினார். கூடா ஒழுக்கங்கள், கொள்கைகள் எனக் கருதியவற்றைக் கூட வேண்டும் எனும் சொல்லை வேண்டா எனும் பொருள் உணர்த்துமாறு பயன்படுத்தி இருப்பது வியந்து போற்றத்தக்கதாக உள்ளது. 'மதமான பேய் பிடியாதிருக்கவேண்டும் பொய்மை பேசாதிருக்க வேண்டும். மருவு பெண்ணாசை மறக்கவே வேண்டும்' என்பனவற்றைச் சான்றாகக் காட்டலாம். ''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவுவேண்டும்''[8] எனும் பாடலில் மேற்சொன்ன கருத்துக்கள் உள்ளன. கந்தனை வணங்குவோர் எல்லா வளமும் பெறுவர் எனும் பொருள்பட,

நீருண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும் உண்டு
நிதி உண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
வெறி உண்டு நிலையும் உண்டு
ஊர் உண்டு பேர் உண்டு மணிஉண்டு பனிஉண்டு
உடைஉண்டு கொடையும் உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும் உண்டு *(28)*

எனும் பாடலைப் பாடினார்.

தெய்வமணி மாலையில் சேவல் கொடியுடைய முருகக்கடவுளை வணங்காமல் வேறுகடவுளை வணங்குவோர் தவறான பாதையில் செல்பவரே என்னும் கருத்துப்பட உவமைகளை அடுக்கிக் கூறுகிறார்.

சேவலம் கொடிகொண்ட நிலைஅன்றி வேசிறு
தேவரைச் சிந்தை செய்வோர்
செங்கனியை விட்டுவேப் பங்கனியை உண்ணும்ஒரு
சிறுகருங் காக்கை நிகர்வார்
நாவலங் காரம்அற வேறுபுகழ் பேசிநின்
நற்புகழ் வழுத்தாதபேர்
நாய்ப்பால் விரும்பிஆன் தூய்ப்பாலை நயவாத
நவையுடைப் பேயர் ஆவார். (26)

இப்பாடல் முற்று உவமையாக அமைந்துள்ளது. முருகனை அன்றிப் பிற சிறு தெய்வங்களை வணங்குவோர் செங்கனியை விட்டு வேப்பங்கனியை உண்ண விரும்பும் காக்கையைப் போன்றவர். கந்தனின் நற்புகழ் பாடாது பிறர்புகழ் பாடுவோர் தூய ஆவின் பாலை விரும்பாமல் நாய்ப்பாலை விரும்புவோருக்கு ஒப்பாவர். கந்தனை அன்றிப் பிறர் ஏவலை ஏற்று நடப்போர் நெல்லுக்கு அன்றி நீரைப் புல்லுக்கு இறைத்தவருக்குச் சமமாவர்.

முடிவுரை

இவ்விதம் வள்ளலார் முருகக்கடவுளைப் போற்றி வழிபட்டு அவர்பால் பற்றுக்கொண்டு சிறந்த பல பாடல்களை இயற்றி யுள்ளார். உரைநடையிலும் குறிப்பிடத்தக்க கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். கால இடைவெளி இன்றித் தம் இலக்கியக் கொள்கையைத் தொடக்கம் முதல் இறுதிவரை அருட்பாக்களில் வெளியிட்டுள்ளார். அருட்பெருஞ்சோதி தத்துவத்தின் முன் னோட்டமான கருத்துக்களைத் தெய்வமணி மாலையிலேயே தெரிவித்துள்ளார். வள்ளலாரின் சுயமுயற்சிக் கல்விக்கு முருகக் கடவுளே ஆசிரியராக விளங்கினார்.

வள்ளலாரது முருகக்கடவுள் வழிபாடு அவரது வளர்ச்சிக்கு உதவியாகவே இருந்தது. வள்ளலாரின் முதல் வழிபாடு முருக வழிபாடாக இருந்ததும் பின்னே அருட்பெருஞ்சோதி வழிபாடாக அமைந்ததும் இயற்கை நெறியைப் புதுப்பித்து இறைநெறி ஆக்கி வள்ளலார் மக்களுக்கு அளித்தார் எனலாம்.

ஆண்டாள் கனவுப் பாடல்களில் திருமணம்

அ. சுந்தரம்

ம.தி.தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி - 10

ஆண்டாள் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலத்தவர். ஆழ்வார்கள் பன்னிருவரில் பெரியாழ்வாரின் வளர்ப்புப் பிள்ளையான இவர் ஒருவரே பெண். பெண் கவிஞர்களில் சிறந்த இவரின் படைப்புகள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி இரண்டுமாகும். நாச்சியார்-திருமொழி, 'தையொருதிங்களும்' முதல் 'பட்டிமேய்ந்து' முடிய பதினான்கு திருமொழிகளைக் கொண்டது. ஒவ்வொரு திருமொழியும் பத்துப் பாடல்களைக் கொண்டு பாசுரம் எனச் சிறப்புப் பெறுகின்றது. ''ஆண்டாளின் கனவுப் பாடல்களில் - திருமணம்'' - எனும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டவை 'வாரணமாயிரம்' - எனத் தொடங்கும் ஆறாம் திருமொழிப் பாசுரமாகும். இது ஆயனைத் திருமணம் செய்து கொள்வதாகத் தான் கண்ட கனவைத் தலைவி தோழிக்கு கூறுவதாக அமைகின்றது. ஒவ்வொரு பாடலின் கடைசி நான்காம் வரியிலும் 'கனாக்கண்டேன் தோழி! நான்' - என முடிவதால் இவை ஆண்டாளின் கனவுப் பாடல்கள் என்று ஆய்வில் குறிப்பிடப்படுகின்றன. இதேபோல, 'கூடலிழைத்தல்' - எனும் நான்காம் திருமொழிப் பாடல்களும் 'கூடிடு கூடலே' என முடிகின்றன. நாச்சியார் - திருமொழியில் பிற திருமொழிப் பாடல்கள் இவ்வாறில்லை. கனவில் ஆண்டாள் தனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடந்ததாகக் கூறும் பாடல் கருத்துக்களில் திருமணச் சடங்குகள் காணப்படுகின்றன. இக்கட்டுரை, கனவு உத்தி, திருமணச் சடங்குகளில் பங்கு பெறுவோர், பயன்படுத்தப்படும் பொருட்கள், நடத்தும் முறை என நான்கு தலைப்புகளில் அமைகின்றது.

கனவு உத்தி

உத்தி படைப்பாளிகளின் திறமையைக் காட்டுவது. உத்தி பற்றி, ச.வே. சுப்பிரமணியன் தம் 'இளங்கோவின் இலக்கிய உத்திகள்' என்ற நூலில் ''கவிஞன் ஏதேனும் நோக்கம் பற்றி ஒரு செயல், தொடர், பொருண்மை, கருத்து, பொருள், உணர்வு, பாத்திரம், நிகழ்ச்சி, இடம், காலம், கடிதம், வருணனை, விளக்கம், ஆடல்,

பாடல், காட்சி, நிறம் என ஏதேனும் ஒன்றினை ஆளும்போது அதில் உத்தி தேர முடிகின்றது'' என்பர் (1984: ப. 6). இறைவன் கனவு களைத் தோற்றுவிக்கிறான் என்பது பழைய நம்பிக்கை. தீக்கனவுகள் பின் நிகழ்வதைச் சுட்டுவன. ஆழ்மனப் பதிவுகளே கனவு என்பது அறிஞர்களின் கருத்து. ஆண்டாள் தன் பாடல்களில் கனவைத் தம் விருப்பத்தைக் கூற உத்தியாகப் பயன்படுத்துகிறார். ஆயனைத் திருமணம் செய்ய விரும்பிய ஆண்டாள் தன் தோழியிடம் திருமணம் நடந்ததாகக் கனவு கண்டேன் என்று கூறுவது ஆண்டாளின் உத்தி இலக்கியக் கருவியல்ல. தமிழ்ப் பெண்கள் தங்கள் காதலுணர்வை வெளிப்படுத்துதல் மரபன்று. திருவள்ளுவர் தன் குறளில்,

'கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்க தில்' (குறள் - 1137)

எனப் பெண்ணின் பெருமை பேசுவதால் ஆண்டாள் நேரடியாகக் கூறாது, கனவில் கண்டேன் என்று கூறுவது அவரின் உத்திச் சிறப்பென்னும் மரபா என்பது ஆய்வுக்குரியது.

நாட்டுப்புற வழக்கில் கனவு பற்றிய நம்பிக்கைகள் அதிகமாக உள்ளன. அவற்றில் ஒன்று மாலையும் கழுத்துமாக மணம் சூடிய நிலையில் கனவு கண்டால் உறவினர் யாராவது இறப்பர் என்றும், இறப்புக் கனவு கண்டால் யாருக்காவது திருமணம் நிகழும் என்றும் பலன்களாக நம்புகின்றனர்.

ஆனால் ஆண்டாள் தன் பாடலில்,

மந்திரக் கோடியுடுத்தி மணமாலை
சுந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்

எனக் கூறுகிறார். இப்பாடல்களின் வரிகளைக் கூர்ந்து நோக்கின், ஆண்டாளின் காதலுணர்வு வெளிப்பாடு, கனவுச் சிந்தனையால் வெளியாகிறது எனலாம்.

பங்கு பெறுவோர்

கனவுத் திருமண நிகழ்ச்சியின் முக்கியமான மணமகன் ஆயனாவான். இவன் மாதவன், கோவிந்தன், நம்பி, மதுசூதனன், நாராயணன், அரி, அச்சுதன் எனப் பல பெயர்களில் குறிக்கப் படுகின்றான். இப்பெயர்களில் நம்பி தவிர பிற தமிழ்ப் பெயர்களா என்பதும் ஆராய்ச்சிக்குரியவை.

திருமண விழாவில் இந்திரனுள்ளிட்ட தேவர்கள் கூட்டம், பார்ப்பனச் சிட்டர்கள் (சான்றோர்) சதிர்-இளமங்கையர் (நாட்டியம்) ஆகியோரும் பங்கு பெறுகின்றனர். ஆண்டாள் இவர்களைத் தன் பாடலில்,

இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
....
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லா ரெடுத்தோத்தி
....
சதிர் இளமங்கையர் தாம் வந்து எதிர் கொள்ள
....

எனக் குறிப்பிடுகிறார்.

இந்திரன், தேவர்கள், பார்ப்பனச் சீட்டர்கள், சதிர் இளமங்கையர் ஆகியோர் திருமணச் சடங்குகளில் பங்குகொள்வது தமிழர் மரபில்லை. மாறாக, நல்லாவூர்க்கிழார் அகநானூறில் தமிழர் திருமணத்தில் முதிய மங்கல மகளிர், அணிகளையுடைய மகளிர் நால்வர் ஆகியோர் பங்கு பெறுவதாகக் கூறுகிறார். நல்லாவூர் கிழார் பாடலில்,

பொது செய் கம்பலை முதுசெம்பெண்டிர்
....
....
வாலிழை மகளிர் நால்வர் கூடி
.... (86)

எனக் கூறுகிறார்.

மணப் பொருட்கள்

திருமண நிகழ்ச்சியில் கூறப்படும் மணப் பொருட்களின் பட்டியல் தரப்படுகின்றது. பூரணப் பொற்குடம், தோரணங்கள், முத்துப் பந்தல், பாளை, கமுகு, புதுத்துணி, மணமாலை, நால்திசைத் தீர்த்தங்கள், காப்புநாண், தீபக்கலசம், நெருப்பு, மத்தளம், வரிசங்கு, வெற்றிலை, புல், அம்மி, அருந்ததி, குங்குமம், சந்தனம், மஞ்சனநீர் எனப் பல பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றை ஆண்டாள் தன் பாடல்களில்,

பூரணப் பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்
....
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
....
நால்திசை தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
....
....
காப்புநாண் கட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்

கதிரொளி தீபம் கலசமுட னேந்தி

. . . .

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத

. . . .

பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து

. . . .

அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ! நான்
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி

. . . .

குங்குமப்பிக் குளிர்சாந்த மட்டித்து

. . . .

. . . .

மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்

என்று வரிசைபடக் கூறுவது குறிப்பிடத்தக்கது. இம்மணப் பொருட்களில் மிகுதியானவை தமிழ்த் திருமணங்களில் பயன்படுத்தப்படுவதில்லை. குடம், அகன்ற பாத்திரம், மலர், நெல் பற்றிய குறிப்புகளை அகநானூற்றில் காணமுடிகின்றது. நல்லாவூர் கிழார் தன் பாடலில்,

உச்சிமண்டையர் புத்தல் மண்டையர்

. . . .

நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கதிப்பின் நெல்லொடு தயங்க

. . . .

எனக் குறிப்பிடுகிறார்.

நடத்தும் முறை

கனவுப் பாடல்களில் திருமணச் சடங்குகள் சங்கிலித் தொடர்போல் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது உற்றுநோக்கத் தக்கது. அவை, நாள்குறித்தல், மகள் பேசி மந்திரித்தல், பல்லாண்டு பாடுதல், காப்பு நாண் கட்டுதல், தீபக்கலசமேந்துதல், மத்தளம் கொட்டல், வரிசங்கு ஊதுதல், மறையோதுதல், கைத்தலம் பற்றல், நெருப்பைச் சுற்றல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், வீதிவலஞ் சுற்றல், மஞ்சனமாடல் போன்றவைகளாகும். இந்நிகழ்ச்சிகளை ஆண்டாள்,

நாளை வதுவை மணமென்று நாளிட்டு

. . . .

வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து

. . . .

பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி

....

கதிரொளி தீபம் கலசமுடனேந்தி

....

கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ! நான்

....

அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ! நான்

....

அரிமுகம் பார்த்து என்னை முன் நிறுத்தி

....

மங்கல வீதி வலஞ்செய்து மணநீர்

....

....

மஞ்சன மாட்டக் கனாக் கண்டேன் தோழீ! நான்

எனத் தன் பாடல்களில் குறிப்பிடுகின்றார். இத்திருமண நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழ் மரபு சார்ந்தது அல்லதாகத் தெரிகின்றன. மேலும், அறிஞர்கள் கனவு தொடரற்ற, துண்டு துண்டு நிகழ்ச்சி களாக, முடிவில்லாததாக அமையும் என்பர்.

முடிவுரை

ஆண்டாள் காதலுணர்வு வெளிப்பாடும், கனவுச் சிந்தனையும் தமிழ் இலக்கிய, நாட்டார் மரபுக்கு முரணானவையாகக் கருத இடமுண்டு.

பங்கு பெறுபவர்கள், பொருட்கள், முறைகள் அனைத்தும் தமிழ் வழக்கத்திற்கு இயைபுடையதா என்பது ஆய்வுக்குரியது.

தொடர் நிகழ்ச்சிகள், மணப்பொருட்கள் பற்றிய துல்லியமான விவரங்களைக் கனவில் கண்டேன் என்று கூறுவது கனவு பற்றிய நவீன உளவியல் சிந்தனைக்குப் பொருந்துமா? என்பதும் ஆராய்ச்சிக் குரியது. எனவே இக்கனவுப் பாடல்களைச் சமூக உளவியல் நோக்கில் ஆராய்வது அவசியம் எனவும் இக்கட்டுரை இயம்புகிறது.

ஆண்டாளின் பக்தித்திறம்

ஐ. செல்வம்

நவரசம் கலை, அறிவியல் மகளிர் கல்லூரி
அரச்சலூா் - 638 101

பக்தி நெறியாலே இந்தப் பாரினில் எய்திடும் மேன்மைகள் அதிகமென்பது அனுபவத்தால் உணா்ந்த மெய்யன்பா்களின் கருத்தாகும்.

தெளிவான ஞானத்தையும் உண்மையான இறைநிலையினையும் நமக்கு உணா்த்துவதற்காக இந்த உலகைப் படைத்த இறைவனால் அனுப்பப்பட்டவா்கள் ஆழ்வாா்கள். பக்திநெறியின் ஆழம் கண்டவா்கள். பக்திநெறியை உருவாக்கி ஆன்மாக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுத்துக் கொடுத்தாா்கள்.

பிரபத்தி என்றும் சரணாகதித் தத்துவத்தை இவா்கள் போதித்தனா். பன்னிரு ஆழ்வாா்களிலே இறைவனது கல்யாண குணங்களிலே ஆழங்கால்பட்டு இறைநிலையில் தன்னை இணைத்துக் கொண்டவா் தான் ஆண்டாள்.

அன்பில் தொடங்கி கருணையில் கலந்து இறைவனின் திருவருளமுது கிடைக்கப்பெற்றவா்தான் ஆண்டாள். பக்தி நிலையில் நாயக-நாயகி பாவனையில் இறைவனை அணுகிய ஆண்டாளின் பக்தித்திறம் குறித்து இங்குக் காண்போம்.

ஆண்டாளின் அவதாரம்

திருவில்லிபுத்தூரில் துளசிவனத்தில் பெரியாழ்வாா் பெருமானால் கண்டெடுக்கப்பட்ட தெய்வீகக் குழந்தையாக ஆண்டாளின் அவதாரம் அமைகின்றது. பூமியில் பூமாதேவியே அவதரித்ததுபோல அருளாளா்கள் கருதுகின்றனா்.

பெரியாழ்வாா் ''கோதை'' என்று பெயா் சூட்டினாா். தமிழில் கோதை என்ற சொல்லுக்கு ''மாலை'' என்று பொருள். வேதாந்த தேசிகா் ''கோதாஸ்துதி'' என்ற தமது நூலில் கோதையை, ''பெரியாழ்வாாின் வம்சமாகிய நந்தவனத்திற்கு கற்பகக்கொடி போன்றவள்'' என்று வா்ணிக்கிறாா்.

சிறுவயது முதலே கண்ணன்பால் பக்திகொண்டு வளா்ந்தாள். கண்ணனில் திளைத்துக் காதல் நிலையடைந்தாள். பெரியாழ்வாா் இறைவனுக்குத் தொடுக்கும் மாலையைத் தான் சூடி அழகு

பார்த்தாள். இவள் சூடி அழகு பார்த்த மாலையைத்தான் இறைவன் விரும்பினார் என்பதைப் பெரியாழ்வார் தன் கனவுநிலையில் கண்டுணர்கிறார்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

தன் குழந்தை தவறு செய்துவிட்டதாக உணர்ந்த பெரியாழ் வாருக்கு இறைவன் கனவில் தோன்றித் தெளிவாக்கியவுடன் கோதையின் பக்தித் திறத்தினை அறிந்தார்.

''அவள் சூடுக்கொடுக்க அதைக் கொணர்ந்தே எனக்குச் சூட்டுமின்'' என்று இறைவன் சொல்லி மறைய, கண்விழித்த பெரியாழ்வார் பேராச்சரியமுற்று, திருமகள் சூடிய மாலையை திருமால் விரும்புகின்றானே என்றெண்ணி, ஞானத்தெளிவால் உணர்ந்து,

''பின்னை கொல், நிலமாமகள் கொல், திருமாமகள் கொல்''

என்று வியக்குகிறார்.

அன்று முதல் ''கோதை'' பெரியாழ்வார் இட்ட பெயருக்கேற்பச் ''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' ஆனாள்.

காரை பூண்டு, கூறை உடுத்தி, கண்ணாடிகண்டு கைவளை குலுக்கி, கோவைச்செவ்வாய் திருத்தித் தனது ஒப்பனை அழகைச் சரிபார்த்து மாலையைச் சூடிக்கொடுக்க மாலுக்குச் சூட்டலாயினர்.

மனதில் நிறைந்த மணவாளன்

அவனருளால் அவன்தாள் வணங்கும் அரிய கருத்தை - பக்திச் சிறப்பைச் சைவ சமயம் குறிப்பிடும். வைணவத்தின் வம்சவிளக்கு ஆண்டாள் ஆண்டவனுக்கே ஆட்பட்டு அவனுக்கே அடிமைப்பட்டு அவன் நினைவுகளில் ஆழ்ந்து போனாள். மணப்பேச்சினை எடுத்தார் பெரியாழ்வார். ஆண்டாளோ....

''மானிடர்க் கென்று பேச்சுப் படில்
வாழகில்லேன்''

என்றாள்.

எவருக்குத்தான் வாழ்க்கைப்படுவாய் என்று பெரியாழ்வார் வினவ,

''மற்றொருவர்க் கென்னை பேசலொட்டேன்
மாலிருஞ்சோலை யெம் மாயர்க்கல்லால்''

என்றும்

''பெண்மையைத் தலைமை யுடைத் தாக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால் பிடிப்பன்''

என்றும்

''வேங்கட வாணன் என்னும் விளக்கினிற் புக''

என்றும் அம்மாதவன் முகத்தினின்றும் வேறு ஒரு முகத்தில் விழியேன் என்றும் ஆண்டாள் கூறினாள்.

பெரியாழ்வார் 108 திருப்பதியெம் பெருமாள்களில் யாருக்கு வாழ்க்கைப்படப் போகிறாய் என்று வினவ, திருவரங்கத்தானை அடையாளம் காட்டினாள் ஆண்டாள்.

இங்கு பக்திநெறியில் உயர்ந்து நின்ற காரைக்காலம்மையின் நிலையை விஞ்சி நிற்கிறார் ஆண்டாள்.

அகப்பொருள் தத்துவம்

பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் - உறவு முறைகள் - ஏற்பட்டுள்ளன. இவற்றை அறிந்துகொள்வதே ''சம்பந்த ஞானம்'' என்பதாகும். இங்கு நாம் கருதவேண்டியது நான்காவது சம்பந்தமாகிய நாயக-நாயகி பாவனை என்பது இந்த உறவே அகப்பொருள் தத்துவமாக விரிகின்றது. இந்த உறவே சிறந்தது; உயர்வானது.

இந்நிலையில் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து, பக்திநெறி உணர்த்தப்படும். அகப்பொருள் நிலையில் அரங்கன் மீது தான் கொண்ட காதல் கடலினும் பெரிதாகும் தெய்வீக நிலையினை அடைகிறாள்.

'காதல் கடல்புரைய விளைத்த காரமர் மேனி'

இறைவனுடையது.

''என் காதல் - மண்டிணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்பும்
கழியப் பெரிதால்''

என்ற நிலை ஆண்டாளுடையது.

அதனால்தான் இறைவனின் வலம்புரிச்சங்கிடம் வாதிடுகிறாள். காதல் வழக்காடுகிறாள்.

''கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ?
மருப்பு ஒசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல், ஆழி-வெண்சங்கே''

என்று இறைவன்மீது தான் கொண்ட அன்பு நிலையை வெளிப் படுத்துகிறாள் ஆண்டாள்.

கனவு நனவானது

ஆழ்வாரின் கனவில் வந்த திருமால் ''உம் திருமகளுடன் அணியரங்கத்துத் திருமுற்றத்தே வாரும்'' என்றருளினார். அன்றிரவே

வல்லபதேவன் கனவிலும் தோன்றி திருவில்லிப்புத்தூர் சென்று ஆழ்வாருடனும் திருமகளோடும் திருவரங்கம் வருக என்றார். பாண்டியன் பயண ஏற்பாடுகளைச் செய்தான்.

கோதை நாச்சியாரிடம் தான் கண்ட கனவைப் பெரியாழ்வார் கூற, தானும் கனவு கண்ட நிலையை ஆண்டாள் விளக்கினாள்.

''வாரண மாயிரம் சூழவலம் செய்து
நாரணநம்பி நடக்கின்றா னென்று என்னெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன்''

என்றும்

''மத்தளம் கொட்டவரி சங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்''

என்றும் தான் உணர்ந்த பக்திப்பரவச நிலையை உரைத்தாள்.

ஆண்டாளின் பக்தித்திறம் போற்றிய பெரியோர்கள்

பிறந்து வளர்ந்த நாள்முதல் பரம்பொருளையே மனதில் நினைந்து வளர்ந்த சீவான்மா ஆண்டாள். தன் பக்தித் திறத்தால் பரம்பொருள் ஆனாள். ஆண்டாள் இயற்றிய திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் இறைவனிடம் அவள் கொண்டிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துகின்றன.

ஆண்டாளுக்கும் அவள் அவதரித்த நாளுக்கும் ஊருக்கும் ஒப்பிட்டுச் சொல்ல வேறில்லை என்கிறார் மணவாள மாமுனிகள்.

''இன்றோ திருவாடிப் பூரம், எமக்காக
வன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள் - குன்றாத
வாழ்வான வைகுந்த வான்போகந் தன்னை இகழ்ந்து
ஆழ்வார் திருமகளராங்''

என்று ஆண்டாளின் பக்தித்திறத்தை ஏற்றிப் போற்றுகிறார்.

திருப்பாவை ஆண்டாள்

பக்தி நெறியில் விஞ்சியதால் கோதை என்ற பெயருடையவள். ஆண்டாள் ஆனாள். பெரியாழ்வார்,

''கோதை பக்திநெறியில் என்னை ஆண்டதால்
ஆண்டாள் ஆகிறாள்''

என்று குறிப்பதிலிருந்து நாச்சியாரின் பக்தித்திறத்தை நாமறிய முடிகிறது.

இறைவனையே நினைத்து திருவரங்கத்தில் அரங்கநாதனின் காலடி பற்றி பக்தி ஒளியில் கலந்தாள் ஆண்டாள்.

ஆழ்வார்கள் அனைவருக்கும் மகளாகத் தோன்றிய திருப்பாவையே ஆண்டாள். தன் பக்தித்திறத்தால் பகவானைப் பெற்ற அவளது அருளிச்செயலை

''அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் - ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய் - பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் பக்தியுடன் நாளும்
வழுத்தாய் மனமே - மகிழ்ந்து''

என்று ஆண்டாளைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தி தொழுவாய் மனமே என்று போதிக்கிறார் மணவாள மாமுனிகள்.

முடிவுகள்

★ பெருமாள் அவதாரம் எடுக்கும் போதெல்லாம் திருமகளின் அவதாரம் நடைபெற்றுள்ளது. ஆனால் பிராட்டியே ஆழ்வாராக அவதாரம் செய்த பெருமை தனிப்பெருஞ் சிறப்பாகும்.

★ உலகியல் வாழ்க்கையில் உறங்குகின்றவர்களை எழுப்பி எம்பெருமான் தானே தன்னைக் காட்டக் கண்டார்கள் ஆழ்வார்கள். ஆண்டாள் தானே சென்று எம்பெருமானை எழுப்பித் தன் குறையை அறிவித்தாள். அதனால் இவளின் பக்தித்திறம் மேம்படுகிறது.

★ காரைக்காலம்மையைப் போல மனித நிலையிலிருந்து மேம்பட்டுத் தனது பக்தித்திறனால் தெய்வீக நிலையினை அடைகிறாள்.

★ வேதங்களுக்கு நிகரானது ஆண்டாளின் திருப்பாவை என்கிறார் வேதபிரான் பட்டர் என்பவர்.

★ ஆண் மக்களாகிய நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் நாயகி பாவத்தை அடைந்து எம்பெருமானை பக்தியில் ஆழ்ந்து அனுபவித்தனர். ஆண்டாளோ இயற்கையிலேயே நாயகி ஆனாள்.

★ திருப்பாவை முப்பது பாக்களும் நாச்சியார் திருமொழி 143 பாக்களும் கோதை தமிழ், சங்கத் தமிழ் மாலை என்று வணங்கப்படுகின்றன.

துணைநூல்கள்

1. ஸ்ரீ நாலாயிர திவ்யப் பிரபந்தம் நயவுரை, டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்.
2. வைணவச் செல்வம், டாக்டர் ந. சுப்புரெட்டியார்.
3. ஆழ்வார்கள் வரலாறு, ''வைணவச் சுடராழி'', ஆ. எதிராஜன்.
4. வைணவ உரைவளம், டாக்டர் ந. சுப்புரெட்டியார்.
5. வைணவமும் தமிழும், ந. சுப்புரெட்டியார்.
6. திருப்பாவை - திருவெம்பாவை, ''ஆன்மீகச் செல்வர்'' பா. அன்பரசு.

திருப்பாவை காட்டும் அவதாரச் சிறப்புகள்

மு. பாலமுருகன்
மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி
காளிப்பட்டி

அவதாரம் என்பது இறைவன் மக்களை நல்வழிப்படுத்தவும் தருமத்தை நிலைநாட்டவும், விண்ணிலிருந்து மண்ணிற்கு இறங்கி வருதல் என்பதாகும். ''சாது சனத்தை நிலியங் கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதியுருஞ் சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த'' என்ற நம்மாழ்வாரின் திருவாக்கின்படி அடியவர்களைக் காக்கும் பொருட்டு திருமால் பல அவதாரம் எடுத்துள்ளார்.

எம்பெருமான் தன் சொந்தங்களாகக் கருதும் தேவர், மக்கள், தாவரம், விலங்கு பறவை போன்ற இனங்களின் நடுவே அவற்றைப் போலவே அவதரித்து அவையே இவன் என்னும்படி நிற்பதால் அதனை அவதாரம் என்பர். திருமால் எடுத்த அவதாரங்கள் முப்பது முதல் நாற்பதுக்குள் இருக்கலாம் என ஸ்ரீவேதாந்த தேசிகர் குறிப்பிடுகின்றார்.

வைணவத்தில் மட்டுமே அவதாரக் கோட்பாடுகள் நிலவு கின்றன. சைவ சமயத்தில் இவை போன்ற கருத்துக்கள் தென்பட வில்லை. சிவனின் திருவிளையாடல் பற்றிய செய்திகள் தான் கிடைக்கின்றன. அவற்றை அவதார நிகழ்வுகள் என ஏற்க வில்லை. பிறவி எடுக்காதவன் சிவன் ஆதலாலே பிறவாயாக்கைப் பெரியோன் எனச் சிலம்பு குறிப்பிடுகிறது. சிவபெருமானே, நீயும் பிறவி எடுத்து உமக்கென்று தாய் தந்தையைப் பெறக்கூடாதா, அவர்கள் இல்லை எனும் தைரியத்தில் தானே, உன்னை வில்லால் விஜயனும், பிரம்பால் பாண்டியனும், காலால் கண்ணப்பனும், கல்லால் சாக்கியனும் அடிக்கின்றார்கள் எனப் பட்டினத்தார் பாடுகின்றார். சைவ சமயத்தில் அவதாரச் செய்திகள் புலப்பட வில்லை என்பது திண்ணம்.

கிறித்தவ சமயத்திலும், வைணவத்திலும் அவதார நம்பிக்கை உண்டு. திருமால் பல அவதாரங்கள் எடுப்பினும் பத்து அவதாரங்கள் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. இவையே தசஅவதாரங்கள்

என்று வழங்கப்படுகின்றன. இந்தப் பத்து அவதாரங்களைத் திருமங்கை யாழ்வார் அவர்கள்,

> ''மீனோடும் ஆமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்த் தாயாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கல்கியும் ஆனான்''

என்று வரிசைப்படுத்துகின்றார். மனிதன் எடுக்கின்ற பிறவியாவும் அவன் நல்வினை, தீவினைக்கேற்ப அமைகின்றன. ஆனால் அவதாரம் இறைவனின் திருவுள்ளப்படியே நிகழ்கின்றது. இத்தகைய அவதாரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என என். கோபால தேசிகாச்சாரியார் குறிப்பிடுகின்றார். நரசிம்மன், இராமன், கண்ணன் ஆகிய மூன்று அவதாரங்களையே மக்கள் பெரிதும் வணங்கி வழிபட்டு வருவதோடு, பிறந்த நாளையும் கொண்டாடுகிறார்கள்.

பன்னிருவாழ்வார்களில் ஒருவரே பெண்பாலர், அச்சிறப்புக் குரியவர் ஆண்டாள். இவர் பாடிய திருப்பாவையில் இறைவனின் அவதாரச் சிறப்புக்களையும் பாடியுள்ளார். கண்ணனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டியே பாவை நோன்பை நோற்கின்றபோது பரந்தாமனின் அவதாரங்களையும் தம் பாடலில் பாடியுள்ளார். தாய் தன் குழந்தையின் பசியறிந்து தானே முன் வந்து உணவூட்டுவாள், அதுபோன்றே தருமம் என்ற குழந்தை தன் நிலை தடுமாறும்போது தாயாக இறைவன் இறங்கி வருவான்.

'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்' என்று பாரதி குறிப்பிடுகின்றார். தருமம் மறுபடியும் வெல்ல வேண்டும் என்றால் அங்கு அவதாரம் நிகழ்ந்து துணை நிற்க வேண்டும். அப்படி நின்ற அவதாரங்களையே திருப்பாவையில் பாடியுள்ளார்.

மற்றவர்களைத் துன்புறுத்தித் தான் மட்டும் வாழ நினைப்பவன் அதர்மன், மற்றவர்களையும் துன்புறுத்தித் தானும் துன்புற்று வாழ்பவன் மத்தியமன், தன்னை அழித்துக் கொண்டாலும் பிறரை வாழ வைப்பவன் உத்தமன், என மூவரின் தன்மையைத் திருப்பாவைக்கு வியாக்யானம் அருளிச் செய்த பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடுகின்றார்.

ஆண்டாள் தம் பாடலில் ''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி'' என்பதில் வாமன அவதாரத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பிறருக்காக இறைவன் தன் நிலையிலிருந்து தாழ்ந்து மண்ணுலகிற்கு வந்தான். கண்ணனைக் கணவனாக அடைய விரும்பி நோன்பை மேற்கொள்ளும் ஆண்டாள் வாமன அவதாரத்தை ஏன் பாடப்

போகிறாள். இவ்வரிகள் கண்ணனையே குறிப்பிடுவதாகக் கோபால தேசிகாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

குறளனாய் வடிவமெடுத்துச் சென்று மகாபலி மன்னனிடம் மூன்றடி பெற்றபின் நெடிய உருவம் எடுப்பது வஞ்சனையான செயல் அன்றோ! இதனைக்

''கள்ளக் குறளாய் மாவலியை
வஞ்சித்துலகம் கைப்படுத்தும்''

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார்.

ஒரு பொருளை அளக்கும்போது வேறு ஒரு பொருள் கொண்டு அளப்பது வழக்கம். ஒரு மனிதனின் உயரத்தை அளக்கும் போது ஏதேனும் கருவி கொண்டு அளப்பது முறை. கருவியேதும் இல்லையென்றால் தன்னுடம்பு கொண்டு அளத்தல் உண்டு. தசரதன் இராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று அவையோர் முடிவெடுத்தப்பின் இந்த அரசுப் பொறுப்பை இராமன் தாங்குவானா என்று தன் மகனைத் தசரதன் அளப்பதை,

''அலங்கல் மார்பையும் தனது தோள்
மார்பு கொண்டு அளந்தான்''

என்று கம்பர் குறிப்பிடுகின்றார். பஞ்ச பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன் சிவ பூசை செய்யும் பழக்கத்தைக் கொண்டவன். பாரதப் போர் நடக்கின்ற வேளையில் பூசை செய்ய இயலாததால், கண்ணனுக்கே பூசை செய்கிறான். பின்பு கயிலையில் சிவனைத் தரிசிக்கும் போது கண்ணனின் பாதத்தில் அணிந்த மலர்கள் சிவன் தலையில் இருப்பதைக் காணுகிறான். போர்க்களத்தில் அர்ச்சுனன் வழிபடும் போது கண்ணன் விஷ்வரூப தரிசனம் தருகிறான். அவன் பாதம் மண்ணையும் சிரம் விண்ணையும் தொட்டிருப்பதையே ஆண்டாள் ஓங்கி உலகளந்த உத்தமன் என்று பாடியிருக்கலாம். இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில்,

''தீர்த்தன் உலகளந்த சேவடி மேல் பூந்தாமம்
நேர்ந்தி யாவையே சிவன் முடி மேல் தான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழுத''

என்று நம்மாழ்வார் பாடியுள்ளார். கண்ணன் சிறு பிள்ளையாக இருக்கும்போது மண்ணை உண்டதால் அன்னை கண்டிக்கின்ற போது தன் வாய்க்குள்ளே ஏழு உலகத்தையும் காட்டுவதை,

''ஐயநா வழித்தாளுக்கு அங்காந்திட
வைய மேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே''

என்று பெரியாழ்வார் பாடியுள்ளார். ஏழு உலகத்தையும் தன் வாய்க்குள்ளே காட்டுகிறவனுக்கு, நெடிய உருவம் எடுத்து உலகை

அளத்தல் பெரிய செயல் அன்று. ஆகவே ''ஓங்கி உலகளந்த உத்தமன்' எனும் சொற்றொடரில் கண்ணனையே சிறப்பித்துப் பாடியுள்ளார் ஆண்டாள்.

ஆயர்பாடியில் வளரும் கண்ணனைக் கொல்லும் பொருட்டுக் கம்சன் பூதனையை அனுப்பி வைக்கிறான். அவளோ ஆயர்பாடியில் யசோதையின் உருவம் எடுத்துச் சென்று பாலூட்டினாலும், தாய்மையின் உள்ளத்தைப் பெறாது கொல்லும் எண்ணத்துடனே பாலூட்ட, கண்ணன் அதன் வழியே உயிரையும் உறிஞ்சிவிட்டான் இந்நிகழ்வைப் பேய் முலை நஞ்சுண்டு என்று பாடியுள்ளாள்.

தான் மணந்து கொள்ள விரும்பும் கண்ணனின் லீலைகளையே பெரிதும் பாடுகிறாள். பசுக்கூட்டங்களை மேய்த்தமை, சகடாசுரன், கொக்கின் வடிவில் வந்த பகாசுரன், கன்று விளாங்கனி ஆகிய உருவில் வந்த அரக்கர்களை எல்லாம் அழித்தமையையும் சிறப்பித்துப் பாடியுள்ளாள். இந்திரன் கோபத்துக்குள்ளாகிய ஆயர்பாடி மக்களைக் காக்கும்பொருட்டுக் கோவர்த்தன மலையே குன்றாய் எடுத்தமையை,

'கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்'

என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார். இதனை ஆண்டாளும் ''குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி'' எனச் சிறப்பிக்கிறாள்.

இறைவன் எடுத்த அவதாரங்களிலே மிகவும் சிறப்புற்றது இராம அவதாரம் ஆகும். கடவுளே ஆயினும் மனித வடிவம் தாங்கி வந்துவிடின் இன்ப துன்பங்களை அனுபவித்தே தீரவேண்டும் என்பதற்கிணங்க இராமன் வாழ்ந்து காட்டினான்.

தம் பாவையில் இரண்டு இடங்களில் இராமனைப் பற்றிப் பாடியுள்ளார். சீதையின் தந்தை சனகனுக்கு இராமனை அறிமுகப் படுத்தும் விசுவாமித்திரர், இவன் தசரதனின் மகன் என்பதோடு மட்டும் நிறுத்தாமல் வசிட்டனின் மாணவன் என்கிறார். ஏனெனில் தந்தையைப் போன்று மகன் இருப்பானோ எனும் சந்தேகத்தைக் களையும் விதமாய்ச் சொல்கிறார்.

ஆண்டாளோ திருப்பாவையில் இராமனை ''மனத்துக்கினி யானைப் பாடவும் நீ வாய் திறவாய்'' என்று பாடுகிறாள். கண்ணன் பெண்களின் மனத்தில் அன்பை வளர்த்து விட்டு ஓடி ஒளிந்து கொண்டு துயரத்தில் ஆழ்த்திவிடுவான். இந்த அவதாரத்தைப் பாடுதலின் உள்நோக்கம் இராமனைப் போன்று மனத்தாலும் வேறு பெண்ணை நினைக்காமல் தன்னை மட்டுமே நினைத்திருக்க வேண்டும் எனும் அடிப்படையிலேயே என்பர். மனிதப் பிறவியில்

ஏற்படும் காதல் இப்பிறவியில் மட்டுமல்லாது மறுபிறவியிலும் தொடர வேண்டும் என்பதை,

'இம்மை மாறி மறுமை யாகினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே'

என்ற குறுந்தொகைத் தலைவிக்கு உள்ள காதலைக் காட்டிலும் ஆண்டாளின் காதல் எவ்விகிதத்தில் குறைந்ததாகும் தான் மணந்து கொள்ளப்போகும் கணவன் இத்தகைய குணத்துடன் இருக்க வேண்டுமென விழைவது இயற்கையன்றோ. ஆகவே கண்ணன், இராமன் உளத்தோடு இருப்பதால் தன் மனத்துக்கினியான் என்று பாடினாள். அவதாரம் பல எடுத்தாலும் அவன் தாரம் ஆகவேண்டும் என்பதற்காகவே ஆண்டாள் தன் திருப்பாவையில், அவனின் அவதாரச் சிறப்புக்களைப் பாடியுள்ளாள்.

துணைநூல்கள்

1. பாரதியார் கவிதைகள் (பாஞ்சாலி சபதம்)
2. திருவாய்மொழி (நம்மாழ்வார், 3.5.5, அடிகள் 1.2)
3. பட்டினத்தார் பாடல்கள்
4. பெரிய திருமொழி (திருமங்கையாழ்வார் (8.8.10. 123 அடிகள்)
5. கம்பர் கவியும் கருத்தும், வி.ஜி. கருத்திருமன்.
6. குறுந்தொகை
7. திருப்பாவை.

திருவாய்மொழியில் தூது

பா. பொன்னி

அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி

திருவாய்மொழி இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் ஒருவரான நம்மாழ்வாரால் பாடப் பெற்றது. நம்மாழ்வாரை உயிராகவும் ஏனைய ஆழ்வார்களை உடலாகவும் கொள்வது வைணவ மரபு. இது மட்டுமல்லாது நம்மாழ்வார், திருமால் திருவடியில் எப்போதும் விளங்குவதாக வைணவ சமயம் கூறும். பாசுரங்களில் நம்மாழ்வார் தாமான தன்மையில் நின்றும், தலைவி நிலையில் நின்றும் பேசுவது உண்டு. தலைவி நிலையில் நின்று பேசும்போது பராங்குச நாயகி என்று சுட்டப் பெறுவார். திருவாய்மொழியில் தலைவி கூற்றாகப் பதினேழு பதிகங்கள் உள்ளன. அவற்றுள் தூதுப் பொருளில் அமைந்துள்ள பதிகங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தூது – விளக்கம்

தூது குறித்து, ''ஒருவர் தம்முடைய உள்ளக் கருத்தைத் தமது காதலர், நண்பர், பகைவர் முதலியவர்களில் யாரேனும் ஒருவருக்குத் தக்க ஒருவர் வாயிலாகக் கூறி விடுப்பது தூது ஆகும்'' என்று வாழ்வியற் களஞ்சியம் பொருள் கூறுகிறது. அகப்பொருளிலும், புறப்பொருளிலும் தூது நிகழ இடம் உண்டு. அகப்பொருளில் உயர்திணை, அஃறிணைப் பொருட்கள் தூதாகப் பயன்படுத்தப் படுகின்றன. தூது என்பதனை ஒருவர் தன்னுடைய உள்ளக் கருத்தினை மற்றவர்க்குத் தெரியப்படுத்தும் ஓர் உத்தி எனலாம்.

தூதின் வகைகள்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகத் திகழும் தூது பற்றிய குறிப்புகளை நாம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிலும், சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு பக்தி இலக்கியம் போன்ற இலக்கியங்களிலும் காண முடிகிறது. தூதினை அகத்தூது, புறத்தூது என ஒரு வகையாகவும், இசைத் தூது, வசைத் தூது என மற்றொரு வகையாகவும் பிரிக்கலாம். தலைவன், தலைவியரிடையே நிகழ்வதனை அகத்தூது எனவும், அரசியல் தொடர்பாக நிகழ்வதனைப் புறத்தூது எனவும், பாட்டுடைத் தலைவனின் பெருமையைக்

கூறுவதனை இசைத்தூது எனவும், ஒருவரை இகழ்ந்து கூறுவதனை வசைத்தூது எனவும் கூறுவர்.

தூதுப் பொருட்கள்

பாணன், பாங்கன், தோழி ஆகியோர் உயர்திணையில் தூது செல்வோராகக் குறிக்கப்பட்டுள்ளனர். இரத்தினச் சுருக்கம் என்னும் நூல் தூது செல்வோர் பற்றிய குறிப்பினைத் தருகிறது.

இயம்புகின்ற காலத்து எகிமையில் கிள்ளை
பயன்பெறு மேகம்பூவை பாங்கி - நயந்தகு குயில்
பேதைநெஞ்சம் தென்றல் பிரமரம் ஈரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை (நூ. 7)

என்ற நூற்பாவால் இதனை அறியலாம்.

திருவாய்மொழியில் தூது

திருவாய் மொழியில் தலைவி தலைவனிடம் தூது விடுவதாக நான்கு பதிகங்கள் அமைந்துள்ளன. முதற் பத்தில் நான்காம் திருவாய் மொழியும், ஆறாம் பத்தில் ஒன்று மற்றும் எட்டாம் திருவாய்மொழியும், ஒன்பதாம் பத்தில் ஏழாம் திருவாய்மொழியும் தூது அமைப்பில் உள்ளன. நாரை, குருகு, குயில், அன்னம், மகன்றில், வண்டு, கிளி, நாகணவாய், வாடை, நெஞ்சு, பறவைகள், மேகங்கள், பாவை ஆகியவை தூதுப் பொருளாக அமைந்துள்ளன.

தூதுப் பொருளின் சிறப்பு

பராங்குச நாயகியான நம்மாழ்வார் தனக்குக் காட்சி தந்து மறைந்துவிட்ட திருமாலை மீண்டும் காண வேண்டும் என்ற அன்பின் காரணமாகத் தூதுவிட எண்ணுகிறார். ஒருவரிடம் நமக்கு ஒரு செயல் ஆக வேண்டும் என்றால் அவரைப் பற்றிப் புகழ்ந்து கூறினால் அந்தச் செயல் மிக எளிதாக முடிந்துவிடும். பராங்குச நாயகியும் திருமாலிடம் தூது செல்ல வேண்டி நாரை, வண்டு, குருகு, அன்னம் ஆகியவற்றைப் பலவாறு புகழ்ந்து கூறுகிறாள்.

..........பிரான்
சூடிய தண்துளபம் உண்டதூமது வாய்கள் கொண்டே
(திருவாய்மொழி - 6:8:2)

என்று வண்டானது திருமால் சூடியிருக்கும் துளசி மாலையில் உள்ள தேனை உண்டு அவனோடு இணைந்திருக்கும் பெருமை உடையது என்று வண்டினைப் புகழ்ந்து கூறுகிறாள். மற்றொரு பாசுரத்தில்,

'அஞ்சிறைய மடநாராய்!' (திருவாய்மொழி - 1:4:1)

என்று நாரையின் சிறகின் அழகினைப் புகழ்ந்து கூறுகிறாள். ஏனென்றால் இவளுக்குத் தூது செல்லத் துணையாக இருப்பது நாரையின் அச்சிறகுகள் தானே.

தூது மறுத்தால் கடிதல்

தலைவி தான் எவ்வளவுதான் பாராட்டி எடுத்துக் கூறிய நிலையிலும் தூதுப் பொருள் தூது செல்ல மறுக்கும் நிலையில், அதனால் ஏற்படும் நிலை கூறிக் கடிந்துரைக்கிறாள்.

நீயலையே சிறுபூவாய்! நெடுமாலார்க்கு என் தூதாய்
நோய் எனது நுவல் என்ன நுவலாதே இருந்தொழிந்தாய்
சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனி உனது
வாய் அலகில் இன்அடிசில் வைப்பாரை நாடாயே
(திருவாய்மொழி - 1:4:8)

என்று உணவுக்கு வாடும் நிலை ஏற்பட்டுவிடும் என்று கடிந்துரைக்கிறாள்.

தூதுப் பொருள் அடையும் பயன்

தலைவி தூதுப் பொருளைக் கடிந்த நிலையில் இதனால் கோபம் கொண்டு தூது மறுத்துவிட்டால் என்ன செய்வது? என்ற ஐயம் தலைவிக்குத் தோன்றுகிறது. ஆகவே தூது செல்வதனால் தனக்கு மட்டு மல்லாது தூதுப் பொருளுக்கும் பயன் ஏற்படும் என்று கூறுகிறாள்.

மையமர் வாள் நெடுங்கண் மங்கைமார் முன்பு என் கை இருந்து
நெய்யமர் இன்னடிசில் நிச்சல் பாலொடு மேவீரோ?
(திருவாய்மொழி - 6:8:2)

என்று நெய்கலந்த இன்னடிசில் பாலோடு கலந்து தருவதாகக் கூறுகிறாள். தூது செல்லும் இடமும் நெல்வயல் சூழ்ந்த இடம் ஆதலால் அங்கும் தேவையான உணவினைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறுகிறாள்.

செய் கொள் செந்நெல் உயர் திரவண் வண்டூ ருறையும்
(திருவாய்மொழி - 6:1:1)

என்ற பாசுர அடிகள் இதனை விளக்குகின்றன.

தலைவனின் அடையாளம்

தலைவி புகழ்ந்து கூறியதாலும், தூது செல்வதால் கிடைக்கும் பயன்களைக் கொண்டும் தூது செல்ல ஒருப்பட்ட தூதுப் பொருளிடம் தலைவி, தலைவனது அடையாளங்களைக் கூறுகிறாள்.

''கடல் ஆழி நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும்
அடல் ஆழி அம்மான்'' (திருவாய்மொழி 1:4:10)

என்று அவனது இருப்பிடம் கூறுகிறாள்.

கருவண்ணம் செய்யவாய் செய்யகண் செய்யகை செய்யகால்
செருஒண் சக்கரம் சங்கு அடையாளம் (திருவாய்மொழி 6:1:7)

என்று அங்க அடையாளங்களைக் கூறித் தூது விடுக்கிறாள்.

தூது கூறும் இடம்

தலைவனது அடையாளங்களைக் கூறிய பிறகு தலைவிக்குத் தூத அனுப்பும் பொருள் சரியான இடத்தில், சரியான நேரத்தில் தூதினைக் கூறிவிடுமா? என்று ஓர் ஐயம் தோன்றியது. ஆகவே எந்த இடத்தில் தூதினைக் கூறவேண்டும் என்பதையும் அவளே கூறினாள்.

'மாதரைத்தம் மார்பகத்தே வைத்தார்க்கு'

(திருவாய்மொழி 9:7:6)

என்று திருமால் பிராட்டியுடன் இருக்கும் நிலையைக் கூறுகிறாள். திருமால் தன்னை ஏற்றுக் கொள்ளத் தயங்கினாலும் பிராட்டியின் அருளால் தான் திருமாலுடன் இணைய முடியும் என்ற எண்ணத்தின் விளைவே இஃது எனலாம்.

தூது சொல்லும் முறை

பிராட்டியோடு திருமால் இருக்கும் நிலையில் அவை தூதுரைக்கும் முறை மறந்து ஏதேனும் தவறுதலாகப் பேசிவிட்டால் என்ன செய்வது? என்று எண்ணினாள். ஆகவே அவை எங்ஙனம் தூது சொல்ல வேண்டும் என்பதனையும் கூறி அனுப்புகிறாள்.

கைகள் கூப்பிச் சொல்லீர் வினையாட்டியேன் காதன்மையே

(திருவாய்மொழி 6:1:1)

பாதம் கைதொழுது பணிவீர் அடியேன் திறமே

(திருவாய்மொழி 6:1:2)

இறங்கி நீர்தொழுது பணியீர் அடியேன் இடரே

(திருவாய்மொழி 6:1:3)

என்று பணிவுடன் கரங்கள் கூப்பிப், பாதம் தொழுது தன்னுடைய தூதினைக் கூற வேண்டும் என்று கூறுகிறாள்.

தூதுச் செய்தி

தலைவி தலைவனிடம் கூற வேண்டிய தூதுச் செய்தியைக் குறிப்பிடுகிறாள். தலைவனைப் பிரிந்து வாடும் தன்னுடைய நிலையினையும், தலைவன் மேல் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பையும் தெரிவிக்கும்படிக் கூறுகிறாள். தன்னைப் பற்றிக் கூறும்போது,

மல்கு நீர்க் கண்ணேற்கு (திருவாய்மொழி 6:1:1)

என்று தலைவனைப் பிரிந்தமையால், பிரிவுத் துன்பத்தால் விழிகள் கண்ணீரால் நிறைந்திருக்கும் நிலையைக் கூறுகிறாள். மேலும்,

உடலம் நைந்து ஒருத்தி உருகும் என்று உணர்த்துமினே

(திருவாய்மொழி 6:1:4)

என்று வாடி வருந்தும் நிலையைச் சுட்டுகிறாள். தலைவனைப் பிரிந்தமையால் உள்ளம் கலங்கி நிற்பதனை,

> மதியிலேன் வல்வினையே மாளாதோ என்று ஒருத்தி
> மதிஎல்லாம் உள்கலங்கி மயங்குமால் என்னீரே
>
> (திருவாய்மொழி 6:4:3)

என்ற அடிகள் விளக்கி நிற்கின்றன. மேலும் தலைவனைத் தவிர வேறு யாரையும் எதிர்நோக்காத தன்மையை,

> மாசறு நீலச்சுடர்முடி வானவர் கோனைக் கண்டு
> ஏசறும் நும்மை அல்லால் மறுநோக்கிலள் பேர்த்து மற்றே
>
> (திருவாய்மொழி 6:8:8)

என்ற அடிகளில் குறிப்பிட்டுத் தலைவனிடம் தூது அனுப்புகிறாள்.

உள்ளுறைப் பொருள்

பராங்குசநாயகி பெரும்பாலும் பறவைகளையே தூதுவிடுவாள். இங்ஙனம் பறவைகளைத் தூதுவிடுவதற்கு உட்பொருள் உண்டு. பகவத் விஷயத்தில் கொண்டு சேர்ப்போர் பறவைகளாகக் கொள்ளப் பெறுவர். பறவைகள் இரு சிறகுகளைக் கொண்டு பறக்கின்றன. ஞானம், ஒழுக்கம் என்னும் இரண்டாலும் இறைவன் அடையப் பெறுகிறான். எனவே இவை இரண்டும் சிறகுகள், ஆசாரியர்களும், ஒரு சாலை மாணவர்களும், புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள். பெருமான் தன் சீல குணத்தால் முதலில் ஆழ்வாருடன் கலந்தான். பின் அவரிடமுள்ள குற்றங்களைக் கண்டான். அதனால் அவரை வெறுத்துப் பிரியலுற்றான். தன்னுடைய பிழைகள் அவனுடைய பொறுக்கும் பண்பினையும் மறப்பித்தன போலும் என்று கருதிய பராங்குசநாயகி அப்பெருங்குணத்தைச் சிறிது நினைப்பூட்டிவிட்டால் போதும் என்று எண்ணித் தூது விடுகிறாள்.

நோயுற்றவர்களுக்கு இனிப்பினைத் தடவிக் கசப்பான மருந்தினைத் தருவர். அதுபோல் பிறவி நோயில் துன்புற்று வாடும் உலகினரை நல்வழியில் திருப்ப ஆழ்வார்கள் சிற்றின்ப வழியில் பேரின்பத்தை வலியுறுத்தியுள்ளனர்.

துணைநூல்கள்

1. அருணாசலம், ப., பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.
2. கமலக்கண்ணன் (உரை), நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மூலமும் விளக்கவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2001.
3. சுப்பு ரெட்டியார், ந., சில நோக்கில் நாலாயிரம், பாரி நிலையம், சென்னை, 1983.
4. பாலுச்சாமி, நா., வாழ்வியற் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1988.

ஆழ்வார்கள் காட்டும் திருமாலின் கண்ணழகு

கி. நீலகண்டன்

மதுரைக் கல்லூரி
மதுரை - 11

'திராவிட வேதம்' எனப் போற்றப்படுகிற நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஆழ்வார்கள் இறைவன் திருமாலின் அழகிய தோற்றத்தைப் பலவாறு பாடி மகிழ்ந்துள்ளனர். இறைவன் தன் மேனியை முழுமையாகவும், கண், முகம், வாய், கை, பாதம், மார்பு என உறுப்பு நலன்களைத் தனித்தனியேயும் அவர்கள் விளக்கமுறக் காட்டியுள்ளனர். இவை ஆழ்வார்தம் கருத்தின் அடிப்படையில் அமைந்த இறைவன் தன் வடிவழகைக் குறிப்பனவாக உள்ளன.

இக்கட்டுரை, ஆழ்வார்கள் வடித்துத் தந்திருக்கிற இறைவனது அழகிய தோற்றத்துள், குறிப்பாகக் கண் அழகினை மட்டும் விரிவாகப் பேசுகிறது. இதனால் ஆழ்வார்கள் முன்வைக்கின்ற கண் அழகின் உன்னதத்தையும் அதன் வழி அறியலாகும் சமயக் கருத்தினையும் ஒருசேரப் பெற இடம் இருக்கின்றது. மேலும் இறைவனது மேனி அழகு என்பது உடல் சார்ந்த மொழியால் விளக்கம் பெறுவதால் ஆய்வு அணுகுமுறையும் அதையொட்டி அமைகிறது.

உடல்மொழி

'உடல் என்கிற ஊடகத்தின் வழியாகக் கருத்துக்கள் தெரிவிக்கப் படுவதை உடல்மொழி எனலாம்'[1]. உடல் உறுப்புக்களை அவற்றின் வடிவங்களை இலக்கியத்தில் படைப்பதன் மூலம் ஆசிரியன் தற்சார்புக் கருத்துக்களை அவற்றுள் ஏற்றிச் சொல்கிறான். நடைமுறை உலகத்து உடல் மொழியானது இலக்கியத்திற்கான உடல் மொழியாக-படைப் பாளனது கருத்தினை முன்வைக்கின்ற உடல்மொழியாக - மாற்றம் பெறுவது இவண் கவனிக்கத்தக்கது. பிரபந்தத்தில் சமய நோக்குடன் இறை அழகு செதுக்கப்பட்டுள்ளது - இதன் தொடர்ச்சியாய் ஆழ்வார்கள் திருமாலின் கண்ணழகை எவ்வாறெல்லாம் கண்டிருக் கிறார்கள் அவற்றின் பொருண்மை என்ன? என்பதைப் பின்வரும் பகுதிகளில் காணலாம்.

ஆழ்வார்கள் காட்டும் திருமாலின் கண்வடிவழகு

சங்ககாலம் தொட்டே இலக்கியங்களில் உடல் குறித்த வர்ணனைகள் இடம்பெற்று வருகின்றன. பக்தி இலக்கியத்திலும் இந்நிலை உள்ளது. ஆனால் இங்கு இறைவன் மையப் பொருளாகவும், மனித உடல் வடிவில் காட்டப்படுகின்ற நிலையும் இருப்பதால் அவனது மேனியும் இயல்பாகவே வர்ணனைக்கு உட்படுகிறது. எனினும் காதல் தலைவனோ, தலைவியோ நாட்டின் மன்னனோ இலக்கியத்தில் காட்டப்படுகிற உடல் அழகிலிருந்து இங்கு குறிக்கப்படுகிற இறை அழகு மாறுபட்டது.

இறைவன் மனித உருவில் காட்டப்பட்டாலும் அவன் அழகு புனிதமானதாக, உன்னதமானதாக, சமயச்சாறுகளை உட்கொண்டதாக, வியந்து அறியக் கூடியதாக எனப் பல நிலைகளில் கருத்துக்களை வெளிப்படுத்தும் வடிவாக விளங்குகிறது..

ஆழ்வார்கள் திருமாலின் கண்களை மலராக, ஒளியாக, கயல் போன்ற வடிவினதாக, நீண்டு பரந்ததாக எனப் புறவடிவிலும், சிவந்தநிறம், செவ்வரி படர்ந்த தோற்றம் எனக் கண்ணதன் உட்புற வடிவிலும், இனிமை தருவதாக, கவர்ச்சியானதாக அருள் வழங்கு வதாக, காதலைத் தூண்டுவதாக எனப் பயன்தரு வடிவிலும் படைத்துக் காட்டியிருப்பதை அறிய முடிகிறது. எனவே

1. புறவடிவத் தோற்றம்
2. உட்புற வடிவத் தோற்றம்
3. பயன் தரும் தோற்றம்

என மூன்று வகைகளில் திருமாலின் கண்களைப் பிரித்துக் காணலாம்.

புறவடிவத் தோற்றம்

ஆழ்வார்கள் இறைவனது கண்களை 'நீண்டகண்ணான்'[2], 'தடக்கண்'[3], 'செம்பெருந்தடங்கண்'[4] எனப் புறத்தோற்றத்தில் நீண்ட, நெடிய, பருத்த கண்களாகக் காட்டுகின்றனர். இவ்வாறு குறிப்பிடு வதன் வழி இப்பிரபஞ்சமே இறைவடிவாய் விளங்குவதாலேயே அவனது அளவிட முடியாத மேனிக்கான கண்களும் பார்வையும் பரந்துபட்டன என்பதை குறிப்பால் உணர்த்துகின்றனர்.

'தாமரைக்கண்',[5] 'பங்கயக்கண்',[6] 'கமலக்கண்',[7] 'மலர்க்கண்',[8] 'செந்தாமரைக்கண்'[9] என இறைவனுடைய கண்கள் தாமரை மலரை மையப்படுத்தி அதன் அனைத்துப் பண்புகளையும் பெற்றதாகக் காட்டப்படுகின்றது. புறவயமாய் அறியும் பொழுது தாமரை மலர் குளிர்ச்சியானது; எக்காலத்திலும் காண்பதற்குச் சலிப்பு ஏற்படுத்தாத அழகிய தோற்றம் உடையது; நிறத்தாலும் வடிவத்தாலும்

காண்போரைக் கவரவல்லது எனப்பொருள் கொள்ளலாம். பொதுவாகக் கண்களை மலருடன் ஒப்பிடுவது அனைத்து வகை இலக்கியங் களிலும் காணப்பட்டாலும் திருமாலின் கண்ணழகு குறிப்பாகத் தாமரை மலரோடு பொருத்திக் காணப்பட்டுள்ளது. குளம் குட்டை என நீரோடு தொடர்புடைய தெய்வமாகத் திருமால் குறிக்கப் படுவதால் நீர்நிலைகளில் காணப்படுகிற சிறப்புமிக்க தாமரை மலர் கண்களுக்கு உவமையாக எடுத்தாளப்பட்டிருக்க வேண்டும்.

தாமரை மலரைத் தாங்கி நிற்கும் நீர்ப்பரப்பும், அதன் உட்புறமும் நிறமற்ற கருமையான வடிவமாக விளங்குவதால் அவ்வகையில் ஆழ்வார்களும் இந்தப் பூமியில் நீர்நிலைகளின் அடிப்பாகத்தை இறைவனது கிடந்த கோலமாகக் கண்டு அவற்றின் மேல் பூக்கும் தாமரையைக் கடவுளின் கண்களாக்கிக் கண்டிருப்பார் களோ? என எண்ணத் தோன்றுகிறது.

இந்தியச் சமயச்சிந்தனைகளில் பல்வேறுபட்ட கருத்தியல் சார்ந்த சமயங்கள் தாமரை மலரை எடுத்தாண்டுள்ளன. கௌதமபுத்தன் தாமரை மலர்மீது வீற்றிருப்பதாக பௌத்தசமயம் காட்டுகிறது. திருமாலின் உந்தித் தாமரையில் பிரம்மன் பிறக்கிறான். சரஸ்வதி, லட்சுமி போன்ற தெய்வங்களது உறைவிடமாகவும் தாமரை மலர் விளங்குகிறது.

தெய்வங்கள் தோன்றியும், தங்கியும், பிறந்தும் இருக்கிற புனித இடமாகத் தாமரை மலர் சமயச் சிந்தனைகளில் நீங்கா இடம் பெற்றுள்ளது. இங்கு தாமரை என்பது ஒரு தோற்றுவாய்க்கான உற்பத்தித் தலமாக அல்லது கருவறையாக எண்ணத் தோன்றுகிறது. வேறு வார்த்தையில் கூறுவதானால் தெய்வங்களை உற்பத்தி செய்கிற குறியீடாகப் பல்வேறு காலந்தொட்டு தாமரைமலர் வழக்கில் இருந்து வருகிறது எனலாம். பல்வேறு இதழ்களால் சூழப்பட்ட மகரந்தப் பொடிகளை உள்ளே கொண்ட தாமரை மலரின் இயல்பான அழகியதோற்றம் தெய்வத்தைப் பெற்றுத் தருவதற்கான குறியாக மனிதரால் முன்னொரு காலத்தில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மலர் ஒரு தொன்மக்குறியீடாய் விளங்குகிறது. இது ஆய்விற்குரியது.

ஆயின் தாமரைமலர்கள் இறைவனது கண்களாகவே அறியப் படுகின்றன. ஆண்டாள் 'கார்த்தன் கமலக்கண்'[10] என இறைவனது கண்ணைக் குறிப்பிடுகிறாள். இதற்கு உரையாசிரியர் 'மேகத்தில் சிரம்ஹறமான தாமரை பூத்தாப்போலே இருக்கிற'[11] எனப்பொருள் தருகிறார். இதனால் கருமேகக் கூட்டங்களுக்கு நடுவே தோன்றுகிற கண்ணாகப் (சிவந்தநிறம்) பெருமாளின் கண் வர்ணிக்கப்படுகிறது.

இங்கே மேகக்கருமையும் சூரிய ஒளியும் பொருத்திக் காணப்படுகிறது. இது ஒருவகையில் இறைவன் வானுயர நின்றகோலத்தை விளக்கி நிற்கிறது எனலாம். கரிய மேனியில் கண்கள் செந்நிறமுடைய தாமரையாயும், ஒளியாயும் புறத்தே அழகு சேர்க்கின்றன.

உட்புறத் தோற்றம்

உட்புறத்தோற்றம் என்பது புறவயமான வடிவத்தினை அடுத்து உள்ள கண்களின் தன்மையை உணர்த்துவதாக அமைகிறது. 'எரிவட்டக்கண்',[12] 'எரிந்தபைங்கண்',[13] 'செங்கண்மால்',[14] 'செய்யகண்ணன்',[15] என நன்கு சிவந்த கண்களாயும் தீப்போன்று எரிகின்ற கண்களாயும் கோபத்தை உணர்த்துகின்றதாயும் அவை விளங்குகின்றன. 'மிளிர்ந்து செவ்வரிஓடிய நீண்ட அப்பெரிய ஆயகண்கள்'[16] எனத் திருப்பாணாழ்வார் இறைவனது கண்களை நிறத்தோடு ஒளிமிக்கதாகவும் காட்டுகிறார். எந்தவிதமான குற்றமும் இல்லாத அநீதியை பொசுக்குகின்ற, அறிவை வழங்குகின்ற என்பன போன்ற தன்மைகளை உட்கொண்ட விழிகளாக இறைவனது திருவிழிகள் பொருள் உணர்த்தி நிற்கின்றன. இரசிக்கக்கூடிய குழந்தைக் கண்ணனின் 'கள்ள விழியும்'[17] ஆழ்வார்களால் காட்டப் படுகின்றது. எனவே திருமாலின் கண்கள் குளிர்ச்சியையும் கோபத்தையும் ஒருங்கே பெற்றிருப்பதை இதனால் உணர முடியும்.

பயன்தரு வடிவம்

இறைவனது கண்களைப் பயனளிக்கக்கூடிய கண்களாகவும் ஆழ்வார்கள் பலவழிகளில் கண்டிருக்கின்றனர். அவை பக்தர்கள் அவன்பால் காதல் கொள்ளத்தக்க வகையில் கவர்ச்சியானவையாக அடியவர்களுக்கு அருள் தருபவையாக, வளம் சேர்ப்பவையாக விளங்குகின்றன. 'திருக்கண்'[18] 'அருட்கண்'[19] (முகத்தனகண்) 'கள்அவிழ் தாமரைக்கண்'[20] 'சேயரிக்கண்'[21] எனச் சிவந்த அரியை யுடைய கண் என்றெல்லாம் பயன்தரும் வடிவங்களாக அவை உணர்த்தப்பட்டுள்ளன. திருமாலின் கண்களை அழகிய வண்டாகவும், மலராகவும், ஒருசேரப் பார்த்திருக்கிற அழகு போற்றுதற்குரியது. இங்கு மலராக இருந்து துய்க்கக் கொடுப்பதும் வண்டாக இருந்து மலரைத் துய்ப்பதும் என இரு செயல்கள் ஓரிடத்தில் நிகழ்கின்றன. இது சமயநோக்கில் பரமாத்மாவோடு கொள்கின்ற உறவினை விளக்குவதாகவும் இலக்கியப் பார்வையில் காதலன் காதலி சங்கமத்தைக் குறிப்பதாயும் உள்ளது. எதுவாயினும் மனித வாழ்க்கையின் துய்த்தல்-துய்க்கத்தருதல் என்கிற எதிர்மறை இக்கண் வடிவத்தின் மூலம் அழகுறக் காட்டப்பட்டுள்ளது.

முடிவுரை

மேற்கூறியவற்றால் இறைவனது கண்ணழகு வன்மை, மென்மை என்கிற இரண்டு தன்மைகளையும் ஒருங்கே பெற்றிருக்கக்கூடியதாக விளங்குகிறது. இறைவனது கண் அருளும், கருணையும், அன்பும் கொண்டிருக்கக்கூடிய அதே வேளையில் கோபமும், அழித்தலு மாகிய பண்பினையும் பெற்றிருப்பதால் பக்தர்களுக்கு மென்மைத் தோற்றமும் கொடியவர்களுக்கு அல்லது தீங்கு விளைவிப்பவர் களுக்கு அதுவே அச்சத்தைத் தோற்றுவிக்கின்ற ஆற்றல் மிகுந்த வன்மைத் தோற்றமுமாகக் காட்டப்பட்டுள்ளது. இறைவன் கண்ணழகு இரசிக்கவும், வணங்கவும், மகிழவும் கூடியதாக ஆழ்வார்கள் காட்டினாலும் அவர்களில் சிலர், இறைவனது பார்வை, நோக்கம் என அநீதியை அழிக்கவும் - நன்மையை விளைவிக்கவும் கூடிய உட்பண்பினை விளக்கியுள்ளனர்.

குறிப்புகள்

1. திருமலை, மா.சு. தமிழ்நாவலில் உடல்மொழி, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர், 1987, ப. 1.
2. ஜகத்ரட்சகன் (ப.ஆ.), நாலாயிரதிவ்வியபிரபந்தம், ஆழ்வார்கள் ஆய்வுமையம், சென்னை, 1993, திருமங்கையாழ்வார், திருக்கடல்மல்லை பாடல் எண், 1095.
3. மேலது, பெரியாழ்வார், அம்புலிப்பருவம், பா.எண். 57.
4. மேலது, கண்ணன் குழல் ஊதல், பா.எ. 280.
5. மேலது, குலசேகராழ்வார், தேவகியின் புலம்பல், பா.எ. 173.
6. மேலது, ஆண்டாள், திருப்பாவை, பா.எ. 487.
7. மேலது, பெரியாழ்வார், ஆயர்மங்கை முறையீடு, பா.எ. 222.
8. மேலது, திருவரங்கம் 2, பா.எ. 413.
9. மேலது, நம்மாழ்வார், ஆழ்வாரோடு எம்பெருமான் கலந்தவகை, பா.எ. 2989.
10. மேலது, ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.எ. 640.
11. பார்த்தசாரதி அய்யங்கார் (ப.ஆ.), நாலாயிரதிவ்வியபிரபந்த அகராதி, ஸ்ரீரங்கம், 1963, ப.எண். 342.
12. ஜகத்ரட்சகன் (ப.ஆ.), நாலாயிரதிவ்வியபிரபந்தம், ஆழ்வார்கள் ஆய்வுமையம், சென்னை, 1993, திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி, பா.எ. 2402.
13. மேலது, திருமங்கையாழ்வார், சிங்கவேல்குன்றம், 1013.
14. மேலது, திருநறையூர், பா.எ. 1507.
15. மேலது, திருவழுந்தூர், பா.எ. 1608.
16. மேலது, திருப்பணாழ்வார், அமலனாதிப்பிரான், பா.எ. 934.
17. மேலது, குலசேகர ஆழ்வார், கன்னியர் ஊடிக்கண்ணனை எள்குதல், பா.எ. 699.
18. மேலது, ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.எ. 509.
19. மேலது, பா.எ. 518.
20. மேலது, நம்மாழ்வார், எம்பெருமானது விசித்திர விபுதியைக் கண்டு ஆழ்வார் ஆச்சர்யப்படுதல், பா.எ. 3641.
21. மேலது, திருவிருத்தம், பா.எ. 2479.

ஆழ்வார்களின் தாய்மை அனுபவம்

ந. சுபா ரமேஷ்

ஏ.வி.எஸ். கலை அறிவியல் கல்லூரி
சேலம்

உலகத்திலுள்ள சமய நூல்கள் பலவற்றிலும் இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பு பற்றிப் பல கருத்துக்கள் உள. அவற்றில் சிறந்த ஒன்று தலைவன் - தலைவி (Bridal Mysticism) பாவனையாகும். இறைவனை அனுபவிக்கும் முறைகளில் இதுவும் ஒன்று. வைணவ சமயம் இதனைப் பெரிதும் போற்றி உரைக்கின்றது.

ஆழ்வார்களின் அகப்பொருள் அனுபவம்

பரமாத்மா மட்டுமே புருஷோத்தமன். அவன் முன்னிலையில் மற்ற உயிர்கள் அனைத்தும் பெண் நிலையினரே என்ற கருத்து இங்கு நினைக்கத்தக்கது. ஆழ்வார்களுக்கு அகப்பொருள் துறைகளை அமைத்துப் பாடுவதற்கு இக்கோட்பாடு பெரிதும் பயன்பட்டது. ஆகவே, அகப்பொருள் நெறியில் மெய்யுணர்வுப் பாடல் பாடுவோர் ஆணாயினும் பெண்ணாயினும் அவர் தன்னை இறைவனின் காதலியாகக் கருதி பாடியதோடு தலைவியின் தாயாக - தோழியாக நின்று பாடிய அனுபவமும் குறிப்பிடத்தக்கது.

தாய்மையும், பெண்மையும்

வைணவர்களிடையே நிலவும் ஒரு மரபு இங்கு நினைக்கத் தக்கது. தண்டகாரண்ய முனிவர்கள் இராமனின் பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பியதால் அடுத்த பிறவியில் ஆயர் மங்கையர் களாகப் பிறந்து கண்ணனைக் கூடினர் என்ற கருத்துள்ளது. ஆனால் ஆழ்வார்கள் அவ்வாறின்றி அப்பொழுதே பெண் தன்மை கொண்டு புருஷோத்தமனாகிய கண்ணனை அனுபவிக்கக் காதலித்தனர் என்று கூறுவதுண்டு.

''ஞானத்தில் தன் பேச்சு, பிரமேத்தில்
பெண் பேச்சு'' *(ஆசாரிய ஹிருதயம்: 118)*

ஞான் நிலையில் தாமான தன்மையில் நின்றும், அன்புமிக்க நிலையில் பெண் தன்மையில் நின்றும் பேசுவர் என்று கூறப்படு கிறது. ஆழ்வார்களுள் நம்மாழ்வாருக்குப் 'பராங்குசர்' என்ற ஆண் பெயர் நீங்கி ''பராங்குச நாயகி'' என்றும் திருமங்கையாழ்வாருக்கு

'பரகாலர்' என்ற பெயர் நீங்கி 'பரகால நாயகி' என்ற பெண் பெயரும் ஏற்படுவது இதனடிப்படையில் ஆகும்.

ஆழ்வார்கள் பெண் நிலையில் பாடி இறைவனை அனுபவிக்கும் பொழுது தலைவி நிலையில் மட்டுமின்றி அவர்கள் தோழி, தாய் என்ற தன்மைகளிலும் கூற்றுகள் நிகழ்த்தியுள்ளனர். ஆதலால் தோழி பாசுரம், தலைவி பாசுரம், தாய்ப் பாசுரம் என்று அகப்பொருள் பாடல்கள் பெயர் பெறுகின்றன. குறிப்பாக, இங்குத் தாய்மை அனுபவப் பாசுரங்கள் மட்டும் எடுத்துரைக்கப்படுகின்றன.

தாய்ப் பாசுரங்களின் அகப்பொருள்

அகப்பொருள் மரபில் நாயக - நாயகி பாவனை சிறப்பிடம் பெற்றாலும் அவற்றிற்கு உறுதுணையாக அமையும் தாய்ப் பாவனைப் பாடல்களும் இடம் பெற்றிருக்கக் காணலாம்.

''உபாயத்தில் துணிவு'' ஆகிய நிலை தாய் எனப்பெறும். தலைவியானவள் மிக்க பெருங்காவலாலே தலைவன் இருக்குமிடம் தேடிப் போவதைவிட அவன் இங்கு வரப் பார்த்திருக்க வேண்டுமே யன்றி, படி கடந்து போதல் குலமரியாதைக்கு உரியது அன்று என்று துணிந்து கூறுபவள் தாய். இவ்வாறு இறைவனே உபாயம் என்று உறுதியில் பேசும் நிலை தாய்'' என உருவகிக்கப் பெறுகின்றது. நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், பெரியாழ்வார் ஆகியோர் தாய் பாவனையில் நின்று பாசுரங்கள் அருளியுள்ளனர்.

தலைவியைப் பெற்ற தாய் ''நற்றாய்'' என்றும் வளர்த்த தாயைச் செவிலித்தாய் என்றும் கூறுதல் அகப்பொருள் நூல் மரபாகும். செவிலிப் பேச்சுக்களே சங்கப் பாடல்களில் பலவிடங்களிலும் காணப் பெறுகின்றன. ஆனால், திருவாய்மொழியில் அவ்வேறுபாடு இல்லை. நற்றாய் தன் மகள் நிலை கண்டு பேசிய பகுதிகளே பல உள்ளன.

அ. தலைவி நிலை கண்டு தாய் இரங்கல்

''ஆடியாடி'' (2.4) என்ற திருவாய்மொழியில் தலைவனாகிய பெருமான் மீது கொண்ட காதலினால் பெரும் அவதிப்படுகிறாள் பராங்குச நாயகி. இதனால், தலைவனிடம் தன் மகளின் நிலையை எடுத்துரைத்து அவளுக்கு அருள் செய்யுமாறு தாய் வேண்டுவதாகப் பாசுரங்கள் அமைந்துள்ளன. இங்கு ஆழ்வார் தாய் நிலையில் நின்று பேசுகிறார். இத்தகைய ஒரு நிலை அகநூலில் காணப்பட வில்லை. குறிப்பாக, தலைவியின் தாய் தலைமகனிடத்துப் பேசுவதாகப் பாடல் செய்யும் மரபு இல்லை என்பது நினைக்கத் தக்கது. ஆகவே, தலைவனிடத்தே தாய் நேரிடையாகப் பேசும் முறை புதுமையானதாகும்.

''வாணுதலிம் மடவரல்....உம்மைக்
காணும் ஆசையுள் நைகின்றான்
..........உம்மைக்
காண நீர் இரக்கமிலிரே'' (நம்.தி.வா.மொ. 2.4.1)

தலைவனைக் கண்ட மயக்கத்தில் தன் மகள் பித்துப் பிடித்தவள் போலுள்ளாள் என்று தலைவி நிலை எடுத்துரைக்கப்படுகின்றது.

இறைவனிடம் காதல் மிகுந்து அவனோடு சேர்க்கை கிடைக்கப் பெறாத காரணத்தால் உடல் மெலிந்தது. அகநிலையை நினைத்துத் தாய் இரங்குதல் போன்ற பாடல்கள் ஆழ்வார் அருளியுள்ளார்.

''கையொரு கால் செய்ய கண்ணபிரானுக்கு என்
தையல் இழந்தது தன்னுடையச் சாயே''

(நம்.தி.வா.மொ. 6.6.7)

இதே கருத்துடைய மற்றப் பாடல்களும் இத்திருவாய் மொழியில் (6.6) கிடைக்கின்றன.

பெரியாழ்வாரின் தாய் நிலை இரங்கற் பாசுரங்களும் (3.8) மேற்கூறியதோடு ஒப்புநோக்கத்தக்கன. தன் மகளின் காதல் நிலையை உணர்ந்து தலைவனுடன் (கண்ணனுடன்) சேர்த்து வைத்துத் திருமணத்தை முடித்து விடல் வேண்டுமென நினைப்பது பெரியாழ்வாரின் தாய்மை அனுபவத்தில் குறிப்பிடப்படுகிறது.

''கைத்தலத் துன்ன மாடழியக்
கண்ணா லங்கள் செய்து இவளை
வைத்து வைத்து கொண்டென்ன வாணிபம்
நம்மை வகுப்படுத்தும்
.....அவன் செய்வன
செய்து கொள்ள
மைத்தடமுகில் வண்ணன் பக்கல்
வரைவிடுமின்களே'' (பெரியா. திரு. மொ. 3.7.9)

திருமங்கையாழ்வாரின் பாடல்களும் (பெரியா. திரு. மொழி. 8.3) இதே கருத்துடையன.

இவ்வாறு, தன் மகளின் நிலையை நினைந்து, தலைவனிடமிருந்து அருள் கிடைக்கப் பெறாத பொழுது, மிகவும் கோபமடைந்து தலைவனை இழித்துப் பேசும் தாயின் மனநிலையும் சுட்டிக் காட்டப்படுகிறது. அவ்வாறு பாடுகையில் பழமொழியினை இணைத்துப் பழித்துப் பேசியிருப்பது புதிய உத்தியாகும்.

ஒரு தவறு சுட்டிக் காட்டப்படும் பொழுது, ஒரு பழமொழியைக் கூறிப் பேசுவது என்பது மக்களிடையே இருந்து வரும் இயல்பாகும்.

அவ்வகையில், இங்கு திருமங்கையாழ்வாரின் ''புள்ளுருவாகி'' எனத் தொடங்கும் திருமொழி (10.9) முழுவதும் பழமொழியைக் கொண்டே அருளியுள்ளார். இதனால் இப்பதிகம் 'பழமொழியால் பணிந்துரைத்த பாட்டு'' என்று பெயர் பெறுகிறது.

உடன்போக்கு

கண்ணனிடம் காதல் கொண்டிருந்த தலைவியை ஒரு நாள் இரவு காணவில்லை. இச்சூழலில் 'உடன்போக்குத்' துறையைக் கைக்கொண்டுள்ளனர். இத்துறை சார்ந்த பாடல்களைப் பெரியாழ்வார், திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார் ஆகியோரின் படைப்புக்களில் காண முடிகிறது.

தன் மகளுக்கு இறைவனுடன் கலவி ஏற்பட்டதை அறிந்து, ஊரிலே பழிச்சொல் தோன்றுவதற்கு முன்பு, கண்ணனுடன் சேர்த்து விடல் வேண்டும் என்று உறவினர்களின் கருத்தைச் செவிமடுக்க வில்லை. திடீரென ஒரு நாள் தலைவி காணவில்லை. அவள் கண்ணனுடன் பின் சென்றிருப்பாளோ என்று புலம்பும் இடங்கள் 'நல்லதோர் தாமரை' எனத் தொடங்கும் பெரியாழ்வார் பாடல்களில் (3.8) காண முடிகின்றன.

''மல்லரையட்டவன் பின் போய்
மதுரைப் புறம் புக்காள்'' (பெரியா. திரு. மொ. 3.8.1)

ஆனால், திருமங்கை ஆழ்வார், எம்பெருமான் தன் மகளான பரகால நாயகியை அழைத்து சென்று விட்டதாக நினைத்துப் புலம்பும் இடங் களும் உள (''கள்வன் கொல்'' எனத் தொடங்கும் திருமொழி 3.7).

நம்மாழ்வாரின் பாடல்கள் ''உண்ணாஞ்சோறு'' எனத் தொடங்கும் திருவாய்மொழியில் (6.7) தன் மகள் தலைவனது ஊர் நோக்கிச் சென்றுவிட்டதாக காட்டப்படுகிறது.

தலைவனின் பிரிவுத் துயர்

தலைவனுடன் கலவி ஏற்பட்ட பிறகு பிரிவு ஏற்படுகிறது. இந்நிலையிலும் தலைவி நிலை கண்டு தாய் இரங்கும் நிலை களும் பக்திப் பாடல்களில் உள. இப்பிரிவுத் துயரில் தலைவிக்குத் தான் காணும் பொருள் அனைத்தும் கண்ணனை நினைப்பூட்டுவதாக அமைகிறது. இப்பிரிவு நிலைப் பாடல்களைத் தாய்ப் பாசுரங்களாக அருளியிருப்பது புதிய உத்தியாகும். காதலை வலியுறுத்தவே இப்புதிய உத்தியைப் பயன்படுத்தியிருக்கக் கூடும்.

''கடல் ஞாலம் செய்தேனும் யானே, என்னும்
கடல் ஞாலம் ஆவேனும் யானே, என்னும்
(நம்.தி.வா.மொ. 5.6.1)

இதில் பராங்குச நாயகி, பிரிவுத் துயரினால் தம்மை எம்பெருமானாகவே கருதிப் பேசிக்கொண்டிருக்கும் நிலையைக் கண்டு தாய் இரங்குதலும் உண்டு. கண்ணன் செயல்களைத் தன் மீது ஏற்றிக் கொண்டு ஆவேசம் வந்தது போல் பேசும் தலைவியின் நிலையைக் கண்டு தாய் வருந்துவதாகவே இப்பகுதி முழுவதும் அமைகிறது.

இவ்வாறு ''தலைவனுடைய செயல்களையும் சொற்களையும் அவனாகவே கருதி, தன்னுடைய மெய்ப்பாடுகளாக ஆக்கித் தரிக்கப் பார்ப்பதும் ஆற்றாமையின் விளைவினால் ஆகும். இதனை 'அனுசரித்தல்' என்பர் (போலச் செய்தல்). நினைவின் முதிர்வால் உடலுறுப்புகளில் கூட மாற்றங்கள் விளையும். சான்றாக, ஆண்டாளுக்கு இடைநடையும் இடைப் பேச்சும் முடை நாற்றமும் உண்டாயின என்பர் பெரியாவாச்சான் பிள்ளை. ஆக அனுகாரம் என்பது ஒருவகை இறைத் தொண்டாகும். தலைவியின் அனுகாரத்தால் தலைவனுக்கு மகிழ்ச்சி உண்டாக்குவதே இறையடிமையாகும்''

இதே போன்ற கருத்துடைய பாசுரங்களும் (திருவாய்மொழி 4.2, பெரிய திருமொழி 5.5) கிடைக்கப் பெறுகின்றன.

தாய் தலைவனிடத்துத் தலைவியின் காதல் நிலையை எடுத்துக் கூறுவதும் தலைவனது நிலையைப் பழித்தலுமாகிய கூறுகள் அகத்திணை மரபுகளில் இல்லா ஒரு புதிய நோக்கு ஆகும்.

அக இலக்கியங்களில் செவிலித் தாயின் பங்கே இருக்கும். ஆனால், ஆழ்வார் அனுபவங்களில் நற்றாய் பங்கே முழுவதும் காணப்படுகிறது. இதுவும் ஒரு புதுமையான பார்வை தான்.

இவ்வகையில், தமிழிலக்கிய மரபையும் வைணவக் கோட்பாட்டையும் இணைத்துப் பாடுகையில் ஆழ்வார்கள் பழைய தமிழ் மரபுகளுக்கு அடங்கியும் அம்மரபுகளை மீறி ஒரு புதிய சிந்தனையிலும் பாடியது காண முடிகிறது.

துணைநூல்கள்

1. கு. தாமோதரன், திருவாய்மொழித் திறன்
2. இரா. அரங்கராஜன், நம்பிள்ளை உரைத்திறன்

பிணைநின்ற நபியும் நமைவென்ற மானும்

முத்து. அருணகிரி

பொன்னையா ராமஜெயம் கல்லூரி

தஞ்சாவூர்

இசைத் தட்டுகள் பார்ப்பதற்கு ஒன்றுபோலத் தோன்றினாலும் அவற்றிலிருந்து எழும் இசை வெவ்வேறாக இருப்பதுபோலவே இலக்கியமும். பொதுவாகக் குறிக்கோளை எடுத்தியம்புவதே இலக்கியமாகும் என்பர். தேன் என்று சொன்னால் இனிக்காது சுவைத்துப் பார்த்தால்தான் அதன் இனிமை புலனாகும். அந்த வகையில் சீறாப்புராணம் நுபுவ்வத்துக்காண்டத்தில் உள்ள மானுக்குப் பிணை நின்ற படலத்தை ஆய்ந்தறிந்து இன்புறுவதை நோக்கமாகக் கொண்டதே இக்கட்டுரை.

மனிதன் என்ற சொல்லுக்கு 'நினைப்பவன்' என்று பொருள். மனிதன் மற்ற உயிரினங்கள் அனைத்திலும் மேம்பட்டவன். படைப்பால் உயர்ந்த மனிதன் மனத்தின் செயலால் மிருகம் போன்று நடந்து வாழ்கிறான். இதுமுறையான வாழ்வு என எந்த இலக்கியமும் அங்கீகரிக்கவில்லை. சரி எது முறையான வாழ்வு? பிறர் துன்பம் கண்டு இரங்கி, அத்துன்பத்தை நீக்கி அவரை இன்புறச்செய்து மீண்டும் அத்தகு நிலை அல்லது அத்தகு துன்பத்திற்கு அவர் ஆளாகாதவாறு காப்பதே முறையான வாழ்வின் அடையாள மாகும். மனிதர்கள் மனிதர்களுக்கு மட்டுமே உதவுவதுதான் சிறந்த வாழ்வா? எனில் இல்லை. ''வாடிய பயிரைக் கண்ட போதெலாம் வாடினேன்'' என்ற வள்ளல் பெருமானின் வாசகம் போல் ஓர் அறிவு முதல் ஆறறிவு படைத்த மனிதன் வரை அனைத்து உயிர்க்கும் பயனாகும் வகையில் வாழ்வதே சிறந்த வாழ்வாகும். அத்தகு அரிய வாழ்வை எளிமையாக அமைத்து வாழ்ந்துகாட்டிய பெருமானார் அண்ணல் நபி அவர்கள்.

நம்மைப்படைத்த இறைவன் மீதும்; அவன் படைத்த உயிர்களின் மீதும் நாம் கொள்ளும் உண்மை அன்பே நல்ல நெறி அதுவே இறைவனை அடையும் வழி. இதன்னை,

''ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்''

(வள்ளலார்)

''......வையகத்தில்
அன்பிற் சிறந்த தவம் இல்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு'' (பாரதியார்)

''அன்புள்ளவனின் இதயம் தான் இவ்வுலகத்திலேயே சொர்க்கம். அவனிடம்தான் இறைவன் உறைந்துள்ளான். ஏன் எனில் கடவுளே அன்புதான்'' (லாமென்வெஸ்)

''அன்பே கடவுளின் வடிவம்'' (லூதர்)

என்ற கூற்றுக்களால் அறியலாம். இத்தகு கூற்றுக்களுக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர் நபிபெருமானார். ஒரு நாள் பெருமானார் மணம் வீசும் மலர்கள் நிரம்பிய சோலைகளால் சூழப்பட்ட மலைப் பகுதியைச் சென்றடைந்தார். அங்கு காட்டு விலங்குகளைக் கொன்று, அதனைத் தின்று, தன்னை வளர்த்துக்கொண்டு வாழும் அறபிகளைக் கண்டார். அந்த அரபிகளுள் ஒரு வேடன் ஒரு மானைத் தன் வலையிற் பிடித்துக்கட்டி வைத்திருப்பதைக் கண்டார்; மழை போன்ற கருணை உள்ளம் கொண்ட நபிபெருமான், மானைக் காணும் முன் மலை, சோலை, மரம், அருவி இவைகளைக் கண்டு மகிழ்ந்து வந்தார் வலையினிற் அகப்பட்ட மானைக் கண்டபின் அதனை எல்லாம் மறந்து துன்புற்றுக் கிடக்கும் மானை நோக்கிய படியே சென்றார் என்று உமறுப்புலவர் காட்டுகிறார்.

குழை குழைத் தெறியுஞ் செந்தேன் கொழுமலர்க் காவை நோக்கார்
பொழிமலை யருவி நோக்கார் புறத்து நன்னிழலை நோக்கார்
செழுமுகிற் கவிகை வள்ளல் செறிதரு மீந்தின் செங்காய்
மழையெனச் சொரிவ நோக்கார் மானையே நோக்கிச்சென்றார்.
(சீறா. மா. பி. நி. ப. 2058)

மனிதனை மனிதன் வெறுத்து ஒதுக்கும் காலத்தில் ஐந்தறிவு படைத்த ஒரு மானிற்காக அவர் தன் மன மகிழ்வைத்துறந்து, மானை நோக்கிச் சென்று, அதன் துன்பம் கண்டு துவண்ட விதம் நபிபெருமானின் உயர்ந்த உள்ளத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தன் கன்றையும், தன் இனத்தையும் இனிக் காணவே முடியாது என்று நம்பிக்கை இழந்து துன்புற்றுக்கிடந்த மான் நிறைவளஞ் சுரந்த கானகத்திடை வந்து தன் அருகே நின்ற பெருமானை நோக்கி தன் குறுகிய வாலை ஆட்டி நீண்ட கொழுங்கழுத்தை உயர்த்தி நிச்சயம் இப்பெருமானால் நமக்கு விடுதலை கிடைக்கும் என நினைத்து அவருக்குச் சலாம் கூறி,

''வல்லவ னுண்மைத் தூதே மன்னுமா நிலத்தின் மாந்த
ரல்லலை யகற்றி வேதத் தற நெறி பயிற்றிச் சொர்க்கத்

தில்லிடைப் புகுத்தப் பூவினிடத்தினிலுதித்த கோவே
யொல்லையி னெனது சொற்கேட்டு வந்தரு ளளிக்க வேண்டும்
(சீறா. மா. பி. நி. ப. 2068)

என்று கேட்டது. இதிலே ஒரு நுட்பத்தை உமறுப்புலவர் கை யாண்டுள்ளார். அதாவது மான் தன்னை மட்டும் காத்துக்கொள்ள வேண்டி இருந்தால் அதன் சுயநலம் மட்டுமே வெளிப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறின்றி,

''மத்தகக் கரியுமாய்க்கும் வரிப்புலி முழுக்க நீண்ட
குத்திரத் தசனித் தாக்கின் குவலய மதிரக் கேட்டுத்
தத்தி யெத்தியையுந்திக்குள் தனித்தனி சிதறினேமால்''
(சீறா.மா.பி.நி.ப - 2073)

என்று தாங்கள் பிரிந்த காரணம் கூறியது. பின் பிரிந்து வந்த வழியில் இவ்வேடனிடம் அகப்பட்டுக் கொண்டேன் பெருமானே எனக்கூறி இவ்வேடனிடம்,

.......அவனியிற் சீவன்யாவும்
நிச்சயம் மிறத்தல்லாலிருப்பவை நிலத்தினுண்டோ''
(சீறா.மா.பி.நி.ப - 2081)

என்பதை நான் உணர்ந்துள்ளேன். அதுமட்டுமன்றி,

''இலைநுனிப் பனியி னாக்கை யிறத்தலே நலத்தன் மன்னோ''
(சீறா.மா.பி.நி.ப. 2082)

என்பதையும் நான் நன்கறிந்துள்ளேன். ஆயினும் புலியின் முழக்கம் கேட்டு திசைக்கொருவராய் நாங்கள் பிரிந்து போனோம். அவ்வாறு பிரிந்த என் ஆண் துணை என்னைத்தேடிக் காணாமல் காட்டிலே என்சுற்றத்துடன் சென்று சேர்ந்ததோ அல்லது புலி வாய்ப்பட்டு இறந்துபோனதோ அறியேன். அன்றியும் புல்லின் நுனியைத்தின்று தண்ணீர்கூட அருந்தத் தெரியாத என் கன்று வாடி, துன்புற்று பூமியின் மேல் கிடந்து என்ன பாடுபடுகிறதோ தெரியவில்லை. என் பால் மடியோ பாலைச் சொரிந்து கொண்டுள்ளது. என் கன்று என் ஆண் துணையுடன் சென்றதா? அன்றி என் சுற்றத்தாரை அடைந்ததா? இல்லை விம்மி விம்மி அழுததா? அல்லது புலி வாய்பட்டுக் கிழிந்ததா? என்னாயிற்று என்றும் அறிகிலேன். எனவே பெருமானே நான் நிச்சயம் இவ்வேடனின் கொடிய பசியைத் தணிக்க இவனுக்கே உணவாவேன். இது சத்தியம். எனவே தாங்கள் எனக்காக இவ்வேடனிடம் பிணையாக இருந்து என்னை விடுவியுங்கள். என்னை விடுவித்தீர்களேயானால் நான் விரைவில் எனது ஆசைப் பெருக்கமுற்ற ஆண் மானைச் சேர்ந்து அதன் துயர் களைந்து, என் கூட்டத்தார்க்கு என் நிலையை எடுத்துக்கூறி என்

கன்றினுக்குப் பாலை ஈந்து அதன் பசியகற்றி என் கூட்டத்தாரோடு சேர்த்துவிட்டு விரைவில் இவ்விடம் வந்து சேர்வேன் என்றது. இதனைக் கேட்டப் பெருமானார் வேடனிடம் மானின் கோரிக்கையை ஏற்று நான் பிணையாக உள்ளேன் இம்மானை விடுவிப்பாயாக என்றார் அதுகேட்க வேடனோ,

''கானிடைப் பிடித்த மானைக் கட்டவிழ்த் தவணிற் போக்கின்
மானிடர் பாலின் மீட்டும் வருவது முன்ன ருண்டோ
ஞானமு மறையுந் தேர்ந்தோர் செய்யுளு நாட்டிற்றுண்டோ
வூனமிப் பிணைச் சொலையா வோதுவதொழிக வென்றான்.

(சீறா.மா.பி.நி.ப. 2095)

ஆனால் நபிபெருமான்; மான் கூறியபடி திரும்பி வராவிடில் உனக்கு ஒரு மானிற்குப் பதிலாக இருமானைத் தருகிறேன் என்றார். பெருமானார் திருவாய்மொழி கேட்ட வேடன் மனம் மாறி மானை விடுவித்தான். மான் தான் கூறியபடி விரைந்து சென்று, தன் ஆண் துணை கண்டு, மகிழ்வுறச் செய்து, தன் இனத்தாரிடம் தன் நிலை கூறி, தன் கன்றின் பசி தீர்த்து நாவினால் அன்புடன் தடவி.மகிழ்ந்து தன் கூட்டத்தாரிடம் சேர்த்துவிட்டுத் தான் மட்டும் திரும்ப நினைத்தது. அப்போது அதன் குட்டி உனை நீங்கி நான் உயிர் வாழேன் எனக்கூறித் தன் தாயுடன் செல்ல முன்னே சென்றது. பெண் மான் தன் குட்டியுடன் வேடன் பால் வந்தது. ஒன்றுக்கு இரண்டாய் வரும் மானைக் கண்ட நபி வேடனை அழைத்து மானின் வாக்குத் தவறாத மாண்பை எடுத்துக் கூறினார். அது கேட்ட வேடன் மனம் மாறி இனிப் புலால் உண்ணமாட்டேன் என்று கூறி மாந்தனானான். இது கதை ஆனால் உணர்த்தும் நீதியோ பல.

இனி உமறுப்புலவரின் நுட்பத்தைக் காண்போம். வேடன் வலையிற் அகப்பட்டு துன்புற்றுக்கிடக்கும் மானைக் கண்டு மரங்கள் துன்புற்றதாம், அவை மானின் துன்பம் போக்குதற் பொருட்டு மான்போல் மலர்களைச் சொரிந்து தன் வருத்தத்தைத் தெரிவித்ததாம். இதனை,

''புதுமலரார்த்திச் செந்தேன் பொழிவமான் வருத்த நோக்கி''

என்பதால் அறிய முடிகிறது. அதுமட்டுமா பறவை இனங்கள் மான்நிலை கண்டு வருந்தி மானையும் வேடுவனையும் காண அஞ்சித் தன்பெடையோடு கூட்டில் ஒடுங்கியதாம். மேலும் மலரின் தேனை உறிஞ்சும் வண்டு விரைவில் மானை நபிகள் நாயகம் விடுவிக்க வேண்டும் என்று இறைஞ்சியதாம். ஆக மரம், பறவை, வண்டு இவை மானின் துன்பம் கண்டு இரங்குகின்றதைக் காட்டியதன் மூலம் நம்மைவிடக் குறைந்த, பகுத்தறியும் சிந்தை

யற்ற விலங்குகளுக்கே பிறர் துன்பம் கண்டு இரங்கும் மனப்பான்மை இருக்கும்போது ஆறறிவுபடைத்த நமக்கு அத்தகு மனப்பான்மை அவசியம் வேண்டும் என்பதை நயம்பட எடுத்துக் கூறிய விதம் சிந்திக்கத்தக்கது.

மாந்தர் கை அகப்பட்டு, பின் விடுபட்டுத் தன் இனம் சேர்ந்த விலங்கு மீண்டும் அம்மாந்தர் வசம் சென்று சேர்வது நம் குலத்திற்கு உரிய நெறி அன்று. எனவே நீ உன் துணை, உன் குட்டி இவைவிடுத்து மீண்டும் போகாதே என்று தன் இன மான்கள் கூறியபோதும் தனக்கு பிணையாக நின்றவர் ஒப்பற்ற கருணை வள்ளல் நபி பெருமானார். அவருக்குத் துரோகம் செய்து போகாமல் இருப்பின் புலிவாய்ப்பட்டு நரகம் செல்வது உறுதி. மேலும் நம்பிக்கைத் துரோகம் செய்தல் பெரும் பாவம். அது நரகத்திற்கே செல்லும் வழியாகும். எனவே நான் சொல்வதே சரி எனக்கூறித் தன் வாக்கைக் காப்பாற்றிட மீண்டும் அவ்வேடன் பசிதீர்க்கச் சென்ற மானின் நடத்தை மனித வாழ்க்கைக்கு ஓர் படிப்பினை ஊட்டுவதாகும்.

''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு''

''என்னன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு''

என்ற குறளுக்கு ஏற்ப மனிதர்கள் வாழவேண்டும் என்பதை மான் தன் வாழ்வியல் நெறி மூலம் எடுத்துக்காட்டி மனிதப் பண்பை வென்றுகாட்டியது சிந்திக்கத்தக்கது. பிணை நின்ற நபியின் குணத்தைவிட சொன்ன சொற்படி நடந்த மானின் நடத்தை மனித குலத்திற்குப் பாடமாகி, நமைவென்று நிற்பதை உணர முடிகிறது.

அண்ணலாரும் ஆயிஷா நாச்சியாரும்

க. இம்தாதுல்லாஹ்

ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 20

நபிகள் நாயகத்தின் வாழ்வு நானிலத்தார்க்கு ஓர் அழகிய முன் மாதிரியாகத் திகழ்கிறது. இஸ்லாத்தில் துறவறம் என்பது கிடையாது. இல்லறத்தின் மூலமாகவே ஆன்மீகத்தின் உயர் நிலையை அடைய முடியும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது. இஸ்லாத்தை முழுமைப் படுத்த வந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இல்லற வாழ்வும் கூட உலக மாந்தர்கள் அனைவரும் பின்பற்றத் தக்கதாய் அமைந்திருக்கின்றது.

அன்னை கதீஜா (ரலி) தொடங்கி பதினொருவரை அண்ணலார் மணம் புரிந்து வாழ்ந்துள்ளார்கள். அவர்களுள் இரண்டாவதாக மணந்து கொண்ட அன்னை ஆயிஷா (ரலி) அவர்களுடனான இல்லறமேன்மை 'ஆயிஷா நாச்சியார் பிள்ளைத்தமிழில்' கவி. கா.மு. ஷெரீப் அவர்களால் சிறப்பாகப் பேசப்படுகிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முதல் மனைவியான அன்னை கதீஜா (ரலி) அவர்கள் தம் 65-வது வயதில் இவ்வுலகை நீத்தார்கள். அப்போது நபிகளாருக்கு வயது 50. கதீஜாவின் பிரிவு அண்ணலாரைப் பெருந்துயரில் ஆழ்த்தியிருந்தது. இதனால் இறை அழைப்புப் பணியில் முழுமையாய் ஈடுபட முடியவில்லை. நபிகளாரின் இம்மனத்துயர் மாற்றப்பட வேண்டும் எனக் கருதினர் அணுக்கத்தோழர் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள். ஒன்பது வயதே நிரம்பிய தம் அருமை மகள் அறிவிற் சிறந்த ஆயிஷா (ரலி) அவர்களை அண்ணலாருக்கு மணம் செய்து வைக்க எண்ணினார்கள். தோழரின் வேண்டுகோளைத் தட்ட இயலாத நபிகள் இறைவனின் நாட்டம் என்னவாய் இருக்குமோ என எண்ணியிருந்தார்கள். அவ்வேளை வானவர் தலைவர் ஜிப்ரயீல் நபிகளாரின் கனவில் தோன்றி ஆயிஷா நாயகியின் அழகுத் திருவுருவத்தைக் காட்டிச் சென்றனர். அதன் பின்னரே நபிகள் ஆயிஷாவைத் திருமணம் முடித்தல் என்பது இறைவனின் விருப்பம் என உணர்ந்து மணம் முடிக்கச் சம்மதித்தார்கள். இச்செய்தியைக் கவி. கா.மு. ஷெரீப்,

''திருமண மாகு முன்னே இரசூல்
சிறுதுயிற் கனவில் வந்தவரே''

''கனவில் ஜிப்ரயீல் அகமதர் இடம் தோன்றி
களிப்புறும் படமாய்க் காட்ட''

என்னும் வரிகளில் குறிப்பிடுகிறார்.

நபிகளார் மணந்த மனைவியருள் ஆயிஷா நாயகியே வயதில் சிறியவராகவும் கைம்மை இல்லாதவராகவும் இருந்தார்கள் என்பதை,

தக்கோன் தூதர் தனைமணந்த
சங்கைக் குரிய மங்கையரில்
மிக்க இளமைப் பருவத்துடன்
மேவும் கன்னி நிலையிலுள்ள
.... (காப்பு, பா. எண். 6)

ஆயிஷா எனக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

மக்கா நகரைவிட்டு மதினாவிற்கு இடம் பெயர்ந்த பிறகுதான் ஆயிஷா பருவமெய்தினார்கள். பருவமெய்திய பிறகும் ஆயிஷாவைத் தம் இல்லத்திற்கு அழையாமலிருந்தார்கள் நபிகள். இது கண்ட அபூபக்கர் அண்ணலாரை அணுகி ஆயிஷாவைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துக் கொள்ளுங்கள் என வேண்டினார்கள். அதுபோது நபிகள், 'ஆயிஷாவிற்குத் தருவதாக வாக்களித்த மஹர் தொகையைத் தரும் சூழலில் நானில்லை அதனைத் தந்துவிட்டு அழைத்துக் கொள்கிறேன்' எனப் பதிலிறுத்தார்கள். இதனைக் கவிஞர்,

....
நட்புக் குரிய சித்தீக்கே நயக்கும் மகரையீயாத
நிலையில் மனைவிதனைத் தொடுதல்.
நீதமல்ல என எடுத்து நெடியோன்தூதர் உரைத்த
(வருகை, பா. எண், 3)

ஆயிஷா நாயகி அவர்கள் சிற்றில் கட்டி விளையாடும் சிறுபருவ மங்கையராக இருந்ததனால் அவர்களுடன் நபிகள் நாயகம் அவர்களும் சேர்ந்து விளைபாடுபவராக இருந்தார்கள். ஒருநாள் நபிகள் நாயகம் ஆயிஷா நாயகியுடன் ஓட்டப்பந்தயம் சென்றார்கள். அப்போது ஆயிஷா நாச்சியார் சிறுமி என்பதனால் நபிகள் மெல்ல ஓடி ஆயிஷா நாச்சியாரை வென்றிடச் செய்தார்கள். பிறிதொரு சமயம் பெருநாளன்று தெருவில் நடைபெற்ற வீர விளையாட்டுக்களைக் காண விரும்பிய ஆயிஷா நாயகியைத் தன் தோளில் சாய்ந்தபடி அதனைக் கண்டுகளிக்கச் செய்தார்கள்.

உலகெலாம் வாழ்த்தும் திருநபியாருடன்
ஓடி ஒருமுறை வென்றவரே
நலந்திகழ் முகம்மதர் தோளிடைச் சாய்ந்து
நன்விளை யாடல் கண்டவரே (செங்கீரை, பா. எண். 8)

என்று ஆயிஷாவை விளித்துக் கூறும் கவிஞரின் வரிகள் மேற்காணும் நிகழ்வுகளை நினைவுறுத்துகின்றன.

நபிகள் நாயகத்துடன் அன்னை ஆயிஷாவையும் சேர்த்து ஒரே நேரத்தில் ஒன்பது மனைவியர் வாழ்ந்தனர். அப்போது ஒவ்வொரு மனைவியர் குடிலிலும் ஓரிரவு என முறைவைத்துத் தங்குவது அண்ணலாரின் பண்புசால் பழக்கம். ஆனால் ஆயிஷா குடிலில் மட்டும் இரண்டு இரவு தங்குவார்கள். தம் குடிலில் இரண்டிரவு தங்குமாறு இளம் வயதினரான ஆயிஷா பெருமானாரிடத்தில் கேட்டுக் கொள்ளவில்லை. பெருமானாரும் தாமாக இப்படி முடிவு செய்யவில்லை. ஆயிஷா அவர்களின் உயர்ந்த பண்பிற்கு, இளமைத் துடிப்பிற்குப் பெருமானார் அவர்களின் மனைவியருள் ஒருவரான சௌதாப் பிராட்டியார் நபிகளாரிடம் தாங்கள் எனது இல்லத்தில் தங்குகின்ற முறைநாளன்றும் ஆயிஷா வீட்டிலேயே தங்குமாறு வேண்டிக் கொள்கிறேன் எனக் கூறியிருந்தார்கள்.

நபிபெருமானார் அவர்கள் தமது மனையில் உள்ள அலுவல் களைச் செய்வதில் தமது மனைவியர்க்கு உதவியாய் இருந்துள்ளார்கள். ரொட்டிக்கு மாவு பிசைதல், ஆடைகளைத் துவைத்தல், வீட்டினை ஒழுங்கு செய்தல் முதலிய பணிகளில் தம் மனைவியர்க்கு உதவியாய் இருந்துள்ளார்கள். மேலும் தமக்குரிய தேவைகளை மனைவியர் செய்ய வேண்டும் என எதிர்பாராமல் தாமே நிறைவு செய்து கொள்வார்கள். ஒருநாள் அதிகாலை தமது அறுந்துபட்ட காலணியைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களின் முகத்தில் வியர்வை அரும்பியது அவ்வியர்வைத் துளிகள் சூரிய ஒளிபட்டு மின்னிப் பிரகாசித்தன. அதனைக் கண்ணுற்ற ஆயிஷா பிராட்டியார் அவர்கள் 'கபீருல் ஹஸ்லி' என்கின்ற கவிஞரின் பாடலினைப் பாடிக்காட்டி இவருடைய பாடல் கருத்திற்குச் சான்றுபகர்வதாய் அமைந்துள்ளன இவ்வியர்வைமுத்துக்கள் எனக் கூறினார்கள். இவ்வரிய நிகழ்வினைக் கவி கா.மு. ஷெரீப்,

> கபீருல் ஹஸ்லி கவிதைகளைக் கபீபு நபி
> யுவக்கக் கீதம்
> கனிகின்ற குரலாலே பாடும் திறன் பெற்ற
>
> (சப்பாணி பருவம், பாடல் எண். 7)

ஆயிஷாவே எனும் வரிகளில் நினைவுறுத்துகிறார்.

பிரயாணங்களிலும் போர்முனைக்குச் செல்லும்போதும் பெருமானார் தம் மனைவியருள் ஒருவரை உடனழைத்துச் செல்வது வழக்கம். யாரை அழைத்துச் செல்வது என்பதைத் திருவுளச் சீட்டு போட்டு யார் பெயர் வருகிறதோ அவரை அழைத்துச் செல்வார்கள்.

அவர்கள், போர்முனைகளில் காயமுற்றோர்க்கு உதவுதல், தண்ணீர் கொணர்ந்து தருதல் முதலிய பணிகளைச் செய்வார்கள். இவ்வகையில் உஹதுப் போர்க்களத்திலும் முஸ்தலக் போரிலும் ஆயிஷா பிராட்டியார் அண்ணலாருடன் சென்று தொண்டாற்றி யுள்ளார்கள்.

முஸ்தலக் போரிலிருந்து திரும்பும் வழியில் அன்னை ஆயிஷா அவர்களின் கழுத்தணி அறுந்து தொலைந்துவிட்டது. அதனைத் தேடும் பொருட்டு அவ்விடத்திலேயே முகாமிட்டனர். தொழுகைக்கான நேரமும் வந்தது. ஒலூச் செய்ய அவர்களிடத்தில் தண்ணீர் இல்லை. என்ன செய்வதெனத் தெரியாது அனைவரும் திகைத்திருந்தனர். அப்போது 'நீங்கள் தண்ணீரைப் பெற்றுக் கொள்ள வில்லையானால் தூய்மையான மண்ணைத் தேடி அதனால் முகங்களையும் கைகளையும் தடவித் தயம்மம் செய்து கொள்ளுங்கள்'' (திருக்குர் ஆன், *4:43*) என்ற இறைவசனம் இறக்கியருளப் பெற்றது. இதற்குத் தயம்மம் என்று பெயர். இந்நிகழ்வை,

''பெரியோன் தூதர் நபிநாதர்
    பிரயாணத்தில் அவர் தோழர்
பெருகிச் செல்லும் போதினிலே
    பிரியா நிலையில் உடன் சென்ற
அருமை மிகுந்த ஆயிஷாவே
    ....
உருவ மற்றோன் தயம்மம் செய்யும்
    உரிமை யளித்தான் வகியிறக்கி
உம்மால் தயம நெறிபெற்றோம்'' (வருகை, பாடல் எண். *2*)

இப்போர் முனையிலிருந்து திரும்பும் வழியில் அந்தி நேரத் தொழுகைக்காக ஓரிடத்தில் முகாமிட்டு மீண்டும் படை புறப்பட்டது. அப்போது ஆயிஷா நாச்சியார் தம் சுய தேவையை நிறைவு செய்து விட்டு வருவதற்குள் படை புறப்பட்டுவிட்டது. ஆயிஷா நாயகி மட்டும் பின்தங்கி விட்டனர். அவர்கள் வந்து பார்த்த போது பேரதிர்ச்சியுடன் திகைத்து நின்றார்கள். சிறிது நேரத்திற்குப்பின் படையினர் தவறவிட்ட பொருட்களைக் கண்டெடுத்து வருவதற்கென நியமிக்கப்பட்ட சப்வான் பின் முஅத்தல் என்ற இளைஞர் அங்கு வந்தார். அவர் அன்னை ஆயிஷாவைத் தம் ஒட்டகத்தின் மீது ஏற்றிக் கொண்டு மதீனா வந்து சேர்ந்தார்.

இச்செய்தியறிந்த நயவஞ்சகரான அப்துல்லாஹ் இப்னு உபை முதலான சிலர் ஆயிஷா நாயகி மீது அவதூறுச் செய்தி பரப்பினர். இதனால் ஆயிஷா பெரிதும் கலங்கினார். அண்ணலாரும் அமைதிகாத்தார். ஆயிஷா பிராட்டியார் தம் தந்தையில்லம் சேர்ந்தனர். ஒருமாத இடைவெளிக்குப்பின்,

''இந்த அவதூறைப் புனைந்து கொண்டு வந்தவர்கள் உங்களில் உள்ள ஒரு கும்பல் தான். இது ஒரு அப்பட்டமான அவதூறு''

(திருக்குர் ஆன், 24:11)

என்னும் இறைவசனம் இறைவனால் இறக்கி அருளப்பெற்றது. இச்செய்தியறிந்த ஆயிஷா நாயகி பெருமகிழ்வடைந்து இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள். இவ்வரலாற்றை,

''வீண்பழியைச் சுமக்கின்ற விதிபடைத்த
பெண்ணே இறைவன்
விளக்க முறும்வகி யாலே
கலக்கந் தவிர்த்திட்ட
மாண்புமிகு நன்மணியே ..... (சப்பாணி, பாடல் எண். 6)

எனப் பாடுகிறார் கா. மு. ஷெரீப். மஸ்ஜிதே நபவி என்ற பள்ளி வாசலின் முகப்பிலேயே ஆயிஷாப் பிராட்டியாரின் இல்லம் இருந்தது. அதனால் பகல்பொழுதிலும் கூட நபிகள் ஆயிஷாப் பிராட்டியாரின் இல்லத்திலேயே தங்கும் சூழல் இருந்தது. நபிகள் நாயகம் அவர்கள் தம் தோழர்களுடன் சன்மார்க்கம் குறித்து விளக்கும் அனைத்து உரையாடல்களையும் நேரில் கண்டும் கேட்டும் அறியும் பேற்றைப் பெற்றவர்களாக இருந்தார்கள் ஆயிஷா. மேலும் தமக்கு ஐயம் எழுகின்றவற்றிற்கெல்லாம் பெருமானார் அவர்களிடமே நேரிடையாகக் கேட்டு ஐயந்தீர்த்துக் கொள்வார்கள். அண்ணலாரும் ஆயிஷா பிராட்டியின் ஐயந்தீரும் வரை சலிப்பின்றி விளக்கிக் கொண்டேயிருப்பார்கள்.

இவ்வாறு நபிகள் நாயகம் அவர்களிடமிருந்து அறிந்திருந்த மார்க்க அறிவு பற்றி நபிகளாரே, 'நீங்கள் ஆயிஷாவிடமிருந்து மார்க்கத்தின் மூன்றில் ஒருபாகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள், என்று கூறியுள்ளார்கள். அன்னை ஆயிஷா அவர்கள் வாயிலாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஹதீஸ்கள் (நபி மொழிகள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

அன்னை ஆயிஷா அவர்கள் நபிகளார் வாழ்ந்த காலத்திலும் மறைவிற்குப் பின்னும் இஸ்லாமிய மார்க்க நெறி தழைத்தோங்கப் பெரும் பங்காற்றியிருக்கிறார்கள். மார்க்கச் சட்டங்களில் மூன்றில் ஒருபங்கினை அறிந்திருந்த அவர்கள் தம் வாழ்நாளின் இறுதிவரை மார்க்கத்தை நிலைநிறுத்தும் மாண்புடையவர்களாகத் திகழ்ந்தார்கள். நான்கு கலீபாக்களின் ஆட்சிக் காலத்திலும் ஏற்பட்ட பல்வேறு குழப்பச் சூழல்களிலும் ஆயிஷா பிராட்டியின் ஆலோசனைகள் அக்குழப்பங்கள் தீரப் பெரிதும் உதவியிருக்கின்றன. இவ்வாறு ஆயிஷா நாச்சியாருடனான அண்ணலாரின் வாழ்வு பல்லாற்றும் சிறப்புற்றுத் திகழ்ந்துள்ளது.

நபியே எங்கள் நாயகமே! - அமைப்பு நோக்கு

உ. அலிபாவா

ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 20

பரந்து விரிந்த இஸ்லாமிய இலக்கியப் பரப்பில் சதக் இலக்கியமும் ஒரு வகையாகும். இவ்வகை இலக்கியத்திற்கெனத் தனிவகை அமைப்பு முறைகள் உள்ளன. நூறு பாடல்களைக் கொண்ட அமைப்பிற்குச் சதகம் என்று பெயர். ஆனால் நூறு பாடல்களில் பாடப்பெற்ற எந்த ஓர் இலக்கியமும் சதகமாகாது. இவ்வகையில் கா.மு. ஷெரீப் பாடிய 'நபியே எங்கள் நாயகமே!' என்ற நூல், முழுமையும் சேர்த்து நூற்றுக்கும் மேற்பட்ட பாடல் களைக் கொண்டுள்ளது. இதில் 'நந்நபி வாழ்த்துப் பாமாலை' என்கிற பகுதி மட்டும் நூறு பாடல்களைப் பெற்றமைந்துள்ளது. கவிஞர் தனது பிற நூல்களின் (பல்கீஸ் நாச்சியார் காவியம், தமிழரின் சமய நெறி) பின்னட்டைகளில் இந்நூலைப் பற்றிக் குறிப்பிடும் போது பிறை அடைப்புக் குறிக்குள் 'சதக முறைக் காவியம்' என்றும் சீறாப்புராணம் நுபுவ்வத்துக் காண்டம் மூலமும் உரையும் பாகம் ஒன்றில் உரை ஆசிரியர் உரையில், ''1972-ஆம் ஆண்டில் இஸ்லாமிய இலக்கியப் பணியில் ஈடுபடுமாறு என்னை எனது இலக்கிய வழிச்சோதரர் திரு. கலைமாமணி ரா. வேங்கடாசலம்பிள்ளை வலியுறுத்தி ஈடுபட வைத்தார். அதன் பயனாக 'நபியே எங்கள் நாயகமே' என்னும் சதக முறைக் காப்பியம் தோன்றலாயிற்று'' (பக். 52 - 53) என்றும் குறிப்பிடுகின்றார். இவ்வகையில் இவர் எழுதிய முதல் இஸ்லாமிய இலக்கியமும் இதுவே. இந்நூலைச் சே.மு.மு. முகமதலி தன்னுடைய திருநபிச் சதகப் பதிப்புரையில் சதக இலக்கிய வரிசையில் சேர்க்கிறார். ஆனால் 'நபியே எங்கள் நாயகமே!' எனும் இந்நூல் சதக இலக்கியமா என்பது ஐயத்திற் கிடமாக உள்ளது.

கா.மு. ஷெரீப்

தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், அபிவிருத்தீஸ்வரம் என்னும் ஊரில், விவசாயக் குடும்பத்தில் 1914-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினோராம் நாள் கா.மு.ஷெரீப் பிறந்தார். இவரது பெற்றோர்

காதர்ஷா, இபுராகிம் பாத்தும்மாள் ஆவர். பெற்றோரிருவரும் கல்வி கற்ற நிலையிலும் வறுமை காரணமாக இவர் பயிலும் வாய்ப்புப் பெற்றிலர். இவர் தானாக முயன்று தந்தையாரிடமும், மற்றோரிடமும் கல்வி கற்றுக் கவி புனையும் திறனும் பெற்றார்.

கா.மு. ஷெரீப் உயரிய பண்பின் உறைவிடம்; மனிதநேயம் மிக்கவர். இவரைப் பற்றி ஜெயகாந்தன், ''கவி.கா.மு. ஷெரீப் அவர்களின் படைப்பை விடவும், அவரது பாடல்களை விடவும், அவரையும் அவரது குணாதிசயங்களையும் நான் அதிகம் மதிக்கிறேன்'' என்று குறிப்பிடுகிறார். இவர் பெரியாரின் சுயமரியாதை இயக்கம், இந்திய தேசியக் காங்கிரஸ் போன்ற இயக்கங்களில் இருந்தவர். 1938-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். 1942-ஆம் ஆண்டு நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு பெற்றவர். 1948-ஆம் ஆண்டு 'ஒளி' என்ற இதழ் நடத்தியும், 1969-ஆம் ஆண்டு 'சாட்டை', 'தமிழ் முழக்கம்' என்னும் இரு இதழ்கள் நடத்தியும் பத்திரிக்கைத் துறையில் அனுபவ மிக்கவராய்த் திகழ்ந்தார். 'பொன்முடி' என்ற திரைப்படத்திற்கு முதன் முதலில் பாடல் எழுதத் துவங்கித் தொடர்ந்து நானூறுக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியுள்ளார்.

இவரது படைப்புக்கள் சீறாப்புராண உரை, கவிதைகள், நாவல், சிறுகதை, நாடகம், சொற்பொழிவு, கடிதம், கட்டுரை, வரலாறு, ஆய்வு எனப் பல தளங்களில் உள்ளன. முப்பதுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய இலக்கியங்களைப் படைத்துள்ள இவர் 1960-70-ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதினைப் பெற்றுள்ளார். 1994-ஆம் ஆண்டு ஜூலை ஏழாம் நாள் தமது எண்பதாவது வயதில் இவர் இயற்கையெய்தினார்.

சதகம்

தொண்ணூற்றாறுக்கும் மேற்பட்டு வளர்ந்து பல்கியுள்ள சிற்றிலக்கியங்களில் சதகமும் ஒன்று. ''அகப் பொருளையோ அல்லது புறப் பொருளையோ அடிப்படையாக வைத்து, யாதானும் ஒரு பொருள் மீது நூறு பாடல்களால் பாடப்பெறும் இலக்கிய அமைப்பே சதகம் என்பது'' என்று ந.வீ. செயராமன் (சிற்றிலக்கியச் செல்வம், ப. 108) கூறுகிறார்.

''பொதுவாக மக்களின் நல்வாழ்விற்குத் தேவையான அறநூற் கருத்துக்களையும், நீதிகளையும், ஒழுக்கக் கூறுகளையும் வழங்கி அவர்களை வாழ்வாங்கு வாழச் செய்யும் இயல்பினது சதக இலக்கியம் எனலாம். அதாவது, மக்களின் உணர்வில் பதியுமாறு அறம், பொருள், இன்பம், வீடு பற்றிய செய்திகள் அகம், புறம்

பற்றிய செய்திகள் சதகம் வாயிலாகக் கூறப்பட்டுள்ளன எனலாம்'' என்கிறது வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி எட்டு, ப. 337).

மணிவாசகப் பெருமானால் தமிழிற்கு அறிமுகமான சதக இலக்கியம், தனி ஓர் இலக்கியமாகக் கி.பி பதினோராம் நூற்றாண்டில் உருப்பெற்றது. அவிநாசி ஆறை கிழார் எழுதிய கார்மண்டல சதகம் சதக இலக்கியங்களுள் முதலாவதாகும். இதனைத் தொடர்ந்து வளர்ந்து பல்கிய சதகங்களின் எண்ணிக்கை 107 என்று 'தமிழில் சதக இலக்கியங்கள்' என்ற நூலில் ப. பழனியம்மாளும், 125 என்று 'சிற்றிலக்கிய ஆராய்ச்சி' என்ற நூலில் இரா. கண்ணனும், 215 என்று 'சதகத் திரட்டு' தொகுதி இரண்டில் த. இராசேசுவரியும் குறிப்பிடுகின்றனர். ஆனால் இப்போது பட்டியலிடின் இவ்வெண்ணிக்கை அதிகரிக்கும் என்பது திண்ணம். இவற்றில் சைவ சமயத்திற்கு அடுத்த நிலையில், முப்பதுக்கும் மேற்பட்ட சதக நூல்களை இஸ்லாமிய இலக்கியம் பெற்றுள்ளது.

சதக இலக்கியங்களின் அமைப்புகள்

1. நூறு பாடல்களில் பாடப்பட்டிருத்தல்.
2. புலவர், இறைவனையோ அல்லது தாம் விரும்பிய ஏனையோரையோ பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடுதல்.
3. நூறு பாடல்களையும் ஒரே யாப்பில் பாடி முடித்தல்.
4. நூறு பாடல்களும் ஒரே முடிவை அல்லது ஈற்றடியை மகுடமாகப் பெற்றிருத்தல் (இது சதக இலக்கியத்தின் பொதுப் பண்பாகும்).
5. நூலின் பெயரில் பாட்டுடைத் தலைவரின் பெயரோ அல்லது பாடப்படுகின்ற பொருள்களின் - மண்டலங்களின் - தலங்களின் பெயர்களோ அல்லது நூலில் பாடல்தோறும் ஈற்றடியாக இடம்பெற்று அதனோடு சதகம் எனும் சொல் இணைந்து வருதல்.

என்பன சதக இலக்கியங்களின் பொதுவான அமைப்புக்களாகும்.

'நபியே எங்கள் நாயகமே!'

கா.மு. ஷெரீப் 'நபியே எங்கள் நாயகமே!' என்ற நூலில் இஸ்லாமியர்களின் இறுதித் தூதுவரும், இவ்வுலகிற்குச் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் கற்றுத் தந்து, அகில உலக மாந்தர்க்கெல்லாம் அழகிய முன்மாதிரியாய் விளங்குபவருமான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், போதனைகளையும் எடுத்துக்கூறி அவர்களை வாழ்த்திப் பாடியுள்ளார். இந்நூலுக்கு எம். அப்துல் வஹ்ஹாப், ஏ. அப்துல் ஜலீல், எம்.எம். இஸ்மாயீல், ந. சஞ்சீவி, ம.கா.மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர், புலவர் கீரன், சிலம்பொலி சு. செல்லப்பன் போன்றோர்

முறையே ஆய்ந்துரை, பாராட்டுரை, அணிந்துரை, மதிப்புரை, சாற்றுக்கவி, அணிந்துரை, துய்ப்புரை போன்றவற்றை வரைந்துள்ளனர்.

நூலின் அமைப்பும் பொருளும்

எந்த நூலைப் பாடத் துவங்கும்போதும் கடவுள் வாழ்த்துப் பாடித் துவங்கும் தமிழ் இலக்கிய மரபையொட்டியே இந்நூலிலும் முதலில், இறை வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து மறை வாழ்த்து, மக்காநகர் வாழ்த்து, கஃபா வாழ்த்து, முத்தலிப் வாழ்த்து, அப்துல்லாஹ் வாழ்த்து, ஆமீனா வாழ்த்து, கதீஜா வாழ்த்து, ஆயிஷா வாழ்த்து, பாத்திமா வாழ்த்து, கலிபாக்கள் சகபாக்கள் வாழ்த்து, உலகியல் வாழ்த்து போன்ற பதினொரு வாழ்த்துப் பாக்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சார்ந்தவரைப் பற்றி அமைந்துள்ளன. இப்பாடல்களுக்கு அடுத்த பாடலிலிருந்து துவங்கி நூறு பாடல்களில் 'நபியே எங்கள் நாயகமே!' (நந்நபி வாழ்த்துப் பாமாலை) என்னும் தலைப்பில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறப்பு, வாழ்வு, வாக்கு, செயல், போதனைகள் மற்றும் இஸ்லாமியக் கருத்து விளக்கம், அவர்தம் இறப்பு போன்றன எடுத்துரைக்கப் படுவதுடன், படிப்போர் ஒவ்வொருவரும் இஸ்லாம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது.

''எல்லாரும் ஓர் குலத்தார் இஸ்லாமவர் மார்க்கம், இறைவனுமே ஒன்றாவான் உரு அவனுக்கில்லை'' *(பா. 6)*, ''அல்லாஹ் என உண்டொருவன் அவனுக்கிணையில்லை அகில மெலாம் படைத்தளித்துக் காப்பவனும் அவனே'' *(பா. 7)*, இறைவன் ஒருவனென நம்பி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவனுடைய தூதரெனக் கொள்ளுதல், ஐவேளை தொழுதல், ஜக்காத் எனும் தானதர்மம் செய்தல், நோன்பிருத்தல், பொருளிருப்பின் ஹஜ்ஜியற்றல் எனும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள் *(பா. 16)*, நல்லது செய்ய வேண்டும் *(பா. 22)*, பிறருக்கும் பகிர்ந்தளித்து உண்ண வேண்டும் *(பா. 23)*, உடையுடுத்தும் முறை *(பா. 24, 25)*, சிக்கன வாழ்வு *(பா. 26)* ''இறைவனிடமல்லாது மற்றையோரிடத்தில், இறைஞ்சிக் கையேந்துவோர்க்கு மீட்சியென்ப தில்லை'' *(பா. 28)*, ஏழைகளைப் பேண வேண்டும்; மாறாக எள்ளி நகையாடக் கூடாது *(பா. 32)*, வறுமையிலே நொந்து கெட்டபோதும் பிறரிடம் கையேந்த வேண்டாம் *(பா. 33)*, உழைக்காமல் வாழ்தல், தனித் துண்ணல், பொய்யுரைத்தல், பித்தலாட்டம், கொலை, களவு *(பா. 36)*, மானிடரைப் புகழ்தல், புறம் பேசல், வீணாகப் பிறருக்கு இடர் செய்தல், இறைவனைத் தவிரப் பிறருக்கு அடிமையாயிருத்தல் *(பா. 37)*, படாடோப வாழ்வு, அடாவடிச் செய்கை, குடிப்பது,

நடிப்பது போன்றன இஸ்லாம் நெறியாகா (பா. 38), வட்டிப் பண வாழ்க்கையினர், பகைமைக் குணமுடையோர், வெட்டிப் பேச்சுடையோர், கடவுளை நம்பாதார் போன்றோர் இஸ்லாமியராகார் (பா. 39), பெற்றோரைப் பேணல், உழைப்புக்கேற்ற கூலியை உடனே தரல் (பா. 66), பிள்ளைகளை ஒழுக்கமுடன் வாழப்பயிற்றல் பெற்றோரின் கடன் (பா. 76) போன்ற நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்து வாழ்ந்து காட்டிய பல்வேறு கருத்துக் களைக் கூறி அவர்களை வாழ்த்தி, இறுதியில் அவர்களின் முழு வாழ்வையும் கவிஞர்,

''பிறக்கும்முன் தந்தையரைத் தானிழந்து புவியில்
பிறந்தசில ஆண்டிற்குள் தாயாரை யிழந்து
சிறப்பான கல்வியின்றி மாடாடு மேய்த்துச்
சுற்றத்தார் ஆதரவில் அனாதையென வளர்ந்து
முறைப்படிக்குத் தொழில்செய்து திருமணம்மு டித்து
மூவிரண்டு மகவுபெற்று ஞானவழி சென்று
பெறற்கரிய நபிப்பட்டம் பெற்றிட்ட யிறுதிப்
பெருநபியே முஹம்மதரே வாழியரோ வாழி'' (பா. 98)

என்ற ஒரே பாடலில் எடுத்துரைக்கிறார்.

நந்நபி வாழ்த்துப் பாமாலையில் அமைந்துள்ள நூறு பாடல் களிலும் 'முஹம்மதரே வாழியரோ வாழி' என்ற தொடர் ஈற்றுத் தொடராக மீண்டும் மீண்டும் வந்துள்ளது.

சதக இலக்கியமா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டமைந்துள்ள 'நபியே எங்கள் நாயகமே!' எனும் இந்நூலில் பாடல்களின் எண்ணிக்கை நூறு என்கிற சதக இலக்கிய வரை முறையைத் தாண்டி அமைந்துள்ளது. இதில் உள்ள எல்லாப் பாடல்களும் எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தப்பாவிலேயே அமைந்துள்ளன. இந்நூலிலுள்ள 'நந்நபி வாழ்த்துப் பாமாலை' எனும் பகுதியிலமைந்துள்ள நூறு பாடல்களிலும் 'முஹம்மதரே வாழியரோ வாழி' எனும் ஒரே ஈற்றடி முடிபாக மகுடமாக ஆசிரியரால் அமைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் நூலின் பெயருடன் சதகம் எனும் சொல் இணைந்து வரவேண்டும் எனும் மரபிற் கேற்பவே இதுவரை வெளிவந்துள்ள சதகங்கள் அனைத்தும் அமைந்துள்ளன. ஆனால் இந்நூல் அவ்வமைப்பிலிருந்து பிறழ்ந்து அமைந்துள்ளது. ஆகவே இந்நூலைச் சதக இலக்கிய வரிசையில் சேர்த்தல் பொருந்தாது; மாறாக நபிகள் நாயகம் (ஸல்) அவர் களின் மீது பாடப்பட்ட வாழ்த்துப்பாவாகக் கொள்ளலே சாலும். இவ்வாறு கொள்வதால் இந்நூல் சிற்றிலக்கிய வகையிலிருந்து விடுபடுகிறது.

யூசுப் சுலைகா காட்டும் இறையச்சம்

எம்.ஏ.எஸ். ஹபீபுர்ரஹ்மான்

ஜமால் முகம்மது கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 20

இஸ்லாமியக் கோட்பாடுகள், அவற்றை மனித குலத்திற்கு எடுத்தோதிய இறைத்தூதர்கள், அந்நெறிபேணியொழுகிய இறை நேசர்கள் போன்றோர் வரலாறு, நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புடைய போர்கள், நடைபெற இருப்பனவாக நம்பப்படுவன போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் படைத்த இலக்கியங்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் எனப்படும். இலக்கிய வடிவம், வகை பற்றிக் கவலாது முஸ்லிம்களுக்கு மார்க்கச் சட்டங்களையும், நெறிமுறைகளையும், நற்படிப்பினை களையும் நல்குவதையே குறிக்கோளாகக் கொண்டு பெருங் காப்பியங்களையும் சிற்றிலக்கியங்களையும், புதிய இலக்கிய வகைகளையும் கணிசமான அளவில் இஸ்லாமிய இலக்கியப் படைப்பாளர்கள் ஆக்கியுள்ளனர்.

சாரண பாஸ்கரனாரும் யூசுப் சுலைகாவும்

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பெற்றவர் 'கவிஞர்திலகம்' சாரண பாஸ்கரனார். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள கூத்தா நல்லூரைச் சேர்ந்தவர். பாரதிதாசனால் பாராட்டப்பெற்ற இவர் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் பாங்கில் கருத்தாழமிக்க பல கவிதைகளைப் படைத்தவர். சம காலத்துக் கவிஞர் பலரால் போற்றப்பெற்ற இவர் யாத்த 'யூசுப் சுலைகா' காப்பியம் இக்கால வாழ்விற்கு மிகவும் இன்றியமையாத் தேவையாகத் திகழும் நல்லொழுக்கம், கற்பு நெறி போன்றவற்றை வலியுறுத்துவதுடன் அவற்றைப் பேணுவதற்கு அவசியமாக விளங்குவது இறையச்சமே என்பதையும் எடுத்தியம்புகிறது.

இன்றைய தேவை இறையச்சம்

இக்காலத்து நிகழும் வன்முறைகள், போர்கள், ஒழுங்கீனமான செயல்கள், பேரழிவுகள் போன்ற பலவற்றுக்கும் காரணமாக இருப்பது இறையச்சமற்ற மனப்போக்கே. மனித வாழ்வு இம்மையில் தொடங்கி மறுமையில் நிறைவுறுவது என இஸ்லாம் உணர்த்துகிறது. இம்மை

விளையாட்டுத்திடல். மறுமை பரிசளிக்கப்படும் மேடை. இம்மை விளை நிலம். மறுமை அறுவடைக்களம். இறையாணைப்படி கட்டுப்பாடுகளுக்குட்பட்ட வாழ்வை நடத்தினால்தான் மறுமையில் சுவனப் பேறுபெற இயலும். இறை நம்பிக்கையாளர்களுக்கு இவ்வுலகம் சிறைச்சாலையைப் போன்றது என்பன நபிகள் நாயகத்தின் நன்மொழிகள்.

நபிமார்களும் நன்னெறி போதமும்

இறைக்கட்டளைப்படி தாமும் வாழ்ந்து, மனித சமுதாயத் திற்கும் அறிவுறுத்துமாறு இறைவன் இவ்வுலகிற்கு 1,24,000 நபிமார்கள் எனப்படும் இறைத் தூதர்களை அனுப்பிவைத்தான். சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ்ந்த இவர்களின் வாழ்வு மனித சமுதாயத்திற்குப் பல்வேறு படிப்பினைகளைப் பகர்கிறது.

இறைவன் இவ்வவனியில் ஆடவரிலும், அரிவையரிலும் நல்லொழுக்கம் மிக்கவரையும், தீயொழுக்கம் உடையவரையும் படைத்துள்ளான். அல்வழிச்செல்லும் ஆடவரால் அல்லலுக் குள்ளாக்கப்பட்டு நன்னெறி பிறழ்வோரும், நெறி பிறழாது சிறந்து விளங்குவோரும் பெண்டிரில் பலர் உள்ளனர். அவ்வாறே பெண்டிரின் வற்புறுத்தலால் நெறி தவறுவோரும், தவறாது நன்னெறிச் செல்வோரும் ஆடவரிலும் பலர் உள்ளனர். பணம், பதவி, புலனின்பம் போன்றவற்றைக்காட்டி மயக்கினும், அச்சுறுத்தினும் பிழைபுரியக்கூடாது என அறிவுறுத்த இறைவன் தன் தூதர்களின் வாழ்விலும் இத்தகைய நிகழ்ச்சிகளை இடம்பெறச் செய்துள்ளான்.

வரலாற்று ஒளியில் யூசுப் நபி

திருக்குர் ஆனின் பன்னிரண்டாவது அத்தியாயமும் பைபிள் ஆதியாகமம் 37 முதல் 50-ஆம் வரையுள்ள அதிகாரங்களும் யூசுப் நபியின் வரலாற்றைக் குறிப்பிடுகின்றன. இருபெரும் வேதங்களால் கூறப்படும் இறைத்தூதரின் வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட 'யூசுப் சுலைகா' காப்பியத்திலும் குர்ஆன் கருத்துக் களும், மனித சமுதாயம் பின்பற்றத்தக்க ஒழுக்க நெறிமுறை களும் உணர்த்தப்பட்டுள்ளன.

காப்பியப் பொருண்மை

பேரழகர் யூசுப் நபியின் மீது அவர்தம் தந்தை யாக்கூப் நபி பேரன்பு செலுத்த, பிறசோதரர் யூசுபை வெறுத்துத் துன்புறுத்தி, இறுதியில் மிஸ்ரின் அமைச்சரிடம் அடிமையாக்குகின்றனர். அமைச்சரின் மனைவி சுலைகா யூசுபைப் பெரிதும் துன்புறுத்தித் தம் இச்சைக்கு இணங்குமாறு வற்புறுத்துகிறார். இறையச்சத்தால்

தவறிழைக்க மறுத்து, சிறை புகினும் குறைபுரியாச் சீல வாழ்வு வாழ்ந்து மிஸ்ரின் அமைச்சராகி மாண் பெய்துகிறார்.

புலனடக்கத்திற்குத் தேவை இறையச்சம்

பார்வையே அனைத்துப் பாவங்களுக்கும் காரணம் ஆதலால் இறை நம்பிக்கையுடைய ஆண்களையும், பெண்களையும் தம் பார்வையைக் கீழ்நோக்கியே வைத்துக் கொள்ளும்படியும், கற்பைக் காத்துக்கொள்ளும் படியும் இறைவன் கட்டளையிடுகிறான் *(குர்ஆன் 24:30, 31)*.

மது, அருந்தியவருக்கு மட்டுமே மயக்கம் தரும். மாது கண்டவுடனேயே மயக்கம் தருபவள் என்பதை,

''உண்டார்கண் அல்ல தடுநறாக் காமம் போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று''

என்கிறார் வான் புகழ் வள்ளுவர். பெண்டிரை நோக்குவதால் ஆடவரின் அகத்தே தீய எண்ணங்கள் எழும். நெறி பிறழ நேரிடும். பெண்டிர்க்கும் அவ்வாறே.

மீன்கள் ஆழமான நீர்நிலையில் பல நாட்கள் இருந்தாலும், புதிய வெள்ள நீரைக் கண்டால் அதில் புகுந்தாட விரும்பி ஓடும். அவ்வாறே மன்மதனையே மணாளனாகப் பெற்றிருப்பினும், பெண்டிர் பிற ஆடவனைக் காணும் பொழுது மனம் பேதுறுவர் என்பதை,

''பள்ளம் முதுநீர்ப் பழகினும் மீனினம்
வெள்ளம் புதுவது காணின் விரும்புறூஉங்
கள்ளவிழ் கோதையர் காமனோ டாயினு
முள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணீ''

என வளையாபதி கூறுகிறது. ஆணும் பெண்ணும் சந்திப்பதால் ஆசைநோயால் இருவரும் அல்லலுறுவர், பல தீமைகள் விளையும். ஆகவே அதைத்தடுக்க வேண்டும் என்பதை,

''ஆடவரின் பார்வையினில் அரிவையரை விட்டே
ஆசைக்கனல் மூட்டிவைத்து இருவரையும் வாட்டும்
மூடச்செயல் நீக்கிடுவோம்'' *(யூ.சு. 39:4)*

என்கிறார் சாரண பாஸ்கரனார். ஏனெனில் காதல் மது நீங்காத போதை தருவது *(யூ.சு. 30:2)* அறிவு நிலைக்குத் திரும்ப விடாது மனிதரை ஆட்கொள்வது என்பது அவர் கருத்து,

''பற்றழித்த துறவியரும் பெண் பார்வை பட்டதெனில்
பணிவாரென்றும்'' *(யூ.சு. 30:9)*

''விண்ணவர் மண்ணவர் வெற்றிகொள் வீரரும் பெண்ணெழிற்
புன்னகை பெற்றிட நாடுவர்'' *(யூ.சு 22:11)*

என்றும் கூறுவதால் பெண்ணின் பார்வை, புன்னகை போன்ற யாவும் ஆடவர் மனஉறுதியை மாற்றுவன என்றியம்புகிறார். ஆகவே பார்வையைத் தாழ்த்திக்கொள்ளும்படி இறைவன் கட்டளை யிட்டுள்ளான் என்பதைக் காப்பியப் போக்கில் புலப்படுத்தியுள்ளார். இச்சையால் எழும் காதலுணர்வு வலிய கணையென்றும் அதைப் பகுத்தறிவென்னும் கேடயத்தால் தடுத்தற்கியலாதென்றும் உருவகப் படுத்தி,

''பாய்ந்துவரும் காதற்கணை தடுப்பதற்குப்
பகுத்தறிவுக் கேடயத்தால் ஆகாது'' (யூ.சு. 21:15)

என்றுரைக்கிறார்.

பாவத்திற்கு அஞ்சுக

கனவில் யூசுபைக்கண்டு, அவரையன்றித் தம் கணவர் அஜீஸையும் ஏற்காது வாழும் காப்பிய நாயகி சுலைகா, யூசுபே தன்னிடம் அடிமையான பின் அவரை அடையப் பலவாறு முயன்று தோற்கிறார். தன் விருப்பிற்கிணங்குமாறு வேண்டிய சுலைகாவிடம், நெஞ்சில் எழும் இச்சையை அடக்காமல் வாழ்வோர் பஞ்சையர்கள் (யூ.சு. 38:29) என்றும், ''பாபத்திற்காளாகி உள்ளத்தைப் பாழாக்கிய பண்புள்ளோரின் சாபத்திற்குள்ளாகிச் செத்தால் இறையோன் முன் தப்பலாமோ?'' (யூ. சு 38:47) என்றும் வினவுவதால் காப்பியத்லைவரின் இறையச்சமும் தீயவற்றிற்கஞ்சும் பண்பும் தெற்றெனப் புலனாகின்றன. அயலவர் மனைவியிடம் அன்பு செய்ய ஒப்புவது அநீதி (யூ.சு. 38:27), மனமுரண்டாகச் செய்யும் பாவத்தை இறைவன் மன்னிக்கமாட்டான் எனவும் பலவாறு சொல்லி அறிவுறுத்தியும் அம்மாதரசி வற்புறுத்துகிறார்.

இறைவனின் பெயரைக் கேட்டதும் யூசுப் தன்னுடல் நடுங்கிப் (யூ.சு. 38:53) பாவம் செய்யாது தப்பியோடி,

''ஆசையின் வலையில் வீழ்ந்திடும் சமயம்
அன்புடன் இறையவன் காத்தான்'' (யூ.சு. 38:56)

என்றியம்புகிறார்.

இச்சையையடக்க இறையருள் தேவை

காப்பிய நாயகியின் கருத்திற்கிசையாது, எப்பிழையும் புரியாது யூசுப் நபி தூய்மையாக வாழ்ந்தனர். எனினும் தூய சிந்தனை, தூய பார்வை, நற்செயல் அனைத்தும் தன்னாற்றலால் நிகழ்வனவல்ல. எல்லாம் இறைவன் செயலே. அவன் நாடவில்லையேல் பாவத்திலிருந்து விடுபடவும் இயலாது. நற்செயல் புரியவும் இயலாது எனும் விடையைப் பகர்ந்தனர் யூசுப் நபி எனக்காட்டும் சாரண பாஸ்கரனார்,

''எல்லாம் இயக்கும் இறைவனின் எண்ணம்
அல்லால் எதுவும் அசைவதே இல்லை
தன்னையே உயர்வாய்ச் சாற்றுவார் போன்று
என்னையே உயர்வாய் இயம்பிட மாட்டேன்
நாயனின் நல்லருள் நமக்கிலை யாயின்
தீயவை ஏற்கத் தூண்டிடும் இச்சை
மனிதனின் உடலில் மலர்ந்திடும் உணர்ச்சி
புனிதமும் அழித்துப் புரிந்திடும் பாபம்
எனவே எனையான் தூயவன் என்று
கணமும் நினையேன்'' *(யூ.சு. 41:159-168)*

எனப் பாடியுள்ளார். இக்கருத்தை,

> ''அன்றி நான் பரிசுத்தமானவன் என்று என்னை நானே புகழ்ந்து கூற வரவில்லை. ஏனென்றால் என் இறைவன் அருள் புரிந்தாலன்றி மனிதனுடைய மனம் பாபம் செய்யும்படி தூண்டக்கூடியதாகவே இருக்கிறது'' *(குர்ஆன், 12:53)*

என யூசுப் நபி கூறியதாகத் திருக்குர்ஆன் குறிப்பிட்டுள்ளது. திருமறை வசனம் நற்றமிழ்ப் பாவடிவைப்பெற்றிலங்குவதுடன் இறை யாற்றலையும் இனிது புலப்படுத்துகிறது. இலக்கியவடிவில் இறைமறைக் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எக்காலத்தும் மணம் செய்யக் கூடாதவள் தாய்; ஆதலின் மனைவியையன்றிப் பிற மாதர் அனைவரையும் தனைப்பெற்ற தாயாகக் கருதி, இறைவனுக்கு அஞ்சி வாழ்ந்தால் அறிவினால் வெல்ல இயலாத உடலுணர்வான காமத்தைவென்று நற்பேறு பெறலாம் என்பதைக் காப்பிய நாயகரின் கூற்றாக அறிவுறுத்து கிறார் கவிஞர்.

முடிவுரை

ஆடவரும் பெண்டிரும் பார்வையைக் கட்டுப்படுத்தவும், நல்லொழுக்கத்துடன் கற்புநெறி பிறழாது வாழவும் இன்றியமை யாதது இறையச்சம் எனக் குர்ஆன் அறிவுறுத்தும் கருத்துக்களைக் கவிஞர் திலகம் சாரண பாஸ்கரனார் யூசுப் சுலைகா காப்பியத்தின் வாயிலாக இனிது புலப்படுத்தியுள்ளார். தீயன புரிந்தால் இறைவன் தண்டிப்பான் என்னும் அச்சம் ஏற்பட்டால் மட்டுமே மனிதன் இறைக்கட்டளைக்கிணங்க வாழத்தலைப்படுவான். இறைக் கட்டளைப்படி வாழ்வோருக்குத் தேவையான அனைத்தும் அருளப்படும். தீய நோக்கு, தீய சிந்தனையகன்று நற்சிந்தனையும் நற்செயல்களும் நிலைபெறும்.

ஞான ஏத்தப்பாட்டு - ஓர் அறிமுகம்

எஸ்.எஸ். ஷீபா

பல்கலைக்கழகக் கல்லூரி

திருவனந்தபுரம்

ஏற்றப்பாட்டு என்பது நாட்டுப்புறப் பாடல்களில் தொழில் சார்ந்த பாடலைக் குறிப்பதாகும். இது ''கிராமங்களில் ஏற்றம் இறைக்கும் போது பாடும் பாடல் (Song Sung at the time of drawing water from well for irrigation)''. ஏற்றப்பாட்டை ஏலப்பாட்டு, ஏத்தப்பாட்டு எனவும் அழைப்பர். வேதநாயக சாஸ்திரியாரால் படைக்கப்பட்ட 'ஞான ஏத்தப்பாட்டு' நூலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேதநாயக சாஸ்திரியார்

இவர் கி.பி. 1774-இல் அருணாசலம் பிள்ளை என்ற தேவ சகாயம் - சின்னப்பூ ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவருக்கு முதலில் பெற்றோர் உரோமன் குரு ஒருவரைக்கொண்டு வேத போதகம் எனப் பெயர் சூட்டினர். பின்னர் அப்பெயர் ஒரு குருவினுடையது என்பதை அறிந்த பெற்றோர் வேதநாயகம் எனப் பெயரை மாற்றினார்.

வேதநாயகம் இளமைப் பருவத்தில் படிப்பில் ஆர்வம் இல்லாமலும், அடங்காக்குணம் கொண்டும் ஊர் சுற்றும் வாலிபராகக் காணப்பட்டார். இதனால் மனம் உடைந்த தந்தை தன் மகனுக்காக அனுதினம் இறைவனோடு வேண்டுதல் செய்தார். அதன் விளைவாக வேதநாயகம் தமது ஒன்பதாம் வயதில் ஒரு மாலை வேளையில் குருவினுடைய வீட்டில் படித்துக் கொண்டிருக்கும்போது சிலுவைக் காட்சியை நேரடியாகத் தரிசித்தார். அதை 'அருகில் இருந்த மாணவன் நீ என்னடா, படியாமல் பரக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்? என்று வினவ, வேதநாயகம் இதோ எங்கள் சுவாமி போகுது பார்! பார்! என அவனுக்குச் சுட்டிக் காட்டினார். பின்னர் அச்சிலுவைக் காட்சி அரை நாளிகை காணப்பட்டு மறைந்து போயிற்று. இந்நிகழ்வை வேதநாயகம் வீட்டிற்கு வந்து தமது பாட்டியிடம் கூற அவர்கள் ''உண்மையாகவே அது சுவாமியினுடைய அடையாளம். கிடைக்கக் கூடிய தரிசனமல்ல; யாதோவோர் அதிசயம் உன்காலத்தில் நடைபெறும்'' என்றார்.

அம்மூதாட்டியின் வாக்கிற்கேற்பவே அவர் வாழ்ந்த காலத்தில் கிறித்தவ சமய முன்னேற்றத்திற்காகவும், தமிழ்மொழி வளர்ச்சிக்

காகவும் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியது. 120-க்கும் மேற்பட்ட தரமான தமிழ் நூற்களைப் படைத்தளித்துள்ளார். அவை மட்டு மல்லாமல் இவரது சிறந்த சேவைகளைக் கண்ட மக்கள் இவருக்கு ''அண்ணாவியார்'', ''வேதாகம சிரோமணி'', ''மகாஞான கவிசக்கரவர்த்தியர்'', ''சுவிசேட கவிரா்யர்'', ஞான தீப கவிராயர்'', ''சாஸ்திரியார்'' என்ற பல பட்டங்களையும் வழங்கி கௌரவித்தனர். ஆனால் வேதநாயகருக்குச் சூட்டப்பட்ட பிற பட்டங்கள் எல்லாம் வழக்கொழிய சாஸ்திரியார் என்ற பட்டமே நிலைபெற வழங்கு கின்றது. எனவேதான் இவர் பிற்காலத்தில் வேதநாயக சாஸ்திரியார் என அழைக்கப்பட்டார்.

ஞான ஏத்தப்பாட்டு

'ஞான ஏத்தப்பாட்டு' நாட்டுப்புற இலக்கிய வடிவம் கொண்ட ஓர் சிற்றிலக்கியமாகும். இது கிறித்தவர்கள் ஏற்றம் இறைக்கும் போது பாடுவதற்கென்று சாஸ்திரியாரால் படைக்கப்பட்டது. நாட்டுப்புறப் பாடல்கள் பொதுவாக வேலையைச் செய்வதற்கான ஊக்கத்தை அளிப்பனவாகக் காணப்பட்டாலும் அவற்றில் பாலியல் தொடர்பான கருத்துக்கள் மிஞ்சி நிற்கும். அதனால் அவை கேட்பதற்குச் சில வேளைகளில் வெறுப்பை ஏற்படுத்தும். எனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவுக்குரிய மக்கள் ஏற்றம் இறைக்கும் போது வெறுப்பூட்டும் பாடல்களைப் பிறர் பாடுவது போன்று பாடக்கூடாது என நினைத்த சாஸ்திரியார் வேதத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பாடலை இயற்றத் தீர்மானித்தார். அப்போது 'ஆமோத்சின்' குமாரனாகிய 'ஏசாயா' யூதேயாவையும், எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம் 'ஏசாயா' என்ற அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளதைக் கண்டார். அதில் 27-ஆம் அதிகாரம் 2,3 வசனங்களில் ''அக்காலத்திலே நல்ல திராட்சை ரசத்தைத் தரும் திராட்சைத் தோட்டம் உண்டாயிருக்கும் அதைக் குறித்துப் பாடுங்கள், கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி அடிக்கடி அதற்குத் தண்ணீர் பாய்ச்சி, ஒருவனும் அதைச் சேதப்படுத்தாத படிக்கு அதை இரவும் பகலும் காத்துக் கொள்வேன்'' என்ற வசனம் இடம் பெற்றுள்ளது.

சாஸ்திரியார் அவ்வசனங்களில் கூறப்பட்டுள்ள தோட்டத்தை கிறித்தவ சபையாகவும் தண்ணீர் இறைப்போரை கிறித்துவை ஏற்றுக் கொண்ட மக்களாகவும் உருவகப்படுத்தி கூறப்பட்டுள்ளதாகக் காப்பு பாடலில் குறிப்பிடுகின்றார். இவ்வசனத்தின் அடிப்படையிலேயே தம்முடைய நூலுக்கு ஞான ஏத்தப்பாட்டு என்ற பெயரையும் அமைத்தார்.

ஞான ஏத்தப்பாட்டின் அமைப்பு

'ஞான ஏத்தப்பாட்டு' ஒன்று முதல் நூற்றியொன்று வரையுள்ள எண்களைக் கொண்டு பாடப்பட்ட பாடலாகும். இவ்வாறு எண் களைக் கொண்டு பாடுகின்ற அமைப்பு நாட்டார் வழக்காற்றியலில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இது பொழுதுபோக்கு மட்டுமல்ல; தொழில் சார்ந்த எண்ணிக்கையைக் குறிப்பிடுவதாகும். ஏற்றம் இறைப்பவர்கள் தாங்கள் இறைக்கும் தண்ணீரின் அளவு தெரிவதற்குச் சில வாய்ப்பாடுகள் சொல்வர். அதன்படி ஞான ஏத்தப்பாட்டு ஒன்று, இரண்டு, மூன்று என எண்களை வரிசை யாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இதில் 30, 47, 54, 58, 70, 80, 100 ஆகிய ஒன்பது எண்களில் அமைந்த பாடல்கள் ஒன்றுக்கு இரண்டு பாடல்களால் பாடப்பட்டுள்ளது. ஆகமொத்தம் காப்புச் செய்யுளுடன் இதில் இடம் பெற்றுள்ளப் பாடல்கள் (111) நூற்றுப் பதினொன்று ஆகும்.

ஞான ஏத்தப்பாட்டின் நோக்கம்

இலக்கியம் மக்களுக்கு பயன் அளிப்பதாக அமையவேண்டும். ''அது அனைவருக்கும் இன்பமூட்டுவதாக இருத்தல்வேண்டும்'' என்றனர் சிலர். ஆனால் ஞான ஏத்தப்பாட்டை சாஸ்திரியார் அவ்வாறு எல்லோருக்கும் இன்பமூட்டுவதாக அமைக்கவில்லை என்பதை நூலின் முகவுரையிலிருந்து அறிய முடிகின்றது. ஏனென்றால் ''அங்கே இருக்கிற கிறித்தவர்களான தோட்டக்காரர் தண்ணீர் இறைக்கிறபோது வீணான அவலட்சணப் பாட்டுகளை புறமதஸ்தர்கள் தாண்டகத்தின்படி பாடி வருகிறார்கள். அப்படி நம்முடையவர்கள் செய்கிறது சரியல்லவென்பதை எண்ணி, இந்தப் புதிதான ஞானேத்தப்பாட்டை உண்டுபண்ண வேண்டிய தாயிற்று'' என அவர் குறிப்பிடுவதிலிருந்து இது குறிப்பிட்ட ஒரு பிரிவு மக்களுக்காக மட்டும் படைக்கப்பட்டது என்பதை அறியலாம்.

மேலும் இஞ்ஞான ஏத்தப்பாட்டை ஒருவன் கிறித்தவன் என்ற பெயரை மட்டும் பெற்றிருந்தால் புரிந்து கொள்வது கடினம். அவனுக்கு மறைநூலான விவிலியத்தில் ஆழ்ந்த அறிவும், திருச்சபை வரலாறும் நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதை இந்நூலை ஆராயும்போது அறிய முடிகிறது. எனவே இந்நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் திருமறைச் செய்திகள், விடுகதைகள், உத்தி போன்ற தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றன.

திருமறைச் செய்திகள்

திருமறை, விவிலியம், பரிசுத்த வேதாகமம், பைபிள் (Bible) என்று கூறப்படும் அனைத்துச் சொற்களும் கிறித்தவர்களின் மறை நூலான வேதாகமத்தைக் குறிப்பதாகும். இவ்வேதாகமத்தை

மையமாகக் கொண்டு எண்ணற்ற கிறித்தவக் கவிஞர்களும், கிறித்தவரல்லாதோரும் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அவற்றின் பாட்டுடைத் தலைவர் இயேசு நாதராக காணப் பட்டாலும் கற்பனை, வருணனை, உவமை, உருவகம் போன்ற இலக்கியத்தின் பிறகூறுகளும் இடம்பெற்றிருக்கும். ஆனால் சாஸ்திரியார் அவர்களால் படைக்கப்பட்ட ஞான ஏத்தப்பாட்டில் அப்படிப்பட்ட எந்த கூறுகளுக்கும் இடமில்லை. அவர் வேதத்தில் இடம் பெறும் கருத்துக்களை வாய்பாட்டு அடிப்படையில் விளக்குகின்றார். அவை வேதத்தை ஓரளவு கற்றறிந்தவனும், புரிந்துகொள்ளும் விதத்தில் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஆறு என்ற எண்ணை குறிப்பிடும்போது,

''ஆறுகுடம் நீரை - அவ
னறிய ரசஞ் - செய்தான்
கருதியருள் பெய்தான் - கா
னாவினிலே மெய்தான்''

என்கின்றார். யூத பாரம்பரியப்படி திருமணம் என்றால் அங்குக் கட்டாயம் திராட்சைரசம் இடம்பெற்றிருக்க வேண்டும். அதில் ஒருசிறு குறையும் ஏற்படாதவாறு கவனிக்க வேண்டியது திருமண வீட்டாரின் கடமையாகும்.

கானாவூர் என்ற இடத்தில் நடந்த திருமணத்திற்கு இயேசுவும், அவர் தாய் மரியாளும் அழைக்கப்பட்டிருந்தனர். அங்குத் திராட்சைரசம் பரிமாறப்பட்டபோது திடீரென்று ரசம் குறைவுபட்டது. அதை அறிந்த திருமண வீட்டார் திகைத்தனர். அவர்கள் இயேசுவின் தாயிடம் சென்று இக்குறைவைக்கூறி வருந்தினர். உடனே இயேசுவின் தாய் இயேசுவிடம் சென்று திருமணவீட்டில் ரசம் குறைவு பட்டதைக் கூறி எப்படியாவது நிறைவுபடுத்திக் கொடுக்கக் கேட்கின்றார். முதலில் மறுத்த இயேசுவானவர் பின்னர் 6 கற்சாடி களில் நீரை ஊற்றச் சொல்லி அதைத் திராட்சைரசமாக மாற்றிய அற்புதச் செயல் சாஸ்திரியரால் இங்குக் கையாளப் பட்டுள்ளதை உணர முடிகின்றது.

விடுகதைகள்

''விடுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டியது. மறை பொருளினின்றும் விடுவிக்கப்பட வேண்டியது விடுகதையாகும்''. விடுகதைகள் பொழுதுபோக்குத் தன்மையுடன் காணப்பட்டாலும் அவை மனிதனைச் சிந்திக்கச் செய்கின்றன. எனவே சிந்தனைச் சக்தியை வளர்ப்பதும், அறிவு ஊட்டுவனவுமாக விடுகதைகள் அமைகின்றன. இவை ''மிகப் பழமையான மொழியாகிய தமிழிலும், வடமொழியிலும், கிரேக்கத்திலும், விவிலியநூலிலும், நாட்டார்

கதைகள், பழமரபுக் கதைகள் போன்றவற்றிலும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றன''.

சாஸ்திரியார் ஞான ஏத்தப்பாட்டில் குறிப்பிட்டிருக்கும் விடுகதை களை விவிலியம், கிறிஸ்தவ சரித்திர நூற்கள் போன்றவற்றைத் தேடினால் மட்டுமே விடுவிக்க முடியும். எடுத்துக்காட்டாக,

''பதிமூன்று சாணான் - அவனைப்
பட அடித்தான் எட்டான்
எதிரிகளுக்கு அஞ்சான் - கணக்கு
இருபதுடன் ஆறே''

இதில் பதிமூன்று சாண் உயரம் கொண்ட கோலியாத்தை ஈசாயின் எட்டாவது மகனான தாவீது, ஐந்து கூளாங்கற்களைக் கொண்டு கொன்றான் என்ற திருமறை வரலாற்றுச் செய்தி விடுகதையாக எடுத்தாளப்பட்டுள்ளது. மேலும் இஸ்ரவேல் ஜனங்களின் பிரயாணத்தின் போது அவர்கள் மாராவிற்கு அடுத்த 'ஏலீம்' என்ற இடத்தில் பாளையமிறங்கினர். அங்கு 12 நீரூற்றுகளும், 70 பேரீச்சமரங்களும் இருந்தன என்பதை,

''ஈச்சமரம் கூட்ட - மங்க
ளிருந்த தண்ணீ ரீட்ட
மீச்சையினிற் பட்டே - தொகை
வாச்சுதைம்பத் தெட்டே''

என 70-இல் 12-ஐக் கழித்தால் விடை 58 என்ற கணக்கை விடுகதையாகக் கையாள்கின்றார்.

உத்தி

ஒரு படைப்பாளி தான் படைக்கின்ற இலக்கியங்கள் வாசகரைச் சென்றடைய கையாளும் உத்திகள் பல. அவை வாசகரின் சிந்தனைத் திறனை சிதறாத வண்ணம் பாதுகாக்க உதவும். சாஸ்திரியார் வாசகரின் சிந்தனைத் திறனை ஈர்க்க ஒரு புதிய உத்தியைக் கையாள்கின்றார்.

பொதுவாக ஏற்றப்பாடல்கள் 100 என்ற இலக்கத்தைக் கொண்டு முடிவது இயல்பு. ஆனால் சாஸ்திரியார் தாம் கூறவந்த கருத்து முற்றுப் பெறாத நிலை ஏற்படும்போது ஒரே எண்ணில் மீண்டும் ஒரு பாடலைப் பாடி அதை முடிக்கின்றார்.

முடிவுரை

நாட்டுப்புறப் பாடல்களின் கூறுகளை உள்வாங்கி கிறித்தவ சமயச் சிந்தனைகளுடன் பொருத்தி ஞான ஏற்றப்பாட்டை சாஸ்திரியார் இயற்றியுள்ளார். தண்ணீர் இறைக்கும்போது கிறித்தவர்கள் இப்பாடலை இராகமுடன் பாடவேண்டும் என்பதே அவர் தம் அவா.

திட்டூர் தேசிகரின் கிளிக்கீதை

க.சோ. பால்சந்திர மோகன்

பிசப் ஈபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17

கிறித்தவர்களின் தமிழ்ப்பணி பதினேழாம் நூற்றாண்டில் தொடங்கியது எனலாம். தத்துவப் போதகர் இத்தமிழ்ப்பணிக்குக் கால்கோள் விதித்தார். அவரைத் தொடர்ந்து வீரமாமுனிவர் உள்ளிட்டோர் பல இலக்கியங்களைப் படைக்கலாயினர். சமயத்தைப் பரப்பவந்த மேலைநாட்டினர் தமிழ்ச்சுவையை உணர்ந்த பின்னர் தமிழ் இலக்கிய, இலக்கணங்களையும் படைத்தனர் என்பது அறிந்த செய்தி. கிறித்தவ சமயத்தில் பல பிரிவுகள் இருந்தாலும் கத்தோலிக்கர், திருத்தமுறைக் கிறித்தவர் என்ற இருபெரும் பிரிவினரே கிறித்தவ இலக்கியங்களில் பலவற்றைப் படைத்துள்ளனர். சில இலக்கியங்கள் அறிய வந்துள்ளன. ஆயின் சில இலக்கியங்கள் அறியா நிலையில் உள்ளன. திருத்தமுறை கிறித்தவர்களில் தமிழ் இலக்கியங்களைப் படைத்த சான்றோர் பலர் உள்ளனர். அவர்களுள் பலராலும் பரவலாக அறியப்பட்டவர்கள் தஞ்சை வேதநாயக சாத்திரியாரும் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளையுமாவர். ஆயின் ஜி.கே. வேதநாயகர் பற்றிப் பலர் அறிந்திலர். குமரியினர் அறிவர். இதைப்போன்றே ஜான்பால்மர், வேதக்கண் உள்ளிட்ட பலரது பட்டியல் உள்ளது. அதில் ஒருவரே திட்டூர் தேசிகர் ஆவார்.

நாகர்கோவிலுக்கு அருகில் உள்ள விதாவாளை வட்டத்தில் அமைந்துள்ள திட்டிவிளையில் 1858-ஆம் ஆண்டில் பிறந்த இப்புலவர் 1863-இல் திண்ணைப் பள்ளியில் சேர்ந்து ஏசுவடியான் என்ற போதகரைக் குருவாகக் கொண்டு தமிழ் பயின்று 15-ஆம் வயதில் தமிழாசிரியரானார். திருமறையிலுள்ள ஒரு நூல் கிடைக்கப் பெற்று 1867-இல் தீட்சை பெற்றுக் கிறித்தவரானார். ஐரோப்பியப் பாதிரியார்கள் பலரது அரவணைப்பில் இவர் வளர்ந்தாலும் 'டதி' என்ற சீமாட்டியே இவரது சமயப்பற்றுக்குக் காரணமாயிருந்தார்.

சமய புலமையையும் இலக்கியப் புலமையையும் இவர் வளர்த்துக் கொண்டு புதிய இலக்கியங்களைப் படைத்தார். இவரைப் பற்றிய பல செய்திகள் 'தேசோபகாரி' என்ற இதழில் வெளி வந்துள்ளன. 300-க்கும் மேற்பட்ட கலைகள் கற்றுள்ளதாகச் செய்திகள்

உள்ளன. மருத்துவம், விவிலியம், இலக்கியம் ஆகிய மூன்றிலும் இவர் ஈடுபாடு கொண்டவர். பலதுறைப் புலமை பெற்றதால் இவரைத் தேசிகர் என்றழைத்தனர்.

படைப்புகள்

முன்னூற்றுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்துள்ளார். ஆயின் 175 நூல்களே கையெழுத்துப் பிரதிகளாகக் கிடைத்துள்ளன. மற்றவை கிடைக்கவில்லை. மதுரை இறையியல் கல்லூரியில் இவை இடம்பெற்றுள்ளன. ஆயின் நேரடிப் பார்வைக்காக சில நூல்கள் மட்டுமே நூலகத்தில் உள்ளன.

செல்லப்பிள்ளைத் தாலாட்டு, நன்னாட்டம், விக்கின விநாசரகவல், காலக்கொடுமை, அகப்பேங்கமைவு, வேதநீதி, கிளிக்கீதை, கிறிஸ்துமாலை, பூதனூர் பதிகம், ஞானஒளி, மெய்யான மாலை, சௌமியதுறை ஆகிய நூல்கள் தெக்ஷணதீபம் என்னும் நூலில் வெளிவந்தன. நன்மனையாள், ஜாதிபேதப்பதிகம், ஜீவநூலகதூது, உடல் எடுத்த பயன், திருப்பள்ளிஎழுச்சி, சமுத்திர தீரதியானம், மெய்பொருள்பதிகம், வேதப்பதிகம் முதலியன சிறப்புடையதாகக் கருதப்படுகின்றன.

கண்ணன் அருளிய கீதை

கீதை கண்ணன் கூறிய வைதீக நெறி. வைணவர் போற்றும் வேதோபதேசம். அதனைப்போலவே கிறித்தவர் பின்பெற்ற வேண்டிய நெறிகளைக் கொண்டதே கிளிக்கீதை. அந்நெறிகளைத் தம் மனம் நினைந்து பின்பற்றவேண்டும் எனத் தமக்குத் தாமே கூறிக் கொள்கிறார். தம் மனத்தை ஒரு கிளியாக உருவகித்தார். ஒவ்வொரு கண்ணியிலும் அக்கிளியை விளித்து அறிவுரை கூறுகிறார் ஆசிரியர்.

திருமகன் அருளிய திருமொழி

இறைவன் அருளிய திருமொழிகளே அவருக்குக் கீதை மொழிகளாக அமைந்தன. அவற்றைக் கிளிக்கு அறிவுறுத்துவதால் இந்நூல் கிளிக்கீதையாயிற்று. ''உண்மையை அறிவீர்கள்; அவ்வுண்மையே உங்களுக்கு விடுதலையளிக்கும்'' என்னும் இறை வாக்கின்படி தாம் உணர்ந்த உண்மைகளை உள்ளவாறு உலகிற்கு உணர்த்த எண்ணினார். அதற்காக ஓர் இலக்கிய வடிவத்தை நாடினார். அதற்குக் கிளிக்கண்ணி வடிவத்தைக் கையாண்டார்.

கிளிக்கீதையும் பாடுபொருளும்

காப்புச் செய்யுள் நீங்கலாக 115 பாடல்கள் கொண்ட இந்நூல் கிளிக்கண்ணிகளால் அமைந்தவை. ஒவ்வொரு கண்ணியும் கிளியை விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மனித மனமே கிளியாக

உருவகிக்கப்பட்டுள்ளது. இந்நூலைப் படிப்பதால் நான்கு பயன்கள் கிட்டும்.

முதல் பதினைந்து கண்ணிகளில் இறைவன் திருவாக்கினால் உலகினைப் படைத்து இயற்கையைத் தோற்றுவித்து நீர்வாழ், நிலவாழ் உயிரினங்களை உண்டாக்கி இவற்றால் ஆன மனிதனையும் உண்டாக்கிய செய்தி கூறப்பட்டுள்ளது. தனது சாயலில் உண்டாக்கிய மனிதனின் கீழ்ப்படியாமையினாலும், இறைவன் கட்டளையை மீறினதாலும் அமைந்த பெருங்கேடும், அப்பெருங்கேட்டிலிருந்து மீள இறைவனே வழி அமைந்த நிகழ்வும்,

''வந்த பெருங்கேடு - கிளியே
மாற்றிவிங் காருமுண்டோ
அந்த மகாதேவனே - கிளியே
அரும் வழி காட்டினானே''

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமறை

இயேசுபெருமானின் பிறப்பின் புனிதம் கூறப்பட்டுக் கிறித்தவத் திருமறையின் இயல்புகள், பயன்கள் பெரிதும் சுட்டப்பட்டுள்ளன. கிறித்தவத் திருமறையின் உட்பொருள் கடலைவிட ஆழமானது. சிறுவர்கள், அறிஞர் ஆகலாம். மயக்கம் தரும் சொற்களோ, குழப்பம் தரும் செய்திகளோ கிடையாது. உண்மையை மட்டுமே அது கூறும். கள்ள உள்ளத்தை வெள்ளை உள்ளமாக்கும்; வீணரைச் சீலராக்கும். அதைக் கற்கத் தொடங்கினால் தேனைவிட இனிமையாக இருக்கும். மனத்திற்கு ஆறுதல் தரும்... ஒழுக்கத்தை அது வலியுறுத்தும், அன்பினை வளர்க்கும், பகையை விரட்டும், பாவத்தில் வீழ்ந்த பலரையும் பரகதி சேர்க்கும் என்பது போன்ற கருத்துக்கள் காணப்படுகின்றன.

மேலும் இறைவனை வணங்கும் முறை, இறைவன் உலகத்தார் மீது கொண்ட அன்பு, மனிதர்களின் மறுபிறவி, இறைவனின் திருஅவதாரம், பக்தர்களின் இலக்கணம், நல்லோர் தொடர்பு, பகைவர்க்குப் பரிவு போன்றவை பல கண்ணிகளில் கூறப்பட்டுள்ளன.

இறைவழிபாடு - இறைவன் இயல்புகள், தன்மைகள்

நல்வாழ்வு பெறவேண்டுவோர் இறைவனுக்கு நிகராக வேறு எவ்வுருவத்தையும் கருதக்கூடாது. மறுவாழ்வை மனதில் கொண்டு செயல்படும்போது தோன்றும் துன்பங்கள் அனைத்தும் புல்லின்மேல் பெய்த பனிபோல் மறையும். உலக வாழ்வு ஒரு பூவைப்போன்றது. இறைவன் தம்மை வந்து அடைந்தவர் எவராயினும் தள்ளிவிடுவதில்லை. தாயைப் போலவும், தாயைவிடவும் பாதுகாப்புத்

தரக் கூடியவன் இறைவன். இறைவன் மீது கொண்டுள்ள பற்றுறுதி கப்பலைப் போன்றது. அதை வைத்துத்தான் துன்பக் கடலைக் கடக்கவேண்டும். நிலையான வாழ்வுபெற இறைவனின் பொன்னடியை போற்ற வேண்டும் என்ற கருத்துக்கள் இறைவழி பாட்டில் அமைகின்றன. எச்சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளும் கருத்துக் களாக இவைகளைக் கொள்ளவியலும்.

இறைவனின் அன்பு

பாவகதியினின்று பரகதி சேரவே தேவகுமாரன் சிலுவையில் மாண்டான். இதுவே இறைவனின் அன்பு என நெஞ்சுக்கு கூறுகிறார் ஆசிரியர். எனவேதான் திருவடிகளைப் போற்றி, தினம் அவனிடம் சேர வேண்டும் என்றார். இறைவனிடம் சேரும்போது ஒருவன் புதுப்பிறவி எடுக்கின்றான். அவனது பழைய வாழ்வு மாறுகிறது. கள்ளமற்ற வாழ்வே உலகில் மறுபிறவியாகும். அதுதவிர வேறு பிறவி ஏதும் கிடையாது. எனவே இறைவனின் திருவருளை நாடவேண்டும் என்கிறார் ஆசிரியர்.

பக்தனின் இலக்கணம்

பக்தன் இறைதொண்டனுக்குரிய இலக்கணங்களோடு வாழ வேண்டும் என நெஞ்சுக்கு ஆசிரியர் கூறுகிறார். ஆசையை அடக்க வேண்டும். தீயவழியில் செல்லக்கூடாது. செல்ல அஞ்சுவோரிடம் இறைவன் குடியிருப்பான். இறைவனின் திருச்செயல்கள் பற்றிய தர்க்கம் கூடாது. தூய செயல்களே வேண்டும். இறைவன் மீது உருக்கம் பெறவேண்டும். உயர்வான நற்குணங்கள் வேண்டும். எல்லாவற்றிலும் தேர்ந்துவிட்டேன் என்ற பெருமை கூடாது. நற்குறிக்கோளே வேண்டும் என்கிறார்.

பிறசமயத்தாக்கம்

கிறித்தவ போதகராயினும் பிற சமய அறிவும் நிரம்பப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. அத்துவிதம் (63) பற்றிக் குறிப்பிடு கிறார். சுயம்பு (10) என்னும் சொல்லைச் சுட்டுகிறார். முக்தி பற்றிக் கூறுகிறார். தேசிகர் வாழ்ந்த காலச் சூழலில் அவர்தம் சமயக் கொள்கையினர் கொண்டிருந்த கருத்துக்களுக்கேற்ப பிற சமயக் காழ்ப்பும் சில இடங்களில் வெளிப்படுகிறது. பிறசமயச் சொற் களாயினும் தமிழ்நாட்டின் மரபினையொட்டி அவற்றைத் தம் பாடல்களில் பயன்படுத்துகிறார். சச்சிதானந்தனாகத் (1) தம் இறைவனைக் காண்கிறார். மகாதேவன் (15) எனவும் குறிப்பிடு கிறார். இறைவழிபாட்டினை அர்ச்சனை என்கிறார்.

அணிநயம்

உவமைகளைப் பயன்படுத்தும் பொழுது எளிய உவமை களையே பயன்படுத்துகிறார். புதுப்பிறவி பெற்றாயானால் உன் துன்பங்கள் புல்லின்மேல் உள்ள பனிபோல நீங்கும் என்பதை,

''மனது மறுபிறவி - கிளியே
வசப்பட்டொளியடைந்தால்
உனது கலிகளெல்லாம் - கிளியே
ஓடுமே புற்பனிபோல்''

என்கிறார். மனித வாழ்வில் சேரும் சீரும் சிறப்பும், காலையில் மலரும் பூ, மாலையில் வாடிவிடுவதைப் போன்று அழிந்துவிடும் (40) என்பார். ஒரு குறிக்கோளை நோக்கிச் செல்லும்போது தயக்கமோ, கலக்கமோ கூடாது என்பதற்குக் கலப்பை பிடித்த உழவன் பின்னே திரும்பிப் பார்க்கலாமா? முன்னேதான் அவன் பார்வை செல்ல வேண்டும் என்கிறார். உருவகமாகவும் செய்திகளைக் கூறுகிறார். தேரில் தெய்வம் உலாவருவது இயல்பு. தேசிகர் உடம்பாகத் தேரை உருவகித்து அதில் தேவனமர்ந்து வரச் செய்ய வேண்டும் எனக் கூறுவதன் வழியாக இறைவன் உன் உள்ளத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருக்குமாறு நீ வாழ்வாய் எனக் காட்டுகிறார்.

''தேகமாந் தேரில் - கிளியே
தேவனமர்ந்தூர
தாக முனக்கு வேண்டும் - கிளியே
சந்தகம் வாழுவையே''

என்ற கண்ணி இக்கருத்தை உறுதிசெய்கிறது.

முடிவுரை

கிறித்தவ சமயத்தார் தம் இறைவனின் அருட்பெருக்கினை நினைந்து அவர்மீது பற்றுறுதி கொள்ளவும், அவரது திருமொழி களைப் போற்றிப் பின்பற்றவும் துணையாகுமாறு இந்நூல் படைக்கப் பட்டுள்ளது. அக்காலச்சூழலில் பிறசமயக் காழ்ப்பும் அவரிடம் இருந்துள்ளது போலத் தோன்றுகிறது. கற்றறிந்தவரையோ சமய அறிஞர்களையோ மனத்துட்கொள்ளாமல் எளிய மக்களை மனத்துட் கொண்டே இந்நூல் படைக்கப்பெற்றுள்ளது. எளிய நடையும் இனிய சந்தமும் பழகிய சொற்களும் உலகியல் உவமைகளும் இந்நூலுக்கு சிறப்புச் சேர்க்கின்றன. பிற சமயத்தவர் பெரிதாகப் போற்றும் கீதையைப் போலக் கிறித்தவர்களும் இதை ஒரு கீதையெனக் கருதிப் போற்றவேண்டும். பிறரும் அதை ஏற்க வேண்டும் என்ற கருத்துக்கு இந்நூல் இடமளிக்கிறது.

சைவக்குரவர், ஆழ்வார்தம் பாடல்களில் இயற்கை வர்ணனை உருவகங்கள்

ச. குமார்

அரசினர் ஆசிரியர் கல்வியியல் கல்லூரி

திருவனந்தபுரம்

இயற்கையின் சூழலில் மனம் மகிழ்வெய்தாத கவிஞனே இல்லை. திருத்தலங்கள் தோறும் சென்று இன்னிசைத் தீம்பாடல்கள் பாடி ஈசனைப் பரவிய சைவக்குரவர்களும் ஆழ்வார்களும் தலங்களின் வளங்களைச் சிறப்பாக உருவகம் வழி வர்ணித்துள்ளனர். இயற்கை வர்ணனையில் அமையும் உருவகம் ஆழ்வார்தம் பாடல்களில் மிகுதியாகவும் நாயன்மார்தம் பாடல்களில் அருகியும் காணப்படுகிறது. தலத்தை வர்ணிக்கும் நிலையிலும் அகப்பாட்டு மரபிலும் உருவகம் அமைந்துள்ளது.

தலவர்ணனை

தலவர்ணனையில் மருத நிலமே உருவகம் வாயிலாக வர்ணனை பெறுகின்றது. மருதநிலத் தலங்களான திருக்குடந்தை, திருவயிந்திபுரம், சீராமவிண்ணகர், திருக்கோவலூர், திருக்கண்ணபுரம் ஆகியன உருவகம் வாயிலாக வர்ணிக்கப்படுகின்றன.

'சாலி வேலி தண்வயல்' (6:59:1) என்று திருமழிசையாழ்வார் திருக்குடந்தையில் காணும் நெல்லினை வேலியாக உருவகம் செய்கின்றார். திருவயிந்திரபுரத்து இறைவனைப் போற்றிப்பாடும் திருமங்கையாழ்வார் அவ்வூரில் காணும் இயற்கைக் காட்சிகளையும் உருவகப்படுத்துகின்றார். வயல்வெளியில் காணும் தாமரை மலரினை அன்னம் துயிலும் படுக்கையாக உருவகிக்கின்றார்.

சீராம விண்ணகரில் உள்ள வயலில் மலர்ந்திருக்கும் அரவிந்தத்தை முகமாகவும் ஆம்பலை வாயாகவும் குவளை மலரைக் கண்ணாகவும் திருமங்கைமன்னன் உருவகம் செய்கின்றார். மேலும், திருக்கோவலூரில் பொய்கையில் மலர்ந்திருக்கும் தாமரையினைத் 'தீவிகை' (11:2:10:3:4) என விளக்காக உருவகிக்கின்றார்.

தலைவனாகிய இறைவனைப் பிரிந்து வாடும் தலைவி இரவுப் பொழுதைக் கண்டு வருந்துகின்றாள். தலைவி வருந்தி உரைக்கும் பாங்கில் இயற்கையை உருவகம் செய்கின்றாள். நம்மாழ்வார் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியை வருத்தும் நிலவினைப் பசுவாகவும், பிள்ளையாகவும் உருவகிப்பதோடு நிலவொளியினைப் பாலாக உருவகிக்கின்றார்.

மாலைப் பொழுதில் வாடைக்காற்று வீசுவதால் தலைவனை அடைய விரும்பும் தலைவி அதனால் வருந்துகின்றாள். தலைவி தான் வெறுக்கும் சந்திரன் சூரியனாகிய கணவனை இழந்த மேற்குத் திக்காகிய பெண் தன் இடைப்புறத்தில் வைத்துக் கொண்டு இருக்கிற இளம்பிறைச் சந்திரனாகிய பால்மாறாத வாயையுடைய இளங்குழந்தை என உருவகிக்கின்றாள்.

'பால்வாய்ப் பிறைப் பிள்ளை' *(18:35:1)*

என்ற உருவகத்தை மேற்கண்டவாறு உரைவிளக்கம் தந்துள்ளார் திரு. அண்ணங்கராச்சாரியர்.

'வால்வெண்ணில வுலகாரச் சுரக்கும் வெண்திங்களென்னும்
பால்வின் சுரவி சுரமுதிர் மாலை' *(18:73:1,2)*

என ஆகாயத்தில் நின்று மிகவும் வெளுத்த நிலாவாகிய பாலை உலகமெங்கும் நிறையும்படி சுரந்து சொரிகிற வெளுத்த சந்திரனாகிய பசுவினது சுரப்பு மிகப்பெற்ற மாலைப் பொழுது என மாலைப் பொழுதையும் நிலவையும் விரும்பாத தலைவி வருந்தி உரைக்கின்றாள். நம்மாழ்வார் நிலவொளிக்குப் பாலையும், நிலாவிற்குப் பசுவையும் பொருத்தமான உருவகமாகக் கொள்கின்றார்.

'மதியுகுத்த தூநிலா நீணெருப்பில்' *(23:1:86)* எனத் திருமங்கையாழ்வார் வருத்தும் நிலவொளிக்கு நெருப்பினை உருவகமாகச் சுட்டுகின்றார்.

சூரியன் மறைந்து இரவு தோன்றும் நிலைக்குச் சூரியனாகிய களிறு மறைய இரவாகிய யானைகளெல்லாம் தோன்றின என்று களிறாகப் பகலையும் இரவையும் உருவகிக்கின்றார் நம்மாழ்வார். மேலும், இருளினை ஊழியாகவும் எருதாகவும் உருவகம் செய்கின்றார். தலைவி, மாலைப்பொழுதின் வரவினை நினைத்து வருந்தும் போது மேற்றிசையின் செவ்வண்ணத்திற்குச் சூரியன் இறந்தொழிதற்கான போர்க்களமாகக் கொண்டு உருவகிக்கின்றார்.

இறைவன் இப்பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துள்ளான் என்பதைச் சுட்டத் திருமங்கையாழ்வார்,

'பவ்வநீ ருடையாடை யாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாய் பவனம்மெய்யா
செவ்வி மாதிரமெட்டும் தோளா வண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர்' *(11:6:6:3:1,2)*

என்று இறைவனுக்கு இவ்வுலகைச் சூழ்ந்துள்ள கடல்நீரானது உடுத்துக் கொள்ளத்தக்க உடையாகவும், பூமிப்பரப்பெல்லாம் திருவடியாகவும், காற்றுத் திருமேனியாகவும், அழகிய எட்டுத் திசைகளும் தோள்களாகவும், அண்டச்சுவர் முடியாகவும் விளங்குவதாகக் குறிப்பிடுகின்றார்.

பொய்கையாழ்வார், இயற்கையின் பூமி, கடல், கதிரவன் ஆகிய கூறுகளைக் கொண்டு இறைவனுக்கு விளக்கே ஏற்றிவிடுகின்றார்.

'வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக' *(14:1:1,2)*

எனப் பூமியை அகலாகவும் அந்தப் பூமியைச் சுற்றியிருக்கின்ற கடலை நெய்யாகவும் சூரியனை விளக்காகவும் உருவகிக்கின்றார்.

மாணிக்கவாசகர், சுண்ணம் இடிக்கும் தன்மையைப் பாடுகையில், சுண்ணம் இடிப்பதற்கு வையகத்தை உரலாகவும் மாமேரு மலையை உலக்கையாகவும் கொண்டு இயற்கையை உருவகம் செய்யும் பாங்கு நயமுடையது.

பொய்கையை அடுத்து வயல்கள், அவ்வயல்களில் மலர்ந்த தாமரைகளே பீடங்கள், இலைகளே குடைகள், செந்நெற்கதிர் களே வெண்சாமரைகள். இச்சூழலில் இள அன்னமாகிய அரசு வீற்றிருக்கும் காட்சியைச் சம்பந்தர்,

'செறியிதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட இளஅன்னம்
வீற்றிருக்கு மிழலையாமே' *(1:132:2:3,4)*

என உருவகம் வாயிலாக வர்ணிக்கின்றார். மேலும், இயற்கைக் காட்சியைத் திருமணக் காட்சியாகவும் இவர் உருவகித்துள்ளார்.

'தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்கு மலர்ப்பொரியட்ட
மணம்செய்யு மிழலையாமே' *(1:132:6:3,4)*

எனத் தாமரையை அக்கினிக் குண்டமாகவும், புன்கு மலர்களைப் பொரிகளாகவும், சுற்றத்தார் கூட்டமாகச் சங்குகளையும் உருவகித்துள்ளார்.

அப்பர் யானையை நெடிய மலையாக உருவகித்துள்ளார். 'பெருவரைக் குன்றம் பிளிற' (4:110:4:3). யானையின் கைக்குப் பனையை உவமையாகக் கூறுதல் மரபு. இங்கு அப்பர் பனை யாகவே யானையை உருவகித்துள்ளமையைக் காணலாம்.

'பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை' (6:22:10:3)

'மடலிடைப் பவளமும் முத்தமும்
தொத்துவண் புன்னை மாடே' (3:89:8:3)

எனப் புன்னை மரத்தின் மடலிடைத் தோன்றும் பழங்களும் அரும்புகளும் முறையே பவளமும் முத்துமாகச் சம்பந்தரால் உருவகிக்கப்பட்டுள்ளன.

சைவக்குரவர், ஆழ்வார் என்னும் இருவருமே இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு உருவகங்களைக் கையாளுகின்றனர். இருவர் பாடல்களிலும் தலவருணனை மற்றும் அகப்பாட்டு மரபு எனும் இருநிலைகளிலும் உருவகங்கள் இடம்பெறுகின்றன. இயற்கை வர்ணனையில் அமையும் உருவகம் ஆழ்வார்தம் பாடல்களிலும் மிகுதியாகவும் சைவக்குரவர்தம் பாடல்களில் அருகியும் காணப்படுகின்றது.

துதிச் சதகங்கள் - நோக்கும் போக்கும்

கோ. ஜெகநாதன்

யாதவர் கல்லூரி

மதுரை - 625 014

இறைவனையும் இறையடியார்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டும், பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டும் நூறுபாடல்களில் பாடப்பெறுவது துதிச்சதகங்கள் ஆகும்.

பக்தி இயக்க காலம்

காப்பிய காலத்திற்குப்பின் பக்தி இயக்க காலம் தோன்றியது. ''கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் சைவ சமயப் பெரியவர்களான நாயன்மார்களும் வைணவ சமயப் பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப்பாடல்கள் பாடி ஊர் ஊராகச் சென்று தத்தம் சமயங்களைப் பரப்பி வந்தார்கள். நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த, சமண சமயங்களை எதிர்த்து மக்களைத் திரட்டுவதற்காக இசைநயத்துடன் கூடிய பக்திப் பாடல்கள் பயன்பட்டன''[1]

இப்பக்தி இயக்கத்துக்குத் தொடக்கமாகவும் முன்னோடியாகவும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரும் திருமூலரும் இயற்றிய பாடல்கள் துணைபுரிந்தன. இச்சமய உணர்வின் உந்துதலினால் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா போன்ற பக்தி நூல்களும் புராணங்களும் காப்பியங்களும் தோன்றின. காப்பிய காலத்திற்குப் பின்னர் சமய மறுமலர்ச்சிக்காலம் தோன்றியது. அயல் நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகை தந்த கிறித்தவப் பாதிரிமார்களும் இசுலாமிய சமயச் சான்றோர்களும் தங்களின் சமயங்களைப் பரப்புவதற்காகத் 'தேம்பாவணி', 'சீறாப்புராணம்' போன்ற சமயநூல்களைப் பாடினார்கள். மதுரையில் நிலவிய நாயக்கர் ஆட்சியும் இதற்குத் தக்க பின்புலமாக அமைந்தது.

> ''நாயக்கமன்னர்கள் சமயநூல்களுக்கும் சமயக்கலைகளுக்கும் இலக்கியங்களுக்கும் மதிப்புத்தந்து வளர்த்து வந்த காரணத்தால் அவ்வப்போது சமயச் சான்றோர்கள் தோன்றிச் சிறந்த நூல்களை எழுதினார்கள். பழைய சமய நூல்களுக்கு விரிவான விளக்கங்கள் எழுதினார்கள். சமயத்தைக் காக்கும் மடங்கள் தோன்றின. தமிழும் வளர்ந்தது. புலவர்கள் தலபுராணங்களைப்பாடி அந்தந்த ஊர் மக்களை மகிழ்வித்தார்கள்''[2]

'இவ்வகையில் நாடெங்கும் அமைந்த திருத்தலங்களில் கோயில் கொண்டருளிய இறைவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அல்லது முன்னிலைப்படுத்திப் பலவகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. புரவலர்கள் ஆங்காங்குள்ள இறைவன் மீது சிற்றிலக்கியங்களைப் பாடப் புலவர்களை ஊக்குவித்தனர்'[3] பதினெண் சித்தர்களும் குமரகுருபரர், பட்டினத்தடிகள், அருணகிரிநாதர், தத்துவராயர், இராமலிங்க அடிகள் முதலானவர்களும் உலகியல் கடந்த ஞானப்பாடல்களைப் பாடினார்கள்.

இவர்களை அடியொற்றிக் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் சதகப்புலவர்கள் தோன்றித் தாம் விரும்பி வழிபடும் இறைவனைப் பாடித் துதிப்பதற்காகத் துதிச்சதகங்களைப் பாடினார்கள்.

துதிச்சதகங்கள் - சிறப்புக்கள்

துதிச் சதகங்களைப் பாடிய புலவர்கள் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் பாடல்களை இயற்ற விரும்பிய காரணத்தால் நாட்டுப்பாடல்களில் கண்ட பல செய்யுள் வடிவங்களைப் பயன் படுத்தி, எளிய பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். சிலருடைய பாடல்கள் மறைபொருள் கொண்டவை. இறைவனின் பெருமைகளைப் பாடிய சதகப் புலவர்கள், இறையருள் பெற்று உய்தி அடையவேண்டும் என்பதற்காக உணர்வு பொங்கப் பாடியுள்ளார்கள்.

துதிச்சதகங்கள் - தோற்றம்

கி.பி. 17,18-ஆம் நூற்றாண்டுகளில் இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பல நீதிச் சதகங்கள் தோன்றின. அச்சதகங்களில் இறைவன் பெருமைகள் விரித்துப் பாடப்பெற வில்லை. எனவே கி.பி.18-ஆம் நூற்றாண்டில் இறைவனின் பெருமைகளைப் பாடும் துதிச்சதகங்களும், கி.பி.19-ஆம் நூற்றாண்டில் சமயச் சார்புடைய இறையடியார்களைப் பாட்டுடைத்தலைவர்களாகக் கொண்ட துதிச்சதகங்களும் பாடப்பெற்றன. இந்து, இசுலாம், கிறித்தவ சமயம் சார்ந்த சதகங்கள் இவ்வகையில் உள்ளன.

துதிச்சதகங்கள் - வகை

துதிச்சதகங்களில் எல்லாச் சமயத்தவர்களும் தங்களின் சமயக் கருத்துக்களையும் இறைவன் பெருமைகளையும் எளிமையான மொழிநடையில் நூறு பாடல்களில் பாடியுள்ளார்கள்.

துதிச்சதகங்களை 1. இறைவனைப் பாடும் சதகங்கள், 2. அடியார்களைப் புகழும் சதகங்கள் என இருவகைப்படுத்தலாம். இறைவனைப் பாடும் சதகங்களை, அ. சைவ சமயச் சதகங்கள், ஆ. வைணவ சமயச் சதகங்கள் என்றும், அடியார்களைப் புகழும் சதகங்களை,

அ. இந்து சமய அடியார்களைப் புகழும் சதகங்கள், ஆ. இசுலாமிய சமய அடியார்களைப் போற்றும் சதகங்கள் என்றும் இருவகைப் படுத்தலாம்.



இறைவனைப் பாடும் சதகங்கள்

இச்சதகங்கள் இறைவனின் பெருமைகளைச் சுட்டி, இறையைப் பரவுதலைக் குறிக்கோளாகக் கொண்டவை. ஒரு தலத்தில் எழுந் தருளியள்ள இறைவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டவை. சைவ சமயச் சதகங்கள் சைவத்தின் முழுமுதற்கடவுளான சிவபெருமானையும், சிவபெருமானுடன் இணைந்த உமையம்மை, விநாயகப் பெருமான், முருகப்பெருமான் ஆகியோரையும் புகழ்ந்து பாடுகின்றன. சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நடராச சதகம், தில்லை நடராய சதகம், அருணாசல சதகம், இராமலிங்க சதகம், மழவைச் சிங்கார சதகம், சிவகுருசதகம் ஆகிய ஏழு சதகங்கள் தோன்றியுள்ளன. இந்த ஏழு சதகங்களிலும் பாடப்பெற்றுள்ள பாடுபொருள் ஒற்றுமையுடையதாகும். இவ்வாறே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உமையம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு தில்லைச் சிவகாம சுந்தரி சதகம், அவையாம்பிகை சதகம், கோமதியம்பிகை சதகம் ஆகிய மூன்று சதகங்கள் தோன்றியுள்ளன. வைணவ சமயச் சதகங்கள் வைணவத்தின் முழுமுதற்கடவுளான திருமாலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு போற்றுபவை. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் திருமாலின் புகழ் பரப்பும் வகையில் எம்பிரான் சதகம், வடவேங்கட நாராயண சதகம் ஆகிய இரு சதகங்கள் தோன்றியுள்ளன.

அடியார்களைப் புகழும் சதகங்கள்

இறைவனோடு வைத்து எண்ணத்தக்க சிறப்புடைய இறை யடியார்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு, அவர்

களையும் இறைவனாகப் போற்றித் துதி செய்யும் வகையில் புலவர்கள் இச்சதகங்களைப் பாடியுள்ளனர். இந்து சமய அடியாரைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற சதகமாக முத்துக்குமர ஞானியார் சதகம் ஒன்று மட்டுமே கிடைத்துள்ளது. இச்சதகம் நாஞ்சில் நாட்டிலுள்ள கோட்டாறு மற்றும் வடசேரியில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள முத்துக்குமர ஞானியார் என்ற தவமுனிவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற நூலாகும். இச்சதகம் ஆதிமூலப்பெருமாள் என்பவரால் எழுதப்பட்டு, ஞானியார் திருப்பணிக்கழக வெளியீடாக கி.பி.1947-இல் வெளிவந்ததாகும்.

இசுலாம் சமயத்தைத் தோற்றுவித்து, இறைவழியில் செல்வதற்கு நல்வழிகாட்டிய முகமது நபியைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு முகியித்தீன் சதகம், அகத்தீசர் சதகம், மதினமாநகர் தோத்திரச் சதகம் ஆகிய மூன்று சதகங்கள் தோன்றின. அவற்றுள் அகத்தீசர் சதகம் மத்தான் சாகிபுவால் பாடப்பெற்றதாகும். இச்சதகத்திலுள்ள நூறுபாடல்களும் பத்துப்பத்துப் பாடல்களாகப் பத்துத் தலைப்புக்களின் கீழ்ப் பாடப்பெற்றுள்ளன. குருவருள் நிலை, தவநிலை, துறவுநிலை, நியமநிலை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமாதிநிலை என்பன அத்தலைப்புக்களாகும். ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும்,

''மாகுணங்குடி வாழுமென்கைத் தீசனே
மவுன தேசிக நாதனே''

என்னும் மகுட அமைப்புக் காணப்படுகின்றது. நூல் முழுவதும் கருத்துச்செறிவும் தத்துவங்களும் நிறைந்துள்ளன. இரக்க உணர்வு தோன்றும் தன்மையில் ஆசிரியர் இச்சதகத்தைப் பாடியுள்ளார்.

முடிவுகள்

சமய உணர்வின் அடிப்படையில் துதிச்சதகங்கள் பல பாடப் பெற்றுள்ளன. துதிச்சதகங்கள் பாடப்பெற்ற காலத்தில் சைவ சமயமே மேலோங்கி இருந்தது. சைவ சமயத்தின் முழுமுதற்கடவுள் சிவபெருமான் ஆதலால் சிவபெருமானைப் பற்றிய துதிச்சதகங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இறையடியவர்களையும் இறைவனோடு வைத்து எண்ணத்தக்கச் சிறப்புடையவர்களாகக் கருதிப் புலவர்கள் சதகங்களைப் பாடியுள்ளனர்.

கி.பி. 18,19,20 ஆகிய மூன்று நூற்றாண்டுகளில் துதிச்சதகங்கள் வளர்ந்து சிறந்துள்ளன.

குறிப்புகள்

1. மு. வரதராஜன், தமிழ் இலக்கிய வரலாறு. ப. 99
2. மேலது., ப. 188
3. ந.வீ. செயராமன், சிற்றிலக்கியத் திறனாய்வு. ப. 112

திருஞானசம்பந்தரும் ரபீந்திரநாத் டாகுரும் - ஒரு பொதுப்பார்வை

சொ. முத்தையா

விசுவ பாரதி நடுவண் பல்கலைக்கழகம்
சாந்திநிகேதன் - 731 235

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்திப் பாடல்களுக்குத் தனியானதோர் இடமுண்டு. அவற்றுள் திருஞான சம்பந்தரின் பாடல்களுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. இதேபோன்று வங்க இலக்கிய வரலாற்றில் பக்திப் பாடல்களுக்குத் தனியானதோர் இடமுண்டு. அவற்றுள் ரபீந்திரநாத் டாகுர் பாடல்களுக்குச் சிறப்பானதோர் இடமுண்டு. சம்பந்தர் தமிழ்நாட்டில் தோன்ற, டாகுர் வங்காளத்தில் தோன்றினார். சம்பந்தர் தமிழைத் தாய்மொழி யாகக் கொண்டிருக்க, டாகுர் வங்கமொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். சம்பந்தர் சீகாழியில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் மகவாய்த் தோன்றினார். டாகுர் மேற்கு வங்காளத்தில் - ஜோரசங்கோ என்னும் இடத்தில் மகரிஷி தேவேந்திரநாத் டாகுருக்கும், தாயார் சாரதா தேவியாருக்கும் பிறந்த குழந்தைகளில் 14-ஆம் குழந்தையாகவும், 8-ஆம் மகனாகவும் பிறந்தார்.

இருவரும் ஒரே குலத்தில் - அந்தணர் குலத்தில் தோன்றிய வர்கள். சம்பந்தர் 16 வயதுவரை வாழ்ந்தவர். டாகுர் 80 வயது வரை வாழ்ந்தவர். சம்பந்தர் 16 வயதிலும், டாகுர் 22 வயதிலும் திருமணம் செய்து கொண்டவர்கள். இருவரும் கருவிலே திருவுடையவர்களாக விளங்கினார்கள். இருவரும் இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். சம்பந்தர் மூன்று வயதிலேயே பாடத் தொடங்கினார். முதலில் பாடிய பதிகம் ''தோடுடைய செவியன்'' என்பதாகும். டாகுர் பன்னிரண்டு வயதில் பாடத் தொடங்கினார் 'அபிலாஷை' (விருப்பம்) என்பது இளமையில் அவர் பாடிய பாடல்களில் ஒன்று. அப்பாடல் பத்திரிகையில் 1873-ஆம் ஆண்டு வெளிவந்தது. அது மட்டுமல்ல 'பிருதிவிராஜன் தோல்வி' என்ற பெயரில் ஒரு நாடகத்தையும் இளமையில் எழுதினார். இருவர்தம் படைப்புகளுக்கும் எழுதப் பெற்ற உரைகளின் படையெடுப்புகள் ஏராளம். சம்பந்தர் கவிதை

களைப் படைத்தார். டாகுரோ கவிதைகள் மட்டுமன்றி நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், உரைநடைகள், தத்துவக் கட்டுரைகள், வரலாற்றுக் கட்டுரைகள், பயண இலக்கியங்கள், புதுக்கவிதைகள், கடித இலக்கியங்கள், ஆய்வுக் கட்டுரைகள், நகைச்சுவைச் செய்திகள், சமயக் கட்டுரைகள், சமுதாயச் சிந்தனை பற்றிய கட்டுரைகள் ஆகிய பல துறைகளிலும் தன் முத்திரையைப் பதித்தார். இவை போதா தென்று தனது 70-வது வயதில் முழுக் கவனத்தையும் செலவிட்டு ஓவியரும் ஆனார். அதிலும் தனிப்பாணி ஏற்படுத்திக் கொண்டு புகழ் பெற்றார்.

இருவரும் தத்தம் தாய்மொழிப் பற்றில் திளைத்தவர்கள். இருவரும் இறைவனை ஏற்றிப் போற்றுவதில் ஓரணியில் நின்றவர்கள். எனினும் அந்த இறைவனைச் சுட்டிக் காட்டுவதில் வேறுபட்டு நின்றவர்கள். கவுந்தி அடிகள் கூறியது போன்று (சிலம்பு, 10:197-199) சிவபிரானைத் தவிர, பிற தெய்வங்களை என் நா போற்றாது, பாடாது, பாராட்டாது என்ற முறையில் சம்பந்தர் பேசுகின்றார் (262,4,9). டாகுரோ குறிப்பிட்டு ஒரு இறைவனைச் சுட்டாமல் 'அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்' விளங்கும் உருவமில்லா இறைவனையே சுட்டிக் காட்டுவர். காரணம் அவர் பிரம்ம சமாஜத்தைச் சார்ந்தவர்.

உலக இன்பங்களை நுகர்ந்தவாறே இறைவனிடத்தில் பக்தி செலுத்தலாம் என்ற உண்மையை இருவர் பாடல்களும் எடுத்துரைக் கின்றன. இருவரும் அழகை ஆராதித்தவர்கள். அந்த அழகிலும் இறைவனைக் கண்டு ஏற்றிப் போற்றியவர்கள். இருவரும் நாயகன் - நாயகி பாவத்தைத் தம் பாடல்களில் கையாண்டவர்கள். தமிழ்நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு வித்திட்டவர் சம்பந்தர். இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு - ஏன் உலகத்தின் ஒருமைப்பாட்டுக்கே பாடுபட்டவர் டாகுர். சம்பந்தர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார். 13 ஆண்டுகளில் சம்பந்தர் 6 முறைகள் தம் ஊரிலிருந்து புறப்பட்டு ஏறத்தாழ 220 திருப்பதிகளுக்குச் சென்று பதிகங்கள் பாடியதாக முத்திரு முறைகளிலிருந்து அறிய முடிகிறது. (ஔவை. துரைச்சாமி, சைவ இலக்கியவரலாறு, ப.64). டாகுரும் போக்குவரத்து வசதியற்ற அக்காலத்தில் இந்திய நாடு மட்டுமின்றி 13 முறைகள் வெளிநாடுகள் சென்று வந்தார் என்பதை அவர் வாழ்க்கை வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

சமண, பௌத்தர் பற்றிய சம்பந்தர் குறிப்புகளில் (72,10; 197.10; 234.10 289.10) மிகுந்த காழ்ப்புணர்ச்சி காணப்படுகின்றன. பெரும்பான்மையும் பிள்ளையார் எல்லாப் பதிகங்களிலும் 10-ஆம் பாட்டில் சமண, பௌத்தர்களை இழித்துக் கூறுகிறார். ஆயின்

டாகுர் எச்சமயத்தினரையும் போற்றுபவராகவே காணப்படுகிறார். எம்மதமும் சம்மதம் என்பதே அவர் கொள்கை.

சாதி வேறுபாடு, தீண்டாமை முதலிய மூட நம்பிக்கைகளை அறவே வெறுத்தார் சம்பந்தர். அவர் பிராமணர் குலத்தைச் சார்ந்தவராக இருந்தும், தம் பாடல்களுக்கு யாழ் இசைப்பதற்காகத் தீண்டாக் குலத்தைச் சார்ந்த திருநீலகண்டர் என்பவரைத் தம்முடன் தலங்களுக்கு அழைத்துச் சென்றதாக அறிகிறோம். சம்பந்தரைப் போலவே டாகுரும் சாதி வேறுபாடு, தீண்டாமை முதலிய மூடநம்பிக்கைகளை முற்றிலும் வெறுத்தார்.

சைவ சமயத்தின் அருமை பெருமைகளை விளக்கப் பல அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டினார் சம்பந்தர். *(44, 54, 154, 173, 183, 202, 264, 280, 309, 371, 429)*. பிரம்ம சமாஜத்தின் அருமை பெருமைகளை விளக்க டாகுர் ஏதும் அற்புதங்கள் நிகழ்த்தியதாகத் தெரியவில்லை.

சம்பந்தர் பாடல்களைக் குறிப்பிட்ட ஒரு பண்ணில் பாடியிருக்கிறார் என்பதும், அப்பாடல்கள் எப்போதும் அப்பணிலேயே பாடப்படவேண்டும் என்பதும் தமிழ் (ச்சைவ) மரபு. தேவாரங்களைப் பொறுத்தவரை அவைகளுடைய சொற்களும், சொற்கோவைகளும் அவைகளுக்கான பண்புகளும் மிக முக்கியமானவை. அவற்றின் சொற்களையோ, பண்களையோ மாற்றுவது கூடாது என்ற நிலையிலேயே இன்றும் பேணப்பட்டு வருகின்றன. இதே போன்று டாகுரால் இயற்றப்பட்ட பாடல்கள் அவராலேயே பண் அமைக்கப்பட்டு அப்பாடல்கள் எப்போதும் அப்பண்ணிலேயே பாடப்படவேண்டும் என்பது வங்க (ரபீந்திர) சங்கீத மரபு, டாகுரால் இயற்றப்பட்ட பாடல்களின் சொற்களையோ பண்களையோ மாற்றுவது கூடாது என்ற நிலையிலேயே இன்றும் பேணப்பட்டு வருகின்றன.

வடமொழியும் அறிந்தவர் ஞானசம்பந்தர். ஆயின் அம்மொழியை அவர் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. தமிழிலேயே தன் கருத்துக்களைப் பரிமாறியவர். டாகுரோ வங்கமொழி தவிர வேறு பல மொழிகளிலும் வல்லவராகத் திகழ்ந்தார். அதனால் அவரால் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழியாக்கம் செய்ய முடிந்தது. உலகப் புகழ்பெற்ற நோபல் பரிசும் பெற முடிந்தது.

சம்பந்தர் திருக்கோலக்கா இறைவனிடமிருந்து பொற்றாளம் (23) பெற்றார். திருவீழிமிழலையில் படிக்காசும் (92), முத்துப்பந்தரும்

(331) பெற்றார். டாகுரும் தன் வாழ்நாளில் நோபல்பரிசு உட்படப் பல்வேறு பரிசுகளும் பட்டங்களும் பெற்றார்.

'பிள்ளை பாதி; புராணம் பாதி' என்று சொல்லும் அளவுக்குச் சம்பந்தரின் வரலாற்றை எடுத்தோதுகிறது பெரியபுராணம். நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், சம்பந்தர், தாயுமானவர், குமரகுருபர அடிகள் போன்றோரின் படைப்புகளால் சம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. விரிவான, விளக்கமான அளவில் சம்பந்தரின் வாழ்வைப் பற்றி அறிய முடியவில்லை. ஆயின் டாகுர் 'செலேர் பேலா' (இளமைக் காலம்) என்ற தலைப்பில் நகைச்சுவையும் வேடிக்கையும் கலந்த ஒரு நூலே எழுதியுள்ளார். அவர்தம் படைப்புகள் பலவற்றிலும் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல அவர் வரலாற்றை விரிவாகவும் பலர் எழுதியுள்ளனர். அவர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நாள், திங்கள், ஆண்டு என்ற கணக்கில் ஒவ்வொன்றாகத் தொகுத்து எழுதிக் கொண்டும் வருகின்றனர். இந்த வகையில் டாகுரின் வாழ்க்கை வரலாறு மிகத் தெளிவாக அறியக்கூடிய வகையில் விரிவாகவும் விளக்கமாகவும் நூல்கள் அமைந்து காணப்படுகின்றன.

சமண, பௌத்த மதங்கள் அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் வாழ்ந்தவர் சம்பந்தர். இந்திய நாடே ஆங்கில ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்தில் வாழ்ந்தவர் டாகுர்.

தமிழ் யாப்பு வரலாற்றிலும் சில புதுமைகளைச் செய்தவர் சம்பந்தர். இவர் பாவியற்றுவதில் முழு உரிமை பெற்றவராய் விருத்தப்பாவில் பல புதிய வகைகளைக் கண்டுள்ளார். இவரைத் தொடர்ந்த சமயக் குரவர்களும் பழைய பாவகைகளைக் கைவிட்டுப் புதிய விருத்தங்களையே தேர்ந்தெடுத்தனர். இதேபோன்று டாகுரும் யாப்பு வரலாற்றில் மாறுபாடு செய்தார். நாட்டுப் பறப்பாடல் களின் வடிவங்களையும், மெட்டுக்களையும் கிரகித்துக் கொண்டு பல புதிய கவிதைகளைப் புனைந்தார்.

''நாளும் இன்னிசையால் புகழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' என்று போற்றப்பட்டவர் சம்பந்தர். 'ரபீந்திர சங்கீத்' என்னும் இசையால் இசை பரப்பியவர் டாகுர். முதல் திருமுறை 8 பண்களிலும், இரண்டாம் திருமுறை 6 பண்களிலும், மூன்றாம் திருமுறை 9 பண்களிலும் பாடப்பட்டுள்ளன. ஆக, சம்பந்தர் 23 பண்களில் பாடியுள்ளார். அவற்றுள், 'இந்தளம்' என்ற பண்ணில்தான் 39 பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. டாகுர் ஏறத்தாழ 2500 இசைப் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களுக்கு 'ரபீந்திர சங்கீத்'

என்று பெயர். வட இந்திய இசைகளான இந்துஸ்தான், கருநாடக சங்கீதம், தேஸஜ் போன்றவற்றையும், ஐரோப்பிய இசையையும் கலந்து புதுமையான ராகங்களை உருவாக்கிப் பாடப்பட்டதே 'ரபீந்திர சங்கீத்' என்பது. டாகுர் இயற்றிய இசைப்பாடல்களில் பெரும்பான்மையான பாடல்கள் துருபதி இசைகளை அடிப்படை யாகக் கொண்டு புதிய புதிய ராகங்களை உருவாக்கிப் பாடப் பட்டவை. இவருடைய கீதிப் பாடல்களை வழிபாட்டுப் பாடல்கள் (பஜாகீதி), காதற்பாடல்கள் (பிரேம் கீதி), இயற்கைப் பாடல்கள் (பிரகிருதி கீதி), தேசபக்திப் பாடல்கள் (தேஸ்பிரேம் கீதி) எனப் பலவகைகளாகப் பிரிக்கலாம். வழிபாட்டுப் பாடல்கள் 'துருபதி', 'பவுல்' இசைகளை அடிப்படையாகக் கொண்டவை. காதற் பாடல் களும், தேசபக்திப் பாடல்களுள் சிலவும் 'டப்பா' எனப்படும் ஒருவகை இசைவகையிலிருந்து பெறப்பட்டவை. நமது இந்திய நாட்டின் தேசிய கீதம் 'துருபதி' இசைவகையை அடிப்படையாகக் கொண்டு குழுவாக நின்று பாடும் இசைவகையில் அமைக்கப் பட்டது. இவருடைய கீதிப் பாடல்கள் அனைத்துமே பாடுவதற்கும், ஆடுவதற்கும் ஏற்ற வகையில் அமைந்து காணப்படுகின்றன.

ஒவ்வொரு நாயன்மாரும் தமிழ்ச் சைவத்திற்குத் தங்களுடைய முக்கியமான பங்கை அளித்திருக்கிறார்கள் என்றாலும் சம்பந்தர் தமிழ்ச் சைவத்தை உருவாக்கவும், வளர்க்கவும், மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவும் செய்த பணிகள் அவ்வகையிலும் ஒப்புமை கூற முடியாத அளவுக்குச் சிறப்பானவை. இதே போன்று பிரம்மசமாஜ் சமயத்திற்கு டாகுரின் பாட்டனாரான துவாரகநாத் டாகுரும், தந்தையாரான மகரிஷி தேவேந்திரநாத் டாகுரும் தங்களுடைய முக்கியமான பங்கை அளித்திருக்கிறார்கள் என்றாலும், டாகுர் பிரம்ம சமாஜத்தை மேலும் உருவாக்கவும், வளர்க்கவும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவும் செய்த பணிகள் எவ்வகை யிலும் ஒப்புமை கூறமுடியாத அளவுக்குச் சிறப்பானவை.

இவ்வாறு ஒருசில ஒற்றுமை வேற்றுமைக் கூறுகள் இருவரிடையேயும் பொதுவாகக் காணப்படுகின்றன. இவர்கள் இருவரையும் ஒட்டியும் உறழ்ந்தும் நோக்குதற்கு விரிவாக ஆராய்வதற்கு இன்னும் இடம் இருக்கிறது.

திருவாசகமும் குட்டித் திருவாசகமும்

அ. நலங்கிள்ளி

பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17

பன்னிரு திருமுறைகளுள் எட்டாந்திருமுறையாகத் திகழ்வது மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம். இத்திருவாசகப் பாடல்கள் செறிவான இறைநெறிக் கருத்துக்களையும், தத்துவங்களையும் உள்ளடக்கிச் சொல்லழகும், பொருளழகும் பொருந்துமாறு அருளப் பெற்றவை. மாணிக்கவாசகரின் பெருமையும், திருவாசகப் பெருமையும் அனைவரும் அறிந்தவை. பதினேழாம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியன் இயற்றிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி என்னும் நூல், திருவாசகத்துடன் ஒப்பிடப்பட்டுக் 'குட்டித் திருவாசகம்' என்ற பெயரில் வழங்கப்பெறுவது மரபாக உள்ளது. திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியைத் திருவாசகத்துடன் இணைத்துக் குட்டித் திருவாசகம் எனக் கூறுவது எவ்வகையிற் பொருந்தும் என்ற சிந்தனையின் அடிப்படையே இக்கட்டுரையின் நோக்கம்.

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி - ஓர் அறிமுகம்

தென்பாண்டிநாட்டில் பதினேழாம் நூற்றாண்டில், ஆட்சி புரிந்த பாண்டியமன்னர் அதிவீரராமன். இவர் விசயநகர மன்னர் களின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டு ஆட்சி செலுத்தியவர். இவருக்குக் குலசேகரன், வீரமாறன், அழகன், சீவல்லபன், சீவலவேள் என வேறு பெயர்களும் உள்ளன. இவருடைய தந்தை நெல்வேலிமாறன். தமிழ்ப் புலவர்களைப் போற்றியவர். தந்தையைப் போலவே அதிவீரராமரும் தமிழ்ப் புலவர்களைப் புரந்து செந்தமிழைச் சிறக்கக் கற்றுச் சிறந்த புலமையும் வடமொழிப் புலமையும் பெற்றிருந்தார்.

அதிவீரராமர், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி மட்டுமின்றித் திருக்கருவைக் கலித்துறையந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி, நைடதம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், காசிக்காண்டம், வெற்றிவேற்கை ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். சிறந்த சிவபக்தராகவும் சிவத்தொண்டராகவும் விளங்கியவர்.

திருநெல்வேலி மாவட்டத்தில், சங்கரன் கோவிலுக்கருகில் உள்ள 'கரிவலம் வந்த நல்லூர்' என்ற ஊரே 'கருவை' என மருவியது. அவ்வூரில் கோயில் கொண்டு, களாமரத்து நிழலில்

வீற்றிருக்கும் சிவபெருமான் மீது அளப்பரிய அன்பு பூண்டு, அதிவீரராமர் பாடிய நூலே திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி.

அந்தாதி அமைப்பில், முதற்பத்து, இரண்டாம் பத்து எனப் பத்துப்பத்துப் பாடல்களால் அமையப் பெற்றதால் இந்நூல் பதிற்றுப்பத்தந்தாதி எனப் பெயர் பெற்றது. காப்புச் செய்யுள் நீங்கலாக நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. விருத்தப்பாக்களால் ஆனவை. 'சீரார் கமலச் சேவடி' எனத் தொடங்கிப் 'போற்றி நின்சீர்கள் போற்றியே' என இந்நூல் மண்டலித்து முடிகின்றது.

அகத்தியரிடத்தும், சைவ சமயக் குரவர் நால்வரிடத்தும் ஆரா அன்பினராக அதிவீரராமர் இருந்தமையை இந்நூற் பாடல்கள் விளக்குகின்றன. அவர்கள் பாடல்களில் பயின்று வந்துள்ள தொடர்களையும், கருத்துக்களையும் நூலின் பல இடங்களில் இவர் ஆண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நூலின் இடையிடையே புராணக் கருத்துக்கள் பல இடம்பெற்றுள்ளன. இவர் ஆழ்வார் பாடல்களையும், பிற நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்பதும் இவருடைய பாடல்களில் புலனாகின்றன.

திருவாசக ஒப்புமைக் கூறுகள்

திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியில், திருவாசகத்தின் ஒற்றுமைக் கூறுகள் பல உள. அவற்றுள் சில சான்றுகள்

''சிந்தனை உனக்குத் தந்தேன்; திருவருள் எனக்குத் தந்தாய்
வந்தனை உனக்குத் தந்தேன்; மலரடி எனக்குத் தந்தாய்
பைந்துணர் உனக்குத் தந்தேன்; பரகதி எனக்குத் தந்தாய்''

(63)

என வரும் அந்தாதி அடிகள்,

''சிந்தனை நின் தனக்காக்கி, நாயினேன் தன்
கண்ணினை நின் திருப்பாதப் போதுக்காக்கி''

(திருச்சதகம் - *26)*

''தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா யார் கொலோ சதுரர்''

(கோயில் திருப்பதிகம் - *10)*

என்ற வாசக அடிகளோடு ஒப்பிடத்தக்கன.

''நடித்தேன் பொய்க்கூடு எடுத்து, அவமே
நன்னாள் கழிய; இந்நாளில்
படித்தேன் உனது திருநாமம்'' *(5)*

என்ற அந்தாதி அடிகள்,

''நாடகத் தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்''
(திருச்சதகம் - 11)

என்ற வாசக அடிகளோடு ஒப்பிடத்தக்கன.

''எவன் முதலிடை ஈறின்றி எஞ்ஞான்றும்
ஈறிலா மறை முடி யிருப்பான்,
அவன் எனைப் புரக்கத் திருக்களா நிழல்
அமர்ந்தருள் புரிந்த காரணனே; (16)

என்பன அந்தாதி அடிகள்.

''முந்திய முதல் நடு இறுதியுமானாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்''
(திருப்பள்ளியெழுச்சி - 8)

என்பன வாசக அடிகள்.

''உறைவாய் நன்மனத்தன்பர்; உடல் தோறும் உயிராகி
நிறைவாய் எவ்வுலகனைத்தும் நீக்கமிலாது உணர்ந் தோர்க்கு;
மறைவாய் உய்த் துணரார்க்கு'' (50)

என்பன அந்தாதி அடிகள்.

''கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப் பறுக்கும் எங்கள் பெருமான்''
(சிவபுராணம் - 46-48)

''புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க''
(சிவபுராணம் - 8)

என்பன வாசக அடிகள்.

திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியில், பத்தாம் பத்துப் பாடல்கள் போற்றிப் பாடல்களாக அமைந்துள்ளன.

''என்
பழைய தீவினைப் பகை தொலைத்திடும்
பாவ நாசனே போற்றி'' (92)

''விமல போற்றி!... அமல போற்றி
அறிவு தந்தருள் அறிவ போற்றி'' (94)

''எந்தை ஆயினாய்; குரவன் ஆயினாய்
இறைவன் ஆயினாய் போற்றி!
வீடும் ஆயினாய்; பரமும் ஆயினாய் போற்றி'' (95)

என இவை போன்று வரும் பெரும்பான்மையான அந்தாதி அடிகள் திருவாசகத்தில் போற்றித் திருவகவலிலும், திருச்சதகத்தில் காருண்யத்து இரங்கல் பாடல்களிலும் ஒத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கன.

''பத்தனாய்ப் பாடமாட்டேன்; பரமனே பரமயோகி!
எத்தினாற் பக்தி செய்கேன்? என்னை நீ இகழவேண்டா''
(4:23:1)

என்ற அப்பரின் பாடலோடும்,

''போதெல்லாம் போதுகொண்டு உன்
பொன்னடி புனைய மாட்டேன்;
தீதிலா மொழிகள் கொண்டு உன்
திருக் குணம் செப்பமாட் டேன்'' (திருமாலை - 26)

என்ற தொண்டரடிப் பொடியாழ்வாரின் பாடலோடும் ஒப்பு நோக்குதற்குரியது.

'குட்டித் திருவாசகம்' - பெயர் பொருந்துமா?

அதிவீரராம பாண்டியரின் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, அந்தாதி இலக்கியவகையில் அமைந்துள்ள நூல்களுள் குறிப்பிடத் தக்க ஒன்றாகத் திகழ்கின்றது. செய்யுட்கள் இனிமையும், எளிமையும் வாய்ந்தவை. ஆற்றொழுக்கான நடையைக் கொண்டு பயில்வோருக்கு இன்பம் பயப்பவை. சமயக் கருத்துக்களும், இறையியல் கருத்துக் களும் ஊடே மிடைந்திருப்பவை. எனினும் மணிவாசகரின் திருவாசகத் துடன் இணைத்து இந்நூலைக் குட்டித் திருவாசகம் என்று கூறிவரும் வழக்கு பொருந்துமா? என்பது சிந்தனைக்குரியது.

நூலை இயற்றிய ஆசிரியர் 'கருவைப் பதிற்றுப்பத்தந்தாதிச் சொல் அலங்கல்' என்றுதான் தம்முடைய நூலைக் குறிப்பிடுகின்றார். தம்முடைய நூல் திருவாசகத்தைப் போன்றது என்றோ, திருவாசகத் திற்கு அடுத்த சிறப்பினை உடையது என்றோ யாண்டும் கூறவில்லை, பின்னர் வந்தவர்கள் எவரோ 'குட்டித் திருவாசகம்' என்றுகூற அதுவே வழக்காகிவிட்டது.

மேலே குறிப்பிட்டாங்கு, இவ்வந்தாதிப் பாடல்களில் பல திருவாசகப் பாடல்களுடன் ஒப்பிடத்தக்கன என்பதனால் மட்டுமே இந்நூலைக் குட்டித்திருவாசகம் என்று கூறுவது பொருந்தாது. திருவாசகமன்றியும் தேவாரப் பாடல்கள், பிரபந்தப் பாடல்கள், அருணகிரியார் பாடல்கள் முதலியவற்றுடனும் இந்நூலின் பாடல்கள் ஒப்பிடத்தக்கனவாய் உள்ளன.

மாணிக்கவாசகர், நூல் அமைப்புக்காக, இறை அனுபவங்களைப் பாகுபடுத்திப் பாடவில்லை. தமது உள்ளத்தை அவர் ஓவாது உருக்கினார். உருக்கிய ஒவ்வொரு தடவையும் சொற்கள் ஓவியங்களாக உருவெடுத்தன. திருவாசகத்தில் திகழ்கின்ற பரம்பொருள் விளக்கம்

அருள்நாட்டமுடையவர்களுக்கு ஆனந்தக் களிப்பை ஏற்படுத்தும். திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திட்டமிட்ட நூலமைப்புடன் இயற்றப்பட்டது. திருவாசகத்தில் இயற்கையாக அமைந்துள்ள அளவுக்கு, அருள்விளக்கமும், தத்துவச் செறிவும், ஆழங்காற் படுதலும், இறையனுபவமும், உணர்ச்சி வேகமும் இவ்வந்தாதிப் பாடல்களில் இயற்கையாக அமையவில்லை என்பது உணரத்தக்கது.

மாணிக்கவாசகர் தேவார மூவருக்கு அடுத்தநிலையில் தமிழகத் திருத்தலங்கள் பலவற்றைப் பாடியுள்ளார். அதிவீரராமர் கருவை நகரில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானை மட்டுமே ஈடுபாடு கொண்டு பாடியுள்ளார்.

திருவாசகம், சதகம், பதிகம், திருப்பள்ளியெழுச்சி, தசாங்கம் முதலான இலக்கிய வகைகளைத் தன்னகத்தே கொண்டது. மேலும் அம்மானை, பொற்சுண்ணம், திருவுந்தியார், ஊசல், திருப்பூவல்லி, சாழல் முதலிய மகளிர் விளையாட்டுக்களை முன்வைத்து இறையியற் கருத்துக்களை மணிவாசகர் தெளிவுபடுத்தியுள்ளார். பொற்சுண்ணம், தோத்தும்பி, குயிற்பத்து, தெள்ளேணம் முதலான உத்திகளைப் பயன்படுத்தித் தம் அருளனுபவங்களை வெளிப்படுத்தியுள்ளார். அகவல், வெண்பா, கலித்தாழிசை, கொச்சகக் கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் முதலான யாப்புகள் வாசகத்தில் பயின்று வந்துள்ளன. தேவார மூவர் பதிகங்களில் எண்சீர் கொண்ட பாடல்கள் உள்ளன. ஆனால் மாணிக்கவாசகர் பன்னிரு சீர் வரை பயின்று வரும் பாடல்களை அருளியுள்ளார். திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதிப் பாடல்கள், விருத்தப்பாக்களில் அமைந்து ஒரே போக்கினவாகச் செல்கின்றன. வாசகத்தைப் போன்று இலக்கிய வகைகளோ உத்திகளோ இவ்வந்தாதிப் பாடல்களில் இடம்பெற வாய்ப்பில்லை.

பொதுவாக, ஒன்றற்குரிய பெருமையும், புகழும் அதனைச் சார்ந்தே அமையவேண்டும். மற்றொன்றைச் சார்த்திப் பெருமையும் புகழும் தேடித்தர முயல்வது சிறப்புடையதன்று. அற்புதத் திருவந்தாதி, திருக்கயிலாய ஞானஉலா, கோவில் நான்மணிமாலை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை முதலான நூல்கள் அதனதன் அளவில் பெருமையும் புகழும் வாய்ந்தவை. மற்றொன்றைச் சார்த்தி அவற்றிற்குப் பெருமை சேர்க்கவேண்டிய நிலையில் அந்நூல்களும் இல்லை. திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும் இத்தகைய பெருமை உடையதே. இதற்குக் குட்டித் திருவாசகம் என மேலும் ஒரு பெயரிட்டுப் பெருமை சேர்ப்பதாக நினைப்பது ஏற்புடையதன்று. எனவே மேலே குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையில் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியைக் குட்டித்திருவாசகம் என்று பெயரிட்டு அழைப்பது பொருத்தமுடையதன்று.

திட்டூர் தேசிகரின் சௌமியத்துறையும் திருவாசகமும் - ஓர் ஒப்பாய்வு

ஏ. சுகுணா சந்திர காந்தாமணி

மகளிர் கிறித்தவக் கல்லூரி
சென்னை - 600 006

'சொல் புதிது, பொருள் புதிது' எனக் கூறிய பாரதியின் காலத்திலேயே தமிழ் இலக்கிய நெறியில் புதிய மரபினைப் புகுத்திய புலவர் திட்டூர் தேசிகர் திறம் ஆய்விற்கும், போற்றற்கும் உரியது.

குமரி மாவட்டத்தில் உள்ள திட்டு விளை என அழைக்கப் படும் திட்டூரைச் சேர்ந்த ஆசிரியர் கி.பி.1858-ஆம் ஆண்டில் சைவக் குடும்பத்தில் பிறந்தார். ''ஈசுவர பாக்கியம்'' என்பது அவரது இயற்பெயர். 2-ஆம் வயதிலேயே தந்தையை இழந்தார். தமிழ்க் கல்வியை ஐந்தாம் வயதில் தொடங்கினார். பிறகு கிறித்தவ சமயத்தில் சேர்ந்து ஈசாக்கு என்று அழைக்கப் பெற்றார். தேசிகர் என்னும் சிறப்புப் பெயரும் பெற்றார்.

நூல்கள்

விசுவாச நாவலர் என அழைக்கப்படும் தேசிகர் இயற்றிய நூல்கள் 175 ஆகும். ஆனால் இவருடைய நூல்கள் சுமார் முன்னூற்றுக்கு அதிகமானவைகளாகும் என்பர்.[1] 36 மருத்துவ நூல்களும் இதில் அடங்கும். தமிழ் மொழி சமயங்களில் வாழ்கின்றது. ''தமிழால் சமயங்கள் வளர்ந்தன. சமயங்களால் தமிழ் வளர்ந்தது''[2] என்னும் கருத்துக்கு மறுப்புரைக்க இயலாது.

சௌமியத்துறை

விளக்கம் - சௌமியம் - சாந்தம் துறை - வழி. ஆகவே மனோ சாந்தத்தையடைந்து கொள்ளும் வழியைக் கூறும் நூல் என்பது கருத்து. சாந்தம் என்பதின் விளக்கம் ''சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக ராஜ்யம் அவர்களுடையது''[3]. ''உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக''[4] என்னும் திறைமறைப் பகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். விண்ணுலக வாழ்வினை அடைவதற்குரிய வகையில் மனதில் அமைதி நிலவ வேண்டு மென்பதை வலியுறுத்தி இந்நூலினைப் பாடியுள்ளார் எனலாம். ''அமைதித்துறை'' எனப் பொருள்படும் இந்நூல் 105 தலைப்புகளைக்

கொண்டது. 1902 பாடல்கள் உள்ளன. இவ்வரிய நூலுக்குப் பேராசிரியர் ''இன்னாசி'' அவர்கள் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளார்கள்.

திருவாசகமும் சௌமியத்துறையும்

திட்டூர்த் தேசிகரின் சௌமியத் துறையில் இடம்பெற்றுள்ள பாடல்கள் பல மாணிக்கவாசகரின் திருவாசகப் பாடல்களைப் பின்பற்றிப் பாடப்பட்டுள்ளன. இருபெருங் கவிஞர்களும் இருவேறு சமய நெறிகளைப் பாடினாலும் ஒன்றோடொன்றினை ஒப்பிட்டுப் பார்ப்பது இருபெரும் நெறிகளையும் புரிந்து கொள்வதற்கும், பாராட்டுவதற்கும் வழி வகுக்கின்றது. சைவராகப் பிறந்து, கிறித்தவராக வாழ்ந்து சிறந்த தேசிகர், மணிவாசகரின் மாணிக்கக் கருத்துக்களை என்றென்றும் போற்றிப் புகழ்வதற்குத் தயங்கவில்லை. இதனை யுணர்ந்தே பேராசிரியர் வி.ப.கா. சுந்தரம் அவர்கள் பின்வருமாறு பாடி மகிழ்ந்தார்.

''அருள்நல நூலென் பென் நான்
சௌமியத் தக்கதாம் நூலை
இருள்தரும் நூலெல் லாமே
இதற்கென்றும் ஈடா கும்மோ?
பொருள்நலத் திருவா சகம்மே
பூத்தது வேறோர் பேரில்
பெருநலம் இதிலும் எது
பேறுவே றுண்டோ கூறு''[5]

எனவே ஈண்டு அம்மானை (35), ஞானவெற்றியுந்தி (37), பறை (53), ஞானச்சாழல் (82), ஊஞ்சல் (101) ஆகிய சௌமியத் துறை பதிகங்களுடன் திருவாசகப் பாடல்கள் இணைந்து செல்வதைக் காணலாம்.

அம்மானை

வரிப்பாட்டு வகைகள் ஒன்று அம்மானை வரி. இது பெண்டிர் மூவர்கூடி எதிரும் புதிருமாக, கூற்றும் மாற்றமுமாக அமைத்துப் பாடும் ஒருவகைப் பாட்டு. சங்க இலக்கியக் காலந்தொட்டுப் படிப்படியாய் வளர்ந்து வரும் ஒருவகை இலக்கியப் பிரிவு. இது மகளிர் பாடி விளையாடும் ஒரு வகை விளையாட்டுப் பாடல்.

திருவாசகத்தில் அம்மானை வினாவிடையில் அமையவில்லை. அதைப் போன்றே தேசிகரும் வினா விடையில் அமைக்கவில்லை. ஈசன் பெருமை கூறுவது திருவாசக அம்மானை. இயேசு பெருமான் பெருமை கூறுவது சௌமியத்துறை அம்மானை, திருவாசக அம்மானைப் பாடல்களின் ஈற்றில் அம்மானை என்னும் சொல் இடம் பெறுகிறது. சௌமியத் துறையில் வரிகள் தோறும் அம்மானை என்னும் சொல் இடம் பெறுகின்றது.

''என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்''
(திருவாசகம் - திருவம்மானை - 19)

நீதி நிறைவேற்றி நேசித்தா ரம்மானை
நிச்சய வாக்கு நிகழ்த்தினா ரம்மானை''
(சௌமியத்துறை 35:1)

ஞானவெற்றியுந்தி

திருவாசகத்தில் வரும் திருவுந்தியாரை மனதிற் கொண்டு அருட்கவிஞராகிய தேசிகரும் ''ஞானவெற்றியுந்தி'' என்னும் தலைப்பில் ஒரு பதிகம் பாடியுள்ளார். பெண் குழந்தைகள் உந்தி பறத்தல் என்ற விளையாட்டு விளையாடும் போது பாடப்படுகின்ற பாடலே திருவுந்தியாகும். ''உந்திபற'' என்பது உந்துதல் பெற்ற பெண் பறவை போலப் பறந்து செல்வதை உணர்த்தும். திருவாசகத்தில் முப்புரம் எரித்தமை சுட்டப்படுவது போல் சௌமியத்துறையில் ஐம்புரம் அழித்தமை காட்டப்படுகின்றது. திருவுந்தியாரில் 19 கலித் தாழிசைகள் அமைந்திருக்க சௌமியத் துறையில் 10 கலித்தாழிசைகள் அமைந்துள்ளன. மேலும் திட்டூரார், ''உந்திபற'' என்பதனை ''தீபற'' (தீயே - ஜோதியே பற) என்ற பொருளில் மாற்றியுள்ளார்.

''ஆல மருத்திய ஆங்காரச் சாத்தானைக்
கோல மெடுத்தழித்தா னுந்தீபற
குமர பரனியே சுத்தீபற'' (சௌ. து. 37:1)

''குமரபரன் இயேசு தீ பற'' என்றமையால், உந்திபற என்பதைத் தீபற (ஜோதியே ஒளி வீசு) என்று அமைத்தமை புலனாகும். ஒளியைப் பறந்து செல் எனக் கூறக் காரணங்கள் உண்டு. ஒளியாம் இறைவன் அடைந்த வெற்றிகளே அதற்குரிய காரணங்கள்.

இவ்வாறு பல வெற்றிகளை நினைத்து உந்துதல் பெற்று தீயே பற என அமைத்தது புதுமையிலும் புதுமையாகும்.

பறை

மாணிக்கவாசகர் எல்லாம்வல்ல மூலப்பரம் பொருளை ''நாதப் பெரும்பறை'' என்று போற்றினார் (திருவாசகம் 17:1). அவர் தம்முடைய அகச்செவியால், கடவுளின் ஆடலின் கிண்கிணி ஒலிகளைக் கேட்டார், பரவசமுற்றார், பாடிப் பரவினார். அதுபோல் பன்னிரு அடியவருள் முதியவராகிய யோவான் அடிகளார் திருமறையில் இறைவனைத் ''திருவாக்கு'' என்றே குறிப்பிட்டுள்ளார். வார்த்தையின் வடிவமே இறைவன். திட்டூர்த் தேசிகர் இதனைப் ''பறை'' என்று உவமித்துள்ளார்.

மாணிக்கவாசகரைப் பின்பற்றி இவரும் ஒலியாகிய "பறை" என்று போற்றுவதற்கு முன் வந்துள்ளார். "ஆதியிலே வார்த்தை இருந்தது"[6] என்னும் யோவனின் நற்செய்திக் குறிப்பின் இசையும் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

"ஆதியிலே யிருந்தது நம்மபறை
ஐயனிடத் திருந்தது நம்மபறை
ஆதியாய் இருந்தது நம்மபறை
அம்பரனோ டிருந்தது நம்மபறை"

(சௌமியத்துறை 53 : 1)

தேவாரப் பாடலில், "ஓசை ஒளி எலாம் ஆனாய் நீயே" என்று இறைவனைப் போற்றுவதைக் காணலாம். இறைவன் கையிலுள்ள உடுக்கையாகிய துடியென்னும் கருவியின் ஒலியே உலகைப் படைத்தது; உலகையெல்லாம் இயக்குகின்றது என்கிறார் மணிவாசகர்.

"பறை" என்பது முழக்கப்படும் கருவிகள் அனைத்திற்குமுரிய பொதுப்பெயர். நெய்தற்பறை, குறிஞ்சிப்பறை முதலிய தொல்காப்பியக் கருப்பொருள் வழியாக வந்த ஒரு பொதுப்பெயர். ஓதரிய ஆதித்திரு வார்த்தையை எந்த ஒரு கிறித்தவக் கவிஞரும் பறை என்று சுட்டவில்லை. திருவாசக நெறி நின்று தேசிகர், கிறிஸ்துவைப் "பறை" யென்று பாடிப் பரவியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அச்சோப் பதிகம்

"அச்சோ" என்பது வியப்புச் சொல். ஒவ்வொரு பாடலிலும் தான் பெற்ற அருளனுபவத்தை நினைந்து "அச்சோ" என்று வியந்து கூறுகிறார், மாணிக்கப் பெருமான்.

திருவாசகத்தின் ஐம்பத்தோராம் பகுதி அச்சோப் பதிகம். பத்துப் பாடல்களைக் கொண்டது இப்பகுதி. ஒவ்வொரு பாடலும், "எனக்கருளிய வாறார் பெறுவார் அச்சோவே" என்று முடிகிறது. இதைப் போன்று சௌமியத் துறையிலும் "அச்சோ" என்ற தலைப்பில் தேசிகர் பத்துப் பாடல்களைக் கொண்ட ஒரு பதிகம் பாடியுள்ளார். தேசிகரின் இப்பதிகப் பாடல்கள் யாவும் "கடைக்கணால் இரட்சித்தான் அச்சோ" என்ற முடிவினைப் பெறுகிறது.

"தீய மனம்புதிதா காமல்
தினமு மாகாமியம் புரிந்தேன்
காய மைந்துளான் கண்டு
கடைக்கணா லிரட்சித்தா னச்சோ!" *(சௌ.து. 79:1,2)*

ஞானச் சாழல்

திருவாசகத்தில் வரும் திருச்சாழலை மனதிற்கொண்டு பாடிய பாடல்களே ஞானச்சாழல் என்னும் பதிகம். திருச்சாழல் கருணையை

குறிக்கிறது. திருச்சாழலில், ஒரு பெண்ணிடம் திருச்செயல்களின் உண்மைகளை வினவி அறிவது போன்றே இயேசு பெருமான் திருவருளுக்கான காரணங்களைக் கேட்டுணரும் தன்மையில் தேசிகரும் பாடல்களைப் படைத்துள்ளார். ''சாழல்'' என்பது ஒரு வகை விளையாட்டு. இது மகளிர்க்குரியது. சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் காதையின் உரையில், ''நல்லார் தம் தோள் வீச்சுச் சாழல்'' என்றார் உரையாசிரியர் (சிலப்பதிகாரம் 3:12.25 அடியார்க்கு நல்லார்).

ஊஞ்சல்

சங்க இலக்கியத்திலும், திருவாசகத்திலும், அப்பர் பாடலிலும், பிற்காலப் பிள்ளைத் தமிழிலும், கலம்பகத்திலும் ஊஞ்சல் வரிப் பாடல்கள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு வகையாக விரிந்து ஊஞ்சல் வரி விளக்கப்பட்டுள்ளது. புதுமை பாடும் புனிதக் கவிஞரான தேசிகரும் இதனைத் தம் படைப்பில் புகுத்தியுள்ளார். ஊசல் என்பது அசைதல், இது மெல்லோசை பெற்று ''ஊஞ்சல்'' என்றாகியுள்ளது. எனவே அசைந்தாடுவதுவே ஊஞ்சல்.

இணைத் தொடர்கள்

திருவாசகத்தில் இணைத் தொடர்கள் இருப்பது போன்று (பாலும் பழமும்) சௌமியத் துறையிலும் காணலாம்.[7]

பக்திப் பாடல்களின் நோக்கு இறைவனின் புகழை பாடுவதே யாகும். புகழ்வதற்கும், வசைபாடுவதற்கும் இணைத் தொடர்கள் மிகவும் பயன்படும் தன்மையுடையன.

மாணிக்க வாசகர்தான் ஊஞ்சல் பாடல்களில் இறையியல் கருத்துக்களை முதன் முதலில் விரிவாக ஏற்றிப் பாடியுள்ளார். அப்பர் பாடல்களிலும் இறையியலின் ஆழத்தை நன்கு காணலாம். அவர்களைப் பின்பற்றி தேசிகர் இத்துறையில் புதிய உத்திகளை அறிமுகம் செய்துள்ளார். மாணிக்கவாசகரைத் தேசிகர் தம் வழி காட்டியாகப் பின்பற்றியிருந்தாலும், முன்னவர் மரமானால், பின்னவர் கனியாக இருக்கின்றார்.

குறிப்புகள்

1. பெரிதும் அறிமுகமாகாத கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்கள், முனைவர் த. இயேசுதாஸ்.
2. இரண்டாவது உலகக் கிறிஸ்தவத் தமிழ் மாநாடு மலர், 1984, ப. 9.
3. விவிலியம் மத் 5.5.
4. விவிலியம், பிலி 4.5.
5. வி.ப.க. சுந்தரனார், தமிழும், இறையும், மதுரை, தமிழ்நாடு இறையியல் கல்லூரி, 1982.
6. விவிலியம் யோவான், 1:1, ப. 124.
7. பத்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி - 2.

ஈசன் புகழ்பரப்பும் எழுபதும் நூறும்

ந. ஹேமலதா

தனலெட்சுமி சீனிவாசன் கல்லூரி

பெரம்பலூர்

''தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே''

என்று புகழ்ந்து கூறப்பட்ட, சோழ வளநாட்டின் காவிரியின் வடகரையிலும், தென்கரையிலும் சிறப்புடன் விளங்கும் சிவன் குடிகொண்டு இருக்கின்ற மலைகளுள் திருஈங்கோய் மலை, திருகற்குடிமாமலை இவ்விரண்டின் இயற்கை எழிலை முறையே நக்கீர தேவ நாயனாரும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும் புகழ்ந்து பாடியுள்ளனர். அந்நூல்களில் காணப்படும் இயற்கை வருணனைகளுள் சிலவற்றை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

நூலாசிரியர் வரலாறு : நக்கீரர்

பதினோராம் திருமுறையில் இவர் பாடிய பத்து நூல்கள் இடம்பெற்றுள்ளன.[1] களப்பிரர் ஆட்சியின் இறுதிப்பகுதியில் சிவபெருமானது திருவருளால் மூர்த்தி நாயனார் பாண்டி நாட்டை அரசாட்சி செய்தார். அவரால் புரக்கப்பெற்ற சைவத்தமிழ்ச் சங்கப் புலவர்களும் பழைய தமிழ்ச்சங்கத்தில் இருந்த நக்கீரர், கபிலர், பரணர் முதலிய பெயர்களைப் பூண்டிருந்தனர். இவர்களையே நம்பியாரூரர் ''பொய்யடிமையில்லாத புலவர் என அருளிச் செய்தார். அதனால் அவர்கள் 'நாயன்மார்' எனப்பட்டனர். இவர்கள் அருளிச் செய்த பிரபந்தங்களை நம்பியாண்டார் நம்பிகள் 11-ஆம் திருமுறையில் சேர்த்தார்''[2] என்றும் தெரிகிறது.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை

இவர் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை என அழைக்கப்பட்டார். திருவாவடுதுறை ஆதினத்தில் ஆதினப் புலவராக இருந்தவர். உ.வே.சா., தியாகராஜ செட்டியார், மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆகியோரின் ஆசிரியருமாவார். சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடைய இவர், தமிழில் தலபுராணங்களையும், சிற்றிலக்கியங்களையும் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்றாகத் திருகற்குடி மாமலையில் வீற்றிருக்கும் சிவபெருமான் மீது கற்குடிமாலை என்ற நூலைக் கற்பனை வளத்தோடு பாடியுள்ளார்.

மலைகளின் சிறப்பு

ஈங்கோய்மலை எழுபது என்னும் நூல் எழுபது பாடல் களையும், கற்குடிமாலை நூறு பாடல்களையும் கொண்ட நூலாகும். இந்நூலுள் பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானின் பெருமைகள் பேசப்படுகின்றன. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று நிலையுள் தலத்தின் பெருமையாக இம்மலைகள் இறைவடிவாகப் பேசப்படுகின்றன. இருமலைகளிலும் குன்றக்குறவர்கள் நிலவினைக் கண்டு மகிழும் நிலை காணப்படுகிறது. 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்''[3] என்று சுந்தரரால் பாராட்டப்பெறும் பிறைசூடிய நிலை அம்மலைக்கு உரியதாகக் கருதி இருபுலவரும் பாடுகின்றனர்.

நக்கீரர் அம்மலையினைத் திருமாலும், பிரம்மனும் நிலவுலகை யும், ஆகாயத்தையும் தேடி அடியும், முடியும் காணமுடியாத சிவபெருமானின் ஓங்காரமாக நின்ற மலை என்று கூறுகின்றார்.

திருஈங்கோய்மலையில் வருணனை

யானை

சிங்கத்தைக் கண்ட பெண்யானை அஞ்சி ஓடுகிறது. அதைக் கண்ட ஆண் யானை, தன் துதிக்கையால் அணைத்துப் பெண் யானையைக் காப்பாற்றுகின்றது. இதனை,

> ''அரிகரியைக் கண்டவிடத்து அச்சலிப்பாய் ஓடப்
> பிரிவரிய தன்பிடியைப் பேணிக் - கரிபெரிதும்
> கையெடுத்து நீட்டிக் கதஞ்சிறக்கும் ஈங்கோயே
> மையடுத்த கண்டன் மலை''[4]

என்ற வரிகளில் பாடியுள்ளார்.

குரங்கு

மனவுணர்வுடைய மக்களின் ஒழுகலாறுகளை வரம்பாகக் கொண்டு அஃறிணை உயிர்களாகிய விலங்கு, பறவை முதலியவற்றின் செயல்திறங்களை ஒப்புநோக்கிக் கூறும் பாங்கு ஆசிரியரின் நகைச்சுவை உணர்வை உணர்த்துகின்றது. இதில் மனிதனைப் போன்ற செயல் திறனும், உடலமைப்பும் கொண்டது குரங்காகும் அத்தகைய குரங்கின் இயல்பினை கீழ்வரும் பாடலில் நயமுடன் எடுத்தியம்புகின்றார்.

> ''ஈன்ற குழவிக்கு மந்தி இறுவரைமேல்
> நான்ற நறவத்தைத் தான்நணுகித் - தோன்ற
> விரலால் தேன் தோய்த்தூட்டும் ஈங்கோயே நம்மேல்
> வரலாம்நோய் தீர்ப்பான் மலை''[5]

ஈங்கோய் மலையில் வாழும் மந்தி தன் சிறிய குட்டிக்குத் தேனடை யிலுள்ள தேனை விரலால் தோய்த்து ஊட்டும் காட்சியினை இந்நூலில்

விளக்கிச் செல்கின்றார். இத்தோற்றம் தாயொருத்தி தன் இளங் குழந்தைக்கு உணவருந்தும் இயல்பினை நினைவுபடுத்துகின்றது.

செங்காந்தள் மலர்

மென்மையான இதழ்களையுடைய செங்காந்தள் மலரின்மேல் கருவண்டு மொய்த்திருப்பதைக் கண்ட பெண் குரங்கு, மலரைத் தீயென நினைத்து, வண்டின்மீது இரக்கம் கொண்டு, அவற்றைக் காப்பாற்ற எண்ணி, நெருங்கிச் செல்கின்றது. ஆனால் அத்தீ தன்னை சுடுமென்ற அச்சத்தால் செய்வதறியாது தன் கையை நெறித்துக் கொள்கிறது குரங்கு. இக்காட்சியினை,

''வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப வொண்தீ
முழகியதென் றஞ்சி முதமந்தி - பழகி
எழுந்தெழுந்து கைநெறிக்கும் ஈங்கோயே திங்கட்
கொழுந்தணிந்த செஞ்சடையான் குன்று''[6]

என்ற பாடலில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

பளிங்குப்பாறையில் பழம்

மலைச்சாரலின் ஒருபுறத்தே பளிங்குப்பாறை அமைந்துள்ளது. அச்சாரலிலே வளர்ந்தோங்கிய மரங்களின் நிழல் அப்பாறையில் விழுகின்றது. பளிங்குப்பாறையில் படிந்து தோன்றிய பழத்தின் சாயலைக் கண்ட குரங்கு, உண்மையென நம்பி, தன் இனத்தையும் அழைத்து வந்தது. எல்லா குரங்குகளும் கனியின் நிழல் படிந்த பளிங்குப் பாறையினைத் தம் கைவிரல் நகங்கள் வருந்த விரைந்து தோண்டிப் பார்ப்பனவாயின. இச்செய்தியை,

''கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடனீண்டி - வல்லே
இருந்துகிராத கற்கிளைக்கும் ஈங்கோயே மேனி
பொருந்தவராப் பூண்டான் பொருப்பு''[7]

என்கிறார்.

குன்றக் குறவர்கள்

ஈங்கோய்மலையில் வேட்டை மேற்சென்ற குறவனொருவன் மானொன்றைக் கண்டு, அம்பினைத் தொடுத்து நெருங்க அம்மான் கன்னியிளமான் என்பதை அறிந்தான். அம்மானின் மருண்ட பார்வை யானது தான் காதலிக்கும் குறத்தியின் பார்வையை ஒத்திருந்ததால் அம்பை விடாது, தூணியிற் செருகிவிட்டு, 'இளமை பொருந்திய மானே, நின்னை துன்புறுத்த மாட்டேன். நீ பயப்படாது மெல்லச் செல்வாயாக, என வழியனுப்புகின்றான். அன்பினால் உள்ளத்தை நெகிழ்விக்கும் அக்குறவனது அருட்பண்பினை,

''எய்யத்தொடுத்தோன் குறத்திநோக் கேற்றதெனக்
கையிற் கனைகளைந்து கன்னிமான் - பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கண்
சென்றன்று வென்றான் சிலம்பு''[8]

இப்பாடலில் உணர்த்துகின்றார். இனி கற்குடிமாமலையில் வரும் வருணனைகளைக் காண்போம்.

யானை

இடியோசை கேட்டு, கோபம் கொண்டு, பெண்யானை ஓட, அவற்றை ஆண்யானையாது அணைக்கின்றது. என்பதை,

''சினமதக் களிறு தொடந்திட வோருஞ் சிறுபிடிக் குறமடமாதர்
கனதெனத் திடியுண் டஞ்சிமீண் டணைக்குங்
கற்குடிமாமலைப் பரனே''[9]

என்று கூறுகின்றார்.

செங்காந்தள் மலர்

செங்காந்தள் மலர் நிறைந்து பூத்துக் குலுங்குகின்றன. அம்மலர் களின் காட்சி, தீயினை பரப்பி வைத்தாற் போன்று உள்ளது. அத்தீயின் அருகே யானைகள் படுத்து உறங்குகின்றது. அக்காட்சியானது, குளிர் காய்வதற்காக யானைகள் படுத்திருப்பது போன்று உள்ளதாம் என்பதை,

''பரப்பிய தழலெனப் பூத்த காந்தளி னருகு யானைகண் படுக்குங்
கற்குடி மாமலைப் பரனே''[10]

என்கிறார்.

குன்றக் குறவர்கள்

உழத்தியரின் அழகிய கண்கள் சுனைநீரில் மீன்போல் தெரிகின்றது. அக்கண்களை மீனென நினைத்த மள்ளர்கள் பிடிக்க முயலுகின்றனர். இதனை,

''நெய்யணி கடந்த ஒழத்தியர் நெடுங்கணி மூலற லிடைக்கண்டு
மள்ளர், கையினாற் கயலென றரித்திடுங் கணசூழ் கற்குடி
மாமலைப் பரனே''[11]

என்கிறார்.

முடிவுரை

இவ் இருபெரும் புலவரும் சைவ சமயத்தை வளர்க்கும் எண்ணமுடையவர்கள். அதற்காகவே இவ்விரு நூல்களையும் படைத்துள்ளனர். இறைவன் இயற்கையின் வடிவாய், எல்லா உயிர்களிடத்தும், பொருள்களிடத்தும் நிறைந்துள்ளவன் என்பதை,

உணர்த்த விலங்குகளையும், பறவைகளையும் தத்தம் நூல்களில் எடுத்துக் கூறுகின்றனர்.

நக்கீரதேவ நாயனார் காலத்தில் நாயன்மார்களின் பெயர்களையும், அவர்களுடைய தொண்டனையும் தம் நூலில் எடுத்துச்சொல்லும் வழக்கம் இல்லை என்று தெரிகிறது. ஆனால் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் படைப்புகளில் நாயன்மார்களையும், அவர்களின் தொண்டினையும் எடுத்துக் கூறும் வழக்கம் உள்ளது என்பது தெரிகிறது. இதற்குச் சான்றாக கீழ்வரும் பாடல் நிற்கின்றது.

''சைவமே பொருண் மற்றவையல வென்று சார்திரு
நீறுங்கண்டிகையுந், தெய்வவைந் தெழுத்தும் பற்றறப் பற்றத்
திருவரு ளென்றெனக் கருள்வாய், பைவளர் மணியைத் தழலென
நினைந்து பாவடிப் பருநல் வேழங் கைவளர் கடநீர் மழை
யெனப் பொழியுங் கற்குடி மாமலைப் பரனே.''[12]

குறிப்புகள்

1. 1. கயிலைபாதி காளத்திபாதி, 2. திருஈங்கோய் மலை எழுபது, 3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, 4. திருவெழுகூற்றிருக்கை, 5. பெருந்தேவபாணி, 6. கோபப்பிரசாதம், 7. காரெட்டு, 8. போற்றி திருகலிவெண்பா, 9. திருமுருகாற்றுப் படை, 10. திருகண்ணப்ப தேவர் திருமறம்
2. பன்னிரு திருமுறை, ப. 231, தருமை ஆதீனம் பதிப்பு ஆண்டு, 1995.
3. ஏழாம் திருமுறை, சுந்தரர், தருமை ஆதினம், பதிப்பு ஆண்டு 1995.
4. பதினோராம் திருமுறை, பாடல் 405, ப. 288, ஆண்டு 1998.
5. திருஈங்கோய் மலை, 9-ம் பாடல், ப. 299, 2-ம் பதிப்பு, வர்த்தமானன் ஆண்டு 1998.
6. பதினோறாம் திருமுறை, பாடல் 70, ப. 312, வர்த்தமானன் பதிப்பு.
7. மேலது, பாடல் 29, ப. 297.
8. மேலது, பாடல் 12, ப. 291.
9. கற்குடிமாலை, பாடல் 30, ப. 523, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பிரபந்ததிரட்டு, பதிப்பு 1910.
10. மேலது, பாடல் 14, ப. 541.
11. மேலது, பாடல் 62, ப. 547.
12. 11-ம் திருமுறை, திருஈங்கோய்மலை எழுபது, தருமை ஆதினம், ஆண்டு 1995.

திருமணப் படலமும் மீனாட்சி திருக்கல்யாணமும்

ம. துர்காதேவி

தியாகராசர் கல்லூரி
மதுரை - 625 009

'மக்கள் விரும்பியேற்றுக் கூடிக்களிக்கும் நிகழ்ச்சிகள் விழாக்கள் என்று அழைக்கப்படுகின்றன[1]'. எனினும் விழாக்கள் வெறும் மகிழ்ச்சிக்காக மட்டும் நடத்தப்படவில்லை. ஒவ்வொரு விழாவும் கொண்டாடப்படுவதற்குரிய காரணங்கள் உள்ளன. விழாக்கள் கொண்டாடுவதற்கான காரணங்கள் ஒரு புறமிருக்க, அவற்றிற்குச் சில புராணக் கதைகளும் உள்ளன. பன்னிரு மாதங்களுமே விழாக் களைக் கொண்டாடும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சித்திரை மாதத்தில் நடைபெறும் மீனாட்சி திருக்கல்யாணம் மிகவும் சிறப்பு வாய்ந்த விழாவாகும். இவ்விழா பற்றிய புராணக் கதையினையும், இவ்விழா நடைபெறும் முறையினையும், இவ்விழாக் கொண்டாடப் படுவதின் காரணத்தையும் காணும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

திருவிளையாடல்களில் திருமண நிகழ்வு

மலையத்துவசப் பாண்டியனுக்கும் காஞ்சனமாலைக்கும் அவர்கள் இயற்றிய வேள்வியிலிருந்து மூன்று தனங்களை உடைய மூன்று வயது மகவாய் பிறந்த தடாதகைப் பிராட்டியார் வளர்ந்து பட்டம் சூடினாள். பாண்டிய நாட்டின் அரசுரிமையை ஏற்ற அவள் மண்ணுலக வேந்தர்களை எல்லாம் வென்றாள். பின்னர் அவள் எட்டுத்திக்கும் காவலர்களை வென்று, இறுதியாகத் திருக்கயிலையை அடைந்து நந்தி முதலிய சிவகணங்களையும் வென்றாள். அதனால் சிவபெருமானே போருக்கு வர, அவரைக் கண்டதும் தடாதகையின் கூடுதல் தனம் மறைந்தது. உடனே நாணம் கொண்ட அவளிடம் சிவபெருமான் மதுரைக்குச் சென்று திருமண ஏற்பாடுகளைச் செய்யும்படி கூறி அனுப்பினார்.

மணநாளன்று மதுரை நகரமே அலங்கரிக்கப்பட்டு இருக்க மணமகனாம் சிவபெருமானுக்குக் குபேரனும், மணமகளாம் தடாதகைக்கு இலக்குமியும் அலங்காரம் செய்து அழைத்து வந்தனர். இருவருக்கும் 'சடங்கு மைந்தன்' திருமணம் நடத்தி வைத்தான்

என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும்[2], கடம்பவன புராணமும்[3] கூறிட, பரஞ்சோதி திருவிளையாடற் புராணம் பிரமன் நிகழ்த்தி வைத்தான்[4] என்று குறிப்பிடுகின்றது. இங்கு மைந்தன் என்பவன் முருகனே என்று உ.வே.சா. உரை கூறுகின்றார்[5]. கல்லாடத்தில் பிரமனே திருமணச் சடங்கை நிகழ்த்திய தாகக் கூறப்பட்டுள்ளது[6]. திருமண நாள் திங்கட்கிழமை என்று திருவிளையாடற் புராணமும்[7], பங்குனி உத்திரத் திருநாள் என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும்[8] கூறுகின்றன.

மீனாட்சியம்மன் பட்டாபிஷேகமும் திக்குவிசயமும்

சித்திரைத் திருவிழாவின் எட்டாம் திருநாளன்று மாலையில் மீனாட்சியம்மனை வேப்பம்பூ மாலை அணிவித்துக் கோவிலுள் ஆறுகால் பீடத்தில் அமரச் செய்கின்றனர். அங்கு மீனாட்சியம்மனுக்கு அப்பாஜிராயர் கிரீடம், இரத்தினச் செங்கோல், சொர்ண எழுத்தாணி, மச்சமுத்திரை, இடபமுத்திரை ஆகியவற்றைக்கொண்டு அலங்காரம் செய்கின்றனர். பின்னர் மீனாட்சியம்மனுக்குப் பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

ஒன்பதாம் திருநாளன்று இரவு மீனாட்சியம்மன் கையில் வில் அம்புடன் போர்க்கோலம் பூண்டு திக்குவிசயம் செய்யப் புறப்படுகிறார். உக்கிரப் பாண்டியப்பட்டர் வழிக் குழந்தைக்கு மீனாட்சி வேடமும், குலசேகரப் பட்டர் வழிக்குழந்தைக்குச் சொக்கநாதர் வேடமும் போட்டு இப்போர் நிகழ்ச்சி நடத்தப் படுகிறது. நான்கு மாசி வீதிகளில் வலம் வரும் மீனாட்சியம்மன் எட்டுத் திக்குப் பாலர்களையும் நந்தியையும் வெல்கிறார். பின்னர் சொக்கநாதரைக் கண்டதும் நாணம் கொள்கிறார். அவர்கள் இருவருக்கும் லாலா ஸ்ரீரெங்க சத்திர மண்டபம் என்னும் மண்டபத்தில் மாலை மாற்றல் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

மீனாட்சி திருக்கல்யாணம்

மீனாட்சியம்மனையும், சொக்கநாதரையும் மீனாட்சியம்மன் திருக்கோவிலிலுள்ள ஆடி வீதியில் எழுந்தருளச் செய்கின்றனர். திருமணக் காட்சியைக் கண்டு களிக்கத் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமியும், பவளக் கனிவாய்ப் பெருமாளும் எழுந்தருள்கின்றனர்.

முதலில் விக்னேசுவரப்பூசை, பிரம்மஹோமம் ஆகியன நடைபெற, பின்னர் மாங்கல்யப் பூசை நடக்கிறது. குன்றத்து முருகன் உக்கிரப்பாண்டி அரசனாக வந்து கால் அலம்புதல் என்னும் நிகழ்வைச் செய்கிறார். பின்னர் சொக்கநாதர், பிரியாவிடை, மீனாட்சி ஆகியவர்களுக்கு முறையே காப்புக் கட்டப்படுகிறது.

இத்திருமண நிகழ்வு சிவாச்சாரியார்களால் நடத்தப்படுகிறது. மாப்பிள்ளை வேடம் பூண்டு இருக்கும் குலசேகரப்பட்டர் வழி சிவாச்சாரியாரும், மணப்பெண் வேடம் பூண்டு இருக்கும் உக்கிரப் பாண்டியர் வழி சிவாச்சாரியாரும் மாலை மாற்றிக் கொள்கின்றனர். மாலை மாற்றியதும் முதலில் மீனாட்சியம்மனுக்கு மங்கல நாண் அணிவிக்கப்படுகிறது. அதன் பின்னர் பிரியாவிடையம்மனுக்குப் பொட்டும், மாங்கல்யமும் அணிவிக்கப்படுகிறது. பின்னர் திருமண நிகழ்வுகளான தீவலம் வருதல், பொரி தூவுதல், அம்மி மிதித்தல் போன்ற நிகழ்வுகளை மணமக்கள் கோலத்தில் இருக்கும் சிவாச்சாரியார்கள் செய்கின்றனர்.

பிறகு தீபாராதனைகள் நடைபெறுகின்றன. திருமணத்தைக் காண வந்த பக்தர்கள் மணமக்களுக்குத் திருமாங்கல்யம், பட்டுப் புடவைகள், பட்டுக்கள், பணம் ஆகியவைகளை மொய் செய்கின்றனர்.

திருக்கோவில் சார்பில் திருக்கல்யாணப் பிரசாதமாகத் திருமாங்கல்யக் கயிறு, மஞ்சள், குங்குமம் ஆகியன தரப்படுகின்றன. பக்தர்களுக்கும் இவற்றைப் பிரசாதமாகத் தருகின்றனர்.

பின்னர், மீனாட்சியம்மனும், சொக்கநாதரும், பிரியாவிடையும், முருகப்பெருமானும், பவளக் கனிவாய்ப் பெருமாளும் திருக்கோவிலுள்ள திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றனர். அங்கு சிவகணமான குண்டோதரனுக்கு அன்னம் வழங்கப் படுகிறது.

இத்திருக்கல்யாணமானது திருமலை மன்னர் காலத்திற்கு முன்பு வரை மாசிப் பெருவிழாவின் போதே நடைபெற்றுள்ளது. அவரே இந்நிகழ்வைச் சித்திரை மாதத்திற்கு மாற்றியுள்ளார்.

திருக்கல்யாண விழாவின் நோக்கங்கள்

மனிதர்கள் ஆணும், பெண்ணும் மணந்து கொள்வது கல்யாணமாகும். இறைவனும் இறைவியும் புரிந்து கொள்ளும் கல்யாணம் திருக்கல்யாணம் எனப்படும். 'இறைவன் எடுக்குந்திருமேனிகள் போகி, யோகி, வேகி என மூவகைப்படும். இறைவன் போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தைப் புரிகிறான். யோகியாயிருந்து யோக முத்திரையை அருளுகிறான். வேகியாயிருந்து, உயிர்களின் வினையை நீக்குகிறான்' என்கிறது சிவஞான சித்தியார்[9]. இறைவன் போக வடிவில் வாழாமல் போயின் உலகத்து உயிர்கள் அனைத்தும் போகியாய் வாழ இயலாது. ஆதலில் இறைவன் திருமணம் புரிவது நமது பொருட்டே ஆகும்.

இறைவனோ நித்திய கல்யாண சுந்தரர், இறைவியோ நித்திய கல்யாண சுந்தரி. நமக்கு ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாளாகும். ஆதலின் ஆண்டுக்கு ஒரு முறை ஆலயங்களில் திருக்கல்யாணம் நடத்துகிறோம். 'உலகில் உள்ள ஆணோ, பெண்ணோ யாவராயினும் தவமாற்றுவாராயின் இறைவன் அவர்கள் முன் தோன்றி அருள் புரிவான் என்பதே இத்திருக்கல்யாண விழாவின் தத்துவமாகும்' என்கிறார் ஆறுமுக நாவலர்[10].

முடிவுரை

இறைவனது போக வடிவினைக் கூறி மக்களுக்குப் போகத்தை அளிப்பதே திருக்கல்யாண விழா நடத்தப்படுவதன் நோக்கமாகும். இக்கருத்தை விளக்கும் போக்கிலேயே திருவிளையாடற் புராணங் களும் கதைகளை அமைத்துள்ளன. ஆனால் இன்றைய நாளில் இவ்விழாவின் அடிப்படை நோக்கினை மக்கள் அறியாதுள்ளனர். எனினும் இவ்விழா அவர்களுக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் தரும் விழாவாக, அதாவது போகத்தைத் தரும் விழாவாக அமைந்துள்ளது.

குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம், தொகுதி - 9, ப. 419.
2. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 4:25.
3. அனதாரியார், கடம்பவன புராணம், 10:4.
4. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம், பா. 784.
5. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், உ.வே.சா. குறிப்புரை, ப. 39.
6. கல்லாடனார், கல்லாடம், 30:8-21.
7. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற் புராணம், பா. 644.
8. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், 4:16.
9. சிவஞான சித்தியார், சுபக்கம், முதற் சூத்திரம், பா. 70.
10. ஆறுமுக நாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 147.

ஆசார்ய ஹிருதயமும் திருஅருட்பாவும்

இரா. மலர்விழி மங்கையர்க்கரசி

_தியாகராசர் கல்லூரி_
_மதுரை - 625 009_

ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தில் தோன்றியுள்ள அரியபெரிய நூல்களுள் ஆசாரிய ஹ்ருதயம் என்பது மிகச் சிறந்தது. இதை இயற்றியவர் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். இவர் அருளியவை திருப்பாவை, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகிய பிரபந்தங்களுக்கு விரிவுரை, ஆசாரிய ஹிருதயம், அருளிச் செயல் ரகஸ்ய பட்டோலை முதலிய மணிப்பிரவாள நூல்கள். இவற்றுள் இவருக்கு இறவாப் புகழ் நல்கி இவருடைய முதுபெரும் புலமைக்குச் சான்றாகத் திகழ்வது ஆசாரிய ஹிருதயமே.

நூற்பெயர் - விளக்கம்

ஆசார்ய ஹிருதயம் என்னும் சொல் ஆசார்யருடைய திருவுள்ளம் - என்று பொருள் பெறும். வைதிக ஸந்தானத்திற்கு முதல் ஆசார்யரான நம்மாழ்வார் அருளிச் செய்த திவ்யப்பிரபந்தங்களில் அவருடைய திருவுள்ளக் கருத்துகளைத் தெளிய எடுத்துரைப்பதனால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

ஸ்ரீ அழகிய மணவாளப்பெருமாள் அவர்கள் நம்மாழ்வாரை உயர்வாகச் சொல்லுகையில் ஆசாரிய பக்தியும், நெஞ்சுறுதியும் தெள்ளிதின் புலப்படுகின்றது. அகப்பொருளுக்கு உள்ளுறைப்பொருள், திருவாய்மொழிப் பாடல்களுக்கு ஒவ்வொரு திருப்பாசுரமாக, ஒவ்வொரு திருவாய்மொழியாக, ஒவ்வொரு பத்தாக விளக்குதல் போன்ற சிறப்புகளை உடையது இந்நூல்.

நூலாசிரியர் பயன்படுத்தியுள்ள சொற்கள் சொற்றொடர்கள் அனைத்துமே திருவாய்மொழி, பிற ஆழ்வார்களின் பாசுரங்கள், ஸ்ரீராமாயணம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய தொன்னூல்களில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளன.

நம்மாழ்வார் தாமாகிய நிலையிலும், செவிலி, தோழி, தலைவி ஆகியவர் நிலையிலும் பாடிய பாசுரக்கருத்துகளோடு திருவருட்பாவைப் பொருத்திப் பார்க்க இயலும், பக்திவெளிப்பாடு, அகப்பொருளுக்கு உள்ளுறைப் பொருள் தருகிற பகுதி முழுவதும் பொருத்திக் காண்பதற்கு ஏற்றதாக உள்ளது.

அருட்பாவும் ஆசார்ய ஹிருதயமும்

ஆழ்வார் ஞானநிலையில் தாமான தன்மையிலும், அன்பு நிலையில் பெண்ணின் தன்மையிலும் பேசுவார். அப்படிப் பெண் பேச்சாகப் பேசுமிடத்தில் தோழி, தாய், மகள் என்று மூன்று நிலைகளில் பேசுகிறார். இதே போன்ற நிலைகளை அருட்பாவிலும் காணமுடிகிறது. ஆண்டவனை மணவாளனாகவும் தன்னை மணவாட்டியாகவும் வைத்துப் பாடுகின்ற பாடல்களில் மேற்குறித்த மூன்று நிலைகளையுமே காணமுடிகிறது.

இருத்தல்

இளம்பூரணர், ''இருத்தலாவது தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல்'' என்பார். இராமலிங்கர் இருத்தலுணர்வுப் பாடல் களைத் தலைவி, நற்றாய், தோழி என்ற சங்க மரபு நெறியில் மூவகையாக வெளிப்படுத்தியுள்ளார். அதில் ஆற்றியிருத்தல் புலனாகிறது.

தலைமகளாகவே தன்னை வரித்துக் கொண்டுவிட்ட இராமலிங்கர் மற்றைய உறவு நிலைகளில் நின்றும் தன்னை வெளிப்படுத்த ஏன் முயலவேண்டும்? அவ்வையப்பாட்டினை நீக்க ஆச்சாரிய ஹிருதயம் விடை அளிக்கின்றது.

> ''சம்பந்த உபாய பலங்களில் உணர்த்தி துணிவு
> பதற்றும் ஆகிற பிரஞ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி
> தாயார் மகள் என்று பேர்'' (ஆசாரிய ஹிருதயம், ப. 345)

இச்சூத்திரத்தின் வியாக்கியானத்தில் ''இந்த விதமான பக்தி நிலையில் இவர் பெண் பேச்சாகப் பேசுமிடத்தில் தோழி, தாய், மகள் மூன்றுவிதமாகப் பேசுகிற'' என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, பக்தி கொண்டு மேற்குறித்த மூன்று உறவுநிலைகளில் இருந்து பாடுவதை ஆசாரிய ஹிருதயம் விளக்குகின்றது. அதனைப் பிரஞ்ஞாவஸ்தை எனக் குறிப்பிடுகிறது. ''பிரஞ்ஞாவஸ்தை - மூன்று காலத்தையும் அறியும் அறிவின் நிலை'' என்றும் விளக்கம் தரப்பட்டுள்ளது. சம்பந்தத்தில் உணர்த்தி எனும் முதல் அவஸ்தை தோழி கூற்றாக வரும் எனவும், உபாயத்தில் துணிவு எனும் இரண்டாம் அவஸ்தை தாயார் கூற்றாக வரும் எனவும், பலத்தில் பதற்றம் எனும் மூன்றாம் அவஸ்தை தலைமகள் கூற்றாக வரும் என்றும் பிரித்துக் காட்டி விளக்கம் தரப்பட்டுள்ளது.

சம்பந்தம் - உணர்த்தல் - தோழி
உபாயம் - துணிவு - தாய்
பலம் - பதற்றம் - தலைவி

எனும் வகையில் உணர்த்தல், துணிவு, பதற்றம் எனும் பல்வேறு நிலைகளை வலுவாக உணர்த்த தோழி, தாய், தலைவி என்னும் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டதை அறிகிறோம்.

இராமலிங்கரும் தோழி, தாய், தலைமகள் என்ற மூன்று நிலைகளிலும் ஆற்றாமையை வெளிப்படுத்தியுள்ளார்.

தோழி

இராமலிங்கர் 'பாங்கி தலைவி பெற்றி உரைத்தல்' என்று தனியாகவொரு பதிகமே பாடியுள்ளார். அதனுள் தலைவனிடம் தலைவியின் தன்மைகள், சிறப்புகள், பேறுகள் ஆகியவை பேசப் படுகின்றன. அத்துடன் இருவரையும் இணைத்து வைப்பதற்கும் பெருமுயற்சி செய்கிறாள் தோழி.

''எம்மதமோ எக்குலமோ என்று நினைப்புளதேல்
இவள்மதமும் இவள்குலமும் எல்லாமும்சிவமே
சம்மதமோ தேவர் திருவாய் மலரவேண்டும்
சபையின் நடம்புரிகின்ற தனிப் பெரிய துரையே''

இப்பாடலில் தலைவியின் தற்போதைய நிலை தலைமகனது சம்மதத்தைப் பெறத் துடிக்கும் தோழியின் உணர்வு என்பது புலனாகும்.

பிறிதோர் இடத்தில் இராமலிங்கர் தலைமகளே தன்னைத் தலைவனிடம் அனுப்பிச் சம்மதம் கேட்டு வரச் செய்தாள் என்பதாகப் பாடுகிறார்.

''பனம்பழமே எனினும் இந்தப்பசி தவிர்த்தால் போதும்
பாரும் எனப் பகர்கின்ற பாவையர்போல் பகராள்
இனம் படிமோகங் கலந்தாள் சிவானுபவத் தல்லால்
எந்த அனுபவங்களிலும் இச்சை இல்லாள் அவர்தம்
மனம்பழமோ காயோ என்றறிந்து வர விடுத்தாள்
மன்றவர்போல் காசு பணத்தாசை வைத்து வருந்தாள்''

எங்கள் தலைவி சிறிது வேறுபட்டவள் சிவ அனுபவமேயன்றி பிற யாவும் விரும்பாள். எனவே, தன் நிலையைத் தலைவர் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். 'மனம் பழமோ காயோ என்றறிந்து வரவிடுத்தாள்' எனக் கூறுவது தோழியின் பேச்சுத் திறனைக் காட்டுகிறது. எப்பாடுபட்டாகிலும் தலைமகனோடு அவளைச் சேர்த்துவிட வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது.

''விரவும் ஒருகணமும் இனித்தாழ்க்கில் உயிர்தரியாள்''

என்ற வரிகளில் உண்மை நிலையை உணர்த்தி உயிர் காக்கும் அக்கறையும் அவசரமும் தெளிவாகின்றது.

எனவேதான், ஆச்சாரிய ஹிருதயத்தில் தோழி நிலை பின்வருமாறு சிறப்பித்துக் கூறப்படுகிறது. ''அதாவது சம்பந்தத்தில் உணர்த்தி ஆகிய பிரஞ்ஞாவஸ்தைக்குத் தோழி என்று பேர். தோழியாவாள் தலைவன் தலைவியை இணக்கிச் சேர்க்குமவள் ஆகையாலே, சர்வேச்வரனோடு ஆன்மாவிற்குச் சொல்லப்பட்ட அவன் ஒருவனுக்கே அடிமை என்பது முதலான சம்பந்த ஞானமே அவ்வெம்பெருமானோடு இவ்வான்மா சேர்வதற்குக் காரணம் ஆகையாலே அந்தச் சம்பந்த ஞானமாகிற பிஞ்ஞாவஸ்தையைத் தோழி என்றும் குறிப்பதாகக் கருத்து இடம்பெறுகிறது. எனவே, இராமலிங்கர் என்ற தலைவியும் தலைமகனை எண்ணி ஆற்றியிருக்குமிடத்து இறைவனைக் கூட இயலவில்லையே என ஏங்குகிறார். தன் உணர்வுகளைத் தோழியின் வாயிலாக வெளிப்படுத்துகிறார். தோழியானவள் தலைவன் தலைவியை இணக்கிச் சேர்க்குமவள் என்பதற்கேற்ப ஈண்டு தோழி கூற்றாக வரும் பாடல்கள் இறைவனோடு ஆன்மாவை இணைத்து வைக்க விழையும் உன்னதப் பாடல்களாகவே விளங்குகின்றன.

தாய்

''உபாயத்தில் துணிவு என்கிற இரண்டாவது அவஸ்தைக்கு தாயார் என்று பேர்'' என்று ஆசார்ய ஹிருதயத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இராமலிங்கர் தாயாகி நின்று ஆற்றொணாத எண்ணங்களைக் கூறுமிடத்து இருநிலைகளில் பேசுகிறார். தமிழ் மரபுப்படி நற்றாய், செவிலித்தாய் என்ற இருவிதத் தாய்மை உணர்வுகள் கூற்றுக்களில் வெளிப்படுகின்றன. இருவருமே தலைவியின் எல்லையில்லாக் காதல் குறித்தும், தங்களது அறியாமை குறித்தும் இறையின் பெருமை குறித்தும் பேசுவதுண்டு.

நற்றாய்க்குத் தன் மகளின்மீது மாறாத பாசமும், சலியாத அக்கறையும், தாளாத அன்பும், குறைவு படாத உயர்மதிப்பும் இருக்கின்றது. எனவேதான், அவள் தன் மகளை அழைக்கின்றபோது,

''வரத்தினால் நான் பெற்ற மகளே''

என்பாள். அதில் பரிவுநிலை தோன்றும்.

நற்றாய் முதல் வாசகத்திலேயே அவளின் மனநிலையைப் புலப்படுத்தி விடுகிறாள்.

மற்றையோர் அவர்தம் உறவு கண்டு அலர் தூற்றலாம். அம்பலாக்கலாம். ஆனால் தாயுள்ளம் கேலி பேசி நையாண்டி செய்யாது, ஊரார் பழிப்பதைக் கண்டு அவள் உள்ளம் வேதனை யுறுகிறது. தலைவன் தன் மகளை ஏற்கமாட்டானா என்று தவிக்கின்றது.

''மலிந்த இவ்வுலகர் வாய்ப்பதர் தூற்ற
வைத்தல் உன்மரபல என்றாள்
வலிந்தெனைக் கலந்த வள்ளலே என்றாள்
வரத்தினால் நான் பெற்ற மகளே''
(பாங்கி தலைவி பெற்றிட உரைத்தல்)

என வருமிடத்தில் மற்றையோர் அலர் தூற்றுவதைக் கண்டு பொறாத நிலையும், அதே நேரத்தில் அவ்வலர் உள்ளீடற்றது என்பதும் உணர்த்தப்படுகிறது.

தன் மகளுக்குக் கிடைத்த தலைவனைப் போல் தரணியில் மற்றையோர் யார்க்கும் தலைவன் கிடைக்க மாட்டான். அவ்வாறிருக்க உண்மையறியாது உலகோர் பேசுகின்றனர். அதுவோர் அறியாமை. வலிந்து கலந்த வள்ளல் என்பதால் தனது மகள் சாதாரணக் காமக் கூட்டத்திற்காக ஏங்கவில்லை. அது அருள்நாட்ட அன்பின் கூட்டம். இதயத் தோட்டம், அவன் கருணையே அவளை ஆட்கொண்டது என்றே எண்ணுகிறாள் தாய்.

தலைமகள்

''பலத்தில் பதற்றமாகிற பிரஞ்ஞாவஸ்தைக்கு மகள் என்று பேர் தலைமகள் ஆவாள். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து, தலைவனுடைய ஒப்புயர்வற்ற வனப்பு முதலியவற்றிலே ஈடுபட்டுக் குல மரியாதைகளையும் பாராதே தலைவனை அடைந்தால் அல்லது தரியேன் என்னும் பதற்றத்தையுடைவள்'' என்று ஆசாரிய ஹிருதயம் தலைமகள் செயலைக் குறிப்பிடுகிறது.

இராமலிங்கர் தோழியின் மூலமாகவே தலைமகளின் மேற்குறித்த செயல்களை எல்லாம் வெளிப்படுத்திவிட்டார். இங்கு தலைமகனின் மன நிலையையே எடுத்துக்காட்டுகிறார்.

''காணாத காட்சி எல்லாம் காண்கின்றேன் பொதுவில்
கருணை நடம் புரிகின்ற கணவரை
உட்கலந்தேன் கோணாத மேல்நிலை மேல்
இன்ப அனுபவத்தில் குறையாத வாழ்வடைந்தேன்
தாழ்வனைத்தும் தவிர்ந்தேன்'' (அனுபவமாலை)

காணாதன கண்டு, வாழ்வு நீங்கப் பெற்றுக் குறையாத வாழ்வடைந்த நிறைவைக் காண முடிகிறது. அந்நிறைவைத் தலைமகள் தன் தோழி, தாய் இருவரிடமும் எடுத்துரைப்பதாக இராமலிங்கர் அமைத்துள்ளார்.

முடிவுரை

ஆண்டவனை அடைய எண்ணும் ஆன்மாவின் செயல்பாடுகள் அருள் அனுபவநிலையில் ஒருபோகுத் தன்மையுடையவை என்பதனை இவ்விரு அருள் நூல்களும் வெளிப்படுத்துகின்றன.

சிவவாக்கியரும் வேமனரும்

பொன். சௌரிராசன்

திராவிடப் பல்கலைக்கழகம்
குப்பம்

தமிழகத்துப் பதினெண் சித்தர்களுள் ஒருவர் சிவவாக்கியர்; ஆந்திர மாநிலத்தில் வாழ்ந்த சித்தர் வேமனர். ஏறக்குறைய இருவரும் 16, 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சாதி சமய சழக்கைக் கடிவதில், மூட வழிபாட்டைக் கண்டிப்பதில், சமுதாயத்தை நெறிப்படுத்து வதில் ஒத்த கருத்தினராய் இருவரும் பாடல் பல பாடியுள்ளனர். பாடல்கள் : எளியன, இனியன

சிவவாக்கியர்

இவர் பாடியனவாக 500 பாடல்கள் கிடைத்துள்ளன. இவை எளிய எதுகை மோனையோடு இனிமையாய் ஆசிரிய விருத்தத்தில் அமைந்தன. சான்றாக ஒன்று :

நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து முனகிநின்று சொல்லுமந்திரம் ஏதடா
நட்டகல்லும் பேசுமோ நாதன்உள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ!

வேமனர்

இவர் பாடியனவாக 3000 பாடல்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. 'ஆடவலதி' என்னும் எளிய தெலுங்கு யாப்பில் மூன்றடிகளில் பாடலும் நான்காவதாக 'விஷ்வதாபி ராம விநுரவேம' என்ற முடிப்பும் கொண்டனவாக அவை எளிமையாய் இனிமையாய் அமைந்துள்ளன.

ஒரு சான்று :

உப்புகப்பு ரம்பு நக்கபோலிக னுண்டு
சூடசூட ருஜுலு ஜாட வேறு
புருஷுலந்து புண்ய புருஷுலு வேறய்ய
விஷ்வதாபி ராம விநுர வேம்

(சி.பி. பிரவுன், வேமன பத்யம், எண். 16)

(உப்பு கற்பூரம் பார்வையில் ஒன்றே: ஆனால் பயன்பாட்டில் வேறு வேறு. மக்களும் அப்படியே. நல்லவர் தீயவர் தோற்றத்தில் ஒன்றே. ஆனால் செயலில் வேறுபடுவர் அறிக.)

அடுக்கு உவமை

உவமை பலவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி ஓர் உண்மையைத் திண்மையாக, தெளிவாக உணர்த்துவதில் இருவரும் வல்லவராக விளங்குகின்றனர்.

சிவவாக்கியர்

இறந்தவர் பிறந்தது இல்லை என்பது ஓர் உண்மை. அதனை சிவவாக்கியர்,

கறந்த பால் முலைபுகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கின்ஓசை உயிர்களும் உடல்புகா
வறிந்தழி உதிர்ந்த காயும் மீண்டுபோய் அம்மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே!

என உவமை பல அடுத்து வைத்து உணர்த்துவர்.

வேமனர்

இந்தப் பாடல் இயற்றும் பண்பு வேமனரிடமும் அமைந்துள்ளது. மனைவியின் மனத்தாங்கல் குடும்பத்தில் பெருந்துன்பம் விளைவிக்கும் என்பதை பின்வரும் அடுக்கு உவமைகள் வழி வேமனர் புலப்படுத்துகிறார்.

செப்புலோதி ராயி செவிலோதி ஜோரீக
கண்(ட்)டிலோதி நறுசு காலி முல்லு
இண்(ட்)டிலோதி போரு இந்திந்த காதய்ய
விஷ்வதாபி ராம விநுரவேம (பாடல் எண். 175)

(செருப்பில் சிறுகல், செவியில் நாய் ஈ, கண்ணில் ஒரு துரும்பு, காலில் கூர்முள் தரும் துன்பம் பெரிது. அதனினும் பெரிது மனம் வேறுபட்ட கணவன் மனைவி வாழ்வு)

இறை வழிபாடு

இறை, இறை வழிபாட்டில் இருவரும் ஒரே கொள்கையர். 'கல் தெய்வம் அன்று; கருத்தே தெய்வம்' என்பது இருவரும் கண்ட முடிபு. அப்படியே அருவ, வழிபாட்டையே இருவரும் போற்றினர்; 'மனத்துளே கடவுளைக் காண்' என்றனர்.

சிவவாக்கியர்

கோயிலாவது ஏதடா; குளங்களாவது ஏதடா;
கோயிலும் மனத்துளே; குளங்களும் மனத்துளே;

வேமனர்

சிலனு ப்ரதிமசேசி சிகடனு பெட்டி
ம்ரொக்கு வலது வெர்ரி மூடுவாரா!

உள்ளமந்து ப்ரஹ்மா உண்டுட தெளியரு
விஷ்வதாபி ராம விநுர வேம! (பாடல் எண். 230)

(உள்ளத்துள் உள்ளான் இறைவன் என்று உணராது கல்லில் கடவுள் செய்து கடு இருளில் வைத்து கைகூப்பி வணங்கும் மூடர்காள்!)

சாதி சமயம்

சாதி சமய ஏற்றத் தாழ்வை இருவரும் மறுத்தனர்; வெறுத்தனர் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்பது இருவர் தம் துணிபு.

சிவவாக்கியர்

பறைச்சி யாவது ஏதடா, பணத்தி யாவது ஏதடா.
இறைச்சிதோல் எலும்பிலும் இலக்கம் இட்டிருக் குமோ
பறைச்சியும் பணத்தியும் பகுத்துப் பாரு உன்னுளே.

வேமனர்

குலமு ஹெச்சு தக்கு தொடவல்லு பணிலேது
சாறுஜாத மய்யெ சகல குலமு எறுங்காக வச்சு
ஹெச்சு தக்கு மா(ட்)ட எட்லெகைகாக
விஷ்வதாபி ராம விநுர வேம. (பாடல் எண். 225)

(எல்லாச் சாதியினரும் ஒருவழி வந்தவர்களே இந்தச் சாதி உயர்ந்தது இந்தச் சாதி தாழ்ந்தது என்று எப்படிக் கணிப்பது. எனவே உயர்வு தாழ்வு பேசிச் சண்டையில் வேண்டா)

பொய்த்துறவு

தனக்கே உரிய கடமைகளைக் கைவிட்டு காவி அணிந்து துறவி வேடம் பூண்டு திரிவோரை சிவவாக்கியர் எள்ளி நகையாடுகிறார்.

காவியும் சடைமுடி கமண்டலங்கள் ஆசனம்
தூவுருத்தி ராட்சம் யோகத்தண்டு கொண்ட மாடுகள்
தேவியை அலையவிட்டுத் தேசமெங்கும் சுற்றியே
பாவியென்ன வீடெலாம் பருக்கை கேட்டு அணிவரே.

வேமனர்

காவி பஞ்ச கட்டி கடுயோகி வலெநுண்டி
வெளிகி கோர்கு லெல்ல விடிசி பெட்டி
தொடரி திரிகுவாடு தொங்க சன்யாசயா
விஷ்வதாபி ராம வினுர வேம! (பாடல் எண். 177)

(முற்றும் துறந்தவர் போல காவி வேட்டி கட்டிக் கொண்டு கடிய தபசியைப் போலத் திரிபவர் பலர் பொய்த் துறவிகள்)

இவ்வாறு சிவவாக்கியரும் வேமனரும் தம் எளிய, இனிய பாடல்களால் இறை, இறைவழிபாடு, சாதி சமய வழக்குகள் இவை பற்றி மக்களிடையே நிலவிவந்த மூடநம்பிக்கைகளை களைவதில், 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற உண்மையை உணர்த்துவதில் ஒருமித்து முயன்றுள்ளமை விளங்கக் காணலாம்.

சிலம்பில் சமயம்

க. நாகராஜன்

சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி

மண்ணச்சநல்லூர் - 621 005

சமயம்

வாழ்க்கையில் சில உண்மைகள் மனிதனுக்குப் புதிராகவே இருக்கின்றன. அவனது எண்ணங்களும் விருப்பங்களும் பெரும் முயற்சிக்கு பிறகும் முடியாது போகின்றன. சில வேளைகளில் எதிர்பாராத வகையில் முயற்சியின்றியே எளிதில் முடிந்து விடுகின்றன. அதுபோன்ற வேலைகளில் தனக்கும் மீறிய சக்தியொன்று இருப்பதாக நம்பினான் மனிதன். அச்சக்தியை அஞ்சி வணங்கினான் அவன். தாம் நம்பிய அச்சக்தியைத் தனைச் சார்ந்தவர்களும் நம்ப வேண்டும் என நினைத்தான். அதற்கான முயற்சியில் ஈடுபட்ட போது தோன்றிய விளக்கங்களும் நெறிகளும் சமயம் எனப் பெறுவதாகும்.

''சமயம் என்பது புனிதமான ஒன்றைப் பற்றிய நம்பிக்கை களும் செயல் முறைகளும் அடங்கிய ஓர் ஒழுங்கடைந்த முறை யாகும்''[1] என்பார் எமிலி தர்கைம். இக்கருத்தை மேலும் பரந்த பொருளுடையதாக மாற்றி ஒடியா என்பவர் ''பகுத்தறிவுக்கு எட்டாததும் (Non-rational) செயலறிவுக்கு உட்பட்டதுமான (Non-empirical) ஓர் உலகத்துடன் தொடர்பு கொள்ள மக்கள் ஏற்படுத்திக் கொண்ட முறையே சமயம்''[2] என வரையறை செய்கிறார்.

நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் சமயநெறியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். ''மரபு நம்பிக்கைகள், வாழ்க்கைச் சடங்குகள், இறப்பு பற்றிய எண்ணங்கள், நல்லன, தீயன என்னும் பாகுபாடுகள், வாழ்வில் பற்று, பற்றுவிடுதல் ஆகிய உணர்வுகள் இவை அனைத்தும் உள்ளடக்கியது சமயம்''[3] என்று விளக்கம் கொடுக்கிறது தமிழ்க்களஞ்சியம். வாழ்வின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப மனிதனைப் பக்குவப்படுத்தின சமயங்கள். எனவே தமிழர் களின் அன்றாட வாழ்க்கையில் சமயம் உயிர்நாடியாய் இருந்தது. இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது.

சிலம்பில் சமயங்கள்

சிலம்பு காட்டும் தமிழ்ச் சமுதாயத்தில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களின் நெறிகள் இடம் பெற்றுள்ளன. அவ்வச் சமயங்களின் கடவுளர் பற்றிய குறிப்பு களும் சிலம்பில் கூறப் பெறுகின்றன.

அக்கால, இக்கால மாந்தரின் வாழ்வியல் நிகழ்ச்சிகள் சமயங் களோடு தொடர்பு கொண்டனவாகவே விளங்குகின்றன. ''இந்திய நாட்டில் தோன்றி வளர்ந்த சமயங்கள் பலவும் ஊக்கத்தோடு பணி யாற்றி வந்த சூழ்நிலையினையே சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.''[4]

சைவம்

சைவ சமயக் கடவுளர் பற்றிய குறிப்புகளும், கொள்கை களும் சிலப்பதிகாரத்தில் விரிவாக அமைந்துள்ளன. கொடும்பாளூ ருக்கும், நெடுங்குளத்துக்கும் இடைப்பட்டக் கரையினைச் சேர்ந்ததால் ''பிறை சூடிய இறைவனது முத்தலைச் சூலம் போன்று வழிகள் மூன்று பிரிவுகளாகப் பிரியும்''[5] என்று சிலம்பில் கூறப்பட்டுள்ளது. மேலும் ''கடல் நடுவில் கிரவுஞ்சமலை பிளந்து, அவுணரை வென்ற, சுடரிலை வடிவேலனான முருகப் பிரானின் நெடுவேள் குன்றத்தில் கண்ணகி ஏறினள்''[6] என்று முருகனைப் பற்றியும், ''குரவர்கள் கண்ணகியைப் பார்த்து வள்ளி போன்றவளே''[7] என வள்ளியைப் பற்றியும் கூறுவதைக் காணமுடிகிறது.

''குன்றக் குரவையோடு கொடிச்சியர் பாடலும் வேலன் பாணியும் சேரனது மலையில் சிறந்திருந்தன.''[8] சேரன் சிவபெருமானின் திருவடிகளை வணங்கிப் பின் வடதிசை நோக்கிப் பயண மாகிறான். ''அக்கோவிலின் சேடத்தைத் தன் முடியில் சூட்டி யிருந்தனன். இமயத்தின் அருகில் உள்ள குயிலாலுவத்தில் உமையொரு பாகனை வணங்கி ஆரியர் அமர்க்களத்தினைத் துறந்தனர்.''[9] வெற்றிவேல் முருகனின் குன்றமாகிய திருச்செங்குன்றில் வந்து ''விளையாடுதலை நான் மறவேன்''[10] என கண்ணகி பேசினாள். இவ்வாறு சிலப்பதிகார கால மாந்தர், சைவ சமயக் கோட்பாடு களைப் போற்றும் இயல்பினராகவும், சைவ நெறிகளைப் பின்பற்றும் நெஞ்சினராயும் விளங்கினர். எல்லாச் சமயங்களையும் காக்கும் காவலர்களாகவே அக்கால மன்னர் விளங்கினர். ஒவ்வொரு வகை சமுதாயத்தவரும் தங்களுக்கெனத் தனிக் கடவுளர்களையும், சமுதாயத்தையும் கொண்டிருந்தனர். குன்றக் குரவர்கள் முருகனை வழிபட்டதன் வழி இச்செய்தி உணரப்படுகிறது.

வைணவம்

சிலப்பதிகார காலத்தில் வைணவ சமயமும் ஆக்கம் பெற்றிருந்தது. வைணவ சமயக் கடவுளரான திருமாலும் கண்ணனும் விரிவாகப் பேசப் பெற்றுள்ளனர். இவை தமிழ்நாட்டின் எல்லை யினைக் குறிப்பிடுகையில் வட எல்லையாக நெடியோன் குன்றத்தைக் குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரம் நெடியோன் குன்றமென வேங்கட மலையைக் குறிக்கும். ''ஆயிரந்தலை கொண்ட ஆதிசேடனது பாயலில் பள்ளிகொண்ட கோலத்தையும், திருவேங்கடத்தில் மின்னலாகிய புத்தாடை உடுத்தி, வானவில்லாகிய மணிகள் பூண்டு, சக்கரப்படையும் சங்கமும் ஏந்தி, நலமிகு ஆரத்தினை மார்பிலே தாங்கி நிற்கும் திருமாலின் நின்ற கோலத்தையும் காணும் பொருட்டு வந்த மாங்காட்டு மறையவன் கூற்றிலிருந்து''[11] அக்கால சமுதாய மாந்தர் தாங்கள் இறைவனுக்கு அமைத்த உருவங்களும் சிறப்புகளும் தெரிகின்றன.

சமணம்

சிலப்பதிகாரத் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த மற்றொரு சமயம் சமணமாகும். சமண சமயத்தவரான இளங்கோவடிகள், அன்றைய சமுதாயத்தில் அவர் கண்ட சமண நெறிகளை அப்படியே எடுத்து உரைத்துள்ளார். சமணத் துறவியர்கள் அக்காலத்தில் இருந்தனர். சமணத் துறவியான கவுந்தியடிகள் ''மதுரைக்குச் சென்று மறவுரை நீக்கி, மாசற்ற கேள்விப் பயனுடையவர்''[12(அ)] ஆவார்.

அருகதேவன் இயல்புகளைச் சாரணர் தலைவன் பின்வருமாறு போற்றிக் கூறுகின்றான். ''எல்லாவற்றையும் அறிவுடையோன், அறவோன், அறிவு எல்லையைக் கடந்தவன், எண்வகை வினைகளை வென்றவன், இறைவன், ஈசன், நான்முகன், வேதங்களை அருளியவன், அறியாமை போக்கும் எளியவன்''[12(ஆ)] போன்ற சிறப்புப் பெயர்களாகும். சமண சமய நோன்பிகளும், பழந்தமிழ்ச் சமுதாயத்திலிருந்து சமயக் கொள்கைகளைப் பரப்பினர். ''சமயச் சான்றோர் புலால் உண்ணாமையும், பொய்யா விரதமும் போற்றினார்.''[13] எனவே சிலப்பதிகார காலத் தமிழகச் சமுதாயத்தில் சமண சமயத்தவர், ஒழுக்க நெறிகளால் மேம்பட்டும், பொது நலனுக்குத் தொண்டாற்றியும் வாழ்ந்தனர் என்று தெளிவாகிறது.

பௌத்தம்

சிலப்பதிகார காலத் தமிழகத்தில் பௌத்த சமய நெறிகளும் பரவியிருந்தன. ''மகா போதி மரத்தின் நிழலிலே எழுந்தருளிய புத்த தேவன் மொழிந்த திருமொழிகளை அந்தரசாரணர் இந்திர விகாரங்களில் பிறருக்கு ஓதினர்.''[14] ''மாதவி தன் மகள்

மணிமேகலையைப் போதி மரத்து அறவோன் முன் துறவறப் படுத்தினள்.''[15] போதி மரத்து யாதவர் முன் அறங்கள் செய்து மாதவியும் துறவினை ஏற்றனள். துறவு நெறிக்குச் சென்றவர்கள் அறப்பணி ஆற்றிச் சமுதாயத்தின் நலனுக்குப் பெரிதும் உதவினர். கோவலனின் தந்தையும், கண்ணகியின் தந்தையும் துறவோர்க்கு முன் தங்கள் பெரும் பொருளைத் தானமாகத் தருகின்றனர். அந்நாளைய மாந்தரின் அன்புள்ளமும் அறவுள்ளமும் இதன் வழி அறியப்படுகின்றன.

சமய நம்பிக்கைகள்

சமயங்களை ஒட்டிய நம்பிக்கைகள் பல அக்காலச் சமுதாயத்தில் நிலவின. திருமகளின் அழகினையும், அருந்ததியின் கற்பினையும் போற்றும் இயல்பினர் மகளிர். ''சோம குண்டம், சூரிய குண்டம் என்னும் புண்ணியத் துறைகளில் நீராடி காமவேள் கோட்டத்தினைத் தொழுதால் மகளிர் கணவனோடு மகிழ்வார்''[16] என நம்பினார். மேலும் மதுரைக்குச் செல்லும் வழியில் திருமாலிருங்குன்றத்தினைச் சேர்ந்தால், ஆங்குப்பெரும் மயக்கத்தையும் போக்கும் நிலவறையினுள் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி என்னும் மூன்று பொய்கைகள் இருக்கின்றன. ''புண்ணிய சரவணத்தில் நீராடினால் ஐந்திரத்தின் நெறியறிந்து வல்லுநராகலாம் என்றும், பவகாரணியிலே நீராடினால் இப்பிறவிக்குக் காரணமான பழம்பிறவியினை அறியலாம் என்றும், இட்ட சித்தியிலே நீராடினால் அவ்வேளையிலே எண்ணியது நிறைவேறும் என்றும், மக்கள் நம்பினர்.''[17] மங்கல மடந்தை கோயிலுக்கருகில் உள்ள மலையின்கண் உள்ள சுனையில் நீராடியவர் தம் பழம் பிறப்புணர்ச்சினைப் பெறுவர் என வரந்தருகாதை கூறுகிறது. மன்னனும்கூட வெற்றியை வேண்டி, இறைவனின் துணை கருதிச் சேரன் வடதிசைப் பயணத்தின் போது கோயில் சேடங்களைப் பெற்றுச் செல்கிறான் என்பதையும் நாம் அறியமுடிகிறது.

சமய நிலையங்கள்

சிலப்பதிகார காலத்தில் சமய உணர்வுடையவர்கள் தங்கள் வழிபாடுகளைச் சில குறிப்பிட்ட இடங்களில் நடத்தினர். அக் காலத்திற்கு முன் இத்தகைய வழிபாட்டு நிலையங்கள் இல்லை. இயற்கையோடியைந்த வழிபாடுகளே தொடக்கக்காலத் தமிழகச் சமுதாயத்தில் நிகழ்ந்தன. ஆனால் சிலப்பதிகார காலத்தில் மக்கள் தங்கள் வழிபாடுகளைக் கோயில்கள், கோட்டங்கள், விகாரங்கள் (பௌத்த ஆலயங்கள்) ஆகிய இடங்களில் வழிபாட்டினை நடத்தினர்.

சமுதாயத்தில் சமயங்கள் பலவாக இருந்தாலும், அவற்றின் கொள்கைகள், சமுதாயத்தின் தூய்மையினையும், உயர்வினையும் கருத்தில் கொண்டவை ஆகும். சமய உடன்பாடு அந்நாளில் விளங்கியமையால் சமயச் சண்டைகளும், சமயக் காழ்ப்பும் இல்லாத சமுதாயமாக சிலப்பதிகாரக் காலம் விளங்கியது. நாடாளும் வேந்தனும், சமுதாய மாந்தரும் சமய உரிமையும் சமய உடன்பாடும் கொண்டிருந்தனர். தங்களுக்கெனத் தனிச் சமயக் கொள்கை களையும் பெற்றிருந்தனர். பிற சமயங்களைப் பெரிதும் மதித்து வந்தனர். இதனால் சமயப் பூசல் கூடாது என்ற எச்சரிக்கையை விடுப்பது சிலப்பதிகாரமே.

குறிப்புகள்

1. *E Mile Durkheim, The Elementary fors of Relegious life, P. 62*
2. *Thomas, F. Oolea, The Socialogy of Religion, P. 167*
3. தமிழ் இலக்கியக் களஞ்சியம்
4. அருணாச்சலம், ப., சிலப்பதிகாரச் சிந்தனை, ப. 94
5. சிலப்பதிகாரம், *11:71-73*
6. மேலது, *423:188-190*
7. மேலது, *24:3*
8. மேலது, *25:24-25*
9. மேலது, *28:102-103*
10. மேலது, *29:10*
11. மேலது, *11:31-51*
12. அ. மேலது, *10:56-59*
    ஆ. மேலது, *10:176-191*
13. மேலது, *10:15-18*
14. மேலது, *10:11-14*
15. மேலது, *15:103-104*
16. மேலது, *9:59-61*
17. மேலது, *11:90-103*

திருமூலரின் அறச்சிந்தனைகள்

சி.க. சிவக்குமார்

சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி
மண்ணச்சநல்லூர் - 621 005

'அனுபவ ஞானத் திருநூல்' என்று பெரியோர்களால் அழைக்கப் படும் நூல் திருமந்திரம். சைவ சமயத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக அமைந்திருப்பது திருமூலரது திருமந்திரம் ஆகும். பக்தி சிரத்தையோடு ஓதப்பட்டுவரும் நூலாக இருப்பினும், நடைமுறைப்படுத்த வேண்டிய அறநெறிகளைக் கூறும் நூலாகவும் உள்ளது. மக்கள் சரியான முறையில் அறநெறிகளைத் தெரிந்து தெளிவுபெற்று செயல்படுத்தாத காரணத்தால்தான் துயரத்தில் வாடுகின்றனர். அறநெறியில் வாழ்பவர்கள் நிலைத்த இன்பத்தை அனுபவிப்பர் என்பது திருமூலரது துணிவு. இதனை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அறத்தின் இயல்புகள்

அறம் என்ற சொல்லுக்கு,''இல்லறம், துறவறம் என இருவகை. இல்லறமாவது கொடுத்தலும் அளித்தலும் கோடலும், இன்மையும், ஒழுக்கம், புணர்தல், புணர்ந்தோர்ப் பேணல் மற்றவை யாவுமாம். துறவறமாவது துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும், அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் பிறவுமாம்''[1] என்ற விளக்கம் அபிதான சிந்தாமணி நூல் வாயிலாகப் பெறப் படுகிறது. அறநூலாகிய திருக்குறள்,

''அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''[2]

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற''[3]

என்கிறது. ஆகவே, இல்லறம் துறவறம் எதனை மேற்கொண்டு ஒழுகினாலும், பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கி மனதில் எந்தவித குற்ற நோக்கமும் இல்லாமல் செய்யும் செயல்கள் யாவும் அறம் என்ற கருத்து பெறப்படுகின்றது.

வாழ்வியல் அறம்

திருமூலரும் அறத்தை இல்லறம் துறவறம் என இருவகையில் குறிப்பிடுகிறார். அறிவுடைய மக்கள் இவ்விரண்டில் ஒன்றில்

இருந்து கொண்டு அறம் செய்தல் வேண்டும் என்றும் கூறுகிறார். மெய்ம்மையை அறிந்து துறந்தவர் மட்டுமே அறம் செய்ய வேண்டும் என்பது இல்லை. சுற்றத்தாரோடு இல்லறம் நடத்துபவரும் அறச் செயல்களைச் செய்திட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

''அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'[4] என்று வள்ளுவரும் குறிப்பிடுவார். அறச்செயல்கள் செய்து, நிலைத்த இன்பத்தினை இல்லறத்திலேயே பெறமுடியும் என்பதைத் திருத்தக்கத்தேவர்,

''ஒன்றாய ஊக்கஏர் பூட்டி யாக்கைச் செறுவுழுது
நன்றாய நல்விரதச் செந்நெல் வித்தி யொழுக்கநீர்
குன்றாமற் றாங்கொடுத்தைம் பொறியின் வேலி காத்தோம்பின்
வென்றார் தம்வீட்டின்பம் விளைக்கும் விண்ணோ ருலகின்றே''[5]

என்ற பாடல் வழி விளக்குவார்.

அதாவது, ஒரு நிலைப்பட்ட ஊக்கம் என்னும் ஏரினைப் பூட்டி உடம்பாகிய நிலத்தைத் தவத்தால் உழுது, நல்ல நோன்பாகிய செந்நெல்லை விதைத்து, நல்லொழுக்கமாகிய நீரை வற்றாமல் பாய்ச்சி, ஐம்பொறிகளையும் வேலியாக அமைத்துப் புலன்கள் தீமையின்பாற் செல்லாமல் காத்தால், அந்நிலை முதலில் வானுலக இன்பத்தினைத் தருவதோடு, புலன் வென்ற சித்தர்களின் பேரின்ப வீட்டினையும் நல்கும் என்பது விளங்கும்.

இல்லற நெறியிலும், துறவற நெறியிலும் செய்த அறம் மறுமைக்கும் துணையாக வரும் என்ற கருத்தைத் திருமூலர்,

''...... ....இருவழி உண்டு;
கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம்; அறம் மேற்றுணை யாமே''[6]

என்ற அடிகள் வாயிலாக உணர்த்துகிறார்.

அறிவுடையோரே அறம் செய்வார்

யாரெல்லாம் தம்மை அறிந்து கொள்கிறார்களோ அவரே இறைவன் திருவடியை வணங்குபவர். அறச்செயல்கள் செய்பவர் உண்மையை உணர்வர். அவ்வாறு தம்மை அறிவார்க்கு இறைவன் உறவினனாக உள்ளான் என்பதைத் திருமூலர்,

''தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமன்பர னாமே.''[7]

என்ற பாடல்வழி விளக்குவார். அதாவது, சிவபெருமானது திருவடி களை வணங்குதல், பிறர்க்கும் பிற உயிர்க்கும் உதவுதலை மேற்கொண்டு

செய்தல், தத்துவ உணர்வு பெறுதல் என்னும் இவற்றுள், ஒன்றையோ பலவற்றையோ உடையவரே அறிவுடையோராவர். அவர்க்கே இறைவன் உறுதுணை செய்வான் என்பது உணரப்படுகிறது. எனவே, மனதாலும் சொல்லாலும் செயலாலும் யாரொருவர் அறச்செயல்களைச் செய்து வருகிறாரோ அவர் அறிவுடையவர் ஆவார் என்ற கருத்து பெறப்படுகின்றது.

திருமூலர் காட்டும் அறம்

அறச்செயல் செய்வது அவரவர் எண்ணத்தைப் பொருத்து அமைகிறது. பொருள் இருந்தால்தான் அறச்செயல் செய்ய இயலும் என்பது இல்லை. எல்லோரும் செய்யக்கூடிய அறச்செயலைத் திருமூலர் சுட்டுகிறார்.

> ''யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை;
> யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை;
> யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி;
> யாவருக்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.''[8]

இப்பாடலில் யாவர்க்கும் என்ற சொல், எந்தவித வேறுபாடும் இன்றி எல்லோரையும் குறிக்கும் சொல் ஆகும். உண்மை அன்புடன் ஒரு பச்சிலை இட்டு வழிபட்டாலே இறைவனின் அருளைப் பெறலாம். பசு என்ற சொல், பசுவையும் குறிக்கும் மற்ற ஊமை விலங்கையும் குறிக்கும். ஒரு வாய் உணவு கொடுப்பது எல்லோராலும் செய்ய இயலும் செயலே. தாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி உணவைப் பிற உயிர்க்காகக் கொடுத்து உண்ணுதல் எல்லோராலும் ஆகக்கூடிய எளிய செயலே. அதேபோன்று, பிறரிடம் கடுமையான சொற்களைப் பேசாமல், எதைச் சொல்லும் போதும் இனிய சொற்களால் பேசுவதும் எளிமையான செயலே ஆகும். இவற்றை நாள்தோறும் செய்யும் பழக்கத்திற்குக் கொண்டு வந்தால் வாழ்வு சிறக்கும் என்று திருமூலர் நமக்கு வழிகாட்டுகிறார்.

பச்சிலை இட்டு இறைவனை வணங்குவதும், பிற உயிர்களிடத்தில் கருணை காட்டுவதும், இனிய சொற்கள் சொல்வதும் மனிதனின் உயர்ந்த பண்பாடாகும். நாம், நம்மை விரும்பியும், பிறரை விரும்பியும், பிறர் நம்மை விரும்பியும் செய்யும் செயல்களால் உயர்ந்த நிலையை அடைய இயலும் என்பதும், எல்லையில்லா இன்பத்தை வாழும் போதே அனுபவிக்க இயலும் என்பதும் திருமூலரது சிந்தனைகள்.

அறம் செய்ய வேண்டிய காலம்

அறியாமையால் மனதைச் சீர்படுத்தாத நீவிர், 'செல்வத்துப் பயன் ஈதல் என்பதை அறியும் அறிவை நல்லவர்கள் வாயிலாக

வளர்த்துக்கொள்ள மாட்டீர். அதனால் செல்வம் உள்ளபோது அறச்செயல்களைச் செய்யாமல் செல்வத்தைக் காத்து என்ன பயன் அடையப் போகின்றீர்? இறுதிக்காலத்தில் கூற்றுவன் வந்து நம்மைக் கட்டி இழுக்கும்போது என்ன செய்ய இயலும்? என்று கேட்கின்றார் திருமூலர். அதனால், உடலும் உயிரும் உள்ள போதே அறச்செயல்களைச் செய்யவேண்டும் என்பதை,

'வண்மையில் வந்திடும் கூற்றம்; வருமுன்னம்
தன்மமும் நல்ல தவஞ்செய்யும் நீரே'[9]

என்ற பாடல் அடிகளில் வலியுறுத்துகிறார்.

அறம் செய்யும் முறை

'நிலைத்த இன்பத்தைப் பெறவேண்டுமானால் அறம் செய்திடுக' என்பது திருமூலர் வாக்கு. எல்லோருக்கும் கொடுங்கள். அவர் இவர் என்ற வேற்றுமை கருதாதீர்கள். நம்மை நோக்கி வரும் விருந்தினரைப் பார்த்து, பின் உண்ணுங்கள். இது பழைய பொருள் என்ற எண்ணத்தால் பாதுகாத்து வைக்காதீர்கள். ஆசையுடைய மக்களே! பசி காரணமாக விரைந்து உண்ணாதீர்கள். காக்கை தன் இனத்தை அழைத்து உண்ணும் காலத்தையும் அறியுங்கள் என்று அறம் செய்யும் முறையைப் பின்வரும் பாடல்வழி எடுத்துரைக்கிறார்.

''ஆர்க்கும் இடுமின்; அவரிவர் என்னன்மின்;
பார்த்திருந் துண்மின்; பழம்பொருள் போற்றன்மின்;
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்;
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.''[10]

அறம் செய்யாதார் நிலை

எட்டிப்பழம் எவ்வகையிலும் பயன்படாது அழியும். அதுபோலவே செல்வத்துப் பயன் ஈதல் என்பதை அறியாதாருடைய செல்வம் பயனின்றி அழியும் என்பதைத் திருமூலர்,

''எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன்ன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்.''[11]

என்ற அடிகள் வழி உணர்த்துகிறார். மேலும்,

''அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்யும்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே.''[12]

''இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால வாகும்.''[13]

அறத்தை அறியாது இருப்பவர்கள் இறைவனின் திருவடிகளை நினைக்கும் முறையை அறியாதவரே ஆவார். இன்பத்தினை அனுபவிக்கும் ஆற்றலை இழந்தவரே ஆவார். தம்முடன் உள்ள அறிவற்றவர்களின் மயக்க உரைகளைக் கேட்டு அவற்றின் வழிநின்று இப்பாவத்தை கொண்டவர் ஆவார். இத்தகைய பகையுள்ள நிலைத்து நிற்பவர் என்றும், இருமலும், ரத்தமில்லாச் சோகைநோயும், கோழையும், கனச்சூடும் தருமம் செய்யாதவரை அடையும் என்றும் திருமூலர் உணர்த்துகிறார்.

முடிவுரை

புற்றீசல் போல் எத்தனையோ நூல்கள் இருந்தாலும், காலத்தை வென்று நிற்பவை ஒரு சில மட்டுமே. பக்தி நூலாகக் கருதப் படும் திருமந்திரம் இன்றும் நிலைத்திருக்கக் காரணம், திருமூலரின் எளிய அணுகுமுறையே. இம்மைக்கும் மறுமைக்கும் துணைவரும் அறவாழ்க்கை மேற்கொள்வது எவ்வளவு எளிது என்பதை அவர் உணர்த்திய விதமே இதற்குச் சான்று. திருமூலரது அறச்சிந்தனை களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

அறிவுடையோரே அறம் செய்வார்

எந்த வகையிலும் அறம் செய்தல் வேண்டும்

துறவறம் இல்லறம் என்பவற்றுள் ஏதேனும் ஒன்றில் நின்று, அறம் செய்தால் நிலைத்த இன்பத்தைப் பெற இயலும்.

அறம் செய்யாதார் செல்வம் பயனற்றதாகும்.

அறம் செய்யாதார் நோயுடையோர் ஆவார். பகை கொண்டு அழிவார்.

ஆகவே, எவ்வாறேனும் அறம் செய்தல் வேண்டும் என்ற திருமூலரின் சிந்தனைகள் இக்கட்டுரையில் வலியுறுத்தப் பெற்றுள்ளது.

''மக்கள் தொண்டே இறைத் தொண்டு''

குறிப்புகள்

1. அபிதான சிந்தாமணி, ப. 108
2. திருக்குறள், 35
3. திருக்குறள், 34
4. திருக்குறள், 49
5. சீவகசிந்தாமணி(குணமாலை), 962
6. திருமந்திரம், 257 - 7. திருமந்திரம், 250
8. திருமந்திரம், 251 9. திருமந்திரம், 254
10. திருமந்திரம், 249 11. திருமந்திரம், 259
12. திருமந்திரம், 261 13. திருமந்திரம், 262

இன்றைய நிலையில் வள்ளலாரின் கொள்கைத் தேவை

கு. மனோன்மணி & கு. செல்லத்துரை

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம்
காளையார்கோவில் - 630 551

ஆதிமுதல் இன்றுவரை அகிலமெங்கும் வாழும் மனித இனம் தன்னை இயக்குகின்ற சக்தியைப் பற்றிய தன்னையும், தன்பிறப்பு, வாழ்வு, செயல் பற்றியும், ஆட்சி முறைகளைப் பற்றியும், தன் எண்ணம் செயல்பாடுகளைக் கடந்து இயற்கையில் விளைகின்ற பல்வேறு நிகழ்வுகளை, பல்வேறு நிலைகளில் ஆய்ந்து, தன்னை மீறி நடக்கின்ற செயல்பாட்டிற்கும், தன்னை மீறிய நிகழ்விற்கும் ஏதோ ஒரு காரணம் உண்டு அல்லது தன்னை மீறிய சக்தி ஒன்று உண்டு என்ற உள்ளுணர்வை ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் பெறுகிறான்.

வாழ்க்கையை அதன் போக்கிலேயே வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் வாழ்வை முறைப்படுத்த முற்படும் போது உருவானதே இறை நம்பிக்கை. கட்டுப்பாடற்ற வாழ்வும், பயமற்ற வாழ்வும் அழிவைத் தரும் என உணர்ந்த மனிதன் இறைவனின் பெயரால் கட்டுப்பாடுகளை விதித்தான்.

இதன் விளைவாக தன்னை மீறி நடக்கின்ற இடி, மின்னல், மழை, பூகம்பம் போன்ற இயற்கை சீற்றங்களிடமிருந்து விடுபட இயற்கையை வழிபடலானான். ஐவகை நிலங்கள், ஐம்பூதங்கள் என வழிபடலானான்.

பின் தான் வியக்கின்ற இயற்கையை நாம் கண்கூடாக பார்க்கின்ற சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என வியப்பு காரணமாக அவற்றிற்கு பல்வேறு உருவங்கள் கொடுத்து வழிபடலானான்.

இயற்கையின் பிரம்மாண்டமான படைப்புக்களை வணங்கிய மனிதன், இறைவனுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது அதன் விளைவாய் உருவானதே ஆலயங்கள். ஆலயங்கள் வெறும் வழிபாட்டுத்தலங்கள் மட்டுமல்ல, மாறாக சிற்ப மற்றும் ஓவியக் கலைகளின் மையமாகவும் வரலாற்றின் பிரதிபலிப்பாகவும் உள்ளன.

பயன்பாட்டில் சிறந்து விளங்கும் பழமையான நாடு நமது பாரதநாடு. வேற்றுமையில் ஒற்றுமை நம் நாட்டின் தனிச்சிறப்பு. காலத்திற்கு ஏற்றவாறு, பல கருத்துக்களுக்கு ஏற்ப மாறிவரும் நாடு. வேத, ஆகம, புராண, இதிகாச, இலக்கிய, இலக்கணங்கள் என நூல்கள் பல தோன்றி பழங்கால மக்களின் சிறப்பியல்பு மற்றும் பண்பாடுகளைக் கூறி இக்கால மக்களின் வாழ்வியலை நெறிப்படுத்தும் பேறுபெற்ற நாடு. பண்பாளர்கள் பலர் வாழ்ந்து சென்ற நம் நாட்டின் இன்றைய நிலை என்ன? இதில் மாற்றம் வரவேண்டாமா? வேண்டுமெனில் அதற்குரிய விடைதேடிய ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆன்ம, சமுதாய, மனிதநேய வழிகாட்டிகள் தோன்றுகின்றனர். உலக மனித சமுதாயம், மதங்கள், சாதிகள், மொழிகள், நிறங்கள், புலங்கள் இவையெல்லாம் கடந்து அனைவரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும் என்று கருதிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் படைப்பாளரும், சிந்தனையாளரும், சீர்திருத்தவாதியுமான ஞானி ஒருவரின் ஆன்ம ஈடேற்ற முயற்சிகள் பற்றியும், அவர்தம் சமுதாய தொண்டுகள் பற்றியும் இங்கு விளக்கமாகக் காண்பதன் மூலம் இயன்ற அளவு மனிதநேயம் மக்களிடையே மீண்டும் மலர்ச்சி அடையும் என்ற உண்மை விளங்கும்.

இன்றைய உலகம்

வள்ளலாரின் கொள்கை இறைவனை நோக்கியதாக மட்டு மல்லாமல் உலகம், சமுதாயம், சமூகம் நோக்கியதாக இருந்தது. இராமலிங்க அடிகள் சிறந்த சீர்திருத்தவாதி. சமுதாய புரட்சிவாதி. எனவேதான் இந்நூற்றாண்டு புரட்சிவாதி ஈ.வெ.ரா அவர்களும் வள்ளலாரைப் போற்றினார். அனைத்து உயிர்களும் இன்புற்று வாழவேண்டும் என்பது வள்ளலாரின் முக்கிய கொள்கை. அனைத்து உயிர்களும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டால் இந்நாளில் நடைபெறும் கலவரங் களுக்கும், முரண்பாடுகளுக்கும் வாய்ப்பே இல்லை.

நவீன கருவிகளின் துணையால் யுகங்களே கணமாகி விட்டன. உலகமே சுருங்கி சிற்றூரான நிலை. மணித்துளிகள் இறக்கை கட்டிக்கொண்டு பறக்கின்ற அவசரகாலம். அவரவரைப் பற்றி எண்ணவே நேரமில்லாத போது மற்றவர்களை, மற்ற உயிர்களைப் பற்றி எண்ண ஏது நேரம்? நாட்டுக்கு நாடு போராட்டங்கள்.

இலங்கையில் இருபது ஆண்டுகளுக்கு மேலான தனித் தமிழீழம் கோரி ஈழ விடுதலைப் போராட்டம். இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனை தினத்தந்தியில் வரும் கன்னித்தீவு படக்கதைதான், முடிவே இல்லாதது.

இன்றைய இந்திய பாகிஸ்தான் எல்லைப் பிரச்சனை, காஷ்மீரை கைப்பற்ற பாகிஸ்தானின் மோசடி செயல்கள். விளைவு கார்கில் போர். தீவிரவாத தாக்குதல் வீர இளைஞர்கள் பலர் போரில் மாண்டனர். இதற்குக் காரணம் காஷ்மீர் தீவிரவாதிகள் என்பது பாகிஸ்தானின் குற்றச்சாட்டு. இராமர் கோவில் கட்டச் சென்றவர்கள் புகை வண்டியிலேயே சமாதியான பரிதாபநிலை. அதன் பின் அம்மாநிலத்தில் ஏற்பட்ட கலவரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அடிக்கடி வரும் தேர்தல் அமர்க்களம். பதவி நாற்காலிப் போராட்டம். மாநிலங்கள் தோறும் போராட்டங்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன? மனித மனம் மட்டுமே.

ஐரோப்பா கண்டத்தில் ஐந்தாறு நாடுகளை வளப்படுத்து கிறது டான்யூப் நதி. ஆனால் இந்தியாவில் குடகுமலையில் தோன்றி, பூம்புகாரில் கலக்கும் காவிரி நதிநீர்ப் பிரச்சனை என்று தீரும்?

அரசியல் பழிவாங்கும் படலம். நீதிகேட்டு சிலம்புடன் நின்ற கண்ணகி லாரியால் மோதப்பட்டு காணாமல் போனாள். வழக்காட நின்றவளுக்கு வழக்காட வருகிறோமென அதற்கு அரசியல் கூலி கேட்கும் அரசியல் வாதிகள். பெண்மையைப் போற்றும் பாரதநாட்டில் இன்டர்நெட்டில் பெண்மையை இழிவுப் படுத்தி பணம் சம்பாதிக்கும் உயிர்காக்கும் தொழில் செய்யும் மருத்துவ புத்திசாலி. கல்வி சாலைகள் தொடங்கி பாராளுமன்றம் வரை வன்முறைகள்.

இச்சூழலில் மனிதநேயத்தை நினைப்பவர் யார்? மதிப்பவர் யார்? மதவாதிகளும், ஆன்மீகவாதிகளும் கூட இன்று பயங்கர வாதிகளாகவும், மர்மங்கள் நிறைந்தவர்களாகவுமே உள்ளனர். பிஞ்சு மனங்களில் கூட இன்று நஞ்சுதானே நிறைந்துள்ளது.

வீதிக்கொரு சங்கம் சாதிக்கொரு கட்சி, வீடுகள்தோறும் பொறுமையற்ற மனிதர்கள் போராட்டங்கள்! இந்நிலையில் நமக்குத் தேவை ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்ற வள்ளலாரின் அறநெறிப் பாடல்களே!

வள்ளலார் பக்தியை மட்டும் பாடாமல் சமுதாய மாற்றத்தை, ஏற்றத்தாழ்வை மூடப்பழக்க வழக்கங்களை கண்டிக்கும் போக்குடன் கூடிய பாடலையே அதிகம் பாடினார். மூடப்பழக்க வழக்கங் களை களைந்து சமுதாய மறுமலர்ச்சி காணும் நோக்கே வள்ளலாரிடம் அதிகம் காணப்பட்டது. தனிமனித ஒழுக்கம், அதே மனிதன் சமுதாயத்தில் கடைபிடிக்க வேண்டிய கொள்கைகள் என அவர் கூறியவை காலத்திற்கும் மனித சமுதாயம் உள்ளவரை பொருந்தக் கூடியனவாகவே உள்ளது.

பக்தி மார்க்கத்தில் உள்ளோர் அனைவருக்கும் இறைவனை அடைவது மட்டுமே முழுமையான எல்லை நோக்காக இருக்கும். வள்ளலார் கொள்கைகள் இறைவனை வழிபடுதல் மட்டுமல்லாது இன்றைய உலகச் சூழலுக்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது.

வள்ளலாரின் சமரச சன்மார்க்க கொள்கைகள்

1. கடவுள் ஒருவரே
2. கடவுளை உண்மை அன்பால் வழிபட வேண்டும்
3. உயிர்களை கொல்லாமை, புலால் உண்ணாமை
4. உயிர்களின் பசித்துன்பத்தை நீக்குதல்
5. மரபு வழிபட்ட பழக்கவழக்கங்களை கண்மூடித்தனமாக கடைப்பிடிக்காமை
6. புராணங்களும், சாத்திரங்களும் முடிவான உண்மையைத் தெரிவிப்பதில்லை
7. சாதி, சமய வேறுபாடு இல்லா நிலை
8. அணிகலன்கள் அணிந்து கொள்ளாமை
9. ஆண், பெண் வேறுபாடு இன்மை
10. எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு வேண்டும்.

போன்ற கருத்துக்களை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

''ஒன்றென்றிடு தெய்வம் உண்டென்றிடு''
(பட்டினத்தார், பா. 105)

சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி
(திருவருட்பா - 12, பதி - 1 கண்ணி. 106)

''ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே
என்றாரே! சாதி மதங்களை நாம்
தொலைக்கும் காலம் வராதோ?''

என்ற பாடல் வரிகள் மூலம் சாதியும், மதமும், சமயமும் பொய்யென அவர் உரைத்தது விளங்கும்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடு தோறிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுள்ளம் பதைத்தேன் *(பா. 3471)*

என்ற வள்ளலாரின் வரிகளை படிப்போருக்கு இரக்கமனம் தோன்றும்! பள்ளி பாடத்திட்டத்தில் இணைத்தால் வருங்கால மன்னர்களான மழலையர் மனதில் மனிதநேயம் மலருமல்லவா? இன்று அயோத்தி

யாருக்கு சொந்தம் பிறந்த இடமாதலால் இராமனுக்கா? இறந்து சமாதியில் இடம் பிடித்ததால் பாபருக்கா? என்றோ பிறந்து, இறந்த இருவருக்காக இன்று வாழும் உயிர்களுக்கு இடையில் எத்தனை வன்முறைகள்! உயிர்ப்பலிகள்!

இந்துமதக் கோயில்கள் பெரும்பாலும் வெறும் போலிச் சடங்குகள் நிறைந்த, அனைவரும் சென்று வரமுடியாத இடமாக, உண்மையான வழிபாட்டிற்குரிய இடமாக காணப்படாத கால கட்டத்தில் வள்ளலாரின் கொள்கைகள் சமுதாயப் புரட்சிக்கு முன்னோடியாக இருந்தது எனலாம்.

> ''காதில் இரண்டு பொத்தல் செய்து வரவிடுத்தவர் கடுக்கண் இடுதலும், பெண்ணுக்கு மூக்குத்தி முதலியன போடுதலும், தமக்குச் சம்மதமானால் காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தலிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா?''

என்று கேட்பதன் மூலம் அப்பழக்கவழக்கத்தை கண்டிக்கிறார். நகை அணியும் வழக்கம் இல்லையெனில் இன்று பல திருமணங்கள் தடைபடாமல் இருந்திருக்கும்.

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்றார் ஔவையார். ஆறு விதமான அறிவு படைத்த உயிரினங்களுக்குள்ளே ஆறாவது அறிவாகிய பகுத்தறிவைப் பெற்றிருப்பது நாம் பெற்ற தவப்பயன்.

> ''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்.
> ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்''

எல்லோருக்கும் இரக்கம் காட்டுவதே ஆன்மநேய ஒருமைப்பாடு மலர்ந்திடுவதற்கான வழிமுறையாகும். இது இராமலிங்கர் சிந்தனை. மதங்கள், சாதிகள், மொழிகள், நிறங்கள், புலங்கள் இவைகளை எல்லாம் கடந்து அனைவரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாரின் சிந்தனை வரவில்லையென்றாலும் பிறர் மனம் வாட செயல்கள் செய்யாமல் இருக்கும் பண்பு நமக்குள் வரவேண்டும்.

> ''உள்ளொன்று வைத்து புறமொன்று
> பேசுவார் உறவு கலவாமை வேண்டும்''

என்ற வள்ளலாரின் கொள்கை எக்காலத்துக்கும், எச்சமூகத்துக்கும், மதம் சாராதவர்களுக்கும் பொருந்தும். மனித வாழ்வு என்பது நல்லவற்றைக் கூட்டிக்கொண்டு தீயவற்றைக் களைந்து வாழ்வதுதான்.

எல்லா உயிரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று விரும்பிய வள்ளலாரின் கொள்கைகளை உணரவேண்டும். புதிய உலகை உருவாக்க வேண்டும்.

பாம்பாட்டிச் சித்தரும் வேதநாயக சாஸ்திரியாரும் பாம்புப்பாடல் ஒப்பீடு

மோசசு மைக்கேல் பாரடே

சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை

வேதநாயகர் பல்வேறு இலக்கிய மரபுகளில் இலக்கிய வகைமைகளில் தாம் கூற வந்த இறைச் செய்தியை வடிவமைத்துப் பாடியவர். சிற்றிலக்கியங்கள், இசைப்பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள், கண்ணிகள் முதலிய பல வடிவங்களையும் தழுவி எழுதியவர். அவரது பாடல்களில் தமிழ்ச் சித்தர் பாடல்களின் தாக்கம் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. ஞானவெட்டியான், கடுவெளிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர் முதலிய பல்வேறு சித்தர்களின் பாடல்களைப் பின்பற்றிப் பல பாடல்களைச் சாஸ்திரியார் எழுதியுள்ளார். அவற்றுள் பாம்பாட்டிச் சித்தரின் பாடல்களைத் தழுவி 'வெண்கலச் சற்பம்' என்ற தலைப்பில் 'ஞானத்தச்சன் நாடகம்' என்ற நூலில் அவர் எழுதியுள்ள நீண்ட பாடல் குறிப்பிடத்தக்கது. அப்பாடலைப் பாம்பாட்டிச் சித்தரின் பாடல்களுடன் ஒப்பிடுவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம். இரு பாடல்களையும் ஒப்பிடும் முன் இருவரது பாடல்களின் உள்ளுறையைச் சற்று தொகுத்துக் காண்போம்.

பாம்பாட்டிச் சித்தர் பாடல்களின் உள்ளுறை

'ஆடு பாம்பே' என விளித்து அரிய - ஆழமான கருத்துகளை உள்ளடக்கி, பாம்பாட்டிச் சித்தர் பாடியுள்ளதாகப் 'பதினெண் சித்தர் ஞானக் கோவை'யில் தொகுக்கப்பட்டுள்ள பாடல்களின் எண்ணிக்கை 129. இவை 7 தலைப்புகளில் பொதுவாகத் தரப் பட்டுள்ளன. எனினும் இவற்றைப் பின்வருமாறு 6 பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

இறைவனை வணங்குமாறு பாம்பை அறிவுறுத்தல்

'ஆடு பாம்பே' என விளித்து அப்பாம்பை, இறைவனை ஈசனை - சிவனை மனத்தில் உணர்ந்து அவர் திருவடிகளை வணங்குமாறு ஒன்பது பாடல்களில் அறிவுறுத்துகிறார் சித்தர்.

குரு வணக்கம்

இப்பகுதியில் மேன்மைமிக்க மெய்க்குருவின் பெருமைகளையும் பேராற்றல்களையும் எடுத்துரைத்து அவரை நெஞ்சார

வழிபடுமாறு பாம்பை அறிவுறுத்துகிறார். 10 பாடல்கள் இப் பகுதியில் அமைந்துள்ளன.

பாம்பினது சிறப்பு

இத்தலைப்பில் அமைந்த 5 பாடல்களில் புராணங்களிலும் சமய நம்பிக்கைகளிலும் இடம் பெற்றுள்ள பாம்பைப் பற்றிய செய்திகளை முன்னிலையாக அமைத்துப் பாடுகிறார்.

சித்தர் வல்லபம்

இதனைத் தொடர்ந்து வரும் 15 பாடல்களில் சித்தர்களின் பெருமைகளையும் அரும்பெருஞ் செயல்களையும் ஆற்றல் திறன் களையும் பட்டியலிடுகிறார். தன்மைப் பன்மையாகப் பிறருக்குச் சித்தரின் வன்மைகளை உரைத்துக் கொண்டே வருபவர், கடைசி 5 பாடல்களில் எதிரிலுள்ள சித்தரைச் 'சித்தனாரே' என அழைத்து சித்தர் செய்த அருஞ் செயல்களைக் கூறி சில அறிவுரைகளையும் எடுத்தியம்புகிறார். சக்கரங்கள் மற்றும் யோக நெறிசார்ந்த சில குழூஉக் குறிச் சொற்களும் தொடர்களும் இப்பாடல்களில் இடம் பெறுகின்றன.

பொதுவான அறிவுரைகளும் வாழ்க்கைத் தத்துவங்களும் கூறுதல்

இவற்றுக்குப் பின்வரும் பாடல்களில் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு அறிவுரைகளையும் வாழ்க்கைத் த்த்துவங்கள் பலவற்றையும் பகுத்தும் வகுத்தும் தெளிவுறப் பாடுகிறார். அவற்றைச் சில தலைப்புகளாகக் காண்போம்.

அ. பொருளாசை விலக்கல்

இப்பகுதியில் 10 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவை நாடு நகர் வீடு மனை மாட மாளிகை கூட கோபுரம் முதலிய பல்வேறு செல்வங்களின் நிலையாமையைச் சுட்டிக் காட்டி, இவை யெல்லாம் நமக்கு நிலைத்த பயன் தருவன அல்ல. இறைவனின் திருவடி ஒன்றே நமக்கு என்றும் தஞ்சம் என்று இடித்துரைக் கின்றன. ஆகவே இப்பொருள்களின் மேலுள்ள ஆசையை நாம் விலக்கிவிட வேண்டுமென்று அறிவுறுத்துகின்றன.

ஆ. பெண்ணாசை விலக்கல்

பொருளாசையை விலக்குமாறு முந்தின பகுதியிலுள்ள பாடல்கள் அறிவுறுத்த இப்பகுதியிலுள்ள 10 பாடல்கள் பெண்ணாசையை விலக்குமாறு போதிக்கின்றன. மாதரின் அழகு ஒரு மாயத் தோற்றமே - அது சீக்கிரத்தில் சிதைத்து அழிந்து போகுமென்று இப்பாடல்கள் எச்சரிக்கின்றன.

இ. சரீரத்தின் குணம்

முந்தின ஒரு பகுதியின் அடியொற்றி இப்பகுதியிலுள்ள 10 பாடல்களும் மனித உடலின் நிலையாமையையும் இளமை அழகின் நிலையாமையையும் பேசுகின்றன. இதனை உணர்ந்து நிலையான இன்பத்தைப் பற்றிக் கொள்ளுமாறு போதிக்கின்றன.

ஈ. அகப்பற்று நீக்கல்

செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை முதலியவற்றை விரித்துரைத்த சித்தர், இப்பகுதி யிலுள்ள சுமார் 30 பாடல்களில் (பாடல் எண் 100 வரை) நிலையில்லாத இப்பொருள்களின் மேல் பற்றுக் கொள்வதை நீக்கிவிடுமாறு பல்வேறு உவமைகள் உருவகங்கள் வாயிலாக நயம்படக் கற்பிக்கிறார். தாமரை இலைத் தண்ணீர் போல உலக ஆசை நீக்கி இறைவனையே இதயத்தில் பதித்து பெருவாழ்வு வாழ வேண்டுமெனப் போதிக்கிறார்.

உ. புறக்கோலங்கள் சடங்குகள் நீக்கி, உட்கலந்த இறைவனை உணர்ந்து தொழ அறிவுறுத்தல்

இதனைத் தொடர்ந்து வரும் சுமார் 20 பாடல்களில் புறக் கோலங் களையும் பிற சடங்குகளையும் அகற்றிவிட்டு நம்முள் இருக்கும் இறைவனை நாமுணர்ந்து தொழ வேண்டுமென வலியுறுத்துகிறார்.

மீண்டும் சித்தர் பெருமைகள் விரித்தல்

தமது பாடல்களின் இறுதிப் பகுதியில் மீண்டும் ஒரு முறை சித்தர்களின் பல்வேறு பேராற்றல்களை விரித்துப் பாடுகிறார். இங்கு சித்தர்களின் யோக நெறி சார்ந்த பல்வேறு செய்திகள் 'பரிபாஷை'களாகப் பேசப்படுகின்றன.

வேதநாயகரது பாம்புப் பாடலின் உள்ளுறை

வேதநாயக சாஸ்திரியார் 1830-ஆம் ஆண்டு பாடி முடித்த ஒரு புதுவகை நூல் 'ஞானத்தச்சன் நாடகம்' என்பது. பிற எவ்வகை இலக்கிய வடிவங்களையும் முழுமையாகப் பின்பற்றாது, சாஸ்திரியாரே உருவாக்கிய ஒரு புத்தாக்கப் படைப்பு இது எனலாம். இறைவனே இந்த அண்ட சராசரங்களையும் அனைத்துலகையும் மானிடப் பிறவியையும் பிற உயிர்களையும் உருவாக்கிடும் மானிடத் தச்சர் களிலும் மிக உயர்ந்து நிற்கின்ற 'ஞானத்தச்சன்' அவன் என்ற பொதுப் பொருளை மையமாகக் கொண்டு பல்வேறு தனிப் பாடல்களை இயற்றி, 7 பிரிவுகளாக இந்நூலில் ஒன்றாகத் தொகுத் திருக்கிறார் சாஸ்திரியார். அவற்றுள் 'வெண்கலச் சற்பம்' என்ற தலைப்பில் அமைந்த இப்பாடலை பாம்பாட்டிச் சித்தர் பாடல் களின் நடையில் மிக அற்புதமாக அமைத்திருக்கிறார். 36 சரணங்கள்

(அல்லது) சிறு கவிகளாக அமைத்த இப்பாடலின் உள்ளுறையைச் சில தலைப்புகளில் தொகுத்துக் காண்போம்.

ஏதேன்வனத்துப் பாம்பின் இழிவு கூறல்

இப்பாடலின் முதலில் வரும் சுமார் 11 பாடல்களில், கடவுள் ஆதி மனிதராம் ஆதாம் ஏவாளைப் படைத்து ஏதேன் என்னும் எழில் வனத்தில் உலவ விட்டபோது பாம்பு வடிவத்தில் வந்த சாத்தான் அவர்களை ஏய்த்துக் கெடுத்ததைப் பற்றி விரிவாகப் பேசி அந்தப் பாம்பின் இழிவைப் பாம்பை ஆடு பாம்பே என விளித்துப் பாம்பிடமே பாடுகிறார் பாவலர்.

புராணக் கதைகளையும் மூடநம்பிக்கைகளையும் சாடல்

அடுத்து வரும் சில பாடல்களில் பாம்பைப் பற்றிய பல்வேறு புராணக் கதைகளையும், பாம்பைத் தெய்வமாக வணங்கும் பல்வேறு நம்பிக்கைகளையும் கூறி அவற்றை மூட வணக்கங்கள் என்று சாடுகிறார்.

மோசேயெனும் சித்தன் வாழ்வில் பாம்பு

பின்னர் விவிலியத் திருமறையின் பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் மக்களைப் பாலை வழியில் வழி நடத்தி இறைவன் அருளிய புதிய நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்ந்த மாபெரும் தலைவனாக வருணிக்கப்படும் மோசே எனப்படும் 'மோசசை' ஒரு சித்தனாகத் தொடர்ந்து வரும் பாடல்களில் போற்றுகிறார் கவிஞர். அந்த மோசே எனும் சித்தன் வாழ்வில் நடந்த பாம்பு தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை விவரிக்கிறார். இறுதியில் வெண்கலத்தில் செய்யப்பட்டு ஒரு கம்பத்தில் தூக்கி நிறுத்தப் பட்ட பாம்பு ஒன்று, இஸ்ரவேலர் வரலாற்றில் எவ்வாறு தன்னை நோக்கிப் பார்த்தவர்களையெல்லாம் காப்பாற்றியதோ அதுபோலச் சிலுவை மரத்தில் உயர்த்தப்பட்ட கிறிஸ்து பெருமானும் தம்மை நோக்கிப் பார்ப்போரை மீட்டுக் காப்பார் என்ற விவிலிய உண்மையை விளக்கிப் பாடுகிறார்.

பொதுவான அறிவுரைகள்

பின்னர் வரும் சில பாடல்களில் பாம்பை உவமையாகவோ பழமொழியாகவோ சுட்டி, விவிலியத் திருமறையில் கூறப்படும் பல பொதுவான அறிவுரைகளை எதிரொலிக்கிறார். சாலமோன் ஞானி போன்றவர்களின் தத்துவ போதனைகளை இங்கு அவர் சுட்டிக் காட்டுகிறார்.

மீண்டும் புராண கதைகளையும் நம்பிக்கைகளையும் நகையாடல்

அடுத்து வரும் சில பாடல்களில், மீண்டும் பாம்பு பற்றிய புராணக் கதைகளையும், நம்பிக்கைகளையும் கூறி, அவற்றின்

அறிவுக்குப் பொருந்தாத தன்மைகளை விளக்கி - வாதிட்டு, அவற்றைத் தெய்வமாக வணங்குவதன் தவறுகளைச் சுட்டிக் காட்டுகிறார்.

பாம்பு பற்றிய இயேசுபிரானின் மொழிகளை எடுத்துரைத்தல்

நீண்ட பாடலின் இறுதிப் பகுதியில், இயேசு பெருமான் பாம்பு தொடர்பாகக் கூறிய பல்வேறு உண்மைகளையும், தம் அடியாருக்கு அருளிய வாக்குறுதிகளையும், அறிவுரைகளையும் விவரித்து, தம் வாழ்க்கைக் குறிப்பு ஒன்றுடன் பாடலை முடிக்கிறார் பாவலர் சாஸ்திரியார்.

ஒப்பீடு

இவ்வாறு அமைந்த பாம்பாட்டிச் சித்தர், வேதநாயக சாஸ்திரியார் இருவரது பாம்புப் பாடல்களையும் நுணுகி நோக்கின் பல்வேறு ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் புலனாகின்றன. அவற்றைத் தொகுத்துச் சில குறிப்புகளாகக் காண்போம்.

'ஆடுபாம்பே' என விளித்துப் பாடல்

இருபெரும் பாவலர்களுமே, தாம் கூற வந்த செய்திகள் எதுவானாலும், 'ஆடுபாம்பே' என பாம்பை விளித்தே பாடுவதை இப்பாடல்களில் காண்கிறோம். புராணங்களில் வரும் பாம்பின் மகிமைகளையும் சிறப்புக்களையும் பாம்பிடமே கூறுகிறார் பாம்பாட்டியார். தேன் வனத்துச் சாத்தானாகிய பாம்பின் இழிவு களையும் பாம்பிடமே எடுத்துரைக்கிறார் - இடித்துரைக்கிறார் சாஸ்திரியார். குறிப்பாக, சாஸ்திரியாருக்கு 'ஆடு பாம்பே' என விளித்துப் பாம்புப் பாடல் பாடுவதில் சில சிரமங்கள் உண்டு. கிறிஸ்தவ நம்பிக்கைப்படி, பொதுவாக, பாம்பு என்பது தீமையின் ஒட்டுமொத்த உருவமாகிய சாத்தானின் குறியீடாகக் கருதப்படுவது. இத்தகைய பாம்பை, கிறிஸ்துவைப் பாடும் கவிஞரான சாஸ்திரியார் எவ்வாறு விளித்துப் பாட இயலும்? எனினும், பாம்பை விளித்து, பாம்பின் இழிவைப் பாம்பிடமே பாடும் சாஸ்திரியார் துணிவு வியப்புக்குரியது. விந்தையானது.

புராணப் பாம்பும் வெண்கலச் சற்பமும்

சிவனின் கழுத்தில் குண்டலமாகவும் பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலின் படுக்கையாகவும் விளங்கும் பாம்பின் பெருமையைச் சித்தர் பாடுகிறார். சாஸ்திரியார், பொதுவாக ஏதேன் வனத்துப் பாம்பை இழித்துப் பேசினாலும், கொள்ளிவாய்ப் பாம்பு களிடமிருந்து இஸ்ரவேல் மக்களைக் காத்த வெண்கலப் பாம்பின் உயர்வைப் பேசி, அது கிறிஸ்து பெருமானுக்குக் குறியீடாக விளங்குவதையும் நுட்பமாக உணர்த்துகிறார். பொதுவாக, கிறித்தவர்களும் அதிகம் சிந்திக்காத, விவிலியத்தின் ஆழமான - நுட்பமான உண்மைகளைச் சாஸ்திரியார் பொருத்தமுறக் கையாளுவது போற்றுதற்குரியது.

நக்கீரர் அருளிய பெருந்தேவபாணியில் தத்துவம்

எஸ். வீரபாண்டியன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சிதம்பரம்

மதுரையில் கடைச் சங்கத்தே வீற்றிருந்து தமிழ் ஆய்ந்த தண்டமிழ்ப் புலவர் பலர். இதில் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் என்பவர் மிகவும் குறிப்பிடத்தக்கவர். திருமுருகாற்றுப்படை, கயிலைபாதி காளத்திபாதி, திருஈங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருஎழு கூற்றிருக்கை, போபப்பிரசாதம், கார் எட்டு, போற்றித்திருக்கலிவெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம், பெருந்தேவபாணி ஆகிய நூல்கள் 11-ஆந் திருமுறையில் நக்கீரர் அருளியதாக கூறப்படுவன. இந்நூல்களில் பெருந்தேவபாணி என்னும் நூலில் உள்ள தத்துவக் கோட்பாட்டை ஆராய்ந்து கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெருந்தேவராய திருவாலவாயிறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றும் இசைப்பாட்டாதலின் இப்பெயர் பெற்றது. பெருந்தேவன் - தேவதேவன், மாதேவன், பாணி-பண்ணோடு கூடிய பாட்டு என்பது பொருளாகும். இந்நூல் அறுபத்தேழு அடிகளால் அமைந்து ஆசிரியப்பாவால் ஆகியது. ''சான்றவர் ஆய்ந்திட தக்கவாம் பொருள் மூன்றுள'' என்பது கந்தபுராணத்தை அருளிச் செய்த கச்சியப்ப சிவாச்சாரியார் வாக்கு. முப்பொருள்களாவன, இறை, உயிர், தளை என்பன முறையே வழங்கப்படுகின்றன. (பெருந்தேவ பாணியில்) முழுமுதற்பொருளாக விளங்குபவன் சிவபிரான். சூலபாணியாகவும், சுடர்தகு வடிவானவனாகவும், நீலகண்டனாகவும், நெற்றிகண்ணினை உடையவனாகவும், யோக வடிவத்தினை உடையவனாகவும், மார்பிலே முப்புரி நூல் அணிந்தவனாகவும், வேதவடிவினன் ஆகவும், கீதவடிவினன் ஆகவும், கொன்றை மாலையை அணிந்தவனாகவும், எல்லா மூர்த்தியிருக்கும் ஆதி மூர்த்தியாகவும் இறைவன் விளங்குகின்றான். மேலும்,

நீதியும் நீயே, நிமலன் நீயே
புண்ணியம் நீயே, புனிதன் நீயே

பண்ணியல் நீயே, பழம்பொருள் நீயே
ஊழியும் நீயே, உலகமும் நீயே
வாழியும் நீயே வரதனும் நீயே
வேதரும் நீயே, தீர்த்தமும் நீயே
மூவரும் நீயே, முன்நெறி நீயே
மால்வரை நீயே, மறிகடல் நீயே
இன்பமும் நீயே, துன்பம் நீயே
தாயும் நீயே, தந்தையும் நீயே

இவ்வாறு பெருந்தேவனாக இறைவன் விளங்குவதை நக்கீரர் சிறப்பித்துக் கூறுகின்றார்.

உயிர்களும், பாசமும் (தளை)

உயிர்கள் என்பன மூவகைக் குற்றத்தை உடையவனாக இருக்கின்றன. அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். இந்தப் பாசம் நீங்கினால் உயிர் வீடுபேறு எய்தும் என்பது சித்தாந்தத் தத்துவம்.

திரிபுரம் எரித்தது

தாரகாஷன், கமலாசன், வித்யுன்மாலி என்னும் மூன்று அசுரர்கள் வாள்வலியாலுந் தோள்வலியாலும் தலை சிறந்து ஒப்பாரும் மிக்காருமின்றி இருந்தனர், இவர்கள் பிரமனை நோக்கி அநேக காலம் பெருந்தவம் புரிந்தனர். தவத்துக்கிரங்கிய பிரம்மதேவன் யாது வரம் வேண்டும்? என்று கேட்டார். அழியாவரம் அருள வேண்டும் என மூன்று அசுரர்களும் கேட்டனர். தோன்றியது மறையும், மறைந்தது தோன்றும், தோற்றமும் மறைவும் இல்லாதவர் சிவபரஞ்சுடராகிய செஞ்சடைக் கடவுளாக விளங்கும் சிவபிரான் ஒருவரே. ஏனைய யாவரும் அழியக்கூடியவர்களே. ஆதலால் இதைத் தவிர்த்து வேறு வரம் கேளுங்கள் என்று பிரமதேவன் கூறினார். ஆதலால், அது நீங்க வேறு ஒன்று வேண்டிற் தருதும் எனத் தானவர், பொன், வெள்ளி, இரும்பினாலமைந்த மதில்கள் பொருந்திய முப்புரம், பூமி, அந்தரம், சுவர்க்கம் என்னும் மூவுலகங் களிலும் வேண்டும் அவை ஆயிர வருடத்திற்கு ஒருமுறை விரும்பிய இடத்திற்குப் பெயர வேண்டும் அப்புரமூன்றும் ஒன்றுபட்டபொழுது சிவபெருமானே ஒரு கணையால் அழித்தாலன்றி வேறொருவராலும் மாளாத வரம் வேண்டும் என்று கேட்க, அவர்கள் (அசுரர்கள்) விரும்பியவாறு வரமீந்து தனது இருக்கை சேர்ந்தனன் (பிரமன்).

தாரகாஷன் முதலிய மூவசுரர்களும், அளவில்லாத அவுணர் சேனைகளை உடையவராய், மயன் என்னுந் தேவதச்சனைத் தருவித்துத் தங்கள் விருப்பின்படி மண்ணுலகில் இரும்பு மதிலும்,

அந்தரவுலகில் வெள்ளி மதிலும், விண்ணுலகில் பொன் மதிலுமாகப் பல வளங்களும் பொருந்திய முப்புரங்களை உண்டாக்கிக் கொண்டு குறைவற வாழ்ந்து வந்தனர். ஆயினும் அசுர குலத்தின் தன்மைப்படி வைகுந்தம் முதலிய தேவநகரங்களையும், உலகிலுள்ள பல பதிகளையும் திரிபுரத்தோடு சென்று சிதைத்துத் தேவர் கூட்டங்களுக்கு இடுக்கண் பல விளைவித்தனர். விண்ணவர்கள் இவர்கள் கொடுமை தாங்க இயலவில்லை என்று வருந்திச் சிவபிரானிடம் முறையிட, சிவபிரான் திருநந்தித் தேவரை விளித்து அமரற்பாற் சென்று திரிபுரத்தவரைச் செயிக்க, இரத முதலிய யுத்தக்கருகளைச் சித்தஞ் செய்யக் கட்டளையிடுக என்றார். திருநந்தித் தேவரும் சிரமேற்கொண்டு சிவபெருமானின் கட்டளையைத் தேவர்களுக்கு தெரிவித்தார்.

மந்திரகேசரி மலைகள் அச்சாகவும், சந்திர சூரியர் சக்கரங் களாகவும், பதினான்கு லோகங்கள் பதினான்கு தட்டுகளாகவும், உதியாஸ்தகிரிகள் கொடிஞ்சியாகவும், நதிகளும், நதங்களும், நாட்டுங் கொடிகளாகவும், நட்சத்திரங்கள் நல்லவிதானமாகவும், மோட்ச லோகம் மேல் விரிவாகவும், மகங்கள் சட்டமாகவும், நாள் முதலியன எண்ணெயூற்றும் இடுக்கு மரமாகவும், அட்ட பருவதங்கள் தூண்களாகவும், எட்டுத் திக்குகள் யானைகள் இடையிற் தங்கவும், ஏழு சமுத்திரங்கள் திரைச்சீலையாகவும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்கள் கலன்களாகவும், கலைகள் முளைகளாகவும், புராணம் வேதாங்கம், சாத்திரம், மனுக்கள், மணிகளாகவும், மருந்துகள் படிகளாகவும், அமைந்த திவ்யமான ஓர் இரதத்தைச் செய்து, வேதங்கள் நான்கையும் நான்கு குதிரைகளாகப் பூட்டி, சதுர்முகனைச் சாரதியாக நிறுத்தி, பிரணவ மந்திரத்தைக் குதிரையைத் தூண்டுங் கோலாகக் கொண்டு, கங்கை, அதிதி முதலிய தேவநங்கையர், நாற்புறமுஞ் சாமரையிடவும், தும்புரு நாரதர் இசைபாடவும், அரம்பை முதலிய அப்சரசுகள் நடனமாடவும் அமைத்து மேரு மலையை வில்லாகவும், நாகராஜன் நாணியாகவும், திருமால் பாணமாகவும், சரஸ்வதி வில்லிற்கட்டிய மணியாகவும், அக்னிதேவன் அம்பின் கூர்வாயாகவும், வாயுதேவன் அம்பிற் கட்டிய இறகாகவும் ஏற்படுத்தி, திருக்கயிலாய மலையை அடைந்து அரனாரைப் பணிந்து அண்ணலே! வில்லை வளைத்துக் கணைவிடவேண்டும் என்று வேண்டினர். சிவபெருமான் தமது திருக்கரத்தேந்திய மேருமலையாகிய வில்லில் பணியரசாகிய நாணையேற்றினார். அதில் அம்புபூட்டித் திரிபுரத்தையழிப்பின் அந்தரர் அந்தமில் அகந்தையுறுவர் என்றும், தனக்கோர் ஆயுதமேனும் படையேனும் துணை வேண்டுவதில்லை என்பதைத் தேவர்கள் தெரிந்து உய்தல்

வேண்டுமென்றும், சங்கல்ப மாத்திரத்தாலேயே சகலமும் செய்ய வல்லவன் என்பதை உலகம் உணருமாறும், இடப்பால் வீற்றிருக்கும் இமயவல்லியைக் கடைக்கணித்துப் புன்னகை புரிந்தார். அக்கணமே புரங்கள் மூன்றும் சாம்பலாயின. இந்தப் புராண வரலாற்றை அமைத்துக்காட்ட நக்கீரர் பெருந்தேவபாணியில்,

''தீதமர் செய்கைத் திரிபுரம் எரித்தனை'' என்று அருளிச் செய்திருக்கின்றார்.

முப்புரம் எரித்தல் என்பது ஆணவம், கன்மம், மாயை என்று மூன்று மலங்களைக் குறிக்கும்.

''அப்பணி செஞ்சடை ஆதிபுராதணன்
முப்புரஞ் சென்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மலக் காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே'' (திருமந்திரம் - 343)

''தக்கன் வேள்வியைத் தளரச்சாடினை''

''ஈரமில் நெஞ்சத்து இராவணன் தன்னை
வீரம் அழித்து விறல்வாள் கொடுத்து''

போன்ற பெருந்தேவபாணியில் நக்கீரர் அருளிய வரித்தொடர்கள் எல்லாம், இறைவன் உயிர்களின் ஆணவத்தை அழிக்கும் தத்துவத்தை உணர்த்துவன.

முடிவுரை

நக்கீரர் பெருந்தேவபாணியின் முடிவில் இறைவன் பஞ்ச பூதவடிவினன் என்னும் தத்துவத்தை உணர்த்துவதோடு. உயிர்களுக்கு ஊறு விளைவிக்கும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத்தினை நீக்கி முத்திப்பேற்றை அருளுவான் என்னும் தத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றார்.

''விண்முதற் பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே, முத்தியும் நீயே'' (நக்கீரர்)

துணைநூல்கள்

1. பதினோராந்திருமுறை, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் வெளியீடு, 1993.
2. திருமந்திரம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் வெளியீடு, 1994
3. வாரியார் போதிக்கும் புராண கதைகள், திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள், குகஸ்ரீ வாரியார், பதிப்பக வெளியீடு, சென்னை, 1996.

இலக்கியங்களில் மறுபிறப்பு

தா. திருநாவுக்கரசு

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

பண்பாட்டைப் பறைசாற்ற வந்த இலக்கியப் பாடல்களுள் சில இந்துமதக் கருத்துக்களை வலியுறுத்தும் விதமாக அமைந்துள்ளன. அப்பாடல்கள் இந்துமதக் கருத்துக்களுக்கு வக்காலத்து வாங்கு வதற்காகவே படைக்கப்பட்டுள்ளன.

மறுபிறப்புக் கொள்கை

இந்துமதம் மறுபிறப்புப்பற்றி வலியுறுத்தும் மதமாகும். மனிதனுக்கு மீண்டும் பிறப்பு உண்டு என்றும் அது அவன் செய்த நன்மை தீமைகளைக் கணக்கில் கொண்டு நிர்ணயிக்கப்படும் என்றும் அது அவன் செய்த பாவங்களுக்குத் தண்டனையாகவே அமையும் என்றும் கூறுகிறது. ஒருவன் முற்பிறவியில் நன்மை செய்திருந்தால் நன்மை அடைவான் என்றும், தீமை புரிந்திருந்தால் தீமை அடைவான் என்றும் கூறுகிறது.

''வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்''

''விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா''

போன்ற பழமொழிகள் உருவாவதற்கும் இந்துமத மறுபிறவிக் கொள்கைகளே காரணமாக அமைந்துள்ளது.

அச்சம்தரும் செய்திகள்

மக்களுக்கு அச்சத்தை ஊட்டுவதற்காகவே இவ்வாறான கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன. உளவியலார் மனிதர்களுக்கு இரண்டு விதமான பயம் உண்டு என்று கூறுவர் ஒன்று வாழ்வு பற்றிய பயம் (Life instinct) மற்றொன்று மரணம் பற்றிய பயம் (death instinct) மரணத்தை மையமாக வைத்து மதங்கள் தங்களுடைய கருத்துக்களைப் பரப்பின. இயற்கை பற்றிய பயத்தின் காரணமாக மனிதன் இடி, மின்னல், மலை, கடல், ஆறு ஆகியவற்றை வழிபட்டான் இதன் பரிணாம வளர்ச்சியே கடவுள் நம்பிக்கை என்றும் மனிதர்களைத் தங்கள் பக்கம் இழுக்கவேண்டும் என்றும், அவர்களை நெறிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் ஒவ்வொரு

மதமும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை அமைத்துக்கொண்டன. இந்து மதம் மறுபிறப்புக் கொள்கையைக் கையிலெடுத்துக் கொண்டது. அதை ஆயுதமாகப் பயன்படுத்தியது. மனிதர்களின் அச்சத்தைச் சாதமாக்கிக் கொண்டது.

உயிர்க்கொலை கூடாது

எல்லா உயிரினங்களும் வாழ்வதற்காகப் பிறந்துள்ளன. அவை கடவுளால் உருவாக்கப்பட்டவை. எந்த உயிரையும் அழிப்பதற்கு மனிதனுக்கு அனுமதியில்லை. யானைக்குப் படைக்கப்பட்டது போன்றே எறும்பிற்கும் உயிர் படைக்கப்பட்டுள்ளது. உடல் அளவில் வேறுபாடு உள்ளதே தவிர உயிரளவில் வேறுபாடு இல்லை. ஒரு எறும்பைக் கொல்வதும் பாவம். இறைவனால் படைக்கப் பட்ட உயிர்களைக் கொல்வதற்கு எவருக்கும் உரிமையில்லை. உயிர்க்கொலை புரிபவர்கள் மறுபிறவியில் அவ்வுயிராகப் படைக்கப்படுவார்கள். அவ்வுயிராலேயே துன்பம் அடைவார்கள்.

மறுபிறவி உண்டு

இந்து மதமும் அதனைப் பின்பற்றுபவர்களும் கூறும் கருத்தே மறுபிறவி உண்டு என்பது. பாவ எண்ணிக்கைகளுக்குத் தக்கவாறு பிறவி அமையும் என்பது,

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்'' - மாணிக்கவாசகர்

''கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டெழுந்தேன்''
- சுந்தரர்

''பிறவி வேண்டேன் அரங்கமாநகருளானே'' - ஆழ்வார்

''பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும் மறவாமை வேண்டும்''
- காரைக்காலம்மையார்

என்று கதறுவதன் மூலம் இந்து மதத்தின் மறுபிறப்புக் கொள்கையை உணரலாம்.

இலக்கியத்தில் மறுபிறப்புக் கொள்கை

இலக்கியமும் இதற்கு விதிவிலக்கல்ல. பகுத்தறிவு கூறவந்த வள்ளுவரும் ''பிறவி - பெருங்கடலை நீந்துவதற்குரிய வழி'' (குறள் - 10) என்றே கூறுகிறார்.

''பிறப்பு வீடுபேறு என்று இருமை வகைகளையும்'' (23)

''வாழ்நாள் வழியடைக்கும் கல்'' (38)

என்றும்

''எழு பிறப்பு''

பற்றியும்

''மறுமையும் இம்மையும்'' (98)

இன்பம் தருவது பற்றியும் கூறும் வள்ளுவர்.

''அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்'' (321)

என்றும்

''ஒன்றாக நல்லது கொல்லாமை'' (323)

என்றும்

''நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி'' (324)

என்றும் மறுபிறப்பை வழிமொழியும் வள்ளுவர், கொல்லாமையையும் வலியுறுத்துவது உயிரிரக்கம், மறுபிறவி போன்ற கருத்துக்களை வலியுறுத்துவதாக அமைகின்றது. ''மெய்ப்பொருளைக் காண்பது அறிவு'' (355) என்று கூறும் வள்ளுவர் மறுபிறப்பை நேரில் பார்த்தாரா?

''பற்றற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்'' (349)

என்றும்

''பிறப்பு என்னும் பேதமை'' (358)

நீங்குவதற்கும்

''மற்று ஈண்டு வாரா நெறி''யினையும் (356)

''மாணாப் பிறப்பு'' (351)

உண்டாவதையும் கூறும் வள்ளுவர். இந்து மதக் கருத்தான ''மறுபிறவி'' என்னும் கருத்திற்கு அரண் அமைப்பதை உணரலாம்.

புறநானூற்றில் மறுபிறவிக் கருத்துக்கள்

தமிழர்களின் பண்பாட்டைப் பறைசாற்றும் சங்கவிலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார்.

''யாது மூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வரா
நோதலுந் தணிதலுமவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்

இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னாதென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புனைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் தெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே'' (புறம். 192)

என்ற பாடலில் கேடும் ஆக்கமும் தாமே வருவனவே அல்லாமல் பிறரால் வராது என்று கூறுவதன் மூலம் முற்பிறவியில் நாம் செய்த வினைகளுக்கேற்பவே இப்பிறவியில் நமக்கு நன்மை தீமை அமையும் என்பதை உணர்த்துகின்றார். பிறவிகள் பல உண்டென்பதையும் இறப்பு உயிர்களுக்குப் புது அனுபவம் கிடையாது என்றும் பல இறப்புக்களை உயிர் சந்திக்கின்றது என்றும் நீரின் வழியே செல்லும் மிதவை போல உயிர் பாவ, புண்ணியங்களின் அடிப்படையில் அமைக்கப்படும் என்றும் கூறுவது மறுபிறப்புக் கொள்கைக்கு வலிமை சேர்ப்பதாகவே அமைந்துள்ளது.

முடிவுரை

கண்டவர் விண்டிலர் என்பது மறுக்கமுடியாத உண்மை, பார்க்காத ஒன்றைப் பார்த்ததாகக் கூறுவது அறிவுக்கு ஏற்புடையதாக அமையாது.

தோலாமொழித்தேவரின் வினைக்கருத்துகள்

செ.மா.க. வசந்தகோகிலம்

சி.கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர் - 607 001

மக்களின் வாழ்க்கையினின்று முகிழ்க்கும் இலக்கியங்கள் அம்மக்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப்படுத்துவதுடன் அவ்விலக்கியப் படைப்பாளர்களின் கருத்துகளையும் புலப்படுத்துவனவாக உள்ளன. அக்கருத்துகளுள் ஒன்று உயிர்களின் வினை பற்றியதாகும். அவ்வினை பற்றிய தோலாமொழித் தேவரின் கருத்துகளை அவர்தம் சூளாமணிக்காப்பியம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

வினை வகை

உலகில் தோன்றும் உயிர்கள் தம் உடல், உரை, உள்ளம் ஆகியவற்றால் மேற்கொள்ளும் வினைகள் நல்வினை, தீவினை என இருவகைத்தாதலை இருவகை வினைகள் *(12:1)* என்று குறிப்பிடும் தோலாமொழித்தேவர் இரண்டினுள் 'நல்வினை இனிதின் ஊட்டும்' *(11:12)* என்பதை உட்கொண்டு அதனை 'நல்வினைத் தெய்வம்' *(11:4)* 'நல்வினை என்னும் இன்னமுன் உபகாரி' *(11:5)* என்றும் தீவினை மிகக்கொடிதாதலை 'தீவினைப் பகை' *(3:4)* தீவினை இருள்கள் *(4:85)* வல்வினை *(11:12)* என்றும் சுட்டுகிறார்.

வினைக்கு வித்து

உயிர்கள் புரியும் வினைகள் விளைதற்கான வித்து 'மெய்யறிவின்மை' என்பது தோலாமொழித்தேவரின் கருத்தாகும். மெய்யறிவின்மையாகிய பேதமை, காம வெகுளிகளுக்குக் காரணமாகி வினைகளை விளைப்பதனை,

> 'மெய்யறி விலாமை யென்னும் வித்தினுட் பிறந்து வெய்ய
> கையறு வினைகள்' *(4:80)*

என்று அவர் குறிப்பிடுகிறார்.

வினையின் விளைவு

உயிர்கள் மெய்யறிவு இலாமையால் மேற்கொள்ளும் பல்வேறு வினைகளின் விளைவாகப் பன்முறை பிறந்தும் இறந்தும் உழல நேரிடுமென்பதை,

'சூழ்வினை துரப்பச் சென்று சூழ்வினைப் பயத்தினாலே
வீழ்வினை பிறிது மாக்கி வெய்துற விளிந்து தோன்றி
ஆழ்துய ருழக்கு மந்தோ வளியற்ற வறிவில் சாதித்
தாழ்வினை விலக்குச் சார்வு தலைப்படா வளவும்' *(4:81)*

என்றுரைக்கும் தோலாமொழித் தேவர் அவ்வாறமையும் பிறவிகள் இவ்வளவு என்று எண்ணி அளவிடற்கரியன என்பதை,

''கையறு வினைகள் கைமாய்க் கடுந்துயர் விளைந்த போழ்தின்
மையுற வுழந்து வாடும் வாழுயிர்ப் பிறவி மாலை
.... இனைத்தென நினைக்க லாமோ?'' *(4:80)*

என்கிறார். இவ்வாறு பிறத்தலும் இறத்தலும் தொடர்ந்து நிகழ்தலைப் *'பிறவி மாலை' (4:80)', 'பிறவிச் சக்கரம்' (4:85)* என்ற தொடர்களால் உணர்த்தும் தேவர் அவை அளவற்ற துன்பந் தருதலின் *'மா துயர்' (4:82) 'அருந்துயர்' (4:85)* என்று குறிப்பிடுகிறார்.

வினையின் விளைவாகப் பல்வேறு பிறவிகளை எடுக்கும் உயிர்கள் அவ்வப்பிறவிகளில் பெறும் யாக்கையும் வினைதர வருவ தென்பதும் அது தோன்றிய இவ்வுலகிலேயே அழிந்துவிடுமென்பதும் தேவர் கருத்தாதலை,

'ஒருவன திரண்டி யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த
உருவமும் புகழு மென்றாங் கவற்றினூழ் காத்து வந்து
மருவிய வுருவ மிங்கே மறைந்துபோம்' *(7 : 204)*

என்ற வரிகளால் அறியலாம். உயிர்கள் பிறவிதோறும் உறும் உயர்நிலையும் இழிநிலையும் அவ்வினையின் விளைவென்பதையும் விளக்குகிறார் தேவர். மதிநுட்பம், குலநலம், புகழ், கல்வி, வடிவு முதலான அனைத்திலும் சமமான இருவருள் ஒருவர்க்கு மற்றொருவர் அடிமைப்பணி பூண்டொழுக நேர்வதும் வினையாலே யாகும் என்பதனை,

'கருத்துமாண் குலனுந் தேசுங் கல்வியும் வடிவிந் தம்மில்
பொருத்தினாற் பழிக்க லாகாப் புலமைமிக் குடைய ரேனு
மொருத்தனுக் கொருத்தன் கூறக் கேட்டுற்றுச் செய்து வாழத்
திருத்தினா னிறைவ னேகாண் செய்வினைக் கிழவ னென்பான்'
(7:95)

என்கிறார். இவ்வாறு உயிர்களின் நுகர்ச்சியை ஒழுங்குபடுத்துவது - முறைப்படுத்துவது காரணமாக 'ஊழ்' எனப்படும் வினையைத் *'துப்பின் விதி செய் வினை' (11:81)* என்றுரைக்கிறார் தோலா மொழித்தேவர்.

வினையின் வலிமை

உயிர்களை மயக்கத்தில் ஆழ்த்துவதும் வருத்தும் பிறவிகளில் அழுத்துவதும் வினையேயாதலின் அதனை, 'வினைப்பகை' *(4:79&99)*, 'மருள்புரி வினைகள்' *(11:27)*, 'ஆழ்இயல் வினைகள்' *(11:54)*, 'கருமாலை வெவ்வினைகள் *(11:65)*, 'வினையெனும் தீயிருள் '*(11:179)*, 'கருமால் வினை' *(12:55)*, 'அருமால் வினை' *(12:60)*, 'சலம்புரி வினை' *(12:62)*, என்று பலவாறாகக் குறிப்பிடும் தேவர் இத்தகுவினை மிகவும் வலிமையானதென்பதை உணர்த்தும் வகையில் அதனை 'வினைக்கிழவன்' *(7:95)*, 'வினைவர்கள்' *(12:48)*, 'வினைவர் கூட்டம்' *(12:54)*, 'வினைவேந்தர்' *(12:56)*, என்று பலவிடங்களில் உயர்திணைச் சொற்களால் சுட்டுகிறார்.

ஒரு செயலை நாம் நன்கு எண்ணித் தொடங்கினாலும் வினையின் வலிமையால் நாம் எண்ணியவாறு முடியாமல் வேறொருவிதமாக முடியும் என்பதனை,

'ஒன்றுளாங் கருதிச் சூழி னூழது விளைவு தானே
கன்றிளாங் கருதிற் றின்றி மற்றொர்வா றாக நண்ணும்'
(5:120)

என்றும்

'வினைகடாம் விளையு மாறியாம் வேண்டிய வாறு வாரா'
(10:273)

என்றும் உரைக்கிறார் தேவர். அங்ஙனம் நிகழ்கின்ற செயல்களை முன்னரே அறிந்துகொள்ள வல்லார் எவருமிலர் என்பதை,

'ஆகுவ தாமதனை யாவ ரறிகிற்பார்?' *(9:338)*

என மொழியும் தேவர் அவ்வினையின் செயலை விலக்குவதும் அரிதென்கிறார். ஒருவர் தம் அறிவால் ஆராய்ந்து உடல் வருந்தி ஈட்டிய பொருளை நுகர எண்ணும் வேளையில், அவரது உறையுளை நிலைகுலையச் செய்து அவர் ஈட்டிய நிதிக்குவியலைப் பறித்து ஏதிலார்க்குக் கொடுக்கும் வலிமை வாய்ந்தது வினையென்றும் அதனை மாற்றல் அரிதென்றும் தேவர் கருதுவதனை,

'மதியினை மலரச் சூழ்ந்து வருந்தித்தாம் படைக்கப் பட்ட
நிதியினை நுகர்ந்து மென்று நினைத்தினி திருந்த போழ்திற்
பதியினைக் கலக்கிச் சென்று பறித்துத்தாம் பிறர்க்கு நீட்டும்
விதியினை விலக்க மாட்டா மெலிபவால் வெளிய நீரார்'
(7:96)

என்ற பாடல் உணர்த்துகிறது.

வினை வேரறுத்தல்

வினையின் வலிமையால் ஆழ்ந்த துன்பத்தை நுகரும் உயிர்கள் சிறிது சிறிதாக மெய்யறிவுற்றதும் வினையின் பிடியிலிருந்து விலகும் என்பதும் தோலாமொழித் தேவரின் கருத்தாகும். வினை களைதற்குப் பல வழிமுறைகளை அவர்தம் காப்பியத்தில் காட்டியுள்ளார்.

இறைவனைத் தூய உள்ளத்தினராய்ப் போற்றிக் கூறும் அன்புடைமொழிகள் வினைப்பகை விலக்குமாற்றை,

'வெருவுடை வினைப்பகை விலக்கும் வீறுசால்
மருவுடை மொழிகளாற் பரவி' (4:99)

என்கிறார்.

முனிவர்களின் அறவுரைகளை 'அமிர்து' எனச் சிறப்பிக்கும் அவர், அவை வினையறுத்துப் பிறவிகளை மாற்றும் இயல்பினவாதலை,

'அணங்கும் அறவமிர் தூட்டி யடிகள்
பிணங்கும் பிறவிகள் பேர்த்து' (11:77)

என்றும்,

'துன்னிய வினைப்பகை துணிக்குந் தொன்மைசால்
இன்னுரை யழிழ்து' (4:79)

என்றும்,

'பன்னிய பவங்க டீர்க்கும் பயங்கெழு மொழிகள்' (4:86)

என்றும் பலவிடங்களில் கூறுகிறார்.

துறவறத்தார்க்குரிய நெறியென மெய்ந்நூல்களால் வரையறை செய்யப்பட்ட வழியில் நின்று சிறப்புடைய தவவொழுக்கத்தை மேற்கொண்டொழுகினால் வினை வரும் வழியடைத்துப் பிறவிப்பிணியைப் போக்கலாம் என்பதை,

'ஆற்றி லமைந்த வருந்தவத் தால்வினை
ஊற்றுச் செறித்த' (11:76)

என்றும்,

'பிணிபடு பிறவிநோய் பெயர்க்கு மாதவம்' (12:11)

என்றும் தேவர் கூறுவதால் உணரலாம்.

மாட்சிமையுடைய நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகிய மூன்றும் வினை நீக்கும் பான்மையை,

'அருந்துய ஏறுக்கு மாண்பி னாரமிர் தவைகண் மூன்றும்' (4:85)

என்று பகர்கிறார் அவர்.

அருகக் கடவுளின் திருவடிகள் உயிர்களின் பிறவித் துன்பங் களை அழிக்கும் திறத்தினை,

'ஆதியந் தகன்று நின்ற வடிகளே சரணங் கண்டாய்
மாதுய ரிடும்பை தீர்க்குஞ் சரணெனப் படுவ' (4:82)

என மொழிகிறார்.

வீடு பெறுதல்

உயிர்கள் வினைத்தொடர்பு நீங்கி மெய்யறிவுற்ற நிலையில் ஒப்பற்றதும் எல்லையற்ற இன்பத்தினின்று என்றும் பிறழாததுமான வீட்டுலகினைப் பெறுதல் உறுதியாதலை உணர்த்துகிறார் தோலாமொழித்தேவர்.

'கருமால் வினையரசு காறரை நூறிப்
பெருமான் முடிவென்னும் பெண்ணரசி தன்னை
ஒருவாமை வேட்டெய்தி யூழி பெயர்ந்தாலும்
வருமா றிலாத வளநகரம் புக்கானே' (12:53)

என்ற பாடல் வினையை வேரறுப்பின் மீண்டும் பிறவிகளில் வருதலில்லாத வீட்டுலகடையலாம் என்னும் அவரது கருத்தினைப் புலப்படுத்துகிறது.

முடிவுரை

உயிர்களைக் கலக்கும் வினை விளையுமாற்றையும் அதனை வேரறுக்கும் உத்திகளையும் தம் சூளாமணிக் காப்பியத்தில் தோலாமொழித்தேவர் விரிவாக விளக்கியிருப்பதுடன் வினை மற்றும் பிறவி பற்றிய செய்திகளை,

'ஒருவன் செய்த ஊழ்வினை யுதயஞ் செய்து
விரிதலி தைன துண்மை விளங்கினாற் போல' (5:35)

'...........சனங்க ளெல்லாம்
பரிந்தகங் கழுமத் தேறிப் பவம்பரிந் தவர்க ளொத்தூர்'
(4:85)

என்று உவமைகளாகக் கூறியிருப்பதையும் நோக்குமிடத்து, வினை பற்றிய அவரது ஆழ்ந்த நம்பிக்கையையும் உயிர்கள் அனைத்தும் வினைவென்று வீடுபெற வேண்டுமென்ற அவரது உள்ளக் கிடக்கையையும் உய்த்துணர முடிகிறது.

இராம காதையில் கீதை

நா. மணிமேகலை

தியாகராசர் கல்லூரி
மதுரை - 625 009

திருமால் மண்ணுலகில் பிறந்து, மண் மீது நடந்து, மண்ணில் வாழ்ந்து, தம் பக்தர்களுக்கு அருளாசி கூறவும், ஆணவத்தால் தருக்குற்று வாழ்ந்த இராவணன் போன்ற அரக்கர்களின் ஆற்றலை ஒழித்து, தருமத்தை நிலை நாட்டவும், அவதாரம் செய்த நிகழ்ச்சியை விளக்குவதுதான் இராம காதை. இராமாயணம் - இராமன்+அயனம், அயனம் என்றால் காடு என்று பொருள். இராமன் காட்டுக்குச் சென்றதைப் பற்றிக் கூறியதால் இராமாயணம் என்று பெயர் பெற்றிருக்கலாம்[1].

இதிகாசங்கள்

இராமாயணமும், மகாபாரதமும் இரு பெரும் இதிகாசங்களாகும். மகாபாரதம் முதலில் வேதவியாசரால் வடமொழியில் இயற்றப்பட்டது. பிறகு அத்தியப்பட்டர் என்பவர் பாலபாரதம் என்னும் நூலை வடமொழியில் இயற்றினார். பாலபாரதத்தை முதல் நூலாகவும், வியாசரால் எழுதப்பட்ட பாரதத்தைத் துணை நூலாகவும் கொண்டு வில்லிப்புத்தூரார் மகாபாரதத்தைத் தமிழில் இயற்றினார்.

வில்லிப்புத்தூரார் வைணவ அந்தணர். அவர் பிறந்தது நடுநாட்டிலுள்ள சனியூர். தந்தை பெயர் வீரராகவாச்சாரியார். இவரை ஆதரித்தவர் வாக்கை பாகைவரபதி ஆட்கொண்டான். இவர் வாழ்ந்த காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி ஆகும்.

மகாபாரதம், ஆதி பருவம், சபா பருவம், ஆரணிய பருவம், விராட பருவம், உத்தியோக பருவம், பீஷ்ம பருவம், துரோண பருவம், கர்ண பருவம், சல்லிய பருவம், சௌத்திக பருவம், ஸ்திரீ பருவம், சாந்தி பருவம், அநுசாஸநிக பருவம், அசுவமேத பருவம், ஆசிரம பருவம், மௌசலவாச பருவம், மகாப்பிரஸ்தான பருவம், சுவர்காரோகண பருவம் எனப் பதினெட்டுப் பருவங்களையுடையது.

இராமாயணம் முதலில் வால்மீகியால் வடமொழியில் படைக்கப் பட்டது. பின்னர் கம்பரால் தமிழில் எழுதப்பட்டது. இது, பால

காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை யுடையது.

நான்கு யுகங்கள்

2500 ஆண்டு காலம் ஒரு யுகம் எனக் குறிக்கப்படுகின்றது. இதுவரை மூன்று யுகங்கள் தோன்றி தற்போது நான்காம் யுகம் நடந்து கொண்டுள்ளது. அவை 1. கிருதயுகம், 2. திரேதா யுகம், 3. துவாபர யுகம், 4. கலியுகம்.

ஒவ்வொரு யுகத்திலும் அறத்தை நிலைநாட்டவும், அதர்மத்தை அழித்து ஒழிக்கவும் எல்லாம் வல்ல பரம் பொருளின் அம்சமே விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கி வந்து அருள் பாலித்துள்ளது என்பதை வேத நூல்களும் உபநிடதங்களும் குறிப்பிட்டுள்ளன.

அவதாரங்கள்

திருமால் எடுத்துள்ள அவதாரங்கள் பத்து ஆகும். அவை,

1. மச்சாவதாரம்	- மீன்	- கிருதயுகம்
2. கூர்ம அவதாரம்	- ஆமை	- கிருதயுகம்
3. வராக அவதாரம்	- பன்றி	- கிருதயுகம்
4. நரசிங்க அவதாரம்	- சிங்கம், மனிதன்	- கிருதயுகம்
5. வாமன அவதாரம்	- குள்ளன்	- கிருதயுகம்
6. பரசுராம அவதாரம்	- மனிதன்	- திரேதாயுகம்
7. இராம அவதாரம்	- மனிதன்	- திரேதாயுகம்
8. பலராம அவதாரம்	- மனிதன்	- துவாபரயுகம்
9. கிருஷ்ண அவதாரம்	- மனிதன்	- துவாபரயுகம்
10. கல்கி அவதாரம்	- மனிதன்	- கலியுகம்

ஒவ்வொரு அவதாரமும் காரண காரியமாகவே நடந்துள்ளது. இராம அவதாரம் திரேதா யுகத்தில் நடந்த நிகழ்ச்சியாகும். கிருஷ்ண அவதாரம் 2500 ஆண்டு கழித்து துவாபர யுகத்தில் நடந்தது ஆகும்.

கீதை உபதேசம்

'நான்', 'எனது' என்ற அகங்கார மாயையில் மயங்கி உறவு என்ற பாசத்தால் மதிமயங்கிய அர்ஜுனனின் மாயத்திரை அகன்று மீண்டும் வில் எடுத்துப் போரிடவும், அதன் மூலம் இந்த உலக மக்கள் உண்மை ஞானத்தையும், உயர்ந்த கருமங்களையும் புரிந்து வாழ்க்கையில் வளம் பெறவும், முடிவில் முக்தி பெறவும் வேண்டி அனைத்து

உயிர் உயிரல்லாதவைக்கு கண்ணன் உரைத்த உரையே 'கீதா உபதேசம்' எனப்படுகின்றது.

அர்ஜுனனுக்கு உபதேசங்கள் இன்றி ஒரே வார்த்தையில் 'போர் செய்வாய் அர்ச்சுனா' என்று சொல்லியிருந்தாலே போதும் போர் தொடுத்திருப்பான். கண்ணனின் நோக்கம் அதுவல்ல. உலக மக்களும் தங்கள் கடமைகள், இறை வழிபாடு முறைகள், முக்திக்கு வழி இவைகளை உணர்ந்து தம் வாழ்வில் உய்வு பெற வேண்டும் என்பதே கண்ணனின் நோக்கம் ஆகும்.

ஒற்றுமைக் கூறுகள்

கிருஷ்ணாவதாரத்தில் அர்ஜுனனின் கடமையுணர்வை உணர்த்த வேண்டியும், அதன் வாயிலாக எல்லா மக்களுக்கும் உண்மைத் தன்மையை உணர்த்தவும் கீதை உபதேசம் செய்யப்பட்டது. அந்த உபதேசத்தின்படி நடந்து காட்டும் விதமாக அமைந்தது தான் இராம அவதார நிகழ்ச்சியாகும்.

இறைவன் தர்ம வழியிலே நடந்து, உலகுக்கு வழிகாட்டியாக அமைந்து இராமனாக வாழ்ந்து உணர்த்துகிறான். அதைப் புரிந்து கொள்ள முடியாத மக்களுக்கு கீதை மூலம் வாய்வழிச் செய்த உபதேசமே கீதா உபதேசம் எனப்பட்டது. எனவே இராமாயணத்தின் நோக்கமும், கீதை உபதேசமும் ஒன்றெனக் கூறலாம்.

இராமனைத் திருமால் அவதாரம் என்று முதலில் குறிப்பிட்டவன் கம்பன். மனிதனே தெய்வமாகும் போது தெய்வம் மனிதனாக வந்து மானுடத்தை வென்றது என்பது கம்பனின் நம்பிக்கையாகும்.

''உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத் தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே[2]''

என்ற கம்பனின் இறைவணக்கப் பாடலின் பொருள் ''இறைவன் எல்லா உலகங்களையும், தாம் உள்ள தன்மையோடு ஆக்குவார். அவற்றை நிலைநிறுத்தி சரண் அடைந்தோரை வாழவைப்பார். அந்த உலக மக்களுடன் தானும் கூடி வாழ்வார், கூடாமல் நீங்கியும் இருப்பார். இத்தகைய எழில் மிகுந்த விளையாட்டை எளிதாகவும், இயல்பாகவும் செய்யக்கூடிய பேராற்றலையும், பேரறிவினையும், பேரருளையும் பெற்ற தலைவனாம், இறைவனைச் சரணடைகின்றோம்'' என்று கீதை குறிப்பிடும் சரணாகதித் தத்துவத்தைக் கம்பன் குறிப்பிட்டுள்ளான். இராம அவதாரமே சரணாகதி தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இதனை, காட்டில் வாழ்ந்து

கங்கைக் கரையில் படகோட்டியான குகனைச் சந்தித்து அவன் மீது கொண்ட அன்பை அவனைக் கட்டித் தழுவி 'இனி நாம் ஐந்து சகோதரர்கள்' என்றான். கிட்கிந்தையில் சுக்கிரீவன் என்ற குரங்கரசனைச் சகோதரனாக ஏற்றுக்கொண்டு ''இனி நாம் ஆறு சகோதரர்கள்'' என்றான்.

''குகனொடும் ஐவரானோம் முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனோடும் அறுவரானோம் எம்முனம் அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்
புகல் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை[3]''

என்று சகோதரத்துவதற்திற்குச் சாதி, மத, இனப் பாகுபாடு இல்லை என்பதை இராமகாதை உணர்த்துகிறது.

''பரந்தாமனைப் பற்றியவர்க்கு இன்னலும் வருமோ[4]''

என்ற கீதையின் வாசகப்படி, விபீடணன் இராமனிடம் சரணாகதி அடைந்த போது, இராமன் அவனுக்கு அபயம் அளித்து, பின்பு இலங்கை அரசை முடி சூட்டி வைத்தான்.

இராமாயணத்தில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரத்தையும், கீதையின் பாதையில் நடப்பித்துச் செல்கிறார் கம்பர். இராமன் திருமால் அவதாரம், சீதை மகாலட்சுமியின் அவதாரம் இருவரும் இராவணனை வீழ்த்துவதற்காகப் பூமியில் அவதாரம் செய்திருக் கின்றனர். கீதையில் கண்ணன் 'பக்தரைக் காத்துக் கொடியவரை அழித்தும், தருமத்தை நிலை நிறுத்துவதற்கும் யுகந்தோறும் நான் தோன்றுகின்றேன்[5]' என்று குறிப்பிடும்படி கம்பர் பாத்திரங்களை அமைத்துள்ளார்.

''அமைதி, அன்பு, பொறுமை, தூயசிந்தை, ஆசிரியர் தொண்டு, தூயமனம், அயரா முயற்சி, அடக்கம், 'நான்' 'எனது' என்ற ஆணவம் அற்ற நிலை, பக்திப் பயிற்சி, தூய்மை, தனித்திருத்தலில் விருப்பம், தொடர்ந்து உண்மைப் பொருளைக் கண்டறிதல் இவையே ஞானஒளி எனப்படும்[6]'' என்று கீதையில் கண்ணன் குறிப்பிடுவதைப் போல இராமனிடம் அத்தனை பண்புகளும் நிறைந்து காணப்பட்டன.

ஆணவம் கொண்ட மண்ணாசைக்காரர்களை அறத்தின் சக்தி கொண்டு தீமையை அழிப்பதற்காக மகாபாரதத்தில் திருமால் கிருஷ்ணனாக அவதரிக்கிறான். அதே போல் இராமாயணத்தில் பெண்ணாசை கொண்டவனை அழிப்பதற்காகத் திருமால் இராமனாக அவதரிக்கிறான்.

முடிவுரை

கீதையில் குறிப்பிடப்படுவதைப் போல ''இன்ப துன்பங்களை ஒரே மாதிரியாகக் கருத வேண்டும்'' என்ற கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தான் இராமன். உபதேசத்தில் குறிப்பிடப் பெறும் அறவழி இராமாயணத்தில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கூறினால் அது மிகையாகாது எனலாம்.

குறிப்புகள்

1. கீதை பாதை, எ.கு. திருவேங்கடம், ப. 42
2. கம்பராமாயணம், கடவுள் வாழ்த்துப் பாடல்
3. கம்பராமாயணம், குகப்படலம், பா. 45
4. மகாபாரதம், வில்லிபுத்தூரார், பா. 274
5. மகாபாரதம், வில்லிபுத்தூரார், பா. 8
6. மகாபாரதம், வில்லிபுத்தூரார், பா. 350

துணைநூல்கள்

1. கம்பர், ''கம்பராமாயணம்'' - சோமசுந்தரர் உரை
2. வில்லிபுத்தூரார் - மகாபாரதம்
3. எ.கு. திருவேங்கடம், கீதை பாதை
4. கம்பராமாயணச் சொற்பொழிவுகள்

ஞானவாசிட்டத்தில் உற்பத்திப் பிரகரணம்

சு. தங்கத்துரை

திருகொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம் - 606 001

வீரை ஆளவந்தாரால் எழுதப்பட்ட ஞானவாசிட்டத்தில் வைராக்கியம், முமூட்சு, உற்பத்தி, திதி, உபசாந்தி, திருவாணம் என ஆறு பிரகரணங்கள் உள்ளன. அவற்றில் மூன்றாவதாக அமைந் திருப்பது உற்பத்திப் பிரகரணமாகும். அதில் 317 பாடல்கள் உள்ளன. அப்பகுதியில் எட்டுக் கதைகளும் உற்பத்தி பிரகரணம் என்ற பிரிவும் காணப்படுகின்றன. அவற்றுள் உற்பத்தி என்ற நோக்கில் அமைந்த கருத்துகளை வகை தொகை செய்து இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

உற்பத்தி என்பதற்குத் தோற்றம், பிறப்பு என்றும் பிரகரணம் என்பதற்கு அத்தியாயம், பகுதி என்றும் பொருள் கொள்வர். பிறப்பு அல்லது தோற்றம் என்ற நோக்கில் சிந்திக்கின்றபோது இதில் வரும் கதைகளின் செய்திகள் ஒத்து உள்ளன. எல்லாக் கதைகளும் பிறப்பு உண்டு என்பதை வலியுறுத்தும் நோக்கில் அமைந்துள்ளன.

இராமனின் வைராக்கிய நிலையை மாற்றுவதற்காக உபதேசிக்கப் பட்ட நூல் ஞானவாசிட்டம் என்பதால் படிப்படியாக மனதை மாற்றும், நிலையில் செய்திகள் அமைந்துள்ளன எனலாம். வைராக்கியம் பிரகரணத்தில் இராமனின் வைராக்கிய நிலை ஏற்பட்டதின் காரணத்தை அறிந்து அதை எப்படி மாற்றலாம் என்பதை உணர்த்தும் வகையில் சுகர் கதையில் விளக்கப்பட்டுள்ளது. முமூட்சு பிரகரணத்தில் வீடுபேறு அடைய விரும்புவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காணமுடிகிறது. உற்பத்திப் பிரகரணத்தில் பிறப்பு எதனால் ஏற்படுகிறது; எப்படிப் பட்டவர்களுக்குத் தோன்று கிறது போன்ற செய்திகள் விளக்கப்பட்டுள்ளது.

மறுபிறப்பு உண்டு என்பது எல்லாரும் ஏற்றுக்கொண்டக் கருத்தாகும். அது அவரவர் வினைப்பயனாகும். இதைத்தான் திருவள்ளுவரும்,

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்'' (குறள் - 62)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

பரிமேலழகர், 'வினை வயத்தால் பிறக்கும் பிறப்பு ஏழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா; பிறரால் பழிக்கப் படாத நற்குணங்களை உடைய புதல்வரைப் பெறுவான் ஆயின்' எனப் பொருள் கொண்டுள்ளார் (ப. 30). அவரவரின் வினைப் பயனால்தான், கன்மத்தால்தான் பிறவி ஏற்படுகிறது என்பது தெளிவு. எழுகின்ற பிறவி என்கிறார். எழுவகைப் பிறப்பு என்பதை,

'ஊர்வன பதினொன்றாம் ஒன்பது மானிடம்
நீர் பறவை நாற்கால் ஓர்பப்பத்துச் - சீரிய
பந்தம் ஆம் தேவர் பதினான்கு அயன்படைத்த
அந்தம் இல் சீர்த் தாவரம் நாலைந்து'

என்ற வெண்பாவிலிருந்து ஊர்வன, மனிதன், நீர்வாழ்வன, பறவை, விலங்கு, தேவர், தாவரம் ஆகிய என அறியமுடிகிறது.

இந்த ஏழுவகைப் பிறப்பிலிருந்து உண்டாகும் உறுப்பு பேதம் எண்பத்து நான்கு நூறு ஆயிரம் ஆகும். அந்தப் பேதங்களிலிருந்தும் விரிந்த பேதங்கள் அளவு இன்றி உள்ளன. அவற்றுள் மற்ற பிறவிகள் எல்லாம் ஒழிந்து, ஓர் உயிர் மானுடப்பிறவியைப் பொருந்தக் காணப்பெற்றுவிட்டால், அந்தப்பேறு கடலைக்கையால் நீந்திக்கரை ஏறியவன் காரியத்தோடு ஒக்கும். இந்த மானுடப்பிறவியே பிறப்பு இறப்பில்பட்டு உழலும் சுழற்சியை நீக்குவதற்கு வாயில் ஆகும் என்கிறார் அருணந்திசிவம் (சிவஞான சித்தியார், சுபக்கம், ப. 179).

ஞானவாசிட்டத்தில் நிர்வாணப் பிரகரணத்தின் சதவுருத்திரர் கதையில் நூர் பிறப்புகள் பற்றிய சிந்தனையை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

''இத்திற நூறு யோனி யெய்தி யீங் கீசனானேன்''
(சதவுருத்திரர் -18.1)

இவ்வாறு பிறப்பு பற்றிய சிந்தனையை நூலில் பல இடங்களில் கதைகளோடும் சுட்டிச் சென்றிருப்பதைக்காண முடிகிறது. ஆனால் உற்பத்திப் பிரகரணத்தில் விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எண்ணம்போலப் பிறப்பு

எண்ணங்களுக்கு வலிவு உண்டு. எண்ணங்கள்தான் ஈடேற்றும். எதை நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அதன் வடிவம் ஆவோம் என்பது ஆன்றோர் வாக்கு. திரிகரண சுத்தியோடு (மனம், மெய், வாக்கு) இருந்தோமானால் அது நிலைபெறும் என்பர். அது பிறப்பு நிலையிலும் காணலாம். இதனை,

'தூயமன மாயிடில் வெற்பாற் சுழலாக் கடல்போற் பிறப்பிறப்பாம்'

(உற்பத்தி - 1-3)

என்ற வரியால் உணரமுடிகிறது.

ஒருவர் எந்த வகைப் பிறப்பு வேண்டும் என்று எண்ணுகிறாரோ அந்தப் பிறவி கிடைக்கும் என்பதைக் கதைகள் மூலம் விளக்கி யுள்ளனர். அவற்றில் புராணச் சிந்தனைகளும் தத்துவங்களும் காணக் கிடக்கின்றன.

ஞானவாசிட்டத்தின் லீலை கதையில், வசிட்டர் என்னும் ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அவன் மனைவி அருந்ததி. அவன், தன் வீட்டின் முன்னால் தினமும் அந்நாட்டு அரசன் பரிவாரங்களோடு உலா செல்வதைக் கண்டு தாம் எப்பொழுது அரசனாவோம் என்று எண்ணிக்கொண்டிருந்தான். இறக்கும் நிலையிலும் அவனுக்கு இந்த எண்ணமே இருந்ததால் அடுத்த பிறவியில் பதுமன் என்ற அரசனாகப் பிறந்து நல்லாட்சி செய்து வந்தான். அவன் மனைவியும் தன் கணவனுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டிருந்ததால் அவளும் பட்டத்து ராணியாகப் பிறந்தாள்.

(இச்செய்தியை எப்படி அறிவது, இக்கருத்து உண்மைதானா என்பதை அறியும் வண்ணம் இக்கதையில் தொடர்ந்து செய்திகளை விளக்கியுள்ளார் ஆசிரியர்).

லீலை பதும மன்னனின் மனைவி தன் கணவன் மேல்கொண்ட அன்பின் காரணமாக, தன் கணவன் இறந்தபிறகும் அவன் சீவன் இந்த வீட்டிலே இருக்க வேண்டும் என விரும்பினாள். அதற்குரிய செயல்களைச் செய்யப் பலரிடம் கேட்டாள். அவர்கள் பிறந்தவர்கள் இறப்பது உறுதி எனக் கூறிவிட்டனர். அவள் அதை நம்பாமல் சரசுவதி தேவியை நோக்கித் தவம் இருந்தாள். சரசுவதி சில செய்தி களைக் கூறிச் சென்று விட்டாள். அவன் இறந்த பிறகு லீலை சரசுவதியிடம் தனது கணவனைப் பிரிந்து வாழ முடியாது என்றும் அவன் சேர்ந்துள்ள இடத்தில் தன்னையும் சேர்த்துவிடும்படி விண்ணப்பித்தாள். சரசுவதி லீலைக்கு அருள் கொடுத்து, கணவன் இருக்கும் இடத்தையும் நிலையையும் எடுத்துக் கூறினாள். லீலை தன் உடலை நீக்கி வானில் பறந்து சென்றாள். பதுமன் அடுத்த பிறவியில் வீற்றிருக்கும் அரசவைக்குச் சென்று பார்த்துத் திரும்பவும் தனது உடலில் புகுந்து கொண்டாள்.

சரசுவதியிடம் லீலை, தனது கணவனுக்கு இறந்த பின்பும் தொடர்ந்து பிறப்பு ஏற்பட்டதன் காரணத்தைக் கேட்டாள். சரசுவதி அதன் காரணத்தைக் கூறினாள். வினைப்பயன், எண்ணம்தான்

காரணம் எனக் கூறிச் சென்றாள். இக்கருத்தைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

''யோக நெறியால் விண்போய்ப் பதுமனிடஞ்
சேர்ந்து சவவுடல்கட்டு அப்பால்
ஏகியிவள் மறுபிறப்பாம் வேந்தனை எய்தலும்
அவன் மேலெரிந்து வந்த
வேக வினையாகி ஒருவேல் வேந்தன்
அமர்துடங்கி மிகவுமோத
மாக மயிலனை யார்கள் நோக்கினார்
இருபடையும் மலைந்தவன்றே'' (லீலை - 52)

மனதில் இருக்கும் எண்ணம் போலப் பிறப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டிய ஆசிரியர். சித்து வேலையிலும் எண்ணங்களின் நினைவுபோல் பிறப்பு, வாழ்க்கை அமையும் எனச் சித்தன் கதையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

லவணன் என்ற அரசன் அரசவையில் வீற்றிருக்கின்ற போது இந்திரசால வித்தையில் வல்ல சித்தன் ஒருவன் வந்து சித்துக் காட்சிகளைக் காட்டிக் கொண்டிருந்தான். மன்னனை ஒரு குதிரையில் ஏற்றிச்சென்று காட்டில் விட்டதாகவும் அங்கு இல்லற வாழ்க்கை நடத்தி, சூழல் காரணமாக மனைவி மக்களை இழந்ததாகவும் கதை அமைந்துள்ளது.

கதையின் இறுதியில் இது உண்மை வாழ்க்கை என உறுதி செய்யும் வண்ணம் அரசன் தன் பரிவாரங்களோடு முன்பு வாழ்ந்த விந்தியமலையின் கண் உள்ள அந்த ஊருக்குச் சென்று தான் அனுபவித்த இடங்களைக் கண்டு உறுதிசெய்ததாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

காலனகர் நிகராம் அக்கடிய வனத்துலாவுதலும்
கடையர் செய்கை
போலவன் முன் சஞ்சரித்த தலங்களும்
அச்சேரிகளும் பொருந்தக் கண்டான்
சால வியந்தான் அந்தக் கடையர் கடைச்சியர்
குடில்கள் தப்பாவண்ணம்
ஞால நரபதி நோக்கி வியப்பினான் மனமயக்க
நண்ணி நின்றான் (உற்பத்தி - 56)

இதிலிருந்து எண்ணங்களின் வலிமையை உணரமுடிகிறது.

மனத்தின் கதையில் துன்பம் செய்கின்றவர் அலைந்து திரிந்து பாழுங்கிணறு என்னும் நரகத்தில் வீழ்வர் என்றும் மீண்டும் அவர்கள் பிறப்பர் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

கன்மம் செய்யாதவர்களுக்குப் பிறப்பு கிடையாது

தீவினைகளைச் செய்யாதவர்களுக்கு இறப்பு கிடையாது. இறக்காதவர்கள் பிறக்கவும் மாட்டார்கள். இச்சிந்தனையை ஞானவிண் மகன் கதையில் தெளிவாக விளக்கியுள்ளார்.

ஞான விண்மகன் என்ற ஒருவன் ஒருகிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவன் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது ஞானமே. காலன் உயிர்களை, அவரவர்களது கன்மங்களுக்கு ஏற்றவாறு உணவாகக் கொள்வான். ஞானவிண்மகன் பல நாட்களாயும் இறக்காமல் இருப்பதைக் கண்ட காலன் அவன் ஊருக்குச் சென்று தன்னுடைய ஆயிரம் கையினால் பிடித்து இழுக்க முயற்சித்தான். அவன் அகப்படவில்லை. இச்செய்தியை இயமனிடம் சென்று காலன் முறையிட்டான். அதற்கு அவன், 'உலகம் கன்மத்தினால் அன்றி அழியாது. ஒருவர்க்கு உதவி செய்வது அவர்களுடைய கன்மங்களே ஆகும். எனவே அவற்றையே ஆயுதமாகக் கொண்டு செல்ல வேண்டும் என்றான். காலன் ஞானவிண்மகன் செய்த கன்மங்களைத் தேடினான். எதுவும் அகப்படவில்லை. அவன் ஞானத்தினால் பிறந்ததால் கருமங் களைச் செய்யவில்லை. காலனும் அதனால் அவனைப் பிடிக்க முடியவில்லை.

''விண்ணிற் பிறந்தோன் காரணத்தை மேவாமையினாற் கருமங்கள்
பண்ணிற்றிலன் காரணமிலதேற் பண்ணும் கருமமுளதாமோ
எண்ணற்குரிய சகாயம் உனக்கிலதாமென்று யமன்கூற
நண்ணற்கரி தென்று உயர் காலன் மனையில் நனிவியந்து
நடந்தான்''. (ஞான விண்மகன் கதை - 18)

இக்கதை மூலம் ஒருவனுக்கு அவன்செய்த வினைப்பயனே விரோதமாக அமையும் என்றும் ஞான உணர்வுடையவர்கள் கன்மங் களைச் செய்வதில்லை என்றும் அவர்களுக்கு இறப்பு இல்லை என்றும் அறியமுடிகிறது.

எண்ணங்களே எல்லாவற்றிற்கும் காரணமாகும். பிறப்பிற்கும் அவரவர்கள் எண்ணங்களே காரணமாகும். தீவினைகளைச் செய்பவர் களுக்குப் பிறப்பு உண்டு.

துணைநூல்கள்

1. வீரை. ஆளவந்தார் - தமிழ்ஞானவாசிட்டவமல ராமாயணம், ஆ. எதிராஜ முதலியார் வெளியீடு, சென்னை, 1901.
2. சு. தங்கத்துரை - ஞானவாசிட்டம் ஒரு திறனாய்வு, சுப்பையா பதிப்பகம், 1994.
3. திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, 1973
4. சிவஞான சித்தியார் சுபக்கம், திருவிடைமருதூர், 1994

சித்தர் இலக்கியத்தில் நாத்திகம்

ந. வேலுசாமி

ஈரோடு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

ஈரோடு

தமிழ் இலக்கியத்தில் சித்தர் இலக்கியத்திற்குத் தனி இடம் உண்டு. கற்பனைக் களஞ்சியமாய், கடவுள் வருணனையின் பிறப்பிடமாய் இலங்கிடும் தமிழ்ப் பாடல்களை அறிவுக்கண் கொண்டு பார்த்து முகம் சுளிப்போரும் சித்தர் பாடல்களைக் கண்டதும் முகம் மலர்வர்.

காரணம் என்ன? அவர்களின் பட்டறிவாய் அவை திகழ்வதால், அவர்களின் ஞானத்தில் சாணை பிடிக்கப்பட்டு ஒளிர்வதால்!

சித்தர்கள் பதினெண்மர் என்பர். இந்தக் கணக்கு ஒரு தோராயமே தவிர வேறல்ல; பதினெட்டுப் பேர்களுக்கு மேல் இருந்திருக்க மாட்டார்களா என்றால் நிச்சயம் இருந்திருப்பர். பிறர் அறிய வெளிப்பட்டவர்கள்தான் இந்தப் பதினெண்மார். இவர்களுக்குப் பிறகும் பலர் பிறந்திருக்கக் கூடும் என்பது வெள்ளிடைமலை.

அருட்பிரகாச வள்ளலாரும், தாயுமானவரும், குணங்குடி மஸ்தான் சாயபும் சித்தர்களே!

சித்தர்களின் பாடல்கள் எல்லாம் தெய்வத்தை விளிப்பது போல் இருப்பினும் தெய்வங்களின் பெருவிளக்கமாகத் திகழவில்லை என்பது கூர்ந்தாராய்வோருக்குத் துலங்கும்.

நாத்திகம் என்பது என்ன?

உலகத்திலேயே, நாத்திகம் என்று சொல்லப்படும் வார்த்தை யானது அனேகமாய்ப் பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக் கூடியதாய் இருந்து வருகிறது. காரணம் என்னவென்று பார்ப்போமே யானால், அவ்வார்த்தையில் 'கடவுள் என்பது இல்லை' என்கின்ற பொருள் அடங்கி இருப்பதாகக் கொள்வதேயாகும்.

மக்கள், கடவுள் இல்லை என்று சொல்வதைப் பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும் வெறுப்புக்கொள்ளவும் புரோகிதர்கள், பாதிரிகள், மௌலவிகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர, கடவுள் என்பதைப் பற்றி விளக்கம் யாருக்கும்

தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு அது மனதிற்கும்; புத்திக்கும் எட்டாதது என்பதாகவும்; அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தான் ஆக வேண்டும் என்றும் நிர்ப்பந்தப் படுத்தப்பட்டுவிட்டது. இப்படி இருந்த போதிலும் அன்றைய தினம் கடவுள் என்கிற வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ அன்று முதலே கடவுள் இல்லை என்கிற வாதமும் ஏற்பட்டு, வெகு காலமாகவே இவ்வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு, நாளைவரை முடிவு பெற முடியாமலே இருந்து வருகின்றது[1] என்பது மேற்கூறிய வினாவுக்குரிய நல்ல விடையும் விளக்கமுமாகும்.

மேலும், எங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடம் இல்லையோ அங்கு எல்லாம் இருந்துதான் நாத்திகம் முளைக்கிறது[2] என்ற கருத்தும் மேற்கூறியதை அரண் செய்கிறது.

தந்தை பெரியாரைப் போல், இங்கர்சால், பிராட்லா போன்றோரைப் போல் வெளிப்படையாகக் கடவுள் மறுப்பைச் சித்தர்கள் மக்கள் இடையே எடுத்துரைக்கவில்லை எனினும்; பாலில் உறைந்திருக்கும் நெய்போல் அவர்கள் பாடல்களில் கடவுள் மறுப்பு இடம் பெறத் தவறவில்லை.

பெரியார் போன்ற சமூக விஞ்ஞானிகள் எல்லாம் மக்கள் இடையே வாழ்ந்தவர்கள். சித்தர்கள் அப்படி வாழாமல், மக்கள் சந்தடிகளிலிருந்து விலகி, காடுகளிலும், மலைச்சாரல்களிலும், குகைகளிலும் வாழ்ந்தார்கள். அவர்கள் தேவைகள் மிகவும் சொற்பமாகவே இருந்தன. எனவே சித்தர் பாடல்களில் தெய்வங்கள் பற்றிய சடங்கு, சம்பிரதாயம், வியாக்கியானம் வைதீக நெறிகள் இன்னோரன்ன பிற விளக்கங்கள் எல்லாம் இடம்பெறவில்லை. அவை தேவையே இல்லை என்பதை அவர்களது ஞானம் சொல்லி விட்டது.

சில கடவுள் மறுப்புச் சான்றுகள்

சித்தர் பாடல்களுக்குச் செல்வதற்கு முன் திருக்குறளில் புகுவோம்.

'தெய்வத்தால் ஆகாதெனினும்'

எனவும்

'தெய்வம் தொழாஅள்'

எனவும் வருமிடங்களையும் ஆழமாகக் காணவேண்டும்[3] என்பார் கூற்று, உழைப்பு முயற்சி, உறவு ஆகியன தெய்வ வலிமையை எடுத்து விழுங்கி ஏப்பம் விட்டு விட்டன என்று தெரிவிக்கின்றன.

இவ்வாறு, பகுத்தறிவுக்குப் பொருந்தி வருகிற ஒரே நூல் (பெரியார் பார்வையில்) எனப் போற்றப்படும் திருக்குறளில் மட்டுமே காணக் கிடக்கின்றன.

மற்ற அனைத்தும் 'தொன்மம்' (Myth) என்ற வகையைச் சார்ந்தனவேயாகும். தொன்மம் (மித்) என்பதற்குக் கற்பனையான கதை அல்லது உட்கரு எனப் பொருள்படும். இற்றை நாளில் புராணம் என்ற சொல் ஒரு பழங்கதை அல்லது நிகழ்ச்சி - அது நம்ப இயலாத ஒன்று என்ற கருத்தில்தான் பேசப்படுகிறது[4] என்பது சரியான கருத்தேயாகும்.

> ''உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட
> சாந்தையும் ஊத்தை அறப்
> புளியிட்ட செம்பையும் போற்று கிலேன்''[5]

உளியால் செய்து அமைக்கப்பட்ட கல் வடிவத்தையும், உறுப்புகளை நன்கு அமைத்த சுண்ணச் சிலையையும், களிம்பு நீங்கப் புளி சேர்த்துத் துலக்கிய, செப்பு வடிவத்தையும் நான் வணங்கேன் என்ற பட்டினத்தடிகளின் பாடல் இங்கு எண்ணத்தக்கதாம்.

கடவுட் பற்றாளர்களும் இலக்கியமும்

மதம் என்பது வெறும் நம்பிக்கைகளின் தொகுதியன்று. அது சமூக உறவுகளுடனும், உற்பத்தி உறவுகளுடனும் நெருங்கிய சம்பந்தம் கொண்டது. குறிப்பாக நிலவுடைமை அமைப்பில், அது சமூக உற்பத்தி உறவின் ஒரு முக்கிய அங்கமாகும். அந்த அளவில் நிலவுடைமையில் இருந்து இன்னும் விடுபடாத இந்தியாவிலும் (தமிழ்நாட்டிலும்) இலங்கையிலும் மதத்தின் சமூகப் பணி பற்றி நாம் சிரத்தையோடு கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐந்து தசாப்தங் களிலும் (Five decades) முக்கிய இடம்பெற்ற பகுத்தறிவு இயக்கம் அரசியலதிகாரம் பெற்றுச் சமூக மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதியாக இடம்பெறத் தொடங்கியதன் பின்னர், மதங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் ஒரு தன்மை காணப்பட்டது[6] என்பார் கருத்தின் உண்மையை நாம் சிந்திக்கிறோம்.

இத்துடன், அறிவியலற்ற மதம் முடம்; மதமில்லாத அறிவியல் குருடு (Science without religion is lame; religion without science is blind) - என்ற ஐன்ஸ்டீன் கருத்தும் நாத்திகத்தை நோக்கியே நிற்பது காண்க.

மேலும், உலகத்தில் நானா மதங்கள் உண்டென்று சொல்கிறது பைத்தியத்தனமாகும். ஏனென்றால் மதங்கள் முதலியன யாதொன்றும்

இல்லை[7] என்பது சித்த சமாஜ நிறுவனர் சிவானந்த பரமஹம்சர் தனது சித்தவேதத்தில் குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

தமிழ்ப் பாரம்பரியத்தில் சித்தர்களாகப் போற்றப்படுபவர்களைப் பார்க்கும்பொழுது அவர்கள் யாவரும் ஒரே கோட்பாட்டைக் கொண்டவர்கள் என்று கூறிவிட முடியாது. சித்தர்களாகக் கொள்ளப்படும் சிலரை - சித்தாந்திகளாகவும் கொள்ளும் மரபு உண்டு.

பெரும்பான்மையான சித்தர் பாடல்கள் சமூக நியமங்களுக்கு எதிராகக் குரல் எழுப்புவனவாக அமைந்துள்ளன. இந்த எதிர்ப்புத் தான் சித்தர் பாடல்களின் தனித்தன்மை. சித்தர் பாடல்களில் போற்றத்தக்க கூறுகள் என்று நாம் அடையாளம் காட்டுவது இவற்றைத்தான். மேற்கூறப்பட்ட சித்தர்களுக்குப் பின் தோன்றித் தனியொருவராக இந்தச் சமுதாயத்தை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டவர் தந்தை பெரியாரேயன்றோ!

இந்து சமதாயத்திலே சாதி சமயத்தின் பெயரால் உருவாகி வந்த வைதிக ஆதிக்கத்தையும் கண்மூடித்தனமான பழக்க வழக்கங் களையும் அவ்வப்போது எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் தாம் சித்தர்கள். இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்களில் நம்பிக்கையும் கடவுள் பற்றும் வாய்ந்த இவர்கள் சடங்காச்சாரம் தவறுதலாகப் பொருள் செய்யப்படுவதையும், நடத்தப்படுவதையும் எதிர்த்தார்கள். இந்த எதிர்ப்பினூடாகச் சில மனிதாயப் பண்புகள் மீண்டும் தமிழ் இலக்கியத்தில் - அதுவும் உயர் இலக்கியத்தில் அத்தகைய குரல்கள் கேட்காத வேளையில் இடம்பெறலாயின. சாதி அடிப்படையில் மனிதனின் திறன்களை அவன் சாத்தியப்பாடுகளை மதிப்பிடலாகாது எனும் கருத்து இப்பாடல்களில் வன்மையுடன் மேற்கிளம்புவதைக் காணலாம்.

தமிழகத்தின் வரலாற்று இலக்கியச் சூழலில் மதம் - சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை உள்ளடக்கி நின்றமைக்குச் சித்தர் பாடல்கள் நல்ல உதாரணமாக விளங்குகின்றன. அப்பாடல்களில் மனிதரிடையே நிலவ வேண்டிய சமத்துவமும் மனிதன் என்ற உயிர்ப் பிறவி பற்றிய மதிப்பும் மாண்புணர்வும் காணப்படுகின்றது. தமிழ் இலக்கியச் சூழலில் இதனை மானுடப் பண்பின் வெளிப்பாடாகவே கொள்ள வேண்டும்[8] என்ற கா. சிவத்தம்பியின் கருத்தையும் நாம் வரவேற்க வேண்டும்.

மேலும், மானுடம் என்பது மரணத்தை வெல்லக்கூடியது என்ற உண்மையைச் சித்தர்கள் அறியாமை எனும் மாயையில்

அழுந்தி, மக்கள் உண்மை நிலை ஓராது இறந்தொழிவதைக் கண்டு வருத்தமுற்றார்கள்[9] என்றால் அவர்களது மானுடப் பற்றையும், பகுத்தறிவையும், நாத்திக நெஞ்சத்தையும் போற்றிப் பின்பற்ற வேண்டியது நம்மனோர் கடன் அன்றோ?

குறிப்புகள்

1. பெரியாரியல் ஆய்வுரைகள் - கி. வீரமணி, அய்ந்தாம் பாகம், ப. 138, திராவிடர் கழக வெளியீடு, சென்னை - 7.
2. மு.கு. நூல் - முதல் பாகம் - ப. 141.
3. தமிழரின் தெய்வநெறிச் சிந்தனைகள் - அ. அறிவுநம்பி, ப. 19, அமுதன் நூலகம், புதுவை.
4. மு.கு. நூல் ப. 54.
5. பட்டினத்தார் பாடல்கள் மூலமும் உரையும் - அ. மாணிக்கனார், ப. 450 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 17.
6. தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் - கார்த்திகேசு சிவத்தம்பி - பக். 9, 10, என். சி. பி. எச். சென்னை.
7. சித்தநெறி - டாக்டர் ஏ.ஆர். சாரங்கபாணி, ப. 106, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
8. தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும் - கார்த்திகேசு சிவத்தம்பி, ப. 168, 169.
9. அடுத்த நூற்றாண்டு அறிவியலின் பங்களிப்பு - பதிப்புக்குழு - தமிழக அறிவியல் பேரவை. மே/பா. தமிழியல் துறை, புதுவைப் பல்கலைக்கழகம், 1994.

மஸ்தான் சாகிபு பாடல் உணர்த்தும் மெய்யுணர்தல்

ஜலஜா கோபிநாத்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை

உலகப் பெருஞ் சமயங்களுள் ஒன்று இசுலாமியம். முகமது நபி பெருமானால் இச்சமயம் உருவாயிற்று. இசுலாம் என்றால் 'இறைவனுக்கு அடிமை' என்பது பொருள். இறைவனிடம் சரண் புகுந்து இறைவனுக்கு அடிமை பூண்டு இறைவனுக்குச் சேவை செய்வது இசுலாத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இசுலாம் சமயத்தின் ஒரு பிரிவு சூபியம். அதிகக் கட்டுப்பாடுகள் கொண்ட இசுலாம் சமயத்திலிருந்து வெளியேறித் தன்னுரிமையோடு உலகைக் கண்டவர்கள் சூபிகள் என அழைக்கப்பட்டனர். அத்தகைய சூபிகளுள் ஒருவர் குணங்குடி மஸ்தான் சாகிபு ஆவார். இவர் தலைசிறந்த ஞானியாகவும் சூபிக் கவிஞராகவும் விளங்கினார். 18-ஆம் நூற்றாண்டின் சிறப்புமிக்க ஞானியாக மஸ்தான் சாகிபு திகழ்ந்தார். இவருடைய பாடல்கள் மஸ்தான் சாகிபு பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் ஒரு பிரிவு கண்ணிகள். இக்கண்ணிகளுள் ஒன்றாகிய பராபரக்கண்ணி வழியாக மெய் யுணர்தல் கோட்பாட்டை மஸ்தான் சாகிபு எவ்வாறு உணர்த்துகிறார் என்பதை இக்கட்டுரைவழிக் காணலாம்.

இசுலாமும் சூபியமும்

கடவுள் உண்டு; அவன் ஒருவனே; அவனைத் தவிர வேறு எவரையும் தலைவனாக ஏற்றுக்கொள்ளாதது இசுலாம். இச்சமயத்தின் வேதநூல் திருக்குர்ஆன். இந்நூல் கூறும் சட்டம் காலம் காலமாக வழங்கி வருகின்றது.

இந்தியத் தத்துவக் கருத்துக்கள் இசுலாமிய ஞானிகள் சிலரை அவர்களது சமயக் கட்டுப்பாடுகளை மீறிச் சிந்திக்க வைத்தன. ஆன்மீக வாழ்வின் புதிய பரிமாணங்களைக் காட்டிற்று. அதனால் புதிய சிந்தனையாளர்கள் அங்குமிங்குமாகத் தோன்றினர். அவர்கள் சூபிகள் எனவும், அவர்கள் தோற்றுவித்த இயக்கம் சூபியம் எனவும் குறிப்பிடப்படுகிறது.

ஒத்தவர்களிடையே ஏற்படுவது காதல் அன்பு. இறைவனால் படைக்கப்பட்டவன் மனிதன். எனவே படைக்கப்பட்ட மனிதனுக்கும் அவனைப் படைத்த இறைவனுக்கும் இடையே கட்டாயம் சிறப்பு மிக்க வேறுபாடுகள் உண்டு. எனவே மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையே காதலன்பிற்கு இடமில்லை; மனிதன் இறைவனிடம் பணிந்துதான் நடக்கவேண்டும். திருக்குர்ஆன் இத்தகைய பணிவான அன்பைப் பற்றிக் கூறுகின்றது. ஆயின் இதற்கு மாறாக இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே காதலன்பு மலரும் என்றும் அக்காதலன்பை இவ்வுலக வாழ்க்கையிலேயே தம் வாழ்நாளில் அனுபவிக்க முடியும் என்றும் கருதுவது சூபியம் ஆகும்.

மேலும் சூபிகள் இறைவன் தலையிட்டால்தான் மனிதன் உலகியலைத் துறந்து ஆன்மப் பயணம் மேற்கொள்ள முடியும். அதாவது மனிதன் எந்த அளவு முயற்சி செய்தாலும் இறைவன் அழைப்பில்லாவிட்டால் அம்மனிதன் மேற்கொள்ளும் ஆன்மப் பயணத்தில் வெற்றிகாண முடியாது எனக் கருதினர்.

சூபிய இறைக்கோட்பாடு

இறைவன் தூய்மையானவன். அவன் முழுமையான அழகு வாய்ந்தவன். அவன் எங்கும் எதிலும் இருப்பான். அவன் நம்முடைய கழுத்திலிருக்கும் நரம்பைவிட மிக நெருக்கமானவன். (70,000 நரம்புகள் அவனிடம் மறைந்துள்ளன என்று நம்பப்படுகின்றது. ஒரு சூபி அவனுடைய மெய்யுணர்தல் பயணத்தில். இந்த நரம்பு களைப் பிடித்துக்கொண்டு இறைவனுடன் ஒன்றுதல் வேண்டும்.)

கடவுள் உண்டு; கடவுள் மட்டுமே உள்பொருள்; கடவுளைத் தவிர வேறொன்றும் உண்மை இல்லை என்னும் அடிக்கருத்தைக் கொண்ட இசுலாமிய சூபித்துவம் இந்தியப் பண்பாட்டில் உள்ள துறவு வாழ்க்கை, தத்துவார்த்த கருத்துக்கள், தெய்வீகத் தன்மையுள்ள இன்பம் பற்றிய கருத்துக்கள், சிற்றின்பம் தொடர்பான கருத்துக் களுடன் மிக நெருக்கமான உறவுநிலையைப் பெற்றது எனலாம். (இஸ்லாம் வரலாறும் தத்துவமும், பீ.மு. அஜ்மல்கான்). எனவே சூபியத்தில் இஸ்லாமும் அதன் தத்துவத்தின் தாக்கமும் அமைந்ததோடு அதற்கு முரண்பட்ட இந்தியப் பண்பாட்டு நாகரீகத்தின் தாக்கமும் அமைந்துள்ளது என்பது வெளிப்படை ஆகும்.

சூபியம் இறைவனை உணர்வதற்கு மூன்று படிநிலைகளை உணர்த்துகிறது, அவையாவன, தூய்மைப்படுத்துதல் (Purification), பக்தி (devotion), தெய்வமாக்கல் (deification) என்பன. (The Heritage of Indian Culture, Vol. 4, P. 595).

தூய்மைப்படுத்தல்

கழிவிரக்கம் கொள்ளல், உலக ஆசைகளை விட்டொழித்தல், துறவுபூணல், பட்டினி கிடத்தல், கடவுளிடம் நம்பிக்கை கொள்ளல் ஆகிய வழிகளால் தூய்மைப்படுத்திக் கொள்ள முடியும்.

பக்தி

அன்புகாட்டல், பயப்படல், நம்பிக்கை வைத்தல், ஏக்கம் கொள்ளல், நெருங்கிய உறவு கொள்ளல், அமைதி காத்தல், ஆழ்ந்து சிந்தித்தல், உலக விருப்புக்களிலிருந்து விலகியிருத்தல், தியானம் செய்தல் ஆகியவை பக்திக்குரிய வழிகளாகும்.

தெய்வமாக்கல்

ஐயமில்லா உண்மையை உணர்தல், ஆன்மீக அறிவொளி பெறுதல், மெய்யாகக் காண்டல் போன்றவை தெய்வமாக்குதற்குரிய வழிகளாகும்.

மெய்யுணர்தலுக்கு முதல் படிநிலை தூய்மையாக்கல் ஆகும். இத்தூய்மை ஆக்கத்திற்கு உடல், உள்ளம் ஆகிய இரண்டும் உலக ஆசையிலிருந்து விடுபட வேண்டும். அதற்கு மண், பொன், பெண் ஆசை நீக்குதல் வேண்டும். இதற்கு அடிப்படையாக அமைவது புலனடக்கமாகும். அப்போதுதான் உலக விருப்புக்களிலிருந்து விடுபட முடியும். இதனை உணர்ந்த மஸ்தான் சாகிபு,

சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தேன்
ஆற்றாமல் நின்று களைத்தழுதேன் பராபரமே (22)

கும்பிக்கு இறைவிரும் பிக்கொடுப்போர் தமைதேடி
சம்பித்தி திரிந்தே அலைந்தேன்

அல்லல் வினையால் அறிவுகெட்ட ஆன்மாவாய்
நெல்லும் பதரும் என நின்றேன் பராபரமே (31)

என்று பாடுகிறார். இதன்வழி சாகிபு தான் உடல் வளர்க்கும் ஆசையில் அகப்பட்டதையும் மெய்யுணர்தலுக்கு அதுவே தடையாய் நின்றதையும் உணர்த்துகிறார்.

இவ்வுலகில் மனிதன் பல ஆசைக் கடல்களில் மூழ்கித் தவிக்கிறான். சாகிபும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதை அவர்தம் பாடல் வரிகளால் உணர முடிகின்றது.

ஐயோ எனக்கு உதவும் ஆதரவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் (7)

கோலத் திருவடிவு கோதையர்கள் ஆசையினால்
ஆலைக் கரும்புபோல் ஆனேன் (28)

என்னும் அடிகளால் பெண்ணாசையினால் அலைக்கழிக்கப்பட்டதைச் சாகிபு எடுத்துக் கூறுகின்றார். அதேபோல,

'பொன்னால் மயக்கெடுத்துப் புத்திகெட்டு'

'காசாசை கெட்டு கலங்கியே கெட்டலைந்த தோஷியாய்'

'காசை விரும்பிக் கலங்கித் திரிந்து உன்பாத ஆசை
விரும்பாது அலைந்தேன்'

என்னும் அடிகள் வழி பொன் ஆசையால் இறைவனடியை விரும்பாதிருக்கும் நிலையைச் சுட்டுகின்றார். பெற்றோர், பிள்ளைகள், உற்றார், உறவினர் ஆகியோரின் துணையுடன் இவ்வுலகில் மனிதன் வாழ முடிகிறது. எனவே அவர்கள் மீது அதிக பாசம் கொள்ளுகிறான். அதுவும் ஒருநிலையில் அவனைத் துன்பத்திற்கு உள்ளாக்குகிறது. இதனைச் சாகிபு கீழ்வரும் பாடல் அடிகளால் உணர்த்துகிறார்.

உற்றார்களாலும் உறவின் முறையோராலும்
பெற்றோர்களாலும் உனைப் பிரிந்தேன் (34)

சாதிசனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர் போதும்
போதும் போதும் (85)

உற்றாரை நம்பியிருந்து ஒருபலனும் காணாமல்
செத்தால் எனக்கு அதுதான் சின்னம் (86)

உடல் வளர்க்கும் ஆசை, பெண், பொன் மீது ஆசை, உற்றார் உறவினர்மீது கொள்ளும் பற்று ஆகியவற்றை நீக்குவதற்கு அடிப்படையாக அமைவது புலனடக்கமாகும். அப்புலனடக்கத்திற்கு இறைவன்தான் வழிகாட்டவேண்டும் என்று சாகிபு இறைவனிடம் வேண்டுவதை,

அடக்க அரிதாம் ஆயிரம் பொறியைக் கட்டிப் படிக்கப்
படிப்பு எனக்குப் பகராய் பராபரமே

என்னும் அடிகளால் அறியலாம். தூய்மையாக்கலுக்கு ஆசையைத் துறத்தலும், ஐம்புலனடக்கமும் அடிப்படை என்பது இவ்வடிகளால் உணரலாம்.

இறை நம்பிக்கை கொள்வது மட்டு மல்லாமல் அவனை எண்ணியே தியானம் செய்தால் அருள் பெறமுடியும். அவ்விறையருளைப் பெற இறைவனும் ஒரு காரணமாவான் என்று சாகிபு கருதுகிறார். இந்நிலையை,

இல்லல்லாஹூ என்று எனை மறந்து கொண்டு
உன்னையே சொல்ல அருள் மெய்ஞ்ஞானச் சுடரே

தூங்கியிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்
வேங்கைப்புலி ஆக்குவிப்பாய் (49)

தூங்காமல் தூங்கி தொழுதிருக்க என்னுடைய
ஆங்காரம் எல்லாம் அகற்றுவாய் (81)

என்னும் அடிகளால் உணரலாம்.

இறைவனைத் தவிர பிற எல்லாம் நிலையற்றவை என்று எண்ணியதன் விளைவே துறவு மேற்கொள்ளும் நிலையாகும். இரண்டாம் படியாகிய துறவினை ஏற்று இறைவனை நோக்கி எண்ணங்களை வளர்த்துக்கொண்டு தியானித்தால்தான் இறையருளைப் பெறமுடியும். இத்தியானமும் இறையருள் கிடைத்தால்தான் மேற்கொள்ள முடியும்.

இறைவனை அடைய தன்னை மறத்தல் அல்லது இழத்தல் வேண்டும். இந்நிலை இறைத்தன்மை உணர்வதால் மட்டுமே கிடைக்கப் பெறும். இந்நிலை அடைய ஒருவன் இறைவனின் பண்புகள் அருட் செயல்கள் போன்றவற்றை எண்ணுதலே அடிப்படையாகும்.

இறைவன் ஆதியானவன், நிர்மூலமானவன், ஜோதியானவன், வேதத்தின் உட்பொருளாய் நிற்பவன், நாதாந்த பூவாய் மலர்ந் திருப்பவன், கூத்தன், மந்திரத்திற்கு எட்டாத மறைபொருளானவன், நிலைபெற்ற உயிரானவன், அறிவோருக்கு ஆனந்த வெள்ளமாவான், மறையோருக்கு எட்டாத சூத்திரமாய் நின்றவன், அருள்மயமானவன், புணையானவன் என்றெல்லாம் பலவாறாக இறைமையைப் போற்று கின்றனர். இதன்வழி சாகிபு இறைவனை நோக்கிய தம் எண்ணங்கள் சொல் செயலை வளர்த்துக் கொண்டுள்ளமையை அறிய முடிகிறது.

முடிவுரை

மஸ்தான் சாகிபு எளிமையான வாழ்க்கை மேற்கொண்டு இறைவனை அடைதலை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தார். இசுலாமியத்திற்கு எதிரான துறவு வாழ்க்கை மேற்கொண்டு சிற்றின்பம் வெறுத்தலையும் சூபிய ஞானியாகிய மஸ்தான் சாகிபு பாடல் வழி அறியமுடிகிறது. இது சூபிய மெய்யுணர்தலின் முதல்படியாகிய தூய்மைப்படுத்துதலைக் காட்டுகிறது. கடவுள்மீது அன்பு செலுத்தி அவனருளுக்காக ஏங்கி உலக விருப்புக்களிலிருந்து வெறுத்து நின்று தியானம் செய்து இறைவன் தன்னை ஆட்கொள்வான் என நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர் மஸ்தான் சாகிபு. இவர் தம் பராபரக் கண்ணியில் இறைவன் தன்னை ஆட்கொள்ளவேண்டித் தன்னை இழந்து பலவாறாகப் பாடுவது உணரமுடிகிறது. ஆயின் இறைவனுடன் ஒன்றறக் கலத்தல் ஆகிய தெய்வமாக்கல் என்னும் மூன்றாவது படிநிலையைக் காணமுடியவில்லை. இசுலாமியம் ஏற்றுக்கொள்ளாததால் இறைவனுடன் ஒன்றறக் கலத்தல் என்பதை இவரும் தம் பாடல்களில் குறிப்பிடவில்லைபோலும்.

உபநிடதங்கள் - ஒரு பார்வை

சுடலிதியாகராஜன்

பச்சையப்பன் கல்லூரி

சென்னை - 30

''பன்னருமு பநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே'' (பாரதியார்)

உபநிடதங்கள் - ஒரு பார்வை என்ற நோக்கில், உபநிடதங்கள் என்றால் என்ன? தோற்றமும் வளர்ச்சியும், பரவிய நிலை, வேதங்களுக்கும் உபநிடதங்களுக்கும் உள்ள தொடர்பு, அமைப்பு, சிறப்பு, விளக்கும் செய்திகள் போன்றவை இங்கு குறிப்பிடப்படுகின்றன.

உபநிடதங்கள் என்றால் என்ன?

வேதங்களின் சாரமே உபநிடதங்கள். வேதங்களின் உட்பொருளைக் (அந்தத்தை) கூறுவன உபநிடதங்கள் என்பதால் வேதாந்தம் என்ற பெயரும் உபநிடதங்களுக்கு உண்டு.

'அதிவேக ஆர்வத்துடன் கூடிய கவன ஈர்ப்போடு மிக அருகில் இருத்தல்', என்பதே உபநிடதம் என்ற சொல்லுக்கு விளக்கம்.

அதாவது, குருவுக்கு மிக அருகில், ஆர்வமுடன் நெருங்கி இருந்து உபதேச மொழிகளைக் கேட்பது. பயன்படத்தக்க பக்குவம் அடையாதவர்களிடமிருந்து மறைக்கத் தக்கது. எனவே, முனிவர்கள் (குரு) சீடர்களைச் சோதித்தபின்பே உபதேசிக்கும் 'மறை' உபநிடதங்கள். காதால் கேட்பது என்ற பொருளுடைய ''சுருதி'' என்ற பெயரும் உண்டு.

தோற்றமும் வளர்ச்சியும்

யாரால் ஆக்கப்பட்டன என்று கூறமுடியாப் பழைமை உடையன. கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு (புத்தர் காலம்) முற்பட்டன என்றும், கிறிஸ்துவுக்கு 6000 ஆண்டுகளுக்கு முற்பட்டன என்றும் வேறுபட்ட கருத்துக்கள் உள.

இதன் சிறப்பை மேனாட்டவர் உணர்த்திய பின்பே பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. கி.பி. 1657-இல் 'தாராஷீகோ' என்ற மொகலாய இளவரசர், உபநிடதங்களைச் சமஸ்கிருதப் பண்டிதர்களைக் கொண்டு பாரசீக மொழியில் மொழிபெயர்த்ததைப்

பார்த்து, அவற்றின் சிறப்புகளை உணர்ந்த ஐரோப்பியர் 1801-இல் லத்தீனில் மொழி பெயர்த்தனர். பின் பல மேனாட்டு மொழி களில் மொழி பெயர்க்கப்பட்டன.

வேதங்களுக்கும் உபநிடதங்களுக்கும் உள்ள தொடர்பு

'வேதம்', என்பதற்கு 'வித்' (அறிதல்) என்ற சொல்லே, அடிச்சொல். நிலைத்த உண்மைப் பொருளைப் பற்றிய அறிவைத் தருவது வேதம். வேதங்களை நான்காகப் பிரித்தனர்.

வேதங்கள்

ருக்	யசுர்	சாமம்	அதர்வணம்
கோத்திரம்	யாகம்	பண்	மாந்திரிகம்
தெய்வங்களுக்குத் தோத்திரமாய் உள்ளவை மிகுதி	யாகங்களைப் பற்றிய சுலோகங்கள் மிகுதி	இசையோடு அமைந்த சுலோகங்கள் மிகுதி	மாந்திரிகத்தோடு தொடர்புடைய சுலோகங்கள் மிகுதி

இவற்றுள் ஒவ்வொரு வேதத்துக்கும் மந்திரப் பகுதி, பிரமாணப் பகுதி என்ற அமைப்புகள் உள.

பிரமாணத்தில், உபநிடதம் என்ற மேலும் ஒரு பகுதி உண்டு. இவை மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன.

எனவே, மந்திரம், பிரமாணம், உபநிடதம் என்ற மூன்றும் சேர்ந்து வேதம் என்று வழங்கப்படுகின்றது.

பிரமாணங்களுக்கும், உபநிடதங்களுக்குமிடையே ஆரணியகம் என்றொரு பகுதியும் உண்டு.

1. மந்திரங்கள் - தெய்வங்களை நோக்கிக் கூறும் துதிப்பாடல்கள்
2. பிரமாணங்கள் - மந்திரங்களை வாய் உச்சரிக்கும் பொழுது மேற்கொள்ள வேண்டிய செயல்களை விளக்குவன
3. உபநிடதங்கள் - மந்திரங்கள், பிரமாணங்கள் இவை இரண்டையும் ஒட்டி எழும் தத்துவங்களை ஆராய்வனவே உபநிடதங்கள்
4. ஆரணியகம் இல்லறம் முடித்துத் துறவறத்தை மேற் கொள்பவன், காட்டில் கிரியைகள் செய்ய ஏற்ற பொருள்கள் இல்லாமையால், மானசீக

அடையாளங்களைக் கொண்டு செய்யும் அனுட்டான செயல்களை விவரிப்பன.

ஆரணியகம், அனுட்டானங்களையே மிகுதியாகப் பேசுவதால் பிரமாணங்களோடு சேர்த்து விடலாம் என்பர்.

முதலில் புலவர்களால் மந்திரங்களும், புரோகிதர்களால் பிரமாணங்களும், தத்துவ ஞானிகளால் உபநிடதங்களும் ஆக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதுவர்.

வேத உபநிடதங்களின் சாரமாக 'வேதாந்த சூத்திரம்' என்று எழுந்த நூலுக்குச் சங்கரர்; இராமானுசர், மத்துவர் ஆகிய மூவரும் மூன்று வித விளக்கங்களைக் கொடுத்தனர். இவையே மூவித வேதாந்தங்கள். எல்லா உட்பிரிவுகளுக்கும் காரணம் வேதங்களே.

உட்பிரிவுகள்

முதற் பிரிவு	இரண்டாம் பிரிவு	மூன்றாம் பிரிவு	நான்காம் பிரிவு
உலகாயதம் சமணம் பௌத்தம் (இவை, வேதத்தை எதிர்த்து எழுந்தவை)	சாங்கியம் யோகம் வைசேடிகம் நியாயம் மீமாம்சை வேதாந்தம் (வேதத்தை ஒப்புக்கொள்வன) (ஷட்தரிசனங்கள்)	அத்துவித வேதாந்தம் இராமானுச வேதாந்தம் மத்துவ வேதாந்தம்	சைவ சித்தாந்தம் மட்டும்

இந்து சமயங்கள் அனைத்துக்கும், தத்துவ ஆராய்ச்சிகளுக்கும் அடிப்படையாக 'பிரஸ்தானத்திரயம் என்று மூலநூல்கள் மூன்றனைக் குறிப்பிடுவர். அவை, உபநிடதங்கள் பிரம்ம சூத்திரம் (வேதாந்த சூத்திரம்) பகவத் கீதை என்பன. இவற்றுள் உபநிடதமே மிக முக்கியம் என்பர். வேதங்களிலிருந்து வேறல்ல உபநிடதம், வேதங் களின் சாரமாகிய உபநிடதங்கள் ஞானத்தை மிகுத்துப் பேசினாலும், கன்மத்தை மிகுத்துப் பேசும் பிரமாணத்தை எதிர்ப்பன அல்ல.

மிக முக்கியமான பத்து உபநிடதங்களுக்குச் சங்கரர் உரை எழுதியுள்ளார்.

அமைப்பு

பெரும்பாலும், சீடன் கேட்கும் வினாக்களுக்குக் குரு விளக்கம் அளிக்கும் உரையாடல் வடிவத்திலேயே உபநிடதங்கள் உள்ளன. முழுவதையும் ஒரே ஆசிரியர் ஆக்கவில்லை. எனவே, ஒழுங்கு, முழுமை, தொடர்ச்சி இல்லை. ஒரே பொருள் பல இடங்களில் பலவிதமான குறிப்புகளாக இருக்கும். அவற்றை ஒழுங்கு படுத்தினால்தான் ஒரு பொருளைப் பற்றி முழுமையான உபநிடத அறவுரைகளை அறிய முடியும். இது எளிதல்ல. ஒரு முனிவர் ஒரு விதமாகவும், வேறொரு முனிவர் வேறு விதமாகவும் ஒரே பொருளை விளக்கி இருப்பர். எனவேதான் சங்கரர், இராமானுசர் போன்றோர் தம்முள் மாறுபடுகின்றனர். இதன் விளைவே இந்து சமயத்துள் பல உட்பிரிவுகள்.

காலத்தால் முற்பட்ட உபநிடதங்கள் வசன நடையிலும், பிற்பட்டவை செய்யுள் நடையிலும் உள்ளன. உபநிடதங்கள் தெய்வ அருள்பெற்றோரின் அனுபவ சாட்சியால், மெய்ப்பிக்கப்பட்ட வலிமையான ஆதாரங்கள்.

விளக்கும் செய்திகள்

ஆத்மா, பிரம்மம் இரண்டுக்கும் உள்ள தொடர்பு, உண்மை இயல்புகள் மிக முக்கியமாக உபநிடதங்களில் ஆராயப்பட்டுள்ளன. சான்றாக ஒரு சிலவற்றை மட்டுமே நோக்கலாம்.

ஆத்மாவுக்கும், பிரம்மத்துக்கும் உள்ள தொடர்பு மிக நெருங்கியது. எனவே இரண்டும் ஆத்மா (ஜீவாத்மா, பரமாத்மா) என்ற பெயரைப் பெறுகின்றன. வண்டியில் கட்டப்பட்டுள்ள குதிரையைப் போல ஆத்மா, சரீரத்துள் கட்டப்பட்டுள்ளது. புற ஒளிகளை நம் கண் ஒளி இன்றிக் காண முடியாது. அந்தராத்மா என்பது உள்ளத்துள் ஒளிரும் பேரொளி. பிரம்மத்தின் ஒளியால் ஒளிர்கின்றது.

காண்பது கண்ணல்ல	- ஆன்மா கண்ணைக் கருவியாக்கியுள்ளது
கேட்பது காதல்ல	- ஆன்மா காதினைக் கருவியாக்கியுள்ளது
பேசுவது நாக்கல்ல	- ஆன்மா நாக்கினைக் கருவியாக்கியுள்ளது
எண்ணுவதும் மனதல்ல	- ஆன்மா, மனதைக் கொண்டு எண்ணவும், அடக்கவும் செய்கின்றது.

மனதைக் கண்ணாகக் கொண்டு, தியானித்துப் பரமாத்மாவைக் கண்டு ஆனந்தம் அடைவது ஆன்மா. இவ்வாறு உடல், இந்திரியங்கள், உடலின் செயல்கள், மனம் ஆகியவற்றினின்றும் வேறான பொருளே ஆன்மா. இவ்வாறே, மனத்தைக் கொண்டு நினைப்பது பிரம்மம்

அல்ல. எந்தச் சக்தியால் மனம் நினைக்கின்றதோ அதுவே பிரம்மம்.

கண்ணால் பார்ப்பது பிரம்மம் அல்ல	- பிரம்மத்தினால் கண் பார்க்கிறது
காதால் கேட்பது பிரம்மம் அல்ல	- பிரம்மத்தினால் காது கேட்கிறது
உயிர்ப்பதும் பிரம்மம் அல்ல	- எதனால் சுவாசம் சுவாசிக்கிறதோ அதுவே பிரம்மம்.

பரமாத்மா இன்றிச் சீவனில் ஒன்றுமில்லை. அது உயிரற்ற உடலாகும். உடலுக்கு ஆத்மாபோல, பிரபஞ்சத்துக்குப் பிரம்மா.

விடை கூறும் உபநிடத வாக்கியங்கள், ''மகா - வாக்கியங்கள்'', எனப்படும். இவ்வாக்கியங்கள், அனுபூதிமார்களுடைய கூற்றுக்களே. உபநிடதத்திலுள்ள மகாவாக்கியங்களுக்கு விளக்கம் கொடுப்பதில் வேதாந்திகளும், சைவ சித்தாந்திகளும் வேறுபடுகின்றனர்.

முத்தி அடையும் வழிகளும் உபநிடதத்துள் உள்ளன. வைராக்கியமும் ஞானமும் முக்கியமானவை. வைராக்கியம் என்பது பற்றறுத்தல். இது, அகங்காரத்தை நீக்குவதால் வசப்படும். ஞானத்துக்குச் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்ற 3 வழிகள் உள.

சிரவணம்	- தக்க குருவின் மூலம் உபநிடதங்களைக் கற்றல்
மனனம்	- கற்றவற்றைச் சிந்தித்தல்
நிதித்தியாசனம்	- அவற்றைத் தியானித்தல். இதுவே மிக முக்கியம்.

தியானித்தல் எளிதல்ல. தியானம் கைவர வழிகள் பல உபநிடதத்துள் கூறப்பட்டுள்ளன. மனதை ஒருமுகப்படுத்தும் பயிற்சி களே அவை. இப்பயிற்சிகளுக்குப் பின்பே தியானம் முழுவதும் கைகூடும்.

ஆக, வேதங்களின் சாரமே உபநிடதங்கள். அவை, பழைமை யானவை; தத்துவ விளக்கங்கள் அனைத்திற்கும் அடிப்படை யானவை, இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படுபவை; ஆன்மா, பிரம்மம், பிரபஞ்சம் ஆகியவற்றை விளக்குவன என்பனவற்றை உணரலாம்.

உலக சமாதானத்திற்கு வேதாத்திரி கூறும் கருத்தியல் நெறிகள்

நீல. சந்திரநாதன்

பி.கே. ஆர். மகளிர் கலைக் கல்லூரி
கோபிசெட்டிபாளையம்

உலகம் இன்று அமைதிப் பூங்காவாகக் காட்சியளிக்கவில்லை. ஒருபுறம் போரினால் ஏற்பட்ட அழிவு; இன்னொரு புறம் தீவிரவாதத்தின் அச்சுறுத்தல்; ஒரு பக்கம் இயற்கையின் சீற்றம் இந்நிலையில் உலக சமாதானத்தை எங்கிருந்து எதிர்பார்க்க முடியும்.

மனிதன் தன் வாழ்க்கைத் தேவைகளைப் பெற்று, அமைதியாக வாழ வேதாத்திரி கூறும் கருத்துக்கள் போற்றத்தக்க வகையில் உள்ளன.

நாம் வாழும் இந்தப் பூமியில் எல்லா வசதிகளையும் இயற்கை அன்னை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றாள். எனினும் நம்மை நம் தத்துவத்தை நாம் அறிந்து கொள்ளாத, உணராத குறையால் நம்மிடையே உயர்ந்தவன்-தாழ்ந்தவன், படித்தவன்-படிக்காதவன், முதலாளி-தொழிலாளி என்ற பல வேறுபாடுகளை ஏற்படுத்திக் கொண்டும், பலவிதமான துன்பங்களை விளைவித்துக் கொண்டும், பெருக்கிக் கொண்டும் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலை மாற முதலில் நாம் பணத்தின்மீது கொண்டுள்ள ஆசையை ஒழிக்க வேண்டும்.

பணத்தாசையை ஒழித்தல்

'வினையே ஆடவர்க்குயிரே' என்றனர் சான்றோர். ஆம் அக்காலத்தில் பொருளீட்டுதல் ஆடவரின் முக்கிய கடமையாக இருந்தது. ஆனால் இன்று பொருளீட்டல் ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவான ஒன்றாகிவிட்டது. காரணம் என்ன?

ஆடம்பரச் செலவுகளைப் பெருக்கிக் கொண்டோம். தேவைக்கு அதிகமான பொருட்களை வாங்கிக் குவிக்கின்றோம். ஆசைகளை வளர்த்துக் கொண்டோம். இத்தேவைகளைப் பூர்த்தி செய்யப் பணத் தேவையும் அவசியமாகின்றது. இத்தகைய பணம் இன்று பந்த பாசத்தையே துண்டித்து விடுகின்றது. அதனால் தான் வேதாத்திரி பணம் நச்சுக்கு ஒப்பானது என்கிறார். பணம்தான் இன்று

அவசியமற்ற பொருட்களை உற்பத்திச் செய்யவும், உபயோகம் செய்யவும் தூண்டுகின்றன என்கிறார். உலக அமைதியின்மைக்கு முக்கிய காரணமான ஏழை, செல்வந்தன் என்ற வேற்றுமையை வளர்க்கும் இந்தப் பணத்தின்மீது கொண்டுள்ள ஆசையை மனிதன் முதலில் ஒழிக்கவேண்டும் என்கிறார்.

இருப்பதை விட்டுவிட்டுப் பறப்பதற்கே இன்று பலர் ஆசைப் படுகின்றார்கள். இந்நிலைக்கு காரணம் மக்களின் அறியாமையும், பேராசையும் தான். வேதாத்திரி வறுமையும், அறியாமையும் தான் குற்றங்களைச் செய்யத் தூண்டுகின்றன, மனிதர்கள் தங்கள் திறமையைக் கொண்டே நல்ல முறையில் வாழ்க்கைக்கு தேவையான பொருட்களைப் பெருக்கி, உணவு, உடை, வீடு முதலான எல்லா வசதிகளையும் அனைவருக்கும் சமமாகக் கிடைக்கும் படி செய்தால், மனிதர்களிடையே குற்றம் தோன்றாது என்கிறார்.

தனி உடைமைத் தத்துவம் நீங்க வேண்டும்

அன்பு இல்லாத மணம், இருள் நிறைந்த குகையாகக் காட்சி யளிக்கின்றது. அடுத்தவரின் நலத்தைக் கண்டு வெளியே சிரிக்கும் பலர் உள்ளுக்குள்ளே வெந்துபோவது ஏனோ? இதற்கெல்லாம் காரணம் மனிதனிடம் காணப்படும் சுயநலம் தான். 'நான்', 'எனது' என்ற குறுகிய நோக்கத்தால் தான் இவை என்னுடையவை, இன்னின்னப் பொருட்களுக்கு நான் சொந்தக்காரர், உரிமையாளன் என்ற எண்ணம் தோன்றுகின்றது.

எல்லோரும் கூட்டாகப் பொருள் சேமிக்க வேண்டும், எல்லா பொருட்களையும் பொதுவாகச் சேமித்து, எல்லோரும் சேர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற கூட்டுறவுத் தத்துவம் தோன்றியிருந்தால் உலகத்தில் இதுவரையில் நடந்த யுத்தங்கள் தோன்றி இராது என்கிறார் வேதாத்திரி.

உலகம் முழுவதும் உள்ள மனிதர்கள் ஒரே ஆட்சியின் கீழ் அச்சமின்றிச் சுதந்திரமாக வாழும் முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்கிறார் மகரிஷி. இந்த முறை நடைமுறைக்கு வருவது அவ்வளவு எளிதான காரியமில்லை. எனினும் ஒவ்வொரு ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் அமைதியாக, அச்சமின்றி, சமாதானமாக வாழும் முறை ஏற்பட்டால் அதுவே உலக சமாதானத்திற்கு வழிகோலும்.

ஆன்மீக உணர்வை ஏற்படுத்துதல்

இறையுணர்வு தோன்றினால் தான், அறநெறி தானாக மலரும். ஆன்மீக உணர்வினால் தான் உலகில் நிரந்தர அமைதியை உண்டாக்க முடியும்.

ஒருவரோ, சிலரோ ஆன்மீக அறிவு பெறுவது மட்டும், உலக அமைதிக்குப் போதுமானதாகாது என்கிறார். இருப்பினும் இயற்கை அமைப்பு, அறிவின் தத்துவம், அனுபோக முறைகள் இவை அனைத்தையும் அறிந்து, மயக்கமற்ற தெளிவுடன் வாழ ஆன்மீகத்துறையில் வயதுக்கேற்றபடி பயிற்சி அளிக்க வேண்டும். இதன்மூலம் குடும்பத்தில் அமைதி, ஊரில் அமைதி, நாட்டில் அமைதி, உலகில் அமைதி இவை உருவாகும், நிலைபெறும் என்கிறார். இந்த நோக்கத்தில் தான் வேதாத்திரி உலக சமுதாயச் சேவா சங்கத்தை அமைத்துள்ளார்.

உயிரென்றும், ஆன்மாவென்றும், கடவுள் என்றும், அறிவு என்றும் சொல்லப்படும் அரூப சக்திகளை உள்நாட்டத்தால் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள இச்சங்கங்கள் பயிற்சியளிக்கும் என்கிறார்.

உலக சமாதானப் பொதுச் சங்கங்களை ஏற்படுத்தல்

மனிதன் இன்று மனித நிலையிலிருந்து மாறி விலங்கு நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றான். கொலை, கொள்ளை, கற்பழிப்பு இவை அன்றாட நிகழ்ச்சிகளுள் ஒன்றாகிவிட்டன. நீதியை விட அநீதிதான் இன்று பல இடங்களில் சிம்மாசானத்தில் வீற்றிருக்கின்றது. இந்நிலையை நீக்கி உலக மக்கள் எல்லாவிதமான நன்மைகளையும் பெற்று அமைதியோடு வாழ உலகமெங்கிலும் உலக சமாதானப் பொதுச்சங்கங்களை ஏற்படுத்த வேண்டும் என்கிறார் வேதாத்திரி. மக்கள் தான் செய்யும் செயல்கள் நன்மையா? தீமையா? என்பதை அறிந்து, நற்செயல்களை மட்டுமே செய்யவும், பணத்தாசையை ஒழிக்கவும், தங்கள் வாழ்வைத் தூய்மைப் படுத்தவும் இச்சங்கங்கள் உதவும்.

சொத்துக்களைப் பொதுவுடைமையாக்கல்

இவ்வுலகில் தோன்றும் துன்பங்களைப் போக்க, சமுதாயம் குற்றமற்றதாக உருவாக நாம் செய்ய வேண்டிய ஒரே வழி வீடுகளையும், வீருகளையும் பொது உடைமையாக்கும் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்கிறார்.

இவ்வுலகில் ஒருவன் எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழ, மற்றொருவன் சாப்பாட்டிற்கே திண்டாடும் நிலை. இந்த ஏழை, பணக்காரன் நிலை மாற, செல்வந்தர்கள் தங்களுக்குரிய பொருட்களை ஏழைகளுக்கு வழங்குவதன் மூலம் வறுமையும் ஒழிக்கப்படும். செல்வந்தர்களுக்கும் தங்கள் செல்வத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் குறைந்து விடும். பொருளாதார ஏற்றத்தாழ்வு சமப் படுத்தப்பட்டு மனிதர்கள் மனிதர்களாக வாழ முடியும் என்கிறார்.

பொறியும் மனமும்

த. வசந்தா அமர்நாத்

எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை - 600 008

உட்கார்ந்திருக்கின்றேன்,
ஓடிக் கொண்டிருக்கிறது
மனம்

என்பது ஓவியக்கவிஞன் அமுதோனின் ஹைக்கூ கவிதை. இந்த மனம் மனிதனைப் படுத்தும் பாடு சொல்லி முடியாது. வேறு எந்த இனமாவது இப்பாடு படுகிறதா என்றால் இல்லை. ஏனெனில் இது மனிதனுக்கு மட்டுமே சொந்தமானது. எப்படி?

ஓரறிவுயிர் - மெய்
ஈரறிவுயிர் - மெய் + நா
மூவறிவுயிர் - மெய் + நா + மூக்கு
நாலறிவுயிர் - மெய் + நா + மூக்கு + கண்
ஐந்தறிவுயிர் - மெய் + நா + மூக்கு + கண் + செவி
ஆறறிவுயிர் - மெய் + நா + மூக்கு + கண் + செவி + மனம்

என உயிர்களுக்கு ஓர் அறிவுக்கு ஒரு புலனாகக் கூட்டி ஐந்து அறிவுக்கு ஐந்து புலன்களைச் சுட்டிய தொல்காப்பியன் ஆறாவது அறிவுக்குக் கண்ணால் காண முடியாத மனத்தைக் குறிப்பிடுகின்றான்.

ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே (நூற்பா - 571)

'இவ்வாறு அறிதலாவது... மனத்தினாலறியப்படுவது இது போல்வன வேண்டுமெனவும், இது செயல் வேண்டுமெனவும், இஃது எத்தன்மையெனவும் அனுமானித்தல். அனுமானமாவது புகை கண்டவழி நெருப்புண்மை கட்புலன் அன்றாயினும் அதன்கண் நெருப்பு உண்டென்று அனுமானித்தல் என்பது இளம்பூரணம்.

'அல்லதூஉம் கண் உணர்வு உணர்ந்த வழி இன்பம் கொள்ளாமையும் வருதலின் அவை பொறி உணர்வெனப்படும்... பொறி உணர்வு மனமின்றிப் பிறவாதெனின் முற்பிறந்தது மன வுணர்வாமாகவே பொறி உணர்வென்பது ஓர் அறிவின்றாகியே செல்லும் என்பது பேராசிரியர் உரை.

மேற்காட்டிய நூற்பாவழியும் உரைவழியும் ஐம்பொறிக்கும் மனத்துக்கும் உள்ள விளக்கத்தையும், ஒற்றுமையையும் வேறு பாட்டையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இங்ஙனம் இலக்கணம், சுட்டிய மனம் மனிதனை ஆட்டிப் படைப்பதையும் அதிலிருந்து மீள என்ன வழி என்பதையும் காலந்தோறும் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் மனம் பற்றிய பதிவு இலக்கிய வகைகளுக்கு ஏற்ப சற்று வேறுபடுகின்றது. எனவே மாதிரி ஆய்வுக்காகத் திருமூலர் திருமந்திரமும் நம்மாழ்வார் திருவாய் மொழியும் ஆய்வுக்களமாகக் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

மதியின் பெருவழி மானுடர் வாழ்க்கை (2030)

படர்கின்ற சிந்தையைப் பைய ஒடுக்கிக்
குறிக்கொண்ட சிந்தையைக் குறிவழி நோக்கில் (2039)

இலக்கை அடையலாம், புலன் வழிச் சொல்லும் இன்பத்தை விடவேண்டும்.

வென்று புலன்கள் விரைந்து விடுமின்கள் (2049)

புலன் ஐந்தையும் புத்தியால் மீட்க வேண்டும் போற்றி செய் மீட்டே புலனைந்தும் புத்தியால் (2041) என்கின்றார் திருமூலர். உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் (24) என்பது திருவள்ளுவர் வாக்கு. மேலும் அவர், பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார் (6) எனக் கடவுள் வாழ்த்தில் முதல் அதிகாரத்திலேயே நிலைபெற்ற வாழ்வுக்குப் புலனடக்கம் இன்றியமையாதது என்பதைச் சுட்டுகிறார். 'மும் மதவேழம் முழக்கி எழுகின்றது. அடக்க அறிவென்னுங் கோட்டையை வைத்தேன்' (2034).

மனத்திடை நின்ற மதிவாள் உருவி
இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப்
புனத்திடை அஞ்சும் போகாமல் மறித்தால்
தவத்திடை யாறொளி தன்னொளி யாமே (1638)

என்பது திருமந்திரம். 'மனம் எனும் தோணி பற்றி மதி என்னுங் கோலை ஊன்றி' எனத் தொடங்கும் அப்பர் தேவாரமும் ஈண்டு ஒப்பு வைத்து எண்ணத்தக்கது. ஆக மனதை அடக்க அறிவு வேண்டும் என்பதைச் சான்றோர்கள் எடுத்துக் காட்டியுள்ளதை அறியலாம். மேலும் மனத்தின் தன்மை நினைந்து சிங்கம், நரி, பறவை போன்ற விலங்குகளின் செயல்பாட்டுடன் உவமித்துள்ளார் திருமூலர்.

அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும் போய் மேய்ந்து நம் அஞ்சக மேபுகும்

அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சா திறைவனை எய்தலு மாமே (2026)

இத்திருமந்திரப் பாடல் ஐம்புலன்களின் ஆற்றல், வலிமை கருதி சிங்கமாக உருவகப்படுத்தி உள்ளது.

ஐம்புலன்களின் விரைவு கருதிக் 'கொல்ல நின்றோடும் குதிரையொத் தேனே' (2028) என்பர். கொல்லுவதற்குக் கூட்டிக் கொண்டோடும் குதிரைமேல் ஏறியவனை ஒத்தேன் என்பது பொருள். மனம் பொறிவழி ஓடிக் கொண்டே இருப்பதால் இயக்கம் கருதி, குதிரைக்கு உவமித்தார் எனலாம். 'நரிகள்' என்றும் ஐம்புலன்களைச் சுட்டுகின்றார்.

புலமைந்து புள்ளைந்து புட்சென்று மேயும்
நிலமைந்து நீரைந்து நீர்மையும் ஐந்து
குலமொன்று கோல்கொண்டு மேய்ப்பான் ஒருவன்
உலம் வந்து போம்வழி யொன்பது தானே. (2025)

புலன்களின் விரைவு கருதி ஓரிடத்தில் நில்லாத் தன்மை நினைந்து பறவைக்கு உவமித்தார். மனதை வெல்லுவது என்பது எளிதானதல்ல என்பதை,

ஐவர் அமைச்சருள் தொண்ணூற் றறுவர்கள்
ஐவரு மைந்தரு மாளக் கருதுவர்
ஐவரு மைந்து சினந்தொடே நின்றிடில்
ஐவர்க் கிறையிறுத் தாற்றகி லோமே (2027)

என்பர். ஏனெனில் உற்றறிதல், உண்டல், காண்டல், உயிர்த்தல், கேட்டல் ஆகியவற்றில் ஐம்புலன்களும் விரைந்து செல்லும். அவற்றை அடக்குதல் அருமைப்பாடு நிறைந்த செயலாக உள்ளது என்பது பொருள். புலன்களின் ஆளுமைத்தன்மை கருதி அமைச்சர் என்றார் போலும்.

ஐம்புலன்களை வென்றவன் அமரன் என்பது திருமந்திரம்.

கிடக்கும் உடலிற் கிளரிந் திரியம்
அடக்க லுறுமவன் தானே யமரன் (2032)

உடம்பாகிய ஊர்தியில் ஊர்ந்து மனமாகிய பாகன் செலுத்த, உயிர்கள் மயங்கித் திரிகின்றன.

காயத்தே ரேறி மனப்பாகன் கை கூட்ட
மாயத்தே ரேறி மயங்கும் அவை... (1651)

என்பதால் ஐம்பொறியின் பாற்பட்டு மனமும் மனத்தின் பாற்பட்டு ஐம்பொறியும் படாதபாடுபடுவதை உணர்த்துகின்றார் திருமூலர்

ஐம்பொறியைக் கூர்மையும் குத்தி உட்செல்லும் திறனும் கொண்டு ஐந்து பெரிய ஊசிகளாகக் காட்டுகிறார்.

பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டாற்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே *(183)*

இப்பாடல் ஐம்புலனுக்கு ஐந்து ஊசியையும், உடம்புக்குப் பையையும், பறந்து சென்று தீயவற்றைப் பற்றும் ஐம்பொறியின் தன்மைக்குக் காகத்தையும் உருவகப்படுத்துகின்றது.

பொறி, மனம் பற்றி திருமூலர் சுட்டுகின்ற வினைச் சொற்களைக் கூர்ந்து நோக்கினால் அச்சொற்களே அவற்றின் பண்பைச் சித்திரிப்பதை உணரலாம்.

தரிக்கின்ற நெஞ்சஞ் சகளத்தி னுள்ளே
அரிக்கின்ற ஐவரை யாரும் உணரார் *(2042)*

உடம்பினுள் இருந்து அதனை அரித்துத் தின்னுகின்ற ஐவராகப் புலன்களைச் சுட்டுவதால் பண்பு வெளிப்படுத்துகிறது; உடம்பை நைக்கும் தன்மையது. எனவே அவற்றிலிருந்து காக்கும் வழி தேடுங்கள் என எச்சரிப்பதாகவும் உள்ளது.

ஐவரும் எண்ணற்ற துன்பம் கொடுக்கின்றனர் *(213)* அவை பொய்யைப் பொருந்தும் நுண்ணிய புலன்கள். ஐவருடைய அவாவினில் தோன்றிய பொய்வருடைய புலன்களும் ஐந்தே *(2043)* என்று சுட்டுகின்றார். புலன்களை நல்வழிச் செலுத்தினால் அது விளக்காகும். ஒளி கொடுக்கும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே *(1823)*

மேலும் 'மராமரன் மன்னி மனந்துறைந் தானே' *(1760)*, 'குராலென்னும் என் மனம் கோயில் கொள் ஈசன்' *(1761)*, 'ஒன்றியென் உள்ளத்தின் உள்ளிருந் தானே' *(1762)* என்பன போன்ற திருமந்திரப் பாடலடிகள் காயத்தின் உள்ளே உள்ள ஐவரை நல்நெறிப்படுத்தும் வழியைக் காட்டுபவை.

திருவாய்மொழி

கள்ள மனம் தவிர்ந்தே உனைக்கண்டு கொண்டு உய்ந்து ஒழிந்தேன் *(5:1:3)*

கறுத்த மனமொன்றும் வேண்டா கண்ணன் அல்லால் தெய்வ மில்லை (5:2:7) எனப் போற்றிய நம்மாழ்வார் வண்குழியினின் விழ்க்கும் ஐவர் (7:1:9) என ஐம்புலன்களைச் சுட்டுவர்.

> வன்பரங்கள் எடுத்து ஐவர் திசைதிசை வலித்தெற்றுகின்றனர் (7:1:10)

ஐவருக்குள் ஒற்றுமை இல்லை. எனவே ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசைக்கு இழுத்துப்படாத பாடு படுத்துகின்றன. ஐவரும் ஓரிடத்தில் நிற்பதில்லை.

> ஒன்று சொல்லி ஒருத்தினில் நிற்கி லாத ஓரைவர் வன்கயவரை
> என்று யான்வெல் கிற்பன்உன் திருவருளில்லையேல்! (7:1:7)

என்று அவர்களை அடக்க, கண்ணன் திருவருளை நாடுகின்றார். 'தாயும் நீயே' எனத் தொடங்கும் அப்பர் தேவாரம், மாயம் ஆய காயங்களில் ஐவர் நின்று ஆள ஒட்டார்' எனச் சுட்டுவதும் ஈண்டு எண்ணத்தக்கது.

ஐம்புலன்களின் செயல்பாட்டில் குற்றம் காணாத வாழ்வு வாழ்ந்த மக்கள் பற்றிக் கவி பாடிய புலவனுக்குச் சிக்கலில்லை. ஐம்புலன்களோடு ஒத்துச் சென்று ஆண் பெண் வாழ்வு பற்றிப் பாடிய கவிஞனின் பாடுபொருளாக அமைந்தது காதலும் வீரமும், ஐம்புலன்களை எதிர்த்து நின்று மனித இயல்புக்கு மாறாக ஆன்மா - பரமான்மா / பக்தன் - கடவுள் உறவு பற்றிப் பாடிய கவிஞனின் பாடுபொருளாக அமைந்தது பக்தி. எனவே ஐம்புலன்களைப் பற்றிப் பேசி அவற்றிலிருந்து விடுபடுவது எப்படி என்பதையும் விரித்துப் பேசுகின்றான்.

கவிதை பாடுவது அல்லது கவிதைபாடிப் பரிசில் பெறுவது அறிவூட்டுவது என்பது மட்டும் சங்கப்புலவன் நோக்கம். மானிடம் பற்றிப் பாடாமல் மனதை இறைவனிடம் செலுத்தும் வழி பற்றிப் பாடுவது பக்தி இலக்கியப் படைப்பாளியின் குறிக்கோள். எனவே ஐம்புலன்களான மெய் வாய் மூக்கு கண் செவி ஆகியோருக்குத் தலைமையாக உள்ள மனதை நன்னெறிப்படுத்த ஒரு முகப்படுத்த, புலன்களின் தன்மையைச் சொல்லி அவற்றிலிருந்து விடுபடும் வழியைச் சற்று வேகமாகப் பதிவு செய்துள்ளனர். இத்தன்மைத்தான பொறியையும் மனதையும் பற்றி நாமும் சிந்திப்போமா? 'மனம் போன போக்கெல்லாம் போக வேண்டுமா'? என்னும் வினாவை நம்முன் வைப்போமே?

துணைநூல்கள்

1. திருமந்திரம் ஜி. வரதராஜன் உரை, பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு.
2. நாலாயிர திவ்வியப்பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம் வெளியீடு.

ஆலயங்களில் கற்பூரம் ஏற்றுவது பாவமா?

பே. ஞானசேகரன்

இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி - 630 003

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார் ஔவைப் பிராட்டியார். 'ஆலயம் தானும் அரனெனத் தொழுமே' என்கிறது சிவஞான போதம். இங்ஙனம் சிறப்பாகக் கூறப்பெற்ற ஆலய வழிபாட்டு முறையில் இன்று ஒரு புதிய இடையூறு தோன்றி யுள்ளது. ஆலயத்தில் உள்ள ஆண்டவனை வழிபடச் செல்லும் மக்கள் தங்கள் வளமைக்கும், பொருள்நிலைமைக்கும் ஏற்றபடி ஆண்டவனுக்குரிய வழிபாட்டுப் பொருள்களாக ஐந்து பைசா கற்பூரம் முதல் ஐந்தாயிரம் ரூபாய் பெறும் தங்கம் வரைக்கும் வாங்கிச் செல்வர். பல்லாண்டுகளாக இந்து மதத்தில், எல்லாத் தெய்வ வழிபாடுகளிலும், அனைத்து மக்களாலும் வழிபாட்டுப் பொருளாகப் பயன்படுத்தப் பெறுவது கற்பூரம் என்று அழைக்கப் பெறுகின்ற சூடம்.

இக்கற்பூரத்தை ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி ஆலயத்திற்குச் சென்று ஆண்டவனை வழிபடப்புகும் மக்கள், தங்கள் வீடுகளிலிருந்தோ அல்லது கடைகளிலோ வாங்கி, தாங்கள் வழிபடும் தெய்வத் திருவுருவங்களுக்கு முன்பு ஏற்றி, அத்திரு ஒளிக்கு முன்பு தங்கள் தெய்வங்களை மனம் உருகி வழிபடுவார்கள். அத்தீப ஒளியும் நன்கு சுடர்விட்டு ஒளிரும். அதைப் பார்க்கும் பொழுதே அதில் தோன்றுகின்ற மூன்று வித வண்ணங்களும் மனத்திற்கு மிக மகிழ்வாக இருக்கும்.

இத்தகைய கற்பூர வழிபாட்டிற்கு, இப்பொழுது சில ஆலயங்களில் தடை விதிக்கப்படுகிறது.

கற்பூரம் ஏற்றி ஆண்டவனை வழிபடுவது என்பது ஓர் இயற்கையான, எளிமையான வழிபாடு. ஆலயத்திற்கு வரும் மக்களுக்கும் கற்பூர வழிபாட்டைப் பின்பற்றுவது மிக எளிது; செலவும் குறைவு. அதற்குப் பதிலாக 'நெய் தீபம் போடுதல்' அல்லது 'எண்ணெய் விளக்கு ஏற்றுதல்' என்ற வழிபாட்டிற்குப் பொருள்களைக் கொண்டு வருதலும் கடினம். கோவில் கடைகளில் வாங்குவதாக இருந்தாலும் விலையோ அதிகம். எல்லா மக்களாலும் இம்முறையைப்

பின்பற்றுவது என்பதும் சிரமம். வீட்டிலிருந்து கொண்டு வருவது என்றால், அதற்காகப் பஞ்சுத்திரி, எண்ணெய் அல்லது நெய் விளக்கு ஆகியவை கொண்டு வரவேண்டும். எண்ணெய் கொட்டிவிட்டால் அனைத்துமே வீணாகி விடும். கொண்டு வருவதும் கடினம்.

கற்பூரப் புகை ஆலயத் தூய்மைக்குக் கேடா?

பன்னெடுங்காலமாக அனைத்து ஆலயங்களிலும் கற்பூர வழிபாடே நிகழ்ந்து வருகின்றது. அப்பொழுதெல்லாம் தூய்மைக் கேட்டைப் பற்றிய பேச்சே நிகழவில்லை. முன்பு கோவில்களின் கருவறைகள் வெறும் கற்களாக அமைந்திருந்தன. இன்றோ கருவறைகள் சலவைக் கற்களாகவோ அல்லது பளபள என மின்னும் பூக்கற்களாகவோ அமைந்துள்ளன. எனவே கற்பூரம் ஏற்றுவதால் அதிலிருந்து தோன்றும் புகை கருவறையின் சுவர்களை, தரைகளைக் கருமையாக்கி விடுகிறது. இதைத் தடுக்கக் கருவறை யிலேயே ஆண்டவன் திருஉருவிற்கு முன்பு ஒரு சிறு கல்லை வைத்து அதில் கற்பூரத்தை ஏற்றலாம். தரையும் கெடாது. அல்லது கருப்புப் புகை வரக் காரணமான மூலப்பொருளைக் கற்பூரத் தயாரிப்பில் சேர்த்துக் கொள்வதை நீக்கிவிடலாம்.

அனைத்து ஆலயங்களிலும் இது தடை செய்யப்படுகின்றதா? என்றால் அதுவும் இல்லை. சில நேரங்களில், சில ஆலயங்களில் ஒரே கோவிலிலேயே ஒரு தெய்வத்திற்குத் தீபம் ஏற்றும் முறையும், மற்றொரு தெய்வத்திற்குக் கற்பூரம் ஏற்றும் முறையும் பின்பற்றப் பெறுகிறது. ஆலய அர்ச்சகர்களும் ஒரே முறையைப் பின்பற்று வதில்லை. சிலர் தாம்பாளங்களில் நெய் விளக்கு அல்லது எண்ணெய் விளக்கு வைத்துக் கொண்டு, மக்கள் கொடுக்க முன்வரும் கற்பூரங் களை ஏற்க மறுத்துவிடுகின்றனர். சில அர்ச்சகர்களின் தாம்பாளங் களில் கற்பூரத் தீபமே இருப்பதால், அவர்கள் மக்களிடம், அவர்கள் கொடுக்கும் கற்பூரத்தை ஏற்றுக் கொள்கின்றனர். எனவே இந்த இரு மாறுபட்ட வழிபாட்டு முறைகளைக் காட்டிலும் கற்பூரம் ஏற்றலாம் என்ற ஒரே வழிபாட்டு முறையே இருந்தால் அனைவருக்கும் அது பயன்தரும்.

கற்பூர வழிபாட்டு முறையின் எளிமைத் தன்மையும்,
விளக்கு வழிபாட்டு முறையின் அருமைத் தன்மையும்

சிறியோர் முதல் பெரியோர் வரை கற்பூர வழிபாட்டு முறையை எளிதில் பின்பற்றலாம். ஆலயத்தில் எத்தனை தெய்வத் திருவுருவங்கள் உள்ளனவோ அவை அத்தனைக்கும் ஒவ்வொரு கற்பூரமாக ஏற்றி வைத்து வழிபடலாம். கையில் எண்ணெய்க் கறையும் படியாது. கற்பூரத்தை எடுத்துச் செல்வதும் மிக எளிது. செலவும் குறைவு.

ஆனால் நெய்விளக்கு வழிபாட்டு முறையிலோ இதற்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு போவதும் சிரமம். கையில் எண்ணெய் அல்லது நெய்க் கறையும் படியும். ஆலயத்தில் உள்ள அனைத்துத் தெய்வங்களுக்கும் நெய் அல்லது எண்ணெய் தீபம் போடுவது என்றால் செலவும் அதிகமாகும். சிறியோர்கள் இவ்வழிபாட்டு முறையைக் கையாள்வதும் கடினம்.

அன்பான ஆலயத்தில் வன்பான வார்த்தைகள் கூடா!

அன்பும், அருளும் நிறைந்திருக்கும் ஒப்பற்ற இடம் ஆலயம். நால்வர் பெருமக்களின் புண்ணியப் பாதங்கள் பட்ட புனிதத் தலம் ஆலயம். ஆலயத்திற்கு வருவதால் இறைவனின் திருவருளும், மனதிற்கு நிம்மதியும் கிடைக்கிறது என்ற எண்ணத்தில்தான் மக்கள் அனைவரும் ஆலயத்திற்கு வருகிறார்கள்.

வன்முறை அட்டூழியங்களும், சமயப் பிணக்குகளும், சாதிச் சழக்குகளும், பாலியல் கொடுமைகளும், பஞ்சமா பாதகங்களும் எங்கும் தலைவிரித்தாடுகின்ற இக்காலச் சூழலில் மக்கள் ஆலயங் களுக்கு வருவதே பெரிது. அப்படி வருகையில் இப்படிப்பட்ட வழிபாட்டு முறைத் தடை விதிக்கப்பட்டால், ஆலயங்களுக்கு வருவதையே மக்கள் வெறுக்கத் தொடங்கிவிடுவர். அது மட்டுமில்லை. சூடம் ஏற்றுவது பாவம் என்று எந்த நூலிலும் காணப்படவில்லை.

எப்படி இருப்பினும், ஆலயத்திற்கு இறைவனை வழிபடவரும் மக்களுக்கு வழிபாட்டு உரிமை இருக்க வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் உறுதியாக இருக்க முடியா. எனவே மக்கள் விரும்பும் வரை, ஆலயங்களில் கற்பூர வழிபாட்டு முறை உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டும்.

இதுகாறும் கண்ட செய்திகளின் வாயிலாகக் கீழ்க்காணும் முடிவுகள் பெறப்படுகின்றன.

1. ஆலயத்தில் கற்பூரம் ஏற்றுதல் நிச்சயமாகப் பாவமன்று.
2. கற்பூரத்திலிருந்து வெளிப்படும் கரும்புகை ஆலயக் கருவறையையும், தரையையும் கருப்பாக்குகிறது என்றால், கற்பூரம் தயாரிக்கும் மூலப்பொருள்களில் கரும்புகை வருவதற்குக் காரணமான பொருளை நீக்கிவிடலாம்.
3. தெய்வங்கள் வீற்றிருக்கும் கருவறைகளின் முன்பு ஒரு சிறு கல்லை வைத்து அதில் கற்பூரத்தை ஏற்றி வழிபடலாம்.

''கற்பூரம் ஏற்றிக் கடவுளைப் போற்றியே
அற்புத வாழ்க்கை அமை!''

சபாபதி முதலியாரின் அருணாசல சதகத்தில் திருத்தலப் பெருமைகள்

நா. நாகலிங்கம்

யாதவர் கல்லூரி

மதுரை - 625 014

பொதுவாக, புகழ்பெற்ற கோவில்கள் இருக்கும் ஊர்கள், அக்கோவில்களில் குடிகொண்டிருக்கும் இறைவன்களது பெயர் களால் அழைக்கப்பெறும். ஆனால் திருவண்ணாமலையோ அவ்வூரிலுள்ள மலையின் பெயரால் அழைக்கப்பெறுகின்றது. சபாபதி முதலியாரின் அருணாசல சதகம் திருவண்ணாமலையின் பெருமையையும், மலையாக நிற்கின்ற சிவபெருமானின் பெருமையையும் புகழ்கின்றது. இக்கட்டுரை திருவண்ணாமலையின் திருத்தலப் பெருமைகளை விளக்குவதாகும்.

பெயர்க்காரணம்

''திருவாரூரில் பிறந்தால் முக்தி; காசியில் இறந்தால் முக்தி; சிதம்பரத்தைப் பார்த்தால் முக்தி; திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி''[1] என்பர். மக்கள் அடையத்தக்க பேறுகளில் தலையாயது முக்திப்பேறாகும். அந்த முக்தியை நினைத்த அளவிலேயே தரும் தலமாகத் திருவண்ணாமலை போற்றப்படுகின்றது. அழகிய வடிவமும் செம்மாந்த தோற்றமும் உடையது திருவண்ணாமலை. இதன் உயரம் 2,665 அடி ஆகும். நாற்புறமும் நான்கு கிளைகளையுடைய ஒரு குன்றுத் தொகுதிபோல் இம்மலை தோற்றம் தருகின்றது. ''அரியும் அயனும் தம்மில் யார் உயர்ந்தவர்கள் எனத்தம் பேதமையால் போரிட்டுக் கொண்டபொழுது சிவன் அவர் தம் செருக்கடக்கி நன்னெறிப்படரப் பேரொளிப் பிழம்பாய்த் தோன்றி யருளிய மலையே இது. இம்மலை அருணாசலம் என்றும் அண்ணாமலை என்றும் போற்றப்படுகின்றது. அருணாசலம் என்பது சிவப்பு மலை எனப்பொருள்படும். சிவபெருமானின் திருஉருவம் ஒளிமயமான உருவில் உயர்ந்து நின்றதால் இம்மலை அண்ணாமலை எனப் போற்றப்படுகின்றது.[2] என முத்துராசன் அண்ணாமலை என்று பெயர் ஏற்பட்டதற்கான காரணத்தைச் சொல்லியுள்ளார். இத்தல வரலாற்றினைச் சபாபதி முதலியார்,

கன்றால்விளைவு எறிமாயவன்
கமலத்தயம் வெருவுற்றிட
அன்றாடழல் வரையாகினை
அருணாசலா! அருணாசலா!''[3]

அக்னித்தலம்

பரந்த இவ்வுலகம் நிலம், நீர், நெருப்பு, வளி, வான் என்றும் ஐம்பூதங்களால் ஆனது. ஐம்பூதங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஆன்றோர்கள், ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு திருத்தலத்தைத் தோற்றுவித்தனர்.

நிலமாகிய பிருத்துவித் தலத்துக்கு திருவாரூரையும் காஞ்சிபுரத்தையும், நீரான அப்புத்தலத்திற்குத் திருவானைக்காவையும், தீயாகிய தேயத்தலத்திற்குத் திருவண்ணாமலையையும், வளியாகிய வாயுத் தளத்திற்குத் திருக்காளத்தியையும், வானாகிய ஆகாயத் தளத்திற்குச் சிதம்பரத்தையும் குறிப்பிட்டனர்''[4]

திருவண்ணாமலை அக்னித்தலமாகும். அக்னியே அனைத்துப் பொருளுக்கும் ஆதாரமாகும். இதனால் சிவபெருமானைச் சோதியாகக் க்ருதி, ஒளிவழிபாடு செய்து வருகின்றனர்.

தீர்த்தங்களும் அதன் பெருமைகளும்

திருவண்ணாமலையில் இந்திரதீர்த்தம், அக்கினி தீர்த்தம், எம தீர்த்தம், குபேர தீர்த்தம், பிரம தீர்த்தம், சிவ தீர்த்தம், சக்கர தீர்த்தம் முதலான முந்நூற்றறுபது தீர்த்தங்கள் உள்ளன. இந்தத் தீர்த்தங்கள் தேவேந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, பிரமன், ஈசானன் ஆகியோர் நீராடிய பெருமையுடையது. எனவே இத்தீர்த்தங்களில் நீராடித் தேவர்களைப் போற்றினால் வாழ்வில் ஏற்படும் தீயவை அனைத்தும் நீங்கப்பெற்று, நன்மைகள் பல பெறலாம் என்பது முன்னோர்களின் நம்பிக்கையாகும். திருவண்ணாமலைத் தீர்த்தங்களில் நீராடினால் மட்டுமே ஒருவனுடைய துன்பம் நீங்கும் என்பதை அருணாசல சதகம் உணர்த்துகின்றது.

''விண்ணாளும்இந் திரன்அக்கினி
விறலந்தகன் நிருதர்க்கின்ற
தண்ணார்வரு ணன்வாயுவே
தனதன்னுடன் ஈசானினும்
உண்ணாடிமூழ் கியதீர்த்தம் இன்று
ஒன்றேயெமமு இடர்தீர்த்திட
அண்ணாமலை யெனநீடிய
அருணாசலா! அருணாசலா!''[5]

வல்லாள மகாராசா திருவிழா

வல்லாளன் திருவண்ணாமலையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த போசள வம்சத்து மன்னன் ஆவான். அவன் சிறந்த சிவபக்தன். அவனைப் பற்றிய புராண வரலாறு வருமாறு:

'வல்லாள மன்னன் இருமனைவிகளிலிருந்தும் குழந்தைச் செல்வம் இல்லாமல் வாடினான். தான தர்மங்கள் ஏராளமாகச் செய்தால் குழந்தை பிறக்கும் என்று மந்திரிகள் கூறவே, தன்னை நாடிவருபவர்களுக்குக் கேட்பதையெல்லாம் தருவதாக அறிவித்தான். ஸ்ரீ அருணாசலேசுவரர், மன்னனைச் சோதிக்கும் பொருட்டுத் துறவி வேடம் புனைந்து, அரண்மனைக்கு வந்து, அன்றிரவு இன்பம் துய்க்கத் தனக்கு ஒரு விலைமாது தேவை என்று மன்னனிடம் கேட்டார். ஊர்முழுவதும் தேடியும் அன்று ஒரு பரத்தையரும் கிடைக்கவில்லை. கேட்டதெல்லாம் தருகிறேன் என்று வாக்களித்து விட்டுத் தன்னால் துறவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடிய வில்லையே என்று மனம் கலங்கினான் வல்லாள மன்னன். அவனிடம் அப்பொழுது வந்த இளையராணியைத் துறவியுடன் இன்பம் துய்க்க அவளுடைய சம்மதத்துடன் அனுப்பினான்.

துறவி படுத்திருந்த அறைக்கு ராணி சென்றாள். அவர் அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்திருந்ததால் அருகில் அமர்ந்து அவரைத் தொட்டாள். மறுகணம், துறவி படுத்திருந்த இடத்தில் பச்சிளம் குழந்தை ஒன்று சிரித்து விளையாடியது. ஆச்சரியம் அடைந்த அரசி பாலகனை மார்போடு அணைத்து மன்னனிடம் ஓடி, தமது துயரம் தீர்ந்ததாக மகிழ்ந்து, குழந்தையை மன்னனிடம் கொடுத்தாள். அடுத்த கணம் குழந்தை மாயமானது. ரிடப வாகனத்தில் அமர்ந்த நிலையில் அருணாசலேசுவரர் காட்சி தந்தார். மன்னனிடம் தாமே அவனுக்குப் பிள்ளையாக இருந்து ஈமச்சடங்குகளைச் செய்து முடிப்பதாகக் கூறிமறைந்தார். வல்லாள மன்னனும் அவருடைய இரு மனைவி களும் அண்ணாமலையாருக்கு அடிமைகளாகி முக்தி அடைந்தனர். இன்றும் ஆண்டுதோறும் மாசி மகத்தன்று அண்ணாமலையார் 'பள்ளிகொண்டபட்டு' என்ற இடத்திற்குச் சென்று, வல்லாள மன்னனின் ஈமச்சடங்குகளைச் செய்யும் திருவிழா நடந்து வருகின்றது?[6]

இப்புராண வரலாற்றுச் சிறப்பினைச் சபாபதி முதலியார் அருணாசல சதகத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''வல்லாளமன் னவன்வாழவோர்
மகவாய்அவற்கு அருளீந்திடும்
வில்லார் மதிமுடியமண்ணலே''[7]

கார்த்திகைப் பெருவிழா

கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று சந்திரன் கிருத்திகை நட்சத்திரத்திலிருக்கும் போது கொண்டாடப்படுவது திருக்கார்த்திகைத் திருவிழாவாகும். இந்த நாளில் சிவத்தலமான திருவண்ணா மலையில் திருக்கார்த்திகை தீபம் ஏற்றும்விழா ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பஞ்சபூதங்களில் தீயை வழி படுவதுதான் தீபத்திருவிழாவாகிய கார்த்திகைப் பெருவிழா ஆகும். இந்த விழாவின் நோக்கம் 'நான்' என்ற மனிதனின் ஆணவத்தை அழித்து 'உனக்கும் மேலாக ஒருவன் இருக்கின்றான். நீ ஆணவத்துடன் செயல்பட்டால் அவன் புத்தி புகட்டுவான்' என்ற அரிய தத்துவத்தைப் பொதிப்பதாகும். இவ்வாறு சிறப்பாக நிகழ்ந்து வருகின்ற கார்த்திகைத் தீபத்திருவிழாவினைச் சபாபதி முதலியார் அருணாசல சதகத்தில்,

> ''வளர்கார்த்திகை மாதந்தோறும்
> வருங்கார்த்திகை நாள்தன்னலே
> பளகானத்தில் லன்பர்கள்
> பரிவாகவே யேத்தித்தொழக்
> கிளர்மாமலை தனிலேயொளி
> கெழுசோதிகாட் டாநின்றநின்
> அளவார்தெரி பவர்ஐயனே
> அருணாசலா! அருணாசலா!''[8]

சக்தி இல்லாத சிவம் சவம் என்பார்கள். உமை சிவனின் உடம்பில் பங்குகொண்டு, சிவனை மங்கைபாகன் (அர்த்தநாரி) ஆக்கியது திருவண்ணாமலையில்தான். இந்நிகழ்ச்சி கார்த்திகைத் திருநாளிலேயே நடைபெற்றது.

முடிவுகள்

அருணாசலேசுவரராகிய சிவபெருமான் குடிகொண்டுள்ள திருவண்ணாமலை பஞ்ச பூதத்தலங்களுள் அக்னித்தலமாகும். மக்கள் நினைத்த அளவிலேயே முத்திப்பேறு அளிக்கும் தலமாகவும் விளக்குகின்றது. 'அருணை', 'அண்ணாமலை', 'அருணகிரி', 'சோணகிரி' என்றெல்லாம் முன்னோரால் புகழப்பெற்ற மலை யாகும்.

உமையம்மை தவம் செய்து சிவனின் இடப்பாகம் பெற்றதும், சிவன் சோதி வடிவமாகக் காட்சி அளித்ததும் இப்புண்ணிய தலத்திலேயே ஆகும். இறைவனே மாமலையாக வீற்றிருப்பதால் அதனைக் கிரிவலம் வந்தவர்கள் நற்கதியே அடைவார்கள் என்பது மக்கள் நம்பிக்கையாகும். மாணிக்கவாசகர் இங்குதான்

திருவெம்பாவையைப் பாடினார். நம்மையைத் தருகின்ற 360 தீர்த்தங்களைப் பெற்ற பெருமையுடையது இத்திருத்தலமாகும்.

திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் கொண்டாடப்பட்டு வரும் கார்த்திகைத் தீபத்திருவிழா மனிதனின் 'தான்' என்ற ஆணவத்தை அழிப்பதாகும்.

குறிப்புகள்

1. கு. முத்துராசன், தெய்வீகத் திருத்தலங்கள். ப.278.
2. மேலது, ப.277.
3. சபாபதி முதலியார், அருணாசால சதகம், பா.எண்.25.
4. வ.த. இராமசுப்பிரமணியன் (உரை. ஆ.) அண்ணாமலைக்கழகம், ப.16.
5. சபாபதி முதலியார், அருணாசல சதகம், பா.எண். 54.
6. பரணீதரன், அருணாசல மகிமை, ப. 18-19.
7. சபாபதி முதலியார், அருணாசல சதகம், பா.எண். 46.
8. மேலது, பா.எண். 26

கோசை நகர் வாழ வரும் ஈசன்

ச. பாக்கியலட்சுமி

எத்திராஜ் கல்லூரி
சென்னை - 8

கோசைநகர் என்னும் கோயம்பேடு இன்று வணிகத்தலமாக விளங்குகின்றது. ஆசியாவிலே வேறு எங்கும் இல்லாத, புகழ் பெற்ற பேருந்து நிலையம் இங்குள்ளது. ஆன்றோர்கள் வாழ்ந்த ஆன்மீக பூமியாக இவ்வூர் அமைந்துள்ளது. கோயம்பேடு குறுங்காலீஸ்வரர், வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயில் சைவ, வைணவ ஒற்றுமைக்குப் பாலமாக விளங்குகின்றது. இக்கோயிலின் சிறப்புக்களைத் தமிழுலகமும், சமய உலகமும் அறியும் பொருட்டு இக்கட்டுரை அமைகின்றது.

அருணகிரிநாதர் தமது வாழ்நாளில் 200 திருத்தலங்களைச் சென்று வழிபட்டுள்ளார் என்பது அவர் பாடிய திருப்புகழ்ப் பாடல் களைக் கொண்டு ஆய்ந்து அறியலாம். ''கோசை நகர் என்னும் கோயம்பேடு திருத்தலம் 175-ஆவது இடத்தைப் பெற்றிருக்கின்றது. இத்தலத்தில் குடிகொண்டுள்ள முருகப்பெருமானைப் போற்றி அருணகிரிநாதர் ஓர் திருப்புகழ் பாடல் பாடியுள்ளார்.

''கோசை நகரில் வீற்றிருக்க வந்துள்ள ஈசனே'' நான் பொது மகளிரிடத்தில் காணும் உறுப்பழகினைக் கண்டு மயங்கி, அதிலே ஆசை மிகவும் கொண்டு, அவதிப்படாமல் இருக்க, நான் நாள் தோறும் உனது கழலினை நாடி வணங்கிட அருள் தர வருவாயே என்று வேண்டிப் பாடுகின்றார். இக்கருத்தமைந்த திருப்புகழ்.

''ஆதவித பாரமுலை மாதரிடை நூல்வயிற
தாலிலையெ னாமதன கலைலீலை''

....
கோசை நகர் வாழவரு மீசடியார் நேசசரு
வேசமுரு காவமரர் பெருமாளே''.

கோசை நகர்

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு வந்தபோது தர்ப்பைக் கொடிகள் (குசம் - தர்ப்பை - குசம் - கோசம் என மருவி ஊர் முழுவதும் செழித்துத் தழைத்திருந்தது. அவர் முருகனை வழிபட்டுப் பாடும்

போது ''கோசை நகரில் வாழவரும் ஈசனே'' என்று பாடியுள்ளார். இதனால் இவ்வூர் கோசை நகர் என்று அழைக்கப்பட்டு வந்ததாக இலக்கியத்தின் வழி அறிந்து கொள்ளலாம்.

முருகனின் திருவுருவத்தோற்றம்

முருகப் பெருமான் ஒருமுகமும், நான்கு கரங்களும் கொண்டு இருபுறமும் தேவிமார் சூழ, மயில் பின்புறம் விளங்க நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிய நிலையில் கம்பீரமாக விளங்கு கின்றார். முருகன் சந்நிதியில் அருணகிரிநாதர் திருவுருவம் உள்ளது.

அடியவர்களுக்கு அருள்புரிய ஆலயத்துள் ஆண்டவனே வீற்றிருந்தருள்வான். மேலும் தன்னை நாடி வந்தவர்க்கும், வர இயலாத நிலையில் தன்னை நினைத்தவர்களுக்கும் ஐம்பொன் சிலை வடிவில் (உற்சவ மூர்த்தி வடிவில்) எழுந்து அருள்வது மற்றொரு நிலை. இத்தகு உற்சவமூர்த்தி வடிவில் எழுந்தருளும் முருகப்பெருமான் ஓர்முகமும் நான்கு கரங்களும் கொண்டு இருபுறமும் தேவியர் புடைசூழ அமர்ந்த கோலம் சிறப்பாக உள்ளது.

குசலவபுரீஸ்வரர்

கோயம்பேடு திருத்தலத்தில் உறையும் ஈசன் ''சுயம்பு மூர்த்தி யாகத் திகழ்கின்றார்''. இத்தலத்து ஈசனை இராமனின் பிள்ளைகள் குசலவர்கள் தமது பாவங்களை நீக்கும் பொருட்டு, மடக்கினைக் கவிழ்த்தது போல், 4 அங்குல அளவில் உள்ள சிறிய பாணலிங்கத்தை உருவாக்கி வழிபாடு செய்ததால் குறுங்காலீஸ்வரர் என்றும் அவர்கள் பெயராலேயே 'குசலவபுரீஸ்வரர்' என்றும் வழங்குவர்.

அறம்வளர்த்த நாயகி

ஈசனின் வலப்பக்கம் தர்மசம்வர்த்தினி எனும் அறம் வளர்த்த நாயகி வீற்றிருந்து அருள்புரிந்து வருகின்றாள் அம்மனின் திருவடி. எல்லாத் திருத்தலங்களிலும் இணைந்த வண்ணம் இருக்கும். ஆனால் இத்தலத்தில் அன்னையின் திருவடி முன்னின்ற வண்ணம் இருப்பது தலச் சிறப்பம்சங்களுள் ஒன்றாகும். அம்மனுக்கு வலப் பக்கம் நூதன பஞ்சவர்ணத்தில் அமைந்த நவக்கிரக மூர்த்தங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இது தலச் சிறப்பம்சங்களுள் குறிப்பிடத்தக்கதாக விளங்குகின்றது. இத்தலத்தின் தலமரமாகக் குறும்பலாமரமும், தல தீர்த்தமாக இலவகுசதீர்த்தமும் (குளம்) சிறப்புடன் காணப்படுகிறது.

வைகுண்டவாசப் பெருமாள்

வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்துத் தங்கி எம்பெருமானாகிய வைகுண்டவாசப் பெருமானைத் தியானித்து

வேண்ட, வேண்டிய கணப்பொழுதில் என்றும் அழிவிலாப் பெருமானாகிய நித்திய வைகுண்டவாசப் பெருமானாகத் தோன்றிக் காட்சி தந்து அருள் புரிந்தார். வைகுண்ட லோகத்தில் மார்கழி மாதம் ஏகாதசியன்று ஒரு நாள் மட்டும் பரமபத வாசல் திறந்திருக்கும். ஆனால் கோயம்பேட்டில் பரம பதவாசல் எப்போதுமே திறந்தேயிருக்கும். நித்திய வைகுண்ட வாசப் பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி தாயாருடன் வைகுண்ட பதவியினை நல்கக் கூடியவராக விளங்குகின்றார்.

சரபேஸ்வரர்

நானே தெய்வம், நானே பரம்பொருள் என்று ஆணவத்தோடு கூறிய இரண்யகசிபுவைத் திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து அவனது உடலைப் பிளந்தார். அவனது அசுர ரத்தம் தலைக் கேறியதால் வானில் நரசிம்மம் ஆர்ப்பரிக்க, சிவபெருமான் சரபப்பறவை வடிவம் கொண்டு ஆவேசத்தை அடக்கினார். அவ்வடிவமே சரபேஸ்வரர் ஆகும். இத்திருவுருவம் 16 கால் மண்டபத்தூணில் உள்ளது. இம்மூர்த்தியை ஞாயிற்றுக்கிழமை யன்று இராகுகால நேரத்தில் வழிபாடு செய்வர். மேலும் மக்கள் நலனுக்காகக் கூட்டு வழிபாடும் சிறப்பாக நடைபெறும்.

கல்வெட்டுக்கள்

இத்திருக்கோயில்ல 14 கல்வெட்டுக்கள் உள்ளன. 12 கல்வெட்டுக்கள் முழுமையாகவும், 2 கல்வெட்டுக்கள் முழுமை பெறாத நிலையிலும் உள்ளன. முதலாம் இராஜராஜ சோழன் மூன்றாம் குலோத்துங்க சோழன், விசய நகர மன்னன் புக்கராயர் ஆகியோர் இத்திருக்கோயிலுக்குப் பல நிவந்தங்கள் அளித்துள்ளனர். கல்வெட்டுக்களின் மூலம் கொடைப் பொருள்களான ஆடு, பசு, கன்று, நிலம் போன்றவை அறக்கொடையாளர்களால் கொடுக்கப் பட்டது என்பதனை அறிய முடிகின்றது. ஒரு குடும்பத்திலே குடும்பத்தலைவர், தலைவி, மகள் ஆகியோர் கொடை பல தந்துள்ளமையை அறியலாம்.

தலவரலாற்றுச் சான்று

இத்திருக்கோயில் தல வரலாற்றுக்குச் சான்றாக, 40 கால் மண்டபம் என்னும் மகா மண்டபத்தில் இலவனும், குசனும் அசுவமேதயாகக் குதிரையைப் பிடித்திருப்பது போலச் சிற்பக்காட்சி காண்போரைக் கவரும் வண்ணம் அழகாக உள்ளது. பெருமாள் கோவிலில் வால்மீகியுடன் இலவன், குசன் அமர்ந்திருப்பது போல் உள்ள சிற்பக்காட்சி தலவரலாற்றுக்குச் சான்றாக அமைகின்றது.

தலவரலாற்று நூல்

கோயம்பேடு தலவரலாற்று நூலை, திரு. முனைவர் மயிலம் வேல். கார்த்திகேயன் அவர்கள் எழுதியுள்ளார். நூலின்கண் செய்தியும் நடையும் தெளிந்த நீரோடை போல அமைத்து படிக்கும் பொழுதே அக்கோயிலைக் காண வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது. மேலும் உயிருக்கும், உடலுக்கும் உள்ள உறவு போல், இந்நூலுக்கும் திருக்கோயிலுக்கும் உள்ள உறவை உணர்வை, உண்மையை அறிந்துணர முடிகிறது.

தலப்பெயர்கள்

அருணகிரியார் தருப்பைக் கொடிகள் சூழ்ந்ததால், கோசைநகர் என்றும், பசுக்களைக் காக்கும் பொருட்டுப் போடப்பட்ட வேலி என்பதை கோயம்பேடு என்றும், குசலவர்கள் தங்கியதால் குசலவபுரம், குசலவபுரி என்றும் ஊர்ப் பெயர்கள் வழங்கப்படுகின்றன. மரங்கள் அடர்ந்த கானகப்பகுதியினால் தண்டகாரண்யபுரம் என்றும் அழைக்கப்பட்டது.

முடிவுரை

இத்தலத்துறையும், ஈசனின் சிறப்பையும், ஊரின் பெருமையையும் முன்னோர்கள் வழங்கிய பழமொழியின் வாயிலாக அறியலாம்.

''கோயம்பேடு என்ற ஊரும் இல்லை
குறுங்காலீஸ்வரர் என்ற பேரும் இல்லை''

''வடக்குப் பார்த்த சிவனும் இல்லை
மடக்குப் போன்ற லிங்கமும் இல்லை''

என்பது பழமொழி.

புலவர்கள் பாடப்பட்ட பாடல் தலமாகவும் அருளாளர்கள் வணங்கும் புண்ணியத் தலமாகவும், புராணம், இதிகாசம் மற்றும் கல்வெட்டுக்கள், ஓலைச்சுவடிகள் கொண்ட வரலாற்றுச் சிறப்பும் கொண்ட நிலையில் இத்தலம் விளங்குகின்றது எனில் மிகை யாகாது.

Ananda Tandava Portraiture

-from the incidents of Saint Sundarar's life thematic Murals in - RAJARAJESVARAM Thanjavur.

C. Vani

Dr. M. Rajamanikkanar Historical Research Centre (Tiruchirapalli) Madurai - 625 001.

Rajarajesvaram is a living monument of the Great Chola ruler, Rajaraja I. The artistry conceived by him is enlivened by an intensive study of every aspect of the temple in all its nuances.

The lower storey of the circumambulatory passage around the sanctum of Rajarajesvaram Udayar abounds in paintings displayed on the Walls, Pilasters and Ceiling. Located on the Western Wall to the immediate right are frescoes narrating the turn - of - events in the life of Saive Saint Sundarar. Towards the right end of the wall recess, starting from the eye - level is a temple picturesque with its decorated gateway. An imposing seated figure of Sundarar with cymbals looms in between.

The elevation of the temple with the sanctum and a frontal hall is compendious. The hall has a slightly domed green roof to enshrine the Lord of the Dance, Siva. The Lord in his dance form along with his family members presents a rare portrait. The colourful exhibit measures up to just a handspan. It necessitates intent gaze to glean beyond its partly damaged exposition.

Four-armed Siva is the key central figure. His complexion is white, on having his body smeared with ashes. Tiger hide in deep yellow with black spots is his attire. Fashioned like short Knicker-bockers above his knees, it is worn wrapped by a fine textured garment knotted onto the sides of his hip with long twin tassels lengthy enough to reach his ankles. His bare chest is ornated, complete with a finale band, udhara bandha. A widely folded dark shade vastra Yajnopavita hangs over his left

shoulder. Shoulder bands, armlets, wristlets and ear - rings add to his enchantment. Only his left leg is adorned with kinkini to jingle according to the rhythm of his dance. Above his left foot an anklet thalcheri clings to heighten the tempo of the musical note.

White feathers aesthetically arranged like a fan in his tawny hair stands out as a charming halo behind his head. These plumes of the crane are an unusual choice for decoration. Siva's totem, the skull bejewels his crown. The crescent moon resting on the left side of his crest renders a sheen to his countenance.

The dance mode of Siva is Ananda Tandava. A frieze of his fleeting movement in the ecstatic performance of the Tandava is captured. This poise finds a sequel in Bujangatrasita or more aptly Bhujangancita karnas defined in "Natya Shastra'. The left leg of Siva is hwung to effect an oblique movement of the hip and thigh in nivritta motion to turn from the reverse so that the left foot faces outward. The right leg tramples the malignant dwarf, Muyalagan in mandala stance. The little demon undaunted sternly deals with the menace of a snake. The front left hand is in gajahasta with fingers slightly spread and bent. Above it is the front right hand probably in tadana mudra which is rare and unique. The back left hand with bent elbow is stretched sideways in ardhachandra to bear the flame in his palm. The back right hand is similarly stretched on its side with an upturned wrist to grip the kettle - drum, udukkai.

Siva dances tossing his head towards his beloved consort Goddess Uma standing to his left. The flashing teeth of Siva ripples out the sheer delight in him. The dramatic movement of Siva's head sparkling with a fine set of teeth conspicuously distinguishes the portrait amidst all Ananda Tandava depictions. As Siva dances his matted hair locks possessing a copper tint loosen from his headgear to spread and swirl in fours on either side of him in long strands; the ends of which curve inward. The tassels fluttering seem to fly accenting the crescendo of his dance movements. The immaculate stature of Siva is set on a solid pedestal artistically featured by an aureole of flames,

thiruvasi. A dark blue colour scheme within is a prominent backdrop. Two celestials at the top praise him.

Uma stands in ease on a separate gold yellow lotus pedestal. With her right foot in parsva, she leans against Nandi, the vehicle of Siva bending her left leg to rest her left foot on it. Bare - breasted, she is drapped from her waist to ankles with a printed dress having scallops above her rings of anklets. Though her head crowned with karanda makuda is inclined away from Siva, Uma graciously admires him, with side - long glances. A female attendant waits upon in attendence. An umbrella and a columnar staff are positioned as insignia of royalty. Nandi, the white bull stands crouching his hind limbs to support Uma. Its face is turned towards its right. Strings of bells are fastened onto him.

In between Siva and Uma is a young rotund Ganapati. His Short impish limbs and pot belly are enrobed in yellow. He watches the dance with a tilt to his elephant head. Next to Nandi stands a lad, Murugan. His profile shows bewilderment in him, keenly following the dance with a direct lift of his head. Ordained in a loin cloth with an amulet tied around his waist, he weilds a rod in his hands. All of them are represented on a raised platform.

To the right of the dancing Siva, below the platform is a huge grotesque gana, the attendent of Siva. The gana sits cross - legged with a five - faced drum (pancha mukha drum) placed comfortably between his right feet and left leg fully folded to his torso. His head is lifted up, to unwinkingly observe the movements of the Lord with protruding eyes. In consonance, he beats the drum and sings. Karaikal Ammaiyar, the blessed Saiva Saint crouchantly sits after the gana. Transformed to have a devilish out look, she is engrossed in witnessing the dance for Siva tuning the cymbals in rhythm. Among the female Saiva Saints, she attains the privilege of staying near the dancing feet of the Lord.

The orchestra provided by the gana, Karaikal Ammaiyar and the dancer Siva himself with his udukkai ignites a striking

performance of Ananda Tandava. The decoration of the hall adds to the grandeur of the performance. The background colour of green totally enhances the portrait.

Siva is the Supreme Maestro of Dance. Rajaraja I glorifies him as ""Adavallan". The term advocated in reference to different measures, popularised the dance of Siva. Rajaraja's fondness for dance culminates in his fascination for the Ananda Tandava of Siva. He accomplishes in highlighting the Tandava through murals. It comes forth as the earliest representation in line with paintings from the period of the Pallavas and Pandyas.

Siva is referred as Sabhapathi, the Lord of Assembly. Indeed, the frontal hall of the temple is in his disposition. Ananda Tandava projected within a temple canvas has gained a desirable preference. The poise in the dance form has been reverently honoured. Mythological and philosophical explanations further cantoned the image to pronounce the dynamic nature of the dance.

Sculptural Grandeur of The Andal Temple Complex at Srivilliputtur

A. Subramanian

Rajapalayam Rajus' College
Rajapalayam - 626 117

I. Prologue

ART HISTORY of the state of Tamil Nadu is antiquarian and glorious. Southern Tamil Nadu has many pilgrim centers that contain beautiful monuments that serve also as treasure houses of native architecture and sculpture.

The aim of this paper is to bring the temple Architecture and sculpture of the Sri Andal Temple at Srivilliputtur, a taluk headquarters town located at a distance of amount 75 kms South - West of Madurai, the cultural capital of Tamil Nadu.

II. Description Of The Andal Temple Complex

As one enters the Srivilliputtur town (on the Madurai - Kollam National High Way) the majestic gopuram of the Andal Temple complex greets the visitor. The imposing tempe car has its shed adjacent to the Bus stop.

The Andal Temple Complex actually houses the divine abodes of Sri Andal, Sri Rangamannar and the Vadapatrasayi. Temple, consecreated to Vishnu has the 196 feet high gopura on the east. Reputedly the tallest in south India, its eleven stage tower represents the climax of the gopuram form as developed by the Madurai Nayaks in 17th century. This gopuram also serves as the official emblem for the state of Tamil Nadu.

The Andal temple in the complex is said to have been built in 788 A.D. Hymns of Periyazhwar and Andal refer to the deity of Vatapathrasayi temple. Epigraphic evidence for its existence however is dated only from the 10th century A.D.

The Vatapathrasayi temple was patronized and renovated by many rulers such as early Pandyas, Cholas, later Pandyas, Vijayanagar Kings, Banadhirayas, Tenkasi Pandyas, Nayakas of Madurai and later Chera kings. The Andal shrine was constructed during the later Pandya Period by Vallabadevapandiyan.

There are huge sculptures typical of the Nayak sculptures on the pillars of some of the mandapas here. There are also painting in the outer mandapa.

The ratha of this temple is one of the biggest in south India. A gign atic structure, carrying carvings from the scriptures, it is said to have been made in 1849 at the cost of a lakh of rupees, a large sum in those days.

III. Sculpture

The Srivilliputtur temple complex is a treasure house of sculpture. They are found in different parts of the temple. The most numerous and splendid are the sculptures of the Gods and Goddesses. The sculptor has also brought out his skill in depicting other subjects like floral designs, animals, and human figures. The sculptures are mainly in stone.

Parvathi

Parvathi is the consort of Shiva. Usually in Shaivate temples, Parvathi has a separate shrine. She is depicted here in this temple as one of the sculptures on the pillars of the outerprakaram. The sculpture is depicted in a typical Nayak style. She is depicted in tribanga attitude with rounded breats, narrow waist and broad hips. Her hair is piled on her head and is decorated with ornaments. Her hair do is surrounded by an elaborate headgear.

Her face is beautiful with sharp features such as well delineated eyes, arched eyebrows, sharp nose and thin lips with a slight smile. Her ears are elongated and she wears a kavachakundalam (elongated ring). She has a long neck and wears necklaces with precious stones embedded in them.

The upper part of her body is left unclothed while the lower part is richly clad with ornaments. One can find a long

piece of cloth which goes around her body and falls over her right shoulder. The drapery is depicted very naturalistically. Her right hand is held high while the left holds a trisula. Similarly, one leg is raised a little above the ground to show that she uses that leg to wear her kavachakundalam while the other leg is firmly placed on the ground. She wears ornaments in both her hands and legs like the bracelets, armlets and anklets.

On the whole, she is elaborately ornamented. She is shown with two attendants on either sides and one below her - all of them much smaller in size compared to the figure of Parvathi.

Agora Veerabadran

To the right of the figure of Parvathi one finds the sculpture of Agora Veerabadran Shiva in the form of Veerabadran perfoms a dance that is performed by him in cementries and on cremation grounds. This fearful dance is performed along with his wife parvathi accompanied by a troupe of Devas. This dance is Pre-Aryan in origin. He is depicted in the yaganathandava pose with weapons in his hands.

This sculpture tries to portray the joy of victory that Shiva would have experienced in performing his cosmic dance. The drapery, head gear and the gesture of hands and legs of the figure are natural. It brings out the vibrant motion of the figure.

The anger and bravery is very well brought out in this particular sculpture. The wide open eyes, long dropping moustache, sharp nose and broad shoulders shows the strength of Shiva. The folds in the forso and the muscles are very well brought out. One leg is lifted up at right angle to the body. A long garland with human heads is depicted reaching the lifted leg. There are human heads seen in the anklet. His right hand holds a khadga (sword) which is faced downwards while his left hand holds a khetaka (shield). One leg is placed on the head of the human form while the other leg is placed on the ground. The whole figure is richly onramneted.

Saraswathi

Saraswathi is the consor of Brahma, the creator, she is the Goddess of learning and is usually depicted seated in a white

lotus with only a veena in her hand if she is depicted with two hands; otherwise with a rosary and books along with a Veena if she is depicted with four hands.

In this temple, she is called Kalaivani, and is found standing, playing, Veena with both her hands. She stands in the tribanga pose and has the typical features of the Nayak sculptures. Her body is that of the typified Indian woman. Her facial features are brought out well with arched eye-brows, almond eyes, sharp nose, thin lips with a slight smile. She wears rich ornaments and an elaborate head gear. Her drapery is depicted very well. On the whole, the sculpture is thin, long, slender and beatiful.

Rama

Rama is usually depicted with a bow and an arrow and is accompanied by Sita, Lakshmana, Bharata, Shatruguna and Hanuman. Rama is one of the 10 avataras (incarnations) of Lord Vishnu.

In this temple, he is depicted in the usual Nayak manner but alone. Lakshamana is a separate piece of sculpture which is placed on a separate pillar beside Rama. The masculinity is brought out with broad shoulders and folds of muscles in his limps and body. Rama holds a Dhanus (bow) in his right hand. He wears elaborate jewellery over his arms, writs, waists, neck and anklets. The folds in the garment are depicted well. He wears an elaborate headgear and a crown with precious stones embedded in it.

Lakshmana

Lakshmana is the brother of Rama who is usually depicted accompanying Rama. But here, he is placed on a completely different pillar. The muscles in his body are well brought out especially his arms, legs and broad shoulders.

Here he is found holding the hair of the female demon surpanaka (sister of Ravana) with one of his hands and about to cut her nose with a sword which is held on his other hand. Surpanaka is found pleading, holding one of Lakshmana's legs. Lakshmana is also found wearing a Kiritamukha, (an elaborate head gear) and ornaments.

Venu Gopala

Venugopala otherwise known as Krishna is one of the ten incarnations of Lord Vishnu. He is usually depicted with Rukmini and Satyabama on either side. Here, he is depicted with four hands unlike the other sculptures but in a typical Nayak style. His head is slightly bent to one side and shows a blissful expression as he plays the flute with two of his hands. He holds the sankha and chakra, in the other, two hands. His facial features reflect calmth and serenity. He stands in the tribhanga posture and has bo rad shoulders, and a long forso. Like the other, sculptures, Venugopala is also richly ornamented and wears a free flowing drapery.

Viswakarma

To the left of Venugopala is Vishwakarma. He is depicted with four hands with which he holds the Sankha (conch), Chakra (wheel) and Gadha. He stands in the tribanga posture. His face is a fierece and his aggressive nature is brought out in this sculpture. He is richly ornamented like the other sculptures with elaborate crown and head gear. He wears a free flowing drapery.

IV. Conclusion

Thus the Andal Temple complex at Srivilliputtur in southern Tamil Nadu is a treasure house of Mediaeval Temple Architecture and Sculpture. It has to be agreed that chronological and cogenial arrangement is some what difficult. This author appeals to government and university experts to have an authentic history of the Andal Temple Complex.